கலைஞரின்
கடிதங்கள்



34

13.07.2002 - முதல்
09.12.2002 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 34

13.07.2002 - 09.12.2002

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகனார்
நூலகம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2251**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
A2241
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
கி.89-4-2116
முதற் பதிப்பு – 2021
கி.தே.எ-34
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2021
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2782. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!	13-7-2002	23
2783. பிரிந்திடும் துயரமும் பெரிதாக வந்ததே!	13-7-2002	29
2784. நெஞ்சையள்ளும் நிறைவான வெற்றி!	14-7-2002	35
2785. அலகாபாத் வழக்கும்; அதிரடித் தீர்ப்பும்!	15-7-2002	41
2786. கழுத்தை நெரிக்கும் சட்டங்களும் கழகச் செயற்குழு தீர்மானமும்!	16-7-2002	47
2787. எழுத்துரிமையும் பேச்சுரிமையும் எங்கே? எங்கே?	17-7-2002	52
2788. காராகிருகம் திறக்கவில்லை; கர்மவீரர் கண்மூடினார்!	17-7-2002	59
2789. சர்வாதிகார இருளில் சஞ்சீவியார் சஞ்சலம்!	19-7-2002	64
2790. இந்தியாவிலே இரண்டுதீவுகள் - இந்திரா வர்ணனை!	20-7-2002	69
2791. கலைத்தனர் ஆட்சியை; கலங்கவில்லை நெஞ்சம்!	21-7-2002	75
2792. காமராஜர் நினைவகம் - கைராட்டை அகற்றிய நிகழ்ச்சி!	23-7-2002	81

2793. “மிசா” சட்டம் மின்னல் வேகத்தில் தாக்கியது!	22-7-2002	87
2794. கை கால்களில் கட்டு; நெஞ்சிலும் முதுகிலும் குத்து!	24-7-2002	95
2795. தலைமையை மாற்றிடத் தலைகீழாய் நின்றனர் சிலர்!	25-7-2002	101
2796. அடக்குமுறையால் அழித்திட இயலாத எஃகு அரண்!	26-7-2002	107
2797. பிறந்த நாளில் உள்ளத்தில் பதிந்த ஊமைக்காயங்கள்!	27-7-2002	112
2798. எதேச்சாதிகார இருள்விலக எட்டிப்பார்த்த வைகறை!	28-7-2002	118
2799. சிங்கத்தின் இழப்பும் - சிறைக்கதவுகள் திறப்பும்!	29-7-2002	125
2800. புதிய திருப்பம் கண்ட புதுடெல்லிக் கூட்டம்!	30-7-2002	132
2801. அந்த உணர்வு இன்னமும்; இங்கேயும் இருக்கிறது!	31-7-2002	138
2802. அகவையிலும் அரசியலிலும் சிறுவர் சிறுமியர்!	1-8-2002	142
2803. சாகாத பிணங்களின் சாகும் சரித்திரம்!	2-8-2002	147
2804. கண்ணீர் துடைத்திடுக முதலில்; கதைகள் விடலாம் பிறகு!	3-8-2002	149
2805. அடையாள உதவி புரிய; அம்மையார்குப்பம்!	4-8-2002	154
2806. வேறென்ன சொல்லத் தோன்றுகிறது!	9-8-2002	157
2807. வாழ்க முரசொலி! வெல்க தமிழ் இனம்!	10-8-2002	161

2808. பசி போக்கிட இடமல்ல முக்கியம்; பாசமுள்ள இதயம்தான் முக்கியம்!	14-8-2002	164
2809. ஆகஸ்டு 19 - அணி வகுப்போம்; அண்ணா வழியில்!	15-8-2002	171
2810. கெட்டுப்போன சட்டம் ஒழுங்கிற்குக் கிரீடம் சூட்டுவதா?	17-8-2002	176
2811. வெட்ட வெட்டத் துளிர்விடும் விஷக்கிளைகள்!	18-8-2002	181
2812. காங்கிரஸ் நிதி அமைச்சரும் கல்கி தலையங்கமும்!	19-8-2002	186
2813. சந்தர்ப்பவாதம் என்பதற்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அர்த்தமா?	20-8-2002	191
2814. மறந்திடாமலும்; மறைத்திடாமலும்!	22-8-2002	196
2815. தென்னவன் காதை!	24-8-2002	200
2816. பச்சைக்கொடி எது? பச்சைப் பாம்பு எது?	25-8-2002	208
2817. அண்ணா அத்வானி சந்திப்பும், ஜீவா குறுக்கீடும்!	26-8-2002	215
2818. பால பாடமும் மூல பாடமும் பகுத்தறிவுப் பாடமே!	28-8-2002	220
2819. திசை திருப்பும் காரியத்தில் திறமை காட்டுவதா?	30-8-2002	225
2820. கல்லைப் போடும் கமிட்டி அல்ல; கடலில் போடும் கமிட்டி!	31-8-2002	230
2821. உச்சநீதிமன்ற தீர்ப்பை உறுதுணையாகக் கொண்டு!	7-10-2002	235

2822. கொள்கையற்றோர் கையில் கொற்றம் இருக்கிறது!	9-10-2002	241
2823. பொது வேலை நிறுத்தமும்; நெய்வேலி கிளர்ச்சியும்!	10-10-2002	247
2824. நீ இருக்க பயமேன் என்பதே என் இதயத்தின் துடிப்பு!	11-10-2002	252
2825. எழுகிறது இளைஞர் அணி! வழங்குகிறேன் வாழ்த்து!	15-10-2002	257
2826. இதயமா? வயிறா? எந்தப் பக்கம் இளைஞர்கள்?	16-10-2002	262
2827. இளைஞன் குரல் அன்று போலவே என்றும் ஒலித்திட!	17-10-2002	268
2828. எங்கெங்குக் காணினும் சக்தியடா! ஏழுகடல் பொங்கிடும் எழுச்சியடா!	23-10-2002	278
2829. குட்டு விழுகிறது; குட்டும் வெளிப்படுகிறது!	24-10-2002	283
2830. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈரும்பேனும்!	31-10-2002	286
2831. இருட்டடிப்பைக் கிழிக்க இந்த முறை பயன்படட்டும்!	1-11-2002	294
2832. நாக்குத் தமிழ் மணக்கும் நாகரிக வார்த்தைகள்!	2-11-2002	298
2833. அந்த சொற்களை உரியவருக்கே உடைமையாக்குவோம்!	7-11-2002	304
2834. ஒன்று சொல்வீராயினும் நன்று சொல்வீர்!	7-11-2002	308
2835. இவர்களை எந்த வரிசையில் நிறுத்திப் பார்ப்பது?	10-11-2002	315

2836. மக்கள் குரலுக்கு மதிப்பளிக்க வேண்டும்!	11-11-2002	320
2837. மதமாற்றம் தேவையென்ற மனமாற்றம் எப்போது ஏற்படும்?	12-11-2002	324
2838. அந்தணர் என்றால் அறவோர் என்கிறது குறள்!	13-11-2002	329
2839. நாடாளும் அம்மையின் நாகாக்கும் நாகரிகம்?	20-11-2002	335
2840. இலாபம் என்பதற்கு நஷ்டம் எனப் புது பாஷ்யம் கூறுவதா?	22-11-2002	341
2841. நெறி கெட்ட அரசும் நேர்மையான அதிகாரிகளும்!	23-11-2002	345
2842. ஜனகர், செக்கு எது? சிவலிங்கம் எது? எனத் தெரியாதவர்!	27-11-2002	351
2843. ஆண்டுகொண்டிருப்பதே அவர்தானே!	29-11-2002	355
2844. மாற்றம்; கொள்கைக்காகவா? சந்தர்ப்பத்திற்காகவா?	30-11-2002	360
2845. கழக மகளிர் கருத்தரங்கம் (1)	01-12-2002	364
2846. கழக மகளிர் கருத்தரங்கம் (2)	02-12-2002	369
2847. இந்த நேரம் - இந்தச் சந்தேகம் தேவைதானா?	2-12-2002	374
2848. கழக மகளீர் கருத்தரங்கம் (3)	03-12-2002	377
2849. கழக மகளீர் கருத்தரங்கம் (4)	04-12-2002	382

2850. கழக மகளீர் கருத்தரங்கம் (5)	06-12-2002	388
2851. டிசம்பர் 7 முழு அடைப்பு, வேலை நிறுத்தம்!	6-12-2002	394
2852. விரிவாக விளக்கிட சுருக்கமான செய்திகள்!	9-12-2002	398

2782. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (10)

(நேற்றைய தொடர்ச்சி)

பற்று வைக்கப்பட்ட பொருளுக்கு ஆபத்து வரும்போது அப்பொருளின்மீது பித்து ஏற்படுகிறது. குழந்தையின் மீது தாய்க்கு அளவற்ற பற்று. குழந்தை திடீரென நோய்வாய்ப்படுகிறது. இறந்துவிடுமென மருத்துவர்கள் கூறுகிறார்கள். தாய்க்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. அதை யாராவது தடுக்க முடியுமா? பற்று பித்தாக மாறுகிறது. தாய்க்குக் குழந்தையைவிட ஒரு சமுதாயத்துக்கு மொழி மிகவும் உயர்ந்தது. அந்த மொழி மீது பற்று வைக்காதவர் யாரே உளர்? பற்றுக்கொண்டோர் பித்தர்களாக மாறுவது தவறு! அந்தப் பித்து ஏற்பட அடிப்படை எது? பற்றை அறுக்க முனைவதுதானே? அந்த வேலையைச் செய்வது யார்? மொழியிலே நாம் பற்று வைக்கிறோம். அதை மறுத்து நம்மைப் பித்தர்களாக்குகிறார்கள். ஆகவே பித்துப்பிடிப்பது நம் தவறல்ல! இந்த முடிவுக்குப் பேச்சு மன்றத்தினர் வந்தோம். மொழிக்காக உயிர் கொடுத்த தாளமுத்து, நடராசன் இருவரின் கல்லறையிருக்கும் திசையைப் பார்த்து வீர வணக்கம் செலுத்தினோம்.

லத்தீன் மொழியின் ஆதிக்கம் ஐரோப்பாவெங்கும் பரவி; வேறு நாட்டுத் தாய் மொழிகள் எல்லாம் தலையெடுக்காமல் அழுத்தியிருந்த காலத்தில் தாய்மொழிப் பித்துக் கொண்டு, இனி லத்தீனில் எழுதுவதில்லை. எமது பிரஞ்சு மொழியிலேதான் எழுதுவோம் என்று சபதம் எடுத்துக் கொண்டு கிளம்பிய பிரஞ்சு நாட்டு இளம் எழுத்தாளர்களை, 16ஆம் நூற்றாண்டின் மொழிக்காவலர்களைப் பெருமையோடு நினைத்துக் கொண்டோம். அந்தச் சரித்திரத்தையும் படித்துவிட்டு, இப்போது தாய்மொழியை மறந்து ஆதிக்கக்காரர்களின் மொழியாம் இந்திக்கு ஆலவட்டம் சுழற்றும் ஆஷாடபூதிகளின் வரலாற்றையும் பார்க்கின்றபோது எவ்வளவு வேதனையாயிருக்கிறது என்று கண்ணீரும் விட்டோம்.

எம்மை அறியாமலே மொழிப் பித்து ஏற்பட்டு விட்டது.

தமிழென்று தோள்தட்டி ஆடு! அந்தத் தமிழ் வெல்க! வெல்க என்றே தினம் பாடு!

என்று பேரொலி எழுப்பினோம்.

கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம் கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!

என்று சூளுரைத்தோம். சிறைச்சாலையில் ஒருநாள் பேச்சு மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மன்றத்து மத்தியிலே நான் அமர்ந்திருக்கிறேன். வெள்ளுடை அணிந்த ஒரு நர்ஸ் அங்கு வந்தாள். தான் கல்லக்குடிக்குப் பக்கமுள்ள ஆஸ்பத்திரியில் வேலை பார்த்ததாகவும், போராட்டத்தில் காயம்பட்டவர்களுக்கெல்லாம் தானே சிகிச்சை செய்ததாகவும் கூறினாள். அவள் பேச்சிலிருந்து நமது இயக்க அனுதாபமுடையவள் என்று புரிந்தது. நல்ல சிவப்பு! குறுகுறுப்பான பார்வை! கவரும் சக்தி படைத்தவள்! கருணாநிதி எங்கே? என்று என்னையே கேட்டாள்.

நான்தான் என்றேன். ஓகோ, அரும்பு மீசை புதிதாகையால் அடையாளமே புரியவில்லை என்றாள். போய் விடுவாளாக்கும் என்று எதிர்பார்த்தேன். போகவில்லை. நின்று கொண்டேயிருந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு கிழவரும் வந்தார். அவர் அவளுடைய தந்தையாம். அப்பா! இவர்தான் கருணாநிதி! என்று அவருக்கு என்னை அறிமுகப்படுத்தினாள். ஏன் இருவரும் அங்கு வந்தார்கள் தெரியுமா? அந்த நர்ஸ் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமாம்! திடீரென்று என்னைப் பார்த்துச் சொன்னாள்: நான் உங்களைக் காதலிக்கிறேன்! நான் திடுக்கிட்டுப் போனேன்! பேச்சு மன்றம் கொல்லென்று சிரித்து விட்டது. நர்சுக்கு அப்போதுதான் நாணம் பிறந்தது. தந்தையை அழைத்துக் கொண்டு போய் விட்டாள். நான் வெட்கத்தால் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தேன்.

இத்தோடா முடிந்தது? ஒரு தயிர்க்காரிக்கும், தோழர் சத்திக்கும் தகராறு! தயிர்க்காரி தன் கணவனிடத்திலே சத்தியின் விஷமத்தைப் பற்றிக் கூறி விட்டாள். அவள் கொஞ்சம் இள வயதுக்காரி. சத்தியும் மணமாகாத பிள்ளை! ஏதோ தவறு நடந்து விட்டது! அதைப் பேச்சு மன்றத்திலே சிரிப்பாய்ச் சிரிக்க வைத்து விட்டாள் அந்தப் பொல்லாத தயிர்க்காரி. தோழர் இராம சுப்பையா,

அவளிடம் மோர் வாங்கிக் கொண்டு கடன் சொல்லி ஏமாற்றி விட்டாராம். சிறையிலே அவர் காசுக்கு எங்கே போவார்? அதையும் பெரிய குற்றச்சாட்டாக்கி காரைக்குடியாரின் நாணயத்தைப்பற்றி வெளுத்து வாங்கி விட்டாள்.

என்ன, மூக்கிலே விரலை வைக்கிறீர்கள்? சிறைச்சாலையிலே பெண்கள் எப்படி வந்தார்கள் என்றுதானே ஆச்சரியப்படுகிறீர்கள்? பேச்சுமன்றத்திலே நடந்த (Fancy Dress Competition) மாறுவேடப் போட்டியின்போது கூடப் பெண்கள் வராமலிருந்தால் சுவைக்குமா என்ன? பெண்கள் மட்டுமா வந்தார்கள்? ஒரு குடுகுடுப்பைக்காரன்கூட வந்தான். குடு குடு குடு குடு! நல்ல காலம் பிறக்குது! தமிழ்நாட்டுக்கு நல்ல காலம் பிறக்குது! அந்த மூலையிலே ஒருத்தன் அய்யோன்னு போறான்! துரோகம் பண்ணினவன் தொலையப் போறான்! காலையிலே கூடச் சொன்னேன், சுரண்டிப் பிழைக்கிறவன் சுருக்குன்னு போறான். குடு குடு குடு! ஒரு பழைய துணி இருந்தால் குடு குடு குடு!

நரிக் குறவனும், குறத்தியும் தோன்றினார்கள். ஆயாலக் குறி ஆயாலக் குறி என்று பாடியபடியே. வயிறு புடைத்த ஒருவரும் வறுமையிலடிபட்ட நெசவாளியும் வந்தார்கள். குமரர்கள் கிழவர்களாக மாறி வந்தார்கள். ஆண்கள் பெண்களாக மாறி வந்தார்கள், அழகிகளாகக்கூட!

சிறைச்சாலையிலே ஏதோ ஒரு பெரிய மைதானத்தை ஒதுக்கிக் கொடுத்து அதிலே மாறு வேடவிழா நடத்துங்கள் என்று யாரும் அனுமதி தரவில்லை. வேலையில்லாத ஒரு ஞாயிற்றுக் கிழமையில் தோழர்களின் சொந்த முயற்சியிலேயே பல வேடங்களில் தோன்றிப் பாடி மகிழ்வித்தார்கள். சிறைச் சாலையிலே பூத்திடும் மலர்கள்; நான் மேலே போட்டிருந்த பச்சைத் துண்டு போன்ற ஆடைகள்; முடி வெட்டும்போது கத்தரித்த ரோமங்கள்; அடுப்பின் கரிகள் ஆகிய பொருள்களைக் கொண்டு அலங்கார அணிகளும், ஆடைகளும், மீசைகளும், தாடிகளும் தயார் செய்து, யாரும் எதிர்பார்க்காத அளவுக்குப் பிரமாத வெற்றியுடன் நடத்தப்பட்ட அந்தப் போட்டியிருக்கிறதே அது, வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதைத்தான் நினைவூட்டியது.

போட்டியின் நீதிபதிகளாக மன்னை நாராயண சாமி, ராஜமாணிக்கம், பேராவூரணி வடிவேல், வைத்தீசுவரன் கோயில் முருகையன், கலைமணி ஆகியோர் தீர்ப்பு வழங்கினர். திருச்சி

கமலன் முதற் பரிசும், நாராயணசாமி இரண்டாம் பரிசும், கம்பர்நத்தம் கடல்வண்ணன் மூன்றாம் பரிசும், பெரியசாமி நான்காவது விசேடப் பரிசும் பெற்றார்கள். அவர்களுக்குக் கல்லக்குடி பதக்கம் பரிசளிக்கப்படும் என்றும், அந்தப் பரிசளிப்பு விழாவினை மணப்பாறையில் தோழர்கள் நடத்துவதென்று விரும்பியதன்பேரில், அங்கு விழா நடக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

இன்னொரு ஞாயிற்றுக்கிழமை. ஒப்பித்தல் போட்டி, முல்லை சத்தி, திருவையாறு மணி, மாயூரம் கிட்டப்பா, திருவாரூர் விஜயராகவன், கரூர் முருகேசனார் ஆகியோரை நீதிபதிகளாகக் கொண்டு நடைபெற்றது. அதில் பாரதிதாசன் கவிதைகளும், திரு.வி.க.வின் உரைநடைகளும், அண்ணாவின் பொன்மொழிகளும், நமது திரைப்படங்களின் உரையாடல்களும், புறநானூற்றுச் செய்யுட்களும், போர்வாள் முதலிய நாடக வசனங்களும் பல தோழர்களால் ஒப்பிக்கப்பட்டன.

அதில் முதல் பரிசு பெரியசாமிக்கும், இரண்டாம் பரிசு அடைக்கலத்திற்கும், மூன்றாம் பரிசு எஸ்.எம். வைத்தியலிங்கத்திற்கும், நான்காவது சிறப்புப் பரிசு நாராயணசாமிக்கும் கிடைத்தது. அந்தப் பரிசளிப்பு விழாவை ஜெயங்கொண்ட சோழபுரத்தில் நடத்துவதாகத் தோழர் வேணுகோபால் அனுமதி வாங்கிக் கொண்டார். ஒருநாள் இசைப் போட்டியும் நிகழ்வுற்றது. தோழர்கள் உள்ளிக்கோட்டை சிங்காரவேலு, திருவாரூர் தென்னன், கரூர் நாராயணன் ஆகியோர் நீதிபதிகளாய் அமர்ந்தனர்.

மாயவரம் செபாஸ்டியன் முதற்பரிசும், நன்னிலம் நடராசன் இரண்டாம் பரிசும், அறந்தாங்கி ஓவியர் கருணா மூன்றாம் பரிசும், சக்கரசாமம் அப்பாசாமி நான்காவது தனிப்பரிசும் பெற்றார்கள். ஒரு ஞாயிறன்று பேச்சு மன்றத்தின் அறுவடையைக் கணக்குப் பார்க்கும் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. அதுதான் பேச்சுப் போட்டி. திருவையாறு ஆர்.எஸ். மணி அழகான கருத்துகளை அள்ளிச் சொறிந்து முதற்பரிசை அடைந்தார். ராமசாமி பெருமிதமான வார்த்தையோட்டத்தால் இரண்டாம் பரிசைத் தட்டிவிட்டார். உள்ளிக்கோட்டை சிங்காரவேல் எடுத்துக் கொண்ட பொருளை எழில் ததும்பச் சொல்லி மூன்றாம் பரிசுக்குரியவரானார்.

பேராவூரணி வடிவேல் நகைச்சுவை வழியப் பேசி சிறப்புப்பரிசை ஏற்றார்.

அந்தப் போட்டிக்கு நீதிபதிகளாக நானும், தோழர்கள் ராம சுப்பையா, அடைக்கலம், நாகை பாப்பையன், பி. சாமிநாதன் ஆகிய நால்வரும் அமர்ந்து தீர்ப்பு வழங்கினோம். அவர்களுக்குப் பரிசளிக்கும் விழாவை மாயவரத்தில் நடத்துவதற்குத் தோழர் கிட்டப்பா கேட்டுக் கொண்டு, மன்றத்தின் இணக்கம் பெற்றார்.

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை

என்ற கவிஞரின் பாடலை உரக்கப் பாடினோம். உற்சாகம் கொப்பளிக்கப் பாடினோம். நானூறுக்கு மேற்பட்டோரின் மொத்த வாழ்க்கை சிறையில் எப்படி நடைபெற்றது என்பதை விவரித்து விட்டேன். என் வாழ்வு எப்படி ஓடியது என்பதைக் கூறாமலிருக்க முடியுமா?

சிறைச்சாலைக்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் எனதருமைத் திருவாரூர் தோழர்கள் வந்து சேர்ந்தார்கள். எனது மைத்துனர் தெட்சணாமூர்த்தியும் வந்தார். எனக்குப் பக்கத்து அறைகளிலேயே அவர்களும் இடம் பிடித்துக் கொண்டனர். இராம சுப்பையா அவர்களுக்குச் சரியான ஜோடியாக திருவாரூர் நாகப்பன் இருந்தார். அவர்களிருவரையும் பார்த்து நாங்கள் கிழவர்களே! என்று கூப்பிடுவோம். இராம சுப்பையாவுக்கு உள்ளபடியே அதில் கொஞ்சம் வருத்தம்தான். திருவாரூர் தென்னன் - அவரைப் பற்றி நான் ஒன்றும் அதிகமாகச் சொல்ல வேண்டாம்.

நான் சிறையிலிருக்கும்போது அவர் வெளியே இருக்க முடியாது. ஒருவர்தான் தப்பித் தவறி வெளியே இருந்து விட்டார். சி.டி. மூர்த்தி என்பார் - தென்னன் பெயரும் தெட்சிணாமூர்த்திதான்! இவரும் தட்சிணாமூர்த்தி, இரண்டு தட்சிணா மூர்த்திகளும் இரண்டு கண்கள் போல நட்புக்கு. அந்தத் தென்னன்தான் எமது சாப்பாட்டு விவகாரங்களைச் சரி பார்த்துக் கண்காணித்து வந்தார். குளிப்பதற்குச் செல்வோம். வேணு ஓடி வருவார், தண்ணீர் மொண்டு ஊற்ற. அவர்தான் என்னைக் குளிப்பாட்டி விடுவார் என்றே வைத்துக் கொள்ளுவோமே! எண்ணெய் தேய்த்து முழுகப் போகிறோம் என்று தெரிந்தால் போதும். எப்படித்தான் தெரியுமோ

ராம சுப்பையாவுக்கு? அவர் எண்ணெய் தேய்த்து விடாமல் குளிக்க முடியாது. முடியா தென்ன? கூடாது.

அவருடைய திருக்கரங்களால் எண்ணெய் தேய்த்துச் சிகைக்காய் தேய்த்துக் குளிப்பாட்டும் போது என் அன்னையின் பொற்கரங்களின் ஸ்பரிச உணர்ச்சியையே கண்டேன் நான். குளித்து விட்டு அறைக்கு வருவோம். வீட்டிலே மனைவி கூட அவ்வளவு ஒழுங்காக உடைகளை எடுத்துத் தந்து உபசரிக்க முடியாது. அத்துணை அழகாக உடைகளை எடுத்து வழங்குவார் தோழர் கஸ்தூரி. உடை இலாகாவை அவரிடம்தான் ஒப்படைத்திருந்தோம். உடனே தென்னன் காலை உணவுடன் எங்கள் அறையில் நுழைவார்.

சிறைச்சாப்பாட்டுக்கும் ஓர் இலக்கணம் வகுத்துக் கொண்டு, நம்மோடு ஒட்டி வராவிட்டால், அதோடு நாம் ஒட்டிப் போவோம் என்ற தத்துவார்த்தச் சிகரமாக எம்முடன் ஒருவர் இருந்தார். அவர்தான் திருவாரூர் டாக்டர் விசய ராகவன். சிறையிலே தரப்படும் கடலை உருண்டை என்றால் அவருக்கு எவ்வளவு பிரியம் தெரியுமா? ஒருநாள் அவர் கடலை உருண்டைக்காக இன்னொரு தோழருடன் பந்தயம் கட்டி நூறு பஸ்கி போட முனைந்தார். பந்தயத்தில் தோற்றதால் கடலை உருண்டை கிடைக்கவில்லை. தொடை முழுதும் கடலை உருண்டைபோல் வீங்கிவிட்டது. இரண்டு, மூன்று நாள் மருத்துவமனையில் இருந்தார். ஜெயில் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு ஜாம்பவான் வேலைக் கெல்லாம் போகலாமா?

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

13-7-2002

2783. பிரிந்திடும் துயரமும் பொரிதாக வந்ததே!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! 11)

(நேற்றைய தொடர்ச்சி)

இப்படி வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் சிறைச்சாலையின் கொடுமைகளை விரட்டிக் கொண்டிருக்க உதவி புரிந்த அருமைத் தோழர்கள் எல்லாம் எங்களை விட்டுப் பிரியும் காலம் வெகு விரைவில் வந்து விட்டது. காங்கிரஸ் ஆட்சி எனக்கு ஆறு மாதத் தண்டனை கொடுத்தது பெரிதல்ல. என் அன்புத் தோழர்களை என்னோடு சேர்த்து வைத்து, அவர்கள் பிரிந்து செல்லும் வேதனையை அடிக்கடி உண்டாக்கியதே, அதுதான் பெரிய தண்டனையாக இருந்தது. தோழர் என்.வி.என். அடக்குமுறையின் கோரப் பொறியில் அகப்படுவதற்கு முன்பு, எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். வெளியில் என்ன நடக்கிறதோ என்று கவலைப்படுவீர்கள். வளர்கிறோம், வளர்கிறோம், மகிழ்ச்சியடையுங்கள் என்று! சிறைச்சாலையில் என்னைச் சந்திக்க வந்த அண்ணா அவர்களும் சொன்னார்கள், வெளியுலகைப் பற்றி நினைத்து மனத்தை அலட்டிக் கொள்ளக்கூடாது என்பதாக.

இருந்தாலும் முடிகிறதா? நாங்கள் பிரிந்து வரும்போதே தமிழகம் இரத்தக் காடாகவல்லவா இருந்தது? என்ன ஆயிற்றோ? என்று ஏங்கிக் கொண்டுதான் கிடந்தோம். கல்லக்குடியிலே போராட்டம், அண்ணன் சிற்றரசு அவர்களின் தலைமையிலும், திருச்சி தீரர்களின் மேற்பார்வையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அண்ணாவும், மற்றவர்களும் சிறைக்குள்ளே அனுப்பப்பட்டு விட்டார்கள். தலைவர்களை விடுதலை செய் என்ற முழக்கம் நாடெங்கும் கேட்கிறது. அக்டோபர் முதல் ஆந்திர அரசு அமைகிறது. அதைத் துவக்கி வைக்கப் பண்டித நேரு அழைக்கப் பட்டிருக்கிறார். மொழி வழி மாகாணத்திற்காக ஆந்திராவில் கிளம்பிய நாற்பது வருடக் கிளர்ச்சிக்கு ஒரு முடிவு (?) ஏற்படுகிறது. கட்சி மாறிய பிரகாசம் காங்கிரசில் சேர்க்கப்படுகிறார். ஆந்திராவின் முதல் பிரதமராகிறார். ஆந்திர அரசு துவக்க நாளிலே

மகிழ்ச்சி ஆரவாரத்துடனே தலைவர்கள் பேசுகிறார்கள். பிரதமர் நேரு பண்டிதர் பேசுகிறார். சென்னை முதல்வர் ராஜாஜி பேசுகிறார். ஆந்திரப் பிரகாசம் பேசுகிறார்.

ஆந்திர ராஜ்யத்தைத் துவக்கி வைத்து விட்டுச் சென்னை, கோவை, மதுரை, மாமல்லபுரம், பவானி முதலிய இடங்களிலே சுற்றுப்பயணம் நடத்தினார் பண்டித நேரு. தமிழகத்தின் தலைவர்கள் சிறையிலே! ஐயாயிரவர் அடக்குமுறைக்கு ஆளாயினர்! பிணங்கள் வீழ்ந்தன! சதி வழக்குகள் கிளம்பின! இந்த நிலைமையிலே கொதித்துப் போயிருந்த மக்கள், தங்கள் அதிருப்தியைக் காட்ட நேருவுக்கு எல்லா இடங்களிலும் கறுப்புக் கொடி காட்டினர். அவரது பொது வாழ்விலே அதுவரையில் காணாத எதிர்ப்பை அவர் கண்டார். கறுப்புக்கொடி காட்டுவது ஒரு வகை? நேருவுக்கும் தெரியாததல்ல. தமிழரை நான்சென்ஸ் என்று இருமுறை இகழ்ந்தார். ஒரு முறை மன்னித்தோம் பெரிய மனிதர் என்பதற்காக! மீண்டும் சொன்னார்.

மதுரையிலே நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டிய கிளர்ச்சியில் தோழர் முத்து மற்றும் பல தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள். சென்னையிலும் முப்பது பேருக்கு மேல் கைதாயினர். சென்னையிலே கண்ணபிரான், பார்த்தசாரதி மற்றும் பலர் தடியடிக்காளாயினர். செங்கற்பட்டிலே அண்ணாமலை தலைமையிலே கருங்கொடி நிகழ்ச்சி வெற்றி கண்டது. நாள்தோறும் நமது தோழர்கள் சிறைச்சாலைக்குச் சென்று கொண்டிருப்பதும், நாடெங்கும் கிளர்ச்சித் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருப்பதும் தேனினுமினிய செய்திகளாக எங்களுக்குக் கிடைத்துக் கொண்டேயிருந்தன.

எல்லோரும் போய்விட்ட காரணத்தால், மிச்சமிருந்த ஐம்பதுக்குட்பட்ட தோழர்களை இராம சுப்பையா அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டு நான் சிறிது ஓய்வு பெற்றேன். பேச்சு மன்றமும் கிடையாது. எதையாவது படிப்பது, எதையாவது எழுதுவது, மீதி நேரங்களில் வேப்ப மரத்தடி! அங்கே சத்தியும் நானும்! எத்தனையோ இன்பக் கதைகளை அந்த வேப்ப மரம் கேட்டிருக்கிறது. பேச்சின் ஒலிக்கு மாத்திரம் சக்தியிருக்குமானால் அந்த வேப்ப மரம், இனிப்பு மரமாக மாறியிருக்கும். அவ்வளவு தித்திப்பான கதைகள்.

ஒருநாள் நீண்டு உயர்ந்த மதிலுக்கு உள்ளே ஒரு சிறிய பந்து வந்து விழுந்தது. வெளியே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் கையிலிருந்து தப்பி, அது எங்கள் கையில் சிக்கியது. உடனே ஒரு திட்டம் போட்டோம். ஒரு பழைய வேட்டியைக் கிழித்து வலைபோலக் கட்டினோம். எங்கள் கைகளைப் பந்தடிக்கும் மட்டை ஆக ஆக்கிக் கொண்டு தினந் தோறும் விளையாட ஆரம்பித்தோம். அந்த விளையாட்டுக்குப் பந்தயம் எல்லாம் கட்டுவதுண்டு.

தோழர் வேணு, தனக்கு வந்த கடலை உருண்டை களையெல்லாம் பந்தயத்தில் இழந்து, துவரையை இழந்து, சோற்றையும் ஒரு நாள் இழந்து, தரும மகாராஜன் போல நின்று கொண்டிருந்தார். தோழர் ராம சுப்பையா பந்து விளையாட்டில் என்னுடைய கட்சி. வருகிற பந்தையெல்லாம் சாமர்த்தியமாக அடித்து விடுவார். ஆனால் ஒரு குறை! பந்து வலையைத் தாண்டி அப்புறம் போகாது! அவ்வளவுதான். கஸ்தூரி, சத்தியின் கட்சியிலேயிருந்து விளையாடுவார். பந்து தானாகவே போய் அவரது கையில் மோதி எங்களிடம் திரும்பி வரும் காட்சி அற்புதமாக இருக்கும், அவ்வளவு கஷ்டப்பட்டு விளையாடுவார்.

அந்த விளையாட்டிலும், இடையே தொய்வு ஏற்பட்டுவிட்டது. ஜெயில் ஆகாரத்தைச் சாப்பிட்டு விட்டு இம்மாதிரி வேலைகளையெல்லாம் எங்களைப் போன்ற பலசாலிகள் செய்யலாமா? எல்லாருக்கும் உடம்பு வலி. உட்கார முடியாது. நிற்க முடியாது. நான் ஊசியும் போட்டுக் கொண்டேன். பிறகு, மீண்டும் ஆசை பிறந்தது விளையாட. ஆனால் விளையாட்டுக்கு விரைவில் முடிவு ஏற்பட்டு விட்டது. காரணம், கல்லக்குடிப் பட்டாளத்தை நோக்கி விடுதலை வந்து விட்டது. விடுதலைக்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே ராம சுப்பையா கண்ணீர் விட ஆரம்பித்து விட்டார். விடுதலை நாளும் வந்தது. அக்டோபர் 15ஆம் நாள் காலையிலே அவர்களும் எம்மைப் பிரிந்தார்கள். சிறைச் சாலையிலே அகப்படும் பூக்களைக் கொண்டு ஒரு மாலை சூட்டினார்கள். பிரிவுரை கூறினார்கள். கோவெனக் கதறி அழுதார்கள். அவர்கள் வாய் விட்டுக் குழந்தை போல அழுத காட்சியை இப்போது நினைத்தாலும் கண் கலங்குகிறது.

வேணு போலப் பறந்து பணியாற்றிட யாரால் முடியும்?

இனிமேல் ராம சுப்பையா போல் எண்ணெய் தேய்த்து விட யார் ஓடி வருவார்கள்?

கட்சிச் செய்திகளைக் கேட்டிட, ஆர்வமுடன் அடிக்கடி வந்திட மலைக்கோட்டை ரத்தினம் போல யாருளர் இங்கே?

எது கேட்டாலும் சிரித்துக் கொள்ளும் எத்திராஜ்!

இப்படி ஒவ்வொருவரையும் பற்றி எண்ணினேன். என் பின்னே அணி வகுத்து வந்த கல்லக்குடி படை வரிசை கண்ணீரைக் கொட்டியபடி நிற்பதையும் கண்டேன். நேசமுள்ள நண்பர்களே! பாசம் நிறைந்த தோழர்களே! என் ஆசைக் கண்மணிகளே! என்றேன். அதற்கு மேல் பேச முடியவில்லை. போய் வருக என்று கையால் ஜாடை காட்டினேன். ராம சுப்பையா கட்டிக்கொண்டு கதறி விட்டார். பிரிவு, பிரிவு, கட்டிக் காத்த குடும்பப் பாசத்தில் குறுக்கிட்ட பிரிவு, அவர்களை எங்களிடமிருந்து விடுதலை என்னும் சொல் பிரித்துக் கொண்டு போய் விட்டது!

சிறையிலேயே கைதிகளின் அவல நிலைமைகளை எண்ணிடும் போதில், எப்போதாவது அவர்களுக்குச் சில நலன்களைப் புரிந்திட நம்மால் இயலுமா என நான் சிந்திப்பதுண்டு. ஆனால் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிடும் நன்னாள் ஒரு நாள் வரும் என்றோ, பேரறிஞர் அண்ணா அவர்களோ அல்லது நானோ முதல் அமைச்சர் பொறுப்பிலே அமர்வோம் என்றோ நான் அப்போது எண்ணிப் பார்த்ததில்லை. 1967 ஆம் ஆண்டு கழகம் மக்களின் பேராதரவோடு ஆட்சிக் கட்டிலில் அமர்த்தப்பட்டவுடன் முன்னாள் கைதிகளான எங்கள் மனத்தில் நம்மால் முடிந்த அளவு சிறைச்சாலைகளைச் சீர்திருத்திட வேண்டுமென்று பேரார்வம் மூண்டெழுந்தது. இந்த ஐந்தாறு ஆண்டுகளில் சில குறிப்பிடத்தக்க மாறுதல்களைச் செய்துள்ளோம்.

சி வகுப்புக் கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் சோப்பு, எண்ணெய், பற்பசை, பல் துலக்கும் தூரிகை, பவுடர் ஆகியவைகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். ஏ வகுப்பு, பி வகுப்புக் கைதிகளைப் போல் சி வகுப்புக் கைதிகளும் கடிதத் தொடர்பு கொள்ளவும், வெளியிலிருந்து வருபவர்களை நேரில் பார்க்கவும் அனுமதிக்கப்பட்டனர். இதன் காரணமாக கைதிகளிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டன. சிறைச்சாலையின் கண்காணிப்பாளரால் அனுமதிக்கப்பட்ட

செய்திப் பத்திரிகைகளையும், வார, மாத இதழ்களையும் படித்திட ஏ வகுப்பு, பி வகுப்பு கைதிகள் அனுமதிக்கப்பட்டனர். மத்திய சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கும், பார்ஸ்டல் பள்ளிக்கூடத்தில் உள்ளவர்களுக்கும் பொங்கல் நாளன்று அதிக உணவு அளிக்கப்பட்டது.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டிக் கைதிகளின் தண்டனைக் காலங்கள் வெவ்வேறு தர அளவில் குறைக்கப்பட்டன. இதனால் 2,784 கைதிகள் விடுதலையடைந்ததுடன், 11,488 கைதிகள் பயனடைந்தனர். சிறைக் கைதிகள் எழுதிய கவிதைகளைத் தொகுத்து சிறை தரும் தேன் கவிதை என்ற நூல் வெளியிடப்பட்டது. பெண் கைதிகளின் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக வேலூரில் ஒரு குழந்தை வளர்க்குமிடமும், ஒரு குழந்தை காப்பிடமும் கட்டப்பட்டன. கோடைக் காலத்தில் வெம்மையைத் தணித்துக் கொள்வதற்காகப் பனைமட்டை விசிறிகள் கைதிகளுக்கு வழங்கப்பட்டன. கைதிகள் ஓய்வு நேரங்களில் கேரம், செஸ் விளையாட அனுமதிக்கப்பட்டனர்.

அரசின் செலவிலேயே அரசாங்கத் தேர்வுகளுக்குச் செல்ல கைதிகள் அனுமதிக்கப்பட்டனர். பார்ஸ்டல் பள்ளிக் கூடத்திலுள்ளவர்கள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். எல்லா வகுப்புக் கைதிகளும் விரும்பும் வரை, மாத இதழ்களை வாங்கிப் படிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவ்விதழ்கள் மதிப்பிற்குரியவைகளாக இருக்க வேண்டும். அரசாங்கச் செலவில் 100 கைதிகளுக்கு ஒரு பத்திரிகை வீதம் தினமணி, சுதேசமித்திரன், நவமணி ஆகிய பத்திரிகைகள் வழங்கப்பட்டன. இவ்வசதிகள் துணைச் சிறைச் சாலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டன.

கைதிகள் பரிசுச் சீட்டுகள் வாங்க அனுமதிக்கப்பட்டனர். மூன்று கைதிகள் பரிசும் பெற்றுள்ளனர். காந்தி நூற்றாண்டு விழாவை யொட்டிக் கைதிகளின் தண்டனைக் காலங்கள் பல்வேறு தர அளவில் குறைக்கப்பட்டன. இதனால் 2,687 கைதிகள் விடுதலை செய்யப்பட்டதுடன், 9,561 கைதிகள் பயனடைந்தனர். 12-11-68க்கு முன்பு மரண தண்டனை பெற்றவர்கள் அனைவருக்கும் இந்திய அரசு முடிவின்படி, மரண தண்டனை நீக்கப்பட்டு, வாழ்நாள் தண்டனை அளிக்கப்பட்டது. இதனால் 111 கைதிகள் தூக்குமரத்தில் ஏற்றப் படுவதிலிருந்து தப்பினர்.

தஞ்சாவூருக்கு அருகில் நீலகிரி என்ற இடத்தில் 114 ஏக்கர் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கப்பட்டது. திறந்த வெளிச் சிறைச்சாலையில் குறைந்த அளவு கண்காணிப்பே இருந்தாலும், இதுவரை யாரும் தப்பித்துச் செல்லவில்லை. அங்கு கைதிகள் கிணறு வெட்டுதல், நிலம் திருத்துதல், உழுதல், பயிரிடுதல் ஆகிய பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர். அங்குள்ள கைதிகளுக்கு நாள் ஒன்றுக்கு 50 கிராம் அரிசி அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு நாளொன்றுக்கு 25 பைசா கூலியும் கொடுக்கப்படுகிறது. ஆறு நாள் வேலை செய்தால் ஒரு நாள் தண்டனைக் காலம் குறைகிறது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு மாத மொன்றுக்கு 90 கிராம் நல்லெண்ணெயும், 45 கிராம் சிகைக்காய்த் தூளும் கொடுக்கப்படுகின்றன.

நான் முதலமைச்சரான பின்னர் கல்வி சம்பந்தமான ஒலிபரப்புகளைக் கேட்டு கைதிகளும் பயனடைய வேண்டுமென்பதற்காக கோயம்புத்தூர், சேலம், சென்னை மத்திய சிறைகளுக்கு புதிய வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. சிறைச்சாலைகளில் செய்யப்படும் மனைத் துணைப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டு மரங்களை வளமாக்கும் நிலையமொன்று வாங்கப்பட்டது. நாட்டு மரங்களைத் தேக்கு மரங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தியதால், திருச்சி மத்திய சிறையில் குறிப்பிடத்தகுந்த அளவு செலவு குறைந்தது. புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளிக்கூடத்திற்கு புதிய தச்சுப் பட்டறை வாங்க ரூபாய் 36 ஆயிரம் அனுமதிக்கப்பட்டது. சேலம் மத்திய சிறைச்சாலையில் உள்ள அலுமினிய தொழிற்சாலைக்குச் சுழலும் கடைசல் பொறி வாங்கப் பட்டதால், அலுமினியப் பொருள்களின் உற்பத்தி விலை குறைந்ததுடன், உற்பத்தியும் பெருகியது. பேரறிஞர் அண்ணா அவர்களின் 61 ஆவது பிறந்த நாள் விழாவையொட்டி 15-9-1969 அன்று 15 ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் தண்டனை அனுபவித்தவர்கள் மீது இரக்கம் காட்டும் வகையில் விடுதலை செய்யப்பட்டனர். இதனால் 21 கைதிகள் பயனடைந்தனர்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

13-7-2002

2784. நெஞ்சையள்ளும் நிறைவான வெற்றி!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (12)

(நேற்றைய தொடர்ச்சி)

புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக்கூடத்தில் உள்ளவர்களில் சிலர், புதுக்கோட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நாள்தோறும் சென்று பயிற்சி பெற்றுத் திரும்ப அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்குப் புத்தகம் வாங்க ரூபாய் 54 அனுமதிக்கப்பட்டது. புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக்கூடம், சேலம், திருச்சி மத்திய சிறைச் சாலைகள் மற்றும் சில துணை சிறைச்சாலைகளில் நீரால் எளிதில் தூய்மைப்படுத்தப்படுகிற கழிப்பிடம் கட்டுவதற்காக ரூ.2,69,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. அவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மூன்று திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் பண்ணை வேலை செய்துவரும் கைதிகளுக்கும், மாதவரம் பால் பண்ணையில் கிணறு தோண்டும் வேலையில் ஈடுபடும் கைதிகளுக்கும் தண்டனைக் குறைப்பு, கூலி, பீடிகள், எண்ணெய், சிகைக்காய்த் தூள் முதலியன வழங்கப்பட்டன. துணை சிறைச்சாலைகளில் உள்ள எல்லாக் கைதிகளுக்கும் தங்கள் சொந்தச் செலவில் சோப்பு, எண்ணெய், சிகரெட், பீடிகள், புகையிலை முதலியவைகள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. துணை சிறைச் சாலைகளில் உள்ள கைதிகள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்குத் தலைக்கு 28 கிராம் நல்லெண்ணெய், 28 கிராம் சிகைக்காய்த் தூள் வீதம் மாதந்தோறும் அளிக்கப்படுகிறது. எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் உள்ள குற்றவாளிக் காவலர்களுக்கு (கன்விக்ட் வார்டர்) தனிச் சமையற்கூடமும், சாப்பிடும் இடமும் அளிக்கப்பட்டுள்ளன. அவை தொடர்ந்து நிரந்தரமாகவும் ஆக்கப்பட்டன.

மத்திய சிறை, துணை சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் தங்கள் துணிகளைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு அரை பார் துணி சோப்பு வழங்கப்பட்டது. சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு விலங்கிடுவதை மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டதாகக் கருதி,

அம்முறை விலக்கப்பட்டது. நீரினால் எளிதில் தூய்மைப்படுத்தப்படுகிற கழிப்பிடங்களை வேலூர், பாளையங்கோட்டை, கோயம்புத்தூர் மத்திய சிறைச் சாலைகளிலும் சேலம், கொக்கிரக்குளம் ஆகிய இடங்களில் ஆண்களுக்காக உள்ள தனித் துணை சிறைச்சாலைகளிலும் மூன்று ஆண்டுகளில் படிப்படியாகக் கட்டி முடிக்க 2,28,200 ரூபாயும், சென்னை மத்திய சிறையில் மூன்று ஆண்டுகளில் படிப்படியாகக் கட்டி முடிக்க 3,20,000 ரூபாயும் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. கடலூர் மத்திய சிறைச்சாலையில் ரூ. 60,000 செலவில் இவ்வகைக் கழிப்பிடங்களைக் கட்டும் திட்டம் அரசின் கவனிப்பில் உள்ளது.

வேலூர் மத்திய சிறையில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட கைதிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால், எல்லா சிறைச் சாலைகளிலும் உள்ள தொழு நோய்க் கைதிகளையும் வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மத்திய சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளிக் கூடங்களுக்கு சமையலாளர் நியமிக்க அனுமதிக்கப்பட்டனர். கைதிகளுக்கு கல்வி வாய்ப்பினை ஏற்படுத்த வேலூர் மத்திய சிறையில் முதன் முதலாக இரவுப் பள்ளிக்கூடம் துவக்கப்பட்டது. படித்த குற்றவாளிகளை ஆசிரியர்களாக்கி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, இரவு 7 மணி முதல் 9 மணி வரை இரவுப் பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தேர்வு நடத்தி முடிவும் ஆய்வும் செய்யப்படுகின்றன.

சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலை அடைந்த முன்னாள் குற்றவாளிகளுக்கு அரசாங்கத்தில் வேலைவாய்ப்பு அளிக்கக் கூடாது என்று இருந்த தடையை அகற்றி, அவர்களுக்கு வேலைவாய்ப்பு நல்கி மறுவாழ்வளிக்க வேண்டுமென்பதற்காக முன்னாள் குற்றவாளிகள் எந்தச் சூழ்நிலையில் குற்றம் செய்தார்கள் என்ற உண்மையின் அடிப்படையில் ஆய்ந்து, தகுந்தவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க விதியைத் தளர்த்தலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் முன்னாள் குற்றவாளிகள் அரசாங்க வேலைகளில் சேர்ந்து பணியாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக என் வாழ்க்கைக் குறிப்புகளில் அதிக இடத்தைப் பிடித்துக் கொண்ட நிகழ்ச்சிகளில் முக்கியமானவைகளான கல்லக்குடிப் போராட்டம், சிறை வாழ்க்கை ஆகியவை பற்றி

நான் தொடர்ந்து இதழ்களில் எழுதிக்கொண்டு வர நேரிட்டது. டால்மியாபுரம் பெயரைக் கல்லக்குடியென மாற்றும் உத்தரவை மத்திய அரசு பிறப்பித்து அதன் காரணமாக தமிழகமெங்கும் கல்லக்குடி வெற்றி விழா நடைபெற்றுக் கொண்டாடப்பட்டது. பல ஆண்டுகட்கு முன்னர் தொடங்கிய தமிழனின் தன்மானப் போருக்கு வெற்றி கிடைத்துவிட்டது. கழகத்தினரைப் பார்த்து அண்ணா அடிக்கடி கூறுவதுண்டு.

என் முன்னால் லட்சக்கணக்கான மக்களை காட்டுகிறீர்கள். உயர உயரக் கொடிகளை ஏற்றிக் கட்டுகிறீர்கள். வான்முட்ட வாழ்த்து முழக்குகிறீர்கள். கோபுர உயரம் மாலைகள் குவிக்கிறீர்கள். இவைகளை மட்டும் நான் டில்லிக்காரர்களிடம் காட்டினால் அவர்கள் இறங்கி வருவார்கள் என்று எண்ணுகிறீர்களா? என் பின்னால் எத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள்? எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள்? எத்தனை நகராட்சித் தலைவர்கள்? என்ற கணக்கல்லவா ஜனநாயகத்தில் தேவை என்கிறார்கள்!

இப்படி அண்ணா குறிப்பிட்டது எவ்வளவு உண்மை என்பதற்குக் கழகம் ஆட்சி பீடம் ஏறிய பிறகு பெற்ற வெற்றிகளே தக்க சான்றுகளாகும். 1953-ல் கல்லக்குடி என்ற தமிழ்ப் பெயருக்காகப் போராடிப் பலர் சிறை புகுந்து, பலர் அடக்கு முறைகளை ஏற்று, சிலர் உயிர் இழந்து, அதன் பிறகு 1967-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்று ஆண்டு காலம் டெல்லியை இடைவிடாமல் வற்புறுத்தி இறுதியில் வெற்றிக்கனியைப் பெற்றிருக்கிறோம்.

முதலில் தொடங்குவது தெற்கு! இறுதியாகப் பிந்திக் கொள்வதும் அதுதான்! - என்பது வியட்நாம் நாட்டின் பிரபலமான பழமொழி. இதனை அந்நாட்டுப் புரட்சி வீரன் ஹோசிமின் அடிக்கடி சொல்லத் தவறுவதே இல்லை. அவர் கருத்துப்படி தெற்குப் பகுதி விடுதலை பெறவில்லையாதலால், இறுதிவரை அந்தப் பழமொழியை நினைவூட்ட அவர் மறக்கவே இல்லை. எதனையும் தொடங்குவதில் தெற்குத் திசைக்கு இருக்கும் உயிர்ப்புச் சக்தி பற்றி வியட்நாம் பழமொழி கூறும் பொருள் இருக்கட்டும்! நமது தென்னகத்தில் 1953 ஜூலை மும்முனைப் போராட்டத்திலிருந்து முதலில் தொடங்குவது தெற்கு! தொடங்கியதைத் தொடர்ந்து முடிப்பதும் அதுதான் என்பது உறுதியாகி விட்டது. கட்டுப்பாடான போராட்ட முறையும், தட்டுத் தடங்கலில்லாத மக்கள் ஆதரவும், நெடிதுயர்ந்த தலைமையும் எத்தகு அற்புதங்களைச் சாதிக்கும்

என்பது தெளிவாக உணரப்பட்ட முதல் சம்பவமே தி.மு.கழகத்தின் மும்முனைப் போராட்டமந்தான்!

காங்கிரசின் விடுதலைப் போராட்ட நாட்களில் தென்னகத்தைப் பொறுத்தவரையில் களங்களுக்கான தளபதிகள் உருவாக்கப்பட்டார்களே தவிர, மக்கள் தலைவர்கள் யாரும் உருவாகவில்லை. அறிவார்ந்த திறமையாளர்கள் இருந்தனர். மக்களின் இதயத்தோடு பேசும் தலைவர்கள் இல்லை. எதிரியிடம் வாதிட்டுப் போர் புரிவதில் வல்லவர்கள் இருந்தனர். மக்களை வயப்படுத்தும் மாமனிதர்கள் அப்போது இல்லை.

தெற்குக்கு இருந்த அந்தக் குறை பெரியார் பாசறையில் தயாரான அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் நுழைவால் நீங்கி, மும்முனைப் போராட்ட நாட்களில் நிறைவு கண்டது. மும்முனைப் போராட்டத்தின்போது நாட்டின் அரசியல் நிலையும், மக்களின் மன நிலையும், அதிகாரம் வகித்தோரின் அலட்சிய மனப்பான்மையும், ஜனநாயகத்திற்கு இருந்த அவக்கேடும் யாராலும் சரியாக உணரப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். பொதுவாக நமது ஜனநாயக அரசியல் சட்டம் 1933க்கு முன்பு ஜெர்மனியில் வீமார் குடியரசின் அரசியல் சட்டத்தைப் போலவே மதிப்புப் பெற்றிருந்தது. அரசியல் சட்டத்தைக் காட்டிலும் காங்கிரஸ் கட்சியின் விதிமுறைகள் கவனமாக நாட்டில் படிக்கப்பட்டன.

இந்தோனேசியாவில் சுகர்னோ செய்ததைப் போல் இந்தியாவிலும் ஜனநாயகத்திற்குக் கட்டுப்பாடும், காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்புகளுக்கேற்ப அரசியல் சட்டங்களும் உருவாக்கப்படும் சூழ்நிலையும் நிலவிற்று. சமுதாயத்தின் முற்போக்குக் கருத்துகளைப் பண்டித நேரு பரப்பிக் கொண்டிருந்தாலும், மற்ற காங்கிரஸ்காரர்கள் மனு மாந்தாதா காலம் திரும்பாதா என்று பேராசை பிடித்து அலைந்தனர். இந்தியா என்பது புதுடில்லியின் அரசியல் புழுதியில் மூடி மறையக்கூடிய நிலப் பகுதியாகவே கருதப்பட்டது.

காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் வெற்றி என்பவைகளைத் தவிர, நாடு மற்ற தலைவர்களையோ, மற்ற கட்சிகளையோ, மற்ற கருத்துக் கொண்ட மக்களையோ கொண்டிருப்பதாக அரசியல் அதிகாரம் பெற்றோர் அப்போது கருதவில்லை. இந்நிலையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் சமுதாயம், தமிழ்ப் பற்று ஆகியவைகளை உள்ளடக்கிய நாடு தழுவிய பெரும் போர்முனைகளை, ஒரே நாளில் நடை

பெறுவதாக அறிவித்து உருவாக்கினார்கள். போராட்ட முடிவுகளைப் பற்றி யாருக்கும் ஐயப்பாடு இல்லை. ஆனால் விளைவுகள் மிகப் பயங்கரமாக இருக்கும் என்று எதிர்பார்த்தே பல்லாயிரக் கணக்கானவர் களம் புகுந்தனர். ஈண்டுச் செல்லும் மக்காள், நீவீர் ஸ்பார்ட்டா சென்று பகர்வீர், நாங்கள் பணியை முடித்துப் படுத்தோம்!

– என்று ஸ்பார்ட்டானிய மாவீரன் ஒருவன் கூறிக் கொண்டே களத்தில் மடிந்ததாக அவன் மாண்ட இடத்தில் நடப்பட்டுள்ள கல்வெட்டின் வீர வரிகளை எண்ணிக் கொண்டே நாங்கள் போர்க்களம் சென்றோம். அந்த வீரன் தன் பணியை முடித்துப் படுத்ததாக நடுகல்லிலே எழுதப்பட்டதாக வரலாறு முழங்குகிறது. ஆனால் கல்லக்குடிப் போராட்டத்திலே நாங்கள் படுத்துப் பணி முடிக்கச் சென்றோம். கல்லக்குடி வெற்றி விழாவின் போது நான் தலை வைத்துப்படுத்திருந்த அந்தத் தண்டவாளத்தைச் சென்று பார்த்தேன். அன்று படையின் முதல்வனாகச் சென்றேன், போலீசார் புடைசூழ. இன்று தமிழக முதல்வனாகச் சென்றேன்; அதே போலீசார் புடை சூழ!

அன்றிருந்த மகிழ்ச்சி இன்றில்லை. ஆனால் வெற்றிப் பூரிப்பு சாதாரணமானதல்லவே! மும்முனைப் போர் நடந்த அந்த 1953-ஆம் ஆண்டில் உலகில் எத்தனையோ நிகழ்ச்சிகள்! எகிப்து மன்னன் பரூக் விரட்டப்பட்டுப் பிரதமராகப் பொறுப்பேற்ற நகீபுக்குத் துணைப் பிரதமராக நாசர் பொறுப்பேற்றுக் கொண்டது 1953ல்தான். அந்த ஆண்டு மார்ச் திங்களில் ரஷ்யாவில் ஸ்டாலின் காலமானார். தொடர்ந்து டிசம்பர் 23ஆம் நாள் ரஷ்யாவில் பெரியா சுட்டுக் கொல்லப்பட்டார். ஹில்லாரி, டென்சிங் நார்கே ஆகியோர் எவரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலாக மனிதர்களின் காலடியைப் பதித்த ஆண்டும் அதுதான்!

அந்த ஆண்டு நவம்பர் 21ஆம் நாள் திருச்சி சிறையிலிருந்து நானும், முல்லை சத்தி, கஸ்தூரி, குமாரவேல், குழந்தைவேல் ஆகியோரும் விடுதலை பெற்றோம். சிறைவாசலில் தலைமைக் கழகப் பொறுப்பாளர் திரு. ஏ. கோவிந்த சாமி அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் என்னைக் கட்டித் தழுவி, கண்ணீர் மல்கிட வரவேற்றார். அன்று எங்களுக்குப் பாராட்டு விழாக் கூட்டம் நடத்தத் திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. தென்னூர்ப் பகுதியில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மறுநாள் திருவாரூரில் பாராட்டு விழாக் கூட்டம் நடைபெற்றது. நவம்பர் 29ஆம் நாள் சென்னையில் வரவேற்பு. அப்போது சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் தோழர் கண்ணபிரான் எங்களை வரவேற்க மகத்தான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். எழும்பூர் ரயில் நிலையத்தில் ரயிலில் இருந்து இறங்க முடியாத அளவுக்கு மக்கள் குழுமியிருந்தனர். வண்டியிலிருந்து கீழே இறங்கியதுதான் தெரியும்! எத்தனையோ பேரின் தோள் மீது பந்து போல் உருண்டு கொண்டேயிருந்தேன். வாழ்த்து முழங்கியவாறு என்னைக் கசக்கியெறியும் கூட்டத்திலிருந்து விடுவிப்பதற்காக அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், மதுரை முத்து போன்றவர்களும் பட்டபாடு கொஞ்சமல்ல! பிறகு அங்கிருந்து பெரியதோர் ஊர்வலம் புறப்பட்டது.

மவுண்ட் ரோடு (அப்போதைய பெயர்) வழியாக அந்த ஊர்வலம் வந்தபோது, போகவழியில்லாமல் ஒரு பிரபல அமெரிக்கரின் கார் தடைப்பட்டு நின்று விட்டது. 20 ஆண்டுகளுக்கு முன்பு என் ஊர்வலத்தைக் கண்டு, அதுபற்றி விசாரித்து அறிந்தவர் அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாவார். அவர் தான் நிக்சன். பின்னர் அமெரிக்க ஜனாதிபதியானார். இருபது ஆண்டுகட்கு முன்பு கல்லக்குடி களம் சென்று சிறை மீண்டு வந்த நான், கல்லக்குடி வெற்றி கண்டு மகிழும் வகையில் தமிழகத்தின் முதல்வனாகப் பொறுப்பேற்றிடும் வாய்ப்பையும் பெற்றேன். தமிழகத்தில் இந்த ஜனநாயக ஒளியை வழங்கியவர் அண்ணா என்பதில் ஐயமுண்டோ? அந்த மக்கள் தலைவன் தெற்குப் பகுதியில் தொடங்கிய அமைதியான புரட்சியை யார்தான் மறக்க இயலும்? என்னுடன் சிறையிலிருந்த குமாரவேலன் சிறையிலேயே நோய்வாய்ப்பட்டிருந்து, விடுதலை பெற்ற சில நாட்களுக்கெல்லாம் உயிரிழந்ததையும், அடுத்து சில மாதங்களுக்குப் பிறகு குழந்தை வேலன் உயிரிழந்ததையும் என்னால் மறக்கவே இயலாது.

சிறைப்பட்ட சிங்கங்கள், உயிர் நீத்த தங்கங்கள் அனைவரும் ஈட்டித் தந்ததன்றோ இந்த இணையற்ற வெற்றி என எண்ணும்போதெல்லாம் நெஞ்சம் நெக்குருகுகிறது.

(முற்றும்)

அன்புள்ள,

மு.க.

14-7-2002

2785.அலகாபாத்தீர்ப்புழக்கும்; அதிரடித்

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு! (1)

உடன்பிறப்பே,

மொழிப்போர் - மும்முனைப் போராட்டம் - ஆகியவற்றின் இருகளங்கள் குறித்து தொடர்ந்து எழுதினேன். இப்போது நமது கழகம் சந்தித்த எமர்ஜென்சி எதிர்ப்புப் போர் எனப்படும் இரண்டாவது சுதந்திரப் போராட்டம் பற்றி நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளை வெளியிடுகிறேன். நெஞ்சுக்கு நீதியில் இடம் பெற்றுள்ள இத்தொடர், இந்த இயக்கத்தின் இளைய தலைமுறையின் நெஞ்சங்களுக்கு,முந்தைய இரு போர்க்களத் தொடர்களைப் போலவே வைரம் பாய்ந்த உறுதியை வழங்குமென்ற நம்பிக்கையுடன் தொடங்குகிறேன்.

தேசம் போச்சு! தேசம் போச்சு! என்று தேம்பும் குரலில் பெருந்தலைவர் காமராசர் கலங்கித் துடித்தாரே! அந்த நெருக்கடி நிலை பற்றித்தான் விவரிக்கிறது இந்தத் தொடர் கட்டுரை!

அன்புள்ள,

மு.க.

1975ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் தேதி என்பது சுதந்திர இந்தியாவின் சரித்திரத்தில் - குறிப்பாக இந்தியாவின் நீதித்துறையிலே அழியாத இடம் பெற்ற தினமாகும். அன்றுதான் 1971ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் உத்திரப் பிரதேசம் ரேபரேலி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியாவின் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் தேர்தல் செல்லாது என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த நாள்.

தன்னுடைய தேர்தல் வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்வதற்காக பிரதமர் இந்திரா காந்தி ஊழல் முறைகளைக்

கையாண்டார் என்ற புகார்களில் இரண்டை நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அளித்த நீதிபதியின் பெயர் ஜகன் மோகன்லால் சின்ஹா. இந்திரா காந்தியின் தேர்தல் செல்லாது என்று வழக்குத் தொடுத்தவர், அவரை எதிர்த்து அந்தத் தேர்தலில் தோல்வியடைந்த ராஜ்நாராயண். அந்த வழக்கில் பிரதமருக்கு ஆதரவாக வழக்கறிஞர் என்.சி.காரேயும், ராஜ்நாராயணனுக்கு ஆதரவாக சாந்திபூஷனும் ஆஜரானார்கள். இரண்டு வழக்கறிஞர்களும் அரசியல் சார்புடையவர்கள். காரே புதிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். சாந்திபூஷன் பழைய காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்.

இந்திரா காந்தி தனது தேர்தல் வெற்றிக்காக இந்திய சர்க்காரின் கெஜட் பதிவு பெற்ற அதிகாரியாகப் பணியாற்றிய யஷ்பால்கபூர் அவர்களை தனது தேர்தல் வாய்ப்புகளுக்காகப் பயன்படுத்திக்கொண்ட ஊழலையும், இந்திரா காந்தியின் தேர்தல் கூட்டங்களில் உத்திரப்பிரதேச அரசு செய்த ஏற்பாடுகளையும், போலீஸ் படைகளை அங்கு காவல் போட்ட வகையில் ஊழல் செய்தார் என்பதையும் நீதிபதி உத்தரவில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். யஷ்பால்கபூர் அவர்கள் முன்னதாகவே தனது வேலையை ராஜினாமா செய்த போதிலும், அது குடியரசுத் தலைவரால் ஜனவரி 25ஆம் தேதிதான் ஒப்புக்கொள்ளப்பட்டது; எனவே அந்தத் தேதி வரையில், அவர் பணியில் இருந்ததாகத்தான் பொருளாகும். அந்தக் கால இடைவெளியில் அவர் இந்திரா காந்தியின் வெற்றிக்காக உழைத்தது முறை கேடானது என்று நீதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இந்தத் தீர்ப்பு கூறப்பட்ட அரைமணி நேரத்திற் கெல்லாம் பிரதமர் சார்பில் நீதிபதி சின்ஹா முன்பு ஒரு மனுதாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டு அந்தத் தீர்ப்பின் அமல் இருபது நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்படும் என்று உத்தரவிட்டார். ஆனால் அந்த இருபது நாட்களுக்கு முன்பு உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டால், அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் ''அமல் நிறுத்த உத்தரவு அந்தத் தேதியுடன் ரத்தாகிவிடும் என்று நீதிபதி சின்ஹா தெரிவித்தார்''.

இந்திரா காந்தியின் அமைச்சரவையில் உள்ள மூத்த அமைச்சர்களான ஜகஜீவன்ராம், சவான், உமாசங்கர் தீட்சித்,

பிரம்மானந்த ரெட்டி, எச்.ஆர்.கோகலே, டாக்டர் சங்கர்தயாள் சர்மா, புது காங்கிரஸ் கட்சித் தலைவர் பருவா ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில், இந்திரா காந்தி பிரதமராக நீடிக்கிறார் என்றும், இந்திரா காந்தியின் தலைமையில் முழு நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருப்பதாகவும், அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து பிரதமர் இந்திரா காந்தி உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்வார் என்றும், உச்சநீதிமன்றத் தீர்ப்பே இறுதியானது என்றும், நாட்டின் ஒருமைப்பாடு, ஸ்திரத்தன்மை, முன்னேற்றம் ஆகியவற்றுக்கு இந்திரா காந்தியின் தலைமை அவசியம் என்றும் தெரிவித்திருந்தனர்.

தீர்ப்பையொட்டி இந்திரா காந்தி உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என்று முன்னாள் துணைப் பிரதமராக இருந்த பழைய காங்கிரஸ் தலைவர் மொரார்ஜி தேசாயும், சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் மது தண்டவதே எம்.பி.யும், சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டசும், இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மோகன் தாரியாவும் தனித்தனியாகக் கருத்து தெரிவித் திருந்தனர். பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எஸ்.கே.பட்டீல், எஸ்.என்.மிஸ்ரா, சாக்ளா ஆகியோர் தீர்ப்பு குறித்து தங்களது மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகும் இந்திரா காந்தி பிரதமராக நீடிக்க வேண்டும் எனக் கூறப்பட்ட கருத்தைப் பலமாகக் கண்டித்தார்.

ஜனசங்கத் தலைவராக இருந்த வாஜ்பாய் அவர்கள், காஷ்மீரில் இருந்த குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அவர்களை ஜனதா முன்னணி கட்சிகளின் சார்பில் சந்தித்து, அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு ஏற்ப பிரதம மந்திரி இந்திரா காந்தி பதவி விலக வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கருத்தைத் தெரிவித்தார்.

தீர்ப்பு வெளியான அன்று நான் தஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டை பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தேன். தீர்ப்பு குறித்து செய்தியாளர்கள் என்னுடைய கருத்தைக் கேட்டபோது, ‘‘ஆளும் காங்கிரஸ் இந்தியாவில் மிகப் பெரிய கட்சி. இந்தியா, உலகத்தில் மதிக்கத்தக்க மிகப் பெரிய ஜனநாயக நாடு.

இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இப்போது மத்திய அரசில் இருப்பவர்கள் என்ன முடிவெடுக்கிறார்களோ, அந்த முடிவுதான் இந்தியாவின் எதிர்கால அரசியலில் முன்மாதிரியாகத் திகழும் என்று கூறினேன்''.

நிருபர்கள் தொடர்ந்து ''இந்திரா காந்தி ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்களா? வேண்டா மென்று சொல்கிறீர்களா?'' என்று குறிப்பிட்டுக் கேட்டதற்கு, ''அவர்களாகவே ராஜினாமா செய்திருந்தால்'' நாங்கள் பாராட்டியிருப்போம் என்று கூறியதோடு, ''நாங்கள் எங்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறோம். மேற்கொண்டு நடக்க வேண்டியது அவர்களுடைய அபிப்பிராயம். அவர்கள் எடுக்கும் முடிவு ஒரு ஜனநாயக நாட்டில் எதிர் காலத்தில் ஒரு முன்மாதிரியாக இருக்குமென்பதை மறந்து விடக் கூடாது. ஜனநாயகத்திற்கு உரிய மதிப்பை அளிக்க வேண்டும் என்று கூறினேன்''.

இந்திரா காந்திதான் நாட்டின் ஒரே தலைவர் என்று டெல்லியில் பல இடங்களில் இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்குகின்ற பணியினைச் செய்தபோது சந்திரசேகர் எம்.பி., கிருஷ்ணகாந்த் எம்.பி., லெட்சுமிகாந்தம்மா எம்.பி. ஆகியோர் அதில் கையெழுத்துப் போட மறுத்து விட்டனர். டெல்லியிலிருந்து வெளிவரும் இந்துஸ்தான் டைம்ஸ் என்ற பிரபல நாளேடு தனது 13.6.75 தேதியிட்ட தலையங்கத்தில், ''இப்போதுள்ள சூழ்நிலையில் சுப்ரீம் கோர்ட் அப்பீல் முடிவாகும் வரை பிரதமர் பதவியிலிருந்து விலகி நிற்பதே திருமதி இந்திரா காந்தி எடுக்கக் கூடிய சரியான நடவடிக்கையாக இருக்க முடியும். இவ்வாறு செய்வதின் மூலம் நீதித்துறையின் செயல் முறையையும் இந்திய ஜனநாயகத்தையும், அவை எழுப்பப்பட்டுள்ள அடித்தளத்தையும் அவர் மேன்மைப்படுத்திய வராவார். தலைக்கு மேல் கத்தி தொங்கும்போது, அவர் பிரதமர் பதவியில் தொடருவாரானால் செயல்பட தேவையான திறமையோ, செயல்பட வேண்டுமென்கிற எண்ணமோ இல்லாமல் ஒரு தற்காலிக அரசின் தலைவராகவே அவர் இருக்க முடியும் என்று எழுதியது.

இதே கருத்தை ஸ்டேட்ஸ்மென் போன்ற ஏடுகளும் வெளியிட்டிருந்தன.

எதிர்க்கட்சிகள் எல்லாம் டெல்லியில் ஒன்று சேர்ந்து குடியரசுத் தலைவர் அவர்களின் இல்லத்திற்கு முன்னால் தொடர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டன. இந்திராவைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டு குடியரசுத் தலைவரிடம் மகஜர் கொடுத்தனர்.

ஜூன் 23ஆம் தேதியன்று உச்சநீதிமன்றத்தில் பிரதமர் சார்பில் வழக்கறிஞர் பல்கிவாலா அலகாபாத் தீர்ப்பின் அமலை நிறுத்தி வைப்பதற்கான மனுவையும், தீர்ப்பை எதிர்த்த அப்பீல் மனுவையும் தாக்கல் செய்தார். நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர் மதிய உணவு இடைவேளைக்குக்கூடச் செல்லாமல் இருதரப்பு வாதங்களையும் கேட்டு, 24ஆம் தேதி பிற்பகல் 3.45 மணிக்குத் தீர்ப்பு கூறுவதாகத் தெரிவித்தார்.

அதன்படி அவர் மறுநாள் அளித்த தீர்ப்பில், ''பிரதம மந்திரி இந்திரா காந்தி ரேபரேலி தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று அலகாபாத் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அமலை சில நிபந்தனைகளுடன் நிறுத்தி வைக்கவும், அப்பீல் பைசல் செய்யப்படும் வரை இந்திராகாந்தி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, அந்தப் பதவிக்குரிய உரிமைகளை அனுபவிக்கலாம் என்றும், அவர் தொடர்ந்து பிரதம மந்திரி பதவியை வகிப்பதற்குச் சட்டபூர்வமான தடை எதுவும் இல்லை என்றும், ஆனால் நாடாளுமன்றத்தில் பிரேரணைகள், திருத்தச் சட்டங்கள் முதலியவைகளின் மீது ஓட்டு எடுக்கும் போது ஓட்டு போடுவதற்கு அவருக்கு உரிமை கிடையாது என்றும், நாடாளுமன்றக் கூட்டங்களில் அவர் கலந்து கொள்ளலாம் என்றும், இந்த நிபந்தனைகளை நீக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் பெஞ்சுக்கு பிரதம மந்திரி மனு செய்து கொள்ளலாம் என்றும், முழுமையான நிபந்தனையற்ற இடைக்காலத் தடை உத்தரவிற்கும், நிபந்தனையுடன் இப்போது அளிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவிற்கும் நடைமுறை சம்பந்தப்பட்ட வரையில் வித்தியாசம் ஒன்றுமில்லை என்றும் நீதிபதி தீர்ப்பு கூறினார். இந்த உத்தரவை மாற்ற வேண்டுமென்று எதிர் மனுதாரர் ராஜ்நாராயணன் விரும்பினால், உச்சநீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சுக்கு அவரும் அப்பீல் செய்யலாம் என்றும் தீர்ப்பளித்தார்''.

உச்சநீதிமன்றத் தீர்ப்புப் பற்றி நிருபர்கள் கேட்டதற்கு, பிரதமர் பதில் கூற மறுத்துவிட்டார். ராஜ்நாராயணன், நீதிபதி அளித்த

இடைக்காலத் தடை உத்தரவில் நிபந்தனைகள் விதித்திருப்பதை வரவேற்று, பிரதமர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கோரினார். பிரதமர் வீட்டில் காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்களும், தலைவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்களும் சேர்ந்து ஆலோசனை செய்தனர். இறுதியாக சுப்ரீம் கோர்ட்டின் நிபந்தனை கொண்ட இடைக்காலத் தடை உத்தரவிற்குப் பிறகும், ராஜினாமா செய்வதில்லை என இந்திராகாந்தி முடிவு செய்தார்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

15-7-2002

2786. கழுத்தை நெரிக்கும் சட்டங்களும் கழகச் செயற்குழு தீர்மானமும்!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு! (2)

(நேற்றைய தொடர்ச்சி)

உச்சநீதிமன்றத் தீர்ப்பு வெளியானதும் அதுபற்றி செய்தியாளர்கள் என்னிடம் கருத்து கேட்டனர். ''அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பை தொடர்ந்து உச்சநீதிமன்றத் தீர்ப்பும் வழங்கப்பட்ட பிறகு, அந்தத் தீர்ப்பின் உட்பொருளை உணர்ந்து இந்திய நாட்டு ஜனநாயக அரசியலுக்கு எதிர்கால முன்மாதிரியை அளிக்க வேண்டிய பொறுப்பின் சுமை, ஆளுங் காங்கிரசின் மீதும் - திருமதி இந்திராகாந்தியின் மீதும் அதிகமாக விழுந்துவிட்டது''. இந்திய ஜனநாயகத்தின் மேன்மை எந்த வகையில் பாதுகாக்கப்படப் போகிறது என்பதை மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள் என்று கூறினேன்.

நிபந்தனையற்ற இடைக்காலத் தடை பெறத் தவறியது இந்திரா காங்கிரசிற்குக் கிடைத்த அடுத்த தோல்வியாகத்தான் கருதப்பட்டது. அதற்குப் பிறகும் இந்திராகாந்தி ராஜினாமா செய்ய மறுத்த காரணத்தால், அவரை ராஜினாமா செய்ய வேண்டுமென்று கோரி நாடு முழுவதிலும் ஜூன் 29ஆம் தேதியன்று போராட்டம் நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டன! அந்தப் போராட்டத்தை நடத்துவதற்காக மொரார்ஜி தேசாய் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்த எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்திற்கு தி.மு.கழகமும் அழைக்கப்பட்டிருந்தது.

அந்த ஆலோசனைக் கூட்டத்தில் பழைய காங்கிரஸ், ஜனசங்கம், பாரதீய லோக்தளம், சோஷலிஸ்ட், அகாலி தளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகள் கலந்துகொண்டன.

இவ்வாறு இந்தியா பூராவும் உள்ள முக்கிய ஏடுகளும், எதிர்க்கட்சிகளும், மூத்த தலைவர்களும், இந்திரா காந்தி அவர்களை

ராஜினாமா செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியபோது, இந்திராகாந்தி அம்மையார் செய்தது என்ன தெரியுமா?

அவசர நிலையைப் பிரகடனம் செய்து அதுபற்றி வானொலியின் மூலம் 26ஆம் தேதி காலையில் உரையாற்றினார். அதைக்கேட்டு, தி.மு.கழகம் ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் துடித்தெழுந்தது! நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள், ஜூன் மாதம் 27 ஆம் தேதி காலை 11 மணிக்கு தலைமைச் செயற்குழு கூட்டத்தைக் கூட்டியது.

ஒருநாள் இடைவெளியில் கூட்டிய போதிலும் மொத்தம் 75 செயற்குழு உறுப்பினர்களில் 63 பேர் கலந்து கொண்டார்கள். முதல் நாள் இரவு தலைமைக் கழகத்தினருடன் கலந்துரையாடிவிட்டு விடியற் காலை நான்கு மணி அளவில் என் கைப்படத் தீர்மானத்தை எழுதி, மறுநாள் செயற்குழு விவாதத்திற்கு வைத்தேன். அந்தத் தீர்மான வாசகமாவது:-

''உலகத்தின் மிகப் புகழ் வாய்ந்த மாபெரும் ஜனநாயக நாடாகக் கருதப்பட்டு வந்த இந்தியத் திருநாட்டில் அண்மைக் காலமாக ஆளுங் காங்கிரசார் கடைப்பிடிக்கும் போக்கும், பிரதமர் இந்திரா காந்தியார் அவர்கள் நடைமுறைப்படுத்தும் காரியங்களும் ஜனநாயக ஒளியை அறவே அழித்து நாட்டை சர்வாதிகாரப் பேரிருளில் ஆழ்த்தும் வண்ணம் அமைந்து வருவது கண்டு, தி.மு.கழகச் செயற்குழு தனது வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறது''.

இந்திய நாடு சுதந்திரம் பெற்று, விடுதலைக்கான வெள்ளி விழாவும், குடியரசுப் பிரகடனத்திற்கான வெள்ளி விழாவும் கொண்டாடி முடித்தபிறகும், அடித்தளத்து மக்கள், ஏழை, எளியோர், பாட்டாளிகள் வாழ்வில் நிம்மதியற்ற நிலையேதான் நீடித்து வருகிறது. அவர்களுக்காகப் பெரிய சாதனைகளை உருவாக்கப் போகிறோம் என்று மத்திய அரசினால் அறிவிக்கப்பட்ட பட்டியல்கள் ஏராளமெனினும், பயன் எதுவும் ஏற்படவில்லை.

தனது தேர்தல் கால வாக்குறுதிகளில் ஆளுங் காங்கிரசும், குறிப்பாக திருமதி இந்திரா காந்தி அவர்களும் முக்கியமாக வறுமையை விரட்டும் பணியை உடனடியாக நிறைவேற்றப் போவதாகக் கூறி வந்தனர். அந்தப் பணிக்கு எந்தக் கட்சியும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. வறுமை நீங்கி ஏழையெளிய

மக்கள் மகிழ்வெய்தி, இந்திய நாடு மேன்மையுறுவது எல்லா கட்சிகளுக்கும் உடன்பாடான கொள்கைதான்.

குறிப்பாக, தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில், இந்திரா காந்தி அறிவித்த முற்போக்குத் திட்டங்களை வரவேற்றுப் பாராட்டித் தனது ஒத்துழைப்பையும் நல்கி யிருக்கிறது. வங்கிகளைத் தேசியமயமாக்குவது, மன்னர் மானியத்தை ரத்து செய்வது போன்ற செயல்களை வற்புறுத்தியதும், வரவேற்றதும் தி.மு.கழகம் என்பதை நாடறியும். இதுபோன்ற இரண்டொரு அறிவிப்புகளால், வறுமை தொலைந்து விடவில்லை. வறுமையை அகற்ற முடியாததற்கான வழியை எதிர்க்கட்சிகள் மீது சுமத்துகிற பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்து வந்த இந்திரா காந்தி அவர்கள், இப்போது திடீரென உள்நாட்டுப் பாதுகாப்பு என்ற பெயரால் அவசரநிலைப் பிரகடனத்தைச் செய்து விட்டு, அந்த அவசரச் சட்டத்தையொட்டி, ஏழையெளிய பின்தங்கிய மக்களுக்கு நன்மைகளை வாரி வழங்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இந்தப் பாதுகாப்பு அவசரச் சட்டம் இல்லாமல், இது வரை இருந்து வந்த ஜனநாயகச் செயல் முறையிலேயே ஏழைகளுக்கான நன்மைகளை வழங்குவதை எந்தச் சூழ்நிலை தடுத்தது? நாடாளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மையான பலத்துடனும், இந்தியாவில் பல மாநிலங்களில் தங்கள் கட்சி ஆட்சியுடனும் வலிவோடு விளங்குகிற இந்திரா காந்தி, முற்போக்குத் திட்டங்களை ஏழைகளுக்கான நன்மைகளை நாடாளுமன்ற, சட்டசபை பெரும்பான்மையோடு சட்டமாக்க முடியவில்லை. ஆகவே உள்நாட்டுப் பாதுகாப்புக்கான அவசரச் சட்டமென்னும் ஆட்கொல்லி சட்டத்தைப் பிரகடனம் செய்கிறேன் என்பது வேடிக்கையான விபரீத வாதமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், எதிர்க்கட்சி முதலமைச்சர்கள் இருக்கின்ற தமிழகத்தில் அல்லது கேரளத்தில் அல்லது குஜராத்தில், ஏழை எளியோரை வாழ வைக்கும் சட்டங்களை மறுக்கின்ற அரசுகள் இருக்கின்றனவா?

வருந்தத்தக்க செய்தி என்னவென்றால், ஏழை எளிய மக்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் தமிழக தி.மு.க. அரசு நிறைவேற்றத் துடிக்கிற திட்டங்களை அங்கீகரிக்காமல் முட்டுக் கட்டை போடுவதில் மத்திய அரசு முனைப்பாக இருந்து வருகிறது என்பதுதான் உண்மையாகும்.

உண்மையின் உருவம் மறைக்கப்பட்டு, பொய்யின் நிழலில் நின்று கொண்டு எதிர்க் கட்சிகளை அடக்குவதற்குத் திட்டம் தயாரித்து, அந்தத் திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான போலிக் காரணங்களை தேடியலைந்து, வீண் அபவாதங்களை வாரியிறைத்து - எடுத்ததற் கெல்லாம் சதி, வெளிநாட்டுத் தொடர்பு, பிற்போக்குவாதிகள் என்ற சொற் கணைகளைப் பொழிந்து, காலாகாலத்திற்கும் இந்திய நாட்டு மக்களுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் திருமதி இந்திரா காந்தி நேற்றைய தினம் (26.6.1975) அதிகாலையில் சர்வாதிகாரத்திற்கான தொடக்க விழாவை நடத்தியிருக்கிறார்.

வெளிநாட்டார் பகையிலிருந்து நாட்டை மீட்க அணி திரண்டு நின்றவர்களையெல்லாம், இன்று உள் நாட்டைப் பாதுகாக்கிறேன் என்ற பெயரால் சிறைக் கொட்டடிகளில் தள்ளியிருக்கிறார். இந்திய மண்ணின் விடுதலைக்காக தியாகத் தழும்புகளை ஏற்ற பழம் பெரும் தேசபக்தர்கள், கைதிகள் என்ற பரிசினை, இந்திரா ஆட்சியில் பெற்றிருக்கிறார்கள். வெள்ளையர் ஆட்சியின்போதும் இல்லாத கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. தேசத் தலைவர்களின் மீது ஏவிவிடப் பட்டுள்ள அடக்குமுறை கண்டு நாடு குமுறி எழுந்துள்ளது. எல்லா செய்திகளும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டன. அப்படியொரு சட்டம் பாய்ந்துள்ளது இப்போது! வையம் புகழ் தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தியைக் கூட வானொலி வெளியிடவில்லை. 'சிலர் கைது' என்று கூறி, நாட்டின் நாயகர்களை நபர்களில் சிலராக வானொலி வர்ணிக்கிறது. தணிக்கை செய்யப்பட்ட பிறகே பத்திரிகைகளில் செய்திகள் வெளி வரவேண்டுமாம்.

விடுதலை பெற்ற இந்தியாவில், எத்தனையோ முறை எதிர்க்கட்சிகளின் எழுச்சி மிக்க கிளர்ச்சிகள் எரிமலைகளாக வெடித்திருக்கின்றன. அப்போதெல்லாம் ஜவஹர் காலத்திலோ, லால் பகதூர் காலத்திலோ, பாயாத உள்நாட்டுப் பாதுகாப்பு அவசரச் சட்டம் இன்று முதன்முறையாகப் பாய்வானேன்?

சதி நடத்துவோர், வன்முறையில் ஈடுபடுவோர், தகாத முறையில் பேசுவோர், எழுதுவோர் தண்டிக்கப் பட ஏற்கெனவே எத்தனையோ சட்டங்கள் இருக்கும் போது, நாட்டைச் சர்வாதிகாரப் பாதைக்கு இழுத்துச் செல்லும் வகையில் இந்த அவசரச் சட்டம் அமலுக்கு வருவது தேவைதானா? ஜனநாயகத்தைப்

பாதுகாக்கிறோம் எனக் கூறி, சர்வாதிகாரக் கொற்றக் குடையின் கீழ் தர்பார் நடத்திட எடுக்கப்படும் முயற்சி நாட்டுக்கு ஏற்றதுதானா?

இவைகளையெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் சிந்தித்துப் பார்த்து, நேற்றைய அவசர காலப் பிரகடனத்தினைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்திட முன்வரவேண்டும்.

பத்திரிகையாளர்களின் கைக்கட்டுகளை அவிழ்த்து விட்டு, பத்திரிகைகளுக்குரிய நியாயமான உரிமைகளைத் தடையின்றி வழங்க வேண்டும். அதுவே, இந்திய ஜனநாயகத்துக்குப் பெருமை சேர்க்கும் காரியமாகும் என்று தி.மு.க. செயற்குழு சுட்டிக் காட்டுவதோடு, ஜனநாயகத்தைப் பாதுகாக்க இந்தச் செயற்குழு பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு விடுக்கும் இந்த வேண்டுகோள் வெற்றி பெற இந்திய நாட்டு மக்கள், சிறப்பாகத் தமிழ்நாட்டு மக்கள், காந்தி அடிகள் நெறியை மறவாமலும், ஜனநாயகச் சின்னமாம் அறிஞர் அண்ணாவின் பாதையிலிருந்து தவறாமலும், தமக்கே உரிய தனிப் பண்பாட்டுடன் அமைதியான முறையில் வன்முறை தவிர்த்த வழியில் சட்டம், ஒழுங்குக்கு ஊறு நேரா வண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

தி.மு.கழகம் தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருந்த போதிலும் துணிந்து மத்திய அரசை ஆளும் இந்திரா காந்திக்கு எதிராக இப்படிப்பட்ட தீரமிக்க தீர்மானத்தை அன்றைய தினம் நிறைவேற்றியது, இந்திய அளவில் - ஏன் உலக அளவில் கூட பெரிதும் வியந்து பாராட்டப்பட்டது. அகில இந்தியாவிலும் நெருக்கடி நிலையை - இந்திரா காந்தியின் நடவடிக்கைகளை அன்றைய தினம் கண்டித்து முதன்முதலாக கட்சி ரீதியாக தீர்மானம் நிறைவேற்றி வெளியிட்ட பெருமையும் தி.மு.கழகத்திற்குத்தான் உண்டு.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

16-7-2002

2787. எழுத்துரிமையும் பேச்சுரிமையும் எங்கே? எங்கே?

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு! (3)

(நேற்றைய தொடர்ச்சி)

கழகம் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியதற்கு மறுநாள், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிற யாரும் அதை எதிர்த்து வழக்கு மன்றங்களுக்குப் போக முடியாது, அதற்கு உரிமை கிடையாது என்ற வகையில் ஒரு அவசரச் சட்டத்தைக் குடியரசுத் தலைவர் பிரகடனம் செய்தார். கைது செய்யப்பட்டது ஏன் என்ற காரணத்தையும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லையென மற்றொரு அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

நெருக்கடி நிலையின் விளைவாக, தமிழகத்தைத் தவிர, மற்ற மாநிலங்களில் தினந்தோறும் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அது பற்றிய விவரம் எதுவும் பத்திரிகை சென்சார் முறை காரணமாக வெளி உலகத்திற்கு தெரியவில்லை. மற்ற மாநிலங்களில் கைதுகள் தொடர்ந்த போதிலும், தமிழகத்தில் மட்டும் கழக அரசு யாரையும் கைது செய்யவில்லை. ஆனால் தமிழகத்திலிருந்து அச்சாகி புதுவை மாநிலத்திற்குச் சென்ற முரசொலி, கழகக் குரல் போன்ற ஏடுகள் காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டன. தமிழகத்தில் கழக அரசு இருந்த காரணத்தால் மக்களுக்கு இங்கே நெருக்கடி நிலையின் வேகம் தெரியாத அளவிற்கு பாதுகாப்பாக இருந்தது. அதுகுறித்து அப்போது காந்தியடிகள், ராஜாஜி ஆகியோரின் பேரனாகிய ராஜ்மோகன் காந்தி, சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடும்போது ‘‘தேசத் தலைவர்கள்’’ கைதானது குறித்தும், இதற்கு முன்பு இல்லாத வகையில் பத்திரிகைகள் மீது ‘சென்சார் முறை’ அமலாக்கப்பட்டது குறித்தும் தி.மு.கழகம் தீட்டியிருந்த பெருமைமிகு தீர்மானத்தை வாழ்த்துவதற்குத்தான் சென்னையில் கடந்த இரண்டு நாட்களாக மழை பொழிகிறது என்று எண்ண வேண்டியிருக்கிறது. நம்மை

விட்டுப் பிரிந்து சென்ற தலைவர்களான காந்திஜி, இராஜாஜி, அண்ணா ஆகியோரின் வருந்தும் இதயங்களை டாக்டர் கருணாநிதி நிச்சயம் மகிழ்வுற வைத்திருக்கிறார். இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவலனாகவும், குரலாகவும் தமிழ்நாடு ஆகியிருக்கும் இந்த நேரம் போல் பாதித் தமிழனாக இருக்கும் என்னுடைய பெருமை இதற்கு முன் வேறெப்போதும் என்றுமே உயர்ந்திருக்கவில்லை என்று கருத்து தெரிவித்திருந்தார்.

நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டவுடன், அதனை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் கடுமையான கண்டனம் தெரிவித்து திருத்தணி பொதுக்கூட்டத்தில் பேசியது அப்போது பழைய காங்கிரஸ் தினசரியான ''நவசக்தி'' பத்திரிகையில் முதல் பக்கத்தில் வெளியாகி யிருந்தது.

சுதந்திர இந்தியாவில் ஜனநாயகம் வீழ்ச்சியடைகிறது என்பதையும், தனது தேசிய சகாக்கள் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள் என்பதையும் தாங்கிக் கொள்ள முடியாத அவர் உடல் நலிவுற்றுப் படுத்த படுக்கையானார்.

ஜூலை 4ஆம் நாள் காலை நானும், கல்வி அமைச்சர் நாவலரும் காமராஜர் அவர்களைக் காண அவரது இல்லம் சென்றோம். அவர் அருகே சென்று அமர்ந்த என்னைக் கண்டதும் அவரது கண்கள் கலங்கின. மெதுவாகத் தொட்டேன். தழுவிக் கொண்டார். அவரது கண்கள் நீர்வீழ்ச்சிகளாயின. ''தேசம் போச்சு! தேசம் போச்சு!'' என்று உரக்கக் கூவினார். நான் வாய்விட்டுக் கதறி அழுது விட்டேன். ''அய்யா! நீங்கள் சொல்லுங்கள்! இப்போதே நாங்கள் அனைவரும் ராஜினாமா செய்து விடுகிறோம்!'' இந்தியாவில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த - சர்வாதிகாரத்தை அழிக்க - நீங்கள் தலைமையேற்று அணி நடத்துங்கள்! உங்கள் பின்னால் நாங்கள் வரத் தயார்! என்றேன்.

''பொறுமையாக இருங்கள்! அவசரப்படாதீர்கள்! இப்போது இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் ஜனநாயகம் இருக்கிறது. நீங்கள் ராஜினாமா செய்தால் அதுவும் போய்விடும் என்று அவர் அறிவுரை கூறினார்''.

நெருக்கடி நிலைப் பிரகடனத் தொடர்பாக பிரதமர் வானொலியின் மூலமாக இருபது அம்சத் திட்டத்தை அறிவித்தார்.

அந்த அறிவிப்பைக் கேட்டு மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள் தெரியுமா?

மராட்டிய முதல்வர் எஸ்.பி.சவான் ''பிரதமரது இருபது அம்சத் திட்டம்'' உண்மை உணர்வுடன் அமல்படுத்தப்படும் என்றும் - கேரள முதல்வர் அச்சுதமேனன் ''இருபது அம்சத்தை உடனடியாக நிறைவேற்ற நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறோம்'' என்றும் - அவ்வாறே பெரும்பாலான மாநில முதல்வர்களும் அறிவித்த போது, தமிழக கழக அரசின் சார்பில் கருத்து என்ன என்று செய்தியாளர்கள் என்னைக் கேட்டனர். ''பிரதமர் அறிவித்த திட்டங்களை எல்லாம் நாங்கள் முன்பே நிறைவேற்றி விட்டோம். அதற்கான புள்ளி விவரங்கள் இதோ!'' அதற்குமேலும் அவர்கள் சொல்லாத திட்டங்கள் - அரிசனங்களுக்கும், மீனவர்களுக்கும் இலவச வீடு வழங்கும் திட்டம், குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், கழக அரசு செயல்படுத்துகின்றது என்று பதில் கூறியது தமிழகத்தின் சார்பில் நான் ஒருவன் மட்டும்தான்.

தமிழகத்தில் உள்ள நிலைமை பற்றி கலந்தாலோசிக்க ஜூலை 5ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், போலீஸ் அதிகாரிகள் மாநாட்டினைக் கூட்டி மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளில் எந்தவித தொய்வும் இன்றி ஆற்றுவதற்கான யோசனைகளை வழங்கினேன். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீது பாதுகாப்புச் சட்டம் பாயும் என்று அறிவித்தேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை கடற்கரை சீரணி அரங்கில் மாபெரும் பொதுக் கூட்டம் ஜூலை 6ஆம் தேதி நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கழகத்தின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மூவரும் பேசுவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் உணர்ச்சிப் பெருக்கெடுத்த நிலையில் வந்து கலந்துகொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் நான் உரையாற்றும்போது கூறியதாவது:-

''இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளைக் கண்டு இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட பெரிய தலைவர்கள்'' - தங்களுடைய வயதான காலத்தில் - 'தங்களுடைய பேரப் பிள்ளைகள் சுதந்திர இந்தியாவில்

எல்லாவிதமான உரிமைகளோடும் உலவுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த பழைய காலத்துத் தேசியவாதிகள் - கண் கலங்கும் காட்சியைக் காண்கிறோம்! இந்தக் காட்சி இருக்கலாமா?' தேசியப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் - பல ஆண்டுக்காலம் தங்களை சிறை வாழ்விற்கு ஒப்படைத்துச் சுதந்திரம் பெறுவதற்காகப் பாடுபட்டவர்கள் - சிறைச் சாலைகளில் கஞ்சிக் கலயங்களை ஏந்தியவர்கள் - சித்திரவதைக்கு ஆளானவர்கள் எல்லாம், 'கிடைத்த சுதந்திரம் என்னவாகுமோ என்கின்ற அச்சத்தால் - ஐயத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! தூக்க மில்லாமல் வாடுகிறார்கள்! கண்ணீர் மல்குகிறார்கள் - கதறுகிறார்கள்!'

அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள், முன்வர வேண்டாமா என்று கேட்கத்தான், நாட்டு மக்களுடைய உணர்வை அவருக்கு எடுத்துச் சொல்லத்தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

செய்திகள் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன! அமெரிக்காவில் ஒரு 'ஜனாதிபதி' காலையில் எழுந்ததும், 'நியூயார்க் டைம்ஸ்' போன்ற பத்திரிகைகளைப் பார்த்தால்தான், நாட்டில் - உலகில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது என்று சொன்னாராம்!

பத்திரிகையைப் பார்த்துத்தான் உலகத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது! பத்திரிகை, காலத்தின் கண்ணாடி - நாட்டின் பிரதிபலிப்பு!

தலைமை அமைச்சர், ''நான் பத்திரிகை உரிமைகளை உடனடியாகத் தர இயலாது என்று கூறியிருக்கிறார். 'எதற்காகப் பத்திரிகைகளுக்கு உரிமை அளிப்பது - என்னை எதிர்க்கவா என்று கேட்டிருக்கிறார்!''

பத்திரிகைகளுடைய 'சென்சாரைப் பற்றி வந்திருக்கின்ற தாக்கீதுகள், எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் தாக்கீதுகளில், மாநில அரசுகள், ஒன்றிரண்டைச் சேர்த்தும் நடைமுறைப்படுத்தலாம்'.

ஆந்திர மாநிலத்தில் எதைச் சேர்த்திருக்கிறார்கள் தெரியுமா? 'பத்திரிகைகளில் தலைமை அமைச்சரைப் பற்றியோ - தலைமை

அமைச்சரின் பேச்சுக்களைப் பற்றியோ தவறான விமர்சனம் எதுவும் வரக்கூடாது என்று இருக்கிறது!'

ஆனால் ஆந்திர மாநிலத்தில், 'தலைமை யமைச்சரைப் பற்றி மாத்திரமல்ல, முதலமைச்சரைப் பற்றி வந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சேர்த்திருக்கிறார்கள்!'

நாம் அவர்களுடைய தாக்கீதுகளை நடைமுறைப் படுத்துகின்ற நேரத்தில், நினைத்தால் சேர்த்திருக்கலாம். ஆனால், நாம் ஜனநாயகவாதிகள்!

கருத்தைக் கருத்தால் சந்திப்போம்-

எழுத்தை எழுத்தால் சந்திப்போம் -

சொல்லைச் சொல்லால் சந்திப்போம் -

என்கின்ற தெம்பு இருக்கின்ற காரணத்தால், 'முதலமைச்சரைப் பற்றி எழுதாதே- அவரைப் பற்றி எதுவும் சொல்லாதே என்று சொல்லுகின்ற அளவுக்கு எழுதுகோல்களை முறிக்கின்ற சட்டத்தை - நாக்குகளை அறுக்கின்ற சட்டத்தை - கழகம் விரும்பவில்லை!'

ஆகவே, எங்களுடைய மனச்சாட்சி இடம் தருகின்ற வரையில், அந்தத் தாக்கீதுகளை நாங்கள் நிறைவேற்றுவோம்!

மனச்சாட்சியையும் கடக்கின்ற நிலைமைகள் வருமேயானால், 'யோசிப்போம்' என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தர் ஒரு வாலிபனைச் சந்தித்தார். அந்த வாலிபனிடத்தில் புத்தர் - ''ஏ, வாலிபனே! வீணையினுடைய நரம்பை மேலும் அதிகமாக முடுக்கினாலும் அல்லது மேலும் அதிகமாகத் தளர்த்தி விட்டாலும் நல்ல இசையைக் கேட்க முடியாது என்று சொன்னார்!''

வீணையில் நரம்பை அதிகமாக முடுக்கினாலும் நல்ல இசையைக் கேட்க முடியாது. அதிகமாகத் தளர்த்தி விட்டாலும் நல்ல இசை கிளம்பாது. அது எந்த அளவு முடுக்கப்பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருந்தால்தான் நல்ல இசை கிளம்பும்!

அதிகமாக முடுக்கப்பட்டு விட்டால் - சர்வாதிகாரம்!

அதிகமாகத் தளர்த்தப்பட்டு விட்டால் - பழைய காலத்து மன்னர்களுடைய ஆட்சி!

வீணை நரம்பில் இனிய நாதம் - இன்ப நாதம் - எழிலிசை கிளம்ப வேண்டுமேயானால், நரம்பு எந்த அளவுக்கு முடுக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு முடுக்கப்பட வேண்டும்!

'நான் இப்படித்தான் முடுக்குவேன் என்று முடுக்கினால், நாதம் எழுவதற்குப் பதிலாக நரம்பே அறுந்து விடும்!'

இன்னும் எத்தனை நாளைக்கு இந்த நிலைமை இருக்கப் போகிறது?

ஒரு வாரமா - ஒரு மாதமா - ஓராண்டுக் காலமா - அல்லது நீண்ட காலமா - புரியவில்லை!

எங்கள் நிலை என்னவோ - புரியவில்லை!

அதற்காக நாங்கள் திகைக்கவில்லை - வருத்தப்படவில்லை!

இன்றைக்கே ஒத்திகை பார்ப்பதைப் போலத்தான், நம்முடைய அமைச்சர்களெல்லாம், சாலையிலேயே காரை நிறுத்திவிட்டு நடந்து வந்தார்கள். நான்தான் சொன்னேன் - 'எல்லாக் கார்களும் அங்கேயே நிறுத்தப்பட்டு, அமைச்சர்களெல்லாம் நடந்தே வரட்டும் - ஒத்திகை பார்க்கட்டும் என்று!' ஆகவே, இது எங்களுக்குப் பழக்கமான காரியம்!

என்ன நடக்கப்போகிறது இந்தியாவில்? நாங்கள் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறோம் - 'இந்திரா காந்தி அம்மையார், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவார்கள் - சர்வாதிகாரத்தின் எல்லைக்குச் செல்ல மாட்டார்கள் என்று!'

அந்த நம்பிக்கையோடு சொல்லுகிறேன் - இராஜாஜி இருந்தால் - 'ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளச் சொல்லுவார்!'

பெரியார் இருந்தால் - 'இதை வைத்துப் புரட்சி நடத்துங்கள் என்று சொல்லுவார்'.

காயிதே மில்லத் இருந்தால் - 'நெருக்கடி நிலை தேவையில்லை என்று சொல்லியிருப்பார்!'

அண்ணா இருந்தால் என்ன சொல்லுவாரோ - அதைச் சொல்லுகிறேன் - இப்போது!

''எழுந்து நில்லுங்கள்''. - (கடற்கரை வெண்மணற் பரப்பில் வெள்ளம்போல் திரண்டிருந்த மக்கள் எழுந்து நிற்கிறார்கள் - மேடையிலுள்ள தலைவர்களும் எழுந்து நிற்கின்றனர்!)

''நான் சொல்லுவதை அப்படியே சொல்லுங்கள்''. - (நான் சொன்ன சூளுரையை மக்கள் திரும்பச் சொல்லிச் சூளுரை ஏற்றனர்)

''எந்த நிலையிலும் - எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் -

இந்தியாவின் மக்களாட்சி முறைக்குக் கேடு ஏற்படாமல் -

பாதுகாப்பதற்குத் தயங்க மாட்டோம் என்று உறுதி எடுத்துக் கொள்கிறோம்!''

தேசத் தலைவர்கள் விடுதலை -

பத்திரிகைகளின் நியாயமான உரிமைகள் -

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று -

இந்தியப் பிரதமர் அவர்களை -

தமிழ்நாட்டு மக்களின் இந்த மாபெரும் கூட்டம் கேட்டுக்கொள்கிறது. வாழ்க ஜனநாயகம்!

இந்தச் சூளுரை முழக்கத்துடன் அந்த மக்கட் பெருங்கடல் கடற்கரையை விட்டு நகர்ந்து சென்றது.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

17-7-2002

2788. காராகிருகம் திறக்கவில்லை; கர்மவீரர் கண்மூடினார்!

நெருக்கடியெனும் நெருப்பாறு! (4)

(நேற்றைய தொடர்ச்சி)

நெருக்கடி நிலையை எதிர்த்து நான் கடற்கரையில் பேசியதை அடுத்து, தமிழகத்தில் உள்ள ஒரு சில அரசியல்வாதிகள் கழக அரசைக் கலைக்க வேண்டுமென்று குரலெழுப்பினார்கள். அதற்கு நான் திருச்சி மாவட்டத்தில் கரூரில் நண்பர் பராங்குசம் அவர்களுக்கு நடைபெற்ற மணி விழாவிலே கலந்து கொண்டபோது பதிலளித்தேன். அது வருமாறு:-

‘‘இன்று நாடு இருக்கும் நிலைமையில் சர்வாதிகாரம் என்று சொன்னாலே சிலருக்குக் கோபம் வருகிறது. நாம் யாரையும் சர்வாதிகாரி என்று சொல்லவில்லை. சர்வாதிகாரியாக ஆகிவிடக் கூடாது என்றுதான் வேண்டுகிறோம். போகிற போக்கைப் பார்த்தால் சர்வாதிகாரம் எங்கே வந்துவிடுமோ என்கிற அச்சம் ஏற்படுகிறது. கூட்டம் நடக்கிற நேரத்தில் வானம் கருக்கத் தொடங்கினால், கூட்டம் ஏற்பாடு செய்த தோழர்கள் எங்கே மழை வந்துவிடுமோ என்று அஞ்சுவதைப் போல அஞ்சுகிறோம். மாடு, தும்பை அறுத்துக்கொண்டு வெளிக் கிளம்பிவிட்டால் எங்கே முட்டி விடுமோ என்று சந்தேகப்படுவதைப் போல, இன்று இந்தியாவிலே இருக்கிற நிலைமைகளைப் பார்க்கும்போது சர்வாதிகாரம் வந்துவிடுமோ என்று அஞ்சுகிறோம். வராது என்று எங்களுக்குச் சொல்லுங்கள். நம்பிக்கை அளியுங்கள். வராது என்பதற்கான ஆதாரங்களைக் காட்டுங்கள் என்று கேட்கிறோம். ஜனநாயகம் வாழ வேண்டும் என்பது குற்றமா? நாங்கள் வேண்டாம் என்று வெறுப்பது இந்திரா காந்தியை அல்ல, சர்வாதிகாரத்தை! வேண்டும் என்று விரும்புவது ஜனநாயகத்தை! ஆனால் இங்கே இருக்கிற சில கட்சிக்காரர்கள் இதை வைத்துக் கொண்டு கருணாநிதி மத்திய அரசோடு - இந்திரா காந்தியோடு மோதுகிறார். எனவே இந்த அரசைக் கலைத்துவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன், கழக அரசை ஏன் கலைக்க வேண்டும்?

ஒருவேளை தமிழகத்திலே உள்ள சில எதிர்க்கட்சிக்காரர்களின் வேண்டு கோளை ஏற்றுக் கொண்டு தமிழகத்தில் கழக அரசை இந்திராகாந்தி கலைத்து விடுவார்களானால், சிம்மாசனத்தில் உட்கார்ந்துள்ள நாங்கள் சிறையில் உட்கார நேரிடும். நண்பர்களே, இந்தச் சிம்மாசனத்திலுள்ள மகிழ்ச்சியை விட ஆயிரம் மடங்கு அதிகமான மகிழ்ச்சியைத் தரக்கூடியது சிறைக்கூடம். ஆனால் அடக்குமுறைகளும், சிறைச்சாலைகளும் நல்ல இலட்சியங்களை அழித்து விட முடியாது.

இவ்வாறு கரூர் விழாவில் நான் பேசினேன்.

இத்தகைய நிலையில் இந்தியாவின் பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் சிறையில் இருந்தபோது, டெல்லியில் ஜூலை 21ஆம் தேதி நாடாளுமன்றம் கூடியது. மக்களவையில் அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்களும், மாநிலங்களவையில் அமைச்சர் கே.பிரம்மானந்த ரெட்டி அவர்களும் நெருக்கடி நிலை பிரகடனம் செய்தது சரிதான் என்று தெரிவித்து தீர்மானம் ஒன்றைக்கொண்டு வந்தார்கள். தி.மு.கழகத்தின் சார்பில் இரா. செழியன் அவர்களும், எஸ்.எஸ்.மாரிசாமி அவர்களும் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து உரையாற்றினர். முடிவில் அந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள மாட்டோம் என்று அறிவித்துவிட்டு தி.மு.கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனசங்கம், பழைய காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஜூலை 22ஆம் தேதி வெளிநடப்புச் செய்தன.

அக்டோபர் மாதம் 2ஆம் தேதியன்று காந்தி பிறந்த நாளையொட்டி, காலையில் நானும், கவர்னர் கே.கே.ஷா அவர்களும், அமைச்சர் பெருமக்களும் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திவிட்டு, கட்சி அலுவலகத்திற்குச் சென்று விட்டு, இரண்டு மணி அளவில்தான் வீடு திரும்பி சாப்பிட்டு விட்டு படுத்தேன். சுமார் 3 மணியளவில் இன்று சென்னை நகர காவல் துறை கமிஷனராக இருக்கும் ஸ்ரீபால் அவர்கள் எனக்கு போன் செய்து காமராஜர் அவர்களுடைய உடல்நிலை சரியில்லை என்றும், கவலைக்கிடமாக இருக்கிறதென்றும், மருத்துவர்கள் விரைந்து கொண்டிருப்பதாகவும் கூறினார். நான் அவரிடம் உடனே அவருடைய இல்லத்திற்கு செல்வதாகக் குறிப்பிட்டேன்.

உடனே போன் செய்து அமைச்சர் ராஜாராமை வரச் சொன்னேன். அவர் சில நிமிடங்களில் விரைந்து வந்தார். நான் சட்டையை மாட்டிக்கொண்டு கீழே இறங்க முற்படுவதற்கும், காமராஜர் மறைந்து விட்டார் என்கிற தகவல் காவல்துறையினர் மூலமாக எனக்கு வருவதற்கும் சரியாக இருந்தது. கீழே இருந்த ராஜாராமை பார்த்ததும், அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு 'ஓவென' கதறி விட்டேன். பின்னர் ஒரு சில நிமிடங்களில் நான், ராசாராம், மாதவன், முரசொலி மாறன் ஆகியோர் காமராஜர் இல்லத்திற்குச் சென்றோம். அப்போது செய்தி வெளியே பரவாததால் காமராஜர் இல்லத்தில் பி.ராமச்சந்திரன் அவர்களும், ராஜாராம் நாயுடு அவர்களும்தான் இருந்தனர். சற்று நேரத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வந்து சேர்ந்தார்.

அக்டோபர் 2ஆம் நாள் காந்தி பிறந்த நாளையொட்டி தேசத் தலைவர்களையெல்லாம் விடுதலை செய்யப் போகிறார்கள் என்று செய்தி வந்ததாகவும் - பிறகு அப்படி எதுவும் இல்லை என்று கேள்விப்பட்ட அதிர்ச்சியில் காமராஜர் அவர்கள், மாரடைப்புக்குப் பலியானார் என்றும் என்னிடம் கூறப்பட்டது. ஆம்! ஜனநாயகத்தை இனிக் காத்திட இயலுமா என்ற கவலையிலேயே காந்தி பிறந்த நாளில், அந்த காந்தியடிகளின் வழி நின்று பணியாற்றிய கர்மவீரர் மறைந்துவிட்டார். காமராஜர் அவர்களின் மறைவுக்கு முன்பு அவரது இறுதிக்காலத்தில் நான் அவருடன் எந்த அளவுக்குத் தொடர்பு கொண்டிருந்தேன் என்பதை நான் எடுத்துச் சொல்வதைக் காட்டிலும், முன்னாள் குடியரசுத் தலைவரும், காமராஜரின் மிக நெருங்கிய நண்பருமான நீலம் சஞ்சீவி ரெட்டி அவர்கள் அண்மையில் இரண்டு தினங்களுக்கு முன்பு எனது மணிவிழாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக்காட்டுவது நல்ல சாட்சியத்துடன் கூடிய ஒன்றாகும்.

''இருண்ட நெருக்கடி நிலைக் காலத்தில் நானும் கருணாநிதியும் இணைந்து பாடுபட்டதை நினைவு கூர்கிறேன். நெருக்கடி நிலையை எதிர்ப்பதால் தனது முதலமைச்சர் பதவிக்கு ஆபத்து என்ற போதிலும், கருணாநிதி அவர்கள் சர்வாதிகாரத் திட்டங்களை எதிர்ப்பதில் உறுதியாக இருந்தார். நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட முதல் மூன்று மாத காலம் நானும், கருணாநிதியும் காமராசரின் வழிகாட்டுதலையும், ஆசியையும் பெற்றோம்.

இதனை நான் சஞ்சீவி ரெட்டியார் அனுப்பிய மணி விழா வாழ்த்தாக மட்டும் கருதவில்லை. இந்திய நாட்டு வரலாற்றின் சோதனை மிகுந்த கட்டத்தில் பெரும்பாலான தேசத்தலைவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருந்த போது-நாடு எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதற்குக் கூடச் சுதந்திரத்தை இழந்திருந்த நேரத்தில்-உளம் நொந்து உடல் நலிந்து படுக்கையில் இருந்த காமராஜருடனும், தேச விடுதலைப் போரில் முக்கிய பொறுப்பு வகித்த தளகர்த்தர்களில் ஒருவரான நீலம் சஞ்சீவி ரெட்டியாருடனும் நான் கொண்டிருந்த துணிவு மிக்க கொள்கை உறுதி வாய்ந்த உறவுக்கு, கிடைத்த பரிசாகவே அந்த வாழ்த்தினை நான் மகிழ்வுடன் வரவேற்றுப் பூரித்தேன்.

நெருக்கடி நிலைப் பிரகடனமான பிறகு, ஜூலை-ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் சஞ்சீவி ரெட்டி அவர்கள் சென்னைக்கு அடிக்கடி வந்தார். நான் ஜூலை முதல் வாரத்தில் காமராஜரை சந்தித்து விட்டு வந்த பிறகும், கடற்கரையில் நெருக்கடி நிலையை எதிர்த்துத் தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் நான் பேசிய பிறகும் சஞ்சீவி ரெட்டி அவர்கள் என்னை வந்து சந்தித்தார். கழக அமைச்சரவை ராஜினாமா செய்து விட்டு, காமராஜர் தொடங்கும் ஜனநாயகம் காத்திடும் இயக்கத்தில் கழகம் துணை நின்று நெருக்கடி நிலையை எதிர்த்துப் போராடுவதற்கு தயாராக இருப்பதாக கழகத்தின் நிலையை திரு. ரெட்டி அவர்களிடம் நான் தெரிவித்தேன்.

அவரும் எனது கருத்தைக் காமராஜர் அவர்களிடம் தெரிவித்து இருவரும் கலந்து பேசி இறுதியாகக் கழக அமைச்சரவை ராஜினாமா செய்யக்கூடாது என்பதில் காமராஜர் கண்டிப்பாக இருப்பதாகக் கூறிவிட்டார். தலைவர்களை விடுவிக்கவும், நெருக்கடியை எதிர்த்துப் போராடவும் காமராஜர் அவர்கள் ஆயத்தம் செய்துகொண்டு வருவதை திரு.ரெட்டியார் அவர்கள் வாயிலாக நானறிந்து அதற்கான ஆதரவை அவ்வப்பொழுது காமராஜரது அறிவுரைப்படி, நானும் இயன்ற அளவு வழங்கி வந்தேன். ஆனால் மிகவும் குன்றிவிட்ட அவரது உடல் நிலை உடனடியாக ஒரு போராட்டத்தை தொடங்குவதற்கு இயலாமல் அவரைத் தடுத்து நின்றது. அந்தக் கால கட்டத்துச் செய்திகளைத்தான் திரு. ரெட்டியார் எனக்கனுப்பிய மணிவிழா வாழ்த்தில் சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

காமராஜர், உடல் நலிவுற்றுப் படுக்கையில் படுப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு, அவரும், நானும் சென்னையில் ஒரு பொது இடத்தில் சந்தித்து மூன்று மணி நேரம் பேசினோம். பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள டாக்டர் அண்ணாமலை வீட்டு மாடியில்தான் அந்தச் சந்திப்பு மாலை ஆறரை மணி முதல் இரவு ஒன்பதரை மணி வரையில் நடந்தது. காமராஜர் அவர்களுக்கும் ,எனக்கும் சிகிச்சை அளித்த டாக்டர் அவர். அவர் வீட்டில்தான் அதிமுக்கியத்துவம் வாய்ந்த அந்த அரசியல் சந்திப்பு நிகழ்ந்தது. காமராஜருடன் நெருங்கியிருந்த நண்பர்களில் ஒருவரான நண்பர் கலிவரதன் அவர்கள்கூட அந்தச் சந்திப்பு குறித்து ஒருமுறை காமராஜர் பிறந்த நாள்விழாவின் போது மயிலைப் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மூன்று மணி நேரம் நானும், கர்மவீரர் காமராஜர் அவர்களும் நிகழ்த்திய அந்த உரையாடலில் எங்கள் இருவரது உள்ளுணர்வும் ஒன்று கலந்தன. ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டால் அந்த இடத்தில் இந்தி வந்து குந்திக்கொள்ளும் என்று அவர் எச்சரித்துச் சொன்னது என்றைக்கும் மறக்க முடியாததாகும். கழகம் மாநில சுயாட்சி என்று குரல் கொடுக்கும்போது, அதனை வேண்டுமென்றே பிரிவினை வாதமெனக் கூறி திசைதிருப்ப டெல்லியில் உள்ளவர்கள் முயலுகிறார்கள். எனவே விரைவில் நானே(காமராஜரே) அந்தக் கொள்கையை முன்வைத்து நாடு தழுவிய அளவுக்குக் கோஷம் கொடுக்கப் போகிறேன். அதற்கான ஆரம்ப வேலைகளை ஆந்திராவில் தொடங்குமாறு சஞ்சீவி ரெட்டியிடமும் கூறியிருக்கிறேன் என அவர் கூறிய சொற்கள் என் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவர் அந்தக் காரியத்தை முன்னோடியாக நின்று முடுக்கிவிட முடியாமல் வாழ்வை முடித்துக் கொண்டார். ஆம்! விடுதலைபெற்ற நாட்டில் சுதந்திரமில்லாமல் வாழ்வதை எண்ணி -அந்த விடுதலை பெற்றுத் தந்த வித்தகர் காந்தியடிகள் பிறந்த நாளிலேயே கர்மவீரர் காமராஜர் கண் மூடிவிட்டார்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

17-7-2002

2789. சர்வாதிகார இருளில் சஞ்சீவியார் சஞ்சலம்!

நெருக்கடியெனும் நெருப்பாறு! (5)

(நேற்றைய தொடர்ச்சி)

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த போது, 1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ந்தேதி குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி அவர்கள் சென்னை சட்டப்பேரவையில் காமராஜர் அவர்களின் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். அவர் பேசும்போது ''காமராஜர் மிகவும் எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். சாதாரண மனிதராகவே இருந்தார். அவருடைய கடைசிக் காலத்தில் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் மூன்று முறை நான் அவரை சென்னைக்கு வந்து சந்தித்தேன். அவர் இந்த நாட்டைப் பற்றி மிகவும் கவலை கொண்டிருந்தார். அப்போது நெருக்கடி நிலை இருந்ததால், அவர் சிந்தனை அனைத்தும் நாட்டைப் பற்றியதாகவே இருந்தது. இப்போது யாரும் எதுவும் சொல்லலாம். ஏனென்றால் பதில் சொல்ல காமராஜர் இல்லை. அவர் தனது கடைசிக் காலத்தில் மகிழ்ச்சி இல்லாமலே இருந்து இறந்தார். 1975இல் அவர் இறந்தபோது நெருக்கடி நிலை அமலில் இருந்ததால் அவர் மறைவுச் செய்தி கேட்டதும் உடனே என்னால் சென்னைக்கு வர முடியவில்லை. சாதாரண சஞ்சீவரெட்டிக்கு விமான டிக்கெட் எப்படி கிடைக்கும்? இருந்தாலும் கடைசி நேரத்தில் தாமதமாகச் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். கருணாநிதியும், அவர் அரசும் என்னை விமான நிலையத்திலிருந்து காமராஜர் இறுதி யாத்திரை நடை பெற்ற இடத்துக்கு அழைத்துச் செல்ல உதவினர். காமராஜர் தன் கடைசிக் காலத்தில் இந்த நாடு என்ன ஆகப் போகிறதோ தெரியவில்லை என்றே சொல்லிக் கொண்டிருந்தார். காமராஜர் இறந்தபிறகு, அனந்தப்பூரில் ஒரு இரங்கல் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து பேச முயன்றேன். கூட்டம் நடத்த அனுமதி தரப்படவில்லை. கைதானாலும் பரவாயில்லை என்று தடையை மீறி கூட்டத்தை நடத்தினேன். அந்த

நிகழ்ச்சியும், பேச்சும் பத்திரிகையில் வெளிவர வில்லை. ஆனால் அதே கூட்டத்தை சென்னையில் நடத்தியிருந்தால் அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி அனுமதி வழங்கியிருப்பார். அந்த நிகழ்ச்சியையும் பத்திரிகையில் இடம் பெறச் செய்திருப்பார் என்று குறிப்பிட்டார். குடியரசுத்தலைவர் சஞ்சீவ ரெட்டி அவர்கள் காமராஜரின் இறுதிக் கால நினைவுகளைப் பற்றி இப்படிக் கூறியபோதிலும், 1975 அக்டோபர் மாதம் 5-ந் தேதி டெல்லியில் நடைபெற்ற காமராஜர் இரங்கல் கூட்டத்தில் பேசிய இந்திராகாந்தி அம்மையார் ''காமராஜர் மறைவதற்கு முன்பாக கடைசி இரு மாதங்களில் புது காங்கிரஸ் கட்சியுடன் நெருங்கி வர மிகவும் விரும்பினார். இது சம்பந்தமாக நானும், அவரும் அந்தச் சமயத்தில் பலமுறை செய்திகளைப் பரிமாறிக்கொண்டோம். காமராஜரின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டியது நம்முடைய கடமை. நாட்டில் ஒழுக்கம், கடும் உழைப்பு ஆகியவற்றை மக்களிடம் ஏற்படுத்த அவசர நிலைமை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதை காமராஜரின் கட்சியினர் எதிர்த்தார்கள். ஆனால், அவசர நிலைமையின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராகக் காமராஜர் ஒரு வார்த்தைகூட கூறவில்லை. ஏனெனில் நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் அவருக்குத் தெரியும் என்று பேசினார்''.

பிரதமரின் அழைப்பை ஏற்று இந்திரா காங்கிரசுடன் இணைந்துவிட வேண்டுமென்று துடித்த பழைய காங்கிரஸ்காரர்களிலே ஒரு பகுதியினர் கர்மவீரர் காமராஜர் அவர்கள் பிரதமர் இந்திரா அறிவித்த நெருக்கடி நிலையையும், மிசா சட்டத்தையும், தேசத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதையும் மிகக் கடுமையாகக் கண்டித்துப் பேசிய கருத்துகள் காமராஜரின் வலக்கரம் போல் இருந்து செயல்பட்ட ''நவசக்தி'' நாளிதழிலேயே வெளிவந்ததை மறந்துவிட்டார்கள் என்றே கூறலாம். இல்லாவிட்டால் ''காமராஜர் நெருக்கடி நிலையை எதிர்த்து ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை என்று அக்டோபர் 5-ஆம் நாள் டெல்லியில் இந்திரா காந்தி அவர்கள் கூறியதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்களா?''

''எமர்ஜென்சியை எதிர்ப்பதில் காமராஜர் தீவிரமாக இருந்தார் என்பதை உணர்ந்திருந்த பழைய காங்கிரஸ்காரர்களில் ஒரு பகுதியினர், இந்திரா காங்கிரசுக்குச் சென்றால் பதவி, பவிசுகள்

கிடைக்கும் என்று தெரிந்திருந்தும்கூட, காமராஜரின் கொள்கைக்கு விரோதமாக நடப்பதற்குத் தங்கள் மனச்சாட்சி இடந்தரவில்லை என உறுதியாகக் கூறி விட்டனர்.

எனவே, பழைய காங்கிரசார் இரு கூறாகப் பிரிந்து நின்று ஒருவரோடொருவர் பல இடங்களில் மோதிக் கொண்டனர். சத்தியமூர்த்தி பவன், தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானம் போன்றவைகளை யார் எடுத்துக் கொள்வது என்பதில் பெரிய கருத்து வேறுபாடு தோன்றியது. பல இடங்களில் இந்த மோதுதல்கள் வலுப்பெற்று, மத்திய உள்துறை அமைச்சராக இருந்த பிரம்மானந்த ரெட்டி அவர்கள், எனக்கு அது குறித்து ஒரு கடிதம் எழுதினார். அதிலே தமிழகத்திலே உள்ள அவர் களுடைய கட்சி நிலைமை குறித்து தமிழக முதலமைச்சர் என்ற முறையிலே என்னுடைய சொந்தக் கவனத்தைச் செலுத்தி எல்லா அதிகாரிகளுக்கும் அது சம்பந்தமாக உரிய உத்தரவுகள் இடவேண்டு மென்று கேட்டுக்கொண்டதோடு, அந்தக் கடிதத்தை டெல்லியிலே செய்தியாளர்களிடமும் தெரிவித்தார். அந்தக் கடிதத்திற்கு நான் எழுதிய பதிலில்:-

"அன்பார்ந்த திரு. ரெட்டி அவர்களுக்கு,

தங்களுடைய 1975 நவம்பர் 29 நாளிட்ட கடிதம் கிடைத்தது. அண்மையில் ஸ்தாபன காங்கிரசில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை ஒட்டித் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கினைப் பராமரிப்பதில் தங்களுக்குள்ள கவலையினை நானும் தயக்கமின்றிப் பகிர்ந்து கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்த வரையில் அது, ஸ்தாபன காங்கிரசின் உள் விவகாரங்களில் கொஞ்சமும் அக்கறை கொள்வதில்லை என்றும், அது அவர்களே முடிவு செய்து கொள்ள வேண்டிய விவகாரம் என்றும் பலமுறை பத்திரிகைகளின் வாயிலாகத் தெளிவாக அறிவித்துள்ளேன். இங்குள்ள நிலைமையைப் பொறுத்தமட்டில், சட்டம்-ஒழுங்கினைப் பாதுகாத்திடும் பொறுப்பினை மேற்கொண்டுள்ள அதிகாரிகள் அனைவரும் நடு நிலைமையோடு அமைதி காத்திடுவர் என்பதனை, என்னுடைய இக்கடிதம் மேலும் தங்களுக்கு உறுதிப் படுத்தும் என நம்புகிறேன் என்று குறிப்பிட்டிருந்தேன்".

காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளுக்கு தி.மு.க. ஆட்சி சாதகமாயிருந்து, இந்திரா காங்கிரசுடன் ஸ்தாபன காங்கிரசார் இணைவதற்கு எதிராகச் செயல்படுவதாக டெல்லிக்குப் புகார் கூறப்பட்டதால்தான் மத்திய உள்துறை அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவ்வளவு அவசரமாக எனக்குக் கடிதம் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கழக அரசு கலைக்கப்படக்கூடாது என்பதிலும் - தாமாகவே முன்வந்து நாங்கள் பதவி விலகிவிடக் கூடாது என்பதிலும் கண்ணுங்கருத்துமாக இருந்து ஒரு பாதுகாப்புக் கேடயம் போல் விளங்கிய பெருந்தலைவர் காமராஜர் மறைந்தவுடன், மேலும் துணிவு பெற்ற டெல்லி ஆதிக்கம், தி.மு.க. அரசுடன் இறுதியாக ஒரு நிபந்தனை விதித்து, ஆசைகாட்டி ஒரு பேரத்தையும் நிகழ்த்தியது. அதாவது, கேரளத்தில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி முதலமைச்சர் அச்சுதமேனன் அவர்கள் எமர்ஜென்சியை ஆதரித்து அறிவித்து அதற்கேற்ப நடந்திட முன்வந்த காரணத்தால், அவரது ஆட்சியின் ஐந்தாண்டு காலம் முடிவுற்றபோதிலும், அவர் எமர்ஜென்சியை ஏற்றுக் கொண்டதற்குப் பரிசாக மேலும் ஓராண்டு காலம் ஆட்சி நீட்டித்துத் தரப்பட்டது.

அதேபோல தி.மு. கழகமும், எமர்ஜென்சி எதிர்ப்புத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு நெருக்கடி நிலையை ஆதரித்தால், தமிழ்நாட்டிலும் மேலும் ஓராண்டு ஆட்சி நீட்டித்து தரப்படும் என்று கூறப்பட்டது. அதுபற்றி என்னிடம் ஆளுநர் கே.கே. ஷா பேசினார். மத்திய அமைச்சர் ஓம் மேத்தா அவர்கள் என் இல்லத்துக்கே வந்தும் பேசினார்.

நான் அதைத் திட்டவட்டமாக மறுத்துவிட்டேன்.

அதற்குப் பிறகு, கழக ஆட்சியைக் கலைப்பதற்கான முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டன. 1975-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25, 26,27,28 ஆகிய நாட்களில் கோவை மாநகரில் நடைபெற்ற கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு வரலாற்றுச் சிறப்புக்குரிய மாநாடாகும்.

அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் கழகத் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டபிறகு, கோவை மாநில மாநாடு வரையில் கழகத்தின் சார்பில் மாவட்ட மாநாடுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்று வந்தன. இந்தியாவில்

‘‘எமெர்ஜென்சி பிரகடனத்திற்குப் பிறகு 1975-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9,10 ஆகிய தேதிகளில் நெல்லை மாவட்ட ஐந்தாவது மாநாடு திருநெல்வேலியிலும், ஆகஸ்ட் 16,17 ஆகிய நாட்களில் சேலம் மாவட்ட ஐந்தாவது மாநாடு சேலம் மாநகரிலும், அக்டோபர் மாதம் 11,12 ஆகிய நாட்களில் புதுக்கோட்டை மாவட்ட முதல் மாநாடு அறந்தாங்கியிலும், நவம்பர் 15,16 ஆகிய நாட்களில் தி.மு.கழக மகளிர் மாநாடு மதுரையிலும், அதே திங்கள் அடுத்தவாரம் குமரி மாவட்ட மூன்றாவது மாநாடு நாகர்கோவிலிலும் நடைபெற்று- நெருக்கடி நிலையைக் கண்டித்து ஒவ்வொரு மாநாட்டிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன’’.

இவற்றை அடுத்து கோவையில் கழகத்தின் ஐந்தாவது பொது மாநாடு நடைபெற்றது. கழகத்தின் தலைவர் என்ற முறையில் நான்தான் அந்த மாநாட்டிற்கு தலைமை வகித்தேன். எனது தலைமையுரையின் முன்னுரையிலே; ‘‘கழக அமைச்சரவை டிசம்பர் 28-ஆம் தேதியோடு காலியாகும் என்று சிலர் எழுதியிருப்பது பற்றி இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். 28-ஆம் தேதி என்ன? பேசி முடித்துவிட்டு பந்தலை விட்டு வெளியில் போகும் நேரத்தில் அந்தச் செய்தி வந்தாலும் அதைவிட பரவசம் அடைகிறவர்கள் எங்களைப் போல வேறு யாரும் இருக்க முடியாது. நான் கிரீடம் பற்றி கவலைப்படுகிறவன் அல்ல. அந்தக் கிரீடத்தைத் தாங்கும் தலையைப் பற்றித்தான் கவலைப்படுகிறவன். கிரீடம் போய் விடலாம். ஆனால் தலை இருக்க வேண்டும். கிரீடம்தான் அமைச்சரவை. தலைதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்று குறிப்பிட்டேன்’’.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

19-7-2002

2790. இந்தியாவிலே இரண்டுதீவுகள் - இந்திரா வர்ணனை!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு! (6)

(நேற்றைய தொடர்ச்சி)

கோவை பொது மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிலே நெருக்கடி நிலையை ஒட்டி நிறைவேற்றப்பட்ட முதல் இரண்டு தீர்மானங்கள் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவைகளாகும்.

தீர்மானம்1 - ஒழுங்கு கட்டுப்பாட்டில் காட்டப் படுகிற ஆர்வத்தை இந்த மாநாடு வரவேற்கிறது. எனினும் அவைகளை நடைமுறைப்படுத்தும்போது ஜனநாயக முறைகள் பாதிக்கப்படாமல் நிலைத்து நீடிக்கவும், மீண்டும் இயல்பான சூழ்நிலை அமையவும், பேசித் தீர்த்து நாம் எதிர்பார்த்த நல்விளைவுகளைக் காண அனைத்துக்கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு வட்ட மேஜை மாநாட்டை உடனடியாகப் பிரதமர் கூட்ட வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. (முன் மொழிந்தவர்: இரா. செழியன்; வழிமொழிந்தவர்: நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, டி.வி.நாராயண சாமி, என்.கணபதி, மாயவன் எம்.பி.)

தீர்மானம் 2- பொதுத் தேர்தல், முறைப்படி குறித்த காலத்தில் நடைபெறுவதும், அரசியல் கட்சிகளின் நடைமுறைப்பணிகள், திட்டங்கள், கொள்கைகள் ஆகியவைகள் பற்றி மதிப்பீடு செய்து, தீர்ப்பளிக்கும் வாய்ப்பை மக்கள் பெறுவதும் ஜனநாயக நெறியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இன்றுள்ள நிலையில் ஜனநாயக ரீதியாக பொதுத்தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டும் என்றும், அந்தத் தேர்தல் நேர்மையான முறையில் நடைபெறுவதற்கேற்ப சூழ்நிலைகளை உருவாக்கித் தர வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துவதோடு, போதிய முன்னறிவிப்பு தந்து, வரும் மார்ச் திங்களில் நாடாளுமன்ற, சட்டப்பேரவைத் தேர்தல்களை ஒருங்கிணைத்து நடத்த வேண்டும் என்றும்

கருத்தறிவிக்கிறது. (முன்மொழிந்தவர்: சாதிக், வழி மொழிந்தவர்: ஓ.பி. ராமன், ரெங்கனாதன் எம்.எல்.ஏ.)

மாநாட்டிலே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து நான் என்னுடைய முடிவுரையிலே நாடாளுமன்றத்திற்கும், சட்டப் பேரவைக்கும் சேர்த்து தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு பிரதமருக்கு கழகத் தோழர்கள் அனைவரும் தந்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். கழக மாநாடு கோவையில் நடைபெற்ற அதே தேதியில், இந்திரா காங்கிரஸ் கட்சியின் மாநாடு சண்டிகார் நகரிலே நடைபெற்று, அந்த மாநாட்டிலே நாடாளுமன்றத் தேர்தலை ஓராண்டு காலத்திற்கு ஒத்திப்போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ''எமர்ஜென்சியின் காரணமாக இந்திரா காங்கிரஸ், எதேச்சாதிகாரமாகப் பெற்றுக்கொண்ட பயன்களில் இதுவும் ஒன்று!''

''நாடாளுமன்றத் தேர்தலை ஓராண்டிற்கு ஒத்திப்போட வேண்டும் என்று சண்டிகாரில் நடைபெறும் இந்திரா காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் பற்றி கருத்து என்ன? என்று கோவை ரயில் நிலையத்தில் நான் புறப்படும் போது என்னைச் சந்தித்து நிருபர்கள் கேட்டார்கள்''.

''எனது கருத்துகளை நேற்றைய மாநில மாநாட்டில் விளக்கமாகக் கூறியுள்ளேன். ஆளும் காங்கிரஸ் கட்சியின் அந்தத் தீர்மானத்தை எந்த நிலையில்-பாரபட்சமற்ற முறையில் பாராளுமன்றம் அணுகுகிறது என்பதை ஜனநாயகத்தில் பற்றுள்ள அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். இது இந்தியாவைப் பொறுத்தவரையில் மட்டுமல்லாமல், அகில உலக அரசியல் அரங்கின் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. எனவே, நாடாளுமன்ற முடிவினைப் பொறுத்திருந்து பார்ப்போம் என்று, அதற்கு நான் கருத்து தெரிவித்தேன்''.

கோவை மாநில மாநாட்டை முடித்துவிட்டு சென்னை வந்ததும், அன்றைய காலை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு கோவை மாநாட்டைப் பற்றி, ''கோவையில் தி.மு.கழகம் நடத்திய ஐந்தாவது மாநில மாநாடு'' சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் நடைபெற்ற இரண்டாவது பெரிய அரசியல் மாநாடு என்றும், ''மாநாட்டின் இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமை அன்று மதிய உணவிற்கான

இடைவேளை விடப்படவில்லை. மாநாட்டுப் பந்தலுக்குள் மக்கள், காலை 10 மணி முதல் சுமார் பன்னிரண்டு மணிநேரம் அமர்ந்திருந்தனர்'' என்றும் எழுதியிருந்தது. இரண்டாவது பெரிய மாநாடு என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் குறிப்பிடக் காரணம், அகில இந்திய அளவில் ஆவடியில் 1955-ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டைச் சேர்த்து குறிப்பிட்டதாகும்.

1976-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதியன்று நாடாளுமன்ற கழக உறுப்பினர்களின் கூட்டம், நாடாளுமன்றத்தில் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காக சென்னையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் 1957 முதல் சட்டப் பேரவையிலும், சட்டமன்றத்திலும் (மேலவை), நாடாளு மன்றத்திலும் , மாநிலங்கள் அவையிலும் எதிர்க்கட்சியாகச் செயல்பட்டு 1967 முதல் தமிழ்நாட்டில் ஆளுங்கட்சியாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளதாகும். எதிர்க்கட்சியாக தி.மு.கழகம் செயல்பட்ட போது, டெல்லியிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, பாராளுமன்ற முறை ஜனநாயகத்திற்கு ஒரு சிறிதும் பழுது ஏற்படாத வகையில், ஆட்சியின் முற்போக்குத் திட்டங்களை வரவேற்றும், குறைகளை, குற்றங்களைக் கண்ணியத்துடன் சுட்டிக்காட்டியும் தன்னுடைய கடமையை ஆற்றி வந்திருக்கிறது.

அந்த அடிப்படையில் இன்றைய அரசியல் சூழ்நிலையில் கழக நாடாளுமன்ற, மாநிலங்களவை உறுப்பினர்களின் இந்தக் கூட்டம், தனது எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையவேண்டுமென்று விவாதித்தது. இன்றுள்ள அரசியல் நிலை குறித்து, கழகம் தனது கருத்தைத் தொடர்ந்து ஆட்சி மன்றங்களிலும், மக்கள் மன்றங்களிலும் வலியுறுத்தி வந்துள்ளது.

மேலும் நமது கழகத்தின் கருத்தை நமக்கே இயல்பான அரசியல் பண்பாட்டுடன், நாடாளுமன்ற மாநிலங்களவைக் கூட்டங்களில் எடுத்து வைப்பது என்றும்-பாராளுமன்றத்தில் எழுகின்ற பிரச்சினைகளின் அடிப்படையில் உடன்பாடுள்ள மற்ற கட்சிகளின் ஒத்துழைப்புடன் கருத்துகளைத் தெரிவிப்பது என்றும்-கழகத்தின் கொள்கைகளை, இலட்சியங்களைப் பொறுத்து நமது தனித்தன்மையை எப்போதும் போல் கட்டிக்காத்து வருவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கோவை மாநில மாநாட்டில் நான் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, தமிழ்நாட்டிலிருந்து லட்சக்கணக்கான தந்திகள் பிரதமருக்கு- தமிழகம் குடியரசுத் தலைவர் ஆட்சியை விரும்ப வில்லை. தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தலோடு சேர்த்து சட்டமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி அனுப்பப்பட்டன. அந்தத் தந்திகளின் குவியல்கள் பிரதமர் அலுவலகத்தை அசைத்தன.

நெருக்கடி நிலை காரணமாக மத்திய அரசினருக்கும், கழகத்திற்கும் இடையே உறவு குலைந்து, எந்த நேரத்திலும் ஆட்சி கலைக்கப்படலாம் என்ற நிலைமை. அப்போது கூட 6.1.1976 இல் நான் முரசொலியில் உடன்பிறப்பிற்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்.

"அமைப்பு ரீதியான கழகம்;
ஆடை அணிந்துள்ள உடலைப் போல!"

அதில் ஆவி நிகர்த்தது கொள்கை; பதவி என்பது அணிகலன்; அணிகலன் இன்றி வாழ முடியும்;

கொள்கை இல்லையேல் ஆவி இல்லை;
ஆடை இல்லையேல் மானம் போகும்!

காமராஜரின் மறைவிற்குப் பிறகு, காங்கிரஸ் கட்சி இரண்டு பிரிவாகப் பிரிந்த நிலையில், ஒரு பிரிவினர், இந்திரா காங்கிரசுடன் சேர்ந்து பயனடைய வேண்டு மென்று நினைத்தனர். இன்னொரு பிரிவினர், காமராஜரின் விருப்பப்படியே தாங்கள் தனித்தன்மை யுடன் ஒதுங்கியிருக்க வேண்டுமென்று எண்ணினர் என முன்பே குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அந்தப் பிரிவினரை இந்திரா காங்கிரசுடன் சேர்க்க வொட்டாமல் நான்தான் தடையாக இருக்கிறேன் என்ற எண்ணம் இந்திரா காங்கிரசில் உள்ளவர்களுக்கு! இதன் விளைவாக, நாடாளுமன்றத்தில் ஒரு நாள் 1976 ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரம் மத்திய அமைச்சர் ஓம்மேத்தா அவர்கள், தமிழகத்தில் கழக அரசு, மற்ற கட்சிகள் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி அளிப்பதில்லை என்றும், காங்கிரஸ் கட்சியின் இணைப்பைத் தடுப்பதாகவும் குறிப்பிட்டார். அது பற்றி மறுநாளே செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து எனது கருத்தை கேட்டனர். நான் அந்தக் கருத்தை மறுத்து பிரதமருக்கும்,

மத்திய உள்துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதியிருப்பதாகவும், தமிழ்நாட்டில் மத்திய அரசால் தடை செய்யப்பட்ட கட்சிகளைத் தவிர, மற்ற எல்லா கட்சிகளின் கூட்டமும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்றும் பதில் கூறினேன். 8.1.1976 அன்று தலைமைச் செயலகத்தில் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவினை பிப்ரவரி 15,16 ஆகிய இரண்டு நாட்களில் சிறப்பாக நடத்துவதென்று, தீர்மானிக்கப்பட்டு அந்தச் செய்தி பத்திரிகைகளுக்கும் தரப்பட்டது.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் நடைபெற்ற ஒரு விவாதத்திற்கு குறுக்கிட்டுப் பதிலளித்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இந்தியாவில் கட்டுப்பாடற்ற இரண்டு ''தீவுகள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். கழகம் ஆட்சிபுரிந்த தமிழ்நாட்டையும், ஸ்தாபன காங்கிரஸ் கட்சி ஆட்சிபுரிந்த குஜராத் மாநிலத்தினையும் மனதில் கொண்டுதான் அவர்கள் அவ்வாறு தெரிவித்தார்கள்''.

இந்தக் குற்றச்சாட்டைப் போலவே, பிரதமர் அவர்கள் நபர்வாரி திட்ட ஒதுக்கீடு தமிழ்நாட்டில் மிகக் குறைவு என்று நாடாளுமன்றத்தில் கூறினார். அதற்கும் நான் விவரமாக, திட்டங்களுக்கு மத்திய அரசு தந்த உதவி போதுமானதல்ல என்றும், சொந்த முயற்சியில்தான் தமிழக அரசு மேலோங்கி நிற்கிறது என்றும், 1965-66 ஆம் ஆண்டில் நபர்வாரி வருமானத்தில் ஏழாவது இடத்திலிருந்த தமிழகம் இப்போது நான்காவது இடத்தில் இருப்பதாகவும் புள்ளிவிபரத்துடன் குறிப்பிட்டு நீண்ட விளக்கமான பதிலை அளித்தேன். குஜராத்தின் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் பாபுபாய் படேல் அவர்களும், நானும் கலந்து கொண்ட காமராஜர் சிலை திறப்புவிழா வடசென்னையில் 20.1.1976 அன்று நடைபெற்றது. அந்த விழாவிலே பா. ராமச்சந்திரன், பி. ராமமூர்த்தி, குமரி அனந்தன், வி. தண்டாயுதபாணி, டாக்டர் சந்தோஷம், அரு. சங்கர், கே. ஆறுமுகசாமி ஆகியோர் கலந்து கொண்டார்கள். அந்த நிகழ்ச்சியும் மத்தியில் இருந்த இந்திரா காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு ஆத்திரத்தை அதிகமாக்கிற்று. ''மத்திய அரசுக்கு எதிரான, 'அனாமதேயத் துண்டுப் பிரசுரங்கள் தமிழ்நாட்டில் பிரசுரிக்கப் படுவதாக மத்திய அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி

கூறியிருக்கிறாரே? என்று ஒரு நிருபர்கள் கூட்டத்தில் கேட்டனர். அதற்கு நான், அவரே அதை 'அனாமதேயத் துண்டுப்பிரசுரம் என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்படிப்பட்ட அனாமதேயத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டவர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டம் என்று பதில் கூறினேன்''.

அரசியல்வாதிகளைக் கைது செய்யவேண்டும். கடத்தல்காரர்களையும், கள்ளச்சாராயப் பெரும் வியாபாரிகளையும் கைது செய்யக்கூடாது என்ற மத்திய இந்திரா அரசின் உத்தரவு சமூக விரோதிகளை அடக்கவே 'எமர்ஜென்சி' கொண்டு வரப்பட்டது என்ற இந்திராகாந்தியின் வாதத்தை வலுவிழக்கச் செய்தது என்பதையும் நிருபர்களிடம் விளக்கினேன்.

அவசர நிலைமைக்குப் பிறகு கைதாகி காவலில் வைக்கப்பட்டிருந்த தலைவர்கள் யாரும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்று பிரதமரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ''எதிர்க்கட்சித் தலைவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஒரு தேதி குறிப்பிட்டுச் சொல்வது கடினம். முதலில் அந்தத் தலைவர்கள் வன்முறைகளைக் கைவிடுவார்கள் என்பது உறுதியாக வேண்டும். அதன் பின்னரே அடுத்த நடவடிக்கைகளைச் சிந்திக்க இயலும் என்று கூறினார்''.

அப்போது இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பரூவா அவர்கள் பம்பாயில் சிவாஜி பூங்காவிலே பேசும்போது ''பிரதமர் இந்திராகாந்தி ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைத் தடை செய்து விட்டார். தி.மு.கழகமும் ஒழுங்காக நடக்காவிட்டால் அதற்கும் அதே கதி நேரலாம்'' என்று கூறினார். அதே பரூவா அவர்கள் டெல்லியிலே பேசும்போது ''மத்திய அரசுதான் தேசிய அரசு, இந்தியாவின் மெட்ரோபாலிடன் அரசு. மற்ற மாநில அரசுகள் எல்லாம் முனிசிபல் அரசுகளே என்று கூறினார்''.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

20-7-2002

2791. கலைத்தனர் ஆட்சியை; கலங்கவில்லை நெஞ்சம்!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு! (7)

(நேற்றைய தொடர்ச்சி)

1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 என்பது இந்திய நாட்டு வரலாற்றிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டு வரலாற்றிலும் மிக முக்கியமான இடத்தைப் பெற்ற நாளாகும். கழக வரலாற்றில் ஒரு மாபெரும் சோதனைக் கட்டத்தையும், அடக்குமுறைகளைத் தாங்கும் உச்சக் கட்ட நிலையையும், இழித்தும் பழித்தும் அழித்துவிடத் துணிந்த மத்திய அரசினரின் கொடுமைகளை உறுதியோடு சந்திக்கும் சந்தர்ப்பத்தையும் அந்த ஜனவரி 31-ஆம் நாள் மாலை நேரம்தான் தொடங்கி வைத்தது என்று கூறலாம்.

அந்த வேளை வருவதற்கு முன் அந்த மாதத்தில் உருண்டோடிய நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டை நினைவு கூர்தல் வேண்டாமா?

கன்யாகுமரி முனையில், விவேகானந்தர் பாறைக்கு எதிரேயுள்ள மற்றொரு பாறையில், 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை வைப்பது எனக் கழக அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு, ஜனவரி முதல்நாள் ஏடுகள் மூலம் அறிவிக்கப்பட்டது.

எனது உள்ளத்து உன்னதக் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்த சென்னை வள்ளுவர் கோட்டத்தின் வேலைகள் அனைத்தும் முற்றுப் பெற்று, அதன் திறப்பு விழாவுக்கான தேதியினைக் குறிக்கவும், விழா எத்தகைய சிறப்புடன் தமிழ்த் திருவிழாவாக நடைபெற வேண்டுமென்ற திட்டங்களைத் தீட்டவும் ஜனவரி 8-ஆம் நாளன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும், அமைச்சர்களும் மற்றும் ஏ.வி.மெய்யப்ப செட்டியார், ஏ.எல்.சீனுவாசன், எம்.எம்.ஏ.சின்னப்பா தேவர், நகர ஷெரீப் ராம கிருஷ்ணன், துணை ஷெரீப் ஏ.வி.எம்.

சரவணன், கே.வி.சீனுவாசன், திரையரங்க உரிமையாளர் சார்பில் ராஜகோபால் செட்டியார் ஆகியோர் கலந்துகொண்டு வள்ளுவர் கோட்டத்திறப்பு விழாவுக்கான திட்டங்கள் வகுத்தோம். பிப்ரவரி திங்கள் 22, 23 ஆகிய நாட்களில், அந்தத் திறப்பு விழாவைக் கழக அரசு முன்னின்று திக்கெட்டும் தமிழ் முழக்கம் எதிரொலித்திட, சென்னையில் மீண்டும் ஓர் உலகத் தமிழ் மாநாடுபோல நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

ஆனால் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவினை நிறைவேற்றுவதற்கு முன்பு, ஜனவரி 31 மாலையிலேயே கழக அரசு கலைக்கப்பட்டு விட்டது. அரசியல் சூழ்நிலையின் காரணமாக, எஞ்சியிருந்த அதனுடைய அமைப்புப் பணிகளும், அதன் திறப்பு விழா நிகழ்ச்சியும் அறவே நின்றுவிடுமோ என்று தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் கவலைப்பட்டன. ஆனால் 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு பக்ருதீன் அலி அகமது வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைக்கிறார் என்ற செய்தி வந்தது.

கோட்டம் திறக்கப்படுகிறது. குறளோவியம் தீட்டப்படுகிறது என்ற தலைப்பில் முரசொலியில் இரண்டரை பக்கத்திற்கு வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவான 15-4-76 அன்று நான் கடிதம் எழுதியிருந்தேன்.

அந்த விழாவிற்கு முன்னாள் முதலமைச்சர் என்ற முறையிலோ, அந்த வள்ளுவர் கோட்டம் எழும்பிடக் காரணமாக இருந்தவன் என்ற முறையிலோகூட நான் அழைக்கப்படவில்லை. அழைக்கப்படாதது மாத்திரமல்ல! வள்ளுவர் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டியபோது அமைக்கப்பட்ட அந்தக் கல்கூட அங்கே இருந்திடக்கூடாது என்று அப்புறப்படுத்தப்பட்டு விட்டதாகப் பின்னர் அறிந்தேன்.

நான் அப்போது முரசொலியில் எழுதிய நீண்ட கடிதத்தை முடிக்கும்போது, உயிர்வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேறுக்கால வேதனையையும் இனிய வேதனையாகக் கொண்டு, பாலூட்டிச் சீராட்டிப் பழமுத்தம் சுளை சுளையாய்த் தந்து, பள்ளிக்கு அனுப்பி, பின்னழகும் முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத் துணையொன்றைத் தேர்ந்தெடுத்து, அந்த ஆசைக்கிள்ளைக்கு இனிய திருமண விழா நடைபெறும் போது, தாலிகட்டும் காட்சியினைக் காண முடியாமல்

மணப்பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மணவிழா குறித்த மகிழ்ச்சி பொங்கிடத் தானே செய்யும்! என் தங்க உடன்பிறப்பே! அந்தத் தாயின் மகிழ்ச்சியை நான் பெறுகிறேன் இன்று! என்று குறிப்பிட்டிருந்தேன்.

ஜனவரித் திங்கள் 29-ஆம் நாள் ஆசிரியர் சாவி அவர்களின் அறுபதாம் ஆண்டு பிறந்தநாள் விழா! அந்த விழா நிகழ்ச்சி முடிவுற்று வீட்டுக்குச் சென்றபோது இன்னும் இரண்டொரு நாட்களில் ஆட்சி கலைக்கப்பட்டு விடக்கூடும் என்று சில நண்பர்கள் வந்து என்னிடம் சொன்னார்கள். அவர்களுடைய முகத்தில் அவர்களாலேயே மறைத்துக்கொள்ள முடியாத ஒரு அச்சம் பரவியிருந்ததை என்னால் உணர முடிந்தது! அன்று வெளிவந்த முரசொலி நாளிதழில், வீரர்கள் பின் தொடரட்டும்! என்ற தலைப்பிட்டு, ஒரு கடிதம் எழுதினேன். ஏற்றுக்கொண்ட கொள்கையைக் காத்திடவும், நிறைவேற்றிடவும் எந்த விலை கொடுக்கவும் தயாராக இருக்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டில் ஒரு சலனமும் எனக்கு ஏற்படவில்லை. மாறாக, சுதந்திரத்திற்காக எந்த விலையும் கொடுக்கலாம். அதற்காகப் பதவியைக்கூட இழக்கலாம். சிறைக்கும் செல்லலாம். ஒரு பணக்கார அடிமையாக இருப்பதை விட, சுதந்திரமுள்ள ஏழையாக இருப்பதே சிறப்பு. சுயமரியாதையை விட்டுவிட்டு வளத்துடன் வாழ்வதைக் காட்டிலும், கொள்கைப் பிடிப்புக்காக வறுமையில் உழன்று சாவதே பெருமையெனக் கருதுவேன்.

என்ற மார்ட்டின் லூதர் கிங்கின் பொன்மொழியும், பெரியாரும், அண்ணாவும் என் இதயத்தில் ஒளி விளக்காக ஏற்றி வைத்திருந்த அதே உணர்வும் தான் அப்போது என் ஒவ்வொரு பேச்சிலும், எழுத்திலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது என்பதை இப்போதும் எண்ணி ஒரு உள்ளார்ந்த இன்பத்தில் மூழ்குகிறேன்.

சுதந்திரத்திற்காக எந்தத் தியாகத்திற்கும் தயார் எனத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட காந்தியடிகளின் நினைவுநாள் ஜனவரி 30-ஆம் தேதி!

அன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துகிற நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன்.

அங்கிருந்து புறப்பட்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டப் பணிகளைப் பார்வையிடச் சென்றேன். நான்

விரும்பியவாறு திருவாரூர்த் தேர் போன்ற முழுத் தோற்றமும் வள்ளுவர் கோட்டத்தில் வள்ளுவர் சிலை அமையும் இடத்தில் ஏற்படுவதற்கு அந்தத் தேர் வடிவத்தில் தொம்பைகள் தொங்கவிடுமாறு யோசனை கூறினேன். பிற்பகல் இரண்டு மணி வரையில் அங்கேயே இருந்து கோட்டப்பணிகள் பற்றி சிற்பிகளுடன் விவாதித்து விட்டு வீட்டுக்கு வந்தேன்.

அன்று மாலை கவர்னர் கே.கே.ஷா அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட காந்தியடிகள் நினைவுநாள்-கிண்டி காந்தி மண்டபத்தில் நடைபெற்றது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினேன். விழாவுக்கு ஆளுநர் ஷா அவர்கள் தலைமை ஏற்றிருந்தார். திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் காந்தியடிகளைப் பற்றிய பாடல்களை இசைத்தார். விழாவில் ஆர்.வெங்கட்ராமன் அவர்களும், ம.பொ.சி. அவர்களும் கலந்து கொண்டனர். காந்தியடிகளும், அவர் அணியில் நின்ற தியாகத் தலைவர்களும் பெற்றுத் தந்த சுதந்திரத்தையும், அவர்கள் போற்றிய ஜனநாயகத்தையும் எல்லா விதமான ஆபத்துக்களிலுமிருந்தும் நாம் காத்திட வேண்டும்.

என்று எனது உரையில் குறிப்பிட்டேன். காந்தியடிகளின் நினைவுநாள் விழாவில் ஜனவரி 30-ந் தேதி மாலையும், 31-ந் தேதி காலையும் உரையாற்றிய கவர்னர் கே.கே.ஷா அவர்கள், இந்தியாவில் காந்தியடிகளின் அடியொற்றி நடைபெற்று வருகிற ஆட்சியாகத் தி.மு.க. ஆட்சி விளங்குகிறது எனக் கூறினார்.

30-ந் தேதி காந்தி நினைவுநாள் நிகழ்ச்சி முடிவுற்றதும்-அதே வளாகத்தில் கட்டப்பட்டு வந்த காமராஜர் நினைவு மண்டபத்தைப் பார்வையிடச் சென்றேன். அந்த மண்டப முகப்பில் மிகப்பெரிய இராட்டை ஒன்று இடம்பெற வேண்டுமென்று கூறியிருந்தேன். அதை, எங்கே, எப்படி அமைக்க வேண்டுமென்பதையெல்லாம் குறித்து அங்கிருந்த அலுவலர்களிடம் கலந்து பேசிவிட்டுப் புறப்பட்டேன்.

மறுநாள் காலையிலும் கிண்டியில் கவர்னரும், கழக அமைச்சர்களும் கலந்துகொண்ட காந்தியடிகள் நினைவுநாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

அன்று மாலை சென்னை டான்பாஸ்கோ பள்ளியின் ஆண்டுவிழாவில் கலந்து கொள்வதற்காக 5 மணி அளவில் சென்றேன். அந்த விழாவில் எம்.ஏ.சிதம்பரம் செட்டியாரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். விழாவுக்கு என்னுடன்

தம்பி துரைமுருகனும் வந்திருந்தார். டான்பாஸ்கோவில் ஒரு கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவைச் செய்துவிட்டு, மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினேன்.

அநேகமாக முதலமைச்சர் என்ற நிலையில் நான் கலந்துகொள்ளும் கடைசி நிகழ்ச்சியாக இது இருக்கும்!

என்று எனது உரையினிடையே நான் சொன்னதும், விழாவுக்கு வந்திருந்தோர் அப்படிச் சொல்லாதீர்கள்! என்று உணர்ச்சி பொங்க ஒலியெழுப்பினர்.

மாலை ஆறரை மணி அளவில் விழா முடிவுற்றது. நானும் துரைமுருகனும் காரில் ஏறி வீட்டுக்குப் புறப்பட்டோம். வீட்டு வாசலில் இறங்கி உள்ளே செல்வதற்குப் படியேறுவதற்கு முன்பே எனது மருமகன்கள் அமிர்தம், செல்வம் இருவரும் கையில் ஒரு துண்டுத்தாளை வைத்துக்கொண்டு சிரித்தவாறு ஆட்சியைக் கலைத்துவிட்டார்கள் என்றனர்! செய்தி நிறுவன இயந்திரத்தில் அடிக்கப்பட்ட செய்திதான் அது! அப்பாடா! சஸ்பென்ஸ் முடிந்தது! என்று கூறிக்கொண்டே, தெருப்பக்கம் திரும்பிப் பார்த்து, நான் பயன்படுத்திக் கொண்டிருந்த அரசாங்கக் காரை உடனே தலைமைச் செயலகத்திற்கு எடுத்துச் சென்றுவிடுமாறு சொல்லிவிட்டு மாடிக்குச் சென்றேன். என்னிடம் பணியாற்றிய தனி அலுவலர்கள் கண்ணீர் வடித்துக் கதறியழுதனர்.

சே! இது என்ன பைத்தியக்காரத்தனம்! தைரியமாக இருங்கள்! எனக்கூறிவிட்டு அந்த நல்ல செய்தியை நண்பர்களுக்குச் சொல்ல டெலிபோனை எடுத்தேன்! என்ன ஆச்சரியம்! அதற்குள் என் டெலிபோன் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

சில நிமிடங்களில் எப்படித்தான் செய்தி சென்னை முழுவதும் பரவியதோ தெரியாது-வீட்டு வாயிற் புறத்தில் ஆயிரக்கணக்கானோர் அழுது புலம்பியவாறு கூடிவிட்டனர். அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்புவது அன்றிரவு முழுவதும் பெரும் வேலையாகி விட்டது.

இரவு எட்டு மணியிருக்கும்-அதற்குள்ளாக முதலமைச்சர் பந்தோபஸ்துக்கு வந்திருந்த போலீசார் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டனர். என்னுடைய துணைவியர்கள் தயாளுவானாலும், ராஜியானாலும் எவ்விதக் கலக்கமுமின்றி மிகச் சாதாரண நிகழ்ச்சியாக அதனை எடுத்துக் கொண்டனர். அவர்கள் மட்டுமல்ல, குடும்பத்தில் என் சகோதரிகள்,

பிள்ளைகள், பெண்கள், மருமகன்கள், எல்லோருமே அதனை ஒரு திடுக்கிடத்தக்க நிகழ்ச்சியாகக் கருதவில்லை. அதனால் அவர்கள் உள்ளத்தைக் கடுகளவு வேதனையும் தீண்டவில்லை.

எல்லோரும் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் ஒரு விழா நிகழ்ச்சி போல எண்ணிக் கொண்டிருந்தோம். போலீஸ் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். உங்களைப் பார்க்க வேண்டுமாம்!

என்று வீட்டில் நீண்டகாலமாகப் பணியாற்றும் செயல்மணி ஓடிவந்து சொன்னான். கைதுசெய்ய வந்திருப்பது போல தெரிகிறது என்றும் கூறினான்.

வரச்சொல் என்றேன்! வந்தார்கள் போலீஸ் அதிகாரிகள்! என்ன விசேஷம்? நான் கைதாக வேண்டுமா? எனக் கேட்டேன்.

இல்லை! உங்களை இல்லை என ஒரு அதிகாரி அழுதுகொண்டே சொன்னார்.

யாரைக் கைது செய்ய வேண்டும்? என்று கேட்டேன்.

உங்கள் மகன் ஸ்டாலினை! என்று கூறினார்கள். தழுதழுத்த குரலில் கண்ணீர் சிந்தியவாறு!

அவன் ஊரில் இல்லையே-நாளை மாலையில் தானே வருவான் என்றேன்.

வீட்டில் இருக்கிறாரா? என்று ‘‘சர்ச் செய்து பார்க்கும்படி உத்தரவு!’’ என்றார்கள்.

தாராளமாகச் சர்ச் செய்யுங்கள் என்றேன்.

அவர்கள் தங்கள் கடமையைச் செய்தார்கள். வீட்டில் ஸ்டாலின் இல்லை! அவர்களை வெறுங்கையுடன் அனுப்புவது எனக்கு என்னவோ போலிருந்தது-அதனால் அவர்களைப் பார்த்து, வேண்டுமானால் நாளைக்கு என்னைக் கைது செய்வதை, இப்போதே செய்துகொண்டு போங்களேன்! என்றேன்.

மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுப் போலீசார் புறப்பட்டனர். ஆட்சிப் பொறுப்பு பறிபோன ஓரிரு மணிநேர இடைவெளியில் இத்தனை நிகழ்ச்சிகள்!

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

21-7-2002

2792. காமராஜர் நினைவகம் - கைராட்டை அகற்றிய நிகழ்ச்சி!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு - 9

(நேற்றைய தொடர்ச்சி)

அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவுப்படி, ஒரு மாநில அரசு தொடர்ந்து நடைபெற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக மத்திய அரசு கருதினால், அந்த அமைச்சரவையை நீக்கி, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவர மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அப்போது தமிழக அரசை தொடர்ந்து நடத்தமுடியாத நிலை இருந்ததா? அப்போது தமிழகச் சட்டப்பேரவையில் தி.மு. கழகத்திற்குப் பெரும்பான்மை இல்லாமல் இழுபறி நிலையிலே இருந்ததா என்றால் - அப்போது கழகத்திற்குச் சட்டமன்றத்திலே இருந்த இடம் மொத்தம் 234 போ்களில் தி.மு.கழகம் 167, அ.தி.மு.க. 17, ஸ்தாபன காங்கிரஸ் 13, இந்திரா காங்கிரஸ் 7, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 5, தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி 2, முஸ்லிம் லீக் 6, பார்வார்டு பிளாக் 7, சுதந்திரா 4, தமிழரசுக் கழகம் 1, சுயேச்சை 1, அவைத் தலைவர் 1, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம் 2, காலியான இடம் 1. இந்த அளவிற்கு தி.மு.கழகம் பெரும்பான்மையாக இருந்த போதிலும் கழக அமைச்சரவை கலைக்கப்பட்டது.

அமைச்சரவையைக் கலைத்ததோடு, தமிழ்நாடு சட்டசபையையும் கலைத்துவிட்டதாக குடியரசுத் தலைவர் தனது உத்தரவில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனவரி 31ஆம் தேதி காலையில் காந்தி விழாவில் உரையாற்றிய கவர்னர் அதுவரையில் தனது சிபாரிசை செய்யவில்லை. அவ்வாறு சிபாரிசு செய்திருந்தால் அந்த விழாவில் அவர் தமிழக அரசைப் பாராட்டிப் பேசியிருக்க மாட்டார். மத்திய அரசின் விருப்பத்திற்கொப்ப, அங்கே தயாரிக்கப்பட்ட அறிக்கை இங்கே அனுப்பப்பட்டு கவர்னரிடம் அதற்குப் பிறகு கையெழுத்து பெறப்பட்டது.

அந்த அளவிற்கு ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டு, தமிழக ஆட்சி நிர்வாகத்தை நடத்துவதற்காக அன்றைக்கே அவசரம் அவசரமாக மத்திய அரசில் பெட்ரோலியம் இலாகா செயலாளராக இருந்த பி.கே.தவே அவர்களையும், மின்சார இலாகா செயலாளராக இருந்த ஆர்.வி.சுப்பிரமணியன் அவர்களையும் கவர்னரின் ஆலோசகர்களாக மத்திய அரசு அறிவித்தது.

அமைச்சரவை கலைப்பு பற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது நான் விடுத்த அறிக்கை வருமாறு:

"தமிழ்நாட்டு மக்கள் காந்திய வழியிலும், அண்ணா வழியிலும் நிரம்ப நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே அமைதி காப்பதிலும் வன்முறைகள் ஒருசிறிதும் தலை காட்டாமல் பார்த்துக் கொள்வதிலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உணர்வுடன் தொடர்ந்து நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஒன்பதாண்டு காலம் கழக ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழக மக்களுக்கும், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

குடியரசுத் தலைவர் உத்தரவைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்த பதினான்கு நாட்களுக்கு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கவர்னரின் ஆலோசனையின் பேரில் தடை உத்தரவு பிறப்பித்தார். 234 பேர் கொண்ட அவையில் 167 பேர்களை தன்னகத்தே கொண்டிருந்த கழக அமைச்சரவையைக் கலைத்தது ஜனநாயக நடவடிக்கை என்று அப்போது அ.தி.மு.க. அறிவித்தது.

கழக ஆட்சியை ஏன் கலைக்க சிபாரிசு செய்தேன் என்று கவர்னர் கொடுத்த அறிக்கையினை நாடாளுமன்றத்தில் பிப்ரவரி 2ஆம் தேதியன்று வைத்தார்கள். ஆட்சியைக் கலைத்ததற்கு நாடாளுமன்றத்தில் தி.மு.கழகத்தோடு சேர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ், சோஷலிஸ்ட், இந்திய மக்கள் கட்சி ஆகிய கட்சிகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தன. ஜனவரி 31ஆம் தேதியன்று நாடாளுமன்றத்தில் பாராளுமன்றத்தின் ஆயுளை ஓராண்டு காலத்திற்கு நீடித்துக் கொள்வதற்கு வழிவகை செய்யும் சட்டத் திருத்தத்தை ஆளுங்கட்சி தாக்கல் செய்தது. பிப்ரவரி 3ஆம் தேதி அன்று கழக

அமைச்சரவை மீது விசாரணை நடத்துவதற்காக உச்ச நீதிமன்ற நீதிபதி சர்க்காரியா அவர்களைக் கொண்டு விசாரணைக் கமிஷன் ஒன்றை மத்திய அரசு நியமித்தது. அதுபற்றி நாடாளுமன்றத்தில் மத்திய உள்துறை இணை அமைச்சர் ஓம் மேத்தா கூறும்போது, 1972ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அ.தி.மு.க. தலைவரும் இந்தியக் கம்யூனிஸ்டு தலைவரும் சேர்ந்து தி.மு.க. அமைச்சரவை மீதான புகார்கள் அடங்கிய பட்டியலை மத்திய அரசிடம் கொடுத்தார்கள். அந்தப் புகார்கள் மீது நீதிபதி சர்க்காரியா விசாரணை நடத்துவார் என்று அறிவித்தார். அதாவது அதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, 1972-ல் மத்திய அரசிடம் தரப்பட்ட அதே ஆதாரமற்ற புகார்களைத் தேடியெடுத்து, அதன்மீது ஒரு விசாரணைக் கமிஷனை அரசியல் நோக்கத்துடன் மத்திய அரசு நியமித்தது என்பதுதான் உண்மை.

விசாரணைக் கமிஷன் குறித்து என்னை அபிப்பிராயம் கேட்டபோது, கடந்த நான்காண்டுகளுக்கு முன்பு எங்கள் மீது கூறப்பட்ட புகார்களே இப்போதும் கூறப்பட்டுள்ளன. அவற்றுக்கு அப்போதே பதிலளித்து, அச்சிட்ட நூலாக சட்ட சபையிலும் வைத்திருக்கிறோம். மேலும் விளக்கமான பதில்கள் சட்டசபையில் கூறப்பட்டுள்ளன. இப்போது விசாரணைக் கமிஷன் முன்பு விளக்கம் அளிப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பதை வரவேற்கிறேன் என்று கூறினேன்.

கழகம் ஆட்சியில் இருந்தவரை அதன் சுகங்களை அனுபவித்துவிட்டு, ஆட்சி கலைக்கப்பட்டவுடன் இனி இங்கிருந்தால் பயனில்லை, துன்பம்தான் என எண்ணி ஒரு சிலர் கட்சியை விட்டுச் சென்றார்கள். அவர்களைப் பற்றி அப்போது முரசொலி ஏட்டில் பணியாற்றித் தன் இளம் வயதிலேயே மாண்டுவிட்ட உள்ளிக்கோட்டை தம்பி இளந்துறவி எழுதிய கவிதை இது:

நேற்று ஒரு தலைவனின்

நேர்த்தியினைக் கூறியவன்

நிற்கின்ற இடம் இன்று வேறு - அவன் நிலைகெட்ட நிலையினைப் பாரு - திசை

காற்றடிக்கும் நேரத்திலே

தூற்றிக் கொள்ளும் நோக்கமுள்ள

கயமையை விண்டு இங்கு கூறு - அந்த
கயவரை சாடிமனம் ஆறு!
எச்சில் இலை போல இங்கு
பிச்சையிடும் பதவிக்கு
ஏங்கியவர் ஆசைமனம் தூண்ட - ஒரு
இரவுக்குள் வேலியினைத் தாண்ட - மான
அச்சமிலா மனிதரும்
அரசியல் அரங்கத்தில்
ஆடுகிற விந்தை என்ன விந்தை - அதை
ஆதரிப்பார் சிந்தை என்ன சிந்தை?
ஈரத்துணி உலருமுன்
இடம் விட்டு இடம் தாவும்
இலட்சியவாதிகளும் உண்டு - பணம்
எண்ணுவதே இவர் செய்யும் தொண்டு - அந்த
ஈரமிலா நெஞ்சுடையார்
மாறுகின்ற காலம் வரை
இங்கு இல்லை நல்லாட்சி என்று - திசை
எட்டினிற்கும் கூறு வலம் சென்று!

நெருக்கடி நிலைமையின்போது மாநில சட்டசபைத் தேர்தலை மத்திய அரசு நினைத்தால் தள்ளிவைக்க அரசியல் சட்டத்தில் 152-வது பிரிவு மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. தி.மு.கழக அமைச்சரவை நீடிப்பதற்கு காலம் இருந்தபோதிலும், ஆட்சியைக் கலைத்த மத்திய அரசு, 1970ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்தல் நடைபெற்ற கேரள சட்டசபை தேர்தல் 1975ஆம் ஆண்டு அக்டோபர் 21ஆம் தேதிக்குள் மீண்டும் நடத்தியிருக்க வேண்டும். மாறாக கேரள சட்டசபையின் ஆயுட்காலத்தை நீடித்து, பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். பிரதமர் இந்திராகாந்தி, குடும்பத்தினருடன் பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதியன்று சென்னைக்கு வந்தார். கிண்டியில் கழக அரசு கட்டி முடித்த காமராஜர் நினைவு மண்டபத்தைத் திறந்து வைக்கவும், பிப்ரவரி 15-ஆம் தேதியன்று சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இரண்டு காங்கிரஸ் கட்சிகளின் இணைப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவும் வந்தார். 14-ஆம் தேதி

மாலையில் நடைபெற்ற காமராஜர் மண்டபம் திறப்பு விழாவில் கலந்து கொண்டார். திறப்பு விழாவுக்கு முன்னர் காமராஜர் நினைவுமண்டப முகப்பில் இருந்த இராட்டை அகற்றப்பட்டு விட்டது. அது காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ் தேர்தல் சின்னம் என்பதால் அப்படியொரு முடிவெடுத்து அதனை அகற்றினார்கள்.

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்ததையொட்டி, இரண்டு வார காலத்திற்கு ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை பிப்ரவரி 15-ஆம் தேதி அன்று மேலும் இரண்டு வார காலத்திற்கு நீடிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 1976 பிப்ரவரி மாதம் 15-ஆம் நாள் தான் சென்னையில் இரண்டு காங்கிரஸ் கட்சிகளின் இணைப்பு மாநாடு பிரதமர் இந்திரா முன்னிலையில் நடைபெற்றது.

இணைந்த காங்கிரஸ் கட்சிக்கு மூப்பனார் அவர்களைத் தலைவராகவும், மகாதேவன் பிள்ளை, கே.எஸ்.ராமசாமி ஆகியோரை துணைத் தலைவர்களாகவும் அன்று அறிவித்தார்கள்.

கடற்கரையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் பேசும்போது இந்திராகாந்தி,

தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைத் தமிழர் விவகாரம் பற்றி தவறான பிரச்சாரம் செய்கிறார்கள். இதுபோன்ற பிரச்சாரங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. இதனால் இந்திய அரசு - இலங்கை அரசுக்கிடையே நட்புறவு கெடுவதற்கு கருணாநிதி காரணமாக இருக்கிறார்.

- என்று குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. கொண்டிருந்த உறுதியும்கூட இந்திராகாந்தி அவர்களை அப்போதே உறுத்தியிருக்கிறது என்பதற்கு அவரது இந்தப் பேச்சு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது.

தொடர்ந்து மிசா சட்டத்தின்படி கழகத்தினர் வேட்டையாடப் பட்டனர். என்னுடன் யாரும் இருக்கக் கூடாதென்றும், என்னைத் தனிமைப்படுத்த வேண்டுமென்றும் திட்டமிட்டு கவர்னர் ஆட்சியில் காரியங்கள் நடத்தப்பட்டன. எனது காரில் எனக்குப் பேச்சுத் துணைக்காக யாராவது சில நாட்கள் தொடர்ந்து

வந்தால்கூட அவர்கள் மிசா கைதிகளாக ஆக்கப்பட்டார்கள். போடி சுருளிவேல், கழக வழக்கறிஞர், சட்டமன்ற உறுப்பினராக இருந்தவரும்கூட! அவர் சில நாட்கள் என் காரில் வந்தார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார். சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி டி.ஆர்.பாலு ஒருவார காலம் என்னுடன் காரில் வந்துகொண்டிருந்தார். அவரையும் மிசா கொத்திக் கொண்டு போய்விட்டது. ஆயிரம் விளக்கு உசேன் கழக உழைப்பாளி, அவர் சில நாட்கள் எனக்குத் துணையாகக் காரில் வந்தார். விடுமா, மிசா? அவரும் சிறையில் பூட்டப்பட்டார்! தம்பி எல்.கணேசன் நான் தடுத்தும் கேளாமல் என்னுடன் காரில் வரத் தொடங்கினார். அவர் மட்டும் தப்புவாரா? ஒரு வாரத்திற்குள் மிசா அவரையும் வளைத்துப் போட்டுக்கொண்டது!

சென்னை வீதிகளில் தன்னந் தனியனாகத்தான் காரில் சென்று கொண்டிருந்தேன். எனக்கு இரண்டு காரோட்டிகள் உண்டு! அவர்களிடம் மிகுந்த பாசம் வைத்திருந்தேன். அவர்களில் ஒருவர் உடல் நலமில்லை எனக் கூறிவிட்டு, வேறு ஒரு தொழிலதிபரிடம் வேலைக்குப் போய்விட்டார்! இன்னொருவர், அடுத்து இரண்டு நாட்களுக்கெல்லாம் கார் சென்று கொண்டிருந்தபோதே வழியில் வேலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதாக அறிவித்து விட்டு இறங்கிச் சென்றுவிட்டார். காருக்கு டிரைவரும் இல்லாத நிலை ஏற்பட்டு விட்டது. அப்பொழுதுதான் முன்னாள் அமைச்சர் நண்பர் கண்ணப்பன் எனக்குக் காரோட்டும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அந்த மாபெரும் குற்றத்தைச் செய்தமைக்காக அவரையும் மிசா விழுங்கிச் சிறைக் கோட்டத்தில் போட்டுக் கொண்டது.

கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி, விடுதலை சம்பந்தம், நடிகவேள் எம்.ஆர்.இராதா மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், பழைய காங்கிரஸ் கட்சியினர் ஆகியோர் மிசாக் கைதிகளாயினர்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

22-7-2002

2793. "மிசா" சட்டம் மின்னல் வேகத்தில் தாக்கியது!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு ! (8)

(நேற்றைய தொடர்ச்சி)

ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது என்ற செய்தி கேட்டு எந்தவிதச் சலனமும், சங்கடமும் தலைகாட்டாமல் இருந்த வீட்டில் என் மகன் ஸ்டாலினைக் கைது செய்யத் தேடுகிறார்கள் எனக் கேள்வியுற்றதும், என்னைத் தவிர அனைவரும் அதிர்ச்சியுற்றனர். அந்த அதிர்ச்சியை எனக்கு முன்னால் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தனர். ஆனால் ஸ்டாலினின் துணைவியோ, ஐந்து மாதங்களுக்கு முன்புதான் திருமணமாகி வீட்டுக்கு வந்த புதிய மருமகள்! ஓரிரு மாத கர்ப்பவதி வேறு! இந்த நிலையில் கணவன், தன்னிடமிருந்து மிசாக் கொடுமையால் பிரிக்கப்படுவதை அந்தப் பெண்ணால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் காலில் விழுந்து கோவெனக் கதறியழுதது. இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு ஆறுதல் கூறி-எல்லாவித தியாகத்திற்கும் எல்லோரும் தயாராக இருக்க வேண்டுமென்று உரக்கச் சப்தமிட்டேன். அதற்குள் தலைமைக் கழகத்தின் செயலாளர்களான ஆர்க்காடு வீராசாமி, நீலநாராயணன், மேயர் சிட்டிபாபு, செ.கந்தப்பன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர் என்ற செய்திவந்தது.

மறுநாள் ஸ்டாலின் வீடுவந்து சேர்ந்ததும், போலீசார் கைது செய்யத் தேடுகிற விஷயத்தைச் சொல்லிச் சிறைக் கோட்டப் பயணத்திற்குத் தயாராக இருக்குமாறு கூறினேன். அவரும் குளித்து முழுகித் தன் இளம் மனைவியைத் தேற்றி விட்டு, என் காலில் விழுந்து வாழ்த்துப் பெற்றுத் துணிமணிகளுடன் பயணத்திற்குத் தயாரானார். நானே போலீஸ் ஐ.ஜி.க்கு போன் செய்து ஸ்டாலின் வந்துவிட்ட விஷயத்தைக் கூறினேன். சில நிமிடங்களுக்கெல்லாம் போலீஸ் வேன் வந்து வீட்டு வாசலில் நின்றது. வீட்டாரும், அந்த வீதியில் வசித்தோரும், கழகச் செயல்வீரர்களும் சூழ்ந்து நின்று

ஸ்டாலினைப் போலீஸ் வேனில் ஏற்றி வழியனுப்பி வைத்தோம். அவர் கையை அசைத்து விடைபெற்றுக்கொண்டபோது எல்லோருடைய இதயமும் குலுங்கி, விழிகள் குளமாகத்தான் காட்சியளித்தன! என் மகன் மட்டுமா? எத்தனை எத்தனை வீட்டு வீரப்புதல்வர்கள் அன்றைய தினம் மிசாக் கைதிகளாகச் சிறைச்சாலைகள் பலவற்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்ற செய்தி என் நெஞ்சத்தை மேலும் வலுப்படுத்தி, என்னை வளையாமல் நிமிர்ந்து நிற்கச் செய்தது.

அன்றிரவு மீண்டும் போலீசார் பல லாரிகளில் வந்து வீட்டை முற்றுகையிட்டனர். என்னைத்தான் தேடி வந்திருக்கிறார்கள் என்று நான் பயணத்திற்குத் தயாரானேன். உங்களையல்ல! உங்கள் மருமகன் மாறனைத் தேடி வந்திருக்கிறோம் என்றார்கள். விடுவார்களா மாறனை? 1975-ல் நெருக்கடி நிலைப் பிரகடனப்படுத்தியதையொட்டி தி.மு.க. தனது எதிர்ப்பைத் தீர்மானத்தின்மூலம் வெளிப்படுத்திய போது- முரசொலி இதழில் இட்லராகிறார் இந்திரா என்ற கார்ட்டூனை வெளியிட்டவராயிற்றே மாறன்! அந்தக் கார்ட்டூன் அமெரிக்கா முதலிய வெளிநாட்டு வார ஏடுகளில்கூட பிரசுரிக்கப்பட்டு இந்திராவின் சர்வாதிகாரத்தைத் தமிழகம் வன்மையாகக் கண்டிக்கிறது என்பதற்குச் சான்றுகாட்டி எழுதப்பட்டதே! அதனால் மாறனை மிசாச் சட்டம் விட்டுவிடுமா?

டெல்லியில் இருந்து வந்து கொண்டிருப்பதாகவும், வந்தவுடன் போலீசுக்குத் தகவல் அனுப்புவதாகவும் கூறினேன். போலீசார் விமான நிலையம் சென்று காத்திருந்தனர். ஆனால் மாறன், கமலநாதன், மாரிசாமி ஆகியோர் ஐதராபாத் வந்து இறங்கி வெவ்வேறு வழிகளில் ஊர் வந்து சேர்ந்தனர். மாறன் சென்னை வந்ததும், ஐ.ஜி.க்குப் போன் செய்தேன். நீங்கள் தேடுகிறவர் தயார்! என்று! உடனே போலீஸ் வேன் வந்தது! கழகத் தொண்டர்கள் ஏராளமானோர் வீட்டு வாசலில் குழுமிவிட்டனர். மாறனின் துணைவியும், பிள்ளைகளும், தாயாரும் என்னதான் தைரியமாக இருப்பது போலக் காட்டிக் கொண்டாலும், அவர்களின் கலங்கிய கண்கள் அவர்களது வெந்து நொந்த உள்ளங்களை வெளிப்படுத்திக்கொண்டு தானிருந்தன. மாறனைக் கட்டித் தழுவி உச்சி மோந்து, சென்று வா எனச் சொல்லி போலீஸ் வண்டியில் ஏற்றி அனுப்பினேன். கூடியிருந்தோர் வாழ்த்தொலி முழங்கினர் மாறன் விடைபெற்றபோதும்! ஸ்டாலின் விடைபெற்ற போதும்! அவை வாழ்த்தொலியாக இல்லை! எதேச்சாதிகார வெறியர்களை

வீழ்த்துவதற்கு எழுந்த சூளுரை போலத்தான் என் செவிகளில் ரீங்காரமிட்டது.

தொடர்ந்து கழகக் கண்மணிகள் மிசாக் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்ட செய்திகள் கிடைத்த வண்ணமிருந்தன. ஆனால், அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதைக்கூட ஏடுகளில் வெளியிட முடியாத அளவுக்குத் தடை போட்டிருந்தது எமர்ஜென்சி ஆட்சி! கவர்னரின் ஆட்சி! என் வாழ்வையும், என்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட கழகத்தின் வரலாற்றையும் பின்னிப் பிணைத்துச் சுழன்றோடுகிற இந்த சரித்திரப் பெருவெள்ளத்தில், இயக்கத்தை அழித்தொழிக்க எடுக்கப்பட்ட இறுதிக் கட்ட முயற்சியில் எத்தனை பேர் யார் யார் - மிசாவெனும் அடக்குமுறைக்கு ஆளானார்கள் என்ற பட்டியலை இடம் பெறச் செய்வது என் கடமையல்லவா? அவர்களில் எத்தனை பேர் நிமிர்ந்து நின்று தாக்குப் பிடித்தார்கள். எத்தனை பேர் வளைந்து நெளிந்து வதங்கிப் போனார்கள் என்பது எனக்கும் அவர்களது மனச்சாட்சிக்கும் மட்டுமே தெரிந்திருக்கட்டும்!

ஆட்சி கலைக்கப்பட்ட இரண்டொரு நாட்களுக்கெல்லாம் பிப்ரவரி 3ஆம் நாள்! அன்றுதான் அண்ணா நினைவு நாள்! அண்ணா சதுக்கம் சென்று வழக்கம் போல் மலர் வளையம் வைத்தோம்! அந்த நாளைப் பயன்படுத்திக்கொண்டு, அண்ணா சதுக்கத்திற்கு மலர் வளையம் வைக்க வர இயலாதோர் பட்டியல் என்று முரசொலியில் வெளியிட்டு அந்தத் திரைமறைவில், மிசாவில் கைதானோர் யார் என்பதை நாட்டுக்கு அறிவித்தேன்! தணிக்கை அதிகாரிகளை ஏமாற்ற அப்படியொரு தந்திரம் -

இதோ! மிசாவில் மாவட்ட வாரியாகக் கைதானவர்கள் பெயர்களைக் குறிப்பிடுகிறேன்.

சென்னை மாவட்டம்

நீலநாராயணன், நா.வீராசாமி, ஏ.வி.பி.ஆசைத் தம்பி, முரசொலி மாறன், சிட்டி பாபு, சீத்தாபதி, அ.செல்வராசன், டி.ஆர். பாலு, மு.க.ஸ்டாலின், புலவர் பொன்னி வளவன், மைனர் மோசஸ், சா.கணேசன், சோ.மா. ராமச்சந்திரன், பழக்கடை ஜெயராமன், வள்ளுவன், உசேன், கு.இராமலிங்கம், வழக்கறிஞர் ஆர்.கணேசன், து.கணபதி, கோடம்பாக்கம் சவுந்தரராஜன், சுப்பு, செல்வம், ராயபுரம் கபடா ராஜு, மு.கன்னியப்பன், காட்டூர் கோபால், துறைமுகம்

கிருஷ்ணன், மயிலை சம்பந்தம், ஆர்.ஆறுமுகம், மாணவர் தமிழ்மணி.

செங்கற்பட்டு மாவட்டம்

சி.ஆறுமுகம், மா.வெ.நாராயணசாமி, பம்மல் நல்லதம்பி, காஞ்சிபுரம் கே.டி.எஸ்.மணி, வி.பி.அகிலன், வீரராகவன், மாதவரம் வேதாசலம், எருக்கஞ்சேரி மதிவாணன், கும்மிடிப்பூண்டி வேணு, கோபாலகிருஷ்ணன், வேலு, ஊத்துக்கோட்டை ஸ்ரீராமுலு, ஊத்துக்கோட்டை ஏ.டி.ஆறுமுகம், ஆலந்தூர் ஆப்ரகாம், பரங்கிமலை டில்லிபாபு, பல்லாவரம் பாலகிருஷ்ணன், காட்டாங்குளத்தூர் இராமு, கண்ணபிரான், ஓமலூர் கன்னியப்பன், செங்கற்பட்டு பசுபதி, அன்சர், செ.கோ. விசுவநாதன், திருக்கழுக்குன்றம் வகாப், சபாபதி, செங்குன்றம் ஏழுமலை, மதுராந்தகம் சுந்தரமூர்த்தி, பிரேம்ராஜ், குலசேகரன், காஞ்சி வெங்கடேசன், ஏ.சுப்பிரமணியம், ராஜமாணிக்கம், டி.சீனிவாசன், மீஞ்சூர் கேசவன், பொன்னேரி நாகலிங்கம், விருகம்பாக்கம் லோகநாதன், போரூர் பி.கே.ராஜ கோபால், பூவை டி.ராஜரத்தினம், அம்பத்தூர் ரவைக்கண்ணன், குப்புசாமி, குன்றத்தூர் பாலகிருஷ்ணன், தி.சு.லட்சுமணன், கம்பராசபுரம் எம். ராஜகோபால், செங்கை கே.ஆர். சந்திரன், பல்லாவரம் இருதயராஜ், பட்டாபிராம் கா.மு.பாபு, மதுராந்தகம் சஞ்சீவி.

வடஆற்காடு மாவட்டம்

வி.எம்.தேவராஜ், துரைமுருகன், ஆரணி செல்வரசு, ஏ.சி.நரசிம்மன், வேலூர் வி.டி.தேவராஜன், மு.நடராஜன், திருப்பத்தூர் ஏ.டி.மணி, திருவத்திபுரம் பாண்டியன், குடியேற்றம் ஏ.கே.துரைசாமி, செங்கம் சி.பாண்டுரங்கம், எம்.பி.வடிவேலு, களம்பூர் அண்ணாமலை.

தென்ஆற்காடு மாவட்டம்

விருத்தாசலம் எம்.செல்வராஜ், பொன்.சொக்க லிங்கம், நெல்லிக்குப்பம் வி.கிருஷ்ணமூர்த்தி, சி.இராம கிருஷ்ணன், சி.குப்புசாமி, ஏ.வி.தண்டபாணி, ஏ.பாட்சா, வி.எஸ்.மணி, வி.மாயவன், சி.ராஜகோபால், வி.துரை, வேங்கை மார்பன், சி.பாண்டுரங்கன்.

தஞ்சை மாவட்டம்

கோ.சி.மணி, எல்.கணேசன், என்.கிட்டப்பா, தாழை மு.கருணாநிதி, தஞ்சை எஸ்.நடராஜன், நன்னிலம் நடராஜன், குடந்தை பத்மநாபன், வெங்கிடங்கால் ஏ.சந்தானம், வரதகோபாலகிருஷ்ணன், தஞ்சை டி.கே. கோவிந்தன், பேராவூரணி கிருஷ்ணமூர்த்தி, திருவாரூர் தென்னன், சித்தமல்லி ந.சோமசுந்தரம், மன்னை பாலகிருஷ்ணன், செம்பனார்கோவில் மதிவாணன், மாயவரம் செங்குட்டுவன், சிக்கல் கணபதி, ஏனாதி ஏ.பி.இராஜன், திருவாரூர் ராஜன், குடந்தை ஆர்.துரை, திருவாரூர் முருகு பாண்டியன், பட்டுக்கோட்டை அப்துல் சமது, மாயவரம் பாக்கியராஜ், தஞ்சாவூர் அறிவழகன், பழைய கூடலூர் ராஜமாணிக்கம், பொறையாறு சம்பந்தம், தஞ்சை இளங்கோவன், புலிவலம் ஜான், நாகை எஸ்.பி.தங்கையன், எம்.மீனாட்சிசுந்தரம், சீர்காழி குமாரசாமி, தஞ்சை கண்ணையன், தஞ்சை கோபால கிருஷ்ணன், மதுக்கூர் ஏ.வி.சுப்பிரமணியம், பூம்புகார் மனோகரன், தென்னவமணி, இலக்குமணன்குடி தட்சிணாமூர்த்தி.

திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள்

பரமத்தி சண்முகம், திருச்சி மலர்மன்னன், இரா. வெற்றிகொண்டான், கரூர் எஸ்.பி.இராச கோபால், பெரம்பலூர் ஜெ.எஸ்.ராஜ், திருச்சி எஸ்.ஏ.ஜி.இராபி, எம்.எஸ்.வெங்கடாசலம், நாகசுந்தரம், பராங்குசம், ஆர்.கே.சின்னதுரை, குளித்தலை முத்துகிருஷ்ணன், ஜெயங்கொண்டம் ஏ.கே.மூர்த்தி, செட்டிக்குளம் அல்லாபிச்சை, குஞ்சிதபாதம், திருச்சி கரிகாலன், திருச்சி பி.சுப்பிரமணியம், ஏ.கோபால கிருஷ்ணன், துவரங்குறிச்சி செங்குட்டுவன், திருச்சி இருதயராஜ், உறையூர் செவந்திலிங்கம், இடையாற்று மங்கலம் சிவ.சண்முகம், திருச்சி டி.என்.கோபால கிருஷ்ணன், என்.சுப்பிரமணியம், வி.கிருஷ்ண மூர்த்தி, சாக்ரடீஸ், ஏ.எம்.சம்பந்தம்.

அ.பெரியண்ணன், காடுவெட்டி தியாகராஜன், சுப்பிரமணியபுரம் இரா.ராஜன், இராமையா, புதுக்கோட்டை அப்துல் மஜீத், ஆவுடையார்கோவில் துரை. மாணிக்கம், எஸ்.இராமநாதன், சரவணமுத்து.

சேலம் மாவட்டம்

வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், செ.கந்தப்பன், மு.பழனிவேலன், சேலம் அன்புக்கரசு, சேர்ந்தமங்கலம் பெரியசாமி, சேலம் மாரியப்பன், ஆத்தூர் மா.முத்து, மாயவன், ஏ.ஆறுமுகசாமி,

என்.நடேசன், இரத்தினம், வக்கீல் அப்புசாமி, கு.சி.வெங்கடாசலம், கே.பி. கணேசன், ஏ.பி.அப்புசாமி, ஆர்.பெருமாள், எஸ்.குப்பு சாமி, என்.நல்லப்பன், மின்னாம்பள்ளி நடேசன்.

தர்மபுரி மாவட்டம்

எம்.கமலநாதன், ஆர்.சின்னசாமி, கோவை, நீலகிரி மாவட்டங்கள், மு.கண்ணப்பன், எஸ்.ஏ.இராஜமாணிக்கம், கோவை மு.இராமநாதன், வெள்ளக்கோவில் பெரியசாமி, பி.ஏ. சாமிநாதன், உதகமண்டலம் ராஜ், இரா.மோகன், வெள்ளக்கோவில் பழனிசாமி, இரா.மாணிக்கவாசகம், கோவை பி.எஸ்.ஜானகி ராமன், மேட்டுப்பாளையம் தூயமணி, கோவை கிருஷ்ணன், கோவை மணியன், உதகை நாகராஜன், ஈரோடு மா.சுப்பிரமணியம், திருப்பூர் முருகேசன், கொடுமுடி கிருஷ்ணன், சிவன்மலை முத்து, பொள்ளாச்சி இராமசாமி, பொள்ளாச்சி விஜய ராகவன், குட்டப்பாளையம் சாமிநாதன், நீலகிரி என்.மாணிக்கம், முருகன் மில்ஸ் இராமலிங்கம், குன்னூர் தங்கம், நீலகிரி குந்தா நஞ்சா கவுடர், உதகை கருப்பசாமி, கூடலூர் பகவத்சிங்.

மதுரை மாவட்டம்

பொன்.முத்துராமலிங்கம், காவேரிமணியம், அக்கினிராஜ், துரை.எழில்விழியன், பழனி கிருஷ்ண மூர்த்தி, மதுரை ராமச்சந்திரன், வி.எஸ்.லட்சுமணன், சங்கரன், மாரியப்பன், திண்டுக்கல் கே.ஜி. அந்தோணி, பாண்டி.

ராமநாதபுரம் மாவட்டம்

எஸ்.எஸ்.தென்னரசு, சித.சிதம்பரம், திருவில்லிப் புத்தூர் அமுதன், அருப்புக்கோட்டை கந்தசாமி, நயினார்கோவில் மணி, மானாமதுரை சாகுல் அமீது, சாத்தூர் வரதராஜன், திருவாடானை பெருமாள், சிவகங்கை நாராயணன், சிவகங்கை சேதுராமன், தேவகோட்டை காசிம், கட்டிக்குளம் முல்லை கிருஷ்ணன், புழுதிப்பட்டி இராசாங்கம், விருதுநகர் பாண்டியன், பரமக்குடி அரவரசன், மண்டபம் அப்துல் காதர், காரைக்குடி குறள்பித்தன், இராமநாதபுரம் சேக் சுல்தான், சிவகங்கை திருஞானம், அபிராமம் நடராஜன், சாத்தூர் பாலகிருஷ்ணன், திருச்சுழி பால்சாமி, ராஜபாளையம் ஆதிநாராயணன், திருமதி சக்தி, ராமேஸ்வரம் மாரிமுத்து, முறையூர் ராமநாதன், திருப்புவனம் சோனையா, உப்பூர் முத்துமன்னன், வத்திராயிருப்பு கொக்கு, அருப்புக்கோட்டை

பால்சாமி, முதுகுளத்தூர் நடராஜன், பெரி. அழகு, புதுவீடு ராமச்சந்திரன், அகமது தம்பி, அகமது.

நெல்லை மாவட்டம்

வை.கோபால்சாமி, நெல்லை புகாரி, நெல்லை நெடுமாறன், நெல்லை மஸ்தான், டி.தம்பித்துரை, தூத்துக்குடி செ.ரத்தினசாமி, நெல்லை இசக்கி, தூத்துக்குடி ராக்கட் ரத்தினசாமி, கேப்டன் நடராஜன், கிருஷ்ணன், கீழப்பாவூர் அரு.ராமநாதன், தூத்துக்குடி அய்யாசாமி, எஸ்.சித்திரவேல், பாளையங்கோட்டை உசேன், டி.அய்யாத்துரை, திருநாவுக்கரசு, நெல்லை சூரிய நாராயணன், இ.நம்பி, சங்கரன்கோவில் பழனிச்சாமி, தென்காசி திரவியம், வழக்கறிஞர் சண்முகம், நாகர்கோவில் இராசப்பா, தக்கலை டி.ஆர்.சுந்தரம், குமரி பொன்னார்டு, மைக்கேல்ராஜ், அ.திரவியம், சி.ரசல்ராஜ், மு.சூரிய நாராயணன், டாக்டர் ஆல்பன், கேசரி செல்வராஜ்.

மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஆர்.சுப்பிரமணியம், சாத்தையா, டி.கே.ராஜகோபால், கண்ணப்பன், ஏ.சண்முகம், பி.கண்ணன், எஸ். கிருஷ்ணன், குட்டை ரத்தினம், கே.எஸ்.அற்புதம், டி.கண்ணையன், கிருஷ்ணமூர்த்தி, சோமசுந்தரம், ஏ.வி.சுப்பிரமணியம், எஸ்.வெங்கடாசலம், வெங்கட சாமி, பி.நாகராஜன், பம்பாய் நாராயணன், முன்னாள் அமைச்சர் கவிஞர் கா.வேழவேந்தன், பண்ருட்டி ஏ.மணி, ஆர்.எஸ்.மணி, கே.தட்சிணாமூர்த்தி, திண்டுக்கல் க.வே.விக்கிரமாதித்த ராசன், கன்னியாகுமரி ஜி.எம்ஷா, எஸ்.எஸ்.மாரிசாமி, சைதை சம்பந்தம், டி.கே.கபாலி, அடியார், மு.வரதராசன், க.அறிவழகன், அ.ஜின்னா, வி.எஸ்.கோவிந்த ராஜன், கோடம்பாக்கம் குமார், தொட்டியம் எஸ்.கே.வடிவேலு, விருதாசலம் கிருஷ்ணமூர்த்தி, தூத்துக்குடி என்.பெரியசாமி, சாத்தான்குளம் தேவதாஸ், சங்கனாங்குளம் இளங்கோவன், சங்கரன், அழகியநம்பி, கோவில்பட்டி கலைமணி, காசி, வே.தங்கப்பாண்டியன், சுப.தங்கவேலன், காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திருப்பத்தூர் சொக்கலிங்கம், மதுரை கு.திருப்பதி, நெல்லிப் பேட்டை சீனி, மேலூர் மலைச்சாமி, ஒக்கூர் மணிவாசகம், விடுதலை ரத்தினம், வையை நம்பி.

சென்னைச் சிறையில் மிசாக் கைதிகளாக இருந்தவர்களை - ஆம் - அரசியல்வாதிகளை - பெரும்பாலும் தி.மு.க., தி.க.,

மார்க்சிஸ்ட், பழைய காங்கிரஸ்காரர்களை அடித்து வதைத்துக் குற்றுயிரும் குலை உயிருமாக்கினர்.

தி.மு.கழகத்தினரைத் தங்கள் இஷ்டம்போல் எதேச்சாதிகார அரசினர் வஞ்சம் தீர்த்துக் கொண்டனர், சென்னை சிறைச்சாலையில்!

ஆட்சி கலைக்கப்பட்ட மறுநாள், இருபத்து ஐயாயிரம் தி.மு.கழகத் தொண்டர்கள் சிறை வைக்கப்பட்டனர். அவர்களில் ஏறத்தாழஐநூறு பேர் மிசா கைதிகள். ஓராண்டுக்குக் குறையாமல் சிறையில் இருந்தவர்கள். இவர்களில் அமைச்சர்களாக இருந்தோர், மேயர்களாக, நகராட்சித் தலைவர்களாக இருந்தோர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தோர் பலரும் உண்டு.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

23-7-2002

2794. கை கால்களில் கட்டு; நெஞ்சிலும் முதுகிலும் குத்து!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு (10)

(நேற்றைய தொடர்ச்சி)

மாநில முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் நூற்றுக்கணக் கானோர் மிசா சட்டப்படி அடைக்கப்பட்டிருந்தார்கள் என்றாலும்கூட, சென்னை சிறைச்சாலையிலே அடைக்கப் பட்டவர்களைத்தான் சிறை அதிகாரிகளும், கன்விக்ட் வார்டர்களும், சிறைச் சாலையின் பெரிய அதிகாரிகளின் முன்னிலையில் அடித்து நொறுக்கிச் சித்ரவதை செய்தனர்.

சென்னைச் சிறையில் நடைபெற்ற சித்ரவதைகள் குறித்து அந்தச் சிறைக் கொடுமையின் காரணமாக, சிறையிலேயே பிணமான கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் சிட்டிபாபு, எம்.பி. எழுதிய டைரி அச்சாகி வெளிவந்துள்ளதைப் படித்தால் இப்போதும் நமது நெஞ்சு எரிமலையாகும்! அந்தக் கொடுமை குறித்து விசாரிக்க 1977-ஆம் ஆண்டில் மத்தியில் இருந்த ஜனதா ஆட்சியினால் நியமிக்கப்பட்டிருந்த கவர்னர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், நீதிபதி இஸ்மாயில் கமிஷனை அறிவித்தார். அந்தக் கமிஷன் அறிக்கையில், சிறையில் நடந்த கொடுமைகள் அனைத்தும் விளக்கப்பட்டன. மிசாக் கைதிகளுக்குச் சோறுடன் மண்ணையும், சிறுநீரையும் கலந்து வழங்கிய அக்கிரமங்கள் எல்லாம் விவரிக்கப்பட்டன. ஒவ்வொரு கூண்டுக்குள்ளும் நுழைந்து, அரசியல் மிசாக் கைதிகளை இழுத்துப் போட்டு, ரத்தம் சொட்டச் சொட்ட அடித்து உதைத்த அநியாயங்கள் எல்லாம் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டன. வித்யாசாகர் என்ற சிறை அதிகாரிதான் இத்தனைக்கும் காரணம் என இஸ்மாயில் கமிஷன் அறிக்கை சுட்டிக் காட்டியது. ஆனால் அன்றிருந்த அ.தி.மு.க. அரசு, அந்த அதிகாரி வித்யாசாகருக்குப் பதவி உயர்வு கொடுத்து அவரைக் கௌரவித்தது. அரசாங்க சார்பில் அச்சியற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ள நீதிபதி இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை இப்போது படித்தாலும் சென்னைச் சிறையில் அதிகாரிகள் நடத்திய

அந்த மிருக வெறிகொண்ட செயல்கள் குறித்துத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

மாநிலத்தில் மற்ற சிறைகளில் இருந்த மிசாக் கைதிகளைக் காண அவர்களது நெருங்கிய உறவினர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் வாரம் ஒரு முறை! ஆனால் சென்னைச் சிறையில் இருந்த மிசாக் கைதிகளைப் பார்க்க அவர்களது பெற்றோர்களோ, உறவினர்களோகூட அனுமதிக்கப்படவில்லை. சிறையில் இருக்கும் அந்த உடன் பிறப்புகளின் இல்லத்தினர், ஒவ்வொரு நாளும் என்னை வந்து சந்தித்துக் கண்ணீர் வடித்துக் கதறுவார்கள். இதற்கிடையே சிறையில் நடைபெற்ற சித்ரவதை நிகழ்ச்சிகளும் வெளியே பரவத்தொடங்கி விட்டன. ஏறத்தாழ முப்பது நாட்கள் வரையில் சென்னைச் சிறையில் இருந்தவர்களின் கதி என்ன என்பதே எங்களில் யாருக்கும் தெரியாது. கழகத்தினர் வீடுகளிலே இருந்து ஆண்களும், பெண்களும் அழுது புலம்பியவாறு என்னை முற்றுகையிட்டனர். ஓரிரு நாள் அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் பார்த்தேன். முடியவில்லை. ஒரு மாதம் ஓடிவிட்டது. ஒரு நாள் பிற்பகல் நானே மாநிலப் போலீஸ் தலைமை அதிகாரி அருள் அவர்களுக்குப் போன் செய்தேன். நாளைக் காலைக்குள் சிறையில் இருக்கும் மிசாக் கைதிகளைக் காண்பதற்கு அவர்களது உறவினர்களுக்கு அனுமதி அளிக்காவிட்டால் சிறைச்சாலை வாசலில் நான் சாகும்வரையில் உண்ணா நோன்பு மேற்கொள்வேன் என்று அவரிடம் அறிவித்தேன். அன்று மாலையே சென்னைச் சிறையில் உள்ள மிசாக் கைதிகளைக் காண்பதற்கு அவர்களது உறவினர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டது. உறவினர் தவிர்த்து மற்றவர்களைக் காண அனுமதி அளிக்கப்படவில்லை.

ஒரு மாதத்திற்குப் பிறகு, சிறையில் மாறனையும் ஸ்டாலினையும் பார்க்கக் குடும்பத்தோடு சென்றேன். மற்ற உடன்பிறப்புகளைப் பார்க்க அனுமதி இல்லை. அப்போதுதான் தெரிந்தது மாறனுக்கு உடல்நலிவு ஏற்பட்டு, ஜன்னி கண்டு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள செய்தி!

அதனால் சிறையில் ஸ்டாலினை மட்டுமே பார்த்தோம். ஸ்டாலினைச் சுற்றி இரண்டு சிறை அதிகாரிகள்! நான்கு சி.ஐ.டிக்கள்! ஸ்டாலின் முழுக்கைச் சட்டை போட்டுக் கையை மூடியிருந்தார். காரணம் அடிபட்ட காயங்கள் தெரியக்கூடாது என்பதற்காகச் சிறை அதிகாரிகள் உத்தரவு அப்படி!

அடித்தார்களாமே! உண்மையா? என்று கேட்டேன்.

இல்லை என்பது போலத் தலையாட்டினார். ஆனால் கண்கள் மின்னின!

அடித்தார்கள் என்று சொல்லியிருந்தால், மீண்டும் சிறையில் உள்ள அனைவருக்கும் அன்றே அடி விழுந்திருக்கும்.

சிறையில் சிட்டிபாபு மரண அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்றும், வீராசாமிக்கு காது கேட்கவில்லை என்றும், நீலநாராயணன் எழுந்து நடமாட முடியவில்லை என்றும் தகவல்கள் எங்களுக்கு வந்தன.

மறுநாள் மாறனைக் காண பொது மருத்துவமனைக்குப் போனோம்!

மருத்துவமனை அறையில் பத்துக் காவலர்கள் படுக்கையைச் சுற்றி நிற்க மாறன், ஜன்னி கண்டு படுத்திருந்த காட்சியைக் கண்டோம். ஒரு சில விநாடிகள்கூட எங்களை அனுமதிக்கவில்லை. போலீசார் எங்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியேற்றினார்கள். ஏனைய கழகக் கண்மணிகளையெல்லாம் காண முடியவில்லையே என்ற ஏக்கம் வாட்டியது. மிசா சட்டப்படி, அவர்களைக் காண முடியாது என்று அதிகாரிகள் மறுத்து விட்டனர். அவர்களது உறவினர்கள் அவர்களைக் கண்டு கலங்கியவாறு திரும்பினர்.

வெளியூர்களில் இருந்த கழகச் செயல் வீரர்களைச் சந்திப்பதற்கும், சிறைகளில் உள்ளவர்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதற்கும், ஒரு சுற்றுப் பயணம் புறப்படத் திட்டமிட்டேன். அதுகுறித்து முரசொலியில் பின்வருமாறு பிப்ரவரி இறுதியில் ஒரு கடிதம் எழுதினேன்.

உடன்பிறப்பே,

உன்னைக் காண்பதற்கும், குடும்பத்தினரைச் சந்திப்பதற்கும் நாளை புறப்படுவதாக இருந்தேன். இயலவில்லை. வரும் 24-ஆம் நாள் செவ்வாய்க் கிழமை அல்லது 25-ஆம் நாள் புதன்கிழமை புறப்படுவதாக இருக்கிறேன்.

மாலை, ஒலிபெருக்கி, மேடை, வரவேற்பு வளைவு இவை போன்ற எதுவும் இருக்கக் கூடாது. ஒலி முழக்கமோ, ஆரவாரமோ அறவே இருந்திடலாகாது.

நான் வரப்போகிறேன் என்பதற்கான துண்டு அறிக்கை விளம்பரங்களோ, சுவர் எழுத்து விளம்பரங்களோ, தட்டிகள் கட்டிடும் விளம்பரங்களோ நிச்சயம் கூடாது. அவைகளையும் தவிர்க்க வேண்டும்.

நான் உன் ஊருக்கு வரும்போது பயணிகள் விடுதி கிடைத்தால் அங்கு தங்குவேன். அவைகள் கிடைப்பது கஷ்டமாக இருந்தால் ஏதாவது ஓட்டல் அறைகள். அதுவுமற்ற இடங்களில் இருக்கவே இருக்கிறது எப்போதும்போல் உன் இல்லம். உள்ளத்திலேயே இடம் கொடுத்திருக்கிற நீ, சற்று நேரம் தங்கிச் செல்வதற்கு இல்லத்திலா இடம் தராமல் போய்விடுவாய்?

சில இடங்களில் உன் அரிய முயற்சியினால், அயரா உழைப்பினால் கழகத்திற்கென கட்டி வைத்திருக்கிற அலுவலகக் கட்டிடங்களை இந்தச் சமயத்தில் நான் பயன்படுத்திக் கொள்ளும்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும் தெரியுமா?

உன்னிடம் பேசவும், கழகத்துப் பணிகளை நீ எவ்வாறு அமைதியுடன் ஆற்றிட வேண்டும் என்று எடுத்துக் கூறிடவும்தான் உன்னைக் காண வருகிறேனே அல்லாமல், கூட்டம் பேசுவதற்கு அல்லவே அல்ல!

உன் திருமுகம் காணத்தான் வருகிறேனே அல்லாமல், திரளான மக்கள்சூழ் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அல்ல!

இதனை உணர்ந்து, நான் கேட்டுக் கொண்டுள்ளவாறு நடந்துகொள்வாய் என நம்புகிறேன்.

என்று எழுதியிருந்தேன்.

இதற்கிடையே நான் இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளக் கூடாது என சில காங்கிரஸ்காரர்கள், மத்திய உள்துறை அமைச்சருக்கும், கவர்னருக்கும் தந்தி கொடுத்தனர்.

கழகத்திலே உள்ள மூத்த தலைவர்கள் சிலருமே நான் அந்தப் பயணத்தை மேற்கொள்ளக்கூடாது எனத் தடுத்தனர். கழகத்தின் மேல்மட்டத்திலேயிருந்த ஒரு சிலர், நான் அந்தப் பயணத்தை மேற்கொள்வதால் தங்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் ஏற்படுமோ எனக் கருதி, என்னைப் போகக்கூடாது எனத் தடுத்தனர். மற்றும் ஒரு சிலர், நான் அந்தப் பயணம் மேற்கொள்வதால் எனக்கு மேலும் சிரமங்கள் நேரிடுமோ என எண்ணி, பயணம்

வேண்டாமெனத் தடுத்தனர். வேறு பலர், நான் அந்தப் பயணத்தை மேற்கொள்ளத்தான் வேண்டுமென்று வற்புறுத்தினர்.

ஒரு மாலை நேரம், முரசொலி அலுவலகத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். சட்டப்பேரவைத் தலைவராக இருந்த புலவர் கோவிந்தன் அவர்களும், மேலவைத் தலைவராக இருந்த சி.பி.சிற்றரசு அவர்களும் என்னிடம் தனிமையில் பேச வேண்டுமென்று வந்தார்கள். தலைமைக் கழக மேலிடத் தலைவர்கள் கூடிக் கலந்து பேசியதாகவும், இப்பொழுதுள்ள நிலையில் நான் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாதென்று அவர்கள் கருதுவதாகவும், அதனைச் சொல்லி எனது பயணத்தை நிறுத்துவதற்காகவே இருவரையும் அனுப்பியிருப்பதாகவும் சொன்னார்கள். கழகத்தின் மூத்த தலைவர்களான நீங்கள் இருவரும் சொல்கிற காரணத்தால், உங்கள் பேச்சைத் தட்டக்கூடாது என்ற நிலையில், சுற்றுப் பயணத் திட்டத்தை சில நாட்களுக்கு ஒத்தி வைக்கிறேன். அறவே ரத்து செய்ய இயலாது எனப் புலவர் கோவிந்தன் அவர்களிடமும், சி.பி.சிற்றரசு அவர்களிடமும் கூறினேன். அவர்களும் அந்த அளவிற்கு நான் ஒத்துக்கொண்டமைக்கு மகிழ்ச்சி தெரிவித்து விட்டுச் சென்றார்கள்.

கழகத்தின் மேல்மட்டத் தலைவர்கள் சிலர், கழகத் தலைமைப் பொறுப்பிலே இருந்து நான் விலகிக் கொண்டால் கட்சிக்கு மேலும் ஆபத்து வராது என்றும், கட்சியை மத்திய அரசு தடை செய்யாமல் விட்டு விடுமென்றும் அவர்களாகவே கூடிப் பேசி, ஒருநாள் அதுகுறித்து கலந்து முடிவெடுக்க என்னையும் அழைத்தனர். அப்போது அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த கழகத் தலைவர்கள், கலைஞர் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகவே கூடாது! என்று ஆவேசமாகக் குரல் எழுப்பினர். ஆனால் அந்தச் செய்தி எப்படியோ மத்திய அரசின் ஒற்றர்களுக்கு எட்டி விட்டது! அன்றிரவே அவர்களைச் சூழ்ந்து வளைத்து, அவர்களது வீட்டையும் சோதனையிட்டு கைது செய்தனர். திட்டமிட்டபடி சுற்றுப்பயணம் செல்வதை ஒத்திவைத்துவிட்டேன் என்றாலும், தினந்தோறும் முரசொலி அலுவலகம் செல்வதை மீண்டும் ஒரு வழக்கமாகக் கொண்டுவிட்டேன். தொடர்ந்து முரசொலியில் எழுதுகிறேன் என்றதும், எமர்ஜன்சி காலத் தணிக்கை அதிகாரி, ஒரு புதிய ஆணையை அனுப்பி, முரசொலியில் எந்தச் செய்தி

அல்லது கட்டுரை வெளிவருவதாக இருந்தாலும், அவற்றைத் தணிக்கை அதிகாரிக்கு அனுப்பி அனுமதி பெறவேண்டுமென்றும், எல்லாப் பக்கங்களும் அச்சாவதற்கு முன்பு (Page Proof) அந்தப் பக்கங்களையும் தணிக்கை அதிகாரியிடம் அனுப்பி அங்கீகாரம் பெறவேண்டுமென்றும் கடுமையாகச் சட்டம் இருப்பதாகத் தெரிவித்தார்.

அறிஞர் அண்ணா என்று அண்ணாவுக்கு அறிஞர் என அடைமொழி இட்டு எழுதுவதையோ, காமராஜரைப் பெருந்தலைவர் எனக் குறிப்பிடுவதையோகூட, அந்தத் தணிக்கை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. ஒரு பக்கம் கட்டுரையோ, செய்திகளோ அச்சுக்கோத்து அவை சென்சார் அலுவலகத்திற்குச் செல்லுமானால், திரும்பி வரும்போது அவற்றில் நாலைந்து வரிகளே மிஞ்சியிருக்கும். அந்த அளவுக்கு எழுத்துச் சுதந்திரம் எதிர்க்கட்சிகளுக்கு, அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பறிக்கப்பட்டது. அதே நேரத்தில் தி.மு.கழகத்திற்கு எதிரான ஏடுகளில் - மத்திய அரசின் வானொலியில் - டெலிவிஷனில் - தி.மு.க. பற்றியும், குறிப்பாக என்னைப் பற்றியும், கழக அமைச்சர்கள், கழகக் குடும்பத்தினர் பற்றியும் திட்டமிட்டு வேண்டுமென்றே அவதூறுச் செய்திகள் பரப்பப்பட்டன. 1976 தொடக்கத்தில் கழக ஆட்சியைக் கலைத்தது முதல் 1977 வரையில் இப்படிக் கழகத்திற்கும், எனக்கும் களங்கம் கற்பிக்கும் செய்திகளைப் பரப்புகிற பணியை அதிகாரபூர்வமாகச் செய்து வந்தனர். அந்தச் செய்திகளை மறுக்கவோ, விளக்கம் எழுதவோ எனக்கும், கழகத்தினருக்கும், கழக ஏடுகளுக்கும் உரிமை கிடையாது. எதிரியைக் கை கால்களைக் கட்டிப் போட்டுவிட்டு, அவன் நெஞ்சிலும், முதுகிலும் மாறி மாறிக் குத்துவது போல ஒரு அநியாயமான போராட்டத்தை அன்றைக்கு மத்திய அரசும், மாநில கவர்னர் அரசும், அவற்றுக்குப் பக்கபலமாக பிரச்சார பீரங்கிகளும் நடத்தின.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

24-7-2002

A2241
கதை.6116
கதை.34

தி.மு.க. அறிவாலயம்
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
நினைவு அறிவாலயம்

2795. தலைமையை மாற்றிடத் தலைகீழாய் நின்றனர் சிலர்!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு (11)

(நேற்றைய தொடர்ச்சி)

நேற்றையதினம் இறுதியாக நான் குறிப்பிட்டிருந்ததைப் போல என் மீதும், என் குடும்பத்தினர் மீதும், கழகத்தினர் மீதும் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடுவார்கள். அதற்கு விளக்கமோ, பதிலோ அளிப்பதற்கு வாய்ப்பும், அனுமதியும் தரப்படுவதில்லை. தடுக்கப்பட்டது. சென்சார் கட்டுப்பாடும், அரசின் அடக்குமுறையும் அந்த அளவிற்கு எல்லை கடந்து இருந்தன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமேயானால், 9.3.1976 அன்றைய மாலை ஏடு ஒன்றில், என்னுடைய மகள் கனிமொழி பெயரால் ராஜா அண்ணாமலைபுரம் இந்தியன் வங்கிக் கிளையிலே டிசம்பர் மாதம் எண்பதாயிரம் ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டதாக ஒரு செய்தி வெளியிடப்பட்டது. அந்தச் செய்தியிலே சிறிதளவாவது உண்மை உண்டா என்றால் கிடையாது. 1973ஆம் ஆண்டு முதல் சேவிங்ஸ் அக்கவுண்டில் என் மகள் கனிமொழி பெயரால் மாதந்தோறும் நூறு ரூபாய், இருநூறு ரூபாய் என்று டெபாசிட் செய்தவகையில், வெறும் நாலாயிரம் ரூபாய் அளவிற்கு சேமிப்பில் இருந்ததே தவிர, அந்த ஏடு வெளியிட்ட செய்தியைப் போல டிசம்பர் மாதம் எண்பதாயிரம் ரூபாய் டெபாசிட் செய்யப்படவே இல்லை என்பதை வங்கிக் கணக்குக் குறிப்புகளே காட்டியபோதிலும், அந்த அவதூறுகளுக்கு மறுப்பு தெரிவிக்க எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. செய்தி சென்சார் கெடுபிடி அப்படி!

முரசொலியில் அரசியல் கலப்பற்ற இலக்கியக் கடிதங்கள் எழுதினேன். அந்த இலக்கியக் கடிதங்களின் வாயிலாக நான் காட்டிய குறிப்புகளைக் கழக உடன்பிறப்புகள், வெளியில் இருந்தவர்களும், சிறையில் இருந்தவர்களும் புரிந்து கொண்டார்கள். இலக்கியக் கடிதங்கள் மூலம் அரசியலை

நுழைக்கிறேன் என்று சென்சார் அதிகாரிகளுக்குக் கழகத்தின் எதிரிகள் தெரிவிக்கவே, இனி கருணாநிதி என்ற பெயரால் கட்டுரைகளோ - கலைஞர் கடிதங்களோ முரசொலியில் வெளிவரக் கூடாது எனத் தணிக்கை இலாகா தடை செய்துவிட்டது. அதன் பிறகுதான் கரிகாலன் பதில்கள் என்ற ஒரு புதிய பகுதி, முரசொலியில் தொடங்கப்பட்டது. அதிலும்கூட இருபது கேள்விகளுக்கு பதில் எழுதியிருந்தால், ஐந்தாறு கேள்விகள்தான் தணிக்கை அதிகாரிகளால் அனுமதிக்கப்படும். தணிக்கை அதிகாரியால் அப்போது வெட்டப்பட்ட ஒரு கேள்வி பதிலைப் பற்றிய விவரம் இதோ:-

கேள்வி: இன்னமும் மக்களிடையே ஒரு சாரார் பேய், பூதம், பிசாசுகள் இருப்பதாக நம்புகிறார்களே, அதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்: பேய், பூதம், பிசாசு என்று கூறுவது கற்பனை! ஏற்றுக்கொள்வது மூடநம்பிக்கை! பேய், பிசாசுகள் இல்லை என்பது பற்றி பகுத்தறிவுச்செம்மல் மா. சிங்காரவேலர் எழுதியுள்ள நூலை வாங்கிப் படிக்கவும்.

இந்தக் கேள்வி பதிலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தொலைபேசி மூலம் தணிக்கை அதிகாரியை தொடர்புகொண்டு ஏன் அனுமதி மறுத்தீர்கள் எனக் கேட்டேன். நீங்கள் பேய், பிசாசு, பூதம் என்று எழுதும்போது அது மறைமுகமாக இந்திரா காந்தியைக் குறிக்கின்றது என்று நாங்கள் கருதுகிறோம் என்று கூறினார்கள். அதை நினைத்து எனக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை. என் கலைத்துறை வாழ்வில் நான் திரைப்படங்களுக்கு எழுதி அதிலே சென்சார் குறுக்கிட்டதையும், மிசா நேரத்தில் பத்திரிகையில் நான் எழுதியதில் சென்சார் தலையிட்டதையும் மட்டுமே அடிப்படையாக வைத்து ஒரு நல்ல புத்தகம் எழுதிட முடியும். அந்த அளவிற்கு அன்றாடம் சென்சாருடன் போராட்டம் அமைதியான முறையில் நடத்திட வேண்டியிருந்தது.

கழகத்திற்கு வெளியே இந்த அளவிற்கு நிலைமைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தபோது, கழகத்திலே இருந்த மூத்த தலைவர்கள் சிலர், நான் கழகத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று தனியாகப் பேசி முடிவெடுத்து,

அதனை என்னிடம் நேரிலே சொல்வதற்கு முடியாமல், புலவர் கோவிந்தன் அவர்கள் மூலமாக ஒரு கடிதத்தை என் சகோதரிகளிடம் சேர்ப்பித்தார்கள்.

அந்தக் கடிதத்தின் பின்னால் எந்தெந்தத் தலைவர்கள் இருக்கிறார்கள் என்பதையும், அக்கடித வாயிலாக புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். பேராசிரியர் போன்ற ஓரிரு தலைவர்கள்தான் அந்தப் பட்டியலில் இல்லை. மற்ற தலைவர்களில் நான் நினைத்துக்கூடப் பார்க்காத சிலர் இருந்தனர். அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் நான் புலவர் அவர்களுக்கு ஒரு நீண்ட பதில் எழுதினேன். அந்தக் கடிதத்திலே நான் புலவர் அவர்களிடம், நீங்கள் இப்படி ஒரு கடிதம் எழுதுவதற்குப் பதிலாக எனக்கு ஒரு துளி விஷம் அளித்திருக்கலாம் என்றும், கழகம் நல்ல நிலைமையிலே இருந்தபோதெல்லாம் அதற்குத் தலைவனாக இருந்து விட்டு, கழகத்திற்கு ஓர் ஆபத்து என்ற நேரத்திலே அதைவிட்டுப் போவது அழகாகுமா என்றும், என்னை முழுவதும் உணர்ந்த புலவரே அதனை எழுதலாமா என்றும் கேட்டிருந்தேன்.

நல்ல அரசியல்வாதி என்பவன் போர்க் கப்பலின் தளபதிக்கு ஒப்பானவன். அண்மையில் நடந்த ஒரு போரின்போது அன்னிய விமானத்தின் தாக்குதலுக்கு உள்ளான ஓர் கப்பலின் தளபதி, தனது உதவியாளர்களை எல்லாம் தப்பித்துக் கொள்ளச் செய்துவிட்டு, மேல்தளம் சென்று தன் இணைபிரியா கப்பலுடன், கடலுக்குள் சங்கமமானான் என்று படித்தேன். அந்த வரிகள் என் கண்களைக் குளமாக்கின. அந்தத் தியாகம்தான் அரசியல்வாதிக்கு வேண்டும். அது இல்லாதவன் அரசியல் வாதியல்ல! அரசியலில் வியாதியே! புற்றுநோயினும் கொடிய வியாதியே! என்ற கருத்துகளை உள்ளடக்கி புலவர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதினேன்.

மேலும் முரசொலியில், கரிகாலரே, உமது கையில் ஒரு கோப்பை விஷத்தைக் கொடுத்து கழகத்திலிருந்து விலகுகிறீரா? அல்லது விஷத்தை அருந்துகிறீரா? என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? என்ற கேள்விக்கு, அப்படிக் கொடிய இதயம் படைத்த எதிரிகள் யாரும் இல்லை. நம்முடைய நண்பர்கள் சிலரைவிட, எதிரிகள் எவ்வளவோ நல்லவர்கள். நண்பர்கள் யாராவது விலகுகிறாயா? அல்லது விஷம் தேவையா? என்று கேட்டால் விஷத்தையே விரும்பி ஏற்பேன். சாக்ரடீஸ், கொள்கைக்காக விஷக் கோப்பையை ஏந்தியதும், மகாத்மா காந்தி,

துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கியதும் கற்பனைக் கதைகள் அல்ல! சாகாத சரித்திரங்கள் என்று பதில் எழுதியிருந்தேன்.

என்னுடைய கடிதத்தைக் கண்டதும், புலவர் அவர்கள் என் வீடு நோக்கி ஓடிவந்தார். என்னைப் பார்த்ததும், நான் எழுதியிருந்தது உங்களுடைய கஷ்டங்களைக் காண சகிக்காமல்தானே தவிர, வேறல்ல! நீங்கள் தலைமையிலிருந்து விலகிக் கொண்டாலாவது உங்களுக்குத் தரும் தொல்லைகளைக் குறைத்துக் கொள்ள மாட்டார்களா என்ற எண்ணத்தில்தான் என்று கூறி, ஓவெனக் கதறி அழுதுவிட்டார். பின்னர் நான் அவருக்கு சமாதானம் கூறினேன். கழகம் சோதனைத் தீயில் நின்று போராடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நான் அதனை விட்டுவிட்டு ஓடத் தயாராக இல்லை என்று கூறி, இதைவிட இன்னும் எவ்வளவு தொல்லைகள், துயரங்கள் தரப்பட்டாலும், அதனை அனைவரும் ஒன்றாக இருந்து சந்திப்போம் என்றும் அவரிடம் தெளிவுபடுத்தினேன்.

கழகத்தின் சோதனைகளுக்கு அஞ்சி, அதுவரை நல்ல நல்ல பதவிகளிலே இருந்தவர்கள் கழகத்தை விட்டு விலகினார்கள். எந்தப் பதவியிலும் இல்லாது, எந்தப் பலனையும் அனுபவிக்காது கழகத்திலே இருந்தவர்கள், நாங்கள் என்றைக்கும் உன் பின்னால் இருப்போம் என்று அன்றாடம் மடல்கள் மூலம் எனக்கு எழுதினார்கள். கழகத்தை விட்டுச் செல்பவர்களைப் பற்றி நான் கருத்து தெரிவிக்கும்போதுகூட - போகிறவர்கள் போகட்டும்! அதற்காக வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு கதறப் போவதில்லை. கடைசிவரையில் இருக்கப் போகிறவர்கள் யார்? இருந்தவர்கள் யார்? அந்தக் கணக்கு ஒரு காலத்தில் தெரியத்தான் போகிறது. கடலில் போய்க் கலக்கும் தண்ணீருடன், கங்கையோ, காவிரியோ வற்றிப் போய் விட்டதாக யாராவது சொல்லமுடியுமா? கடலில் சென்று கலப்பது கலக்கட்டும், கழனிகளில் பாய்ந்து பயன் விளைப்பது விளைக்கட்டும், கடலில் ஒரு பகுதி நீர் கலந்து உபயோகமற்ற உப்பு நீராகி விடுவதாலேயே நதியே வறண்டு விடுமா என்ன? அந்த நம்பிக்கையோடு நமது கடமைகள் தொடரட்டும். இன்றைக்குக் கழகத்தைக் குறைகூறுவதன் மூலம், கழகத் தலைமையை வசைப்பாடுவதன் மூலம், தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடுகிற சிலர், என்றைக்கோ ஒரு நாள் தங்கள் மனச்சாட்சிக்குப் பதில் சொல்லத்தான் வேண்டியிருக்கும். அந்த நாளை எதிர்பார்ப்போம்! அண்ணா வழியில் பணிபுரிவோம்.

அமைதி! அமைதி! அதை எந்த நாளும் காப்போம் என்று தெரிவித்தேன்.

இத்தகையச் சூழலில், திராவிடர் இயக்கத்தின் பழம்பெரும் பணியாளரும், களம்பல கண்டவரும், மிசாவில் கைதாகி மதுரை சிறைச்சாலையிலே அடைபட்டுக்கிடந்தவருமான சாத்தூர் பால கிருஷ்ணன் மதுரைச் சிறையில் ஏப்ரல் 1ஆம் தேதியன்று திடீரென்று இயற்கை எய்தினார் என்ற செய்தி வந்தது. அவர் மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்த நான், அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த சென்னையிலிருந்து காரிலேயே புறப்பட்டேன். முன்னாள் அமைச்சர் நண்பர் கண்ணப்பன் காரை ஓட்டிக்கொண்டு வந்தார்.

மாலை 6 மணி அளவில் சென்னையை விட்டுப் புறப்பட்டு, திருச்சி சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்கு அருகே நாங்கள் செல்லும்போது மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டது. நண்பர் பண்ணை முத்துகிருஷ்ணன் வீட்டுக்கு எதிரில் கொட்டுகின்ற மழையில் நூற்றுக்கணக்கான கழக உடன்பிறப்புகள் புடைசூழ நண்பர் அன்பில் கையில் ஒரு குடையுடன் என்னை வரவேற்க நின்று கொண்டிருந்தார்.

செய்தி பரவிடாமல் இருந்தபோதிலும், திருச்சியின் பல்வேறு பகுதியிலிருந்தும், திருவரங்கம் பகுதியிலிருந்தும் கழகத் தோழர்கள் ஏராளமாக வந்திருந்தனர். உணவு அங்கே அருந்திவிட்டு, இரவு ஒரு மணி அளவில் மழையினூடே மதுரை நோக்கிப் புறப்பட்டோம். விடியற்காலை 4 மணிக்குத்தான் மதுரையை அடைய முடிந்தது. ஒரு சில மணி நேரங்கள் தூக்கம் என்ற பெயரில் கழித்துவிட்டு, காலை ஏழு மணிக்கு மதுரையிலிருந்து சாத்தூர் நோக்கிக் கிளம்பினோம்.

சரியாக பத்து மணிக்கெல்லாம் சாத்தூருக்குள் நுழைந்துவிட்டோம். கண்களில் நீர் தாரைதாரையாக வழிந்தோட கழகக் கண்மணிகள் அந்த வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டவுடன் கோவெனக் கதறி அழுத குடும்பத்தாரைத் தேற்றிட முடியாமல் நான் தவித்தேன். எனக்கே ஆறுதல் சொல்ல அங்கே ஆட்கள் தேவைப்பட்டது. நான் இறுதி அஞ்சலி செலுத்தியவுடன் அந்தத் தியாகச் செம்மலின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. கொளுத்துகின்ற

வெயிலில் பல்லாயிரவர் அந்த இறுதி ஊர்வலத்தில் மௌனமாக அணிவகுத்தனர். நானும் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டு நடந்தே சென்றேன். எரியூட்டப் பெற்ற இடத்தில் அழகுத் தேவர் தலைமையில் இரங்கலுரையாற்றி இறுதி அஞ்சலி செலுத்தினேன். அன்று இரவு 12 மணி அளவில் சென்னை வந்து சேர்ந்தோம். வழி நெடுக எங்கள் காரை நிறுத்துமாறு அன்புக் கட்டளை பிறப்பித்த கழக உடன்பிறப்புகள், மாணவர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியோரைச் சந்தித்து ஓரிரு நிமிடங்கள் உரையாற்றியதின் காரணமாக மனச்சோர்வும், சோகமும் சற்றுக் குறைந்த நிலையில் திரும்பினேன்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

25-7-2002

2796. அடக்குமுறையால் அழித்திட இயலாத எஃகு அரண்!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு (12)

(நேற்றைய தொடர்ச்சி)

1976ஆம் ஆண்டு முழுவதும் நெருக்கடி நிலைக் கொடுமைகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. அன்றாடம் என்னுடைய பொழுது, காலையில் எழுந்தவுடன் நாளேடுகள் படித்து முடிப்பதிலேயே ஆரம்பமாகும். பிறகு ஒன்பது அல்லது பத்து மணி வரையிலே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பஸ்களிலும், வேன்களிலும் ஏறிக்கொண்டு கழக உடன்பிறப்புகள் நூற்றுக்கணக்கில் வருவார்கள். ஒவ்வொரு நாளும் தவறாமல் அவர்களைக் காண்பதில் எனது சோர்வெல்லாம் பறந்து போய்விடும். பஸ்களையும், வேன்களையும் வீட்டு வாசலில் நிறுத்தி அதிலே வந்தவர்கள் என்னுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வார்கள். மத்திய அரசால் பழிவாங்குவதற்கென்றே போடப்பட்ட சர்க்காரியா கமிஷன் விசாரணை வழக்கு நிதியை அள்ளி அள்ளி வழங்குவார்கள். அவ்வாறு நாள்தோறும் கழகத்தினர் சென்னைக்கு என் இல்லம் நோக்கி வருவதையும், வழக்குநிதி தருவதையும் சகித்துக்கொள்ள முடியாத கவர்னர் ஆட்சி, அப்படி என்னைச் சந்திக்கப் புறப்படுகிற கழகத்தினரை அவர்களது ஊர்களிலே தடுத்து நிறுத்தும்படி காவல்துறையினருக்குக் கட்டளை யிட்டது. அதன் காரணமாக பஸ்களையும், வேன்களையும் வாடகைக்குத் தருவதற்கு அவற்றின் உரிமையாளர்கள் மறுத்து விட்டார்கள். அந்த நிலைமையை ஆங்காங்குள்ள கழகத்தினர் சமாளித்த விதமே அலாதியானது!

திருப்பதிக்கு யாத்திரை போகிறோமென்றும், திருத்தணி கோயிலுக்குப் போகிறோம் என்றும் கூறி பஸ்களையும், வேன்களையும் வாடகைக்குப் பிடித்தனர். அவற்றில் குழந்தை குட்டிகளுடன் குடும்பம் குடும்பமாக ஏறிக் கொண்டனர். திருப்பதி, திருத்தணிக்குச் சென்று பிரார்த்தனை செலுத்தி வந்தவர்களைப் போல மொட்டையும் அடித்துக் கொண்டனர். சந்தனத்தையும் தலை

நிறையப் பூசிக் கொண்டனர். இல்லாவிட்டால் அவர்கள் திருப்பதி, திருத்தணியிலிருந்து சென்னை நகருக்குள் நுழைந்திட போலீசார் அனுமதிக்கமாட்டார்களே! பழுத்த பக்த சிரோன்மணிகளைப் போல என் வீட்டுக்கு வந்து சேருவார்கள். எனக்குத் தைரியம் கூறுவார்கள். கவலைப்படாதே! நாங்கள் இருக்கிறோம் என்று கண்கலங்க என் கைகளைப் பிடித்துக்கொண்டு உறுதி முழக்கம் செய்வார்கள். வழக்கு நிதி தருவார்கள். கூட்டாக என்னுடன் நின்று குடும்பம் குடும்பமாக புகைப்படம் எடுத்துக் கொள்வார்கள். கூட இருந்த மேலிடத்துத் தலைகள் சில, கலங்கிப்போய் என்னையும் செயலற்றவனாக ஆக்கிட முனைந்தபோது - அந்தக் கழகக் கண்மணிகள், மொட்டைத்தலையுடன் வந்து எனக்களித்த உற்சாகத்தையும், ஊக்கத்தையும் இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது! ஏ, அப்பா - அவர்கள் மட்டும் இல்லாவிட்டால் இன்றைக்கு இந்தக் கழகம் ஏது?

தினமும் அவர்களைச் சந்தித்து விட்டு முரசொலி அலுவலகம் செல்வேன், எழுதுவேன். அதன்பிறகு கழக அலுவலகம், அன்பகம் செல்வேன். அமைச்சராக இருந்தோமே என்கிற அந்த நினைவையே மறந்து விட்டு, நண்பர் சாதிக் பாட்சா அவர்கள் அன்பகத்தில் எல்லாக் கடமைகளையும் ஆற்றுவார். பேராசிரியர் வருவார். நாவலர் வருவார் மற்றும் அமைச்சர்களாக இருந்தவர்கள் சிலர் வருவார்கள். என்னையும், பேராசிரியரையும் தவிர, மற்ற எல்லோருடைய முகத்திலும் எதையோ பறிகொடுத்துவிட்ட சோகம்தான் பரவிக் கிடக்கும். அதிக நேரம் அவர்களுடன் உட்கார்ந்திருந்தால் எனக்கே ஒரு கோழைத்தனம் வந்து விடுமோ என்ற அச்சம் பிறக்கும். ஒரு நாள் அன்பகத்தில் அமர்ந்து நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது, மாநிலக் கட்சிகளைத் தடை செய்ய இந்திரா அரசு உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி வந்தது! அதை அறிந்த எம்.ஜி.ஆர். அவர்கள், தனது கட்சியின் பெயர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருந்ததை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என மாற்றிக்கொண்ட நிகழ்ச்சி அனைவரும் அறிந்ததே! அவ்வாறே தி.மு.க.வையும் பெயர் மாற்றிக் கொள்வதே பாதுகாப்பானது என்று கழகத்தின் மூத்த தலைவர்கள் சிலர் அழுத்தமாகக் கருத்தறிவித்தனர். அமைச்சர் களாக இருந்த சிலரும் ஆமாம் போட்டனர். தி.மு.க.வை அரசியல் கட்சியல்ல என அறிவித்து, கலாச்சாரக் கழகமாக ஆக்கிவிடலாம் என்றும் ஓரிரு தலைவர்கள் வற்புறுத்தினர். அவசரப்பட்டு அடிப்படையை இழந்துவிடக்கூடாது என்ற எனது கருத்துக்கு

பேராசிரியர் மட்டுமே துணை நின்றார். இப்படியொரு சிந்தனை கழகத்தின் மேல்மட்டத்தில் இருப்பது தெரிந்தால்கூட கழகத் தொண்டன் உயிரை மாய்த்துக் கொள்வான் என்று கூறினேன். அதற்குள் இந்தச் செய்தி சென்னை சிறைச்சாலைக்குள் பரவி, அங்கு மிசாவில் இருந்த கழக முன்னணியினர் கையெழுத்திட்டு, கழகத் தலைமையிலாகட்டும் அல்லது கழகப் பெயரிலாகட்டும் எந்த மாற்றமும் கூடாது! என உறுதியாகத் தெரிவித்து எங்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினர். அந்தக் கடிதத்தைச் சலனமுற்றிருந்த நண்பர்களிடம் படித்துக்காட்டி, வாழ்ந்தாலும் கழகத்தோடு வாழ்வோம்! வீழ்ந்தாலும் கழகத்தோடு வீழ்வோம்! என்று உணர்ச்சி பொங்கிடக் கூறினேன்.

அதன்பிறகு சில நாட்கள் கழகத் தலைமை மாற்றம், கழகப் பெயர் மாற்றம் இவை குறித்த விவாதங்கள் எழவில்லை. ஆனால், சில இடங்களில் குழுக்களாகக் கூடி முணுமுணுத்துக் கொண்டிருந்தனர்.

மிசா சட்டத்தின் கீழ் சிறையிலே அடைக்கப்பட்ட கழகத் தோழர்கள் பலரின் குடும்பங்கள் மிகவும் வசதியற்ற நிலைமையிலே இருந்த காரணத்தால், அத்தகைய குடும்பங்களுக்கு மாதந்தோறும் இருநூறு ரூபாய் வீதம் நிதியாகத் தர முடிவு செய்து தலைமைக் கழகத்தின் சார்பில் அதனை வழங்குவதற்கு ஏற்பாடும் செய்யப்பட்டு அவ்வாறே தரப்பட்டது. அடுத்து, ஜூன் 6 ஆம் தேதியன்று திருச்சி மாவட்டம், அன்பில் கிராமத்தில் மறைந்த கழகத் தோழர் இரா.கோபால் அவர்களின் இல்லத் திருமணத்திற்கும், பொன்மலை நகரச் செயலாளர் ராமானுஜம் இல்லத் திருமணத்திற்கும் நான் வரவேண்டுமென்று அழைத்திருந்தார்கள். திருச்சியிலே ரயிலிலிருந்து என்னை இறக்கி காருக்கு அழைத்துச் செல்லவே முடியாத அளவிற்கு பல்லாயிரக்கணக்கானவர்களின் கூட்டம். எப்படியோ கூட்டத்தில் போட்டு நசுக்கி காரில் கொண்டு போய் என்னைத் தள்ளினார்கள்.

திருச்சியிலிருந்து அன்பில் கிராமத்து திருமண வீட்டிற்கு சுமார் பதினைந்து மைல். காலை 9 மணிக்கு திருச்சியை விட்டுப் புறப்பட்டு 11 மணிக்குத்தான் அன்பில் சென்றடைந்தோம். 15 மைல்களைக் கடக்க இரண்டு மணி நேரமா என்றால், அந்த அளவிற்கு வழியெங்கும் எங்கள் கார் நிறுத்தப்பட்டு, உடன்பிறப்புகளின் அன்பிற்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது. பின்னர் ஒன்றரை மணி அளவில்தான் பொன்மலை திருமண

விழாவிற்கு வந்து சேர முடிந்தது. என்னுடைய காருக்கு நண்பர் காமாட்சிதான் சாரதி. அன்பில், அழகமுத்து, மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.வெங்கடாசலம், ஆலந்தூர் பாரதி, வி.எம்.ஆர். சபாபதி ஆகியோர் உடன் வந்தனர். திருமணத்தை முடித்துவிட்டு தங்கு மிடத்தில் மாலை வரை கியூவிலே நின்று விசாரணைக் கமிஷன் நிதியினைப் பெற்றுக் கொண்டேன். நிதி ஆறாயிரத்தை எட்டிப் பிடிக்கும் அளவிற்கு வசூலாயிற்று.

இரவு சென்னைக்குச் செல்ல ரயிலில் டிக்கெட் இல்லை என்று 6 மணி அளவில் செய்தி சொன்னார்கள். மறுநாள் காலையில் சென்னையிலே ஒரு திருமணத்திற்கு நான் தலைமை தாங்கியாக வேண்டும். எனவே வேறு வழியில்லாமல், 7 மணிக்கு நண்பர் காமாட்சியின் காரிலேயே சென்னைக்கு புறப்பட்டோம். இரவு 12 மணிக்கெல்லாம் சென்னையில் சேர்த்து விடுவதாகத் தெரிவித்தார். ஆனால் உளுந்தூர் பேட்டைக்கு முன்பாகவே, கார் சக்கரத்தில் ஒன்று பழுதாகி விட்டது. உளுந்தூர்பேட்டையில் அதனை சரி செய்து கொண்டு விழுப்புரம் நோக்கி வந்து கொண்டிருந்தோம். மீண்டும் அதே சக்கரத்தில் காற்று இறங்கி விட்டது. ஏதோ ஒரு தேய்ந்துபோன ஆணி குத்தி ஓட்டை விழுந்துவிட்டது. விழுப்புரத்தில் மீண்டும் அதனை சரி செய்து கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம். மதுராந்தகம் தாண்டியதும் மறுபடியும் கார் சக்கரத்தில் பழுது! நல்ல வேளையாக சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு வாடகைக் காரில் இருந்தவர்கள், தங்கள் காரில் உள்ள ஒரு உபரி சக்கரத்தை எங்கள் காருக்குத் தந்தார்கள். அதை மாட்டிக்கொண்டு இரவு 12 மணிக்கு சென்னை வந்து சேர நேரம் குறித்தவர்கள், விடிய விடியக் கண் விழித்து விடிந்தபிறகு சென்னை வந்து சேர்ந்தோம்.

வந்தவுடன் சிறிது நேரத்திற்கெல்லாம் அணை யுடைத்த வெள்ளம் போல் மூன்று பேருந்துகளில் பண்ருட்டி, குளித்தலை, கோவையிலிருந்து உடன்பிறப்புகளும், தாய்மார்களும் வந்து கூடிவிட்டார்கள். அவர்களையும், மற்ற பல பகுதிகளிலிருந்து வந்தவர்களையும் சந்தித்துவிட்டு, அவர்கள் வழங்கிய தேர்தல் நிதியையும் பெற்றுக் கொண்டு சென்னையில் முருகேசன் இல்லத் திருமண விழாவிற்குப் புறப்பட்டுச் சென்றேன்.

7ஆம் தேதி சென்னை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டு, மறுநாள் 8ஆம் தேதியன்று கோவை மாவட்டச் செயலாளர் சாமிநாதன் இல்லத்து மணவிழாவிலும், வழக்கறிஞர் சண்முகசுந்தரம் திருமண விழாவிலும் கலந்து கொள்வதற்காக

நீலகிரி துரித ரயில் வண்டி மூலமாகப் புறப்பட்டேன். விடியற்காலை நான்கரை மணிக்கு ஈரோடு ரயிலடியில் அந்த நேரத்தில் பல்லாயிரக்கணக்கான உடன்பிறப்புகள் என்னை அன்போடு வரவேற்றனர்.

வெள்ளாங்கோவிலில் வழக்கறிஞர் சண்முக சுந்தரத்திற்கும் கனகாம்பரத்திற்கும் நடைபெற்ற மணவிழாவில் தலைமையேற்று மணவிழாவினை நடத்தி வைத்தேன். மணவிழாவிலே கூட நான் பேசக்கூடாது என்று காவல் துறையினர் குறுக்கிட்டு ஒலிபெருக்கிக்கான உரிமம் வழங்கிடவில்லை; ஆகவே ஒலிபெருக்கி பயன்படுத்தக் கூடாது எனக் கூறி அதை எடுத்துச் சென்றுவிட்டனர். எனவே, வேறு வழியின்றி அந்தப் பெருங்கூட்டத்தை ஓரளவு சமாளித்திட, மெகபோன் ஒன்றைக் கொண்டு வரச் சொல்லி, அதை தோளிலே மாட்டிக் கொண்டு, அந்த மணவிழாவிலே உரையாற்றினேன்.

அடுத்து புஞ்சை புளியம்பட்டியில் நடைபெற்ற சாமிநாதன் இல்லத் திருமணத்திலும், ஈரோட்டில் நடைபெற்ற அர்ச்சுனன் இல்லத் திருமணத்திலும் கலந்து கொண்டேன். ,(சாமிநாதன் அப்பொழுது சிறையில் இருந்தார்). அன்று ஒருநாள் நிகழ்ச்சியில் மட்டும், கொங்கு மண்டலத்தின் ஒரு பகுதி மட்டும் இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் விசாரணைக் கமிஷன் செலவு நிதியை அளித்தது. பொதுக்கூட்டங்களில் அரசியல் கருத்துக்கள் வெளியிட இயலாமல், பொதுக்கூட்ட அனுமதிகள் மறுக்கப்பட்டபோதிலும், சட்டப்படி, மணவிழாக்களுக்கு அனுமதி மறுக்க முடியாத சூழ்நிலையில் - அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வீட்டிலே கடைப்பிடிக்க வேண்டிய ஜனநாயகம் குறித்துப் பேசி, நாட்டிலே கெட்டுவிட்ட ஜனநாயகத்தைக் கோடிட்டுக்காட்ட முனைந்து, பெரும்பாலும் மணவிழாக்களை நமது கழக மாநாடுகளாகவே ஆக்கிக் கொண்டேன் என்று சொல்லலாம்! ஆனால் என்னை அழைத்து மணவிழாவை நடத்தியவர்கள் பலர், மறுநாளே மிசா சட்டத்தில் கைதாக வேண்டியிருந்தது. அதற்கும் அஞ்சாத சிங்கங்கள் இந்த இயக்கத்தில் இருந்ததால்தான் அடக்குமுறைகளால் அழித்திட இயலாத எஃகு அரணாக இருக்கிறது இந்த இலட்சியப் பாசறை!

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

26-7-2002

2797. பிறந்த நாளில் உள்ளத்தில் பதிந்த ஊமைக்காயங்கள்!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு (13)

(நேற்றைய தொடர்ச்சி)

சென்னை திரும்பிய மறுநாளே கர்நாடகத் தலைநகரான பெங்களூரில் நடைபெறவிருந்த சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சென்னையிலிருந்து புகைவண்டி மூலம் சென்றேன்.

நான் அங்கே கலந்துகொள்ளவிருந்த சிறப்புக் கூட்டம் பெங்களூர் நகர் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், இலக்கியத்தில் நாம் என்ற தலைப்பில் நான் பேசவேண்டுமென்றும் திராவிடமணி அன்று முதல்நாள் தொலைபேசி மூலமாகத் தெரிவித்திருந்தார். 12 ஆயிரம் ரூபாய் வரை நுழைவுக் கட்டண சீட்டுகள் வாயிலாக வசூலாகியிருப்பதாகவும், அதற்கு மேல் மண்டபத்தில் இடம் இல்லாத காரணத்தால் நுழைவுச் சீட்டுகள் விற்பனை நிறுத்தப்பட்டு விட்டதென்றும் தெரிவித்திருந்தார். ஆனால் நான் புகைவண்டி நிலையத்தில் கூடியிருந்த மக்கள் கடலிலே நீந்தி, காரிலே ஏறி அமர்ந்ததும், சிறப்புக் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டதென்றும், அதனால் டிக்கெட் வாங்கியவர்களும், கழகத்தினரும், பொது மக்களும் நான் தங்கியிருந்த இடத்திலேயே வந்து, என்னைக் கண்டு செல்வார்கள் என்றும் கூறினார். சிறப்புக் கூட்டத்திற்காக டிக்கெட் மூலம் 12 ஆயிரம் ரூபாய் வசூலாகியிருந்தது. அதிலே கூட்டச் செலவிற்கு இரண்டாயிரம் ரூபாய் போக மீதம் பத்தாயிரம் ரூபாயும், நான் தங்கியிருந்த விடுதியின் முன்னால் மாலை 4 மணி முதல் 7 மணி வரை மக்கள் கியூவரிசையில் நின்று 1 ரூபாய், 2 ரூபாய் என்று அளித்த வகையில் மட்டும் 6 ஆயிரம் ரூபாயும் வழக்கு நிதியாக வசூலாயிற்று. மூன்று மணி நேரம் நின்றுகொண்டே அந்த நிதியினைப் பெற்ற காரணத்தால் நான் களைத்துப் போய்

கியூ வரிசையை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டதால் தான் அது நிறுத்தப்பட்டது. வாங்கிக்கொண்டே யிருந்தால் அது எத்தனை மணி நேரம் ஆகியிருக்குமோ?

நான் தங்கியிருந்த இடம் பெங்களூர் மாதவ நகரிலே உள்ள ஓட்டல் ஹைலண்ட்ஸ் ஆகும். நான் பெரும்பாலும் பெங்களூர் செல்லும்போதெல்லாம் அங்குதான் தங்குவது வழக்கம். அங்கே தங்கி பல படங்களுக்கு நான் திரைக்கதை எழுதியிருக்கிறேன். அந்த ஓட்டல் உரிமையாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும், கர்நாடக மாநில பழைய காங்கிரஸ் கட்சிப் பொருளாளருமான ராமரெட்டி அவர்களாவார். மாலை 4 மணி முதல் அன்று என்னைக் காண வந்த கர்நாடக வாழ் தமிழ்மக்கள் ஆயிரமாயிரவர்களை அனுமதித்து, என்னைக் கண்டு செல்வதற்கு அந்த நெருக்கடி நேரத்திலும் உரிமை வழங்கினார். பொது மக்கள் வரிசையாக என்னைக் கண்டு செல்வதற்கு அந்த மாநில காவல் துறையினரும் அப்போது பெரிதும் ஒத்துழைத்தனர். அந்த அன்பான வரவேற்பில் இதயத்தைப் பறிகொடுத்துவிட்டு, சிறப்புக் கூட்டத்திலே பங்கு பெறாமலேயே சென்னைக்குத் திரும்பினேன்.

அடுத்து 17.6.76 அன்று சிதம்பரத்தில் நான் கலந்து கொண்ட திருமணத்தைப் பற்றி குறிப்பிடாமல் விட முடியாது. சிதம்பரம் வேணு அல்லது ஜெயங்கொண்டம் வேணு என்றால் கழகத்தில் அனைவரும் அறிவார்கள். அண்ணா காலத்தில் அவர் ஆணைக் கிணங்க அறப்போரில் குதித்துப் பலமுறை என்னுடன் சிறை புகுந்தவர். அவருடைய மகன் திருமணத்திலே கலந்து கொள்ளத்தான் சிதம்பரம் சென்றேன். காலை 5 மணிக்கு சென்னையிலே புறப்பட்டு பத்து மணி அளவில் சிதம்பரத்தில் மணவிழா நடைபெறும் மண்டபத்திற்குச் சென்றடைந்தோம். காரில் இருந்து நான் இறங்கியதுதான் தெரியும். திருமணத்திற்கென அமைக்கப்பட்ட பந்தலை எப்படி நான் கடந்தேன்? மண்டபத்துப் படிக்கட்டுகளில் எவ்வாறு நான் ஏறினேன்? மணவிழா மேடையை அடைந்தது எப்படி? இதற்கெல்லாம் என்னால் விளக்கமளிக்க முடியாது. ஆலையிட்ட கரும்பானேன் என்று உவமை கூறலாம். அவ்வளவு நசுக்கப்பட்டேன். அப்படி நசுக்கியதற்காக கரும்பு கோபித்துக்கொண்டு கசப்புக் காட்டுவதில்லையே! என் நிலையும் அந்தக் கரும்பின் நிலைதான்.

என்னைப் பத்திரமாகவும், இடிபாடு இல்லாமலும் அழைத்துச் செல்ல தோள்தட்டி முன்வந்த சிலர் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. விளநகர் கணேசன் அந்தக் கூட்டத்தில் சிக்குண்டு மயக்க முற்றார் என்று பிறகு நான் கேள்விப்பட்டேன். மணவிழா முடிந்ததும், பயணிகள் விடுதியில் ஐயாயிரம் ரூபாய் அளவிற்கு விசாரணைக் கமிஷன் நிதியை வரிசையாக வந்து தோழர்களும், பொது மக்களும் அளித்தனர்.

இதற்கிடையே, தணிக்கையின் கெடுபிடியை எதிர்த்து நீதிமன்றத்திலே முரசொலியின் சார்பில் வழக்கு தொடரப்பட்டு, ஓர் இடைக்காலத் தடை பெறப்பட்டது. அந்த இடைக்காலத் தடையிருந்த ஒரு மாத காலத்தில் முரசொலியில் சுதந்திரமாக எழுத முடிந்தது. பிறகு அந்த வழக்கில் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால் அந்தச் சுதந்திரம் மீண்டும் பறிக்கப்பட்டது.

இவற்றுக்கிடையே ஜூன் மூன்றாம் நாள் எனது பிறந்த நாளையொட்டிய நிகழ்ச்சியொன்றை நான் நினைவுபடுத்தியாக வேண்டும். பிறந்த நாள் செய்தி என்ற நிலையில் முரசொலியில் ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் தணிக்கைக்கு அனுப்பப் பட்டது. என் அன்னையை விட அதிக அன்பை அண்ணா என் மீது பொழிந்தார் என்று அந்தக் கட்டுரையில் இருந்த வாசகத்தை வெட்டிவிட வேண்டுமென தணிக்கை அதிகாரி உத்தரவு பிறப்பித்தார். அதிகாரியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு காரணம் கேட்டேன். அவர் காரணம் கூற மறுத்துவிட்டார். கடிதம், தணிக்கைக்கு அனுப்பப்பட்டது. ஜூன் முதல் நாள் இரவு! ஜூன் 2-ந் தேதி காலையில் சென்னை அண்ணா சாலையிலிருந்து கிளம்பி, தணிக்கை அதிகாரி அலுவலகம் சென்று அங்கே உண்ணா நோன்பு மேற்கொள்ளப்படுமென்றும் - எழுத்து சுதந்திரம் பெற நடைபெறும் ஜனநாயகப் போர் இது என்றும் - என் கைப்படவே ஒரு தாளில் எழுதினேன். அப்படி எழுதப்பட்டதை ரகசியமாக பிளாக் செய்து கொண்டு வரச் சொன்னேன்.

அதனை முரசொலியில் அச்சியற்றினால் கூட மறு நாள் போராட்ட ரகசியம் வெளிப்பட்டுவிடக் கூடுமென்பதற்காக இரவோடு இரவாக நானும் என்னுடைய மகன்கள் அழகிரி, தமிழரசு ஆகியோரும் அந்த பிளாக்கை ஒவ்வொரு தாளாக ஒற்றி ஒற்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களாக ஆக்கினோம்.

முரசொலிக்காக நான் எழுதி, தணிக்கை அதிகாரியால் அனுமதிக்கப்படாத, அண்ணா அவர்களைப் பற்றிய அந்த வாசகங் களையும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் இணைத்திருந்தேன். தணிக்கையின் கொடுமையை விளக்குவதற்காக!

ஜூன் 2-ஆம் நாள்! அதற்கு மறுநாள்தான் எனது பிறந்த நாள்! காலை 10 மணி அளவில் என் வீட்டிலிருந்து காரில் புறப்பட்டேன். அப்போது கழகத்தில் உறுதி மாறாத பற்றுகொண்ட இளமுருகு பொற்செல்வி அவர்கள் வந்தார். அவர் செய்தி அறிந்து கொண்டு, உங்களைத் தனியாக அனுப்ப மாட்டேன்! எங்கு சென்றாலும் நானும் வருவேன் என்றுரைத்து என்னுடன் காரில் ஏறிக்கொண்டார். எனது காரைத் தொடர்ந்து முரசொலி செல்வமும், மு.க.அழகிரி, மு.க.தமிழரசு ஆகியோரும் வேறொரு காரில் வந்தனர். ஆயிரம் விளக்குப் பகுதியைத் தாண்டியதும் காரிலிருந்து இறங்கிவிட்டோம். நானே என் கையில் அறப்போர் விளக்கத் துண்டுப் பிரசுரங்களை எடுத்துக்கொண்டு அதனை அண்ணா சாலையில் செல்வோர் அனைவரிடமும் விநியோகிக்கத் தொடங்கினேன். மக்கள் ஆவலுடன், வியப்புடன் என்னைப் பின் தொடர்ந்தனர். போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய்விட்டது. அப்படியே நடந்து கொண்டே, அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலையின் அடி பீடத்துக்கு வந்து சேர்ந்தேன். கழகக் காளை ஜெகதீசன் உட்பட நூற்றுக்கணக்கான தொண்டர்கள் எங்கிருந்தோ வந்து சேர்ந்து விட்டனர்.

சர்வாதிகாரம் என்று முழங்கினேன்! இளமுருகு அவர்களும் மற்றவர்களும் வீழ்க! என்று விண்முட்ட முழங்கினார்கள்! ஜனநாயகம் என்று ஒலித்தேன்! வாழ்க என இடியொலி எழுப்பினார்கள்! ஜனநாயகக் காவலர் அண்ணாவின் சிலை முன்னால் ஜனநாயகம் காத்திடும் போராட்டம்! என் கையில் கழகக் கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் போலீஸ் பட்டாளம் வந்தது. அதிகாரிகள் என்னை அங்கிருந்து அகன்றிடுமாறு வேண்டினர்! பிறகு கட்டளையிட்டனர்! முடியாது! இங்கிருந்து ஊர்வலமாக தணிக்கை அதிகாரியின் அலுவலகம் சென்று உண்ணா நோன்பு மேற்கொள்ளப் போகிறேன் என்று அறிவித்தேன். அதன் பிறகு நானும், இளமுருகு பொற்செல்வியும், கழகக் கண்மணிகள் பத்து பேரும் கைது செய்யப்பட்டு திருவல்லிக்கேணி காவல்

நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டோம். சில நிமிடங்களில் முரசொலி செல்வம், மு.க.அழகிரி, மு.க.தமிழரசு ஆகியோரையும் கைது செய்து கொண்டு வந்தனர். காவல் நிலையத்தைச் சுற்றி பெரும் கூட்டம் கூடி விடவே அந்தக் கூட்டத்தை போலீசார் துரத்தும் பணியில் ஈடுபட்டனர்.

பெரிய போலீஸ் அதிகாரியொருவர், திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் என்னை வந்து சந்தித்தார். நீங்கள் விடுதலை செய்யப்படுகிறீர்கள் என்றார். ஆம், என்னை மட்டும் விடுதலை செய்வதாகச் சொன்னார். வேண்டுமானால் செல்வம், அழகிரி, தமிழரசு ஆகியோரையும் விடுவிக்கிறோம் என்றார். எங்களை விடுவித்துவிட்டு இளமுருகு பொற்செல்வி மற்றும் கழகக் கண்மணிகளை சிறையிலே பூட்டுவார்களாம். அதற்கு நான் ஒப்புக் கொள்ள வேண்டுமாம். முடியாது! என்னையும், என் மருமகன் செல்வம், மகன்களை மட்டும் விடுவித்தால் நாங்கள் அண்ணாசாலையில் தொடர்ந்து போராட்டம் நடத்துவோம் என்று உறுதியுடன் தெரிவித்தேன். எங்களைத் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் வைத்து விட்டு கவர்னர் மாளிகைக்குச் சென்ற அதிகாரி பிற்பகல் இரண்டு மணி அளவில் திரும்பி வந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் நாங்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார். சென்னைச் சிறையில் மிசா கைதிகளாக அடைபட்டிருந்த கழகக் கண்மணிகளுடன் இருந்து பிறந்தநாளைக் கொண்டாடலாம் எனக் கருதியிருந்த எனக்கு ஏமாற்றம்தான்!

மறுநாள் காலை ஜூன் மூன்றாம் நாள்! வழக்கம்போல் உடன்பிறப்புகள் திரண்டு நின்றார்கள், வீட்டு வாசலில்! அவர்கள் அணிவித்த மாலைகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் போதே வேதனை தரும் செய்திகள் என் செவிகளில் விழுந்தன. வீட்டைச் சுற்றி நாலா திக்கிலும் போலீசார் நின்று கொண்டு பிறந்த நாள் வாழ்த்துக்கூற வருகிறவர்களை தடியடிப் பிரயோகம் செய்து கலைக்கிறார்கள் என்பதுதான் அந்தச் செய்தி!

ஒருவர் பின் ஒருவராகப் பத்துப் பதினைந்து பேர் தலையிலும், உடையிலும் ரத்தம் ஒழுகிட, கையில் மாலைகளுடன் என் முன்னால் வந்து நின்று வாழ்த்து முழக்கங்களை ஆவேசமாக ஒலித்தனர். அவர்கள் எல்லாம் போலீசாரின் தடியடிப் பிரயோகத்திற்கு ஆட்பட்டுத் தப்பித்து எப்படியோ வீட்டுக்கு

வந்து விட்டார்கள். அந்தக் காட்சியைக் காணக் காண என் கண்கள் தணற்கட்டைகளாயின. இசைத்தட்டுகள் ஒலிபரப்புவதற்காக இருந்த மைக்செட்டை அருகே கொண்டு வரச்சொன்னேன். என்னைச் சுற்றியிருந்த ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களிடையே பேசினேன்.

பிறந்த நாளையொட்டி என்னைப் பார்க்க வருகிறவர்களைக் கூடத் துடிக்கத் துடிக்க அடித்து விரட்டுகிறார்கள் போலீசார்! இந்தக் கொடுமைக்கு மத்தியில் எனக்குப் பிறந்த நாள் ஒரு கேடா? தேவையில்லை! வேண்டாம்! இப்போதே இங்குள்ள ஆயிரம் பேருடன் ஊர்வலமாகக் கோட்டை நோக்கி அணி வகுக்கிறேன். ஆனது ஆகட்டும், ஊர்வலம் வரும்! எங்களைச் சுட்டுக் கொல்ல, போலீஸ் தயாராகட்டும்!.

என்று உணர்ச்சியுரை ஆற்றி விட்டுப் புறப்பட்டேன், சூழ்ந்திருந்தோரும் என்னைத் தொடர்ந்தனர். அதற்குள் ஒரு போலீஸ் அதிகாரி ஜீப் ஒன்றில் வேகமாக என்னை நோக்கி வந்தார். இறங்கியவர் என்னைப் பார்த்து தயவு செய்து ஊர்வலத்தை நிறுத்துங்கள்! உங்கள் பிறந்த நாள் விழாவுக்கு வருகிற யாரையும் இனி போலீசார் தடுக்க மாட்டார்கள் என்று உறுதி அளித்தார். அதற்குப் பிறகு எங்கள் போராட்டம் கைவிடப்பட்டது. மாலை வரையில் உடன்பிறப்புகள் தங்கு தடையின்றி வந்து பிறந்த நாள் வாழ்த்துக் கூறிவிட்டு, கழக நிதியும் அளித்துச் சென்றனர் என்றாலும்கூட, கழகக் கண்மணிகளுக்கும் சரி! எனக்கும் சரி! உள்ளத்தில் வடுக்களாகப் பதிந்துவிட்ட அந்த நாளின் ஊமைக்காயங்களின் வலி குறைய நெடுங்காலம் ஆயிற்று.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

27-7-2002

2798. எதேச்சாதிகார இருள்விலக எட்டிப்பார்த்த வைகறை!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு! (14)

(நேற்றைய தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் மண்டபங்களில் பேசுவதற்குக் கூட விதிக்கப்பட்டிருந்த தடை முதன்முதலாக 1976-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி சென்னை யோகலட்சுமி திருமண மண்டபத்தில் என்.வி.என். அவர்களின் படத்திறப்பு விழாவின் போதுதான் தளர்த்தப்பட்டது. ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு பொதுமேடையில் அங்குதான் நான் பேசினேன். கூட்டம் நடைபெறும் அன்று காலையிலேதான் ஒரு சிறிய சுவரொட்டி அந்த நிகழ்ச்சி குறித்து விளம்பரம் செய்யும் வகையில் சென்னையில் ஒட்டப்பட்டிருந்தது. ஆனால் அன்று மாலை அந்தப் பெரிய சாலை முழுவதும் கடற்கரையிலே நடைபெறும் கூட்டத்திற்கு செல்வதைப்போல இருபக்கங்களிலிருந்தும் சாரை சாரையாக மக்கள் வெள்ளம்! அந்த மண்டபம் நிரம்பி சாலையில் இரு பக்கத்திலும் மக்கள் அமர்ந்திருந்தனர். மழையையே காணாத மக்கள் பல நாட்களுக்குப் பிறகு பொழியும் மழையில் இறங்கி அங்குமிங்கும் ஓடி நனைவதைப் போல, அன்றைய தினம் அந்தக் கூட்டத்திற்கு மக்கள் வந்திருந்தனர். அந்தக் கூட்டத்திற்கு சென்னை மாவட்டத் துணைச் செயலாளராக இருந்த இரா.மு.மனோகரன் தலைமை தாங்கி சாதிக்பாட்சா, ராஜாராம், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, ஆர்.ஆர். முனுசாமி, சற்குணம், திருப்பூர் துரைசாமி, இரா. சாம்பசிவம் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக நான் பேச எழுந்து அன்பார்ந்த என்று ஆரம்பித்ததுதான் தாமதம், எழுந்த கையொலி அடங்க ஐந்து நிமிடத்திற்கு மேல் ஆயிற்று. அந்த அளவிற்கு சென்னையிலே இருந்த கழக உடன்பிறப்புகள் உணர்ச்சிப் பெருக்கோடு அங்குக் கூடியிருந்தனர்.

ஆகஸ்ட் திங்கள் 29-ஆம் நாள் தென்னாற்காடு, தஞ்சை மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னையிலிருந்து காரிலே புறப்பட்ட எனக்கு புதுவை மாநில எல்லையிலும், கோரிமேடு, கடலூர், பு.முட்லூர், பரங்கிப்பேட்டை, ஆதிராநல்லூர், தம்பிக்குநல்லான்பட்டிணம், புவனகிரி, வயலூர், சிதம்பரம், கீழ்மூங்கிலடி, கி.முட்லூர், கீழ் அனுவம்பட்டு, கிள்ளை, தில்லைவிடங்கன், கீழ்ச் சாவடி, கடவாச்சேரி, வேளூக்குடி, புத்தூர், சேந்தங்குடி ஆகிய வழியிலே உள்ள ஊர்களில் எல்லாம் வரவேற்பளித்தார்கள்.

கிள்ளையிலே ஒன்பது இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்துவிட்டு, சீர்காழி சிறப்புக் கூட்டத்திற்கு 1.30 மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். அந்தச் சிறப்புக் கூட்டத்தில், விளநகர் கணேசன், தம்பி தேவேந்திரன், சுப்ரவேலு ஆகியோர் பேசிய பிறகு நான் பேசினேன். சீர்காழியில் உள்ள நண்பர் குமாரசாமி வீட்டில் சாப்பிட்டேன். எனக்கு அன்று உணவு அளித்த குற்றத்திற்காக, நான் சென்னை திரும்புவதற்குள் அவர் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். ஆம்! அன்றைய ஆட்சியில் எனக்கு உணவு அளிப்பதுகூட குற்றமாகக் கருதப்பட்டது. மறுநாள் பூம்புகார், கும்பகோணம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களில் நடைபெற்ற சிறப்புக் கூட்டங்களில் கலந்து கொண்டு விசாரணைக் கமிஷன் செலவு நிதியினைப் பெற்றேன்.

என்னைப் போலவே முரசொலியில் எனது எழுத்துகளும் கழக உடன்பிறப்புகளோடு தொடர்பு கொண்டு உலா வந்தன. சர்க்காரியா கமிஷன் விசாரணையும் சென்னையில் மிகுந்த விளம்பரத்தோடு நடத்தப்பட்டது. ஒருநாள் கோபாலபுரத்து வீட்டிலிருந்து வெளியே கிளம்புகிறேன். வருமான வரித்துறையினர் கூட்டமாக வந்தனர். முதலமைச்சரான பிறகு வாங்கிய வீடுதானே இது - இதனை மதிப்பீடு செய்ய வேண்டுமென்றனர். 1956-ஆம் ஆண்டு வாங்கிய வீடய்யா இது! என்மீது புகார் கொடுத்த நண்பர் எம்.ஜி.ஆருக்கு இதுகூடவா தெரியாது என்று கேலியாகக் கேட்டேன். அது என்னவோ சார்! வீட்டை அளந்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்றனர். தாராளமாகச் செய்துகொள்ளுங்கள் என்று கூறி விட்டு, உள்ளேயிருந்த என் மனைவி தயாளுவைக் கூப்பிட்டு -இவர்கள் வீட்டை அளக்கப் போகிறார்களாம் - மதிப்பீடு செய்யப் போகிறார்களாம். நீயும், பிள்ளைகளும் உடனிருந்து பார்த்துக்

கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு முரசொலி அலுவலகத்திற்குச் சென்றுவிட்டேன்.

முரசொலியில் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். பத்து மணியிருக்கும் காலையில்! திமு திமு எனப் பத்துப் பதினைந்து அதிகாரிகள் ஏதோ அதிரடிப்படையினர் போல அலுவலகத்தில் நுழைந்தனர். என் அறைக்குள்ளும் நுழைந்து எனது மேசையைச் சுற்றி நின்று கொண்டனர். வருமான வரி அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் சோதனை போட வந்திருக்கிறார்கள் எனப் புரிந்துவிட்டது. சார்! இந்த ஆபீசை ரைடு செய்யப்போகிறோம் என்றனர்.

நான் எழுதிக் கொண்டிருப்பதால் உங்களுக்கு ஒன்றும் தொந்திரவு இருக்காதே! என்று அவர்களைப் பார்த்துக் கேட்டுவிட்டு, நான் முரசொலிக்கு எழுதுவதில் கவனம் செலுத்தினேன். எனக்கு எதிரிலேயே தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. என்னைச் சுற்றி நாற்காலிகளில் சிலர் உட்கார்ந்து கொண்டனர். சிலர் அறையிலிருந்த பொருள்களை உருட்டினர். சிலர், என் மேசையைத் திறந்து அதிலிருந்த தாள்களைப் புரட்டினர். மதியம் ஒரு மணி அளவில் எனது எழுத்து வேலைகளை முடித்துவிட்டு, சோதனையிட்டுக் கொண்டிருந்த அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு நான் புறப்பட்டேன். அன்றிரவு இரண்டு மணி வரையில் முரசொலி அலுவலகம் சோதனையிடப்பட்டு - சின்னாபின்னாமாக்கப்பட்டது.

பிற்பகல் இரண்டு மணி அளவில் அண்ணாமலை புரத்திலுள்ள என் வீட்டுக்கு வந்தேன். வீட்டுக்குள் நுழையும்போது அதிகாரிகள் பட்டாளம் வீட்டை ஆக்ரமித்துக்கொண்டிருந்தது. வருமான வரி அதிகாரிகள், அவர்களுடன் போலீஸ் பட்டாளம்! ராஜி என்று எனது மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தேன். ராஜியைக் காணவில்லை. அந்த அதிகாரிகள் ஏற்கனவே எனக்குத் தெரிந்த அதிகாரிகள்தான். அவர்கள் என்னைப் பார்த்து நீங்கள் யார் சார்? உங்கள் பெயர் என்ன சார்? என்று கேட்டார்களே! அந்தக் கேள்வியை இன்றைக்கு நினைத்தாலும் நெஞ்சு பகீர் என்கிறது! என்செய்வது! இப்படியெல்லாம் என்னை அவமானப்படுத்த வேண்டுமென்று திட்டம்!

அந்த அதிகாரிகளுக்குப் பதில் கூறாமலே மாடிக்குப் போனேன். அங்கே ராஜியை சில பெண் அதிகாரிகள்

சோதித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆடைக்குள் ஏதாவது ஒளித்து வைத்திருக்கக் கூடுமென்று அப்படி சோதிக்கிறார்களாம். என்னைப் பார்த்ததும் ராஜியும், என் மகள் கனிமொழியும் கதறியழுதவாறு மயக்கமுற்றனர். அதன்பிறகும் இரவு எட்டு மணிவரையிலே ரைடு முடியவில்லை.

சே! சில கொள்கைகளை அழுத்தமாகச் சொன்னதற்காக, சர்வாதிகாரத்தை நேர் நின்று எதிர்த்தமைக்காக - எப்படிப்பட்ட பழிவாங்கும் குணத்தினர் ஒன்று கூடிக்கொண்டு என்னையும், என் குடும்பத்தையும், என் கட்சியின் முன்னணித் தோழர்களையும் எவ்வளவு கேவலப்படுத்தினர் என்பதை இப்போது நினைத்தாலும் இதயம் எரிமலையாகிறது! ஆனால் அந்தச் சோதனைகள், வேதனைகளிலும் மிரண்டு போகாமல் தலை நிமிர்ந்து நின்றோமே என்ற பெருமிதமும் ஏற்படத்தான் செய்கிறது.

1976-ஆம் ஆண்டு மையத்தில் நெருக்கடி நிலையின் கடுமை சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது என்றே கூறலாம். 1975ஆம் ஆண்டு எமர்ஜென்சி பிரகடனத்தின்போது கைது செய்யப்பட்ட வடபுலத்துத் தலைவர்கள் ஒவ்வொருவராக விடுதலை செய்யப்பட்டனர். நாடு தழுவிய அளவில் அப்படி மொத்தமாக அனைவரும் விடுதலை செய்யப்படவில்லை. தமிழ்நாட்டில் மிசாவில் கைதான அரசியல்வாதிகள் யாரும் 1976-ஆம் ஆண்டு இறுதிவரையில் விடுவிக்கப்படவில்லை.

அனைத்து நாடுகளில் இந்தியாவின் நெருக்கடி காலச் சர்வாதிகாரம் பற்றி விமர்சிக்கப்படுகிற நிலைமை பரவலாகப் பெருகிற்று. அந்த நிலை, பிரதமர் இந்திரா காந்தியின் மீது உலக மக்களின் வெறுப்பை அதிகரிப்பதாக இருந்தது. எனவே, மெல்ல மெல்ல எமர்ஜென்சிக் கொடுமையிலிருந்து நாட்டை விடுவிக்க இந்திரா காந்தி அவர்களே முன்வர வேண்டியதாயிற்று. மிசாக் கைதியாக அடைக்கப்பட்டிருந்த ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடைய உடல்நிலையும் சிறைவாசத்தால் மிகவும் கெட்டுப்போய் விட்டதாகச் செய்திகள் வந்தன. சிறைச்சாலைகள், போலீஸ் லாக்கப்கள், இங்கெல்லாம் அரசியல் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட - சொல்லவே நாக்கூசுகின்ற துன்பங்களையும், இழிவுகளையும் - பத்திரிகைகளில் வெளியிட முடியாவிட்டாலும் துண்டு அறிக்கைகளாக அச்சியற்றிப் பல்வேறு மொழிகளில்

நாடெங்கும் - ஏன்? உலகெங்கும் பரப்புகின்ற பணி தொடர்ந்து நடைபெற்றது! தமிழ்நாட்டில் அத்தகைய துண்டுப் பிரசுரங்களை அச்சியற்றித் தர அச்சகங்கள் தயங்கின! ஓடி ஒளிந்தன. ஆனால் அந்த நேரத்தில் கழகச் சார்பில் நெருக்கடி நிலைக்கு எதிராக வெளியிடப்பட்ட கருத்துகளை அச்சியற்றித் தரும் பணியை அருமை நண்பரும் தமிழ்ச் சங்கக் காப்பாளருமான க. திருநாவுக்கரசு அவர்கள் ஏற்றுக் கொண்டதை என்னால் மறக்க முடியாது!

இவ்வாறு எதற்கும் துணிந்தவர்கள் - இலட்சியத்திற்காக எதையும் இழக்கத் தயாராக இருப்பவர்கள் - அவர்களின் எண்ணிக்கை கூடுகிறதேயன்றிக் குறையவில்லை என்பதை உணர்ந்துதான் பிரதமர் இந்திரா அவர்கள், 1976 நவம்பர் திங்கள் கௌகாத்தியில் நடந்த காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசியபோது எதிர்க்கட்சிகளுடன் ஓரளவு சமரசத்திற்கு வருவது போல ஜாடை காட்டிப் பேசினார்.

எதிர்க் கட்சியினர் எங்களை குறை கூறக் கூடாது என நான் ஒருபோதும் கூறியதில்லை. அவர்கள் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொண்டு வளமான இந்தியாவை உருவாக்க ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் நடந்துகொள்கிறார்கள் என உணர்ந்தால் அவர்களுடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராக இருக்கும்.

இதுதான் பிரதமர் இந்திரா காந்தியின் கௌகாத்தி மாநாட்டுப் பேச்சு!

அம்மையார், கொஞ்சம் இறங்கி வருகிறார்கள் என்பதற்கான அறிகுறி!

பிரதமரின் கௌகாத்தி காங்கிரஸ் பேச்சினை யொட்டி, பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகுமேயானால், அப்போது எதிர்க்கட்சிகளுடன் விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் கழகத்தின் சார்பில் அப்போது சிந்திக்கப்பட்டது. தனித்தனி அபிப்பிராயங்கள் எழுவதால் பேச்சு வார்த்தைகளின் மூலம் ஏற்படக் கூடிய நல்விளைவுகளுக்கு தடங்கல் ஏற்பட்டு விடக் கூடாது என்பது கழகத்தின் எண்ணமாக இருந்தது.

அந்த அடிப்படையில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் முதலில் ஓர் இடத்தில் கூடிக் கலந்து விவாதித்து, பிரதமருடன் பேச்சு

வார்த்தை நடத்த எந்த அடிப்படையில் அணுகுவது என்பதில் ஒருமித்த கருத்துக்கு வருவதே சிறந்தது என்றும் கழகம் கருதியது.

இவைகளை மனதிற்கொண்டு, அனைத்திந்திய அளவில் உள்ள எதிர்க்கட்சிகளின் தலைவர்களை எல்லாம் கழகச் சார்பில் தொடர்புகொண்டு நான் பேசியதில் அந்த முயற்சிக்கான ஊக்கமும், உற்சாகமும் கிடைத்தது. எனவே, எல்லா தலைவர்களையும் கூட்டி கலந்து விவாதிக்க வேண்டுமென்று எண்ணிய நான் அதற்கான தொடர்புகளை மேற்கொண்டேன். சென்னையிலோ அல்லது வேறு பகுதியிலோ அந்தக் கூட்டத்தை வைத்துக் கொண்டால், பயண சிரமங்கள் இருக்குமென்பதால், டெல்லியிலேயே அந்த கலந்துரையாடல் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டு, 1976-ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் நாளன்று டெல்லியில் நண்பர் இரா.செழியன் (அப்போதைய நாடாளுமன்ற தி.மு.கழகக் குழுத் தலைவர்) இல்லத்தில் அந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் எந்தவொரு எதிர்க்கட்சிகளின் தனிப்பட்ட சிக்கல்கள், பிரச்சினைகளை முன்வைத்து நடைபெறப் போகின்ற கூட்டமல்ல என்பதும் முன்னதாகவே தெளிவாக்கப்பட்டது.

இந்தியாவின் வலிவும், வளமும் ஓங்கிடவும், காப்பாற்றப்படவும் எதிர்க்கட்சிகள் எப்படி ஒத்துழைக்கப் போகின்றன? என்று பிரதமர் அவர்கள் எழுப்பியுள்ள கேள்வியின் அடிப்படையிலே - பிரதமர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எத்தகைய ஒருமுகமான போக்கை வடித்தெடுப்பது என்பதே அந்தக் கூட்டத்தின் தலையாய நோக்கமாகும் என்றும் நான் முதலிலேயே நன்றாகத் தெளிவுபடுத்தினேன்.

பழைய காங்கிரஸ் கட்சி, பாரதீய லோக்தளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனசங்கம், சோஷலிஸ்ட் கட்சி, புரட்சி சோஷலிஸ்ட் கட்சி, அகாலி தளம் போன்ற கட்சிகளுக்கு நான் அழைப்பு அனுப்பியிருந்தேன்.

பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் அசோக் மேத்தா அவர்கள், மிகவும் மகிழ்ச்சி தெரிவித்து கடிதம் எழுதியிருந்ததோடு, அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதாகவும் தெரிவித்தார். அவரைப் போலவே பி.எல்.டி. கட்சியின் தலைவரான சரண்சிங் அவர்களும் கலந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்தார். சோஷலிஸ்ட் கட்சியின்

தலைவர் கோரே பம்பாயிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கூட்டத்தில் கலந்துகொள்வதாகத் தெரிவித்தார்.

டிசம்பர் 15ஆம் தேதி கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நானும், நண்பர்கள் ராஜாராமும், ஜி.லெட்சுமணனும் ரெயில் மூலமாகப் புறப்பட்டோம். சென்னை புகைவண்டி நிலையத்திற்கு ஏராளமானவர்கள் வந்திருந்து வழியனுப்பி வைத்தனர்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

28-7-2002

2799. சிங்கத்தின் இழப்பும் - சிறைக்கதவுகள் திறப்பும்!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு - (16)

(நேற்றைய தொடர்ச்சி)

சிட்டிபாபு இறந்தது குறித்து உண்மையான விவரங்களை எல்லாம்கூட தெளிவாக பத்திரிகைகளில் தர முடியாத அளவிற்கு தணிக்கைக் கொடுமை! கழகத் தொண்டர்கள் உணர்ச்சி வயப்பட்டு ஏதாவது செய்து விடுவார்களோ என்று சிட்டிபாபு மரணமடைந்த அன்று இரவு சென்னை நகரத்தில் கழகத் தோழர்கள் எல்லாம் போலீசாரால் வேட்டையாடப்பட்டனர்.

சிட்டிபாபுவின் மறைவையொட்டி நான் வெளியிட்ட இரங்கல் செய்தி இதோ...

"சிட்டி, நீ மறைந்துவிட்டாயா? அய்யோ!
என்னால் நம்ப முடியவில்லை!
கொள்கை முரசே! தியாக மறவனே!
கழகத்தின் தூணே! எங்கள் துணையே!
நீ போய் விட்டாயா?
அய்யகோ! இன்று இந்தக் காட்சியையா
நான் காண வேண்டும்? அந்தோ! நான்
யாருக்கப்பா ஆறுதல் சொல்வேன்! என்னால்
தாங்க முடியவில்லையே! நான் என்ன செய்வேன்!

காலை 8.45 மணி அளவில் பொது மருத்துவ மனையில் உயிர் துறந்த சிட்டிபாபுவின் உடலை எங்களிடம் 11.50 மணிக்குத்தான் தந்தனர். 12 மணிக்கு அவரது சடலத்தை அவர் வாழ்ந்த திருவல்லிக்கேணியில் உள்ள நாகப்பையர் தெருவில் உள்ள வீட்டிற்கு எடுத்து வந்தோம். சென்னை நகரமே அந்தத் தெருவில் திரண்டுவிட்டது. மறுநாள் காலையில் சிட்டிபாபுவின்

இறுதி ஊர்வலம் புறப்பட்டு கிருஷ்ணாம்பேட்டையில் அவரது சடலம் எரியூட்டப்பட்டது. அன்றைய முரசொலியில் மறையாத மாணிக்கப் பரிதி என்ற தலைப்பில் சிட்டியைப் பற்றி நான் கடிதம் எழுதியிருந்தேன்.

இவ்வாறு ஜனவரி 5ஆம் தேதி இறந்த சிட்டிபாபு மரணம் குறித்து பெப்ரவரி 20ஆம் தேதி அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில், சிட்டிபாபுவிற்கு நீரிழிவு, மாரடைப்பு, குடலிறக்கம், மலஜலம் கழிப்பதில் தடை ஆகிய வியாதிகள் உண்டு என்றும், 5.1.77 அன்று மத்திய மருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை வார்டில் மாரடைப்பு காரணமாக அவர் காலமானார் என்றும் தெரிவித்திருந்தார்கள்.

அரசின் அந்த அறிக்கையைக் குறிப்பிட்டு முரசொலி மாறன், அப்போது முரசொலி மூலம் எழுப்பிய கேள்விகள் வருமாறு :-

சிறைச்சாலையில் சிட்டிபாபு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டது உண்மையா? இல்லையா? அவர் மாரடைப்பால் முன்பே பாதிக்கப்பட்டவர் என்று அரசாங்க அறிக்கை கூறுகிறது. அத்தகைய நோயாளி கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்படக் காரணம் என்ன? அத்தகைய நோயாளி மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டது ஏன்? பொது மருத்துவமனைக்கு வெளி நோயாளியாக சிகிச்சை பெற அனுப்பப்பட வேண்டுமென்று அவர் கேட்டதுண்டா? இல்லையா? எப்போது அவரை முதல் தடவையாக வெளி நோயாளியாகச் சிகிச்சை பெற பொது மருத்துவமனைக்கு அனுப்பினார்கள்? அதற்கு இடைப்பட்ட நாட்கள் எத்தனை? உடனடியாக அவர் பொது மருத்துவமனைக்கு அனுப்பப்படாமல் காலங் கடந்து அனுப்பியதன் காரணம் என்ன?

இதுபோன்ற முரசொலி மாறனின் கேள்விகளுக்கு எந்தப் பதிலும் அரசு தரப்பிலிருந்து தரப்படவில்லை.

சிட்டிபாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன் சிறையில் பிணமாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் மட்டுமா? இந்தியா முழுமையும் சிறைச்சாலைகளில் எமர்ஜென்சிக் கொடுமையால் எத்தனை சித்திரவதைகள்!

சிறைக்கு வெளியிலே கூட தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் தாயார் தலையிலே சாராயப் பானையை சுமக்கச்சொல்லி கொடுமைப்படுத்தியதும், மேலும் வீரபாண்டி ஆறுமுகத்தை 'மிசா'

கைதியாக சிறையில் தள்ளியதும், 'மிசா'வில் கைது செய்யப்பட்ட திராவிடர் கழகச் செயல்வீரர் வழக்கறிஞர் துரைசாமியை அவரது திருமணத்தையொட்டி இழிவுபடுத்த முனைந்ததும் - நெருக்கடி நிலை யெனும் நெருப்பாற்றின் கொந்தளிப்புகளேயாகும்.

சில அரசியல் கைதிகளை சிறைக் கோட்டத்தில் நாள் முழுவதும் பனிக்கட்டியில் படுக்க வைத்தனர். சிநேகலதா என்ற பெண்மணிக்கு விளைவிக்கப்பட்ட கொடுமைகளைச் சொல்லவே குலை நடுங்குகிறது. அரியானா மாநிலத்தில் ஒரு போலீஸ் லாக்அப்பில் எமர்ஜன்சியை எதிர்த்த குற்றத்திற்காக ஒரு அண்ணனையும், அவன் தங்கையையும் நிர்வாணமாக்கி, போலீசார் எதிரிலேயே அவர்களை உடலுறவு கொள்ளச் செய்யுமாறு வற்புறுத்திக் கட்டாயப்படுத்தி - அவர்களது மர்ம உறுப்புக்களில் மிளகாய்ப் பொடியையும் தூவினார்கள். இப்படி நாச நர்த்தனமாடிய நெருக்கடி நிலையின் வெறிப்பற்களின் தினவு, சற்று அடங்கியதற்கு அடையாளமாகத்தான் 1977 ஜனவரி 18ஆம் நாள் வானொலியில் உரையாற்றிய பிரதமர் இந்திரா காந்தி, நெருக்கடி நிலை தளர்த்தப் பட்டு மார்ச் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார்.

பிரதமரின் அறிவிப்பினைத் தொடர்ந்து, மத்திய உள்துறை அமைச்சகத்திலிருந்து மாநில அரசுகளுக்கு பின்வருமாறு ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

1. உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை விரைவுபடுத்த வேண்டும். அத்துடன் இந்திய பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின்கீழ் போடப்பட்டுள்ள வழக்குகளை மறுஆய்வு செய்ய வேண்டும்.

2. சகஜமான அரசியல் நடவடிக்கைகளுக்காகவும், தேர்தல் காரியங்களுக்காகவும் பொதுக் கூட்டங் களைத் தாராளமாக அனுமதிக்க வேண்டும்.

3. நபர்கள், வாகனங்கள் நடமாட்டம் மீதான கட்டுப்பாடு, பாதகமானச் செயல்களுக்குத் தண்டனை விதிப்பது, பொதுக் கூட்டங்கள் மீதான கட்டுப்பாடு ஆகிய விஷயங்களின்கீழ்

மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களை வாபஸ் பெறுவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதைத் தவிர மத்திய தகவல் ஒலிபரப்பு மந்திரியாக இருந்த வி.சி.சுக்லா விடுத்த அறிவிப்பில், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மக்களிடம் தமது கருத்துகளை எடுத்துக் கூறுவதற்குத் தேவையான எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் அனுமதிப்பதே அரசின் நோக்கம் என்று பிரதமர் தனது வானொலி உரையில் அறிவித்தார். பத்திரிகைகள் அதற்கான சாதனங்களில் ஒன்று. பிரதமர் கூறிய அந்த உறுதிமொழிக்கு இணங்க, செய்தித் தணிக்கை உத்தரவை அமல்படுத்துவதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது என்று தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி அல்லாத பெரிய எதிர்க் கட்சிகளான பழைய காங்கிரஸ், பாரதீய லோக்தளம், ஜனசங்கம், சோஷலிஸ்ட் கட்சி ஆகிய நான்கு கட்சிகளும் ஜனதா கட்சி என்ற பொதுப் பெயரில் போட்டியிடுவதாக முடிவு செய்திருப்பதாக மொரார்ஜி தேசாய் அறிவித்தார்.

மத்திய அரசின் இத்தகைய அறிவிப்புகளுக்குப் பிறகும் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவில்லை. எனவே, நானும், ராஜாராமும் கவர்னர் சுகாதியா அவர்களைச் சந்தித்து, மத்திய அரசு உத்தரவிற்குப் பிறகும் தமிழகத்தில் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை என்பதை அறிவித்தோம்.

அதன் பிறகு ஜனவரி 23ஆம் நாள் தொடங்கி, படிப்படியாக பிப்ரவரி 2ஆம் நாள் முடிய கழகத்தினர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட கழகக் கண்மணிகள் அனைவரும் சென்னைக்கு வந்து அண்ணாவின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, என்னையும் நேரில் கண்டனர்.

அவர்கள் விடுதலை குறித்து இருப்புக் கூட்டின் கதவு திறந்தது சிறுத்தையே வெளியில் வா! என்ற தலைப்பில் நான் எழுதிய உடன் பிறப்பு மடல் இதோ :

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா! எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப் புலி எனச் செயல் செய்யப் புறப்படு விரைவில்!

எனப் பாவேந்தரின் கவிதைகளாலேயே, கழகத்தின் கண்மணியே! உன்னை நான் இருகையேந்தி அழைத்து மகிழ்கிறேன்.

ஓராண்டு காலம் உன்னையும், என்னையும் மறைத்து நின்ற வானுயர்ந்த சுவர்களை விட்டு வெளியில் வந்துவிட்டாய்!

உன்னுடன் உள்ளே அடைபட்டவர்களில் இருவர் உறங்கிடும் கண்களுடன் வெளியே வந்தனர். ஆம். என்றுமே விழித்துப் பார்க்க இயலாத விழிகளுடன், காற்றை உள்ளே இழுத்து வெளியே விட முடியாத சுவாச கோசங்களுடன் வெளியே வந்து, குளிர்ந்து போன தங்கள் உடல்களுக்குத் தணலாடையைப் போர்த்திக்கொண்டு மண்ணோடு மண்ணாக மாறினர். இல்லை, இல்லை, எங்கள் கண்ணோடு ஒளியாகக் கலந்தனர். மூச்சோடு காற்றாக ஒன்றினர். இதய அசைவுகளின் துடிப்பாக இணைந்தனர்.

அந்தக் குமுறலை அடக்கிக் கொண்டு, தமிழகத்தின் பல்வேறு சிறைக் கொட்டடிகளில் பூட்டப்பட்டுக் கிடந்த உனக்கு விடுதலையே கிடைக்காது என்றுதான் நினைத்து, நினைத்து என் உள்ளம் களைத்துப் போயிற்று. உடலும் இளைத்துப் போயிற்று. எத்தனை ஆண்டுகளாயினும், கழகத்தின் பத்தரை மாற்றுப் பசும் பொன்னாகத்தான் இருப்பேன் என்று சூளுரைத்து, ஓராண்டு காலம் வரலாறு காணாத அடக்கு முறையைச் சிறைக் கோட்டத்தில் தாங்கிக் கொண்ட என் சிங்கம் நிகர் உடன்பிறப்பே, உன் தியாகத் திருவடிகட்கு என் சிரம் தாழ்த்துகிறேன்.

நீ, மல்லிகை, முல்லை, ரோஜா மலர் மாலைகளைக் கொண்டு வந்து என் கழுத்தில் சூட்டுகிறாய்!

உனக்கு மாலை சூட்டிய மங்கை நல்லாள், ஓராண்டு காலம் உன்னைப் பிரிந்து அனுபவித்த வேதனையும், அந்த மயிலைப் பிரிந்து நீ அனுபவித்த கொடுமையும் எண்ணிப் பார்த்திடவே நெஞ்சுக்கு பூகம்ப அதிர்ச்சியைத் தரும் நிகழ்ச்சியாக அன்றோ இருந்தது! இருக்கிறது!

உன்னைப் பிரிந்து உன் அன்னை வடித்த கண்ணீர் - உன் அருமை மழலைகளின் வாடி வதங்கிய முகங்கள் - உன்னை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றவளின் உள்ளத்து உலைக்களம்.

உடன்பிறப்பே, இந்த ஓராண்டு காலம் அவைகளுக்கு ஆறுதல் கூறமுடியாமல் வெளியில் இருந்து நாங்கள் பட்ட அவதி, இவற்றையெல்லாம் மாற்றிட, இருள் நீங்க எழுந்த கதிர்போல் உன் விடுதலைச் செய்தி கிட்டியது.

இருப்புக் கூட்டின் கதவு திறந்ததும், இல்லம் நோக்கி விரைந்திடவில்லை உன் கால்கள். சென்னை நோக்கிப் பறந்திட பாச இறக்கைகள் உனக்குத் திடீரென முளைத்துவிட்டன.

அடடா! நீ வந்த நேரம் - செயற்குழு என்றும் - ஆய்வுக் குழு என்றும் ஆயிரம் வேலைகள் - ஆரத் தழுவிட வேண்டும் - ஆண்டொன்றாயிற்றே இடை வெளி ஏற்பட்டு! அந்தக் காலத்து கதைகளை எல்லாம் பேசிட வேண்டுமென்று துடிக்கிறேன் என்றாலும், வேலைகள் குறுக்கிடுகின்றன. ஓடிவந்த உன்னிடம் ஒரு வருடச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள முடியவில்லையென்றாலும், ஒருவரையொருவர் இமைகொட்டாமல் பார்த்துக் கொள்கிறோமே, அதிலே எத்தனை நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி விடுகிறோம் - எத்தனை சரித்திரங்களைப் படித்து விடுகிறோம் - பார்த்தாயா?

சிலர் உன்னை அணுகி, சாகிற வரையில் சிறை தான் என்றனர். என் சாம்பல் தமிழ் மணந்து வேகும் என்றாய். கட்சியைத் துறந்திடு! கதவு திறந்திடும்! என்றனர். கடையைக் கட்டிடு! நடையைத் தொடங்கிடு! என்று நறுக்கென பதில் அளித்தாய். தலைமையைத் தாக்கி ஒரு அறிக்கை அளித்திடு! தளைகள் அறுபடும் தப்பிடலாம் என்றனர். அதற்கு எம்முடன் சில எட்டப்பர்கள் வந்துள்ளனர். அவர்களை அணுகிடுக! தலையே அறுபடினும் துரோகம் செய்யும் ரத்தம் இந்த ரத்தமல்ல! என்று நிமிர்ந்து நின்று விடையளித்தாய்.

வீரத்தின் திருவுருவே! மான மரபின் குலவிளக்கே! மாணிக்கத் தமிழே! மரகதச் சுடரே! முன்னூறு நாட்களுக்கு மேலாக நீ ஓய்வெடுத்துக் கொண்டிருந்து விட்டு, வெளியே வந்ததும் வராததுமாக நீ ஆற்றிட வேண்டிய பணி உன் எதிரே மலை போல் உயர்ந்து நிற்கிறது...

நிறைய இருக்கிறது பணி! நேரம் குறைவு!

நகர்ந்து செல்லும் ஒவ்வொரு மணித் துளியும் மிக முக்கியமானது!

காலம் பொன் போன்றது - கடமை கண் போன்றது.

புதிதாகப் புரிந்து கொள்ளவேண்டியவைகளா, இவைகள்? அல்லவே, அதனால் புறப்படு!

இந்தக் கடித வாயிலாகக் காராக்கிரகமிருந்து வெளிவந்த கழக அடலேறுகளை வரவேற்றேன். அந்த ஓராண்டு உச்சக் கட்டச் சோதனைகளுக்குப் பிறகும் கழகத்திற்கு வந்துற்ற சோதனைகள் ஓய்ந்திடவில்லை. 1977-க்குப் பிறகும் அவை தொடர்ந்தன. அவற்றைத் தனியொருவனாக நின்றல்ல! தன்னலம் கருதாத தியாகத் திருவிளக்குகளாம் தி.மு. கழகத்தின் உடன்பிறப்புகளின் உறுதி கொண்ட நெஞ்சத்தின் துணையினால் எதிர் கொண்டேன்.

(முற்றும்)

அனபுள்ள,

மு.க.

29-7-2002

2800. புதிய திருப்பம் கண்ட புதுடெல்லிக் கூட்டம்!

நெருக்கடி நிலையெனும் நெருப்பாறு! (15)

(நேற்றைய தொடர்ச்சி)

14ஆம் தேதியன்று காலையில் புதுடெல்லி போய்ச் சேர்ந்தேன். அன்று காலையில் டெல்லிக்கு அருகில் உள்ள சத்திரப்பூருக்குச் சென்று அகில இந்திய பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் அசோக் மேத்தா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். நண்பர் இரா.செழியனும் வந்திருந்தார்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் அவருடன் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு, பின்னர் அன்றைக்கு முதல் நாள்தான் சிறையிலிருந்து விடுதலையாகியிருந்த வாஜ்பய் அவர்களை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தேன். அவர் 15ஆம் தேதிய கூட்டத்தில் கலந்து கொள்வதாகத் தெரிவித்தார். டிசம்பர் 15ஆம் தேதியன்று காலை 10 மணிக்கு டெல்லியில் தி.மு.க. நாடாளுமன்றக் கட்சித் தலைவர் இரா.செழியன் அவர்கள் இல்லத்தில் இந்தியாவில் உள்ள முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களின் கலந்துரையாடல் கூட்டம் தொடங்கியது.

இந்தக் கூட்டத்தில் அகில இந்திய பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் அசோக்மேத்தா, திருமதி மொகிந்தர் கவுர் (அகில இந்திய பழைய காங்கிரஸ் கட்சியின் செயலாளர்), திக்விஜய் நாராயணன்சிங் எம்.பி., (பழைய காங்கிரஸ்), பிலுமோடி எம்.பி. (தலைவர், பாரதிய லோக் தளம்), எச்.எம்.படேல் எம்.பி., (பாரதீய லோக் தளம்), பிஜு பட்நாய்க் (துணைத் தலைவர், சோஷலிஸ்ட் கட்சி), சமர்குகா எம்.பி. (சோஷலிஸ்ட் கட்சி), சுரேந்திர மோகன் எம்.பி., வாஜ்பாய் எம்.பி., (தலைவர், ஜனசங்கம்), கிருஷ்ணகாந்த் எம்.பி., பேராசிரியர் ஷெர்சிங் எம்.பி., க.ராஜாராம் (தி.மு.க.) ஆகியோர் கலந்து கொண்டனர். மாநில கட்சியின் சார்பில் நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று அகில இந்திய கட்சிகளின்

தலைவர்கள் எல்லாம் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவர்களை எல்லாம் வரவேற்று நான் ஆற்றிய வரவேற்புரை இதோ :-

கட்சித் தலைவர்களே, நண்பர்களே,

எனது அழைப்பினை ஏற்று வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நோக்கத்தை நான் தங்களுக்கு விடுத்த அழைப்பு மடலிலேயே சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். கௌகத்தி மாநாட்டில் இந்தியப் பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையினிடையே எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பு எப்போது அமையும் என்பது குறித்து அறிவித்துள்ள கருத்து அனைவரும் அறிந்ததேயாகும்.

அதுகுறித்து எதிர்க்கட்சிகளின் நிலை என்ன என்பதை நாட்டு மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதும் இயல்பேயாகும். நாடு எதிர்நோக்கும் இயல்பானதும், சுமுகமானதுமான சூழ்நிலை விரைவில் உருவாகாதா? என்று நாட்டின் எதிர்கால நல்வாழ்விலே நாட்டமுள்ளவர்கள் கவனித்து வருகிறார்கள். எதிர்க்கட்சிகள் தங்களது போக்குகளை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும், இந்திய நாட்டின் வலிவையும், வளத்தையும் வளர்த்துப் பாதுகாப்பதில் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க முன்வர வேண்டு மென்றும் அப்போதுதான் பேச்சுவார்த்தைக்குப் பொருள் இருக்க முடியுமென்றும் பிரதமர் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தை தொடங்குவதென்றால், நெருக்கடி நிலையைத் திரும்பப் பெற வேண்டும். சில எதிர்க்கட்சிகளின் தரப்பிலிருந்து இப்படி ஒரு கருத்தும் எடுத்து வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள், இருதரப்பிலிருந்தும் எழுப்பப்பட்டு அவைகளை இருதரப்பாரும் நிறைவேற்ற உடன்பட்ட பிறகே பேச்சுவார்த்தைக்கு இணங்க முடியுமென்று வாதிப்பது நடைமுறைக்கு ஒவ்வாததாகிவிடும் என்பது என் தாழ்மையான கருத்தாகும்.

சகிப்புத் தன்மையுடன் மனம் விட்டுப் பேசி, மீண்டும் நாட்டில் இயல்பான சூழ்நிலை அமைந்திட முயற்சிகளை மேற்கொண்டு,

நமது பணிகளை வகுத்துக் கொள்வதே சிறப்புடையதாகுமென, நான் சார்ந்துள்ள தி.மு. கழகம் எண்ணுகிறது.

பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்திட வாய்ப்பு கிட்டுமேயானால், அதன் தொடர்பாக எதிர்க்கட்சிகள் தங்களுக்கென அமைந்த தனித் தன்மைகளையோ, கொள்கைகளையோ விட்டு விட்டு அரசாங்கக் கொள்கைகள், நடைமுறைத் திட்டங்கள் அனைத்துக்கும் ஆமாம் போடுகிறவைகளாக ஆகவேண்டுமென்று நினைத்துப் பார்ப்பதற்குக்கூட இடமில்லை.

அதேநேரத்தில் இந்தியாவின் வலிவுக்கும், வளத்துக்கும் கேடு ஏற்பட வேண்டுமென்று எண்ணுகின்ற யாரும் இங்கில்லை.

ஒன்றரை ஆண்டு காலத்திற்குப் பிறகு நிலைமைகளை மறுபரிசீலனை செய்வதற்கான சிந்தனையும், ஆர்வமும் எழுந்திருப்பது, இரு தரப்பாரின் சார்பில் நாட்டின் நல்லதோர் எதிர் காலத்திற்கான உத்திரவாதத்தை அளிக்குமென்ற நம்பிக்கை ஒளியைத் தோற்றுவித்திருக்கிறது.

அந்தக் குறிக்கோளுடன் செயல்முறைகளை வகுப்பதற்கே இங்கே நாம் கூடியிருக்கிறோம். இதில் தனிப்பட்ட கட்சிகளின் சிக்கல்கள், பிரச்சினைகளுக்கு இடமில்லை. அனைவரும் ஏற்றிடத்தக்க ஒரு பொதுவான உடன்பாடு நமக்குள்ளே ஏற்படுவதற்கு இந்தக் கூட்டம் வகை செய்யும், துணை புரியும் என்று நான் நம்புகிறேன்.

என்னுடைய வரவேற்புரைக்குப் பிறகு அனைத்துக் கட்சிகளின் தலைவர்களெல்லாம் தங்களது கருத்துகளை எடுத்துக் கூறினார்கள். அந்தக் கூட்டம் மாலை 4 மணி வரை நடைபெற்றது. நிலைமையை இயல்பான நிலைக்குக் கொண்டுவரும் நோக்குடன் நடக்கக்கூடிய எத்தகைய பேச்சிலும் மகிழ்ச்சியுடன் பங்கேற்க தாங்கள் தயாராக இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மறுநாள் 16.12.76 அன்று மீண்டும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சந்தித்தனர். அந்தச் சந்திப்பு எச்.எம்.படேல் எம்.பி. அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. அதற்குப் பிறகு அசோக்மேத்தா அவர்களும், பிலுமோடி அவர்களும் என்னை டெல்லியிலே சந்தித்து உரையாடினார்கள்.

1976ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில் டெல்லியிலே கூட்டப்பட்ட அந்த அனைத்துக் கட்சி (எதிர்க்கட்சிகள்) கூட்டம்தான் ஜனதா கட்சி இந்திய அரசியலிலே உருவாக முழுமுதல் காரணம் என்பதை யாரும் மறுத்து விட முடியாது.

டெல்லியிலே நடைபெற்ற அந்தக் கூட்டம் குறித்து 16ஆம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழிலே குல்தீப் நய்யார் அவர்கள் ஒரு கட்டுரை தீட்டியிருந்தார். அதிலே எதிர்க்கட்சிகளும், ஆளும் காங்கிரசும் முன்னிருந்ததுபோல் இப்போதும் வடதுருவம், தென்துருவமாக இல்லை என்பது வெளிப்படை. சமாதானம் சாத்தியமே என்பதைக் காட்டும் வண்ணம் சில பல நடந்துள்ளன. இல்லாவிடின், டெல்லியில் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டிய திரு. கருணாநிதி கூறியுள்ளதுபோல், ஆளும் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடந்தால் அதில் நாம் என்னென்ன விவரங்களை விவாதிக்க வேண்டும் என்ற விவரங்களை முடிவு செய்ய டெல்லியில் எதிர்க்கட்சிகளின் கூட்டம் நடந்திராது என்று குறிப்பிட்டிருந்தார்.

டெல்லி கூட்டத்தில் அரசுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக ஒருமனதாக முடி வெடுக்கப்பட்டு, முன் நிபந்தனைகள் எதுவுமில்லாத நிலையில் பேச்சுவார்த்தைக்கு உடன்படுவதே சுமுகமான சூழ்நிலைக்கு வழிகோலும் என்பது விளக்கப்பட்டது. எதிர்க்கட்சிகள் தங்கள் நிலையை விளக்கி ஒரு கருத்துரையை வெளியிட வேண்டு மென்று முதல்நாள் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. அந்தக் கருத்துரை தயாரிக்கப்பட்டு 16.12.76 அன்று காலையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலருடைய பார்வைக்கு அனுப்பப்பட்டு, அன்று மாலை திரு. எச்.எம். படேல் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அந்தக் கருத்துரையின் வரைவினை வைத்துக் கொண்டு கலந்துரையாடிய பிறகு அதற்கு இறுதிவடிவம் கொடுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

அதில் எதிர்க்கட்சிகள் ஜனநாயக செயல்முறைகளில் ஈடுபாடு உள்ளவை. தேசிய பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கத்துடன் பேசவும், குறிப்பாக நாட்டில் அரசியல் வாழ்வை சகஜப்படுத்துவது மிக அவசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்ற நிலையில் பேச்சு நடத்த எதிர்க்கட்சிகள் தயாராக இருக்கின்றன என்று

குறிப்பிடப்பட்டு, அது பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கூட்டம் டெல்லியில் நடந்து கொண்டிருந்தபோதே, அந்த முயற்சி வெற்றி பெற வேண்டுமென்றும், கழகத்தின் முயற்சி கைகூட வேண்டுமென்றும், பிரதமரும், எதிர்க்கட்சி தலைவர்களும் கலந்து பேசுகிற நாள் விரைவில் வர வேண்டுமென்றும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் பாட்னாவிலிருந்து எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். அந்தக் கடிதம் கூட்டத்தில் படிக்கப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைத் தெரிவித்து பிரதமருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். சுயேச்சையான, வெளிப்படையான விவாதத்தின் மூலம் நாட்டில் எதிர்ப்பட்டுள்ள பிரச்சினைகளை நம்மால் தீர்க்க இயலும் என்று எதிர்க்கட்சிகள் நம்பிக்கை கொண்டுள்ளன என்று அந்தக் கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கடிதத்தினுடன் எதிர்க்கட்சிகள் வெளியிட்ட அறிக்கையையும் இணைத்து பிரதமருக்கு அனுப்பினேன்.

அதற்குப்பின்னர் டிசம்பர் மாதம் 23-ஆம் தேதி புதுடெல்லியில் காங்கிரஸ் ஊழியர்களின் முகாமில் பேசிய பிரதமர் இந்திரா காந்தி, எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முன்பாக, அந்தக் கட்சிகளின் போக்கு பற்றியும் ஆராய வேண்டியுள்ளது என்றார். அதாவது எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையும் - பேச்சுவார்த்தைகளின் வாயிலாகப் பிரச்சினை தீருவதையும் - தனக்கு ஏற்படும் கௌரவக் குறைவு என அவர் கருதினார் என்றே எண்ணிட வேண்டும். ஆனால், அந்த வீம்பு நீண்ட நாள் இருக்கவில்லை. எமர்ஜன்சி எனும் சர்வாதிகாரக் கொடுமையாட்சியிலிருந்து பின்வாங்கவே அவர் முனைந்தார். அதற்கு மேல் தனது எதேச்சாதிகாரப் பிடிவாதப் போக்கை நாடு தாங்காது எனப் புரிந்து கொண்டார்.

நெருக்கடி நிலை கொடுமைகளில் ஒன்றாக கைது செய்யப்பட்ட தியாகமறவன், கொள்கைக் குன்று, என்னுடைய அன்பு உடன்பிறப்பு, கழக நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு சிறையிலே பயங்கரமாக அதிகாரிகளால் தாக்கப்பட்டபோது, அவர்களில் ஒரு முரடன் கொடுத்த உதை காரணமாக வயிற்றிலே

அடிபட்டு, அதன் காரணமாக வயிற்றுக்குள் சில கோளாறுகள் ஏற்பட்டு நீண்ட நாட்களாக சிறையிலே அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அந்த நோய் குணமாகாமலேயே டிசம்பர் மாதம் சென்னை பொது மருத்துவமனையிலேயே கைதியாகவே அனுமதிக்கப்பட்டார். அங்கே சிட்டிபாபுவின் வயிற்றிலே ஒரு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அதிலும் முற்றிலும் குணமாகாத நிலையிலே ஜனவரி மாதம் 3ஆம் தேதி மீண்டும் ஓர் அறுவை சிகிச்சை அதே இடத்தில் நடந்தது. அதனைத் தொடர்ந்து ஜனவரி 5ஆம் தேதி காலையிலே மருத்துவமனையிலே ஆபத்தான நிலையிலே சிட்டிபாபு இருப்பதாகத் தொலைபேசி மூலம் எனக்குத் தகவல் தெரிவித்தார்கள். உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்தேன். அங்கே மிசா கைதியாக இருந்த நண்பர் கமலநாதனும், மருத்துவ மனையில் பணியாற்றிக்கொண்டிருந்த டாக்டர் காஞ்சனா கமலநாதனும் சிட்டிபாபுவுக்கு அருகே நின்று கதறியழுது கொண்டிருந்தனர். சிட்டிபாபுவின் துணைவியரும் துடித்துப் புலம்பினர்.

எனக்காகவே தன்னுடைய இறுதி மூச்சை நிறுத்தி வைத்திருந்ததைப்போல என்னைக் கண்டவுடன் அந்த ஆறுதலோடு கண்ணை மூடினார் 45 வயதே நிறைந்த அந்தக் கழகக் காளை. கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக அரும்பணியாற்றி, கடமை உணர்வோடு பணியாற்றிய சிட்டிபாபு மறைந்தவுடன் எனக்கு ஆறுதல் கூற வந்தவர்களிடம் எல்லாம் என்னை சிறிது நேரம் அழவிடுங்கள் என்று கேட்டுக் கொண்டேன்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

30-7-2002

2801. அந்த உணர்வு இன்னமும்; இங்கேயும் இருக்கிறது!

உடன்பிறப்பே,

கோலாலம்பூர் சுப்பிரமணியம் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டு, வெளியிடப்பட்டுள்ள அடால்ப் இட்லரின் எனது போராட்டம் (மெய்ன் கேம்ப்) என்ற புத்தகத்தைப் படித்து, கோடிட்டு வைத்துள்ள வரிகளைப் பற்றி உன்னுடன் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள விரும்பியதின் விளைவே இந்தக் கடிதம்.

முதலில் இட்லர் தனது இராணுவத்திற்குக் கட்டளையிட்டது போல, மனித சமுதாயத்திற்கும் அதே உத்தரவு பாணியில் உபதேசம் செய்வதைப் பார்ப்போம்.

இயற்கையாகிற நந்தவனத்தில் நடந்து செல்லுவோர், சகல விஷயங்களும் தங்களுக்குத் தெரிந்திருப்பதாக கர்வமடைகின்றனர். அப்படியிருந்தும் பெரும்பாலோரும் தினசரி நிகழும் சர்வ சாதாரண உண்மையைக் கவனிப்பதில்லை. அதாவது ஒவ்வொரு மிருகமும், தன் இனத்துடனேயேதான் புணர்ச்சி செய்கிறது. ஒரு பறவை பெண் பறவையுடன்தான் சேருகின்றது. நாரை பெண் நாரையுடனேயே சேருகின்றது. எலி பெண் எலியுடன்தான் சேருகின்றது. ஓநாய் பெண் ஓநாயுடன் மாத்திரமே சேருகின்றது. இது இயற்கையின் மூலாதார நியதி. மிகவும் அபூர்வமாகத்தான் இந்த நியதியிலிருந்து வழுவும் படியான நிர்ப்பந்தம் ஜந்துக்களுக்கு ஏற்படும். குறிப்பிட்ட ஜந்து சிறைப்பட்டு விட்டாலோ, அல்லது அதற்கு வேறு இடையூறு ஏற்பட்டாலோதான் அவ்வித நிர்ப்பந்தம், அதாவது தன் இனத்தை விட்டு இதர இனத்துடன் புணர்ச்சி செய்யும்படியான நிர்ப்பந்தமேற்படும். எனினும் அது இயற்கைக்கு முரணானது. அவ்விதப்புணர்ச்சியின் மூலம் உண்டாகும் கலப்புப் பிறவி, மலட்டுத் தன்மை பொருந்தியதாகவோ அல்லது அதற்கு

உற்பத்தி சக்தி குறைவாகவோ தானிருக்கும். அத்தகைய கலப்புப் பிறவிக்கும் அதன் சந்ததிகளுக்கும் நோயைத் தாங்கும் சக்தியோ, இயற்கையான தற்காப்பு சக்தியோ இருப்பதில்லை. எனவே, கலப்பற்ற பிறவிதான் இயற்கை நியதிக்கு ஒத்ததாகும். அப்படியானால் தான், அந்தந்த இனத்தின் தேக அம்சங்களுக்கும், குறிப்பான விசேஷ சக்திகளுக்கும் பங்கம் வராமலிருக்கும். சாதாரணமாக நரி எப்போதும் நரியாகவே இருக்கிறது வாத்து வாத்தாகவே இருக்கிறது, புலி புலியாகவே இருக்கிறது. அவைகளின் சுபாவம் மாறுவதேயில்லை. நரி வாத்திடமோ, அல்லது பூனை எலியிடமோ அன்பு காட்டுவதில்லை.

பலமற்ற ஆண், பலம் பொருந்திய பெண்ணைப் புணர்வதன் மூலம் நாளடைவில் சந்ததிகளின் பலமும் குன்றி அவை நசித்து விடக்கூடும். பலசாலிகளும், திடகாத்திரர்களும்தான் வாழ்க்கைப் போரில் வெற்றி பெற முடியுமேயன்றி, கோழைகளும் நோயாளிகளுமல்ல. ஜந்துக்கள் விஷயத்தில் எது இயற்கை நியதியோ, அதுதான் மனித வர்க்கத்திற்கும் நியதியாகும். அதாவது உயர்ந்த வம்சத்தினர், தாழ்ந்த வம்சத்தினருடன் புணர்ச்சி செய்வதன் மூலம் காலக் கிரமத்தில் உயர்ந்த வம்சம் பலம் குன்றி நசித்துவிடும். இதை ருஜுப்பிக்க சரித்திரத்தில் எண்ணிக்கை யற்ற உதாரணங்கள் உள்ளன. உயர்ந்த கலாச்சாரங்களின் திலகர் களான ஆர்யர்கள் தாழ்ந்த வம்சத்தினருடன் சேர்ந்ததன் பயனாக சிறப்பு மறைந்து வீழ்ச்சி அடைந்துள்ளனர்.

இட்லர், தனது இனத்தின் சிறப்பும், வலிமையும் குறைந்துவிடக் கூடாது என்பதிலே எவ்வளவு அக்கறையுடையவனாக இருந்திருக்கிறான் என்பதை இந்தக் கருத்துரை குன்றின்மீது தீபமாக ஒளிவிட்டுக் காட்டுகிறது! ஆனால், அவன் கருத்தை நிலைநாட்டுவதற்கு அவன் எடுத்து வைத்துள்ள வாதம்தான், தனது இனம் மட்டுமே உலகில் ஓங்கு புகழுடன் திகழ்ந்து, ஆதிக்கம் செலுத்தும் வலிவினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற அவனது குறிக்கோளை மிக எளிதாக அடையாளம் தெரிந்து கொள்ள உதவுகிறது.

பறவைகள், மிருகங்கள், இன வளர்ச்சிக்கு அதாவது உடல் உறவுக்குப் பறவைகள் பறவைகளுடனும், அதே போல மிருகங்கள் மிருகங்களுடனும்தான் சேருகின்றன எனக் குறிப்பிடும் இட்லர், அதே போல மனிதர்கள், மனிதர்களுடன் உறவு கொள்வதிலே

மட்டும் தனது தயக்கத்தை வலியுறுத்தி, அந்த மனிதர்களிலே உயர்ந்த குலத்தினர் எனப்படுவோர், தன்னைப் போன்ற ஆரிய இனத்தினர், மனிதர்களிடையே வேறு இனத்தினருடன் உடலுறவு கொள்ளும் கலப்பு நிலை கூடாது என்கிறான்.

மிருகங்களில் ஒரு கரடி, கரடியுடன்தான் கூடும் - சிங்கம் சிங்கத்துடன்தான் கூடும்! பறவைகளில் பருந்தும் பருந்தும்தான் கூடிடும் - புறாவும் புறாவும் தான் கூடுகின்றன!

அதே நிலை மனித இனத்திலும், மனிதன் மனிதனுடன்தான் (ஆணும் பெண்ணுமாக) இன விருத்திக்குக் கூடுவர் என்றில்லாமல், ஆணும் பெண்ணுமாக இருப்பினும், அவர்கள் வெவ்வேறு இனமாக இல்லாமல், இன மாற்றம் செய்து இணைவரேல் நாளடைவில் மொத்த இனமே வலிவிழந்து போய் விடும் என இட்லர் இதன்மூலம் மிரட்டுவதும் புரிகிறது - குறிப்பாகத் தனது இனத்தின் நலத்தைப் பிரதானமாகக் கருதி சொல்லப்படும் அறிவுரை போன்ற ஆணை என்பதும் புலப்படுகிறது!

மிருக இனம், பறவை இனங்களில் அவை வாழு மிடங்களுக்கேற்ப பெயர் வேறுபாடுகள் மட்டுமே இருக்கின்றன. ஒரு சிறிது வாழ்க்கை முறை வேறுபாடுகளும் இருக்கலாம்.

ஒரு பருந்தின் பள்ளியறையில் பஞ்சவர்ணக் கிளி இருப்பதில்லை- காராம்பசு ஒன்று கரடியுடன் கட்டிலில் களித்திருப்பதில்லை - ஆண் பருந்தும், பெண் பருந்தும் கூடினால் அவற்றுக்குப் பருந்துக் குஞ்சும், அதே போல ஆண் கரடிக்கும், பெண் கரடிக்கும்தான் குட்டிக்கரடியும் பிறக்கின்றன.

மனிதரிலும், இணையும் ஆணோ, பெண்ணோ இருவரும் எந்த இனத்தவராக இருப்பினும், ஆண் குழந்தையோ பெண் குழந்தையோ அது மனிதக் குழந்தையாகத்தான் பிறக்கிறது.

இந்த உண்மையான உலக நிலவரத்தைப் பற்றியோ, இயற்கை நிலையைப் பற்றியோ இட்லர் கவலைப்படாமல், கலப்பட நிலை ஏற்பட முடியாத விலங்கினத்தையும், பறவையினத்தையும் உதாரணமாகக் காட்டி, மனித இனத்தில் கலப்படம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தான் என்பது தெளிவாகிறது. ஏனென்றால், மனித இனத்தில் இனக்கலப்படம் என்பது சுலபமானதாக இருந்தது. அதனால் அவன் தனது இனத்தின் வலிமையையும், பெருமையையும் இழக்கத் தயாராக

இல்லை என்பதில் பிடிவாதமாக இருந்தான். இதோ அந்தப் பெருமையை இட்லர் வாயாலேயே கேட்போமே!

இன்று நம் கண்முன் காணும் கலாச்சாரம், சிற்பம், விஞ்ஞானம், தொழில் திறமை, முதலியன யாவும் ஆர்யர் சிருஷ்டி சக்தியின் உற்பத்தியே. ஆர்யனின் தேஜஸ் பொருந்திய நெற்றியிலிருந்துதான் எக்காலத்தும் ஞான வொளி வீசி அந்தகாரத்தை அகற்றி வந்திருக்கிறது. எனவே அவன் மறைந்தால், அவனியை அந்தகாரம் ஆட்கொள்ளும். சில ஆயிரக்கணக்கான வருஷங்களில் கலாச்சாரம் மறைந்து உலகமே வெறும் பாலைவனமாகிவிடும்.

கலாச்சார சிருஷ்டி கர்த்தாக்கள் - கலாச்சார ரக்ஷகர்கள் - கலாச்சார சம்ஹார கர்த்தாக்கள் - என மானிட வர்க்கத்தை மூன்று பிரிவினராகப் பிரித்தோமாயின் ஆரியர்கள்தான் முதல் ஸ்தானம் வகிப்பார்கள். மகத்தான கலாச்சார மாளிகைக்கு அஸ்திவாரம் போட்டு, அதன் சுவர்களையும் எழுப்பியவர்கள் ஆர்யர்கள்தான். கலாச்சாரங்களும், சாம்ராஜ்யங்களும் க்ஷீணிப்பதற்குக் காரணம், இரத்தக் கலப்பும், வம்சத்தின் மாற்றும் குன்றுவதும்தான்.

இப்படி ஓர் இன உணர்வு இட்லருக்கு இருந்தது என்பதை அவன் தீட்டிய (மெயின் கேம்ப்) எனது போராட்டங்கள் என்ற எழுத்தின் தொகுப்பு விளக்குகிறது!

அந்த உணர்வு இன்னமும் இருக்கிறது!
இங்கேயும் இருக்கிறது, சிலருக்கு!

அன்புள்ள,

மு.க.

31-7-2002

2802. அகவையிலும் அரசியலிலும் சிறுவர் சிறுமியர்!

உடன்பிறப்பே,

தெருவில் ஒரே கூச்சல் - அய்யோ! அய்யோ! என் குடிசை எரியுதே! உள்ளே குழந்தை தூங்குதே என்று அலறிக் கொண்டு ஒரு தாய் குடிசைக்குள் ஓடுகிறாள். அம்மாடியோவ்! தீ பரவிகிட்டே இருக்கே! அடப்பாவிகளா! நாலாவது தெருவிலே பிடிச்ச நெருப்பு, நம்ப தெருவுக்கும் தாவிட்டுதே! வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு கதறுகிற ஒலி! குய்யோமுறையோ எனும் ஓலம்!

தீ அணைக்கிற வண்டிக்கு டெலிபோன் பண்ணி எவ்வளவு நேரமாச்சு, இன்னம் வரலியா?

"அய்யய்யோ, எங்க வீட்டுக்குள்ளயும் பரவுதே தீ!....
டேய் ராமு! வெளியே ஓடி வா! ஓடி வா!

"அடியே கண்ணு புஷ்பா! கொல்லைப்பக்கமா ஓடு!....முடிஞ்ச வரையிலும் பெட்டி சட்டிகளை எடுத்துகிட்டு வந்துடுங்க!....மாடு கண்ணுகூட மிஞ்சாது போலிருக்கே! அட கடவுளே! எல்லாம் போச்சு... எல்லாம் நெருப்புக்கு இரையாச்சு!...."

இப்படி ஓ வென்று கதறுகிறார்கள்! ஓலமிடுகிறார்கள்! ஒவ்வொருவரும் தங்கள் உடைமைகள் எரிவதைப் பார்த்து பிரமை பிடித்தவர்கள் போல பிதற்றுகிறார்கள்!

அப்போது அந்தத் தெருவின் முகப்பு வீட்டிலிருந்து ஒருவன் ஓடிவந்து, வீட்டு வாசலில் நின்று கொண்டு - 'ஏய் முத்தா! முனியா! என்னோடு ஓடி வாங்க! முடிஞ்சவரையில் நெருப்பை அணைப்போம் - இயன்ற அளவு உதவி செய்வோம் - அதோ பாருங்க! அந்தப் பொம்பளை தன் குழந்தையை காப்பாத்த எரியிற குடிசைக்குள்ளே ஓடியிருக்கு, ஓடுங்க! ஓடுங்க! முதல்ல அந்தத் தாயையும் குழந்தையையும் காப்பாத்துங்க!' என்று உரக்கக் கூவி அவர்களை அங்கே விரைந்திடச் செய்தான். அவன் ஆணை கேட்டு அவன் தோழர்களும் செயல்படத் தொடங்கினர்.

‘வாங்க! வாங்க! வாங்க! ஆளுக்குக்
கொஞ்சமா ஆபத்திலே உதவுவோம்!’

என்ற முகப்பு வீட்டுக்காரனின் வேண்டுகோள் வீண் போகவில்லை. எரியும் வீடுகளில் இருந்து, கூரைகள் இழுத்து எறியப்பட்டன. அதனால் அவற்றை ஒட்டிய சில வீடுகள் காப்பாற்றப்பட்டன. அந்தச் சமயத்தில் தீயணைப்பு வண்டியும் வந்து சேர்ந்தது. முகப்பு வீட்டுக்காரன் மற்றும் முனியன், முத்தன் ஆகியோர் தீயணைப்பு வண்டியில் வந்த அதிகாரிகளை வரவேற்று; ‘நீங்க கொஞ்சம் முன்னாடி வந்திருந்தா, இன்னும் பல வீடுகளைக் காப்பாத்தியிருக்கலாம். எப்படியும் இப்பவாவது வந்ததற்கு நன்றி!’ என்றனர். அந்த அதிகாரி ஆவேசமுற்றவராக அதட்டலான குரலுடன் ‘ஏய்! உங்களை யார் இந்தத் தெருவிலே தீ அணைக்கச் சொன்னது! எங்களுக்குத் தெரியாதா? நாங்க வர மாட்டோமா? இப்போ, வந்திருக்கிறோமா இல்லியா? எங்களுக்கில்லாத அக்கறையா உங்களுக்கு?’ என்று தாண்டிக் குதிக்கத் தொடங்கி விட்டார்.

முகப்பு வீட்டுக்காரன், அந்த அதிகாரியைப் பார்த்து, ‘அய்யா! இது யாருடைய தனிப்பட்ட பிரச்சினையும் இல்லை - பொதுப் பிரச்சினை! நெருப்பு பிடிச்சு வீடுகள் எரிந்தாலோ, வெள்ளம் வந்து ஊர் முழுகினாலோ, அதைத் தடுத்து ஜனங்களைக் காப்பாத்த இருதயமுள்ள எல்லோருக்கும் கடமை உண்டு! நான் மட்டுந்தான் செய்வேன்னு வீம்பு பண்ணாமல், நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு நல்ல காரியம், பொதுக் காரியம் செய்யிற மனசு வேண்டும்! அந்த உணர்வோடதான் அதிலும் உங்களுக்கு உதவியாத்தான் நாங்களும் இந்த வேலையிலே ஈடுபட்டிருக்கிறோம்’ என்று விளக்கமளித்ததை அந்த அதிகாரி காதில் போட்டுக் கொள்ள வில்லை.

அதிகாரியின் அலட்சியத்தையும் ஆணவக் குரலையும் முகப்பு வீட்டுக்காரனும், முத்தன், முனியன் முதலியவர்களும் பொருட்படுத்திக் கொண்டிருக்க வில்லை. தங்கள் கடமையில் கண்ணுங் கருத்துமாக இருந்தனர்.

உடன்பிறப்பே!

இது ஏதோ கதையென்று யாரும் கருத வேண்டாம். கைத்தறி நெசவாளர்களின் கதியற்ற நிலைமையைப் போக்கி,

அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி துளிர்த்திடச் செய்ய நிறைவான பணிகளை இப்போது ஆற்றிட இயலாவிடினும் - அவர்களின் பசி போக்கிடவும், பட்டினிச் சாவுகளுக்கு அந்தச் சமூகத்தைப் பலியாக்கிடாமல் தடுத்திடவும், தமிழக அரசை வலியுறுத்துவது ஒருபுறம் இருப்பினும் - உடனடி நிவாரணமாக அவர்கள் வசிக்கும் பகுதிகளில் பசிக்கு ஒரு தீர்வாகக் கஞ்சித் தொட்டிகளைத் தொடங்கிடுமாறு கழக அமைப்புகளையும், கழக அணியினரையும் கேட்டுக் கொண்டது. உடனடியாக ஒவ்வொரு பகுதியிலும் நிறைவேற்றப்பட்டு வருவது கண்டு உளம் பூரிக்கிறேன். என் உடன்பிறப்புகளின் ஆற்றல் அறிந்து மட்டுமல்ல. அன்பு இதயங்களைப் புரிந்துங்கூட!

நெசவாளர்களின் துன்பம் கண்டு நெஞ்சு பதைத்து அவர்தம் இன்னல் போக்கிடக் குரல் கொடுத்தது தி.மு.கழகம். ஆம்! 1953ஆம் ஆண்டு அண்ணா காலத்திலேயே கைத்தறி நெசவாளர் துயர் துடைத்திடத் தூய பணிகள் ஆற்றியிருக்கிறோம். நாடு முழுதும் சுற்றி அவர்களை நாசத்திலிருந்து விடுவிக்க, அப்போது நாடாண்டவர்களிடம் முறையிட்டிருக்கிறோம் - அறப்போர்க் குரல் கொடுத்திருக்கிறோம்!

நான் எழுதி, நானும் நடிகர் திலகம் சிவாஜியும் பட்டிதொட்டி பட்டினக்கரைகள் என பல இடங்களில் நடித்த பரப்பிரம்மம் நாடகத்தில் ஒரு நெசவாளி, வீட்டில் உள்ள பொருள்களையெல்லாம் விற்றுவிட்டு, கடைசியாகத் தன் மனைவியின் புடவையையும் விற்க வேண்டிய அவலம் ஏற்பட்டபோது அவன்,

> "அய்யா சோம்பேறி இல்லை நான் - உழைத்து உழைத்து உலுத்துப் போனவன்! கண் விழித்து, கஷ்டப்பட்டு, துணி நெய்து காலத்தைக் கழித்தேன்! உழைக்கக் கை இல்லாமல் இல்லை! உடலில் சக்தியில்லாமல் இல்லை! ஆனால் உழைக்க வழி? உற்பத்தி செய்த ஆடைக்கு விலை இல்லை - விற்பனை இல்லை - ஏழை நெசவாளிக்கு - எனக்கு ஏது வேறு கதி? வீட்டில் தறி தூங்குகிறது! பசி, தூங்குமா என்ன? நான் என்ன செய்வேன்? போகாத ஊரில்லை! வேண்டாத கோயில் இல்லை! அய்யா புண்ணியவான்களே! பொங்கல் திருவிழாவுக்கு வீட்ல சல்லிக்காசு இல்லை! கிழிஞ்ச

துணியை இடுப்பிலே சுத்திகிட்டு, இந்தப் புடவையை விக்கச் சொல்லி கொடுத்தா எங்க வீட்டு மகராசி - இதையும் யாரும் வாங்கு வாரில்லையா? அப்படின்னா இந்தச் சேலை நானோ என் மனைவியோ தூக்கிலே தொங்கத்தான் உதவுமா?"

என்று தெருவில் நின்று வெதும்பி அழுததை காட்சியாக்கினேன். நடிப்போடும், நாடக எழுத்தோடும் நின்று விடவில்லை. தி.மு.க. செயற்குழு எடுத்த முடிவின்படி கைத்தறித் துணிகளை கழகத் தலைவர்களும் முன்னணியினரும் ஊர் ஊராகச் சென்று விற்பதென்று முடிவு செய்து 1953ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா திருச்சியிலே வீதி வீதியாகச் சென்று கைத்தறித் துணிகளை விற்றார்.

நான் அதே நாளில் சென்னையிலே கைத்தறித் துணிகளை தெருத்தெருவாகச் சென்று விற்பனை செய்தேன்.

அந்த ஒருநாள் தமிழ்நாடு முழுதும் ஒரு இலட்ச ரூபாய்க்கு கைத்தறித் துணிகள் கழகத் தலைவர்களால் விற்கப்பட்டன.

நான் சென்னையில் மட்டும் இருபதாயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தேன். அந்த விற்பனையின் போதுதான் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடம் கைத்தறித் துணிகளை வாங்கியதுடன், அன்று முதல் கதராடையிலிருந்து மாறி கைத்தறி ஆடையிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினார்.

இக்கடிதத்துடன் இணைத்துள்ள பழைய புகைப்படத்தைப் பார்! 1953இல் சென்னையில் நான் கைத்தறித் துணி விற்றபோது எடுக்கப்பட்ட படம்! வாகனத்தின் மேல் பகுதியில் (இடது பக்கம்) அமர்ந்திருப்பது உடுமலை நாராயண கவிராயரின் சீடர் சமத்தூர் செல்லமுத்து - அவருக்கு நேர் கீழே என்னருகே கம்பீரமாக நிற்பவர் அன்றைய சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் என்னரும் நண்பர் மறைந்த கண்ணபிரான் (கவிஞர் வேழ வேந்தனின் மாமனார்)

செந்தமிழ் நாட்டுக் கைத்தறி வேட்டி
சேலைகள் வாங்குவீர்!
நம் திராவிட இனத்தவர் க்ஷேமம் வேண்டிச்
சிங்கார ஆடைகள் வாங்குவீர்!

உடுமலையாரின் இந்தப் பாடல் மிக நீளமானது - இதனை நண்பர் செல்லமுத்தும் நாங்களும் பாடிக் கொண்டே சென்னையில் மூலை முடுக்குத் தெருக்களில் எல்லாம் கைத்தறித் துணி வியாபாரத்தைச் செய்தோம்!

அதாவது 1953ஆம் ஆண்டு - இப்போது என்னைப் பார்த்து கைத்தறியாளர்களுக்காக கண்ணீர் விடுவதற்கு நீ யார் என்று யாராவது கேட்டால், அவர்கள் அப்போது பிறந்திருப்பார்களோ என்னவோ! ஒருவேளை பிறந்திருந்தால் அகவையிலும் சரி, அரசியலிலும் சரி! சிறுவர் சிறுமிகளாகத்தான் இருந்திருப்பார்கள்!

அன்புள்ள,

மு.க.

1-8-2002

2803. சாகாத பிணங்களின் சாகும் சரித்திரம்!

“குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன்
இங்கில்லை...”

என்று தொடங்கி,

“தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே!”

என முடியும் தமிழறியா புலவர்களைத் திட்டுகின்ற பாடல் ஒன்றுண்டு!

அன்று அதைப் பாடியவர் மறையாமல்
வாழ்ந்திருந்தால்
இன்று அந்தப் புலவர்களை மட்டுமல்ல;
அனைத்துத்துறை போலிகள் பற்றியும்
நன்றாகப் பாடிடுவார்; அவரில்லாக் காரணத்தால்,
நான் பாடுகிறேன்; பொன்வைத்த இடத்தில்
பூ வைப்பார்போல!

கருக்காய் எல்லாம் கதிர்மணிகளாம்!
தருக்கர் எல்லாம் தலைவர்களாம்!
சறுக்கல் எல்லாம் அரசியலாம்!
கிறுக்கல் எல்லாம் அறிக்கைகளாம்!
பதுக்கிய பணம் நிறையக் கையில் என்பதால்;

பத்தினி ஏடுகளும் அகலிகைகளாய் விலைபோகும் அநியாயம்.

எதிர்காலத் தலைமுறைக்கு இப்போதே எரியூட்டல் நடத்துதற்கு;

இடைத்தரகர் எத்தனை பேர் கையூட்டுப்
பெறுகின்றார்!

பொதுச்சேவை என்றால் என்ன?

பொதி பொதியாய் மூட்டைகட்டி விற்கப்படுமா?
மது போதை விருந்துகளில் மலிவாய்க் கிடைத்திடுமா?
இது போதும், ஆகாயமளாவப் பொய் கூறி,

அவதார புருஷன் என அறிவித்துக் கொண்டு,
ஆன்மீகவாதிகளை ஏமாற்றி அடிக்கலாம்
பகற்கொள்ளை!

ஆதின கர்த்தர்கள் இப்போது
அதைத் தானே செய்கின்றார் ஆட்சியர்க்குப் போட்டியாக!
ஏசுவும் நான்; புத்தரும் நான்
நாயகமும் நானே யென்று
விண்ணிலும் புகழ்க் கொடி நாட்டுவதாய்
வீண் ஜம்பம் அடிப்பது யார்?
தேச விடுதலைப் போரில் தியாக நெருப்பில்
குளித்தவரா?
தேமதுரத் தமிழை இழந்த பின்னர் தேகமிருந்தொரு
லாப முண்டோ என
அன்னை மொழிக்கான அறப்போரில் அடக்குமுறை
ஏற்றவரா?
அவையெல்லாம் வீண்வேலை வேண்டவே வேண்டாம்
ஆயிரம் பதினாயிரம் லட்சம் கோடி யென்று
காசுகளை இறைத்து வைத்து
மாசுகளை நிறைத்து வைப்பார்!
கங்கா யமுனா காவேரி அன்னையே - உன்
கால் தொழுதோம் கருணை செய்வாயே!
எங்கும் நின் புகழ்பாட தெம்பு
பொங்கிட அருள் புரிவாய் என
சிங்கம் போன்று சிலிர்த்தவரும்
சில்லறைக்கு மயங்குகின்றார் அவர்தம்
கல்லறைக்குக் காக்கை குருவி கூட
செல்லமாட்டா!
நல்லறிவு படைத்தவர்கள் ஏன் செல்லப்
போகின்றார்?
செத்த பிணங்கள் மாலை மரியாதை பெறுவதுண்டு
சாகாத இப்பிணங்கள்; சாகும் சரிதம் படைப்பதில்
என்ன புதுமை?

அன்புள்ள,

மு.க.

2804. கண்ணீர் துடைத்திடுக முதலில்; கதைகள் விடலாம் பிறகு!

கேள்வி :- வைகோவைத் தொடர்ந்து பழ. நெடுமாறனும் பொடாவில் கைது செய்யப் பட்டுள்ளாரே?

கலைஞர்:- உழுது விதைப்பாருக் குணவில்லை

பிணிகள் பலவுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச்
செல்வங்க
ளுண்டு; உண்மை சொல்வோர்க்
கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறை
யுண்டு

என்று பாரதி பாடியதுதான் நினைவுக்கு வருகிறது.

கேள்வி:- கைத்தறி நெசவாளர்களின் இப்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம் தி.மு. கழக ஆட்சியின் தவறான கொள்கைகள்தான் என்று ஜெயலலிதா குற்றஞ்சாட்டியிருக்கிறாரே?

கலைஞர்:- கைத்தறியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியையும், கஷ்டங்களையும், பசி பட்டினிகளையும் பெரிதுபடுத்தி அரசாங்கத்தின்மீது குற்றம் கூற வேண்டுமென்று நான் எண்ணாமல், அரசுக்கு உதவியாகத்தான் கஞ்சித் தொட்டிகளைத் திறக்க வேண்டுமென்று கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். அதில் ஆத்திரமடைந்த ஜெயலலிதா பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக அறிக்கைகளை வெளியிட்டு என்னையும், கழகத்தையும், கழக அரசையும் இல்லாத பொய்களைக் கூறித் தாக்கி வருகிறார். அதன் தொடர்ச்சியாக

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஏதோவொரு கற்பனையாக இருக்கிறதே அல்லாமல், கைத்தறியாளர்களின் கண்ணீரைத் துடைப்பதாக இல்லை. நாட்டிலே எந்தக் காரியம் நடைபெற்றாலும், உடனே அதை திசை திருப்ப ஜெயலலிதாவிற்கு தி.மு.க.வை குறை கூறவேண்டும். அந்த வகையில்தான் ஜெயலலிதா தி.மு.க. அரசின் மீது குறைகூறி நீண்ட அறிக்கைகள் வெளியிடுகிறார். தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக தனியாக ஒரு ஜவுளிக் கொள்கை 1997ஆம் ஆண்டு கழக அரசிலேதான் உருவாக்கப்பட்டது. மேலும் இதன் செயற்பாட்டினை கண்காணிக்க துணி நெசவு பெருமன்றம் ஒன்றும் கழக அரசிலே அமைக்கப்பட்டது. அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் கழக ஆட்சியிலே தான் 27 ஆண்டுகளுக்குப் பிறகு 98இல் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு 1-9-98 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு பொறுப் பேற்றிருந்தது. ஆனால் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப் பேற்றதும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்பிவிட்டு மறு தேர்தலையே நடத்த வில்லை. 1995-96ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கைத்தறித் துறையிலே மிகப் பெரிய நெருக்கடி நிலை ஏற்பட்டது. கூட்டுறவு சங்கங்களிலே உற்பத்தியான சரக்குகள் விற்பனையாகாமல் மிக அதிக அளவிலே தேங்கிக் கிடந்தன. நெசவாளர்களுக்கு நெய்வதற்கு பாவு கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டு, அவர்களால் தொடர்ந்து நெசவுத் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. 96ஆம் ஆண்டு நான் பொறுப்பிற்கு வந்தவுடன் இந்த நெருக்கடி நிலையை அறிந்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஓர் அனைத்துக்கட்சி உயர்மட்டக் குழுவினை அமைத்தேன். அந்தக் குழு மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, நெசவாளர் பகுதிகளுக்கெல்லாம் நேரில் சென்று, நெசவாளர்களைச் சந்தித்து பிரச்சினைகளையெல்லாம் கேட்டு, அவைகளுக்கு தீர்வு காணும் வகையிலே பரிந்துரைகளைச் செய்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது உடனடியாக முடிவுகள் எடுத்து சட்டப் பேரவையிலேயே கைத்தறி துறை புனரமைப்புக்காக 24 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

புரட்சிகரமான இந்த அறிவிப்பின் மூலம் நெசவுத் தொழிலுக்கே புத்துயிர் தரப்பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய வாழ்வளிக்கப்பட்டது. கைத்தறித் துணி விற்பனைக்கு வழங்கப்பட்டு வந்த தள்ளுபடி மானியத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே இருந்ததை மாற்றி கழக ஆட்சியில் 1-4-1998 முதல், ஆண்டு முழுவதற்கும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்படும் என்று அறிவித்து, அதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு 75 கோடி ரூபாய் அளவிற்கு தள்ளுபடி மானியத் தொகை வழங்கப்பட்டது தி.மு.கழக ஆட்சியிலேதான் என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற பாணியில் கழக அரசின் மீது ஜெயலலிதா புழுதியை வாரி இறைத்துள்ளார்.

365 கோடி ரூபாய் மதிப்புள்ள தேங்கிக் கிடந்த கைத்தறி துணிகளுக்கு மே 98 முதல் அக்டோபர் 98 முடிய ஆறு மாத காலத்திற்கு 30 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி அளிக்கப்பட்டதின் மூலமாக மட்டும் 202 கோடி ரூபாய் மதிப்புள்ள தேங்கிக் கிடந்த துணிகள் விற்பனையானது என்பதை பழைய கோப்புகளைக் கொண்டுவரச் சொல்லி ஜெயலலிதா படித்துப் பார்த்து விட்டு வாயை மூடிக் கொண்டிருப்பது நலம். மேலும் சிறப்புக் கொள்முதல் திட்டத்தின்கீழ் 50 கோடி ரூபாய் அளவிற்கு சரக்குகள் கோவாப்டெக்ஸ் மூலமாக கழக ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்டது. ஏராளமான லுங்கிகள் விற்பனையில்லாமல் தேங்கிக் கிடந்ததை மனதிலே கொண்டு 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி 31-3-99 வரை அனுமதிக்கப்பட்டதும் கழக ஆட்சி யிலேதான். 1994-1995, 1995-1996 ஆகிய ஆண்டுகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருந்த தள்ளுபடி நிலுவை மானியத் தொகை சுமார் 40 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை கழக ஆட்சிக் காலத்திலேதான் 98-99இல் வழங்கப்பட்டது. 1995-96இல் கோவாப்டெக்சில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற விற்பனை 257 கோடி ரூபாய். 1999-2000இல் கழக ஆட்சியிலே அங்கே நடைபெற்ற விற்பனை 327 கோடி ரூபாய்.

இத்தகைய சாதனைகள் எல்லாம்தான் தவறான கொள்கைகள் என்று ஜெயலலிதா கதை அளந்திருக்கிறார்.

கேள்வி:- நெசவாளர்கள் யாரும் பட்டினியால் சாக வில்லை என்றும், வயதான காரணத்தினாலும் குடிப்பழக்கத்தினாலும்தான் இறந்தார்கள் என்றும் ஜெயலலிதா செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறாரே?

கலைஞர்:- ராசிபுரம் சட்டப் பேரவை தொகுதியிலே இதுபோல் பொய் தகவல்களை மாற்றிக் கூறிய காரணத்தினால்தான் அந்தத் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினரை தொகுதி மக்கள் கரோ செய்தார்கள். கழக ஏட்டிலோ, கம்யூனிஸ்ட் கட்சி ஏட்டிலோ அல்ல! நடுநிலை நாளிதழ் ஒன்றுதான் வறுமையின் கொடுமைக்கு 8 நெசவாளர்கள் பலி என்ற தலைப்போடு ஒரு பக்க அளவிற்கு ஆதாரங்களோடு, புகைப்படங்களோடு அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது. எந்தெந்த ஊர்களிலே உள்ள நெசவாளர் சங்கங்கள் மூடிக் கிடக்கின்றன என்ற விவரத்தையும், இறந்தவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு அந்தச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் முதலமைச்சர் அதையெல்லாம் மறைத்துவிட்டு செய்தியாளர்களிடம் யாரும் பட்டினியால் சாகவில்லை என்று கூறியதோடு தேவையில்லாமல் தி.மு.க. மீதும் பாய்ந்திருக்கிறார். தி.மு.கழக ஆட்சியில் 60 வயதிற்குமுன் இறக்கும் நெசவாளர்களின் வாரிசுகளுக்கு நெசவாளர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 96-97இல் கழகம் பதவிக்கு வந்ததும் வராததுமாக 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாயாகவும், பிறகு 1999-2000இல் 40 ஆயிரம் ரூபாயாகவும், 1-4-2000 முதல் 50 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. மேலும் அதற்கான பங்குத் தொகை 5 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை முதலில் 8 ஆயிரம் ரூபாய் என்றும், பிறகு 10 ஆயிரம் ரூபாய் என்றும் உயர்த்தியதும் கழக அரசுதான். கழக ஆட்சிக் காலத்திலே இந்தத் திட்டத்தின்கீழ் 324 நெசவாளர் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

நெசவாளர்களின் உற்பத்தி பொருள்கள் வாங்கப்பட வேண்டும் என்பதை மனதிலே கொண்டு இலவச வேட்டி சேலை திட்டம் ஒவ்வொரு ஆண்டும் கழக ஆட்சிக் காலத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியிலே இந்தத் திட்டத்தையே ரத்து செய்ததின் காரணமாகத்தான் நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணிகள் தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 1995-96இல் ஒரு கோடியே

74 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள்தான் ஏற்றுமதி செய்யப்பட்டன. மாறாக தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1999-2000ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்ற இந்த ஒரு புள்ளி விவரத்திலிருந்தே நெசவாளர்கள் வாழ்வில் அக்கறை காட்டிய அரசு எது என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனவே கைத்தறியாளர்களின் கண்ணீரைத் துடையுங்கள் முதலில்; கதைகள் விடலாம் பிறகு! என்று அ.தி.மு.க. அரசுக்கு அறிவுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

3-8-2002

2805. அடையாள உதவி புரிய; அம்மையார்குப்பம்!

உடன்பிறப்பே,

“இலையே உணவிலையே கதி
இலையே எனும் ஏழ்மை
இனிமேலிலை எனவே
முரசறைவாய்!”

என்று புரட்சிக்கவிஞரும்,

“தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்”

என்று பாரதியாரும்

பாடி உலவிய இந்தப் பைந்தமிழ் நாட்டில்தான், பல பகுதிகளில் பசி, பஞ்சம், பட்டினி ‘பாலையாகிவிட்டது நிலம்’ என்ற பரிதாபக் குரல்! நாவின் நுனியை ஈரமாக்கிக் கொள்ளவாவது ஒரு சொட்டு தண்ணீர் என்ற குமுறல்! அந்தக் குமுறல் கேட்டுக் கோபித்துக் குதிப்போரைத்தான் கோட்டையிலே காணமுடிகிறது. இந்த அவதியிலும் அவர்தம் அட்டகாசத்துக்கும் அடாவடிக்கும் அளவில்லை!

கண்ணீர் விட்டுக் கதறும் கைத்தறி நெசவாளர்களின் நிலை கண்டும் - அவர்கள் உழைக்கத் தயாராக இருந்தும் உயிர் பிழைக்க வேலையொன்றும் தென்படாத திண்டாட்டம் உணர்ந்தும் - பாடுபடத் தயங்கினோமில்லை! எம்மைப் பயன்படுத்திக் கொள்ளத்தான் அம்மையார் ஆட்சியில் ஆயத்தச் செயல்களுமில்லை ஆக்கப்பூர்வ பணிகளுமில்லை! என்று நெசவாளர்கள் சிந்தை மிகநொந்து கிடக்கின்றார் - வருவார் வருவார் என்று எதிர்பார்த்தும், நிவாரணம் ஏதேனும் நிறைவாகத் தருவார் தருவார் எனத் தவங்கிடந்தும் ஏமாற்றமடைந்து

தவித்திட்ட நிலையில் ஊரார் கண்டு உளமுருகி, காய்ந்து கருகிடும் கைத்தறியாளர் குடும்பங்களுக்குக் கஞ்சித் தொட்டியாகிலும் திறப்போம் என்று முன்வந்தபோது - முற்றாக நிலைமை நெசவாளர் வீடுகளில் கெட்டுவிட்டது என்பதுணர்ந்து, அரசு முயற்சி எள்ளளவும் எட்டிப் பார்க்கவுமில்லை எனக் கேள்வியுற்று, தட்டிக் கேட்கும் எதிர்வரிசையில் இருக்கும் நாம் பிரச்சினை பொது என்பதால் அரசுக்கு ஆதரவாகப் கைத்தறியாளருக்குக் கை கொடுப்போம், அரசும் நன்றியுடன் நம்மைப் பாராட்டுமென்று கருதி கழக அமைப்புக்களை வேண்டி தேவைப்படும் பகுதிகளில் கஞ்சித் தொட்டிகளைத் திறக்கச் சொன்னோம்.

போர்க்களத்தில் மோதிக் கொண்ட இருதரப்பு வீரர்களிடம்கூட வேற்றுமை பாராட்டாமல் இரு சாராருக்கும் உணவு படைத்த பெருஞ்சோற்று உதியலாதன் நமது தமிழர் மூதாதையென்பதால் அவ்வுணர்வு பட்டுப் போகாமல் இருக்கின்றது என்ற காரணத்தினால் தான் பசியோடு போராடுகிறவர்கள் துயர் துடைத்திட நம்மாலியன்ற வகையில் துணை நிற்கச் செய்தோம்.

சீனப்போரின்போது பெருந்தலைவர் காமராசரிடம் யுத்தநிதி கழகச்சார்பில் வழங்கினோம்.

பாகிஸ்தானுடன் பாரதம் மோதியபோது பக்தவத்சலனாரிடம் போர்நிதி அளித்தோம்.

பங்களாதேஷ் சண்டையின்போதும் பிரதமர் இந்திராகாந்தியிடம் பெருநிதி வழங்கினோம்.

நமது கூட்டணியில் இல்லாதபோதே இந்தக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் நாம் வழங்கிய நிதியை - அளித்த உதவியை - தந்திட்ட தார்மீக ஆதரவை - தட்டிக் கழிக்கவுமில்லை! வெட்டிப் பேசவுமில்லை! நன்றி நவின்றனர்! நாகரிகம் காத்தனர்!

நாகை, தஞ்சைப் பகுதியில் பெருவெள்ளம் வந்த போதும் அப்படித்தான்! தேங்கிக் கிடந்த கைத்தறியாடைகளை அண்ணாவும் நானும் மற்றவர்களும் 1953ல் தோளில் சுமந்து விற்று, வெள்ள நிவாரண நிதிக்கும் கைத்தறி ஆடைகளையே வாங்கி அன்றிருந்த காங்கிரஸ் அரசிடம் கொடுத்தோம். அந்த அரசும் அதனை வாங்க மறுத்திடவில்லை!

ஆனால் இன்றோ! நாம் கஞ்சி வழங்குகிற இடங்களில் எல்லாம் அ.தி.மு.க.வினர் போட்டி மனப்பான்மையுடன் - வெறுப்பும் மறுப்பும் குழைத்து - பிரியாணி முட்டை வழங்குகிறார்களாம்!

பரவாயில்லை! நாம் கஞ்சி வழங்கிட முன் வந்ததால், கைத்தறி சகோதர சகோதரிகளுக்கு பிரியாணியாவது கிடைக்கிறதே!

நம்மால் வழங்க முடிந்தது கஞ்சிதான் - நம் வசதிக்கு இதுதான் முடிகிறது. புராணக் கதைப்படி பார்த்தால், கண்ணனுக்கு குசேலர் கொண்டு போன புல்லரிசி அவல் போல!

ஆம்! அன்புடன் - நட்புணர்வுடன் - பாசத்துடன் - நேசத்துடன் தருவது!

போட்டியில் பொன்னும் பொருளும் பிரியாணியும், விருந்தும் நெசவாளர்க்கு கிடைத்தால் மகிழ்ச்சி! இரட்டிப்பு மகிழ்ச்சி!

எளிய முறையில் இதயம் மலர்ந்து இன்முகம் காட்டி எமை வரவேற்கும் அந்த ஏழை இறைவன்களைக் காணவும் - அவர்களுடன் கஞ்சியருந்தி ஆறுதல் கொள்ளவும் இத்திங்கள் ஆறாம்நாள் அம்மையார் குப்பம் செல்கிறேன்.

அடையாள உதவி புரியத்தான்!
அரசின் நிறைவான உதவிக்கு
வழி காட்டத்தான்!

அன்புள்ள,

மு.க.

4-8-2002

2806. வேறென்ன சொல்லத் தோன்றுகிறது!

உடன்பிறப்பே,

ஓய்வுக்காக வந்திருந்த போதிலும் உண்மை மறைப்போர் பொய் வாரி இறைப்போர் கூத்துக்கள் தமிழ்நாட்டு எல்லை கடந்தும் தாவிப் பாய்வது காணும்போது தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியினர்க்கு என்ன சொன்னாலும் அவர்கள் தமது கேளாக் காதையே திருப்புவர் என்பதால் சிந்திக்கும் திறனுடையார் - பத்திரிகைப் பெண்ணே என்று பாவேந்தர் பாரதிதாசனார் விளித்ததற்கேற்ப அத்தகைய நற்பெண்ணின் பண்புடன் நடத்தப்படும் பத்திரிகையாளர்களுக்காக சில சொல்லவும் கேட்கவும் விரும்புகிறேன்.

தமிழக நெசவாளர்கள், அரசின் இலவச வேட்டி சேலைத் திட்டத்தையே கருவறுத்துக் கைவிட்டு விட்ட காரணத்தாலும் - அரசின் அலட்சியப் போக்கினாலும் - அல்லலுக்கு ஆளாகி, தெற்கு மாவட்டங்களில் நெசவாளர் பகுதிகளில் பசியும் பட்டினியுமாய் வாடியது கண்டு, கஞ்சித் தொட்டிகள் அந்தப் பகுதி மக்களால் அமைக்கப்பட்டன. பொதுப் பிரச்சினைகளில் அதுவும் நிவாரண உதவிகளில் அரசுடன் ஒத்துழைப்பது என்ற எதிர்க்கட்சிக்குரிய ஆக்கப்பூர்வமான இலக்கணத்துக்கேற்ப கஞ்சி வழங்கி நெசவாளர்களின் அன்றாடத் துன்பம் நீக்கிட தி.மு.க. அமைப்புகளின் சார்பிலும் அவர்களுக்குக் கஞ்சி வழங்குமாறு ஜூலை மாதம் 28ந்தேதி வேண்டுகோள் அறிக்கையொன்றை வெளியிட்டேன்.

நாகரிகமான அரசு என ஒன்று இருந்திருந்தால் நமது பணியும் நலிந்த மக்களுக்குத்தானே எனக் கருதி அதனை வரவேற்றிருக்கும். ஆனால் இந்த அரசின் தலைவியான ஜெயலலிதா உடனடியாக என்மீது வசைமாரிப் பொழிந்து மிக இழிவான வார்த்தைகளைக் கொட்டி ஜூலை 29 மாலை ஏடுகளில் ஒரு அறிக்கை வெளியிட்டதோடு ஜூலை மாதம் 25ந்தேதியே

அமைச்சரவைக் கூட்டத்தில் நெசவாளர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் தீட்டிவிட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப் பிட்டிருந்தார்.

எனது கேள்வியெல்லாம் இதுதான்! நெசவாளருக்கு அரசு நிவாரண உதவிகள் செய்யும் கடமையை ஆற்றினால்; அதையொட்டி அந்த நெசவாளர்களின் பசி போக்க கஞ்சி வழங்குவது பாபச் செயலா? தேசத் துரோகமா? அல்லது இதுவும் பொடா சட்டத்தின்படி தடுக்கப்பட்டுள்ள காரியங்களில் ஒன்றா?

எனது அடுத்த கேள்வி, ஜூலை 25ந்தேதியே அமைச்சரவையில் நெசவாளர் நிவாரணத்துக்கான திட்டம் தீட்டப்பட்டு முடிவெடுத்திருந்தால், அது உண்மையானால் அதை அன்றைக்கே அறிவிக்காமல் - மிக அவசியமும் அவசரமும் வாய்ந்த அந்த முடிவை, ஜூலை மாதம் 29ந்தேதி வரையில் கிடப்பிலே போட்டிருந்த காரணம் என்ன? 29 மாலையில் வெளியிட்டது ஏன்?

ஜூலை மாதம் 28ந்தேதி நான் வேண்டுகோள் அறிக்கை வெளியிட்டு கஞ்சித் தொட்டிகள் திறக்க கழக அமைப்புகளைக் கேட்டுக் கொள்ளும் வரையில் ஜூலை 25 அன்று அமைச்சரவையில் முடிவெடுத்திருந்தால் அந்த முடிவை குறட்டை விட்டுத் தூங்க வைத்த மர்மம் என்ன? 'இந்து' கட்டுரையாளர் நண்பர் ஜெயந்த்தாவது விளக்குவாரா?

கடந்த கால ஆட்சிகளில் இப்படி நெருக்கடியான நேரங்களில் நிவாரண உதவிக்கான முடிவுகளை அமைச்சரவை எடுத்தால், அந்த அமைச்சரவைக் கூட்டம் முடிந்தவுடனேயே பத்திரிகை நிருபர்களுக்கு அறிவிப்பதுதானே வழக்கம்!

அந்த வழக்கத்திற்கு மாறாக இடையில் நான்கு நாட்கள் பொறுத்திருந்து, கழகச் சார்பில் நான் வேண்டுகோள் விடுத்த பிறகு வாரிச் சுருட்டி எழுந்திருந்து என்மீது வசைபாடியது குறித்தும், கழகச் சார்பில் நெசவாளருக்கு கஞ்சி வழங்கும் இடங்களில் எல்லாம் ஆளுங்கட்சி தாதாக்களை முன்னிறுத்தி அமைச்சர்களைப் பின் நிறுத்தி, அ.தி.மு.க. சார்பில் முட்டையும் பிரியாணியும் வழங்கியது ஏடாகூடமல்லவா? ஏட்டிக்குப் போட்டியல்லவா?

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்குக் கழக ஆட்சியில் வாரம் ஒரு முட்டை வழங்கியதை நிறுத்தி விட்ட இந்த அரசின்

இரக்கமற்ற இதயத்துக்கு, இப்போது மட்டும் பிரியாணியுடன் முட்டை வழங்க தோன்றியது என்பது துப்பு கெட்ட செயல்தானே!

இந்த உண்மைகளையெல்லாம் புரிந்திருந்தும் புரியாதவைகளைப் போல சில ஏடுகளில், நெசவாளர்களைப் பற்றிக் கவலைப்படாமல் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கஞ்சித் தொட்டியா? பிரியாணி முட்டையா? என்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன என்று விமர்சிக்கின்ற வேதனையான வேடிக்கையைக் காண முடிகிறது!

உண்மையிலேயே பத்திரிகா தர்மத்தில் அக்கறையுள்ளவர்கள் பதில் சொல்லட்டும்!

என்னதான் நாட்டில் நடந்தாலும், எத்தனை ஏழை விவசாயிகள் மற்றும் நெசவாளிகள் வேலையின்றி விழிநீர் வடித்தாலும் - பட்டினி கிடந்தாலும், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற தி.மு. கழகம் ஏன் என்று கேட்கக் கூடாது என்கிறீர்களா?

நெசவாளர் துயரத்தை ஒரு எதிர்க்கட்சி நிரந்தரமாகத் துடைத்து விட முடியுமென்று எண்ணியா அடையாளபூர்வமாக கஞ்சி வழங்கும் பணியில் தி.மு.க. தன்னையும் இணைத்துக் கொண்டது?

இல்லையே! அரசாங்கத்தின் கவனத்தை நெசவாளர் பக்கம் - விவசாயிகள் பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காகத்தானே? இது என்ன ராஜ துவேஷ குற்றமா?

இதை உணர்ந்தும் உணராதவர்களைப் போல, பத்திரிகை நடத்துவோர் சிலர் - கஞ்சி வழங்குதலும் - பிரியாணி முட்டை வழங்குதலும் - ஒரே மாதிரியான கண்ணோட்டத்திற்குரியவை என விமர்சிப்பது என்ன நியாயம்?

இந்த ஏடுகளின் ஆசிரியர்கள் அல்லது ஏடுகளில் எழுதுவோர் - யாராயினும்; நான் அம்மையார்குப்பம் நெசவாளிகளுக்கு கஞ்சி வழங்கத் தேதி குறித்தபிறகு, அதே நாளில் அதே ஊரில் அதே நேரத்தில் அ.தி.மு.க.வினர் போலீஸ் படையின் துணையுடன் போட்டிக்காக பிரியாணி முட்டை வழங்குவதாக அறிவித்ததைக் கண்டித்தது உண்டா? தவறு என எழுதியதாவது உண்டா?

நமது நிகழ்ச்சியால் - அதை எதிர்க்கும் அ.தி.மு.க.வின் அசிங்கமான போட்டி நிகழ்ச்சியால் அந்தச் சிறிய ஊரில் பெரிய

கலவரம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக கழக நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டேனே! அதையாவது பாராட்டும் மனப்பக்குவம் அந்தச் சில ஏடுகளுக்கு இருந்ததா? மனமிருந்தால் தானே பக்குவம் இருந்திட!

அது என்னவோ, அ.தி.மு.க.வையும் தி.மு.க. வையும் இணைத்து இணைத்துத்தான் குறை எழுதுவார்கள்! அவ்வளவு குறுகிய உள்ளம்! அதற்குப் பெயர் நடுநிலையாம்! அதாவது நியாயம் எது? அநியாயம் எது? என்று பகுத்துப் பார்க்காமல் தமது விருப்பத்திற்கேற்ப விமர்சிப்பதுதான் நடுநிலை போலும்!

இந்த நடுநிலை நாசமாய்ப் போக! என்று சொல்வதைத் தவிர, வேறென்ன சொல்ல இருக்கிறது! அதைத் தவிர வேறென்ன சொல்லத்தான் தோன்றுகிறது!

அன்புள்ள,

மு.க.

9-8-2002

2807. வாழ்க முரசொலி!
வெல்க தமிழ் இனம்!

உடன்பிறப்பே,

இன்று ஆகஸ்டு 10ஆம் நாள். இதே மாதிரி ஒரு ஆகஸ்ட் 10ஆம் நாளன்றுதான், ஆம்! என் வயது 19 ஆக இருந்தபோது, அதாவது 60 ஆண்டுகளுக்கு முன்பு, இன்று காளையை அடக்கும் காளையாக விளங்குகிற முரசொலி கருவாகித் திருவாகி என் கரங்களிலே தவழ்ந்து; தமிழ் முழங்கியது! தன்மானம் முழங்கியது! தருக்கர் கொட்டம் தரைமட்டமாக்குவோம் என முழங்கியது! என்பதைக் குளிர் தடவும் மாநிலமொன்றில் அமர்ந்து உனக்குக் கடிதம் எழுதிக் கொண்டே கண்கலங்கிட மகிழ்ந்து பூரிப்படைகின்றேன்.

திருவாரூர் கருணாநிதி அச்சகம் என்ற நிறுவனத்திலும், கிருஷ்ணா அச்சகம் என்ற நிறுவனத்திலும் அவற்றின் உரிமையாளர்கள் கொண்டிருந்த அச்சத்தையும் தயக்கத்தையும் போக்கி முரசொலியின் முதல் துண்டு வெளியீடு அச்சாகி, பின்னர் அது வார இதழாகி, அதற்குப் பிறகு என் சினிமாத் துறையின் வருமானத்தைப் பெரும் பகுதி விழுங்கி வளர்ந்த நாள் இதழாகவும் இன்று நாள்தோறும் என்னையும் உன்னையும் இணைக்கும் கடிதம் தாங்கி வரும் நல்ல தூதுவனாகவும், இலட்சியம் பரப்பும் ஈட்டிமுனையாகவும், கொள்கை வெற்றிக்கான வேலாகவும் வாளாகவும் பயன்படுகிற நிலையில்; இதனைப் படிக்காதார் சிலர் உண்டெனினும் பாராட்டாதார் பகை முனையிலேகூட யாருளர்?

முரசொலிக்கு நான் நிறுவனர்தான் - ஆசிரியராகச் சில காலம் இருந்தேன் - பின்னர் தம்பி மாறனும், அதன்பிறகு தம்பி செல்வமும் அப்பொறுப்பேற்று முரசு, தமிழகமெங்கும் ஒலிக்கச் செய்துளர்.

தமிழகச் சட்டப்பேரவை வரலாற்றில் அ.தி.மு.க. ஆட்சியில் முரசொலி ஆசிரியர் செல்வம் பேரவைக்குள்ளேயே கூண்டிலேற்றப்பட்டார் என்ற நிகழ்ச்சியைப் போல ஒரு நிகழ்ச்சியை வேறு எந்த ஏடு சந்தித்திருக்கிறது!

அடக்குமுறைகளை உச்சகட்டமாகச் சந்தித்த வரலாறும், பாதுகாப்புச் சட்டமே முரசொலி மாறனைப் பதம் பார்த்த வரலாறும் மொழிப்போரின்போது முரசொலிக்குத்தானே வாய்த்தது!

மறைந்த பெருஞ்சித்திரனார் தெரியும் உனக்கு! தமிழ் வெறி பிடித்த கிழட்டுச் சிங்கம்! சில விஷயங்களில் அணுகுமுறையில் எங்களுக்குள் மாறுபாடான கருத்து உண்டு!

சில ஆண்டுகளுக்கு முன்பு - முரசொலியை நிறுத்தப் போகிறேன் என அறிவித்தேன் - கழகத்தினரே வாங்கிப் படிப்பதில்லை என்ற கோபத்தில்! துணை ஆசிரியர் குழுவிலும் ஆர்வமும், ஆற்றலும் ததும்பவில்லை என்ற சோகத்தில்!

செய்தி வெளிவந்த அடுத்த கணம், பெருஞ்சித்திரனார் அன்பகம் கழக அலுவலகத்திற்கு ஓடோடி வந்துவிட்டார். பேராசிரியரையும் என்னையும் பார்த்து பெருஞ்சீற்றமுடன் முரசொலியை நிறுத்துவதா? கூடவே கூடாது! என்று குமுறினார்!

உங்களுக்குத்தான் முரசொலி பிடிக்காதே என்றேன்!

முரசொலி பிடிக்காது என்று யார் சொன்னது? உங்கள் நிதானப்போக்குத்தான் சில நேரம் எனக்குப் பிடிக்காது! இந்த முரசொலி ஒரு தாள் இல்லாவிட்டால் தமிழ் இனம்; இன்னும் தன்மானம் இழந்துவிடும். தமிழர்கள் சார்பாக நான் கட்டளையிடுகிறேன்! ஒருநாள்கூட முரசொலியை நிறுத்தாதீர்கள். தொடர்ந்து நடக்க ஏற்பாடு செய்யுங்கள்! என்று கர்ச்சனை செய்தார் என்றால், முரசொலி இந்த இனத்தின் குரலாக இருப்பதை உணர்த்தினார் என்பதுதானே உண்மை!

அவர் சொல்லை அப்பொழுதே ஏற்று முரசொலி நடையை நிறுத்தாமல் பயணம் தொடர்ந்தது! நெருக்கடி காலத் தணிக்கை நெருப்பாற்றையும் நீந்திக் கடந்தது!

இன்று முரசொலி 60வது வயதைக் கடந்து மணி விழா நிறைவு ஆண்டினைக் கொண்டாடுகிறது.

இன்றே விழா நடத்தியிருக்கவேண்டும்! முரசொலியும், அண்ணாவும், பெரியாரும், கழகமும் வேறு வேறல்லவே!

அதனால் இன்று 60 ஆண்டு நிறைவுற்ற மணி விழா ஆண்டினை நினைவூட்டிவிட்டு, வரும் செப்டம்பரில் பெரியார், அண்ணா, கழகம் - பிறந்த முப்பெரும் விழாவின்போது முரசொலியின் மணி விழாவும் இணையும் என்ற நற்செய்தியையும் வழங்குகிறேன். வாழ்க முரசொலி! வெல்க தமிழ் இனம்!

அன்புள்ள,

மு.க.

10-8-2002

2808. பசி போக்கிட இடமல்ல முக்கியம்; பாசமுள்ள இதயம்தான் முக்கியம்!

உடன்பிறப்பே,

நெசவாளர்களின் தற்போதைய அவல நிலைக்குக் காரணம் கடந்த ஐந்தாண்டு கால தி.மு.கழக ஆட்சிதான் என்று ஜெயலலிதா தனது அறிக்கையிலே தெரிவித்திருந்தார். ஜெயலலிதாவின் காவல்துறை மதுரையிலே நடத்திய அராஜகங்களைக் கண்டிக்க முற்பட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்களும் தனது அறிக்கையிலே நெசவாளர்களின் நிலை கடந்த பத்தாண்டு காலத்தில்தான் பாதிக்கப்பட்டது என்று எழுதியிருக்கிறார். கழக அரசையும் இணைத்துச் சாட்டப்பட்ட இந்தக் குற்றச்சாட்டிற்கு எந்தவிதமான ஆதாரபூர்வமான புள்ளிவிவரங்களும் தரப்படவில்லை. ஜெயலலிதாவின் குற்றச்சாட்டிற்கு அவர் அறிக்கை வெளியிட்ட நாளுக்கு மறுநாளே நான் புள்ளி விவரங்களோடு பதில் அளித்திருந்தேன். அதற்குப் பிறகு அவர்கள் தரப்பில் வழக்கம்போல் எந்தவிதமான பதிலும் இல்லை. ஆனால் அந்த இரண்டு கருத்துக்களையும் படித்துவிட்டோ அல்லது படிக்காமலோ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கழக அரசின் மீதும் குற்றச்சாட்டினை சுமத்தியிருக்கின்றது.

கழக ஆட்சியின்போது கைத்தறித் துறையின் அமைச்சராக இருந்த என்.கே.கே. பெரியசாமி தனது பொறுப்பில் இருந்த அந்தத் துறையிலே செய்யப்பட்ட சாதனைகளையெல்லாம் 17 பக்கங்களில் ஒரு நீண்ட தொகுப்பாக என்னிடமளித்து, அதைப் படித்துவிட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கம் அளித்து கடிதம் எழுதிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். 17 பக்கங்களில்

அவர் தந்த புள்ளிவிவரங்களிலிருந்து எடுத்த விவரங்களைத்தான் இன்றைய கடிதத்தில் எழுதியிருக்கின்றேன்.

என் கடிதங்களைப் படிக்கும் ஆர்வமுள்ள கழகச் சொற்பொழிவாளர்கள் இதையும் படித்து, கழகத்தின் சார்பில் வரும் 19ஆம் தேதி நடைபெறவிருக்கின்ற கண்டனப் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்களில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1953ஆம் ஆண்டிற்கு முன்பு கூட்டங்களிலே உரையாற்றுபவர்களுக்கு மாலைகள் அணிவிப்பது தான் வழக்கமாக இருந்தது. நெசவாளர்களின் துயரைத் துடைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை அண்ணாவும், நானும் மற்றும் கழக முன்னணியினரும் தோளிலும் தலையிலும் சுமந்து தெருக்களில் விற்றபோதுதான், இனிமேல் கூட்டங்களில் உரையாற்றுவோருக்கு மாலைக்குப் பதிலாக கைத்தறி ஆடைகளை வாங்கி அணிவித்திட வேண்டும் என்ற புதிய முறையையே கழகம் அறிமுகப்படுத்தியது.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்வில் வளம் சேர்க்க வேண்டுமென்ற குறிக்கோளோடுதான் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இலவச வேட்டி சேலைத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுத் தொடர்ந்து 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் கழக ஆட்சியிலும் சிறப்பாக அமல்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் அத்திட்டத்தை பாழ்படுத்தும் வகையிலே ஜெயலலிதாவின் 1991-1996 வரையிலான முந்தைய ஆட்சிக் காலத்திலே கைத்தறி நெசவாளர்களிடமிருந்து அவர்கள் உற்பத்தி செய்த துணியைக் கொள்முதல் செய்யாமல் கோவாப்டெக்ஸ் மூலம் 12 கோடி ரூபாய் ரொக்கமாக எடுத்துச் சென்று ஆந்திராவிலிருந்து தரமற்ற, அளவு குறைந்த, மொத்தமாக 2 கோடி ரூபாய் கூட மதிப்பில்லாத, வேட்டி சேலைகளை விசைத்தறியில் உற்பத்தியானவற்றைக் கொள்முதல் செய்து இலவச வேட்டி சேலைத் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொண்ட கொடுமையும் நடைபெற்றது.

1996இல் மீண்டும் கழக ஆட்சி ஏற்பட்டது முதல் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் உரிய நேரத்தில் நூலும், அதற்குரிய ஊதியமும்

அளித்துத் தொடர்ந்து ஐந்தாண்டு காலம் நல்ல தரமான வேட்டி சேலைகள் உற்பத்தி செய்யும் வாய்ப்பை வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள நெசவாளர்களுக்கு அளித்து அவர்களின் நலன் பாதுகாக்கப்பட்டது. 30 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் செய்த உற்பத்தி போக மீதமுள்ள தேவைக்கு மட்டும் கழக ஆட்சியிலே விசைத்தறி கூட்டுறவு சங்கத்தில் கொள்முதல் செய்யப்பட்டது.

கைத்தறி நெசவாளர்கள் நெய்யக்கூடிய பகுதிகளில் எந்த ரகம் நெய்கின்றார்கள் என்று கவனித்து ஆண்டிப்பட்டி, ஜக்கம்பட்டி, திருவில்லிப் புத்தூர், திண்டுக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு பகுதிகளில் இலவச வேட்டி சேலை உற்பத்தியை கழக அரசு தொடங்கி நெசவாளர்களின் துயரைத் துடைத்தது.

1996ஆம் ஆண்டு வரையில் ஜெயலலிதாவின் ஆட்சியில் கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் இழப்பு 7 கோடியே 28 இலட்சம் ரூபாய்.

தி.மு.கழக ஆட்சியில் 1996-97இல் பத்து இலட்ச ரூபாயும், 97-98இல் 20 இலட்ச ரூபாயும், 98-99இல் ஒரு கோடியே 36 இலட்சம் ரூபாயும், 1999-2000இல் ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாயும் என்ற வகையில் தொடர்ந்து இலாபத்தை அதிகப்படுத்தி மொத்தம் 2 கோடியே 71 இலட்சம் ரூபாய் இலாபம் என்ற அளவிற்கு ஆக்கியிருந்தோம்.

ஆனால் இன்றைய ஜெயலலிதா ஆட்சியில் 2001-2002இல் கோவாப்டெக்ஸின் இழப்பு பல கோடி ரூபாயாகும். எனக்குத் தெரிந்த வரையில் இது சுமார் 15 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கலாம். இந்த இழப்பு அடுத்த ஆண்டு இன்னும் பல கோடி ரூபாயாகப் பெருகும்.

கோவாப்டெக்ஸ் நிறுவனத்தில் தற்போதுள்ள நிலவரப்படி பல விற்பனை நிலையங்களில் விற்பனை இல்லை. அங்கே பணிபுரியும் அலுவலர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூட முடியாத நிலை. பல விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதற்கெல்லாம் முக்கிய காரணம் ஜெயலலிதா ஆட்சியிலே கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்வதற்குப் பதிலாக விசைத்தறி உற்பத்தியைக் கொள்முதல் செய்யத் தொடங்கியதுதான்! இந்த மாற்றத்தினால்

யார் யார் எவ்வளவு பயன்பெற்றார்கள் என்பதெல்லாம் விசாரணைக்கு உரியவைகளாகும்.

கழக ஆட்சிக் காலத்தில் ஒரு முறை ஆரணி, பரமக்குடி போன்ற பகுதிகளில் அளவும், ஜரிகை தரமும் குறைவான சேலைகள் தேங்கிக் கிடந்த போது, அந்தப் பகுதி நெசவாளர்களின் நலன்கருதி ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு அவைகளைக் கொள்முதல் செய்த காரணத்தால், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் தனது தொகுதியில் சௌராஷ்டிர இன மக்களுக்கு ஏற்பட்ட நலிவை நிரந்தரமாக நீக்கி வைத்தீர்கள் என்று என்னிடமே பாராட்டினார். வேலூர், குடியாத்தம், செங்கற்பட்டு ஆகிய பகுதிகளில் வாழும் நெசவாளர்களின் நலன் கருதி, லுங்கி ரகங்களுக்கு என்றே சிறப்பு சலுகை கழக ஆட்சியிலே வழங்கப்பட்டது. சிறப்புத் தள்ளுபடி மானியம் 30 சதவிகிதம் என்று உயர்த்தப்பட்டதும் கழக ஆட்சியிலேதான். 1991-1996ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா ஆட்சியில் நெசவாளர் சங்க உறுப்பினர்கள் நான்கு இலட்சம் பேர் என்று கணக்கு காட்டப்பட்டுத் தள்ளுபடி மானியம் பெறப்பட்டது. ஆனால் கழகம் ஆட்சிக்கு வந்தபின்னர் உண்மையாக நெசவாளர்கள் யாரென்று பார்த்து அடையாள அட்டை வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்டபோது ஒன்றரை லட்சம் பேர்தான் கூட்டுறவு சங்கங்களிலே உண்மையாக பதிவு செய்து கொண்டுள்ளார்கள் என்பது தெரிய வந்தது. போலியான உறுப்பினர்கள் களையப்பட்ட காரணத்தால் உண்மையான நெசவாளர்கள் அதிகப் பயனடையும் நிலை கழக ஆட்சியிலே ஏற்பட்டது.

தி.மு.கழக ஆட்சி 1996ஆம் ஆண்டு பொறுப்பேற்றதும் கைத்தறியாளர்களின் நிலையை அறிந்து பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அ.தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்டு குழு ஒன்று அமைத்து, அந்தக் குழு நெசவாளர் பகுதிகளுக்கெல்லாம் நேரில் சென்று பரிசீலித்து அளித்த 24 பரிந்துரைகளையும் உடனடியாக ஏற்றுக்கொண்டு அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்ததோடு, நெசவாளர்களுக்காக வேறு ஏதாவது பரிந்துரைகள் உள்ளதா என்று கேட்டவன்தான் நான்! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச்

சேர்ந்த, அந்தக் குழுவிலே உறுப்பினராக இருந்த பெருந்துறை சட்டப்பேரவை உறுப்பினர் திரு. நா. பெரியசாமி அவர்கள் முதல்வர் அறையிலே என் கைகளைப் பிடித்துக் கொண்டு நன்றி கூறிய நிகழ்ச்சி என் மனக்கண் முன்னால் இன்றளவும் நிழலாடுகிறது.

நெசவாளர் சங்கம், ஜவுளித் துறை, நூற்பாலை ஆகியவற்றில் ஜெயலலிதா ஆட்சியில் ஏற்பட்ட முறைகேடுகளையும், நிர்வாகச் சீர்கேடுகளையும் அகற்றியதுடன் அவற்றை உரிய முறையில் ஒழுங்குபடுத்தி, தொலைநோக்குப் பார்வையோடு திட்டமிட்டு, பல துறை நிபுணர்களோடு ஆராய்ந்து தமிழகத்திற்கென்று தனியாக ஒரு ஜவுளிக் கொள்கை வகுக்கப்பட்டதும் கழக ஆட்சியிலேதான்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் பத்து சதவிகிதம்தான் தள்ளுபடி மானியம் ஆண்டுக்கு 100 நாட்களுக்கு மட்டும் தரப்பட்டு வந்தது.

1996ல் நான் முதல்வராகப் பொறுப்பேற்றதும் ஆண்டு முழுவதற்கும் பத்து சதவிகிதம் தள்ளுபடி மானியம் என்று அறிவித்து அவ்வாறு அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகும் நெசவாளர் வாழ்வில் அல்லல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டவுடன் தள்ளுபடி மானியத்தை 20 சதவிகிதமாக உயர்த்தியதோடு, அந்த 20 சதவிகித தள்ளுபடி மானியம் ஆண்டு முழுவதற்கும் தரப்படும் என்றும் அறிவித்தேன்.

60 வயது நிரம்பிய நெசவாளர்களுக்கு மாதம் 250 ரூபாய் ஓய்வூதியம் என்று அறிவித்து, அளித்ததும் கழக அரசுதான். ஏழை நெசவாளர்கள் இறந்துவிட்டால், அவர்களது குடும்பத்திற்கு நிவாரண நிதி 15 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியதும் கழக அரசுதான்.

கழக ஆட்சிக் காலத்திலேதான் கைத்தறி நெசவாளர்களுக்காக மத்திய அரசு ஒதுக்கிய மானியத் தொகையில் 54 சதவிகிதம் தமிழகமே பெற்றது. எஞ்சிய அனைத்து மாநிலங்களுக்கும் 46 சதவிகித அளவுதான் மத்திய அரசு ஒதுக்கிய மானியத் தொகை கிடைத்தது. கழக ஆட்சிக் காலத்தில் ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு திட்டம் தீட்டி செயல்பட்டதின் காரணமாக 300 தறிகள் ஓடிய இடங்களில் 1000 தறிகள் ஓடுகின்ற

நிலை ஏற்பட்டது. சுமார் 200 சங்கங்கள் ஏற்றுமதியாளருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இலாபத்தை பெருக்கின. ஆனால் தற்போது அந்த ஏற்றுமதி உற்பத்தி 80 சதவிகிதம் குறைந்து வாரத்தில் ஒருநாள், இரண்டு நாள்தான் நெசவாளர்கள் தறியில் பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணத்திற்கு ஒன்று கூறவேண்டுமேயானால், சென்னிமலை சென்கோவாப்டெக்ஸில் 300 தறி இருந்த இடத்தில் 1300 தறிகள் என்று கழக ஆட்சியின்போது உயர்ந்து இரவு பகலாக உற்பத்தி செய்து வந்த நிலை மாறி, தற்போது அங்கே நெசவாளர்களுக்கு கூலி கொடுக்கக் கூட முடியாமல் உள்ளது. கழக ஆட்சியிலே நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து வந்த ஏற்றுமதியாளர்கள் தற்போது தனியாரிடம் அந்தப் பொறுப்பை மாற்றிவிட்டார்கள். கழக ஆட்சியில் ஏற்றுமதியாளர்களுக்கு இந்தியாவிலேயே தமிழகம்தான் நம்பிக்கைக்குரிய மாநிலமாக காட்சி அளித்தது. ஆனால் தற்போது ஏற்றுமதியாளர்களுக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மீதிருந்த நம்பிக்கை போய்விட்டது என்பதற்கு யார் காரணம் என்பதை ஜெயலலிதாவும், அரசியல் ஆதாயங்கருதி அவருக்கு மறைமுகமாக வக்காலத்து வாங்குகிற சில கட்சித்தலைவர்களும் உணர்ந்து பார்க்க வேண்டும்.

இந்தியாவிலேயே கழக ஆட்சிக் காலத்தில்தான் நெசவாளர்களுக்காக சென்னிமலையில் ஒரே இடத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் கட்டித் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டு, பணிகளும் தொடங்கப்பட்டு தற்போது முடிவடையும் நிலையிலே உள்ளன என்பதையும் எண்ணிப் பார்த்திட வேண்டும். அந்த கைத்தறி நெசவாளர்கள் பசி பட்டினியுடன் தவிக்கும் கொடுமையைக் கண்டு உள்ளம் உருகித்தான் அவர்களுக்குக் கழக அமைப்புகளின் சார்பில் கஞ்சி வழங்கிட வேண்டுகோள் விடப்பட்டது. அதனால் ஆத்திரமடைந்துள்ள அ.தி.மு.க. ஆட்சியும், ஆளுங்கட்சியினரும் ஏட்டிக்குப் போட்டியாக செயல்பட்டு அராஜகம் விளைவிப்பதை உணர்ந்தும் உணராதவர்களைப்போல, இது ஏதோ தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கு மிடையே நடக்கும் லாவணி என்று அரசியல்

கண்ணோட்டத்துடன் விமர்சிப்போரின் போக்கு கண்டு மனம் நொந்து மிகவும் வேதனைப் படுகிறேன்.

எனவே பாதிக்கப்பட்டுள்ள ஏழை நெசவாளர்களுக்கு ஊரின் தெருக்களிலோ, பொது இடத்திலோ கஞ்சி வழங்க ஏற்பாடு செய்யாமல் கஞ்சியோ, உணவோ வழங்க வேண்டிய தேவையுள்ள பகுதிகளில் கழக அலுவலகத்திலோ அல்லது திருமண மண்டபங்களிலோ வழங்கிட வேண்டுமெனக் கழக அமைப்புகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகைகளில் நல்லெண்ணம் கொண்ட சில வாசகர்கள் எழுதியுள்ள கடிதங்களில் காணப்படும் கருத்தின் அடிப்படையிலேயே தலைமைக் கழகம் இந்த முடிவை மேற்கொண்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டினி கிடப்போர் பசிபோக்க இடமல்ல முக்கியம்; பாசமுள்ள இதயம்தான் முக்கியம்!

அன்புள்ள,

மு.க.

14-8-2002

2809. ஆகஸ்டு 19 - அணி வகுப்போம்; அண்ணா வழியில்!

உடன்பிறப்பே,

"எங்கள் மதத்தில் சேராதவர்களுக்கு மோட்சம் கிடையாது என்று கூறுபவர்களை நாட்டிலிருந்தே விரட்டியடிக்க வேண்டும்"

என்பது சமுதாய ஒப்பந்தம் வழங்கிய ரூசோவின் திட்டவட்டமான தீரமிகு கருத்தாகும்.

அதேபோல எங்கள் கட்சியில் சேராதவர்களை - எங்கள் ஆட்சியை ஆதரிக்காதவர்களை அமைதியாகவோ, சுதந்திரமாகவோ வாழவிடமாட்டோம் என்பவர்களை நாட்டை விட்டு விரட்டாவிடினும், அந்த நாக்குத் தடிப்பை நிறுத்தி வைக்கிற நடவடிக்கையில் மக்கள் ஈடுபட வேண்டும்.

இல்லையேல் இப்போது தி.மு.க.காரர்கள் மீது லாரியை விட்டுக் கொல்லுவோம் என்று பேசுகிற ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்கள், நாளைக்கு அதைச் செயல்படுத்தவும் முன்வந்து விடுவார்கள்.

பிறகு அதைப்பற்றி அரசின் சார்பில் விளக்க அறிக்கை கொடுப்பவர்கள்; லாரி மீது குற்றமில்லை - லாரி டிரைவர் லாரியை நிறுத்திவிட்டு தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அப்போது தி.மு.க. காரன் வேண்டுமென்றே திட்டமிட்டு லாரி மீது மோதிக் கொண்டு செத்துவிட்டான் என்று துணிந்து பொய் கூறுவார்கள், மனச்சாட்சி உறுத்துமே என்ற கவலை கிஞ்சிற்றும் இல்லாமல்!

எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சியும் எலியும் பூனையுமாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்களல்லர் நாம்!

எதிர்க்க வேண்டியவைகளை எதிர்த்து, அதே சமயம் பொதுப் பிரச்சினைகளில், மாநிலத்தின் ஒட்டு மொத்த நலனில் ஆக்கபூர்வமாகச் செயல்பட வேண்டும் என்ற எதிர்க்கட்சி

இலக்கணத்தை நன்கு உணர்ந்தவர்கள்தான் தி.மு.கழகத்தினர் என்பதற்கு எத்தனையோ உதாரணங்களை கடந்த கால காங்கிரஸ் ஆட்சியிலும் காட்ட முடியும் - இப்போது நடக்கும் ஜெயலலிதா ஆட்சியிலும் அந்த அரசியல் பண்பாட்டை நாம் கடைப்பிடித்தே வந்துள்ளோம். அதற்கு எடுத்துக்காட்டாக, அண்மையில் நடந்துள்ள சில நிகழ்வுகளே சான்றாக அமைந்துள்ளதை அறிவுடையோர் காண இயலும்.

1967 அறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்திலிருந்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிற சேது சமுத்திரத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டுமென மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்து இரண்டொரு மாதங்களுக்கு முன்புகூட (இந்த ஆட்சிக் காலத்தில்) மே 8ஆம் நாள் நேரடியாகப் பிரதமர் அவர்களுக்கே கடிதம் எழுதியுள்ளேன்.

காவேரிப் பிரச்சினையில் இந்த ஆட்சியாளர்கள் தி.மு.க. மீது சேறு வாரி இறைத்துக் கொண்டேயிருப்பினும், இல்லாத பொல்லாத குற்றச்சாட்டுகளை பேரவையிலே தெரிவித்திருந்தும், அவற்றைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இந்த ஆண்டு ஜூலை 5ஆம் தேதியன்றுகூட இந்தியப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதி, காவேரி ஆணையத்தை விரைவில் கூட்டி தமிழக விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தேன். இச்செய்தி பத்திரிகைகளில் வந்ததைக்கூட சில அவசரக்கார நண்பர்கள், எப்படியோ பார்க்கத் தவறி, நம்மீது குறை கூறி நாம் காவேரித் தண்ணீருக்கு மத்திய அரசை வலியுறுத்தவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

நான் ஜூலை 5இல் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு ஜூலை 10 அன்று பிரதமர் எனக்கு எழுதிய பதில் கடிதத்தில், காவேரி நடுவர் மன்ற ஆணையை நடைமுறைப்படுத்தப்படுவது பற்றியும், மேட்டூருக்குத் தண்ணீர் விடுவது பற்றியும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

தமிழக விவசாயிகளின் நலன் பேணும் இந்தப் பொதுப் பிரச்சினையில் எதிர்க்கட்சியான தி.மு. கழகம் ஏனோதானோ என்று இருக்கவில்லை. எடுக்க வேண்டிய முயற்சியை எடுத்து மத்திய அரசுக்கு வலியுறுத்தியே இருக்கிறது, ஆக்கபூர்வமாக!

அவ்வளவு ஏன்? குடியரசுத் தலைவர் பதவி ஏற்பு விழாவுக்கு முதலமைச்சர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவேண்டும் என்ற கருத்தில்கூட, தனிப்பட்ட ஜெயலலிதா என்றில்லாமல், குடியரசுத் தலைவர், பிரதமர் பதவியேற்பு நிகழ்ச்சிகளில் மாநில கௌரவம் மதிக்கப் பட்டு முதலமைச்சர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட வேண்டும் என்று ஆக்கபூர்வமானதும், மாநில உரிமை காத்திடக் கூடியதுமான கடமையை ஆற்றி யிருக்கிறேன்.

எடுத்தேன், கவிழ்த்தேன் என்றோ;
ஏட்டிக்குப் போட்டி என்றோ;
ஏனோதானோ என்றோ

செயல்படுவதுதான் எதிர்க்கட்சியின் இலக்கணம் என்று என்றைக்கும் கருதியதுமில்லை! அப்படி நடந்து கொண்டதுமில்லை!

அந்த வகையில்தான் கைத்தறி நெசவாளர்கள், பசி பட்டினியோடு வாடுவதைப் பலரும் பல நாட்களாக - வாரங்களாக - மாதங்களாக எடுத்துக் கூறியும் செவிமடுத்துக் கேட்காத இந்த அரசின் கவனத்தைத் திருப்ப, பொதுமக்களில் சிலர், நெசவாளர்களுக்காகக் கஞ்சித் தொட்டிகளைத் திறந்த செய்தியும் ஏழெட்டு நெசவாளர் பட்டினியால் செத்தனர் என்ற செய்தியும் ஏடுகளில் வந்ததைக் கண்டு,

அதிர்ந்து போன நிலையில்தான் தி.மு.க. அமைப்புகளும் கஞ்சி வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டது.

அதை ஓர் ஆக்கபூர்வ நடவடிக்கையாகக் கருதுகிற மனப்பான்மையில்லாமல், அம்மையார்குப்பத்தில் ஆள் திரட்டினர் போட்டி நிகழ்ச்சி என்ற பெயரால் போர்க்களம் அமைத்திட!

மதுரையிலே போர்க்களமே அமைத்துவிட்டனர் - போலீசாரும், ரௌடிகளும் தோளொடு தோள் நின்று!

எதிர்க்கட்சியினரைக் குறிப்பாக தி.மு.கழகத்தினரை, பேரவைத் தலைவராக இருந்த பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், அமைச்சராக இருந்த தா. கிருட்டிணன், மேயர், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்டோரை கொலை முயற்சி வழக்கு தொடுத்து கைது செய்துள்ளனர்.

கழக உடன்பிறப்புகள் பலரை இரத்தம் சொட்டச் சொட்டத் தாக்கித் தரையில் உருட்டியுள்ளனர். இந்தக் கொடுமையை ஓராண்டாக இந்த ஆட்சியிலே பல நேரங்களில் தாராளமாகக் காண முடிந்திருக்கிறது.

இந்த வெறியாட்டத்தை வளர விட்டுக் கொண்டே போனால், தமிழ்நாடு சுடுகாடாகவே மாறிவிட நெடுநாள் ஆகாது என்பதுணர்ந்துதான், ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தப்படாமல் எப்படியோ தலைவிரி கோலமாகப் பேயாட்டம் போடும் இந்தக் கொடுமை தொடர்கதையாகிவிடும் என்பதால்தான் கழக நிர்வாகக்குழு கூடி ஆகஸ்ட் திங்கள் 19ஆம் நாளில் கண்டனப் பேரணி மற்றும் விளக்கக் கூட்டங்களை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அன்று நடைபெறும் பேரணி மற்றும் பொதுக் கூட்டங்களில் அறவழியில் - அண்ணா வழியில் - இந்த அராஜக அரசின் அக்கிரமங்களை மக்களுக்கு விளக்கிடவேண்டும்!

அதற்காக உடன்பிறப்பே,

நீ ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அணி திரள வேண்டும்!

வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று மொழிப்போரில் அணி வகுத்த ஆற்றல்மிகு உடன்பிறப்பே!

உடல் மண்ணுக்கு! உயிர் கொள்கைக்கு! என்று மும்முனைப் போரில் முரசு கொட்டிய உடன்பிறப்பே!

இரத்தக்கண்ணீர் கொட்டுகின்றோம்! ஈழத் தமிழ் மக்களின் அவதி போக்குவதற்காக என்று,

எத்தனையோ முறை
கால் கடுக்க -
கண் கலங்க -
நடந்து, நடந்து, நடந்து அணிவகுத்த உடன்பிறப்பே!

"தடைக்கற்கள் உண்டெனினும் தடந்தோள் உண்டெனச் சிரிப்போம் எனப் புரட்சிக் கவி முழக்கி, நெருக்கடி கால நெருப்பாற்றினைக் கடக்க அணி வகுத்த அடலேறாம் உடன்பிறப்பே!

இதோ! நமது மானத்தைக் காக்கும் நெசவாளர் துயர் களைய அணி வகுப்போம் வா!

ஆக்கபூர்வமான நமது ஒத்துழைப்பை ஒதுக்கித் தள்ளியதோடு, தடி கொண்டு தாக்கியும் - சட்டம் கொண்டு விரட்டியும் - வழக்கு தொடர்ந்து மிரட்டியும் பார்க்கிற ஆளுங்கட்சிக்கு அறிவுரை வழங்கிட, உடன்பிறப்பே!

அணி வகுப்போம் வா!

அன்புள்ள,

மு.க.

15-8-2002

2810. கெட்டுப்போன சட்டம் ஒழுங்கிற்குக் கிரீடம் சூட்டுவதா?

உடன்பிறப்பே,

தமிழக அரசின் கீழ் பணியாற்றும் காவலர்கள், ஆசிரியர்கள் உட்பட்ட அரசு அலுவலர்கள் சுமார் 11 இலட்சம் பேர்களாகும். இவர்கள் அனைவருமே அரசின் குழந்தைகளைப் போலப் பேணி பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்தான். ஆனால் இந்த 11 இலட்சம் பேரில், 85ஆயிரம் பேர்களுள்ள காவல் துறையினரை மட்டும் முதல்வர் ஜெயலலிதா அழைத்து வைத்து குறைகளைக் கேட்டுள்ளார். அதிலும் தமிழகத்தின் கடைக்கோடியிலே இருப்பவர்களையெல்லாம் சென்னைக்கு வரவழைத்து, அவர்கள் தங்க இடமளித்து, உணவளித்து அவர்களிடம் குறைகளைக் கேட்டோம் என்று பெயர்பண்ணி, புகைப்படங்கள் எடுத்து அனைத்து ஏடுகளிலும் நான்கைந்து நாட்கள் பெரிய விளம்பரமும் செய்து கொண்டார்.

காவல்துறையினரும் கவனிக்கப்பட வேண்டியவர்கள்தான் என்ற போதிலும், ஒட்டுமொத்த அரசு அலுவலர்களில் ஒரு தரப்பினரை மட்டும் இப்படி அழைத்து குறைகேட்பது என்பது மாற்றாந்தாய் மனப்பான்மை அல்லவா? 14ஆம் தேதி மட்டும் ஜெயலலிதா ஐந்து மணி நேரம் காவலர்களைச் சந்தித்திருக்கிறார். அவர்கள் கொடுத்துள்ள புள்ளிவிவரப்படியே 1,764 பேர் காவல்துறையினரை தலைமைச் செயலகத்திலே சந்தித்து அவர்களிடம் குறைகளைக் கேட்டறிந்து, மனுக்களையும் பெற்றுள்ளார் என்று செய்திகள் பரபரப்பாக வெளியிடப்பட்டுள்ளன. ஒருவரின் குறையைக் கேட்டு, அவரிடம் மனு பெறுவதற்காக 5 நிமிடம் எடுத்துக் கொண்டால் கூட இந்த 1764 பேருக்கும் மொத்தம் 147 மணி நேரமாகும். அதாவது இடைவிடாமல் ஆறு நாட்களாகும். அவசர அவசரமாக சந்தித்தால்கூட ஒருவருக்கு ஒரு நிமிட நேரம் பிடிக்கும். அப்படி கணக்கிட்டால் சுமார் 30 மணி நேரமாகும். ஒரு நாளைக்கு 24

மணி நேரம் தான் என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஆனால் முதல்வர் ஜெயலலிதா இந்த 1764 பேரையும் ஐந்தே மணி நேரத்தில் சந்தித்திருக்கிறாரென்றால் அது என்ன மந்திர சக்தியோ நமக்குப் புரியவில்லை. ஒரு முறை 60 பேரை ஒட்டு மொத்தமாக அறைக்குள் அழைத்து அன்னார் கோரிக்கையை கோரசாக கேட்டறிந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

இந்த விநோத, விசித்திர வேடிக்கைகளுக்குப் பதிலாக அவர்களுடைய கோரிக்கைகளை அஞ்சல் வழி அனுப்பி வைக்கச் சொல்லி அவற்றைப் படித்து ஆவன செய்யுங்கள் என்று கூறியிருந்தால் அவர்களுக்கும் வேலை மிச்சம், முதல்வருக்கும் நான்கு நாள் வேலை மிச்சம்! முறையாக மனுக்களைப் படித்தே அவர்களின் குறைகளை தீர்த்து வைத்திருக்க முடியும். உண்மை என்னவென்றால், குறைகளை அறிந்து தீர்த்து வைப்பதைவிட அந்தச் செய்தி பத்து நாளாவது பத்திரிகைகளில் வரவேண்டும் என்பதிலே தான் முனைப்பு காட்டப்பட்டிருக்கின்றது. நேரில் சந்திக்க வந்த காவல்துறையினர் மத்தியில் உரையாற்றிய ஜெயலலிதா இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களிலும் மிகச் சிறந்த காவல் துறை நம்முடையதுதான் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார். அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நாமும் பெருமைப்படுகிறோம். ஆனால் தமிழ்நாட்டில்தான் குற்றங்களின் எண்ணிக்கையும் பிற மாநிலங்களைவிடக் குறைவாக இருக்கின்றன என்று ஜெயலலிதா பெருமைப்படுவதை ஏற்றுக் கொள்வது இயலாத காரியம்.

கடந்த ஏப்ரல் திங்கள் 24ஆம் நாள் தமிழகச் சட்டப் பேரவையில் தமிழ்நாடு காவல்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பினை அந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையில் அவையிலே அளித்த முதல்வர் ஜெயலலிதா தி.மு.க. ஆட்சியில் நடந்ததை விட அ.தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்ற குற்றங்கள் குறைவு என்றுதான் குறிப்பிட்டிருந்தார். அதை மறுத்து நீண்ட விளக்கம் அளித்து அப்போதே நான் பதில் அளித்திருந்தேன். அந்தப் பதிலில் தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 1996 மே முதல் 1997 மே வரையிலான காலத்தில் நிகழ்ந்த பல்வேறு குற்ற நிகழ்வுகளுக்கும், மே 2001 முதல் மார்ச் 2002 வரையான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த குற்ற நிகழ்வுகளுக்கும் உள்ள ஒப்பீடுகளை புள்ளிவிவரத்தோடு எடுத்துக்காட்டியிருந்தேன்.

மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பின்படி 1996ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் பதிவு செய்யப்பட்ட பெரிய திருட்டுகளின் எண்ணிக்கை 17,171. ஆனால் முதல்வர் ஜெயலலிதா 96ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் 23,680 பெரிய திருட்டுகள் நடந்ததாக பேரவையிலே தெரிவித்தார். ஜெயலலிதா தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்ற பிறகு 2001-2002ஆம் ஆண்டில் நடைபெற்ற பெரும் திருட்டுகளின் எண்ணிக்கை 14,695 மட்டுமே என்று அவரது பதில் உரையிலே குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவையிலே வைத்த காவல்துறை கொள்கைக் குறிப்பில் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற பெரிய களவு(பெரும்திருட்டு)களின் எண்ணிக்கை 16,645 என்று பக்கம் 60இல் அச்சடிக்கப்பட்டிருந்ததையெல்லாம் நான் எடுத்துக் காட்டியிருந்தேன். நான் ஏப்ரல் திங்களில் வெளியிட்ட அந்த மறுப்பு அறிக்கையில் மேலும் குறிப்பிடும் போது, ஜெயலலிதா முதலிலே ஆட்சி செய்த 1995ஆம் ஆண்டில் 17,343 பெரிய திருட்டுகளும், 1994இல் 18,192 பெரிய திருட்டுகளும், 1993ஆம் ஆண்டு 20,890 பெரிய திருட்டுகளும் நடைபெற்றதாக அ.தி.மு.க. ஆட்சியிலே வெளியிடப்பட்ட மானிய கோரிக்கை கொள்கைக் குறிப்புகளிலேயே வந்துள்ளது என்றும், ஆனால் 1996இல் கழக ஆட்சியில் 17,171 பெரிய திருட்டுகள்தான் நடைபெற்றுள்ளது என்றும் குறிப்பிட்டு, அ.தி.மு.க. ஆட்சியை விட குறைவாகத்தான் கழக ஆட்சியிலே பெரிய திருட்டுகள் நடைபெற்றுள்ளன என்றும் விளக்கியிருந்தேன்.

மேலும் சட்டப் பேரவையிலே இந்த ஆண்டு துவக்கத்தில் ஜெயலலிதா வைத்த மானியக் கோரிக்கைக் குறிப்பில் தி.மு.கழக ஆட்சியிலே முதல் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 4,038 என்றும், ஆனால் அவருடைய அ.தி.மு.க. ஆட்சியில் ஓராண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 1,437 மட்டுமே நிகழ்ந்துள்ளன என்றும் குறிப்பிட்டிருந்தார். அதைப்பற்றி நான் குறிப்பிடும்போது, அவர் அவையிலே வைத்த அதே கொள்கைக் குறிப்பு பக்கம் 61இல் பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுப்பது தமிழ்நாடு காவல் துறையின் குறிக்கோளாகும். 2001ஆம் ஆண்டில் பதியப்பட்ட 4,959 வழக்குகளில் 4,281 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டிருந்ததை எடுத்துக் காட்டி, பெண்களுக்கு எதிராக 1,437 குற்றங்கள் நிகழ்ந்திருக்கும்போது எப்படி 4,959 வழக்குகளை இந்த அரசினால்

பதிவு செய்ய முடிந்தது என்றும் கேட்டிருந்தேன். என்னுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க உள்துறை செயலாளருக்கு உத்தரவிடப்பட்டு, அவர் ஒரு அறிக்கை கொடுத்திருந்தார். அதிலே என் கேள்விகளைப் பற்றி எதுவும் குறிப்பிடவே இல்லை.

இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டுதான் ஜெயலலிதா தனது ஆட்சியிலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில், நிலைநாட்டுவதில், பராமரிப்பதில் இன்றைக்கு தமிழ்நாடு முதல் இடம் வகிப்பதாகக் கூறிக் கொள்கிறார்.

முக்கிய எதிர்க்கட்சியான தி.மு.கழகம் அல்லற்படும் நெசவாளர்களின் துயர் துடைப்பிற்காகக் கஞ்சி தொட்டி வைக்க அனுமதி கேட்டுப் பெற்று முறைப்படி செயல்பட முன்வந்தால், அதே இடத்தில் அதே நேரத்தில் முட்டை பிரியாணி வழங்குவதற்கு ஆளுங்கட்சிக்கும் அனுமதி கொடுத்து, அங்கெல்லாம் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களை காவல்துறையினர் தடியினால் அடித்து நொறுக்குவதைத்தான் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் சீரான செயல் என்று ஜெயலலிதா கருதுகிறார் போலும்!

ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்த இந்த ஓராண்டு காலத்தில் (30-6-2002வரை) 207 கொலைகள், 316 கொள்ளைகள், 63 மோசடிக் குற்றங்கள், 57 கற்பழிப்பு சம்பவங்கள், 32 கடத்தல்கள், 348 விபத்துகள், அதிலே 735 பேர் மாண்டனர் என்பதைத்தான் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட்ட செயல் என்று அவர் கருதிக் கொண்டு உரையாற்றியிருக்கிறாரா?

மதுரையிலே காவல்துறையினரிடமிருந்து தப்பிச் சென்ற இமாம் அலியை இன்னும் பிடிக்காமல் இருக்கிறார்களே!

நாள் தவறினாலும் தவறாமல் அன்றாடம் ஏடுகளைப் பிரித்தால் அங்கே கொள்ளை, இங்கே கடத்தல், இங்கே கொலை என்று செய்திகள் வருகிறதே! இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த மாநிலத்திலேதான் பொடொ சட்டம் பயன்படுத்தப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரையே கைது செய்து உள்ளே வைத்திருக்கிறார்களே!

தமிழர் தேசிய இயக்கம் என்ற ஒரு கட்சியையே தடை செய்திருக்கிறார்களே!

சில எதிர்க்கட்சிகள் நடத்தும் கட்சிக் கூட்டங்களுக்கே காவல்துறையினர் உள்ளே சென்று படம் எடுக்கிறார்களே, திரையரங்குகளிலே படங்களை வெளியிட முடியாமல் அங்கே புகுந்து படப் பெட்டியையே கடத்திச் செல்லும் நிலை உள்ளதே; இதுபோன்ற செயல்களைத்தான் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படும் நிலை என்று முதல்வர் ஜெயலலிதா எண்ணிக் கொண்டு பேசியிருந்தால் அது சரியாகத்தான் இருக்கும்!

அன்புள்ள,

மு.க.

17-8-2002

2811. வெட்ட வெட்டத் துளிர்விடும் விஷக்கிளைகள்!

உடன்பிறப்பே,

ரங்கராஜன் என்ற ஒரு நாவலாசிரியர் இருந்தார். பெரும்பாலும் அவர் எழுதுகிற புதினங்கள் சமூக சீர்திருத்த நோக்கம் கொண்டவைகளாகவே இருக்கும். அவற்றில் ஒன்று, சந்திரகாந்தா என்ற பெயருடன் போலிச் சாமியார்களின் தோல் உரித்து, இவர்கள் பசுக்கள் அல்ல; பயங்கர வேங்கைகள் என்பதைப் படம் பிடித்துக் காட்டும் ஒரு திரைப்படமாகக் கூட பல ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்திருக்கிறது.

என் பள்ளிப் பருவத்தில் அந்தத் திரைப்படத்தைப் பார்த்திருக்கிறேன். இப்போது போல இருபது ரூபாய், முப்பது ரூபாய் என்று கட்டணச் சீட்டு வாங்கிக் கொண்டு அல்ல! இரண்டணா, இரண்டரையணாவுக்கு மணல் மெத்தைகளில் தரையில் அமர்ந்து போலிச் சாமியார்களின் லீலா விநோதங்களைக் காட்சிகளாகப் பார்த்தது மட்டுமல்ல, அந்தப் பகல் வேடப் பாதகர்கள் பக்தி என்ற பெயரால் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்ற பாடத்தையும் கற்று, அந்தப் பகுத்தறிவுப் பாடத்தை பிறருக்கும் போதிக்கின்ற பிரச்சாரத்திலும் ஈடுபட்டேன்.

அந்தத் திரைப்படத்தில் இரண்டு சாமியார்கள் வருவார்கள். ஒரு மடத்தை இன்னொரு மடம் இரவு விருந்துக்கு அழைத்திருக்கும். இரு பெரிய சாமியார்களுக்கும் பிரியமான பெண்கள் தனித்தனி அறைகளில் பள்ளியறை பூஜைக்காகக் காத்திருப்பார்கள்.

இரண்டு சாமிகளும் சர்வேஸ்வரா! என்று உதட்டில் உச்சரித்தவாறு அறைகளுக்குள் எழுந்தருளுவார்கள். கதவுகள் உட்புறமாக தாழிடப்படும். அறைகளில் நடப்பதைக் காணக் கண்கூசி, சந்திரன் மேகங்களுக்குள் மறைந்து கொள்வான்.

பொழுது விடியும் - இருவரில் ஒரு சாமியார், மங்கையர் மடிகளில் ஊர்ந்து வந்து கட்டிலில் இருந்து இறங்குவார். அறைக்

கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து பக்கத்து அறையைப் பார்ப்பார். அது திறக்கப்படாமல் இருக்கும்.

மடத்துச் சாமியார், அந்த அறையின் கதவை லேசாகத் தட்டி என்ன சுவாமிகாள்! இன்னும் யோகாப்பியாசம் முடியவில்லையா? என்று கேலியாகவும் உரத்த குரலிலும் கேட்பார். அந்தச் சாமியாரோ அவசர அவசரமாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வருவார்.

அவரை விருந்துக்கழைத்த சாமியார், அவரைப் பார்த்தவுடன் விழுந்து விழுந்து சிரிப்பார்!

என்ன சுவாமிகாள்! அவசரத்தில் அவள் புடவையைத் தாங்களும், தங்கள் உடையை அவளுமாக உடுத்திக் கொண்டு.....ஹி ஹி ஹி!

விருந்தாக வந்த சாமிக்கு வியர்த்துக் கொட்டி விடும். அவரைத் தழுவியவாறு வெளியே வந்த வித்தாரக் கள்ளியும் வெட்கத்தால் தலை குனிந்து கொள்வாள்!

இப்படி முற்றும் துறந்த சுவாமிகள் எனப்படுவோர் பலர், ரங்கராஜன் நாவலில் மட்டுமல்ல - எத்தனை எத்தனையோ புதினங்களில், நாடகங்களில், திரைப் படங்களில் அடையாளம் காட்டப்பட்டும்கூட இன்னமும் நம்முடைய மக்களில் பலருக்கும் அந்தச் சாமியார் பைத்தியம் தீராமல் இருப்பதுதான் வேதனையாக இருக்கிறது.

பூசணிப் பூ சாமியார் -
பூவரசு சாமியார் -
புற்றடி சாமியார் -
பூனைகுட்டி சாமியார் -
சாராய புட்டி சாமியார் -
புள்ளைவரம் சாமியார் -
டெலிபோன் சாமியார் -

இப்படி எத்தனை எத்தனை சாமியார்கள்! இவர்களின் வேஷத்தைக் கலைத்து வெளிக் காட்டுவதற்கு எத்தனை எத்தனை முயற்சிகள்! ஆனால் அவற்றை உணர்ந்த பிறகும், இன்னும் ஏமாறுவதற்கு எத்தனை பேர் நாட்டில்!

அண்ணா எழுதிய வேலைக்காரி நாடகத்திலும், திரைப்படத்திலும் ஒரு சாமியார் வருவார் - கன்னக்கோல் வைப்பதும் களவாடுவதும் தொழிலாகக் கொண்ட கயவன் ஒருவன். கமண்டலம் தண்டு கையிலேந்தி காவியுடுத்தி சாமியாராக மாறி மக்களை ஏமாற்றுகிறான் என்பதையும், அவன் கமண்டலத்திலே இருப்பது மது என்பதையும், தண்டுக்குள் ஒளித்து வைத்திருப்பது கூரிய வாள் என்பதையும் - வெளிச்சத்திற்கு கொண்டு வந்ததும் மக்கள் விழிப்புணர்வுடன் கையொலி செய்து வரவேற்பர் - பார்த்து மகிழ்ந்திருக்கிறோம்!

ஆனால் சில நாட்கள் சென்ற பிறகு, அதே மக்கள் வேறு ஒரு புதிய சாமியாரிடம் நம்பிக்கை வைத்து ஏமாந்து போவதும் நமது நாட்டில் - நமது சமுதாயத்தில் - வெட்ட வெட்டத் துளிர்விடும் விஷக் கிளையாகவே விளங்கி வருகிற சாபக்கேடு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

அந்தச் சாமியார்களின் சாபக்கேடு தொடர்கிறது என்பதற்கு இதோ இன்றைக்கு ஓர் எடுத்துக்காட்டு! ஏடுகளில் வந்துள்ள செய்திதான்!

பச்சை முந்திரித் தேம்பழங் கொன்று
பாட்டுப் பாடிநற் சாறு பிழிந்தே
இச்சை தீர மதுவடித் துண்போம்;
....
கொஞ்சு மாதரும் கூட்டுணும் கள்ளும்
இச்ச கத்தினில் இன்பங்க ளன்றோ?

என்று போகிகள் பாடுவதாக பாரதியார் எழுதினாரே! அந்தப் போகிகளின் பாடல்களைச் செயல்வடிவில் காட்டும் யோகிகளையும் நாட்டில் காண முடிகிறது என்பதற்கே இந்தச் செய்தி ஒரு நல்லுதாரணமாக அமைந்துள்ளது.

இதோ அந்தச் செய்தி :-

அரியானா மாநிலம் கர்நூலைச் சேர்ந்த ரேணு என்பவர் கடந்த இருபது நாட்களுக்கு முன் சிவசக்தி சாமியார் என்பவரால் தமிழ்நாட்டிற்கு கடத்தி வரப்பட்டுள்ளார். ரேணுவின் பெற்றோர் மகளைக் காணாமல் காவல்துறையினரிடம் புகார் கொடுத்தனர். சில நாட்களுக்கு முன் ரேணு தன் தாயாரை தொலைபேசியில்

தொடர்பு கொண்டு தான் எங்கிருக்கிறேன் என்று தெரியவில்லை என்று கூறியிருக்கிறார். இதைக்கொண்டு, காவல்துறையினர் எங்கிருந்து தொலைபேசி வந்துள்ளது என்பதை வைத்து அரியானா காவல்துறை தமிழகக் காவல்துறைக்கு தகவல் அனுப்பி அதன்பேரில் சிவசக்தி சாமியாரும் ரேணுவும் குரோம்பேட்டையில் தங்கியிருந்தபோது சுற்றி வளைக்கப்பட்டு, அந்தச் சாமியார் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். (சாமியார் ரேணுவுடன் இருக்கும் புகைப்படம் இங்கே வெளியிடப்பட்டுள்ளது.) விசாரணையில் சிவசக்தி சாமியார் எட்டயபுரம் நகரத்தைச் சேர்ந்தவர் என்றும், சென்னையில் அரிசிக் கடை வைத்திருந்து, அதிலே இழப்பு ஏற்பட்டதின் பேரில் சில ஆண்டுகளுக்கு முன்பு சன்னியாசியாக ஆகப்போகிறேன் என்று கூறி இமயமலைக்குச் சென்று விட்டாரென்றும் அங்கே சில நாட்கள் சுற்றித் திரிந்துவிட்டு, பின்னர் அரியானா மாநிலம் சென்று அங்கே ஒரு கோவிலில் தங்கிக் கொண்டு தன்னை கடவுளின் அவதாரம் என்று கூறி பக்தர்களை ஏமாற்றி வந்தார் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்தச் சாமியாரின் பேச்சை நம்பி அந்த மாநிலத்தைச் சேர்ந்த பெரிய பணக்காரர்கள் எல்லாம் இவரை கடவுளின் அவதாரம் என்று நம்பி அவர் காலில் விழுந்து கும்பிட ஆரம்பித்து விட்டார்கள். இமயமலை சித்தர் என்றும் இவர் பெயர் பரவிட ஆரம்பித்து விட்டது. தன்னிடம் சிகிச்சைக்கு வரும் வயதான பெண்களுக்கு மந்திரம் சொல்லி குங்குமம் கொடுத்து அனுப்பி விடுவாராம். இளம் பெண்களை மட்டும் தனி அறைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிப்பதாக கூறுவாராம். தனி அறைக்கு வரும் இளம் பெண்களை மயக்க மருந்து கொடுத்து நிர்வாணப்படுத்தி மஞ்சளை அரைத்து உடல் முழுவதும் பூசி இன்ப லீலைகளிலே ஈடுபடுவாராம். இளம் பெண்கள் பயந்து கொண்டு இதனை வெளியே கூறுவதில்லை. இப்படி சிக்கிக்கொண்ட இளம் பெண்களிலே ஒருவர்தான் ரேணு. அவருடைய தாயார் உடல்நலம் சரியில்லாமல் சாமியாரிடம் சிகிச்சை பெற சென்றபோது தாயாரோடு சேர்ந்து ரேணுவும் அங்கே சென்றுள்ளார். அப்போது சாமியார் தாயாருக்கு மருந்து கொடுத்துவிட்டு, ரேணுவிடம் உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தன் படிப்பைக் கூறி வேலை வேண்டுமென்று அவர் கேட்டபோது, தனியாக வா, பூஜை செய்தால் வேலை கிடைத்து விடும் என்று கூறி தனியாக வரவழைத்திருக்கிறார். ரேணு அவ்வாறு தனியாக வந்தபோது, அவளுடைய தம்பி தீபக்

பின் தொடர்ந்து வந்துள்ளார். ரேணுவை சாமியார் தனி அறைக்கு அழைத்துச் சென்று நிர்வாணப்படுத்தி பூஜை செய்ததாகத் தெரிகிறது. இதனை தம்பி தீபக் பெற்றோரிடம் கூற, அவர்கள் ரேணுவை வெளியே இனி போகக் கூடாது என்று தடுத்துள்ளனர். ஆனால் சாமியாரின் மந்திர வார்த்தையில் மனதை பறி கொடுத்த ரேணு தொடர்ந்து ரகசியமாக அவரைச் சந்தித்து வந்துள்ளார். தற்போது சில நாட்களுக்கு முன் அந்தச் சாமியார் ரேணுவை வேலை வாங்கித் தருவதாகக் கூறி சென்னைக்கு அழைத்து வந்து இங்கே அவரை ஏமாற்றி கட்டாய திருமணம் செய்து கொள்வதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டுள்ளார். இதற்கிடையே தான் ரேணு தாயாருக்கு செய்த தொலைபேசி காரணமாக தற்போது மீட்கப்பட்டு, பெற்றோருடன் அவருடைய சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளாள். போலி சாமியார் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதுதான் அந்தப் பத்திரிகை செய்தி! நாளொன்றுக்குப் பத்து செய்திகள் இப்படி வந்தாலும், படித்த மக்களாகிய நாங்கள்கூட அந்தப் பகல் வேடதாரிகளை நம்பித்தான் தீருவோம் என்று சத்தியம் செய்து கொண்டு சாமியார்கள் காலில் விழும் பாமரத் தன்மையிலிருந்து விடுபடாதிருக்கும் நிலையைக் காணும்பொழுது, நமது பகுத்தறிவு இயக்கத்தின் பணி இன்னும் பலமாகவும், பரவலாகவும் நடைபெற வேண்டும் என்பதும், நடத்தியே ஆக வேண்டுமென்பதும் தெளிவாகத் தெரிகிறதல்லவா!

“அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று
அறிவிழந்து தடுமாற்றம் அடையவேண்டாம்
எவர் சொன்ன சொல்லானாலும்
அதனையுந்தன் இயல்பான பகுத்தறிவால்
எண்ணிப் பார்ப்பாய் –

என்பது பெரியார் வரலாறு எழுதிய சாமி சிதம்பரனாரின் ஆணித்தரமான கவிதை!

அன்புள்ள,

மு.க.

18-8-2002

2812. காங்கிரஸ் நிதி அமைச்சரும் கல்கி தலையங்கமும்!

உடன்பிறப்பே,

அப்படி ஒரு மேனியா - அல்லது இப்படி ஒரு மேனியா - அல்லது இதெல்லாம் ஒரு மேனியா என்பார்களே அது போல சிலருக்கு அந்த மேனியா வியாதி நீண்ட காலமாகவே பிடித்திருக்கிறது! பாவம் அது குணப்படுத்த இயலாத வியாதியாகவும் ஆகியிருப்பதோடு, மெல்ல மெல்ல அது தொத்து வியாதியாகவும் பரவிக் கொண்டிருக்கிறது.

அதாவது எந்தக் கேடுபாடு எங்கே நடந்தாலும், அதற்கு முழு முதற்காரணம் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. தான் என்பது அசைக்க முடியாத உண்மை யாக இருந்தாலும் அத்துடன் தி.மு.க. வையும் இணைத்துப் பேசி, இந்தத் திராவிடக் கட்சிகளே இப்படித்தான் என்று விமர்சிப்பதைத் தங்களின் அதி மேதாவித்தனம் எனச் சிலர் எண்ணிக் கொண்டு எழுதுகிறார்கள், பேசுகிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் தங்களின் கடந்த கால வரலாற்றையும் நிகழ்கால நடவடிக்கைகளையும் மறந்து விடுவதுதான் வேடிக்கை!

அரசியல் துறையாகட்டும், கலைத்துறையாகட்டும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், காவலர்கள், என எந்தத் துறையாகட்டும் அத்துறையினர் அனைவருமே ஊழல் பேர்வழிகளாகவோ - நீதி நேர்மைக்கு விரோதிகளாகவோ இருப்பதில்லை! அதற்காக ஒருவர் இருவர் இருப்பதை உதாசீனப் படுத்திவிடவும் முடியாது!

அதேசமயம் ஒருசிலக் கேடர்கள் உள்ளனர் என்பதற்காக அரசியல்வாதிகள் அனைவருமே அயோக்கியர்கள் என்று சொல்வதோ, அது போல ஒவ்வொரு துறையிலும் உள்ளவர்களை ஒட்டு மொத்தமாகக் குற்றம் சாட்டுவதோ ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்தாக அமைய முடியாது.

அதுபோலவே திராவிட முன்னேற்றக் கழகம் என்பதால், திராவிட என்ற சொல் அமைந்துள்ள எல்லா இயக்கங்களுமே தி.மு.க. ஆகிவிட முடியாது.

தி.மு.க. ஓர் அரசியல் இயக்கம் - அத்துடன் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளையும் பகுத்தறிவுக் கருத்துக்களையும் பரப்புவதில் என்றைக்கும் பின்வாங்கியதில்லை.

ஆனால் திராவிட இயக்கம் போல் தன்னைக் காட்டிக் கொள்கிற அ.தி.மு.க. என்பது குருவாயூருக்கு யானையைக் காணிக்கையாக அளிக்கும் - யாகங்கள் செய்யும்! ஹோமங்கள் வளர்க்கும்!

இந்த வேறுபாடு தமக்குத் தெரிந்திருந்தும்கூட அதனை மறைத்துவிட்டு, வேண்டுமென்றே திட்டமிட்டு திராவிட இயக்கக் கொள்கைகள் நீர்த்துப் போய்விட்டன என்று நம்மையும் சேர்த்து விமர்சிக்கிற திராவிட எனும் சொல்லுக்கே விரோதிகளாயுள்ளோர் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதனால்தான் அராஜகம், அடாவடி, அநீதி, ஊழல், மக்கள் விரோதச் செயல் என ஆளுங்கட்சியினர் ஈடுபடும் காரியங்கள் அடையாளம் காட்டப்படும் போது, இதுதான் சமயமென்று அத்துடன் தி.மு.க. வையும் சேர்த்து ஒழித்துவிட மீசையை முறுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு எந்தவொரு திராவிடக் கட்சியும் லாயக்கு இல்லை என்பவர்கள், அன்றைக்கு இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்ற ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே என்ன ஆனார்கள்? எப்படி ஆனார்கள் என்பதைச் சுதந்திரப் போர்க்களத்தில் அன்று தலைவர்களுடன் இணைந்து நின்று போரிட்ட பேராசிரியர் கல்கி அவர்கள், அவர் ஆசிரியராக இருந்து நடத்திய கல்கி இதழில் 19-6-1949 அன்றைய தேதியிட்டு எழுதிய தலையங்கம் விளக்கிக் காட்டுகிறது!

சுதந்திரம் பெற்ற ஆண்டு 1947 -

அடுத்த இரண்டு ஆண்டுகளில்,

காங்கிரசின் சில அமைச்சர்கள்

அதிலும் குறிப்பாக நிதி அமைச்சர் பற்றி எழுந்த புகார் பற்றி என்ன எழுதுகிறது கல்கி!

இதோ அது :-

"சென்னை மந்திரிமார்கள் மீது பலர் பலவிதமான குறைகள் கூறியிருக்கிறார்கள். அவை பெரும்பாலும் ஆதாரமற்றவை யென்றும் மிகைப்படுத்தியவையென்றும் நாம் கருதுகிறோம். ஆனால் ஸ்வதந்திரா பத்திரிகை கனம் கோபால ரெட்டி மீது சொல்லியிருக்கும் புகாரை அம்மாதிரி நாம் அலட்சியம் செய்வதற்கில்லை.

அது சின்ன விஷயமல்ல, கனம் கோபால ரெட்டியின் சொந்த வாழ்க்கை பற்றிய புகார் அல்ல! பொதுமக்களின் பணத்தில் பத்து லட்சம் ரூபாய் சம்பந்தப்பட்ட காரியம்.

ஆகையால் அதைப் பொது ஜனங்கள் அலட்சியம் செய்ய முடியாது. மந்திரிமார்களும் அலட்சியம் செய்யக்கூடாது.

ஸ்வதந்திராவில் வந்த புகாரைப் பற்றி நேயர்கள் பலருக்குத் தெரிந்திருக்கலாம். இங்கே சுருக்கமாகத் தெரியப்படுத்துகிறோம்.

சுதர்சன் லிமிடெட் என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அதில் கனம் கோபால ரெட்டி தாம் மந்திரியாகும் வரையில் டைரக்டராக இருந்தார். மந்திரி பதவிக்கு வந்ததும் தம் மனைவியின் பேரில் பங்குகளை மாற்றிவிட்டார். அந்தக் கம்பெனி டைரக்டர்கள் ஒன்பது பேரில் கனம் கோபாலரெட்டியின் சகோதரரும் மைத்துனரும் இரண்டு ஷட்டகர்களும் இன்னும் சில உறவினரும் இருக்கிறார்கள். இந்தக் கம்பெனியார் நிலக்கடலை எண்ணெய் தயாரிக்கும் மில் வைக்கப் போகிறார்கள். இதற்காக இயந்திரங்களுக்கு ஆர்டர் செய்திருக்கிறார்கள். இயந்திரங்கள் இன்னும் வந்து சேரவில்லை. வேலை ஆரம்பிக்கவும் இல்லை. இந்தக் கம்பெனிக்குச் சென்னை சர்க்கார் கைத்தொழில்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டத்தின்படி பத்து லட்சம் ரூபாய் சொற்ப வட்டிக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். கடன் சென்ற 1948ல் சாங்ஷன் செய்யப்பட்டது. இந்தக் கம்பெனியின் பங்குதார்கள் கூட்டம் சமீபத்தில் கனம் கோபால ரெட்டியின் இல்லத்தில் நடந்தது.

மேலே கூறியவைதான் விவரங்கள். இந்த விவரங்களை வைத்துக்கொண்டு ஸ்வதந்திரா ஆசிரியர் ஸ்ரீ காஸா சுப்பராவ் கனம் கோபாலரெட்டி மீது குற்றம் சுமத்தியிருக்கிறார். கனம் நிதி மந்திரி தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இன்னும் தொழிலே ஆரம்பிக்காத ஒரு கம்பெனிக்குப் பத்து லட்சம் ரூபாய் கடன்

வாங்கிக் கொடுத்ததாகப் புகார் சொல்கிறார். அந்தக் கம்பெனி டைரக்டர்கள் 100க்கு 12 வீதம் வட்டி வாங்கி லேவாதேவி செய்கிறவர்கள் என்று சுட்டிக் காட்டுகிறார்.

ஸ்வதந்திரா ஆசிரியர் ஸ்ரீ காஸா சுப்பராவ் தென்னாட்டின் திறமை வாய்ந்த பத்திரிகாசிரியர்களில் ஒருவர். சென்னை சர்க்கார் அமைத்துள்ள பத்திரிகை ஆலோசனைக் கமிட்டியில் காஸா சுப்பராவ் ஒரு அங்கத்தினர்.

எனவே, ஸ்வதந்திராவின் குற்றச்சாட்டுக்குச் சரியான பதில் நம்முடைய மந்திரிகள் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் நாளது வரையில் மந்திரிகளின் தரப்பில் பதில் ஒன்றும் வரவில்லை.

காஸா சுப்பராவ் அப்படித்தான் ஏதாவது எழுதுவார். அதற்கு ஏன் பதில் சொல்ல வேண்டும்? என்று நம்முடைய மந்திரிமார்கள் கருதினால் அது பெருந்தவறாகும்.

புகாரில் உண்மை இல்லாவிட்டால், பொய்யான புகார் என்று தெரிவிக்கட்டும். அதனால் எல்லாருமே திருப்தி அடைவார்கள்.

பத்து லட்சம் ரூபாய் கடன் கொடுத்தது உண்மையாயிருந்து, அதில் முறை தவறு ஒன்றும் இல்லை என்று சென்னை மந்திரிகள் கருதினால் அதைக் காரண காரியங்களுடன் விளக்கிச் சொல்லட்டும். நூற்றுக்கு ஐம்பது பேராவது திருப்தி அடைவார்கள்.

இவ்வளவு முக்கியமான விஷயத்தில் பதிலே சொல்லாமலிருப்பது முறையல்ல வென்று கருதுகிறோம். ஏனெனில், புகாரில் கண்ட விஷயம் ஒன்றுக்குப் பத்தாக மிகையாகி ஜனங்களிடம் பரவிக் கொண்டு தானிருக்கும். அதனால் காங்கிரஸ் மந்திரிகளின் புகழ் கெடுவதோடு காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நற்பெயருக்கும் மாசு உண்டாகும்.

ஸ்ரீ சங்கரராவ் தவே இந்தப் புகாரைப் பற்றி விசாரிக்கப் போகிறாரா என்பது நமக்குத் தெரியாது. இந்த விஷயத்தில் இரகசிய விசாரணைக்கு அவசியமும் இல்லை. பகிரங்கமாகச் சொல்லப்பட்டிருக்கும் புகாருக்குச் சென்னை சர்க்கார் பகிரங்க மாகப் பதில் தெரிவிப்பதே நல்லது.

மேற்படி புகார் விஷயமாக நம்முடைய கருத்தையும் சொல்லி விடுகிறோம். சுதர்சன் கம்பெனிக்குப் பத்து லட்சம் கடன்

கொடுத்ததில் முறை தவறு இல்லாமலிருக்கலாம். ஆயினும் பெரிய சர்க்கார் பதவியிலிருப்போர் சின்ன சந்தேகங்களுக்குக்கூட இடங்கொடாமலிருப்பது நலம். ஜனநாயகம் குழந்தைப் பருவத்திலிருக்கும் இந்தியா தேசத்தில் இது மிகவும் அவசியம். ஆகையால் முறை தவறில்லாமல் மேற்படி கடனைக் கொடுத் திருந்தால்கூட, பொது ஜன உணர்ச்சியை முன்னிட்டு மேற்படி கம்பெனியார் கடனை உடனே திருப்பிக் கொடுத்துவிடும்படி செய்வது உத்தமமாயிருக்கும்.

கடன் தொகை கொடுபடாமல் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டதோடிருந்தால் சுதர்சன் கம்பெனியார் மேற்படி கடன் தங்களுக்கு வேண்டாம் என்று கூறி மறுதளித்து விடலாம்."

உடன்பிறப்பே,

ஊரில் உள்ளவர்கள் எல்லாம் அயோக்யர்கள், தான் மட்டுமே உத்தமர், யோக்கியர் என்று உரத்த குரல் எழுப்பும் சிலர் உணர வேண்டும். உணர்ந்து திருந்த வேண்டும் என்பதற்காகவே கல்கியின் பழைய தலையங்கத்தை நினைவூட்ட வேண்டியது என் கடமை ஆயிற்று!

அன்புள்ள,

மு.க.

19-8-2002

2813. சந்தர்ப்பவாதம் என்பதற்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அர்த்தமா?

உடன்பிறப்பே,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி எழுத வேண்டாமென்று நீண்டநாள் பொறுமையோடு இருந்து விட்டு, இன்று வேறு வழியின்றி பொறுத்தது போதும் என்ற நிலைக்காளாகி இந்தக் கடிதம் எழுதுகிறேன்! என்னதான் தொழிலாளர் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை மற்றும் பொதுப் பிரச்சினைகளில் கம்யூனிஸ்டுகளுடன் அணி சேர்ந்து கூட்டமைப்புப் போராட்டங்கள் நடத்திட தி.மு.க. முன்வந்த போதிலும், அப்படியொரு வலுவான அணி உருவாகி, அந்த அணி இன்றுள்ள மக்கள் விரோத ஜெயலலிதா அரசுக்கு எதிராகச் செயல்படுவதையோ,

18-8-2002 நாளிட்ட தீக்கதிர் - மார்க்சிஸ்ட் ஏட்டில் வெளிவந்துள்ளவாறு, அக்கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் திரு. பிரகாஷ் காரத் அவர்கள் ஆகஸ்ட் 17 அன்று கடலூரில் நடைபெற்ற மாநாட்டில் குறிப்பிட்டுள்ளதுபோல ஆரிய கலாச்சார மேலாதிக்கத்திற்கு ஆபத்து வருவதையோ,

தமிழக மார்க்சிஸ்டுகள் மனதார விரும்பவில்லை யென்பது தெளிவாகப் புரிகிறது.

கடலூரில் பேசிய அந்தக் கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர் திரு. பிரகாஷ் காரத் அவர்கள்,

“ஆரியக் கலாச்சாரத்தைத் திணிப்பதே
ஆர்.எஸ்.எஸ். திட்டம்”

என “தீக்கதிரில் தலைப்புச் செய்தி வரும் அளவுக்கு ஆற்றியுள்ள உரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:-

“ஆர்.எஸ்.எஸ். கூறுகிற கலாச்சாரம் என்பது பொதுவான கருத்தில் கூறப்படுவதல்ல. அது

இன அடிப்படையிலானது ஆரிய கலாச்சாரம் என்பதாகும். அது புனிதமானது; தூய்மையானது என்று பிரச்சாரம் செய்கிறது. இது ஹிட்லர் கூறுவதை ஒத்திருப்பதால்தான் அவர்களை பாசிஸ்டுகள் என்கிறோம். இந்தியாவில் ஆரிய இன ஆக்கிரமிப்பு 3000 அல்லது 4000 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது என்பதை வரலாற்றில் எழுதியிருப்பதால்தான் ரோமிலா தாப்பர் போன்றவர்களின் புத்தகங்களை அவர்கள் தடை செய்ய காரணமாகும். ஆரியர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்றால் அதற்குமுன் இந்தியாவில் இருந்தவர்கள் யார் என்ற கேள்வி எழும். அவர்கள் திராவிடர்கள் என்பதை ஏற்க வேண்டியிருக்கும். இதனால்தான் முற்போக்குச் சிந்தனையுள்ள ஆய்வாளர்களை அவர்கள் வெறுக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள மார்க்சிஸ்டுகளுக்கு பிரகாஷ் காரத் அவர்களைப் போன்று முற்போக்குச் சிந்தனை ஏற்படாத காரணத்தினாலோ என்னவோ;

ஆரிய ஆதிக்கத்தை வீழ்ந்துவிடாமல் காப்பாற்றுவதில் எச்சரிக்கையாக இருந்து கொண்டு, அதே சமயம் தங்கள் இயக்கம், மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக அணி திரளுவது போன்ற பாசாங்கு செய்வதிலும் தங்களது கெட்டிக்காரத்தனமான தந்திரத்தைக் கையாண்டுவருகிற கலை நன்றாகவே அத்துப்படி ஆகியிருக்கிறது.

ஜெயலலிதாவை எதிர்ப்பது போலவும் காட்டிக் கொள்ள வேண்டும் - அதேநேரம் தி.மு.க.வும், அ.தி.மு.க. போன்ற சந்தர்ப்பவாத இயக்கம்தான் என்று மக்களிடம் பிரச்சாரமும் செய்ய வேண்டும். அதன் வாயிலாக ஜெயலலிதாவுக்கு எதிராக எழும் அணியின் வலிவைக் கூடுமான வரையில் குறைத்திட முனைய வேண்டும். அதாவது ஆரியக் கலாச்சாரத்திற்கு எதிர்ப்பாக இருப்பதைப் போலவும் காட்டிக் கொள்ள வேண்டும், அதே நேரத்தில் அதைக் கட்டிக் காப்பாற்றவும் வேண்டும் என எண்ணுகிறார்கள். அதனால்தான் தி.மு.கழகத்துடன் சேர்ந்து ஒரு வலுவான அணி அமைவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களுடைய எழுத்திலும், பேச்சிலும், செயலிலும் இதனைத்தான்

அவர்களது தொலைநோக்குப் பார்வையாகக் காண முடிகிறது. அதற்காகத்தான் இந்த ஆகஸ்டு மாதத்தில் பத்து நாட்கள் தமிழக முழுதும் அக்கட்சியின் சார்பில் ஒரு பிரச்சார இயக்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

“திராவிடக் கட்சிகள் மற்றும் பா.ஜ.க.
ஆகியவற்றின் அரசியல் சந்தர்ப்பவாத
நிலைப்பாடுகளை அம்பலப்படுத்தவும்
மக்கள் பிரச்சினைகளை முன்வைத்தும்
இந்த இயக்கம் நடைபெறுகிறது”

என்று அவர்கள் கட்சி ஏட்டில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

கண்ணோட்டம், சந்தர்ப்பவாதம், எதார்த்தம் - இப்படி சில வார்த்தைகள் கம்யூனிஸ்ட் அகராதியில் அடிக்கடி காணக்கூடியவைகளாகும். தி.மு. கழகத்தை சந்தர்ப்பவாதக் கட்சி என்று கூறுவதற்கு என்ன காரணம் கூறுகிறார்கள்?

பா.ஜ.க.வுடன் அணி சேர்ந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இருப்பதுதான் இவர்களுடைய எதிர்விமர்சனத்திற்குக் காரணம் என்கிறார்கள்.

முதலில் மத்தியில் நடைபெறுவது வெறும் பா.ஜ.க. ஆட்சி அல்ல என்பதையும், பா.ஜ.க., சமதா, தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., சிவசேனா, பிஜூ ஜனதா தளம், பகுஜன் சமாஜ் கட்சி, தேசிய மாநாட்டுக் கட்சி, அரியானா விகாஸ் போன்ற கட்சிகளும் கொண்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அரசு என்பதையும் உணர்ந்து கொண்டால் மார்க்சிஸ்டுகளுக்கு இந்தச் சிக்கல் வராது.

அவர்கள் அடிக்கடி இந்தியாவின் கடந்த கால வரலாற்றை, ஏன் அவர்களுடைய கட்சியின் கடந்த கால வரலாற்றைக்கூட மறந்து விடுகிறார்கள்.

1964-65 ஆம் ஆண்டுகளில் கேரள இடதுசாரி முன்னணியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இடம் பெற்றிருந்தது. அப்போது முஸ்லிம் லீக் கட்சியுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொகுதி உடன்பாடு கொண்டது என்பதற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அந்தக் கூட்டணியிலிருந்து விலகியது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துப்படி அப்போது முஸ்லிம் லீக் வகுப்பு வாத

அமைப்பு. ஆனால் அந்த முஸ்லிம் லீக் கட்சியோடு மார்க்சிஸ்ட் உடன்பாடு கொண்டிருந்தது.

1967 தேர்தல் முடிவிற்குப் பிறகு பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய மூன்று மாநிலங்களிலும், முறையே அகாலி தளம், பாரதிய கிரந்தி தளம், வாஜ்பயின் ஜனசங்கம் ஆகிய கட்சிகள் அடங்கிய கூட்டணி அரசில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்ததை மறந்து விடக் கூடாது.

ஆர்.எஸ்.எஸ். கட்சியினுடைய நிழல் என்று சொல்லப்படுகின்ற ஜனசங்கம் மற்றும் பாரதிய கிரந்தி தளம், அகாலி தளம் ஆகிய இந்தக் கட்சிகள் எல்லாம் பங்கேற்ற அரசில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்தது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அரசுகளில் பங்கு பெறவில்லையென்றாலும், அந்த அரசுகளுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவை அளிக்க ஒப்புக் கொண்டு, அவ்வாறே அளித்தது.

1977இல் நடந்த தேர்தலில் மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையிலே ஜனதா அரசு அமைந்தது. ஜனதாவிலே இடம் பெற்ற கட்சிகளில் ஒன்று ஜனசங்கம். அந்த அரசில் வாஜ்பய், அத்வானி, நானாஜி தேஷ்முக் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிலிருந்து அந்த அரசுக்கு ஆதரவு கொடுத்தது.

1989-90இல் வி.பி. சிங் தலைமையிலே மத்தியில் ஆட்சி உருவானது. அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பா.ஜ.க. ஆகிய இரண்டுமே அமைச்சரவையிலே சேராமல் வெளியிலிருந்து வி.பி. சிங் ஆட்சியை ஆதரித்தன.

இப்படி மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம் என்ற பழமொழிக்கேற்ப மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடந்து கொண்ட அதே நேரத்தில் நம்மைப் போன்ற கட்சிகளைப் பார்த்துச் சந்தர்ப்பவாத நிலைப்பாடு எடுத்ததாகக் குற்றஞ்சாட்டுவதும், குறை கூறுவதும், இதைச் சொல்லி மக்களிடத்தில் ஒரு வெறுப்பை நம்மீது ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவே திட்டமிட்டு பத்து நாட்கள் பிரச்சார இயக்கம் நடத்துவதும் தன் கண்ணிலே விழுந்து விட்ட

துரும்பை மறைத்து விட்டு, எதிரியின் கண்ணில் விழுந்த தூசியைப் பெரிதுபடுத்துவது போலத்தான் இருக்கிறது. அதைப் பெருந்தன்மை, பொதுநலம் என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அரசியல் ரீதியாக இதை ஒரு சந்தர்ப்பவாதம் என்று மார்க்சிஸ்டுகள் குற்றஞ்சாட்டுகிற நேரத்திலேதான் இந்த உவமையை உபயோகப்படுத்தித் தீர வேண்டியிருக்கிறது. நமக்குள்ள சந்தேகமெல்லாம் சந்தர்ப்பவாதம் என்பதற்கு மார்க்சிஸ்ட் கட்சி அகராதியில் மாத்திரம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அர்த்தம் போலும்!

அன்புள்ள,

மு.க.

20-8-2002

2814. மறந்திடாமலும்; மறைத்திடாமலும்!

உடன்பிறப்பே,

இன்று ஓணம் திருநாள். கேரளத்தில் மட்டுமின்றி மலையாள மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட குடும்பத்தினர் வாழுகின்ற பகுதிகள் அனைத்திலும் இவ்விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. நானும் ஓணம் திருநாள் வாழ்த்து தெரிவிக்கும் இந்நாளில், ஓணம் தமிழகத்திலும் பாண்டிய நாட்டில் ஒரு காலத்தில் கொண்டாடப்பட்டதற்கான சான்று உண்டு என்பதை சங்க இலக்கியமாம் மதுரைக் காஞ்சியிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. மாங்குடி மருதனார் பாடிய மதுரை ஓணம் திருவிழா சிறப்பு குறித்த வரிகள் வருமாறு:-

“கணம் கொள் அவுணர்க் கடந்த
பொலந்தார்
மாயோன் மேய ஓண நல் நாள்
கோணம் தின்ற வடு ஆழ் முகத்த
சாணம் தின்ற சமம் தாங்கு தடக் கை
மறம் கொள் சேரி மாறு பொரு செருவில்
மாறாது உற்ற வடுப் படு நெற்றி
கரும்பு ஆர் கண்ணிப் பெரும் புகல் மறவர்
கடுங் களிறு ஓட்டலின் காணுநர் இட்ட
நெடுங் கரைக் காழகம் நிலம் பரல் உறுப்ப
கடுங் கட் தேறல் மகிழ் சிறந்து திரிதர...”

என்று விரிகிற இந்த மதுரைக் காஞ்சிப் பாடல் வரிகளுக்கு விளக்கம் இதோ:-

திருமால் பிறந்த திருவோணம் எனப்படும் நாளில் ஓணம் விழாவை மதுரைப் பகுதியினர் எப்படிக் கொண்டாடு கிறார்கள் என்றால், அங்குசத்தால் முகத்தில் தாங்கிய காயங்களின் வடுக்களையும், தடக்கையையும் உடைய ஆண் யானைகள் இரண்டை, போரில் புறங்காட்டாமல்

நின்றதால் வடுக்கள் ஏந்திய நெற்றியை உடைய மறவர்கள் ஒரு யானையுடன் ஒரு யானையை மோதவிட்டு அப்போரினைக் காண வருவோர் அருகில் வராதிருக்க வேண்டி நெடிய கரையினை எழுப்பி, அதன் மீதுள்ள பருக்கைக் கற்கள் தமது பாதங்களில் குத்தி வருத்துவதையும் அறியாமல் தேறல் அருந்தி மகிழ்ந்து ஆடுவார்கள்.

இப்படி ஓணம் பண்டிகை தமிழ் மன்னர்கள் காலத்திலும் இங்கே கொண்டாடப் பெற்று, இப்பொழுது மலையாள மொழிக்காரர்களின் திரு விழாவாக நடத்தப்பெறுகிறது.

திருமாலின் சிறப்பைக் கூறும் மதுரைக் காஞ்சி அந்தத் திருமால், அவுணர்களை அதாவது அசுரர்களை அழித்தவர் எனப் பொருள் கண்டு, அந்த அசுரர்கள் இராவணன், இரணியன் என்று உரைப்போரும் உண்டு!

அந்த அசுரர் வரிசையிலேதான் மகாபலிச் சக்கரவர்த்தியையும் கொண்டு வந்து நிறுத்தி, அந்த மகாபலி மகாக் கொடியோன் என சித்தரித்து, அவனை அழிக்க திருமால், வாமனாவதாரம் எடுத்து மூன்றடி மண் கேட்டு, அவன் தலையில் கடைசி அடியை வைத்து அழுத்திப் புதைத்து விட்டு, அமர லோகவாசிகளான ஆரிய தேவர்களைக் காப்பாற்றினார் என்று புராணக் கதை கூறி, அந்த அசுர மன்னன் பெயரால்தான் மகாபலிபுரம் விளங்குவதாக இன்றைக்கும் கூறிக் கொண்டிருப்போர் பலர்!

பாவம்! மாமல்ல பல்லவன் காலத்தில் அவன் பெயர் விளங்க அமைந்ததுதான் மாமல்லபுரம் என்பதை வரலாறு விளக்குவதை வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டு, இவர்கள் புராணீகப் பெயரான மகாபலிபுரத்தையே வழக்காற்றில் கொண்டுவந்து விட்டவர்கள்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவப் பேரரசை ஆண்ட நரசிம்மவர்ம பல்லவன்; மற் போரிலும் பல வெற்றிகளைக் கண்டு மாமல்லன் எனப் புகழப்பட்டவன்.

அந்தப் பெயர்தான் மாமல்லபுரம் என அப்பகுதியின் புகழ் பரப்பும் பெயராயிற்று - அதை மகாபலிபுரம் என்பது புராணீக ஆதிக்கத்தின் வெற்றியாகுமன்றோ! சரித்திர உண்மையின் வீழ்ச்சிக்கு அடையாள மன்றோ!

கேரளத்தில் ஓணம் பண்டிகைக்கு கூறப்படும் கதை என்ன?

மாவலியென ஒரு மன்னன் இருந்தான் - அவன் ஆட்சியில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். மாவலி மன்னன் நல்லவன், வல்லவன் என்று பெயர் பெற்றான். மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று, மாவலி மன்னன் ஆட்சி நடத்தியதால் அவனை வீழ்த்த முடியவில்லை. எனவே அவன் ஆட்சியே நீண்ட காலம் நடைபெற்றால், ஆரியர்களான தேவர்கள் எப்போது ஆட்சிக்கு வருவது? ஆகையால் அவனை ஒழிக்க வேண்டுமென்று தேவாதி தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டனர்.

திருமால், மாவலி மன்னனைச் சந்தித்து உன்னை கொடையாளி என்கிறார்களே, எனக்கு மூன்றடி மண் கொடு எனக் கேட்கிறார்.

மன்னன் தருவதாக வாக்களிக்கிறான். அது மோசடி, ஒப்புக் கொள்ளாதே! என்று மாவலி மன்னனின் குரு தடுக்கிறார். மன்னன், வாக்குறுதி மீறாமல் மூன்றடி மண் தர ஒப்புகிறான். திருமால், ஒரு அடியை மண்ணிலும், ஒரு அடியை விண்ணிலும் அளந்து விட்டு, மூன்றாவது அடியை அவன் தலையிலே வைத்து - அவனை அழித்து விடுகிறார்.

இப்படிப் போகிறது கதை! மாவலி மன்னன் ஆட்சியை நன்றாக நடத்தியது பிடிக்காமல், அவனை கடவுளே வந்து அழித்தார் என்பதே கேரளத்தில் வழங்கும் கதை!

கேரளத்தில் மாவலி மன்னன் நல்லவன் - நல்லாட்சி நடத்தியவன் - இறந்து போன அவனை ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுக்கு ஒவ்வொரு ஆண்டும் வரவேற்று மகிழ்கிற விழாதான் ஓணம் பண்டிகை!

நரகாசுரன் ஒழிந்தான் என்று கூறி மகிழ்ந்து கொண்டாடப்படுகிற தீபாவளிப் பண்டிகை போன்றதல்ல, ஓணம் பண்டிகை!

இங்கே மாவலியை, மகாபலி என அழைத்து, அவன் மகாமூர்க்கன் என்றுதான் சபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இதே மாவலி, கேரளத்தில் நல்லாட்சி நடத்தியதாகத்தான் இன்றளவும் பேசப்படுகிறான்.

நல்லாட்சியை நடத்தியது ஒரு நரன் என்பதை நாசகாலர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

தங்களின் நாடகத்தை
நடத்தி முடித்துவிட்டார்கள்!

உடன்பிறப்பே, ஒன்று கவனித்தாயா?

மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில் ஓணம் நாள் பற்றிக் குறிப்பிடுகையில், திருமால் பற்றிக் கூறும்போது,

"கணம் கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன்...."

என்று வர்ணிக்கிறார். இதன் பொருள், அவுணர்கள் எனப்படும் அசுரர் கூட்டத்தை அழித்து பொன்மாலை சூடிய திருமால் என்பதாகும்.

இராவணன், இரணியன் போலவே மாவலி என்ற மன்னனும் திராவிட இனம் என்பதை மறைத்து விட்டு அரக்கர் எனும் கொடியோர் பட்டியலில் இணைக்கப்பட்ட காலம் அது!

அந்த விஷக்காற்று சங்க இலக்கியங்களிலும் சந்து பொந்து கண்டு நுழைந்துள்ளது என்பதற்கானச் சான்றுகளில் மதுரைக் காஞ்சியும் ஒன்றாக விளங்குகிறது.

ஓணம் பண்டிகைக்கு நாமும் வாழ்த்துக் கூறுகிறோம்! அதே நேரத்தில் அதற்கான பின்னணியில் பின்னிக் கிடக்கும் வரலாற்று உண்மைகளை ஆய்ந்து தெளிந்து வஞ்சனை, எப்படியெல்லாம் வலை விரிக்கும் என்பதை அனைவர்க்கும் விளக்கும் வகையை மறந்திடாமலும், மறைத்திடாமலும் அந்த ஓணம் வாழ்த்து அமைய வேண்டும்!

அன்புள்ள,

மு.க.

22-8-2002

2815. தென்னவன் காதை!

குறுங்காவியம்

உடன்பிறப்பே,

குறுந்தாடி; குள்ளத்தாடி; நெடுந்தாடி;
வெள்ளைத்தாடி;

இப்படிப் பல தாடியுடனே....
புராண அங்காடி விரித்துப் புளிக்கும் பழங்காடி
சுவைத்துப்

போதையேறிக் கூத்தாடும் பூசுரர்கள் கூட்டம்....
மாசு, மரு அற்றிருந்த மண்டிலத்தின் ஓரம்
மாடுகளை, ஆடுகளை, மனிதர்களை வெட்டிப்
பிண

மேடுகளை வேள்விக்கெனக் குவித்துவந்த
வேளை!

ஆரியரின் படையெடுப்பால்...இல்லை....
இடைநெளிவால் - கடை விழியால் - இருடிகளின்
இன்பரச பானத்தால் - இருண்டுவிட்ட
தென்புலத்தில் - ஏற்றிவிட்ட விளக்கு போல
எழுந்து நின்றான் இலங்கை வேந்தன்!

அவன் சரிதம் சொல்வதென்றால்...தசையெல்லாம்
ஆடுதய்யோ! திசையெட்டும் புகழ் சேர்த்த
தென்னிலங்கைக் கோமான், திராவிடரின்
மூதாதை!

பழந் தமிழின்பால் பற்றுதலை வைத்த நம் பாட்டன்.
கண்ணுக்குள் பாவைபோல் இலங்கைத் தீவு.
கருவிழிதான் ஆழ் கடல்கள்! தமிழ்
மண்ணுக்குப் புகழ் தந்த பெருவீரன்.
உருவில் சிங்கம், உள்ளம் தங்கம்! யாழ்ப்
பண்ணுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த

யாழ்ப்பாணத் திருநாட்டான்-மலைத் தமிழன்!
அவன் துணைவி, வண்டமரும் பூங்குழலாள்
மண்டோதரி - மாதர் குல மாணிக்கம் - எதிர் வீணை
மீட்டும்
பேச்சுக்காரி!...இராவணனின் யாழோசை
தோற்ப தெல்லாம்...பத்தினியின் பள்ளியறைக்
கனி மொழியின் முன்னேதான்!
இமைக் கதவு உண்டே எழில் விழியைக் காப்பதற்கு;
அப்படித்தான் - இலங்கைக்கு இராவணன்!
அவனுக்கு அவள்!
காடுகளில் நமதெல்லைக் கோடுகளில்
ஆரியர்கள்,
கடவுளுக்குப் பலிதேடும் வேலை, ஆகாது
கொடுமையென உருவினான் வாளை!
பர்ணசாலை அழைப்புக்கள் முத்தமிட்டன
அவன்தாளை, அந்தப்
பருவ மங்கையரின் சிரிப்போ விளைந்த பாளை!
அட! தொடுவேனோ ஆரியத் தேளை என
எதிர்ப்புக் குரல் கொடுத்தான் அந்தக் காளை!...
நரிகள் உள்ள காடெல்லாம், நயவஞ்சகர் உலவும்

நாடெல்லாம் காவல்! காவல்! அந்தப் படைகளுக்கு
இராவணன், காலம் காட்டும் சேவல்! சேவல்!
தமிழரசி முத்து நகை இராவணனின் தங்கை,
தண்டகாரண்யத் தவசிகளை எதிர்த்து ஊதிவிட்டாள்
சங்கை!
வேங்கையெனக் கிளம்பிவிட்டாள் வீரர் குல மங்கை,
வேதமோதிகளின் விழிகளிலே வழிந்திடுதே கங்கை!
துரோகத்தால் சூழ்ச்சியினால் தமிழர்களைத்
தோற்கடிக்கத் தோள் வலியால்
ஆகாதெனக் கண்டு விட்டதாலே
சின்னவனாம் இலக்குவனும் சீதையெனும்
மனையாளும்
பின் தொடரப் புறப்பட்டான் இராமனெனும் மன்னன்.
தம்பிக்குக் கேடிழைத்து முடிசூட முனைந்து
நம்பிக்கைத் துரோகியென நாடெல்லாம் கூறக்
காடேகி விட்டவன் அந்த ராமன் எனும் மனிதன்!

அவன் ஒரு நாள்,
காட்டோரம் தம்பியுடன் உலவும்போது, கரும்பனைய
முத்துநகை
களைப்பினால் தூங்குகின்றாள் கனிமரச்
சோலையோரம்.
கமலமலர்க் கண்மூடித் தூங்குகின்ற தூயவளை
கணை தொடுத்து வீழ்த்திடவே
காகுத்தனாம் இராமனவன் கடிது செல்ல
காவலின்றித் தூங்கிவிட்ட முத்துநகை
கண் விழித்தாள் - கடும்போர் விளைத்தாள்
கனி மரம் போல் தனியொருத்தி - இருமந்தி!
என் செய்வாள்?
கடுமையாய்ப் போரிட்டுக் கரமிழந்தாள்!
மூக்கிழந்தாள்!
முத்துநகை கொட்டுகின்ற பல் இழந்தாள்! அம்மவோ
முலையிழந்தாள் - ஆயினும் கற்பு
நிலையிழந்தாள் இல்லை!
தலையிழந்து போயினும் மானங்காக்கும்
தமிழச்சி இராவணனின் தங்கச்சி!
சூதறியாச் சோதரியைச் சூர்ப்பநகை ஆக்கிவிட்ட
காதெரியும் செய்தி கேட்டான் -
கண்ணிலே புண் பெற்றதுபோல் காட்சி தந்தான்
கடலாளும் புவி வேந்தன், முத்துநகை
அண்ணனன்றோ?
படர் உறவு இல்லாவிடில்தான் என்ன?
இலங்கைக்கு அவளோர் பிரஜையன்றோ?
எழுந்துவிட்டான் பழி வாங்க - காலை
இளம்பரிதி போல் கண்களிலே சிவப்பு தேக்கி...!
வேந்தன் வரும் செய்தி யறியா விழியழகி சீதாதேவி,
பாந்தமுள்ள மானொன்று வேண்டுமென்று
பர்த்தாவை விரட்டிவிட்டாள்!

அண்ணனில்லா நேரத்தில் அண்ணிக்கு
வலைவீசும் நினைப்போ தம்பி?
முன்னவன் பின் ஓடு நீயும் - எனக் கூறி
சின்னவனாம் இலக்குவனை அனுப்பிவைத்தாள்.
தீப்பறக்கும் கண்ணுடனே தேர்போல வரும் வீரன்;

தெருவாசல் தாண்டி சீதாதேவி வருதல் கண்டான்.
என்னுயிர்த் தங்கைக்கு இழிவுமிக
விளைவித்தவனின் மனைவி நீ!

உன்னுடலைக் காக்கைக்கும், கழுகிற்கும்,
காமங்கொள் கரடிக்கும் அளிப்பதல்லால் –
கரம் படவும் விடமாட்டேன்; கப்பலிலே ஏறென்றான்.
கலம் ஏறி நின்றாள், பீடுநடைச் சிங்கம் பின்
ஒரு பெண் மயில் போல்!
சிறையெடுத்துப் போன சீதாதேவிதனைச்
சிங்காதனத்திலேற்றிப் பட்டத்து ராணியாக்கிடுவான்.
சீதைக்கோர் செல்வனுதித்தால்
இலங்கைச் செங்கோலில் அவனுக்கும் பங்கு.
பன நுங்கு போல ஆரியர்க்கோர் தேசம் –
பாடுபடாமல் வருவதென்றால்
பதினாயிரம் சீதை போனால்தானென்ன மோசம்!
இப்படி ஆரியர்கள் நினைத்தபடி நடக்காமல்,
செப்படி வித்தை வீழ்த்த சீதைக்குச் சிறைச்சாலை
ஏற்பாடு செய்துவிட்டான் இலங்கைக் கோமான்!
வேதமென்றும், வேள்வியென்றும்,
விளம்புகின்ற கூட்டந் தன்னை...
விறகொடித்து வருதல் போல்
விலா எலும்பொடித்து வருக என்றான்!
வெற்றி வேந்தனுக்கோர் தம்பி வீடணன்....
வேங்கை மரத்துப் புல்லுருவி,
அண்ணனைச் சாய்த்துவிட்டு அரசாளக்
காத்திருப்போன்.
அனுமன் எனும் ஐந்தாம்படை யொன்றின்
கையினிலே
அக்கினிக்கோல் எடுத்துத் தந்து,
அழித்திடுக இலங்கை மாநகரை யென்றான்....
தென்னிலங்கைச் சீமையெங்கும் தீக்காடு
பிணக்காடு!
குணக்கேடன் வீடணனின் ஒத்துழைப்பால் –
குலம் வளர வழி கண்டார், குள்ளமன ஆரியர்கள்!
தமையனாம் வாலியெனும் தமிழ் வீரன் தன்னைத்

தர்ப்பைகளின் சூழ்ச்சியினால் கொன்றுவிட்ட
கொடியன்
சுயமரியாதையை விலைகேட்கும் சுக்ரீவன்
என்போன்-
கண் சுழற்றும் ஆரியரின் காலடியில் வீழ்ந்தான்.
தம்பியிடம் நம்பிக்கை வைத்திருந்த தங்கம்,
தரணியெலாம் நடுநடுங்க ஆண்டுவந்த சிங்கம்,
கடல் அலைமேல் எதிரிகளின் படைகள் வரக்கண்டு,

உடன்பிறப்பே, விபீஷணா!
உடன் கிளம்பு! என்றான்....
படமெடுக்கும் பாம்போடு விளையாட்டு
வேண்டாம்...

கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கிடுவாய்;
அண்ணா உடன் சென்று
சரணடைவோம் வந்திடுக! என்றே,
மதுக்
குடங்காட்டும் ஆரியர்க்குப் புகழ்பாடி நின்றான் -
தம்பி

குரங்காட்டம் கண்டுவிட்ட தென்னவனும் - கண்கள்
குளங்காட்ட குலங்கெடுக்க வந்தவனே!
கோடரியின் பிடியே! கொடிய உன் நாக்கை
அறுத்தெறியாமல் இருந்ததற்கு நன்றி சொல்லி
நடந்திடுக என நடந்தான் களம் நோக்கி....!
ஒரு கருவில் ஊறிவிட்ட உத்தமனாம் - சிந்தனை
உறக்கத்தில் வல்லவனாம், எழில் -
கும்பகர்ணனெனும் தம்பி, அண்ணன் இடையினிலே
இருக்கின்ற உடைவாளைப் போலப்
படைமோதும் இடம் நோக்கிப் பின் தொடர்ந்தான்
பாய்ந்து!

கடைக் குட்டித் தம்பியவன் எதிர்வந்து நின்றான்.
ஜடை கட்டி வாழுகின்ற ஆரியரை ஜெயிக்கப்
படை திரட்டிப் பயனில்லை - பாழாகும் என்றான்!
துரோகக்
கடை கட்டி வாழுகின்ற தம்பியல்ல நான்! நாசத்தின்
பிறப்பிடமே!

நடைகட்டு என்றே
மடையுடைத்த வெள்ளம்போல் சீறிவிட்டுச்
சென்றான்!
என்னருமை வீரர்களே! ஏற்றங்கொள் தோழர்களே!
இன்றிந்தத் தென்னிலங்கை ஆண்டிருக்கும்
இராவணன் நான் – இழி தொழிலோர் –
பண்பிழந்தோர் – எத்திப்
பிழைப்போர் – அவரை நத்திக் கிடப்போர்
அனைவரையும் அரைநொடியில் அழித்துவிடப்
போர்க்கோலம் பூண்டு விட்டேன்! புலி நிகர்
நண்பர்களே! பொல்லாத புரோகிதர்கள்,
படை இல்லாதவர் என்றிருந்தேன்!
பாவையரைப் பாசறையாய் ஆக்கிக் கொண்டு
தேவையுள்ள படைகளெல்லாம் குவித்துவிட்டார்,
கோவை இதழ், கொய்யாக் கன்னம், போர்வை உடல்
கொண்டுவிட்ட இளங் குமரிகளால்,
இனத்திலுள்ள மன்னரெல்லாம் இருடிகள்பால்
சாய்ந்துவிட்டார்!

எருமைக்குமில்லாத தடித்த தோலனாம்
இழி சுக்ரீவன் இராமனுக்குத் தோழனாம்
அண்ணனுக்கு மரணம் தந்தோன்!
இன்னொருவன், அனுமன் எனும் துரோகியுடன்
இலங்கைக்குத் தீ வைத்த என்றன் தம்பி!
இவர்கள் எல்லாம் எதிர்க்கின்றார் என்னை யென்றால்,
இதிலேதோ மர்மம் இருக்கத்தான் வேண்டுமன்றோ?

பூப்பந்தனைய பொன் மகளாம் – என் துணைவி
பாப்புனையும் புலவர்க்கும் கிட்டாத பைந்தமிழாம்–
கோப்பெருந் தேவியவள், குளிர்நிலா!
வைரக்கட்டி! இந்த
யாழ் மீட்டும் பாணனுக்கு, சீதையெனும்
பாழ்பட்ட வீணை ஏன்? சிறிது
நாள்பட்டேனும் நம் நாடும் ஆரியரின்
தாள் தொட்டு வணங்குதற்கு வழிதிறவேன்!
விழி மூலம் வீரத்தைக் காட்டுகின்ற வீரர்காள்!
மொழி மீது ஆணை தந்து புறப்படுவீர் – முள்ளம்
பன்றிகளைப்

பழி தீர்த்துத் திரும்பிடுவோம்!
என முரசறைந்தான், முதுகுன்றத் தோளுடையோன்!
அது கேட்டு அனைவருமே ஆர்ப்பரித்தார்!...
கொலை மணக்கும் போர்க்களத்தில்
இரு தரப்புப் படைகளுமே ரத்தங் கொட்டும்!
தலை நொறுங்கிச் செத்தவரும், குடல் கிழிந்து
போனவரும்
தமிழினத்தார் – ஒரு குலத்தார்!
மலையோரம், மரத்தோரம் மறைந்திருந்து
எலிபோலப் போரிட்டான் எதிரி இராமன்!
அம்புவியில் கண்டதில்லை இந்த முறை –
அம்பு வில்லை எடடா என்று
கும்பகர்ணன் கொதித்தெழுந்தான்! அது கண்டு
குதித்தோடும் இராமன் தன்னைக் கோழையே
திரும்பு என்றான்!
கரும்போ உயிரென்று களிறு போல் முழங்கி
நின்றான்!
முடிக்கவில்லை அவன் பேச்சை...முதுகுப் புறத்தினிலே,
சரமாரி பொழிந்து விட்டான் சண்டாள இலக்குவனும்!
ஆனையெனச் சாய்ந்து விட்ட அன்புத் தம்பிதனைச்
சேனைதனை நடத்தி வந்த செந்தமிழன்
கண்டுவிட்டான்!

சிந்தையெலாம் அணுவெல்லாம் தழல் பறக்கப்
பூனைகளே!....நில்லுங்கள் எனச் சொல்லிப்
பூட்டி விட்டான்....போர்க் கணையை!
குளிர் மேகம் கொட்டுகின்ற மழை தானோ?
கோடையிலே அதிர்கின்ற இடிதானோ? எனப்
புயல்வேகம் – புதுவேகம் கொண்டுவிட்டான்!

வேல்பட்ட புலி போல – விடுபட்ட கணைபோல –
அணை விட்ட வெள்ளம் போல – ஆயிரம்
வாள்பட்ட மார்புடையான், போரிட்டான்!
கால்பட்ட பிடரியுடன் கயவர்களும் மறைந்து
போனார்!

ஒழிந்ததடா பகையென்று, நகை முழக்கம்
செய்து விட்டுத் திரும்புகின்ற வழிதனிலே
ஒளிந்திருந்து ஆரியர்கள் ஓரம்பு வீசிவிட்டார்.

மார்பினிலே பட்ட கணை வெட்டித் தள்ளி,
யாரடா கோழையென்று வாள் ஓங்கித்
திரும்பிவிட்டான்!
ஓடுதற்கு வழியின்றிச் சிக்கிவிட்ட இராமன் கூட்டம்
தேடுதற்கும் தசையின்றிப் பஞ்சாய்ப்போகும்!...
கன்னலடா என்றன் நாடு, அதை
இன்னலிலே மாட்டிவிட்ட உங்களுக்கு -
இந்த வாள் வீச்சு
மின்னலடா எனக் கூறிச் சுழற்றிவிட்டான்
சூறாவளிதனையும் சூழ்ந்தெதிர்க்கும் கீர்த்தி
பெற்றோன்!
இனி நிலைமை மோசமென்று, ஆரியக்
கனி சுவைக்கும் வீடணன் கண்டுவிட்டான்!
ஈட்டியொன்று அவன் கையில்!....
எறிந்து விட்டான் அண்ணனது முதுகின் பக்கம்!
மறைந்திருந்து பறந்து வந்த அந்த ஈட்டி - அவன்
மலைப்பாறை முதுகினிலே ஊடுருவி, மார்பகத்தில்
தலை நீட்டிக் - கண்ணீர் கொட்டும்!
இமயமலை சாய்வது போல், இராவணனும்
வீழ்ந்துவிட்டான்!
எனைக் கொன்றவன் என் தம்பி, பனை மரத்
தோளுடையான் - கையிலே பார்ப்பனத்
தாளுடையான் - உயிர் பிழைக்க மருந்துண்டு! -
ஆனால் என்றன் உடன் பிறப்பு ஒளிந்திருந்து
போரிட்டான் எனக்கேட்டுச் சாகின்றேன்
இது கேட்டுச் செத்தது போல் ஆகிவிட்டார்
இலங்கை மாந்தர்!

அன்புள்ள,

மு.க.

24-8-2002

2816. பச்சைக்கொடி எது? பச்சைப் பாம்பு எது?

உடன்பிறப்பே,

"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்ற என்னுடைய சூளுரைப் கவிதையை கூட்டம் தவறாமல் நினைவுகூர்ந்து முழங்கியும், அறிக்கைகள் தவறாமல் சுட்டிக் காட்டியும் வருகிற புரட்சிக் கலைஞர் தம்பி விஜயகாந்த் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுடைய கண்ணீரைத் தன்னால் இயன்ற அளவு துடைப்பதற்காகப் பத்து இலட்ச ரூபாய்க்கு கைத்தறி ஆடைகளை வாங்கி ஏழைகளுக்கு இலவசமாக வழங்குவதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

கைத்தறியாளர்களுக்காக ஐம்பதாண்டுகளுக்கு முன்பிருந்தே, குறிப்பாக 1953ஆம் ஆண்டு, தலைவர் அண்ணா உள்ளிட்ட திராவிட முன்னேற்றக் கழக முன்னணியினர் கைத்தறி துணிகளை தோளிலும், முதுகிலும் சுமந்து வீதிவீதியாக விற்று, அந்தக் காலத்திலேயே இலட்சக்கணக்கான ரூபாய்க்கு விற்பனை செய்து கைத்தறியாளர்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், தமிழக அரசின் கவனத்தை கைத்தறியாளர்கள் மீது ஈர்க்கவும் பணியாற்றிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற வகையில் தம்பி விஜயகாந்தின் இந்தப் பணியைப் பாராட்டுகின்ற உரிமையும் தகுதியும் தி.மு. கழகத்திற்கு உண்டு என்பதால் பாராட்டி வரவேற்கிறேன்.

ஒரு அரசாங்கம் முன் நின்று நடத்த வேண்டிய காரியங்களை விஜயகாந்த் போன்ற தனிப்பட்டவர்களோ, எதிர்க்கட்சியிலே உள்ள தி.மு.க. போன்ற ஒரு கட்சியோ முழுமையாக நிறைவேற்றிவிட முடியாது. ஆனால் அதற்கு மாறாக அரசாங்கத்தையே பொறுப்பு கட்டாமல், தம்மால் இயன்ற உதவிகளையும் பாதிக்கப்பட்டோருக்குச் செய்வதுதான் ஜனநாயகத்தில் ஏற்புடைய வழியாகும். அந்த வழியைப்

பின்பற்றித்தான் அண்மையில்கூட தி.மு. கழகம் பட்டினி பசியால் பரிதவித்த நெசவாளர்கள் பகுதிகளில் அவர்களுக்கு கஞ்சி வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது.

அதுகூட திருவில்லிப்புத்தூர் போன்ற நெசவாளர் பகுதிகளில் நெசவாளர்களுடைய பட்டினி சாவுகளைப் பார்த்த பொதுமக்களேதான் நெசவாளர்களுக்கு கஞ்சி வழங்கும் திட்டத்தை முதலில் ஆரம்பித்தார்கள். பொதுமக்களின் ஒரு அங்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற வகையில் அந்தக் கழகம் ஆட்சியில் இருந்தபோது கைத்தறியாளர்களுக்காக ஆற்றிய கடமைகளையும், சாதனைகளையும் இப்போது ஆட்சியில் இல்லாத காரணத்தால் தொடர முடியாத நிலையில் பொன் வைக்கும் இடத்தில் பூ வைப்பது போல நாமும் கஞ்சி வழங்குகின்ற பணியை கைத்தறியாளர்கள் வாழும் பல பகுதிகளில் தொடங்கி தொடர்ந்து நடத்தினோம்.

நாம் கஞ்சி வழங்குவதாக அறிவித்தவுடன் முதலமைச்சர் ஜெயலலிதா அடக்கமுடியாத ஆத்திரங்கொண்டு இழிசொற்களால் என்னை அர்ச்சித்து ஒரு நீண்ட அறிக்கையை பத்திரிகைகளில் வெளியிட்டார். நான் அதைப்பற்றி ஆத்திரப்படாமல் அதற்கும் மென்மையாகவே பதிலளித்து கழக அமைப்புகள் மேற்கொண்டு கஞ்சி வழங்கும் பணியைத் தேவைப்பட்ட நெசவாளர் பகுதிகளில் ஆற்றிடுமாறு கேட்டுக் கொண்டேன்.

உடன்பிறப்பே, அம்மையார்குப்பம் என்ற ஊரையும் அதைச் சுற்றியுள்ள பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை போன்ற ஊர்களையும் நீ அறிந்திருக்கக் கூடும். நெசவாளர்கள் நிறைந்த வட்டாரம். கைத்தறியாளர்களுக்காக ஒரு காலத்தில் தி.மு.கழகம் அங்கே ஒரு மாநாடு கூட நடத்தியிருக்கிறது. அங்குள்ள நெசவாளர் பெருமக்களுக்கு நான் மிகவும் நெருங்கிய தொடர்புடையவனாக அன்றைக்கும் இருந்திருக்கிறேன், இன்றைக்கும் இருக்கிறேன். அங்குள்ள கழக நிர்வாகத்தினர் என்னைச் சந்தித்து குறிப்பாக மாவட்டக் கழகச்செயலாளர் தம்பி சிவாஜி, துணைப் பொதுச் செயலாளர் தம்பி சுந்தரம் போன்றவர்கள் அம்மையார்குப்பத்தில் நெசவாளர்களுக்கு கஞ்சி வழங்க நானே வர வேண்டுமென்று கேட்டார்கள்.

ஆகஸ்ட் 6ஆம் தேதி நான் நான்கு நாள் ஓய்விற்காக பெங்களூர் செல்வதாக இருந்த காரணத்தால் செல்லும் வழியில் அம்மையார்குப்பம் வருவதாக ஒப்புதல் அளித்திருந்தேன். உடனடியாக போட்டி போட்டுக் கொண்டு கருணாநிதி வந்து கஞ்சி வழங்கினால், நாங்கள் முட்டை பிரியாணி விருந்து அதே இடத்தில், அதே நாளில், அதே நேரத்தில் நடத்துவோம் என்று அ.தி.மு.க. முன்னணியினரும் சட்டமன்ற உறுப்பினர்களும் அறிவித்தனர்.

அத்துடன் அவசர அவசரமாக அரசாங்க சார்பில் அமைச்சரும் அதிகாரிகளும் சென்று அங்குள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கைத்தறி துணிகளை கொள்முதல் செய்தார்கள். அது எனக்கு மகிழ்ச்சி ஊட்டக்கூடிய விஷயம். நாம் அறிவித்த அடையாள நிகழ்ச்சியால் தானே தேங்கிக் கிடந்த துணிகளை அரசு உடனடியாக வாங்கி அந்தப் பகுதி நெசவாளர்களுக்கு நன்மை புரிந்திருக்கிறது என்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சி அது.

இதற்கிடையே ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், முக்கியஸ்தர்களும் அவர்களுக்கு துணையாக போலீஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டு நான் கஞ்சி வழங்கச் செல்லும்போது போட்டியாக பிரியாணி விருந்தை நடத்தி பெரும் கலவரத்தை, (ஆகஸ்ட் 9ஆம் தேதி மதுரையில் நடத்தியது போல்) நடத்துவதற்கு திட்டமிட்டு விட்டார்கள். இதுகுறித்து நான் கவர்னரிடம் தெரிவித்தேன். கவர்னரைச் சந்திக்க இயலாத காரணத்தால் அவருடைய செயலாளரிடம் விவரங்களைச் சொன்னேன். அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் அம்மையார்குப்பம் போன்ற சிறிய ஊர்களில் குறுகிய ஒரு வழிப்பாதை அமைந்த சில பகுதிகளில் நான் சென்று வருவதும், கஞ்சி வழங்குகிற இடத்தில் அந்தச் சிறிய ஊரில் கலவரம் எதுவும் விளைந்தால் அமைதிப்படுத்துவதும் அவ்வளவு எளிதான காரியமல்ல.

அதுமட்டுமல்ல, ஆளுங்கட்சியும் போலீசும் சேர்ந்து கொண்டு அவர்களே சட்டம் ஒழுங்கு அமைதியைக் கெடுப்பது என்று முனைந்துவிடும் சூழ்நிலையில் அங்கே எப்படி அமைதியைக் காணமுடியும்? எனவே நான் முதல்நாள் இரவே அம்மையார்குப்பத்தில் கஞ்சி வழங்கும் நிகழ்ச்சி நிறுத்தப்படுகிறது

என்று அறிவித்து விட்டு பெங்களூர் சென்று விட்டேன். இதற்குப் பிறகு தான் மதுரையில் கஞ்சி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்று அங்கே போலீசாரும் ஆளுங்கட்சியினரும் அம்மையார்குப்பத்தில் அவர்கள் நடத்த வழியில்லாமல் போய்விட்ட வன்முறைச் செயல்களையும், அராஜகச் செயல்களையும் தி.மு. கழகத்திற்கு எதிராக நடத்தினார்கள் என்பதும் நமது கழக உடன்பிறப்புகள் கைது செய்யப்பட்டதும் நாடறிந்த செய்தி! அன்று போலீசாரும், ஆளுங்கட்சியினரும் நடந்து கொண்ட முறை ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பதை பெரும்பாலும் எல்லா பத்திரிகைகளும் சுட்டிக்காட்டி கண்டித்திருக்கின்றன. விஷமிகள் ஒரு சிலரும், ஒரு சில வார ஏடுகள், நாளேடுகளும் மாத்திரம்தான் கஞ்சி-பிரியாணி போட்டி என்று கிண்டல் செய்து தி.மு.கழகத்தின் நல்லெண்ண ஏற்பாட்டை மக்களிடத்திலே தரக்குறைவாக விமர்சனம் செய்தன. அமைதியிலும் நெசவாளர் வாழ்விலும் ஜனநாயக மேன்மையிலும் அக்கறை கொண்ட யாரும் தி.மு. கழகத்தின் நெசவாளர்களுக்கு கஞ்சி வழங்கும் ஏற்பாடு பற்றி எந்தக் குறையும் கூறவில்லை.

"சிறு துளி பெருவெள்ளம்" என்பார்கள். நெசவாளர்களுக்கு அரசாங்கம் செய்ய வேண்டிய உதவி என்கின்ற பெரு வெள்ளமாக நம்மால் இருக்க இயலாவிட்டாலும், சிறு துளியாக அந்த வெள்ளத்தில் கலப்போம் என்றுதான் அரசுக்கு உதவியாக அனுசரணையாக இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்தோம். அரசு ஏதோ தனக்கெதிராக இதைச் செய்வதாகக் கருதிக் கொண்டு அமளிக்குவித்திட்டது பல இடங்களில்! அமளியையே ஏற்படுத்தியது மதுரையில்! கழகத்தினர் மீது கொலை முயற்சி வழக்கும் தொடர்ந்தது! ஆளுங்கட்சியான அ.தி.மு.க., நாம் நெசவாளர்களுக்காக தொடங்கிய கஞ்சி வழங்கும் நிகழ்ச்சியை அதற்குரிய எரிச்சலின் காரணமாக கேலி செய்வதும், தாக்கிப் பேசுவதும், விரசமாக விமர்சிப்பதும் என்னை ஆச்சரியப்படுத்தவில்லை. ஆனால் எதிர்க்கட்சிகளின் வரிசையில் ஒன்றாக உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், அ.தி.மு.க. வினர் பிரியாணி வழங்குகின்ற நிகழ்ச்சிகளையும் தி.மு.க. சார்பில் கஞ்சி வழங்குகின்ற நிகழ்ச்சிகளையும் இரண்டையும் ஒன்று என்று போல் விமர்சித்து ஏட்டிக்குப் போட்டி என்று சொல்வது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

ஏட்டிக்குப் போட்டி என்றால் என் கேள்விக்கு மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விளக்கம் அளிக்க வேண்டும். கஞ்சி வழங்குகிற நிகழ்ச்சியை முதலில் தி.மு.கழகம் ஆரம்பித்தது. தி.மு.கழகம் வழங்குகின்ற அதே இடத்தில் அ.தி.மு.க.வினர் பிரியாணி வழங்குவதாக அறிவித்து கஞ்சி வழங்குகின்ற கழகத்தினர் மீது போலீஸ் துணையோடு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது ஏட்டிக்குப் போட்டியா? அல்லது கஞ்சி வழங்குகிறோம் என்று கைத்தறியாளர்களுடைய கண்ணீரைத் துடைக்க முதன்முதலாக முன்வந்தது ஏட்டிக்குப் போட்டியா? கழகச் சார்பில் கஞ்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட பிறகுதான் நாங்கள் ஐந்து நாட்களுக்கு முன்பே கைத்தறியாளர்களுக்காக அமைச்சரவையில் திட்டங்களை வகுத்துவிட்டோம் என்று ஜெயலலிதா கூறியதாகும். கஞ்சி வழங்குவதாக கழகம் அறிவித்த பிறகாவது கைத்தறியாளர்களின் துயரத்தை முழுமையாகத் துடைக்கா விட்டாலும் மிகக் குறைந்த அளவிற்காவது துடைத்திட இந்த அரசாங்கம் முன் வந்தது, கழகத்தினுடைய அறிவிப்பினால்தான் என்பதை சாதாரண அறிவு உள்ளவர்களும் புரிந்து கொள்ள முடியும்.

இதை நான் தி.மு. கழகத்திற்கு ஒரு கித்தாப்பாக சொல்லவில்லை. எந்தவொரு ஆட்சியிலும் ஒரு பகுதி மக்களின் கோரிக்கைகளை அவர்களுக்குத் தொடர்புடைய பிரச்சினைகளை ஒரு அரசாங்கம் தானாக முன் வந்து நிறைவேற்றாத நிலையில் எந்தவொரு எதிர்க்கட்சியாவது அதை நினைவுபடுத்தி, அரசின் கவனத்தை அந்தப் பகுதி மக்களின் பக்கம் திருப்புவது ஜனநாயகத்திலே ஒரு நடைமுறை என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கள் அனுபவபூர்வமாக உணர்ந்திருப்பார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இதனால் ஏதோ தி.மு. கழகத்திற்கு தனி வலிவோ, பெருமையோ வந்து விடும் என்று அவர்கள் கருதியதாலோ அல்லது அ.தி.மு.க. ஆட்சிக்கு இதனால் பின்னடைவு ஏற்பட்டு விடும் என்று அஞ்சியதாலோ அவர்களுடைய பத்திரிகையில் பிரியாணி முட்டை வழங்குவதையும், கஞ்சி வழங்குவதையும் இரண்டும் ஒன்றுதான் என்பதைப்போல எழுதுவதும், படங்கள் வெளியிடுவதும் அவர்களுடைய பத்து நாள் பிரச்சாரக் கூட்டங்களில் இதையே தலைப்பாக அமைத்துக் கொண்டு பேசுவதற்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருப்பதும் எந்த வகையான நியாயம் என்பதை மார்க்சிஸ்ட்

கம்யூனிஸ்ட் கட்சியிலே உள்ள தலைவர்கள் எண்ணிப் பார்க்க மறுத்தாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் நல்லக்கண்ணு போன்றவர்களாவது சிந்தித்துப் பார்ப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

"செக்கும் சிவலிங்கமும் உனக்கு ஒன்று தானா?" என்று மூடாத்மாக்களைப் பார்த்து கிராமப்புறத்திலே கேலி செய்வார்கள்.

ஆனால் அறிவு ஜீவிகள் எனத் தங்களைக் காட்டிக் கொள்பவர்கள்,

தி.மு.க. கஞ்சி வழங்கும் நிகழ்ச்சியும்,

அ.தி.மு.க.வின் பிரியாணி முட்டை வழங்கும் நிகழ்ச்சியும்

ஒன்றுதான் என்று கட்டுரை தீட்டுகிறார்கள், கார்ட்டூன் போடுகிறார்கள்.

இவர்களை நினைத்து சிரிப்பதா? அழுவதா? என்றே தெரியவில்லை!

அறிவுடையோர்தான் அவர்கள்;

ஆனால் அந்த அறிவையும் மிஞ்சிடும் அசூயை அவர்களுக்கு நம்மீது!

அதனால்தான் அண்ணா அடிக்கடி கூறுவது போல

பச்சைக்கொடிக்கும்

பச்சைப் பாம்புக்கும்

வேறுபாடு தெரியாத பாமரர் போல ஆகிவிடுகிறார்கள்!

கைத்தறியாளர்களிடம் கழகம் காட்டுகின்ற பரிவும், அவர்களுக்காக ஆற்றுகின்ற பணியும் ஏதோ இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. தி.மு.க. தொடங்கிய காலத்திலிருந்தே ஏறத்தாழ 50 ஆண்டு காலமாக, இன்னும் சொல்லப்போனால் அதற்கு முன்பாகவும் கழகத்தினர் கைத்தறி ஆடைகளையே அணிய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அதைச் செயல்படுத்தி வருகின்ற இயக்கம். எனவே தன்னால் இயன்ற அளவிற்கு இதைச் செய்கிறேன் என்று கூறி பத்து இலட்சம் ரூபாய்க்கான கைத்தறி ஆடைகளை வாங்கி அதனை ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்குகின்ற புரட்சிக் கலைஞர்

விஜயகாந்தின் அறிவிப்பை வரவேற்கிறேன். கடந்த ஆண்டு வரையில் தி.மு.கழக ஆட்சி தொடர்ந்து கடைப்பிடித்து வந்த ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கான கைத்தறித் துணிகளை இலவச வேட்டி சேலைகளாக ஏழை மக்களுக்கு ஆண்டுதோறும் வழங்கிய காரணத்தால் கைத்தறியாளர்கள் நிலை தாழாமல் இருந்தது என்பதையும், அந்த இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை ஜெயலலிதாவின் அரசு கைவிட்ட காரணத்தால்தான் பசி, பட்டினி என்ற பரிதாபத்திற்கு நெசவாளப் பெருமக்கள் ஆளாகியுள்ளார்கள் என்பதையும் எல்லோரும் புரிந்து கொண்டே இருக்கிறார்கள்.

எனவே தி.மு.க. ஆட்சியில் ஏழை எளியோர்க்கு தரமான இலவச வேட்டி சேலை வழங்கப்பட்டதையும், அதனால் கைத்தறியாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்ததையும், அதை வேண்டாமென்று அ.தி.மு.க. ஆட்சியினர் நிறுத்தியதால்தான் கைத்தறியாளர்க்கு இவ்வளவு துன்ப துயரம் ஏற்பட்டுள்ளது என்பதையும் அடையாள பூர்வமாக உணர்த்துவதற்கும், இனி யாவது செல்வி ஜெயலலிதா தனது முரட்டுப் பிடிவாதத்தை விட்டு விட்டு இலவச வேட்டி சேலை திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கும் நாம் கஞ்சி வழங்கிய நிகழ்ச்சியுடன் தம்பி விஜயகாந்த் கைத்தறி துணிகளை பத்து லட்சம் ரூபாய்க்கு வாங்கி, ஏழை எளியோர்க்கு இலவசமாக வழங்கும் நிகழ்ச்சியும் இணைந்து பயன்படுமென்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

25-8-2002

2817. அண்ணா அத்வானி சந்திப்பும், ஜீவா குறுக்கீடும்!

உடன்பிறப்பே,

கேள்வி :- அண்ணாவும் அத்வானியும் சந்தித்துப் பேசியது போல ஒரு கற்பனைக் கட்டுரையை குறிப்பாகத் தி.மு.க.வை கேலி புரியும் வகையில் மார்க்சிஸ்டு ஏடு தீக்கதிர் வெளியிட்டுள்ளதே?

பதில்:- பொதுவாக உயிரோடிருக்கும் தலைவர்கள் இருவர் சந்தித்துப் பேசுவது போலவோ, அல்லது மறைந்த தலைவர்கள் இருவர் சந்தித்துப் பேசுவது போலவோதான் கற்பனை உரையாடல் கட்டுரைகள் எழுதுவார்கள். ஆனால் இந்தக் கற்பனைக் கட்டுரையில் உயிரோடிருக்கும் அத்வானி அவர்களும், மறைந்துவிட்ட அண்ணா அவர்களும் சந்தித்து கற்பனை உரையாடல் நடத்தியது போல எழுதப்பட்டுள்ளது. அதுகூடப் பரவாயில்லை! ஆனால் அந்தக் கற்பனைக் கட்டுரையில், அண்ணா சென்னையில் வந்து இறங்கி, தம்பிகள் யாரையும் பார்க்க விரும்பாமல் யாரைப் பார்த்தாலும் விவகாரமாகி விடுமென்று நினைத்து, நேரே டெல்லிக்குச் சென்று அங்கே ஆட்சியிலும் கட்சியிலும் முக்கிய நபராக உயர்ந்திருக்கும் எல்.கே. அத்வானியைச் சந்திக்கிறாராம்.

இந்தக் கட்டுரையாளர் வளமான கற்பனையாளர் என்றால்; அண்ணா டெல்லிக்குச் சென்றவர் மாநிலங்களவையில் அவரது பழைய நண்பர் வாஜ்பய் அவர்களை சந்தித்தார் என்றுதானே எழுதியிருக்க வேண்டும்.

ஏனென்றால் அண்மையில்தான் வாஜ்பய் அவர்களின் 31 கவிதைகள் திட்டக்குழு உறுப்பினர் திரு. வெங்கடசுப்பிரமணியம் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டு, அந்தப் புத்தகம் கவிப்பேரரசு தம்பி வைரமுத்து முன்னிலையில் வெளியிடப்பட்டது.

அந்த நூலில் வாஜ்பய் அவர்கள் எழுதியுள்ள முன்னுரையில் தனக்கும் அண்ணாவுக்கும் இருந்த ஆழ்ந்த நட்பைக் குறிப்பிட்டு, இந்தியாவில் உள்ள மாநில மொழிகள் அனைத்தும் மத்தியில் சம வாய்ப்பு பெற்றவைகளாக இருக்க வேண்டுமென்பது அண்ணாவின் கருத்து என்பதையும் கூறி, அக் கருத்து தனக்கும் உடன்பாடு என்றும் சுட்டிக் காட்டி அண்ணாவின் நினைவாக அந்தக் கவிதை நூலை காணிக்கையாக்குவதாகவும் சொல்லியிருக்கிறார்.

எப்போதுமே நன்றியுரைப்பதில் நனி நாகரிகம் கடைப்பிடிக்கும் அண்ணா, தனக்கு வாஜ்பய் புத்தகத்தைக் காணிக்கையாக்கியதற்காக டெல்லியில் நேராக வாஜ்பய் வீட்டுக்குத்தான் போனதாக எழுதிவிட்டு, அதன் தொடர்ச்சியாக தீக்கதிர் கட்டுரையாளர் தி.மு.க. மீது கொட்டிட எண்ணிய குப்பைகளைக் கொட்டியிருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக அவர் அண்ணாவை அத்வானி வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டார்.

அத்வானியிடம் அண்ணா சொன்னதாக இந்தக் கற்பனையாளர் எழுதுகிறார், என்ன தெரியுமா? அது; இதோ!

அண்ணா:- கொள்கை எங்களுக்கு வேட்டி - பதவி எங்களுக்கு துண்டுன்னு மக்களுக்குப் புரியிற மாதிரி சொன்னேன். இப்ப தம்பிமாருங்க துண்டை கெட்டியா புடிச்சுகிட்டாங்க. வேட்டியைப் பத்தி அப்பப்ப பேசுறாங்க! வேட்டியை இடுப்பிலே கட்டுறதுல்ல முக்கியம்? இதை அவுங்களுக்கு யார் எடுத்துச் சொல்றது?

அத்வானி:- நீங்க எல்லாத் தம்பிகளையும் ஒண்ணாத்தான் சொல்றீங்க. நீங்க ஆரம்பிச்ச கட்சிக்குக் கருணாநிதி தலைவராக இருக்கார். ஜெயலலிதா கட்சியிலே உங்க பேரே இருக்கு. ஆனால் இரண்டையும் திராவிடக் கட்சிகள்னு சொன்னா கருணாநிதிக்குக் கோபம் வருதே ஏன்?

உடன்பிறப்பே,

அண்ணாவும் அத்வானியும் பேசிக் கொண்டிருக்கும்போது என் புதிய கற்பனைப்படி தீக்கதிர் பாணியிலேயே அந்த அறைக்குள்

அண்ணன் ஜீவானந்தம் நுழைந்து அவரும் இந்த உரையாடலில் கலந்து கொள்வதாகவும் - அவருடன் தமிழ் மாநில மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் வரதராசன் அவர்களும் வந்திருப்பதாகவும் வைத்துக் கொள்வோம்.

இரண்டையும் திராவிடக் கட்சின்னு சொன்னா கருணாநிதிக்கு கோபம் வருதே ஏன்?

என்ற கேள்வியை அத்வானி, அண்ணாவிடம் கேட்கும்போது ஜீவானந்தம் குறுக்கிடுகிறார்.

ஜீவானந்தம்:- ஏன் கோபம் வராது? ஆட்சிக்கு வரணும்னு ஆலயங்கள் தோறும் கருணாநிதி யாகம் வளர்த்தவரா? அல்லது ஆட்சிக்கு வந்த பிறகு அந்த ஆட்சி நிலைக்கணும்னு குருவாயூர் கோயிலுக்கு யானை காணிக்கை அளித்தவரா? அதனாலதான் இரண்டு கட்சியையும் எங்க ஆட்கள் ஒரே மாதிரி கருதிப் பேசும்போது; கருணாநிதிக்கு மட்டுமல்ல - எனக்கே கோபம் வருதே! 1975-76லே எமர்ஜன்சியை சி.பி.எம். கட்சி எதிர்த்துப் போராடியது. சி.பி.ஐ. கட்சி எமர்ஜன்சியை ஆதரித்து நின்றது. அந்த இரு நிலையையும் தனித்தனியே பிரிச்சுப் பார்க்காமல்- இரண்டும் ஒரே கம்யூனிஸ்டு கட்சிதான்னு சொல்லியிருந்தா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கோபம் வராதா?

அதுமட்டுமல்ல! அண்ணா அவர்கள் கொள்கையை வேட்டின்னு சொன்னாரு, பதவியைத் துண்டுன்னு சொன்னாருன்னு இங்கு பேசப்பட்டதே அதை கருணாநிதி அப்படியே பின்பற்றிய காரணத்தினால்தான் எமர்ஜன்சியை எதிர்த்து அதனால ஆட்சியை இழந்தாரு! இலங்கைத் தமிழர்களுக்காக கருணாநிதியும் பேராசிரியர் அன்பழகனும் எம்.எல்.ஏ. பதவியைக்கூடத் துறந்தாங்களே! அது கொள்கைக்காக இல்லையா? இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு நகலை கொளுத்தியதற்காக அன்பழகனும், அவர்

உள்ளிட்ட பத்து தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் பதவி பறிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்களே! அப்போது வேட்டியையா இழந்தார்கள்? துண்டைத்தான் தூக்கி எறிந்தார்கள்!

என்ன வெட்கக்கேடு! எங்க கட்சிக்காரன் கம்யூனிஸ்டுன்னா அவனுக்கு லெனின் ஒருத்தர்தான் புரட்சித்தலைவர்! இப்ப கம்யூனிஸ்ட் தம்பிகள் என்னடான்னா, எலக்ஷனுக்காக எம்.ஜி.ஆரை புரட்சித்தலைவர்னு சொன்னதும், ஜெயலலிதாவை புரட்சித் தலைவின்னு போற்றியதும் என் காதிலே நாராசம் காய்ச்சி ஊத்துற மாதிரியில்ல இருந்தது - இருக்குது! புரட்சித்தலைவியின் ஆசி பெற்ற கே.டி.கே. தங்க மணிக்கு வாக்களியுங்கள் என்ற தேர்தல் விளம்பரத்தைப் பார்த்துட்டு என் இருதயமே வெடிச்சுடும் போல இருந்தது - இப்பவும் தமிழ் நாட்டிலே இவ்வளவு அலங்கோலம், அராஜகம் நடக்குது, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி சார்பாக காட்டப்படுற எதிர்ப்பிலே கால்வாசிகூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு காட்டுறது இல்லே!

அண்ணா :- ஜீவா! மார்க்சிஸ்டுகள், இந்தியக் கம்யூனிஸ்டுகள் - இரண்டு பேருமே தமிழ்நாட்டுத் தேர்தலிலே நீங்க ஒருத்தர் இருக்கிற இடத்திலே ஒருத்தர் இருக்கமாட்டீங்க! 1967லே கூட அப்படித்தான் - சி.பி.எம். என்னோட இருந்தது, சி.பி.ஐ. இல்லே! 1996லே கருணாநிதியோடு சி.பி.ஐ. இருந்தது, சி.பி.எம். இல்லை! முதல்ல இரண்டும் ஒரே கம்யூனிஸ்டு கட்சியில்லைங்கிற மாதிரிதான், தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஒரே திராவிடக் கட்சி அல்ல என்பதை புரியாதவுங்களுக்குப் புரியவைப்போம்!

ஜீவா :- சரியண்ணா, சந்தோஷம்! வாங்க வரதராசன் - வாங்க, போகலாம்!

அத்வானி :- நேரா எங்கே?

சென்னை தோட்டத்துக்கா?

வரதராசன்:- தோட்டமா துரவான்னு டெல்லியிலே எங்க மேலிடம்தான் நிர்ணயிக்கனும்!

உடன்பிறப்பே;

மார்க்சிஸ்ட் ஏட்டில் வெளி வந்த அண்ணாவும் அத்வானியும் என்ற கட்டுரையின் அடிப்படையில் உருவான கேள்வி பதில்கள் வேறு வடிவம் எடுத்து விட்டன! எனவே இதனைக் கடிதமாகக்கூட ஆக்கிக் கொள்ளலாம்.

அன்புள்ள,

மு.க.

26-8-2002

2818. பால பாடமும் மூல பாடமும் பகுத்தறிவுப் பாடமே!

உடன்பிறப்பே,

சின்னஞ்சிறு வயதிலேயே மாணவப் பருவத்தில் தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு போதனையில் ஈடுபாடு கொண்டு, சுயமரியாதைக்கும் பகுத்தறிவுக்கும் முரண்பாடான எந்தக் கருத்தையும் மறுத்து விமர்சிக்கும் கொள்கையும், துணிவும் கொண்டவனாக இருந்தேன் என்பதையும் இப்போதும் அவ்வாறே அழுத்தம் திருத்தமாக இருக்கிறேன் என்பதையும் இந்த எளியோனின் வாழ்க்கை வரலாற்றை உணர்ந்த உனக்கு நினைவுபடுத்திடத் தேவையில்லை.

தமிழ்த்திரு கிருபானந்தவாரியார் அவர்களிடம் அவரது தமிழருவியின் இனிமை காரணமாக ஒரு தனியான மதிப்பும் மரியாதையும் உண்டு. அவருடைய சிலையையும் அவர் பெயரால் அமைந்த கல்லூரியையும் சேலம் மாவட்டத்தில் நான் திறந்து வைத்தேன் அவரது முன்னிலையிலேயே.

அவர் மறைந்த பிறகு அவர் நினைவாக உருவாக்கப்பட்ட எழில் மண்டபத்தையும் காட்பாடி தொகுதியில் காங்கேயநல்லூர் என்ற ஊரில் நான் தான் திறந்து வைத்து, அவர் பக்திப்பழம் என்பதற்காக அல்ல, தமிழ்ப் பழம் என்பதற்காகப் போற்றிப் புகழ்வதாகப் புகன்றவனும் நானதான!

அவர்தான் என் மாணவப் பருவத்தில் திருவாரூர் தியாகராஜர் ஆலயத்தில் அப்பர் திருநாளில் உரையாற்ற வந்திருந்தார். நானும் என்னுடன் மாணவ நண்பர்களும் நண்பன் தென்னனும் விழாவுக்குச் சென்றிருந்தோம்.

ஜீவகாருண்யம் - சைவம் - இவற்றைப் பற்றி வாரியார் அவர்கள் தமிழ் மழை பொழிந்தார். அப்போது அவர் சொன்னார். ஆண்டவன், யாருடைய உணவுக்காகவும் இன்னொரு உயிரைப் படைக்கவில்லை

நான் அந்த விழா மண்டபத்தில் எழுந்து அந்த இளம் வயதிலேயே குறுக்கிட்டுக் கேட்டேன்.

வாரியார் அவர்களே! சிங்கம் புலிகளுக்காக ஆண்டவன் எந்த உணவைப் படைத்தார்? அவைகள் இயற்கையாகவே ஆடு, மாடு, மான்களை வேட்டையாடியல்லவா உயிர் வாழ்கின்றன?

இதைக் கேட்டவுடன் இதெல்லாம் விதண்டா வாதம் என்று கோபத்துடன் கூறிவிட்டு, அடுத்துப் பேசிய வாரியார் அவர்கள், இந்தச் சிறுவர்கள் இன்னொன்றையும் கேட்பார்கள்! மரஞ்செடி களுக்கும் உயிர் உண்டே, எனவே காய்கறிகளை உண்பது பாவமல்லவா? என்று கூடக் கேட்பார்கள். அதற்கும் விளக்கம் கூறிவிடுகிறேன். சைவர்கள் முருங்கைக் காய் சாப்பிடுவதால், கத்தரிக்காய் சாப்பிடுவதால் அந்த மரமோ செடியோ சாவதில்லை; அதனால் பாபமில்லை! என்றார்.

நான் உடனே குறுக்கிட்டுக் கேட்டேன், கீரைத் தண்டை அடியோடு பிடுங்கி சாம்பார் வைக்கிறார்களே, அப்போது எது சாகிறது? என்று!

அதைத் தொடர்ந்து கூட்டத்தில் சலசலப்பு - போலீசார் புகுந்து அமைதியை நிலைநாட்டினர்.

இதை நான் இப்போது குறிப்பிடுவதற்குக் காரணம், மிகுந்த மரியாதையும் அன்பும் வாரியார்மீது கொண்டிருந்த போதிலும், அவரது தமிழ் ஆற்றலுக்குத் தலை வணங்க வேண்டும் என்ற பெருமைக்குரியவர் அவர் என்ற போதிலும், பகுத்தறிவுக்கு மாறாக ஒரு கருத்து வெளியிடப்பட்ட நிலையில் அதை மறுத்துரைக்கும் உறுதி கொண்டவனாக இளமை முதல் இருந்து வருகிறேன் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான்!

அரசியலில் ஈடுபாடும் ஆட்சிப் பொறுப்பும் ஏற்பட்ட பிறகு அந்தக் கொள்கைத் தீவிரம் கழகத் தலைமைக்கு நீர்த்துப் போய் விட்டதாக என்றைக்கும் நம்மிடம் எரிச்சல் கொண்டவர்கள் விமர்சிக்கத் தவறுவதில்லை.

இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மட்டத்திலேயுள்ள கழக உடன்பிறப்புகளில் ஒரு சிலர், ஏதோ சில தவிர்க்க முடியாத காரணங்களால், பகுத்தறிவுப் பாட்டையிலிருந்து

மாறுபட்டிருக்கலாம். ஆனால் கழகத்தின் தலைமையில் அந்த நிலை அணுவளவும் இல்லை!

பெரியார் பாதையில் அண்ணாவின் அணுகுமுறையைப் பின்பற்றித்தான் நடை போடுகிறோம் என்பதைத் தொடர்ந்து உறுதிப்படுத்துகிற வகையில்தான், 1996ஆம் ஆண்டு நான்காவது முறையாக நான் ஆட்சிக்கு வந்த நேரத்தில் அந்தியூர் செல்வராஜ் எனும் நமது அமைச்சர் ஒருவர், எனக்காக பிரார்த்தனை செய்து கொண்டு தீமிதித்தார் என்ற செய்தி வந்த போது உடனடியாக அவரைக் கடுமையாகக் கண்டித்து அறிக்கை விடுத்தேன். அவரும் தனது செயலுக்காக என்னிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டார். ஆட்சியில் இருக்கிறோம் என்பதற்காக அதைக் கண்டும் காணாமல் விட்டு விடவில்லை. கடுமையாகத்தான் கண்டித்தோம்.

இன்றைய சூழலில், இந்த ஆட்சியாளர்களின் நிர்வாகத்தில் பகுத்தறிவு - சுயமரியாதைக் கொள்கை - திராவிட இன உணர்வு ஆகியவற்றுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, யாகம் - ஹோமம் - என்றும், யானை காணிக்கை - பூனை காணிக்கை என்றும், குடந்தை மகாமகக் குளியல் என்றும் குருட்டு நம்பிக்கைகளுக்கும் - வாஸ்து சாத்திரங்களுக்கும் வரவேற்பு கொடுத்து மகிழும் நிலைமை மிகவும் முற்றிப் போய் விட்டது.

இவற்றின் தொடர்ச்சியாகவோ அல்லது இந்த அரசில் உள்ளோரின் தூண்டுதலாலோ நடைபெற்றிருப்பதுதான் மதுரை மாவட்டம் பேரையூரில் அம்மன் கோயில் பிரார்த்தனை என்ற பெயரால் சிறுவர் சிறுமிகள் நூறு பேரை குழிக்குள் புதைத்து மண்ணால் மூடி வைத்து சில நிமிடங்களுக்குப் பிறகு வெளியே எடுத்து வெறியாட்டம் போட்ட நிகழ்ச்சியாகும்.

இதனை தேசிய மனித உரிமைக் கழகம் கண்டித்திருப்பதுடன், தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடம் விளக்கமும் கேட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் என்பதற்காக, ஒரு அமைச்சரை பதவி விலக்க வேண்டுமென்று சில கட்சித் தலைவர்களால் வலியுறுத்தவும் பட்டுள்ளது. ஆங்கில ஏடு ஒன்று அவ்வாறு தன் தலையங்கத்திலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த மூட நம்பிக்கைத் திருவிழா பல ஆண்டுகளாக நடைபெறுவதாகச் சொல்லப்பட்டாலும், இப்போதுதான் இந்தப் பயங்கரமானதும் ஆபத்து நிறைந்ததுமான இந்நிகழ்ச்சி பற்றி வெளியுலகம் அறிய நேரிட்டுள்ளது.

முன்கூட்டியே இது தடுக்கப்படாததற்கு என்ன காரணம் என்பதையும், இனிமேல் இதுபோன்ற ஆபத்து நிறைந்ததும் அநாகரீகமானதுமான நிகழ்வுகள், அதுவும் ஆண்டவன் பெயரால் நடைபெறாமல் தடுப்பதற்கும் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைப் பகுத்தறிவாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்!

அம்மன் கோயில்களில் ஆடு வெட்டுவது, மாடு வெட்டுவது போன்ற கொடுமையான பிரார்த்தனைச் செயல்களை ஜைன (சமண) சமயப் பிரச்சாரகராக இருந்த எனது நண்பர் மறைந்த திரு ஸ்ரீபால் என்பவர் கடுமையாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்து, பல ஆண்டுகளுக்கு முன்பே அந்தப் பலிக் கொடுமை சட்டபூர்வமாக தடுக்கப்பட்டது. ஆனால் மீண்டும் அந்தப் பலிக் கொடுமைகளும் - அவற்றைப் பரப்பிடும் பகல் வேடச் சாமியார்களும் - தாராளமாகத் தலைகாட்டத் தொடங்கியுள்ள நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

அரசு எவ்வழியோ குடிகள் அவ்வழி என்பது பழமொழி!

பகுத்தறிவு வழி, இந்தப் பழமொழிப்படி பழைய தவறான வழிகளை அனுமதிக்கத் தயாராக இல்லை!

யாருடைய நம்பிக்கையிலும் நாம் குறுக்கிட விரும்பவில்லை.

ஆனால் அந்த நம்பிக்கை மற்றவர்மீது திணிக்கப்படுமானால் அதனை மறுக்கவும் - யாரும் ஏமாறாமல் தடுத்து இளைய சமுதாயத்தில் எழுச்சியை உருவாக்கவும் நமக்கு உரிமை உண்டு!

பேய் பிடித்ததாகக் கற்பித்து ஒரு இளம் யுவதியை அம்மன் கோயில் ஒன்றில் சாட்டையால் சுழற்றி சுழற்றிப் பூசாரியார் அடித்து பேய் ஓட்டும் குரூரச் செயலை தொலைக்காட்சியில் சென்ற வாரம் கண்ட போது என் கண்கள் குளமாயின.

சின்னச் சின்ன சில்லறைச் சாமியார்கள் வரிசையில் புதிதாக சேவல் சாமியார் ஒருவர் புறப்பட்டுச் செய்யும் சேட்டைகளையும் தொலைக்காட்சியில் கண்டு துடித்துப் போனேன்!

இதையெல்லாம் விளக்கி, மக்களை இந்தப் புதிய யுகத்திற்கேற்ப தயாரிக்க வேண்டாமா?

அதற்கேற்ற வகையில் நமது கழக உடன்பிறப்புகள், பிரச்சாரத்தை முடுக்கி விட வேண்டும் என்பதே என் வேண்டுகோள்!

நமது பால பாடமும் மூல பாடமும்
பகுத்தறிவுப் பாடமே!

அன்புள்ள,

மு.க.

28-8-2002

2819. திசை திருப்பும் காரியத்தில் திறமை காட்டுவதா?

உடன்பிறப்பே,

நல்லவை நடந்தாலும் அல்லவை நடந்தாலும் எல்லாம் அவன் செயல் என்பர் பக்தர்கள்!

ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதாவோ அல்லவை நடக்கும் போதெல்லாம் அவற்றுக்கு நான்தான் காரணம் - எல்லாம் கருணாநிதி செயல்தான் என்கிறார்!

அவராட்சியில் நல்லவை ஒன்றாவது நடந்திருந்தால்தானே அவர் அதையும் சேர்த்துக் கூறி யிருக்க முடியும்? என்ற வாதத்திற்கு என்னால் பதில் கூற இயலாது!

சந்தனக்கடத்தல் வீரப்பன் கர்நாடகத்தின் முன்னாள் அமைச்சர் நாகப்பாவைக் கடத்திக் கொண்டு போனதற்கும், காவேரி ஆணையக் கூட்டத்தில் அவர் வெளிநடப்பு செய்ய வேண்டி வந்ததற்கும் நான்தான் காரணம் என்பதுபோல டெல்லிப் பத்திரிகையாளர் கூட்டத்தில் குற்றம் சாட்டியிருக்கிறார்.

என்ன திடீர்க்கோபமோ தெரியவில்லை திருமதி சோனியா காந்தி மீதும் ஒரு பாய்ச்சல்!

அதற்கு அவர்களைச் சேர்ந்தோர் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முதல்வர் பொறுப்பில் நான் இருந்தபோது வீரப்பனைப் பிடிக்கும் பொறுப்பை, தானே ஏற்பதாக திரு. தேவாரம் அவர்கள் என்னிடம் கேட்டதாகவும், நான் ஒப்புதல் அளிக்காததால் வீரப்பன் பிடிபட வில்லை என்றும் என் மீது பழி சுமத்திய ஜெயலலிதா, அதே தேவாரம் அவர்களை வீரப்பனைப் பிடிக்கும் காரியத்திற்காகவே மறு நியமனம் செய்தாரே! 15 மாத காலமாகியும் அது பலிக்காமல் போனது ஏன் என்று நான் கேட்க மாட்டேன். காரணம் அதில் உள்ள சிரமம் நான் அறிவேன்.

ஜெயலலிதாவும் அவரது ஐந்தாண்டு கால ஆட்சியில் (1991-1996) அனுபவ ரீதியாக அந்தச் சிரமங்களை அறிவார். அவரே அதை வெளிப்படையாகச் சட்டப்பேரவையிலும் செய்தியாளர்களிடமும் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா டெல்லியிலே செய்தியாளர்களிடம் கூறுகிறபோது அவர் ஆட்சியிலே இருந்த காலத்தில், வீரப்பன் மீது தீவிர நடவடிக்கை மேற்கொண்டதாகவும், கழக ஆட்சியின்போது வீரப்பனுக்கு எதிரான தேடுதல் வேட்டையை நிறுத்துமாறு உத்தர விட்டதாகவும் கூறியிருக்கிறார். மேலும் இப்போது தமிழகத்திலிருந்து தூதர்களை அனுப்பமாட்டேன் என்றும், எந்தவித நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட மாட்டேன் என்றும் ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆனால் இதே ஜெயலலிதா அவரது ஆட்சிக் காலத்தில் என்ன செய்தார் தெரியுமா?

3-12-94 அன்று ஜெயலலிதா ஆட்சியிலே வீரப்பன் காவல்துறை துணை கண்காணிப்பாளர் சிதம்பர நாதன் உட்பட மூன்று பேரைக் கடத்திச் சென்ற போது அவர்களை விடுவிக்க தமிழக அரசுக்கு விதித்த நிபந்தனை என்ன தெரியுமா?

அதிரடிப் படை போலீசை வாபஸ் பெற வேண்டும், வீரப்பனைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும், வீரப்பனுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும், வீரப்பன் சரணடைந்தால் வழக்கு போடவே கூடாது.

இதைப்பற்றி 4-12-94 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் விடுத்த அறிக்கையில், "வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கிறவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். எனவே வீரப்பனைத் தேடும் பணி அவருடைய நிபந்தனைகளின்படி நிறுத்தப்பட்டு விட்டது" என்றார். 6-12-94 அன்று மீண்டும் அவரே, "வீரப்பன் கேட்டுக் கொண்டபடி வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ தன்னைச் சந்திக்கலாம். அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்று உறுதி அளிக்கப்படுகிறது. தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்ல தடை எதுவும் இருக்காது" என்று குறிப்பிட்டிருந்தார். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செய்தியாளர், "வீரப்பனின் தூதுவர் துப்பாக்கியோடு வருவது சரியா?" என்று கேட்டபோது, அவர் சொந்தப் பாதுகாப்புக்கு துப்பாக்கியோடு வருகிறார்

என்றார். தலைமைச் செயலாளராக இருந்த அரிபாஸ்கர் விடுத்த அறிக்கையில், "அவர்களது கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசின் மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான். விசேஷ அதிரடிப்படையின் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் கொன்று விடக்கூடும். ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். போலீஸ் துணை கண்காணிப்பாளர் மற்றும் இரண்டு நபர்களை நாம் மீட்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

அப்போதும் ஜெயலலிதா ஆட்சிதான்! இப்போதும் அவருடைய ஆட்சிதான். தற்போது மட்டும், நிபந்தனைகளை ஏற்க மாட்டேன், தூதுவரை அனுப்ப மாட்டேன் என்றெல்லாம் இந்த ஆட்சியிலே அறை கூவல் விடப்பட்டிருப்பதற்கு என்ன காரணமோ தெரியவில்லை!

ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த ஐந்தாண்டு காலத்தில் தமிழக எல்லையிலே மாத்திரம் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 63 ஆகும். 1996இல் தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு ஐந்தாண்டு காலத்தில் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மூன்றுதான். இதனை நான் சட்டப்பேரவையிலேயே சுட்டிக் காட்டினேன். அந்தப் புள்ளி விவரத்தை ஜெயலலிதா எப்போதாவது மறுத்தாரா என்றால், இல்லை!

வீரப்பன் தரப்பினரை தி.மு.க. ஆட்சியிலே இருந்த போது கண்டு கொள்ளவில்லை என்று ஜெயலலிதா குற்றஞ்சாட்டியிருக்கிறார். அதாவது அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார். 1991 ஆகஸ்ட் மாதம் முதல் 1996 மே திங்கள் வரை ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்ட வீரப்பன் தரப்பைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 121 ஆகும். 1996 ஜூன் திங்கள் முதல் கழக ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 135 ஆகும். எனவே தி.மு.கழக ஆட்சியிலே வீரப்பன் குழுவினர் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தோம் என்பது தவறான குற்றச்சாட்டாகும் என்பதற்கு இந்தப் புள்ளிவிபரமே ஆதாரம்.

ஜெயலலிதா செய்தியாளர்களிடம் மேலும் கூறும்போது, நூறு நாட்களில் வீரப்பனைப் பிடிப்போம் என்று, அவர் பதவியேற்ற போது கூறியதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் எழுதியுள்ளதாகவும், தான் எப்போதும் அப்படிச் சொல்லவில்லை என்றும், அதிரடிப்படைத் தலைவர் தேவாரம் வேண்டுமானால் அப்படிக் கூறியிருக்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறார். வாதத்திற்காக ஜெயலலிதா அப்படி கூறவில்லை என்று வைத்துக் கொண்டால்கூட, தேவாரம் தமிழ்நாடு அரசின் கீழே பணியாற்றும் அதிகாரிதானே? அவர் ஒன்று கூறுகிறாரென்றால், அதற்கும் முதல் அமைச்சருக்கும் சம்பந்தம் இல்லையா? அவர் கூறுகின்ற கருத்து ஜெயலலிதாவிற்கு உடன்பாடான கருத்தில்லையா? இல்லையென்றால் அந்த அறைகூவல் அப்போதே திருத்தப்பட்டு அறிவிக்கப்படவில்லையே, ஏன்? என்ற கேள்வி எழத்தானே செய்யும்!

ஒரு பத்திரிகையில் முதல்வர் ஜெயலலிதாவின் பேட்டி வெளிவந்ததில் அதிரடிப்படைக்காகச் செய்யப்பட்ட செலவுகள் பற்றி அவர் கூறியது வெளியாகியுள்ளது. அதிலேகூட ஜெயலலிதா 'இந்து பத்திரிகையில் அதிரடிப்படைக்கானச் செலவு குறித்து தவறான தகவலை வெளியிட்டிருப்பதாகவும், அதிரடிப்படை துவக்கப்பட்டது முதல் இந்த ஆண்டு மார்ச் 31ந்தேதி வரை 17.61 கோடி ரூபாய்தான் செலவாகியிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆனால் அடுத்து ஜெயலலிதா கூறும்போது, 2001-2002ஆம் ஆண்டுக்கு மட்டும் 9.42 கோடி ரூபாய் செலவிடப்பட்டது என்று கூறியதாகச் செய்தி வந்துள்ளது. எனவே அதிரடிப்படை துவக்கப்பட்டது முதல் சுமார் ஒன்பது ஆண்டுகளில் செலவான 17.61 கோடி ரூபாயில் பாதிக்கு மேற்பட்ட தொகை கடந்த ஓராண்டில் மட்டும் ஜெயலலிதா ஆட்சியில் செலவிடப்பட்டுள்ளது எப்படி என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஜெயலலிதா 2001ஆம் ஆண்டு மே திங்களில் பொறுப்புக்கு வந்ததும் வராததுமாக 25-5-2001 அன்று அளித்த ஆளுநர் உரையில் என்ன கூறினார்? "கடந்த ஐந்தாண்டுகளில் வீரப்பனையும், அவனுடைய கூட்டாளிகளையும் பிடிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இவ்வரசு மத்திய அரசு மற்றும் கர்நாடக அரசின் ஒத்துழைப்புடன் பயங்கர குற்றவாளியான வீரப்பனைப் பிடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்" என்று பலத்த

கைதட்டலுடன் அறிவிக்க வில்லையா? அறிவிப்புக்குப் பிறகு ஏன் வீரப்பனை பிடிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பில் உள்ள ஜெயலலிதா, அதை மறைத்து விட்டு இதற்கு முன்னாலிருந்த அரசின் மீது குற்றஞ்சாட்டுவது அவரது வழக்கமான திசை திருப்பும் திறமையையே காட்டுகிறது!

எனவே, வீண் திசை திருப்பும் காரியத்தில் ஈடுபடாமல் இந்தப் பிரச்சினையை அரசியல் ஆக்காமல், முன்னாள் அமைச்சர் நாகப்பாவை உயிரோடு காப்பாற்றுவதிலும், வீரப்பனை பிடிப்பதிலும் வெற்றி பெற்றால் இரண்டு மாநில அரசுகளையும் பாராட்டி மகிழ்ச்சியடையலாம்.

அன்புள்ள,

மு.க.

30-8-2002

2820. கல்லைப் போடும் கமிட்டி அல்ல; கடலில் போடும் கமிட்டி!

உடன்பிறப்பே,

15 மாத கால அ.தி.மு.க. ஆட்சியில் எத்தனை புரட்சிகள்! எத்தனை மந்திரிகள் மாஜிகளாயினர்! எத்தனை அதிகாரிகள் உதைபந்துகளாயினர்!

அப்பப்பா! இவற்றையெல்லாம்விட சாதாரண சாமான்ய மக்களுக்கு, தொழிலாளர்க்கு, அரசு அலுவலர்க்கு, ஆசிரியர்க்கு, விவசாயிகளுக்கு, நெசவாளர்களுக்கு, வழக்கறிஞர்களுக்கு, வணிகர்களுக்கு என எல்லாப் பிரிவினர்க்கும் வழங்கப்பட்ட சலுகைகளை (?) எண்ணி மாளாது! எண்ணிடவும் இயலாது! எண்ணினால் இதயமும் தாங்காது!

* பேருந்துக் கட்டணம் பல மடங்கு உயர்வு.
* மின் கட்டணம், அதை விட உயர்வு.
* வரியில்லாமல் இருந்த சமையல் எண்ணெய்க்கு வரியோ வரி!
* ஒருமுனை வரியைப் பலமுனை வரியாக்கிய ஒப்பற்ற சாதனை!
* அரசு அலுவலர் - ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகள் சகட்டுமேனிக்கு அறவே ரத்து!
* முதல் பட்ஜெட்டில் போட்ட வரி போதாதென்று மினி பட்ஜெட்டில் பல கோடி ரூபாய்க்கு வரி - அடுத்து வந்த பட்ஜெட்டிலும் அமோக வரி, வரி, வரி!
* நெசவாளர்கள் நிம்மதியைக் கெடுத்திட, இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் ரத்து!
* ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டம் காலி!

* பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் நிறுத்தம்!
* நமக்கு நாமே திட்டத்துக்கு நாமம்!
* அண்ணா மறுமலர்ச்சி திட்டம் அரோகரா!

இப்படி நல்ல திட்டங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, நல்லோர் மனத்தைப் புண்படுத்தி விட்டு, நலிந்தோர் வாழ்வை மேலும் நலியச் செய்து விட்டு, நல்லாட்சி(?) நடத்தும் ஜெயலலிதா, இந்தத் துன்பத்தொடர்கதையின் பிற்சேர்க்கையாகத்தான், நீதிமன்றம் செல்வோர், விண்ணப்பம் அளிப்போர் - செலுத்தி வந்த நியாயமான கட்டணங்களைச் சீராக ஒழுங்குபடுத்தி அளவோடு உயர்த்தாமல் அநியாயமாகப் பல மடங்கு உயர்த்தி அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் பொதுமக்கள் அல்லது வழக்கறிஞர்கள் தங்கள் வழக்குகளைத் தாக்கல் செய்யும்போது அந்த மனுவுடன் நீதிமன்ற ஸ்டாம்புகளை விலைக்கு வாங்கி ஒட்ட வேண்டும். அப்போதுதான் அந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அப்படி ஒட்டப்படுகின்ற ஸ்டாம்புகள் எத்தனை ரூபாய் மதிப்பில் ஒட்டப்பட வேண்டுமென்று ஏற்கனவே விதி உள்ளது. ரிட் வழக்குகள், ஜாமீன் கோரும் வழக்குகள், மேல் முறையீட்டு வழக்குகள் என்று ஒவ்வொன்றுக்கும் தகுந்தாற்போல வழக்குகளுக்கேற்றவாறு இந்த ஸ்டாம்பு கட்டணம் விதிக்கப்பட்டு வந்தது. உதாரணமாக ஒரு ரிட் வழக்கு தாக்கல் செய்ய குறைந்தபட்சம் 110 ரூபாய் செலவிடப்பட்டு வந்தது. ஜாமீன் மனு என்றால் இரண்டு ரூபாய் மதிப்பிற்கு ஸ்டாம்ப் கட்டணம் கட்ட வேண்டும். மேல் முறையீட்டு வழக்கு என்றால் 100 ரூபாய் மதிப்பிற்கு ஸ்டாம்பு வாங்கி ஒட்ட வேண்டும். இந்தக் கட்டணங்கள் அரசினால் நிர்ணயிக்கப்பட்டு அவ்வாறே செலுத்தப்பட்டு வந்தது. கழக ஆட்சியில் இதனை ஓரளவு உயர்த்த பரிந்துரை வந்தபோது, கழக ஆட்சி அதனை ஏற்கவில்லை.

ஆனால் இந்த ஆட்சியினர் சும்மா இருப்பார்களா? அந்தக் கட்டணத்தை 5 சதவிகிதமோ பத்து சதவிகிதமோ என்ற அளவிற்குக்கூட உயர்த்த வில்லை, ஏன் 100 சதவிகித அளவிற்குக்கூட உயர்த்தவில்லை, 500 சதவிகித அளவிற்கும் அதற்கு மேலும் என்று கட்டணங்கள் உயர்த்தி அவசரச்

சட்டம் போட்டுவிட்டார்கள். நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்ய இதுவரை இருந்த 100 ரூபாய் கட்டணம், 125 ரூபாயாகவோ, 150 ரூபாயாகவோ உயர்த்தப்படவில்லை, 500 ரூபாயாக அதாவது ஐந்து மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இடைக்காலத் தடை கோரி ஒரு மனு கொடுக்க வேண்டுமென்றால் இதுவரை 2 ரூபாய்தான் கட்டணம். இது ஐந்து மடங்காக 10 ரூபாயாக உயர்த்தப்படவில்லை. 50 மடங்கு அதிகமாக 100 ரூபாய் இனி கட்ட வேண்டும். இதுவே உயர்நீதிமன்றமாக இருந்தால் 200 ரூபாய் கட்ட வேண்டும்.

ரிட் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய இதுவரை இருந்த கட்டணம் 100 ரூபாய். அதை பத்து மடங்கு உயர்த்தி 1000 ரூபாயாக மிகவும் பெரிய மனது பண்ணி ஜெயலலிதா உயர்த்தியுள்ளார்.

சிவில் சூட் என்று கூறப்படும் பாகப் பிரிவினை போன்ற வழக்குகளுக்கு கட்டணம் இதுவரை 300 ரூபாயாக இருந்து வந்தது. இந்தக் கட்டணத்தை தற்போது 2000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார் ஜெயலலிதா.

கம்பெனி சம்மந்தமான வழக்குகளுக்கான கட்டணம் இதுவரை 100 ரூபாயாக இருந்தது. அதனை ஜெயலலிதா 1000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்.

உயில் மீதான நடவடிக்கைகளுக்கு இதுவரை கட்டணம் வெறும் 25 ரூபாய்தான். அதனை 20 மடங்கு அதிகமாக 500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்.

பொது நல வழக்குக்கு இதுவரை 50 ரூபாயாக இருந்த கட்டணம் இனிமேல் 500 ரூபாயாக பத்து மடங்கு அதிகமாக்கப்பட்டுள்ளது. வாய்தா வாங்க, வழக்கினை தள்ளி வைக்கக் கோரிட மனு கொடுக்க இதுவரை 75 பைசாவிற்கு ஸ்டாம்பு வாங்கி ஒட்டினால் போதும். அதை 25 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஏழையெளிய மக்கள் தங்களுக்கு பட்டா கோரி, வேலை வாய்ப்பு கோரி, தங்க இடம் கோரி, ரேஷன் கார்டு கோரி மனு கொடுக்க இதுவரை இரண்டு ரூபாய் ஸ்டாம்பு ஒட்டினால் போதும் என்று இருந்தது. அந்த

இரண்டு ரூபாயை 50 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். ஏழைகளை ஜெயலலிதா எப்படி சீமான்கள் ஆக்கியிருக்கிறார் பார், உடன்பிறப்பே!

இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். நீதிமன்றத்திற்குத் தகுந்தவாறு, வழக்கின் மதிப்புத் தொகைக்கேற்றவாறு இந்த ஸ்டாம்பு கட்டணங்கள் அதிகமாக வேறு கட்ட வேண்டும்.

இந்தக் கட்டண உயர்வினால் மிகவும் பாதிக்கப் படக்கூடியவர்கள் பொதுமக்களும், தொடக்க நிலையிலே உள்ள இளநிலை வழக்கறிஞர்களும்தான். பொதுமக்களின் நலன் கருதித்தான் வழக்கறிஞர்கள் போராடினார்கள் அறவழியில்!

அவர்களை அழைத்துப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா இந்தக் கட்டண உயர்வைத் தள்ளி வைக்கவோ, குறைக்கவோ தெளிவான உறுதிமொழி எதுவும் கொடுக்கவில்லை. பேராசிரியர் கல்கி அவர்கள், ஒரு பிரச்சினையைத் தாமதப்படுத்த வேண்டுமென்றால் ஒரு கல்லைப் போடு அல்லது ஒரு கமிட்டியைப் போடு என்றாரே அதைப் போல, நீங்கள் தற்போது உயர்த்தப்பட்ட அதிகக் கட்டணத் தொகையைத் தொடர்ந்து கட்டி வாருங்கள், நான் இதுகுறித்து ஒரு குழுவைப் போட்டு அவர்களிடம் பரிந்துரைகளைப் பெற்று அதன்படி பின்னர் முடிவு செய்கிறேன் என்று கூறியிருப்பதாகத் தெரிகிறது. முதல்வரை சந்திப்பதற்காகவே போராட்டம் என்பது போலவும் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கல்லைப் போடு இல்லையேல் கமிட்டியைப் போடு என்ற மந்திரத்தின் மகிமையால், தந்திரத்தின் மாட்சியால் இப்போதைக்கு எந்தப் பிரச்சினைகளையும் ஜெயலலிதா அடக்கிவிட முடியும். ஆனால் அடங்கி அமைதியானது போலத் தோற்றமளிக்கும் அலைகடலும், எரிமலையும் எப்போது புயலை உருவாக்கும்?

எப்போது பொங்கிக் கிளம்பும்? என்பதை கணிக்காமல் இருந்துவிடக் கூடாது. அவற்றை அலட்சியப்படுத்தி விடவும் கூடாது.

“ஜனநாயகம் இவற்றுக்கெல்லாம் உரிய நேரத்தில் வழங்கும் தண்டனையிலிருந்து யாரும் தப்ப முடியாது!”

எனவே,

கண்ணகி சிலைக்கும் கமிட்டி;

கட்டண உயர்வுக்கும் கமிட்டி!

கல்லூரி ஆசிரியர், மாணவர் பிரச்சினைக்கும் கமிட்டி!

கல்கியார் சொன்னது போல கல்லைப் போடும் கமிட்டி அல்ல!
கடலில் போடும் கமிட்டி!

அன்புள்ள,

மு.க.

31-8-2002

2821. உச்சநீதிமன்ற தீர்ப்பை உறுதுணையாகக் கொண்டு!

உடன்பிறப்பே,

நீண்ட இடைவெளிக்குப் பிறகு உனக்கு எழுதுகிற முதல் கடிதமே, நமது இயக்கத்தின் சமத்துவ சமுதாயக் கொள்கை பற்றியதாக இருப்பதில் எனக்கோர் புத்துணர்வு ஏற்படத்தான் செய்கிறது.

உச்சநீதிமன்றத்தில் இப்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின்படி, முறையான பயிற்சி இருந்தால் பிராமணரல்லாதவர்களும் கோயில் அர்ச்சகர்களாகலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியின் விளைவாக என் பழைய நினைவுகள் சிலவற்றை உன் கவனத்திற்கும், நாட்டு மக்கள் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

என் வாழ்க்கை வரலாறு "நெஞ்சுக்கு நீதி" என்ற தலைப்பில் நான்கு பாகங்கள் எழுதப்பட்டுள்ளது அனைவரும் அறிந்ததே.

அவற்றில் இரண்டாம் பாகம் மூன்று பதிப்புகள் வெளிவந்துள்ளன, 1987, 1994, 1997 ஆகிய ஆண்டுகளில்!

அதில் 29ஆம் அத்தியாயத்தில் நான் எழுதியதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

அது வருமாறு:- "1972ஆம் ஆண்டு 'விடுதலை' இதழில் ஒரு தலையங்கம்! தலையங்கம் தீட்டியவர் இன்றைய திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் தளபதி திரு. வீரமணி அவர்களாவார்கள்.

தந்தை பெரியார் அவர்களின் உள்ளக் குமுறலை அப்படியே படம் பிடித்து வெளியிடப்பட்ட தலையங்கம் அது! எக்காரணம் பற்றி அந்தத் தலையங்கம் தீட்டப் பட்டது என்பதை அறிந்துகொள்ள வேண்டாமா? அறிந்துகொண்டால்தானே இந்த நாட்டில் "சமத்துவம்" என்பது வெறும் உதட்டலங்காரச் சொல்லாக

உச்சரிக்கப்படுகிறது என்பதும், அந்தச் சமத்துவம் நிலைக்கச் சட்டரீதியான பாதுகாப்பை வழங்க முடியாமல் அரசியல் சட்டம் என்பது பொம்மலாட்டக்காரனின் கைப்பதுமையாக இருக்கிறது என்பதும் தெளிவாகப் புரிய முடியும்.

1970ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பெரியார் அவர்கள் ஒரு கிளர்ச்சியைத் தொடங்கப் போவதாக அறிவித்தார்கள்.

ஆலயங்களில் கர்ப்பக் கிரகம் வரையில் சாதிப் பாகுபாடின்றி அனைவரும் சென்று ஆண்டவனைத் தொழுதிட வேண்டுமென்றும், அனைவர்க்கும் சாதி உயர்வு தாழ்வு இன்றி அர்ச்சகராகும் உரிமை வேண்டுமென்றும் வலியுறுத்துகிற அடிப்படையில் அந்தக் கிளர்ச்சி அமையுமென்று பெரியார் போர் முரசு கொட்டினார்.

அப்படியொரு கிளர்ச்சி நடத்தாமலே அவரது எண்ணத்தை நடைமுறைக்குக் கொண்டுவர சட்டம் இயற்றப்படும் என உறுதியளித்து, நான் தந்தை பெரியார் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் அறிக்கை கொடுத்தேன்.

"குறிப்பிட்ட வகுப்பினர்தான் அர்ச்சகராக இருக்க வேண்டுமென்று யாரும் இந்த நூற்றாண்டில் வாதாடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. காலம் வேகமாகச் சுழன்று மனிதனுக்கு மனிதன் பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது என்ற கொள்கை வலுப் பெற்று வரும் இந்நாளில், அப்படிப்பட்ட ஒரு பிற்போக்கு எண்ணத்தை யாரும் முரட்டுப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்க மாட்டார்கள். வள்ளுவர், புத்தர், காந்தியடிகள் போன்றோரைப் போற்றுகிறவர்கள், ஆண்டவனுக்கு அர்ச்சகராக குறிப்பிட்ட சாதியினர்தான் இருந்திடல் வேண்டுமெனல் அநியாயமாகும். அர்ச்சகர்களுக்கென சில தகுதிகள் இருக்க வேண்டும். போற்றக்கூடிய புனிதத் தன்மைகளை அவர்கள் கடைப்பிடித்தாக வேண்டும். அதற்குரிய பயிற்சிகளை அவர்கள் பெற்றாக வேண்டும். அதில் எனக்குக் கருத்து வேறுபாடில்லை. அப்படிப் பயிற்சி பெறுகிறவர்கள் எந்த வகுப்பினராயிருந்தாலும் அவர்கள் அதில் தேர்வுபெற்று அர்ச்சகராக ஆகலாம். அதற்கு விதிமுறைகள் வகுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

அதே சமயம் பரம்பரை அர்ச்சகர் வீட்டுப் பிள்ளைகள் அர்ச்சகராக விரும்பினால், அவர்களுக்கு முதல் சலுகை அளிப்பது பற்றியும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டு, அதன்படி, அர்ச்சகர் பதவிகளைப்

பிறப்பினால் கணக்கிடாமல், தகுதியொன்றினால் மட்டுமே கணக்கிடப்படக்கூடிய நாள் வந்துவிடுமேயானால், ஆண்டவனைத் தொழுதிட ஆலயம் செல்வோர் சாதி வேறுபாடின்றி கர்ப்பக் கிரகம் வரையில் செல்வதற்கும் தடையில்லை என்பதும் கொள்கை ரீதியாக ஒப்புக் கொண்டதாக ஆகிவிடும். கர்ப்பக்கிரகத்தில் இருக்கின்ற பொருள்களின் பாதுகாப்புக்காக மட்டுமே அந்த இடம், ஒருவர் பொறுப்பில் விடப்பட வேண்டுமே தவிர, அதற்குச் சாதி வர்ணம் பூசப்படக் கூடாது என்பதை இந்த அரசு மட்டுமல்ல, ஆண்டவன் எதிரே அனைவரும் சமம் என்ற கருத்தினை ஒப்புக்கொள்கிற எல்லோரும் ஏற்றுக் கொண்டே தீர்வர்.

ஆகவே, இந்த நல்ல நிலை ஏற்பட - ஆலயங்களில் ஆண்டவன் முன்னே சாதியின் பெயரால் மற்றவர்களுக்கு இழைக்கப்படும் இழிவான அநீதி அகன்றிட, விதிமுறைகள் செய்திட அரசு முன்வருகிறது என்ற உறுதிமொழியினை ஏற்று பெரியார் அவர்கள், தான் திட்டமிட்டிருக்கிற கிளர்ச்சியினை நிறுத்தி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்"

இந்த எனது அறிக்கைக்கும், வேண்டுகோளுக்கு மிணங்கப் பெரியார் அவர்கள், தான் நடத்தவிருந்த போராட்டத்தைத் தள்ளிவைக்கச் சம்மதித்தார்.

அந்த உறுதிமொழிக்கேற்ப 2-12-1970இல் சட்டப் பேரவையில் அர்ச்சகர் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது. இந்து சமய அறக்கட்டளைத் திருத்த மசோதா என்ற பெயரால் விவாதிக்கப்பட்டு, நிறைவேறிய அந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்துப் பேரவையில் காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும், மேலவையில் குன்றக்குடி அடிகளார் அவர்களும் பேசியது குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல. அந்தச் சட்ட முன் வடிவின் அறிமுகம் கண்டு ஐயத்திற்கு ஆளாகி யிருந்த சிலருக்கு ஐயம் போக்கும் வகையிலும் அமைந்தது எனலாம்.

அர்ச்சகர் தேர்வில் வெற்றி பெறும் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்துப் பெருமகனும் கர்ப்பக் கிரகத்தில் நுழைந்து ஆண்டவனை பூஜை செய்யலாம் - என்ற உரிமையை வழங்கும் அந்தச் சட்டத்தைப் புரட்சிகரமான சட்டம் என சமத்துவம் விரும்பிடும் சான்றோர் அனைவரும் பாராட்டினர். ஆலயங்களில் நியமிக்கப்படும் அறங்காவலர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒருவரையும் நியமிக்க வேண்டுமென்பதை மரபாக

மட்டுமே கொண்டிருந்த நிலையை மாற்றி, எந்த ஒரு ஆலயத்து அறங்காவலர் குழுவிலும் நிச்சயம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இடம் பெற்றாக வேண்டுமெனவும் கழக அரசில்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அர்ச்சகர் சட்டம் கண்டு, சமத்துவம் விரும்பாத சனாதனிகள் வெகுண்டார்கள். பல்லாண்டு காலமாக அனுபவித்து வருகிற ஆதிக்கத்தை அவ்வளவு எளிதில் இழந்திடச் சம்மதிப்பார்களா? அதனால், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். 12 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அரசியல் சட்டத்தில் மத சம்பந்தமாக அளிக்கப்பட்டுள்ள உறுதிப்படி, அர்ச்சகர்கள் தங்கள் தொழிலை நடத்தும் உரிமையை அந்தச் சட்டத் திருத்தம் தடுக்கிறது எனக் கூறி அந்த அடிப்படையில் "ரிட்" மனுக்கள் அளித்திருந்தனர். அந்த வழக்கில் 1972ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் நாள் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

கோயில்களில் அர்ச்சகர்களை நியமிப்பது வகுப்பு வேறுபாடற்ற நடவடிக்கை. அந்த நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட உரிமை உண்டு. மனுதார்களால் தவறு என்று கூறப்படும் இந்தச் சட்டம், மத சம்பந்தமான நடவடிக்கைகளிலோ, விவகாரங்களிலோ தலையிடவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு கொண்டுவந்த சட்டத் திருத்தம் செல்லுபடியானதே - என்று தீர்ப்பிலே கூறப்பட்டிருந்த போதிலும், நடை முறையில் இனிமேல் செய்யக்கூடிய காரியம் என்ற வகையில், அந்தச் சட்டத்தின்படி காரியங்கள் நடைமுறைக்கு வராத அளவுக்கு முடக்கப்பட்டு விட்டது. அது நடைமுறைக்கு வர வேண்டுமென்றால், அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். இப்படியொரு தீர்ப்பு வந்ததைக் கண்டுதான், "விடுதலை" இதழில் நான் முதலில் குறிப்பிட்டுள்ள தலையங்கம் வெளிவந்தது.

எத்தனையோ முறை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியும், மத்திய அமைச்சர்களிடத்தில் விவாதித்தும் கூட அந்த அரசியல் சட்டத் திருத்தப் பணி நடை பெறவே இல்லை.

இதுகண்டு கொதிப்படைந்த பெரியார் அவர்கள், 1973ஆம் ஆண்டு டிசம்பர் 8, 9 ஆகிய நாட்களில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் நாடு தழுவிய ஒரு போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

ஆனால், அந்தப் போராட்டத்தை நடத்தாமலேயே 1973ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் நாள் பெரியார் அவர்கள் மறைந்துவிட்டார்கள்.

சென்னை அண்ணா மேம்பாலத்திற்கருகே 1977ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ந் தேதி பெரியார் அவர்களின் சிலை திறப்பு விழா அ.தி.மு.க. சார்பாக நடைபெற்றபோது திராவிடர் கழகத்தின் சார்பில் அந்த விழாவில் கலந்துகொண்ட அன்னை மணியம்மையார் அவர்கள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களையும் வைத்துக் கொண்டு பேசும்போது,

"அர்ச்சகர் சட்டம் முடமாக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கென அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்கிற ஆவலை உள்ளத்தில் தேக்கி வைத்துக்கொண்டு அதற்காக ஒரு போராட்டத்தையே நடத்த பெரியார் திட்டமிட்டிருந்தார். அதற்குள் மறைந்துவிட்டார். முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பெரியார் மறைந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார். பெரியாருடைய ஆசைகளை எல்லாம் எவ்வளவோ நிறைவேற்றினோம். ஆனால், இந்த அர்ச்சகர் சட்டத்தை எழுந்து நடமாட வைக்க முடியவில்லை. ஆகவே, அவருடைய நெஞ்சில் ஒரு முள்ளோடுதான் புதைத்திருக்கிறோம் என்று சொன்னார். முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களே, அரசியல் சட்டத்தைத் திருத்தி, அர்ச்சகர் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர வழிவகை செய்யுங்கள்" என்று உருக்கத்துடன் கேட்டுக்கொண்டார்.

மணியம்மையார் அவர்கள் இவ்வாறு அந்த விழாவில் பெரியாரின் கடைசி ஆசையைப் பற்றித் தெரிவித்துப் பேசியதற்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அதே விழாவில் பதில் சொன்னார்.

"இங்கே பேசிய மணியம்மையார் எந்தச் சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அர்ச்சகராகலாம் என்று பெரியார் விரும்பினார், அதைக் கருணாநிதி நிறைவேற்றினார் என்றார். நான் மறுத்துச் சொல்வதற்காக அம்மையார் கோபித்துக் கொள்ளக் கூடாது. கோயில்களையே வேண்டாம் என்ற பெரியார் அர்ச்சகராவது பற்றிப் பேசினாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது" என்றார்.

அதை மறுத்தும், விளக்கியும் மணியம்மையார் அவர்கள் அதுபற்றி பின்னர் ஒரு அறிக்கை மூலம் தெரிவித்தார்.

கோயில்கள் இருக்கும்வரையில் - அங்கு அர்ச்சனைகள் நடைபெறும்வரையில் அங்கே மனித சமூகத்தின் சம நீதி காக்கப்பட

வேண்டுமென்பதுதான் பெரியாரின் கருத்து. அதைக்கூட புரிந்து கொள்ளாமல் எம்.ஜி.ஆர். அப்போது அப்படிக் கூறினார்.

1978ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் சென்னைக் கடற்கரையில் நான் பேசும்போது மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்களையும் அந்த மேடையில் வைத்துக்கொண்டு மத்திய அரசுக்கு விடுத்த வேண்டுகோளில், "பெரியாருக்கு எத்தனையோ விருப்பங்கள் உண்டு. சாதிபேதமற்ற சமுதாயம், மூடநம்பிக்கை ஒழிந்த சமுதாயம் இதையெல்லாம் காண வேண்டுமென்று பெரியார் ஆசைப்பட்டார் என்றாலும், அந்த ஆசைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன என்றாலும், இந்த ஆசை ஒன்றை நிறைவேற்ற முடியாமல் பெரியார் மறைந்து விட்டார். ஆகவே, மத்திய அரசுக்கு இந்த நூற்றாண்டு விழாவில் நான் இந்தப் பொதுக் கூட்டத்தின் மூலமாக, இங்கே வெள்ளமெனத் திரண்டிருக்கின்ற உங்கள் சார்பாக விடுக்கின்ற வேண்டுகோள், அர்ச்சகர் சட்டம் நடைமுறைக்கு வர அரசியல் சட்டத்தைத் திருத்திக் கொடுங்கள் என்கிற வேண்டுகோள்" என்பதாகும். ஆனால், இந்த வேண்டுகோள் இன்றளவும் நிறைவேற்றப் படவில்லை."

இவ்வாறு எழுதியிருந்தேன் நெஞ்சுக்கு நீதியில்! - நமது நெஞ்சுக்கு நீதி கிடைக்கும் வகையில் - சமூக நீதி, தந்தை பெரியார் விரும்பியவண்ணம் கிடைத்திட, இப்போதுள்ள அரசு, உச்சநீதிமன்ற தீர்ப்பில் உள்ள பிராமணரேதான் அர்ச்சகராக நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதில் எந்த நியாயமும் இல்லை. அரசியலமைப்புச் சட்டம் 25-வது பிரிவின்படி எல்லோருக்கும் எல்லா உரிமையும், சுதந்திரமும் உள்ளது. எனவே, தகுதி வாய்ந்த பிராமணர் அல்லாதவர் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டால் அதுகுறித்து எவரும் கேள்வி எழுப்ப முடியாது" என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளதைத் துணையாகக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று இக்கடித வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

7-10-2002

2822. கொள்கையற்றோர் கையில் கொற்றம் இருக்கிறது!

உடன்பிறப்பே,

மதமாற்றத் தடை அவசரச் சட்டம் ஒன்று அ.தி.மு.க. அரசில், ஜெயலலிதாவின் யாக, யோக, வேள்வி, வாஸ்து சாத்திர, யானை காணிக்கை முதலிய பகுத்தறிவு பரிணாம வளர்ச்சி நடவடிக்கை களைத் தொடர்ந்து இப்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதைச் சட்டப்பேரவையில் உள்ள அ.தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கை பலத்தை வைத்து நிறைவேற்றிவிடலாம் என்ற நம்பிக்கையும் ஜெயலலிதாவுக்கு உண்டு.

நான் பாப்பாத்திதான் என்று சட்டப் பேரவையிலேயே வீராவேசமாகப் பேசி, தனக்குள்ள உயர்வர்க்க பலம், பண பலம் இவற்றைக் கொண்டும் - எதிர்ப்பது போல் காட்டிக்கொண்டு எளிதில் விலை போகக் கூடிய சில இலட்சியவாதி(?)களின் பலவீனம் என்ற தனக்குச் சாதகமானதும் பிரதானமானதுமான பலம் இவற்றை வைத்துக் கொண்டும் தமிழ்நாட்டில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், எது வேண்டுமானாலும் செய்யலாம், கைகட்டி வாய் புதைத்துக் கிடக்க ஏராளமான பழைய, புதிய எடுபிடிகள் இருக்கின்றனர் என்ற தைரியத்தில், ரேஷன் அரிசி கிலோ ஆறு ரூபாய் ஆக்கியதற்கே எந்த வீராதி வீர வீரமார்த்தாண்டர்களும் வாய் திறக்கவில்லை - ரயில் கட்டணத்தை விட பஸ் கட்டணத்தைப் பல மடங்கு உயர்த்தியதற்கே கப்சிப் என்று கிடக்கிறார்கள் - வரி உயர்வு, ஒரு முனை வரியைப் பல முனை வரியாக்கியது ஆகியவற்றுக்கே ஆ, ஊ! என்று அலறிப் பார்த்துவிட்டு பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டார்கள் - அரசு அலுவலர், ஆசிரியர், தொழிலாளர், மாணவர் இப்படி சகல பிரிவினரையும் சப்தம் போட்டால் அடக்கி ஒடுக்கத்தான் காவல் துறை இருக்கவே இருக்கிறது. அதனால், என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே என்று தனது ஆட்சியின் எதேச்சாதிகார

நடவடிக்கைகளில் ஒன்றாக இப்போது இந்த மத மாற்றத்தடை அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்.

மத மாற்றத்துக்கு ஒருவரைத் தூண்டி விடுபவர்களுக்கு 3 ஆண்டு, 4 ஆண்டு என்று தண்டனையாம்! - தூண்டிவிடுவது குற்றம் என்பது கேட்பதற்கு நியாயமாகத்தான் இருக்கிறது! ஆனால், இவர்களுக்குப் பிடிக்காத நிரபராதிகள் மீதுகூட பொடா சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவது போல, தூண்டி விட்டதாக குற்றம் சுமத்தி, தண்டித்து விடவும் - வழக்கில் சிக்க வைக்கவும் இந்தச் சட்டத்தின் மூலம் நரிக்கு நாட்டாண்மை கொடுத்தது போன்ற ஒரு நிலை ஏற்பட்டு விடுகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஒருவரைப் பிடித்து அமுக்கிக் கொண்டு, இடுப்பில் லுங்கியைக் கட்டிவிட்டு, தலையில் தொப்பியை வைத்து இவர் இன்று முதல் இஸ்லாமியர் என்று அறிவித்துவிட்டால், அப்படி வற்புறுத்தலினால் மதம் மாற்றப்பட்டவர், அவரது மனம் மாறாத பட்சத்தில் தன்னை ஒரு இஸ்லாமியர் என்று கூறிக்கொள்ள முனவரமாடடார்.

அதே போல ஒருவரைப் பிடித்து அமுக்கி அவர் கழுத்தில் சிலுவையை மாட்டிவிட்டு, இவர் இன்று முதல் ஜேம்ஸ் ஆவார் என்று அறிவித்து விடுவதால், அவர் கிறிஸ்தவர் ஆகிவிட மாட்டார். அவரது மனம் மாறாத பட்சத்தில் தன்னை அவர் ஒரு கிறிஸ்தவர் என்று ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்க மாட்டார்.

மனமாற்றம் இயல்பாக இல்லாமல் மத மாற்றம் என்பது இல்லை - மன மாற்றத்துக்கு மதிப்பளித்து தமது விருப்பத்துக்குரிய மார்க்கம் எனத் தேர்வு செய்து கிறிஸ்தவர்களாகவோ, முஸ்லிம்களாகவோ மற்றும் புத்த மத, சமண மதத்தினராகவோ மாறுகிறவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு, அவசரச் சட்டங்கள் தேவையில்லை! இந்து மதம் என்று சொல்லப்படுகிற இந்த மதவாதிகளின் அணுகுமுறையிலேதான் மாற்றம் தேவை!

பெருந்திரளானவர்களுடன் அண்ணல் அம்பேத்கர் புத்த மதத்தைத் தழுவினாரே! அதற்குக் காரணம் என்ன?

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் மீனாட்சிபுரத்தில் ஏராளமானவர்கள் மதம் மாறிய நிகழ்ச்சி நடைபெற்றபோது, அதற்குக் காரணம் தூண்டுதல் என்றும்,

வற்புறுத்தல் என்றும், பெரியார், அண்ணா, கருணாநிதி போன்றோரின் விஷமப் பிரச்சாரம் என்றும் கதை கட்டியதை, கடும் விமர்சனங்களில் ஈடுபட்டதை வரலாறு நினைவூட்டிக் கொண்டுதானிருக்கிறது.

இன்று ஜெயலலிதா அரசு கொண்டு வந்துள்ள அவசரச் சட்டத்தை ஆதரித்து அவசர அறிக்கைகள் விடுத்துள்ள காஞ்சி ஆச்சாரியார் அவர்களில் இருந்து, இந்து அமைப்புகள் எனச் சொல்லிக் கொள்கிற பல்வேறு அமைப்புகள் வரையில் இந்து மதம் என்று எதைக் குறிப்பிடுகிறார்கள் என்பது முதலில் தெளிவாக்கப்பட வேண்டும்.

1926ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் சென்னை திருவல்லிக்கேணியில் ஆற்றிய உரை, 15-8-1926 குடியரசு இதழில் வெளியாகியுள்ளதை நினைவூட்ட விரும்புகிறேன்.

இஸ்லாம், கிறிஸ்தவர், பவுத்தர் அல்லாத மக்களை பொதுவாக இந்துக்கள் என்று பெயரளவில் சொல்லுவதைத் தவிர, அந்த இந்து என்பது சமுதாயப் பெயரா? இனப் பெயரா? மதப் பெயரா? என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை! இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச் சொல் என்பதல்லாமல், அதற்கு வேறு கருத்து எதுவுமில்லை. பவுத்தம், கிறிஸ்து, இஸ்லாம் முதலிய மதங்களுக்கு மதகர்த்தாக்களின் பெயர்கள் இருக்கின்றன. சைவம், வைணவம் என்னும் மதங்களுக்கு சிவன், விஷ்ணு என்ற மதக் கடவுள்களின் பெயர்கள் இருக்கின்றன. வைதீக மதம், ஸ்மார்த்த மதம் என்பவற்றுக்கு வேதம், ஸ்மிருதி என்ற நூல்கள் இருக்கின்றன. மத கர்த்தாக்கள் பெயர் இல்லாமல், கடவுள் பெயர் இல்லாமல், சம்பந்தப்பட்ட நூல்கள் இல்லாமல் குறிப்பிடத் தகுந்த ஆதாரம் இல்லாமல் ஒரு மதம் இருக்கிறது. அதுதான் இந்து மதம் என்றால் அந்த இந்து என்ற சொல், மதத்தைக் குறிப்பதாக யார்தான் ஒப்புக் கொள்ள முடியும்? பழக்க வழக்கத்தில் தந்திரசாலிகளுக்கு அனுகூலமாகவும், அறியாத பாமர மக்களுக்குக் கேடாகவும், இழிவாகவும் தலையெடுக்க வசதியில்லாததாகவும் இருக்கிற ஒரு நடவடிக்கைக்கு இந்து மதம் என்ற பெயர் இருக்கிறது என்பதல்லாமல் வேறென்ன? ஆரியர்களின் கொள்கைகளும், வழக்கங்களுந்தான் இந்து மதம் என்று அவர்களிலேயே ஒரு சாராரும் - வேதமும், ஸ்மிருதிகளும், புராணங்களும்தான் இந்து மதம் என்பதோடு - மனு தர்ம சாஸ்திரம் தான் இந்து மதத்திற்கு

சாஸ்திரம் (சட்டம்) என்றும் அவர்களிடையே வேறொரு சாராரும் கூறி அவைகளை நடப்பாக்கி வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், வர்ணாஸ்ரம தர்மம் என்ற முறை இல்லாவிட்டால் இந்து மதம் என்று சொல்ல எதுவுமேயில்லை!

தந்தை பெரியாரின் இந்த உரையிலிருந்து என்ன புரிகிறது? வருணாஸ்ரமக் கொள்கைதான் மக்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஆதிக்கம் பெற்ற ஒரு பிரிவினர், மற்ற பிரிவினரை அடிமைகளாக நடத்திட வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது என்பதும், அதற்கு இந்து மதம் என்ற பசுத்தோலை, உயர்சாதிப் புலிகள் போர்த்திக்கொண்டு உலவுகின்றன என்பதும் தெளிவாகப் புரிகிறதல்லவா?

இந்த ஆராய்ச்சியைப் பெரியார் நடத்தியதற்குக் காரணமே, இந்து மதத்தின் பெயரால் நால்வருணங்களை வகுத்து, ஐந்தாவதாக ஒரு வருணம் என்று பழங்குடி மக்களைப் பஞ்சமர்கள் என்று ஒதுக்கியும், தீண்டாதவர்களாக ஆக்கியும் நடைபெறுகிற கொடுமையைக் கண்டித்து அகற்றுவதற்காகவே தான் என்பதை, மற்றவர்கள் உணர்ந்து கொண்டாலும், உணர்ந்து கொள்ளாவிட்டாலும் பாதிக்கப்படுகிற அந்த மக்களாவது உணர்ந்து கொள்ள வேண்டாமா?

இந்தக் கேள்விக்குக் கிடைக்கிற பதில்தான், முடிந்த வரையில் இங்கே இருந்துகொண்டே இதுவரையில் போராடிப் பார்த்தோம். முடியவில்லை. வேறு வழியில்லாமல் மதம் மாறுகிறோம் என்பதாகும்!

நானும் வாழவிட மாட்டேன் - நீயாகவும் வாழ்வதற்கு வழி விட மாட்டேன். இங்கேயே கிடந்து பொட்டுப் பூச்சியாக, புன்மைத் தேரையாக, புழுவாகச் செத்திடு. இந்தக் கட்டளைக்கு மாறாக, நீ உரிமைக் குரல் எழுப்பி உரிய இடம் நோக்கி, உன்னை மாற்றிக் கொண்டால் அவசரச் சட்டத்தின் மூலம் அதற்குக் காரணமானவர்களையெல்லாம் கடுமையாகத் தண்டிப்பேன்

என்று அடக்குமுறை ஆட்டம் போடுவதை பெரியாரின் எந்தவொரு தொண்டனாலும், அண்ணாவின் எந்தவொரு தம்பியாலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

பெரியார் வழி நின்று, இந்து என்பது குறித்து இதோ அண்ணா அவர்கள் ஆரியமாயை என்ற அவரது நூலில் வெளியிட்டுள்ள

கருத்தையும் அண்ணாவின் பெயரை ஏதோ ஒப்புக்காகத் தங்கள் கட்சிக்கு வைத்துக் கொண்டிருப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்து என்ற பதத்திற்கு இதுவரையில் ஆராய்ச்சியாளர்களும், சரித்திரம் எழுதினோரும், அகராதிக்காரர்களும் கொடுத்துள்ள பொருள் என்னவென்று கேட்கிறோம். படித்த எவரிடமும் உள்ள ஜெம் அகராதியில் (Gem Dictionary) பார்க் கட்டும்! மேதாவிகளுக்குத் தோழன் எனக் கருதப்படும் சேம்பர்ஸ் (Chambers) அகராதியைப் பார்க்கட்டும். பல நாட்டுத் தகவல்களைத் தொகுத்துத் தரும் என்சைக்ளோபீடியாக்களைப் பார்க்கட்டும்! இந்து என்பதற்கு என்ன பொருள் தரப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். திரு.டி.ஏ.சாமிநாதய்யர் என்பவர் வெளியிட்டாரே ஜெம் அகராதி! அதில் இந்து என்பதற்கு 467 ஆம் பக்கத்தில் பொருள் கூறப்பட்டிருக்கிறது. யாது அப்பொருள்? இந்து என்றால் சனாதன தர்மானுசாரி! இந்துஸ்தானம் என்பதற்கு பியர்ஸ் என்சைக்ளோபீடியா தந்துள்ள பொருள் இமயத்துக்கும் விந்தியத்துக்கும் இடையே உள்ள பிரதேசத்தில் ஒரு பகுதி என்பதாகும்.

பெரியாரும் அண்ணாவும் வெளியிட்டுள்ள இந்தக் கருத்துகளை நோக்கும்போது,

பெரும்பாலான பிராமணரல்லாத, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைத் தங்கள் வசதிக்கேற்ப, நேரத்துக்கேற்ப, தேவைக்கேற்ப, ஆட்டிப் படைத்திடவும் அவதியுறச் செய்திடவும், அவர்களுக்குள்ளேயே மோதவிட்டு அந்த வேதனையை வேடிக்கையென ரசிக்கவும் - அவ்வப்போது கிடைத்த வேத புத்தகங்களை, ஸ்மிருதிகளை படைக்கருவிகளாகக் கொண்டு, இதுதான் இந்து மதம் என்று மிரட்டப்பட்டதைத் தவிர, வரையறுக்கப்பட்ட, வகைப்படுத்தப்பட்ட சம நீதி வழங்குகிற ஒரு செம்மையான அமைப்பாக அப்படியொரு மதம் உண்டு என்று யாரும் வாதிடத் தயாராக இல்லை என்பது தெளிவான உண்மையாகும்.

இப்படி ஒரு நிலை இருப்பதால்தான் சமூக அமைப்பு சீர்குலையும் வகையில் பாப்பாரப்பட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்கள் இன்னமும் இந்தச் சுதந்திர நாட்டில் இருக்கின்றன.

இதோ மற்றொரு செய்தியாக, நெல்லை மாவட்டம் கொத்தன்குளத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டு, நியாய விலைக்கடை கூட வேறு ஊரில் அமைக்கப்பட மாவட்ட நிர்வாகம் முடிவு செய்ததை எதிர்த்து அந்த ஊர் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் - பக்கத்து ஊர்ப் பள்ளிக்கூடத்தில் கூட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தரக் குறைவாக நடத்தப்படுகிறார்கள் என்றும் செய்தி வந்துள்ளது.

இவ்வாறு சாதிக் கொடுமைகள் தொடர்வதை வேடிக்கை பார்த்துக்கொண்டும், மேலும் தொடர ஊக்கமளித்துக் கொண்டும் - ஏனென்று கேட்பதே பாபமென்றும் கருதிச் செயல்படுகிற உதிரிகளின் அமைப்பிலிருந்து மனமாற்றம் பெற்று மத மாற்றம் செய்து கொள்வதை, குறுக்கு வழியில் தடுத்து நிறுத்தி, குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியும் பறித்த கதையாக - அவசரச் சட்டம் பிறப்பித்திருப்பது, கொள்கையற்றோர் கையில் கொற்றம் இருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

அன்புள்ள,

மு.க.

9-10-2002

2823. பொது வேலை நிறுத்தமும்; நெய்வேலி கிளர்ச்சியும்!

உடன்பிறப்பே,

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை அது போர்த்துக் கருங்கயல் கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி! என்றும்,

பூவார் சோலை மயில் ஆலப் புரிந்து குயில்கள் இசைபாடக் காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி!

என்றும்,

சிலப்பதிகார காலத்திலே இந்தச் செழுந்தமிழர் நிலத்தினிலே, ஏர்பிடித்து உழுதிடும் ஆடவரும், அவருக்குத் துணைநின்று கழனிகளில் பயிர் வளர்க்கும் ஏந்திழையரும் எழுச்சியுடன் இந்தப் பாடல் வரிகளை இசைத்தனர். ஆடினர்! பாடினர்! ஆனந்தக் கூத்தாடினர். காவேரியைத் தங்களைக் காத்திடும் தெய்வமெனக் கருதினர்!. அதனால்தான் அவள் இயற்கையாகச் சூடிவரும் மலர்களையன்னியில், இரு கரைகளிலும் நின்று அவள் மீது பூமாரி பொழிந்தனர். அவற்றையும் சேர்த்து அந்த அன்னை அணிந்துகொண்டு வந்த மலர்ப்பூ ஆடை கண்டு மகிழ்ந்துதான் மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை அது போர்த்து வாழி காவேரி என்று உற்சாக மேலிட்டு உவகை பொங்கிட வாழ்த்தினர்.

அதுவும் அன்னை காவேரி, ஆடிப்பெருக்காக கரைகளில் காலூன்றிக் களி நடனம் புரிந்தவாறு வரும்போது, பல்லில்லாத கிழங்களின் முகம்கூட முள்ளில்லாத ரோஜாவாக மலர்ந்திருக்கும்!

சிறார் சிரித்துக் கைகொட்டி, நீர் வாரி ஒருவர் மீது ஒருவர் இறைத்துக் குதூகலிப்பர்!

அவர்களை அன்னையர் வாரியணைத்து, முத்தமாரி பொழிந்து அவர்களையும் தங்களுடன் பாட்டிசைக்கச் செய்வர். நடந்தாய் வாழி காவேரி என்று!

அந்த ஆடிப்பெருக்கு ஆனந்தக் காட்சியெல்லாம், இன்று கனவாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டதை எண்ணியன்றோ, புலம்பித் தவிக்கிறான் தமிழன்!

புத்தாடை புனைந்து, மஞ்சள், குங்குமம் எனும் மங்கலப் பொருள்களையும், மா, பலா, வாழையென்னும் முக்கனிகளையும் தட்டிலேந்தி மங்கையர் திலகங்கள் ஆற்றங்கரைப் படிக்கட்டுகளில் படையலிட்ட காட்சிகளையும், என்தாய் தந்தையரே கிராமத்துக் கிளை நதியில் இடுப்பளவு தண்ணீரில் இறங்கி நின்று அன்னை காவேரிக்குப் பூஜை செய்த காட்சியையும், இளம்பிராயம் முதல் கண்டு களித்தவன்தான் நான்!

அதே கண்களால்தான் இந்த ஆண்டு ஆடிப்பெருக்குக் காட்சிகளை, ஏடுகளில் வெளிவந்த புகைப்படங்களிலும், செய்திகளைத் தொகுத்தளித்திடும் தொலைக்காட்சிகளிலும் கண்டு மனம் மிக வாடிப்போனேன்.

கரை புரண்டு ஓடும் காவேரி, தரை வறண்டு கிடக்கும் கொடுமையைச் சொல்லவும் போமோ!

எப்படியும் ஆடிப்பெருக்கு விழாவை ஆண்டுதோறும் கொண்டாடியதுபோல் இந்த ஆண்டும் கொண்டாடியே தீரவேண்டுமென்று வறண்டு கிடக்கும் ஆற்றின் மணற் பகுதிகளில் ஊற்று தோண்டிட முனைந்து, அந்த ஊற்றுகளில் வெகு ஆழத்திற்கு அப்பால் தோன்றிய காவேரித்தாயின் முகம் கண்டு, பெருமூச்சுவிட்ட பெருமாட்டிகளின் இதய வேதனையை வர்ணிக்கத்தான் இயலுமா?

கொண்டாட்டமில்லையே ஆடிப்பெருக்கிற்கு, என்ற கவலையைவிடப் பெருங்கவலையாக, திண்டாட்டமாகிவிட்டதே இந்த ஆண்டு பயிரிட்டுப் பயன் பெறுவதற்கேகூட என்று உழவன், கண்ணீர் கொண்டல்லவா கழனிகளின் காய்ந்துபோன வரப்புகளில் எழுதிக் கொண்டிருக்கிறான்.

நடந்த காரியங்கள் நல்லவைகளாக இல்லை யென்றும் - நமது அணுகுமுறைகளின் சொத்தை சோடை பற்றியும் இந்த நேரத்தில் நினைத்துப் பார்ப்பதுகூட, இனியாவது இப்படி நடந்திடக்கூடாது என்ற அனுபவ அறிவை வழங்குமென்றும், வழங்கிட வேண்டுமென்றும் கருதுவது தவறில்லை!

தண்ணீர் தர இயலவில்லை; எங்கள் நிலை அப்படி! என்றுகூட கர்நாடக அரசு சொல்லவில்லை. தரமுடியாது என்றே அப்பட்டமாக ஆணி அடித்தாற் போலச் சொல்வது தேசிய ஒருமைப்பாடு என்பது கேலிக் கூத்தாகிவிட்டது என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

தமிழக அரசின் அணுகுமுறை ஆரம்பத்திலிருந்தே சரியில்லை என்பது மட்டுமே, தமிழ்நாட்டு விவசாயிகளைக் காயப்போடுவதற்குக் கர்நாடகத்திற்கு உகந்த காரணமென்று நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது.

இருமாநிலங்களுக்கிடையே நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களில் சூடான வார்த்தைகள், நாகரிகக் குறைவான வார்த்தைகள் எந்தப் பக்கமிருந்து வந்தன என்பதைவிட, அதற்கெல்லாம் மாறாக கர்நாடக முதல்வர் கிருஷ்ணா அவர்கள் தமிழ்நாட்டு விவசாயிகளின் கண்ணீர் துடைத்திட, சிறிதளவாவது கனிவு காட்டியிருக்கலாம்.

இதோ, எங்கள் பெருந்தன்மையைப் பாருங்கள்! என்று. பிரதமரின் உத்திரவுப்படியாவது. அதாவது காவேரி ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் அவர் கட்டளைக்குக் கட்டுப்பட்டு, ஆணையம் குறிப்பிட்ட அளவுத் தண்ணீரை வழங்கிடவாவது திரு.கிருஷ்ணா முன்வந்திருக்கலாம்!

தேவையில்லாமல் வரட்டுப் பிடிவாதம் காரணமாக, இருமாநிலங்களுக்கிடையே கடுமையான கசப்பும், காழ்ப்பும் உருவாகிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. தமிழகத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை இல்லை. அதிலும் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க.வுக்கும், ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வுக்கும் இடையே ஒற்றுமையில்லை யென்றும், அந்த நெருப்பில் குளிர் காயலாமென்றும் இங்குள்ள சில சமய சஞ்சீவிகள் கருதுவதுபோல, கர்நாடக அரசும் கருதிச் செயல்படவேண்டாம் என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளும் தரப்பினர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தி.மு.க. கலந்துகொள்ள இயலாமைக்கான நியாயமான காரணத்தை அறிவித்துக் கலந்து கொள்ளாமல் இருந்தால்கூட, அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் கோரிக்கை வைத்து, அவர்கள் ஒரு மனதாக முடிவெடுத்து அறிவித்துள்ள முழு அடைப்பை ஆதரித்து

ஒத்துழைப்பு வழங்கிட முடிவுசெய்து, அவ்வாறு செயல்பட்டதை நடுநிலையாளர்கள் புரிந்து கொண்டேயிருக்கிறார்கள்.

ஆம்! தமிழகம் காவிரிப்பிரச்சினையில் கொள்கை ரீதியாக ஒரே அணியில்தான் இருக்கிறது. ஒரே திசையில்தான் பயணம் நடத்துகிறது!

இந்த உணர்வுமிக்க உண்மையை கர்நாடக அரசுக்குத் தெரிவிக்கும் வகையில்தான் இன்றைக்கு (9.10.2002 அன்று) பொது வேலை நிறுத்தம் மாபெரும் வெற்றியினைப் பெற்றிருக்கிறது. மத்திய அரசுத் துறையின் ரயில்கள்கூட, ஓடாமல் பொது வேலைநிறுத்தமெனும் இந்த முழு அடைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த பொது வேலை நிறுத்தம் வெற்றிபெற ஒத்துழைத்த அனைவருக்கும் தி.மு.க. சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பு: (இக்கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் போது காலை 8 மணி தொலைக்காட்சி செய்தி பார்க்க நேரிட்டது. அதில் இயக்குநர் பாரதிராஜா அவர்களின் நேரடி பேட்டியைக் கண்டேன்; கேட்டேன்! - எனவே அதையொட்டி இக்கடிதத்தில் ஒன்றை நான் குறிப்பிட்டாகவேண்டும்.)

வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம், முழு அடைப்பு இவற்றில் எதுவாயினும் அது நமது உணர்வை எழுச்சியுடனும், அறவழியில் அமைதியாகவும் அறிவிக்கக் கூடிய ஒரு வழிமுறையாக இருக்க வேண்டுமே தவிர, வன்முறைக்கு இடம் தரும் வகையில் நிச்சயமாக நடந்து கொள்ளக் கூடாது.

முதலமைச்சரின் வாழ்த்துப் பெற்று இயக்குநர் பாரதிராஜா தலைமையில் 12ஆம் தேதி நெய்வேலியில் அறிவிக்கப்பட்டுள்ள பேரணி, தமிழக கலைஞர்களின் உணர்வு அடிப்படையிலான எதிர்ப்பை கர்நாடக அரசுக்குத் தெரிவிக்கின்ற வகையிலே அமையும் என்று எண்ணித்தான் அதில் கலந்துகொள்ளுமாறு கழகக் கலைஞர்களுக்கும் தெரிவித்திருந்தேன்.

ஆனால் அந்தப் பேரணி, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பாக நடைபெறுகிற பேரணி அல்லவென்றும்; நெய்வேலி இரண்டாவது மின்சார உற்பத்தி நிலையத்தில் தடையை மீறி நடத்தப்பட இருக்கும் (Agitato) கிளர்ச்சி என்றும்; எத்தனை மணிக்கு தடையை மீறி உள்ளே நுழைந்து அந்த இடத்துக்கு

செல்வோம் என்பதை முன்கூட்டி சொல்ல முடியாதென்றும், அது ரகசியமாக இருக்குமென்றும் பாரதிராஜா அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்துள்ள பேட்டி நேரடியாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகியிருக்கிறது.

பெரியார் காலத்திலிருந்து, தமிழ்நாட்டில் எந்தப் போராட்டமாயினும், அது ஆர்ப்பாட்டம் என்றில்லாமல் தடைமீறி மறியல் செய்து கைதாகிற போராட்டமாகவே இருந்தாலும், எந்த இடத்தில், எந்த தேதியில், எந்த நேரம், எத்தனை மணிக்கு என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டு, ஈடுபடுவதுதான் வாடிக்கை. அதற்கெல்லாம் நேர்மாறாக திரைப்படக் கலைஞர்கள், தடையை மீறுவோம் என்றும், அதையும் முன்கூட்டி எத்தனை மணிக்கு என்று சொல்ல முடியாதென்றும் அறிவித்திருப்பதைப் பார்க்கும்போது, இது எங்கு கொண்டுபோய் விட்டுவிடுமோ என்று அஞ்சிட வேண்டியுள்ளது.

முன்கூட்டி அறிவித்து அமைதியாக நடக்கிற அறவழிப் போராட்டங்களில்கூட, ஏதோ காரணங்களால் அமளியும், வன்முறையும் உருவாகக்கூடிய விளைவுகள் ஏற்பட்டிருப்பதை மறந்துவிடக் கூடாது.

எனவே, இவ்வாறு முன்கூட்டியே வன்முறையை வரவேற்பது போல திட்டமிட்டு, தடையை மீறுவோம் என அறிவித்து, அதில் திரைப்படக் கலைஞர்களை ஈடுபடுத்தும் இந்தப் போராட்டத்தில் கழகக் கலைஞர்களும், கழகத்தினரும் கலந்துகொள்ளக் கூடிய சூழ்நிலை இல்லையென்றும், கலந்துகொள்ள வேண்டாமென்றும் - ஒருவேளை அறவழியில் முறைப்படி நடிகர் சங்கமே ஈடுபட்டு முன்னின்று பொறுப்பேற்று பேரணியோ, அமைதி ஆர்ப்பாட்டமோ நடத்தினால் அதில் மட்டுமே கலந்து கொள்ளலாமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

10-10-2002

2824. நீ இருக்க பயமேன் என்பதே என் இதயத்தின் துடிப்பு!

உடன்பிறப்பே,

எங்கே மனத்தில் அச்சம் இல்லையோ, எங்கே தலையானது நிமிர்ந்து நின்றிடுமோ, எங்கே அறிவு முடக்கப்பட்டு இல்லையோ, எங்கே குறுகிய மதில்கள் எழுப்பப் பெற்று இந்த உலகம் சீர்குலையவில்லையோ, எங்கே உண்மையின் ஆழத்திலிருந்து தூய சொற்கள் பீறிட்டுக் கிளம்பிடுமோ, எங்கே பகுத்தறிவு என்னும் பேரருவி காய்ந்து சருகான பழக்கமென்னும் பாலை நிலத்தில் மண்ணுக்குள் மறையாமல் பாய்ந்திடுமோ, எங்கே உன் துணை வலிமையால் பரந்த சிந்தனை, செயல்களை நாடி இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடுமோ, அந்த இனிய சொர்க்க வாழ்வு கண்டிட அருமைமிகு எந்நாடு விழித்தெழ தந்தையே! அருள் பொழிந்திடுவாயாக!

இவ்வாறு கவியரசர் தாகூர், பாடிய முறையீட்டுக் கவிதை "கீதாஞ்சலி"யில் இடம் பெற்றுள்ளது. பகுத்தறிவுப் பேரருவி, பழக்க வழக்கமெனும் பாலைவனத்தில் பாய்ந்தோடிட வேண்டுமாம். அப்படிப் பெருகியோடும்போது அந்தத் தெளிந்த நீரை பாலைவனத்து மணல் உறிஞ்சிவிடக் கூடாதாம். எனவே, மண்ணுக்குள் மறையாமல் அந்த நீர் பழமைப் பாலையைப் பகுத்தறிவுச் சோலையாக்க வேண்டுமாம். பகுத்தறிவுப் பிரச்சாரம், காட்டில் எரிந்த நிலவாக ஆகிவிடக்கூடாது என்பதிலே தாகூர் கொண்டுள்ள அக்கறையைத்தான் இந்த வரிகள் தெளிவாக்கு கின்றன. பாலைவனத்தில் ஓடுகின்ற தண்ணீரின் கதியும் அப்படித்தானே ஆகிவிடும். அதனால்தான் கவிஞர், மிக்க கவனத்தோடு கூறுகிறார். மண்ணுக்குள் தண்ணீர் மறைந்துவிடக் கூடாதென்று!

இங்கே பாலைவன மணல் என்பது எதைக் குறிப்பிடுகிறது? மக்கள் சமுதாயத்தைத்தான்! அந்தச் சமுதாயத்தை வளமாக்கப் பாய்ந்து வரும் பகுத்தறிவு வெள்ளத்தை அந்தச் சமுதாயமே,

தனக்கெனப் பயன்படுத்திக்கொள்ளாமல் வீணாக்கிவிடக் கூடா தல்லவா? அதனால்தான் ரவீந்திரர்,

எங்கே பகுத்தறிவு என்னும் பேரருவி, காய்ந்து சருகான பழக்க மெனும் பாலை நிலத்தில் மண்ணுக்குள் மறையாமல் பாய்ந்திடுமோ,

என்று உருக்கமும் உணர்ச்சியும் இழையோடிட மிகுந்த முன் எச்சரிக்கையுடன் பாடுகிறார். பகுத்தறிவு என்றதும் உடனே, நாத்தீகவாதம் - கடவுளைப் பற்றிய ஆராய்ச்சி - புராண இதிகாசங் களுக்கு எதிர்ப்பு - பழம்பெரும் நூல்களுக்கு எதிர்ப்பு - என்று இருசாராரும் பொருள் கொண்டிடக் கூடாது!

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
“எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

எனும் குறட்பாக்கள் வழிநின்று சிந்தித்துச் செயல்படுவதே பகுத்தறிவின் பயனாகும். விஞ்ஞானத்தின் விரிவாக்கமும், அதன் விளைவாக மனிதன் வெண்ணிலாவுக்குப் பயணம் சென்று திரும்பியதுமான நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிற உலகத்தில், இந்தச் சாதனைச் சரித்திரங்கள், எப்படிப் படைக்கப்படுகின்றன என்பது பற்றியே கவலைப்படாமல்; அந்த விஞ்ஞானக் கருவிகளுக்குப் பொட்டிட்டு, பூ சூட்டி, சாம்பிராணி தூபம் காட்டிக் கொண்டிருக்கிற வேலையில் அல்லவா சிலர் வேகமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்திய நாடு, விஞ்ஞானத் துறையில் முன்னேறுகிறது எனக் கண்டு மகிழ்கிறோம். அதேநேரத்தில் கையை மூடித் திறந்தால் சிறியதோர் சிவலிங்கம் வருகிறது அல்லது சிங்கப்பூர் கெடிகாரம் வருகிறது. குறைந்தபட்சம் குங்குமம் விபூதியாவது வருகிறது என்று மந்திர தந்திர மாயாவிகளின் காலில் விழுந்து கிடக்கிற மக்கள் கணக்கற்றோர் இருக்கிறார்களே!

வறுமைக்கும், வாட்டத்திற்கும் காரணம் என்ன? விதி!

ஒருவன் வாழவும், ஒருவன் வாடவுமான நிலை இருப்பானேன்? அது தலையெழுத்து!

உயர் சாதிக்காரன் - தாழ்ந்த சாதிக்காரன் என்ற கேடு உலவிடுவானேன்? அதுவா? அது போன ஜென்மத்துப் பலன்!

இப்படிப்பட்ட ஆணவம் நிறைந்த பதில்கள், அறியாத மக்களின் உடலிலே, உள்ளத்திலே சவுக்கடிகளாக விழுந்து கொண்டிருந்தன. அதைத் தடுத்து நிறுத்தியதுதான் பகுத்தறிவு! சாதி, மதமென்னும் சமூக அமைப்புகளால் ஏற்பட்ட பேதங்களை அகற்றுவதற்கு மட்டுமல்ல! உழைக்க ஒரு பிரிவு - உண்டு கொழுக்க ஒரு பிரிவு - என்ற பொருளாதார பேதத்தையும் சுட்டிக்காட்டி, ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் அமைத்திடவும் பகுத்தறிவு மன்றமே தீர்ப்பு எழுதியது.

அதைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற பழைய முதலாளியினை நிற்க வைத்து விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்குவதுபோல் கவிதையொன்று தீட்டுகிறார்.

“கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள் கண் மூடி மக்களது நிலத்தையெல்லாம் கொத்திக் கொண்டேப்ப மிட்டு வந்ததாலே கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்?”

என்று உலகப்பன் கைபிசைந்து நிற்கிறான், அந்த மன்றத்தில்! பாரதிதாசனின் பகுத்தறிவு மன்றம், என்ன கட்டளையிடுகிறது தெரியுமா?

“இந்நிலையில் இருப்பதனால் உலகப்பா நீ! புதுக் கணக்குப் போட்டுவிடு. பொருளை எல்லாம் பொதுவாக எல்லார்க்கும் நீ குத்தகை செய்!”

இதுவே, பகுத்தறிவு மன்றத்தின் ஆணை! எனவே சமுதாயத் துறை, பொருளாதாரத் துறை, அரசியல் துறை அனைத்திலுமே பகுத்தறிவு நீரோடை தங்குதடையின்றிப் பாய்ந்தோடிட வேண்டும். அப்போதுதான் நாடு வாழும்! நலிவு தீரும்! பண்பு சிறக்கும்! பளிங்கெனத் தெளிவு பிறக்கும்!

“பாலைநிலத்தில் பகுத்தறிவுப் பேரருவி எங்கே பாய்ந்திடுமோ”

எனக் குறிக்கும் வங்கத்துக் கவிஞர்,

“எங்கே மனத்தில் அச்சமில்லையோ, எங்கே தலையானது நிமிர்ந்து நின்றிடுமோ,

எனச் சுட்டிக்காட்டுவதின் சரியான பொருள் உனக்குப் புரிகிறதல்லவா? தலையானது நிமிர்ந்து நிற்க வேண்டும் - அதுதானே உடன்பிறப்பே! “தன்மானம், சுயமரியாதை” என்ற சொற்களால் சுட்டிக்காட்டப்படுகிறது! தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் - மனத்தில் அச்சம் கூடாது என்றால், அடக்கமின்றி வணங்காமுடியாக வாழவேண்டும் என்றோ - “அஞ்சுவது அஞ்சாமை பேதமை” என்ற குறளை மறந்துவிட வேண்டும் என்றோ - யாரும் கூற மாட்டார்கள்! சோதனைதான் வாழ்வுக்குச் சுவையளிப்பதென்ற, பண்டித நேரு அவர்களின் பொன் மொழிக்கேற்ப - தலையானது நிமிர்ந்து நிற்க வேண்டும், மனத்தில் அச்சம் அகற்றிட வேண்டும்.

அச்சமும், தலையிறக்கமும் கொண்ட சமுதாயம் அடிமைப் படுகுழியில்தானே கிடக்க நேரிட்டது! ஏன் என்று கேட்க அச்சம்! எப்படி என்று கேட்பதற்குத் தலை நிமிர முடியாத கொடுமை! ஆண்டை, ஆண்டவனின் படைப்பு! அடிமைகளோ, புழுக்களின் மறுபதிப்பு! இந்த நிலை, உலக முழுவதும் இருந்ததே! - இன்று பெரும்பாலும் மாறி விட்டதே! எவ்வாறு?

தாகூர் சொல்கிறாரே, “தலைநிமிர்ந்து நில் என்று - அந்தத் தைரியம் பிறந்ததாலே!

“மனிதரில் நீயுமோர் மனிதன்! மண் அன்று! இமை திற!

இவ்வாறு மனத்தின் அச்சம் போக்கப்பட்டதாலே!

பகுத்தறிவு அருவியாகப் பாய்கிறது! ஏன் என்ற தெம்பான கேள்வி எழுகிறது! அச்சம் தொலைகிறது! தலை நிமிர்கிறது! அதன்பிறகு உலகைச் சீர்குலைக்கும் குறுகிய மதில்கள் எழுப்பப் படுவதில்லை! தாகூரின் அந்தப் பரந்த உள்ளத்தைத் தான் பாரதிதாசனாரும் தனக்கே உரிய நடையில் நமக்குத் தெளிவாக்குகிறார்.

“தூயஉள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம் தொல்லுலக மக்களெலாம் ‘ஒன்றே என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே சண்டையில்லை! தன்னலந்தான் தீர்ந்ததாலே!

தன்னலம், முனை முறிந்து தேய்ந்து போவதாலே சண்டை சச்சரவே இல்லை என்று புரட்சிக் கவிஞர் புன்னகை பூக்கிறார்.

“தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்யம் இவை உண்டு, தானுண்டென்பான்.

சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன் தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்“

என்றல்லவா தன்னலக்காரனுக்குக் கவிஞர் பட்டம் சூட்டுகிறார்.

“எங்கே பரந்த சிந்தனை செயல்களை நாடி உன் துணை வலிமையால் இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடுமோ,

என்று கவிஞர் தாகூர், பிரார்த்தனை செய்வது, “தந்தையே! என்று இறைவனை நோக்கி!

“உன் துணை வலிமை என்ற சொற்றொடருக்கு நான் பொருள் கொள்வது, உடன்பிறப்பாகிய உன் துணை வலிமையைத்தான்!

‘நானிருக்க பயமேன் என்று என் நாக்கு முழங்கியதில்லை. “நீ இருக்க பயமேன் என்றுதான் என் இதயம் நிம்மதியாகத் துடித்துக் கொண்டிருக்கிறது.

எங்கே அச்சமற்றதும்
தலை நிமிர்ந்ததுமான
நிலையிருக்கிறதோ –
அங்கே நீயிருக்கிறாய்;
உன் துணையுடன் பரந்த சிந்தனை
செயல்களை நாடி
இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடும்!

அன்புள்ள,

மு.க.

11-10-2002

2825. எழுகிறது இளைஞர் அணி!
வழங்குகிறேன் வாழ்த்து!

உடன்பிறப்பே,

விவரம் புரியாமல் விதியை நொந்து கொண்டு விழிநீர் பெருக்கிடும் ஏழை எளியோர் வாழ்வில், வேதனைகள் நாள்தோறும் பெருகிக் கொண்டிருக்கின்றன.

ஏழை எளியோர் எனில் எட்டடிக் குச்சுக்குள்ளே, எரிக்கும் வெயில் முழுதும் தலையிலே, கொட்டும் மழை முழுதும் குடிசைக்குள்ளே என்ற நிலையிலே உள்ள நிர்க்கதியாளர்கள் மட்டுமல்ல! நாளையோ நாளை மறுநாளோ, நடுத்தெருவுக்கு வந்துவிடக் கூடிய அளவுக்கு நலிவுற்றுக் கொண்டே வருகிற நடுத்தர வர்க்கத்தினரையும் சேர்த்துத்தான் கூற வேண்டியிருக்கிறது.

அதாவது, ஏற்கனவே ஏழையாக இருப்போர் - அவர்களின் பட்டியலிலே விரைவில் வைக்கப்பட இருக்கும் வருங்கால ஏழை எளியோர்களாம் நடுத்தர வர்க்கத்தினர் - என்ற இரண்டு பிரிவினர் இருப்பினும், இரு பிரிவினரும் ஒட்டுமொத்தமாக இன்றுள்ள அ.தி.மு.க. ஆட்சியில் ஏழை எளியோர் எனும் ஒரே பட்டியலில்தான் இடம் பெற்றுள்ளனர்.

இந்திர லோகத்தையே இங்கு உருவாக்குவோம்! சந்திர சூரியர் திசைகளையே மாற்றி அமைப்போம்! போட்ட ஓட்டுக்கு நீங்கள் கேட்ட வரமெல்லாம் கிடைத்தே தீரும்! என்றெல்லாம் ஏறத்தாழ இரண்டாண்டு காலமாக வாய்ப்பந்தலுக்குக் குறைவில்லை.

ஆனால், உண்மைப் பந்தலுக்கான கால் நடுவதற்கு ஒரு குழி கூடத் தோண்டப்படவில்லை.

மாறாக, தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு மட்டும் குழிகள் தோண்டப்பட்டு,

உழவர் சந்தைகளை மூடி, அண்ணா மறு மலர்ச்சித் திட்டத்தை நிறுத்தி, பெரியார் நினைவு சமத்துவபுர திட்டத்திற்கு வேட்டு

வைத்து, ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு நிதி உதவிக்கான கதவுகளை இழுத்துச்சாத்தி, குழந்தைகளுக்கான சத்துணவுடன் கழக ஆட்சியில் நிறைவேற்றிய முட்டை வழங்கும் திட்டத்தை முற்றாக முடக்கிப் போட்டு, 13,000 மக்கள் நல அலுவலர்களையும், 10,000 சாலைப் பணியாளர்களையும் சீட்டுக்கிழித்து வீட்டுக்கு அனுப்பி விட்டு, கோரிக்கை வைத்துத் தொழிலாளி குரல் எழுப்ப முடியாமல் அவன் குரல்வளையை அமுக்கித் தடைச் சட்டம் அறிவித்து, அரசு அலுவலர், ஆசிரியர்கள் அட்டியின்றிப் பெற்றுக் கொண்டிருந்த சலுகைகளைச் சாய்த்து, உரிமைகளை மாய்த்து, இதோ - அதோ என்று ஏய்த்து, ஒரு முனை வரியைப் பல முனை வரியாக மாற்றி, வணிகர்களின் முதுகெலும்பை முறித்து, பொங்கலுக்கு இலவச வேட்டியாவது சேலையாவது, பொழுது தோறும் இலவச மின்சாரமாவது, விவசாயிகளின் கோரிக்கைகளைப் போடுவதற் கென்றே பெரிய குப்பைத் தொட்டி பார் என்று காட்டி, ஆசிரியரா - மாணவரா - அள்ளிப் போடு சிறைச்சாலையில் என்று வாட்டி - இத்தனையும் போதாதென்று நியாய விலைக் கடை அரிசி விலையையும் கிலோ ஆறு ரூபாய் அளவுக்கு ஆக்கி, சாதாரண சாமானிய மக்களின் ரத்தத்தை சக்கையாகப் பிழிகிற கொடுமை நடத்தப்படுவதும், இந்த அரசுக்கு மன நிறைவு தராமையினால், இலவச மின்சாரத்தையும் நிறுத்தி, விவசாயிகள் வயிற்றில் மண்ணை வாரிப் போடுகிற கொடுமைக்கும் பச்சைக் கொடியைப் பதுங்கிப் பதுங்கிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கிடப்பதெல்லாம் கிடக்கட்டும் - கிழவியைத் தூக்கி மனையில் வை என்று இந்துத்துவாவுக்கு பாதுகாப்புக் கேடயம் என்ற பெயரால், சிறுபான்மையோர் மீது சக்காராயுதத்தை பிரயோகிப்பது போல் மத மாற்றத் தடைச் சட்டம் வேறு! அதுவும் அவசரச் சட்டமாக! ஆம், அபஸ்வரச் சட்டமாக அறிவித்து அதனை நிறைவேற்றியே தீருவோம் என நெற்றிக்கண் திறந்து காட்டுகிறார்கள்.

நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சுட்டு விரல் நீட்டிக் காட்டினான் நக்கீரப் புலவன் என்று நீதி நியாயத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசுவோர் உள்ள தமிழகத்தில்தான், அந்த மாநிலத்தைப் பார்! இந்த மாநிலத்தைப் பார்! அங்கெல்லாம் மத மாற்றத் தடைச் சட்டம் பார்! என்று சினிமா காட்டிக் கொண்டு, இந்தியாவில் 30க்கு மேற்பட்ட மாநிலங்களில் இந்தத் தடைச்

சட்டப் பீடை இல்லை என்பதை மறைத்துக் கொண்டு, இந்து மதத்தின் மகிமைக்குக் கொடி நாட்டப் போகிறார்களாம்!

இந்தச் சட்டத்தை ஆதரிப்போர் யார்? அந்தப் பட்டியலைப் பார்த்தாலே, இதன் உள்நோக்கம் எளிதில் புரியும்!

காவிரி நீர் தர முடியாது என்று கர்ச்சித்த கர்நாடகத்தின் பிடிவாதப் போக்கை, இந்த அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் கவசமாக அணிந்து கொண்டு -

தமிழ் நாட்டு மக்கள் மீது மத வெறிச் சட்டம் என்ற மதயானையை ஏவி விடுகிறது - வரி உயர்வு - விலைவாசி உயர்வு - உரிமை பறிப்பு - போன்ற ஓநாய்களைப் பாய விடுகிறது.

இத்தனையும் தனித் தனியாகக் குறிப்பிட்டு விவரித்தாலும்கூட, விரிக்கிற் பெருகும் என்ற நிலையில்தான் - இது மக்கள் விரோத அரசு என ஒரே வரியில் குறிப்பிட்டு அடையாளம் காட்டி, தி.மு. கழகம், அண்மையில் கூட்டிய நிர்வாகக் குழுவின் தீர்மானங்களின் பட்டியல் ஒன்றை வெளியிட்டது. விரைவில் களம் காண்போம் என்றும் அறிவித்தது.

அதற்கிடையே இதோ நாங்கள் இருக்கிறோம், இளைஞர் அணியினர் - முதல் களம் இறங்குவதற்கு என அனுமதி கேட்டு - வரும் 21ந்தேதியன்று மறியல் அறப்போரில் குதிக்கிறார்கள்.

இளைஞர் அணிச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின் தலைமையில் - தமிழக முழுவதுமுள்ள இளைஞர் அணியின் நிர்வாகிகள், ஆங்காங்குள்ள மண்டல, மாவட்டக் கழகங்களின் வழிகாட்டுதலைப் பெற்று உரிமை முழக்கமிட இருக்கிறார்கள்; ஓரணியில் நின்று ஒற்றுமை உணர்வுடன்!

நடப்பது மக்கள் விரோத ஆட்சி என்பதையும்,
முழுமையான போலீஸ் ராஜ்யம் என்பதையும்,

ஆளுங்கட்சியினர்க்கும் அவர்தம் அடிமைகளுக்கும் ஒரு நீதி - எதிர்க்கட்சியினர்க்கு ஒரு நீதி என நடைபெறும் பாரபட்சமான பரிபாலனம் என்பதையும் -

உழவர் கண்ணீரை,

வணிகர் வாட்டத்தை, தொழிலாளர் துயரத்தை,
அலுவலர் அவதியை,
ஆசிரியர் அல்லலை,
மாணவர் துன்பத்தை

அலட்சியப்படுத்தும் ஆணவ அரசு என்பதையும்,

இளைஞர் அணியினர் தமது மறியல் அறப்போர் வாயிலாக எடுத்துக்காட்டி, மக்கள் சக்தியைத் திரட்டுகிறார்கள்.

மதவெறி அவசரச் சட்டத்துக்கு எதிராக!

பொடா சட்டத்தை அரசியல் காரணத்திற்காக பயன்படுத்துவதற்கு எதிராக!

விலைவாசி உயர்வுக்கு எதிராக!

ரேசன் அரிசி விலை இருமடங்கானதற்கு எதிராக!

ரெயில் கட்டணத்தைவிட பஸ் கட்டணம் அதிகம்

என்பதற்கு எதிராக!

அதிர்ச்சியூட்டும் மின் கட்டணத்திற்கு எதிராக!

கைத்தறியாளர்களைக் காப்பாற்றத் தவறியதற்கு
எதிராக!

கொலை கொள்ளைகள் நாள்தோறும் நடைபெற்று

சட்டம் ஒழுங்கு சீர்குலைவதற்கு எதிராக!

கொள்முதலையும் நிறுத்தி விவசாயிகளை

வதைப்பதற்கு எதிராக!

பணியில் இருந்தோரை பல்லாயிரவரை

வீட்டுக்கு அனுப்பி அவர்களைப் பட்டினி

போட்டுள்ள கொடுமைக்கு எதிராக!

இளைஞர் அணியின் அறப்போர்க் கொடி உயர்கிறது - அமைதி காத்திட அண்ணா வழியில் அணி வகுப்பீர் - தியாகச் சுடர்களாம், இளைஞரணித் தீரர்களின் ஆற்றலில் - அவர்தம் கட்டுப்பாட்டு உணர்வில் - கடமை ஆர்வத்தில் - கண்ணியம் போற்றும் பண்பாட்டில் எனக்கு நம்பிக்கையுண்டு.

மறியல் எனில் மடக்கிப் போடுவர் சிறையில்! சிறை என் இளைய தம்பிகளுக்குப் புதிய இடமல்ல! புதிய தம்பிகளுக்கும்கூட இனி பழக்கமாகி விடக் கூடிய புனித பூமிதான்!

புலிப் போத்துகளெனப் புறப்படும் அந்தப் புறநானூற்று வீரர்களின் அமைதிப்படை வரிசைக்கு என் இனிய வாழ்த்துகள்!

இத்திங்கள் 21ஆம் நாள்! - யார் யார் எங்கெங்கு? விபரங்களை இளைஞர் அணிச் செயலாளர் அறிவித்துள்ளார். தொடர்ந்து விபரங்கள், அறிக்கைகளாக வெளியிடப்படும்.

மக்கள் விரோத ஆட்சிக்குப் பாடம் புகட்ட;
நல்வழியில் அரசு நடத்துக என அறிவுரை கூறிட;
கிளம்பிற்றுகாண் தமிழச் சிங்கக் கூட்டம் என
எழுகிறது இளைஞர் அணி! வழங்குகிறேன் வாழ்த்து!

அன்புள்ள,

மு.க.

15-10-2002

2826. இதயமா? வயிறா? எந்தப் பக்கம் இளைஞர்கள்?

1976ஆம் ஆண்டு எமர்ஜன்சி மிசாக் கொடுமைக்கு நாடும், நமது கழகமும் ஆட்பட்டிருந்த அல்லல் நிறைந்த காலத்தில், தணிக்கை அதிகாரத்திற்கு இடைக்காலத் தடையாணை பெற்று ஓரிரு வாரங்கள் முரசொலியில் கடிதங்கள் எழுதிய போது, தணிக்கைக்குத் தப்பிய கடிதங்களில் இதுவும் ஒன்று! அராஜக ஆட்சியை எதிர்த்து இளைஞர் அணியின் அறப்போர்க்கொடி உயர்ந்திருக்கும் இந்நாளில் இக்கடிதம் இன்றுள்ள இளைஞர்கள், எதிர்காலச் சூளுரை மேற்கொள்ள உதவுமெனக் கருதி நினைவூட்டுகிறேன் - மு.க.

உடன்பிறப்பே,

வயிறு தனக்காக அழுகிறது. இதயம் மற்றவர்களுக்காக உருகுகிறது. இந்தக் கருத்தை மையமாக வைத்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

வயிற்றுக்கு மேலே வைத்தேன் இதயத்தை? வயிற்றை விட இதயம் மேலான தென்பதனால்! வயிற்றுக்கும் நெஞ்சுக்கும் நடக்கின்ற போரில் வயிறேன் வெல்கிறது? இதயமேன் தோற்கிறது? படைப்பின் மகத்துவத்தைப் பகுத்தெண்ணிப் பாராமல் வயிறே பெரிதென்று வாழ்கின்றோர் பெருகியதால்!

இந்தக் கவிதை எழுதியவர் ஒரு இளைஞர்தான்! வாரிச் சீவிய முடியும், வசீகர விழியும், வரைந்த நேர் கோடு போல் புது மீசையும் கொண்டவர்! குருவிக் கரம்பை சண்முகம் என்பது இந்தக் கவிஞரின் பெயர். பாரதியார், பாரதிதாசனுக்குப் பிறகு வளர்ந்து வரும் கவிஞர் பரம்பரையில் இவருக்கோர் சிறப்பான இட முண்டு. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர். இவரை அதிகம் பாராட்டப் பயமாக இருக்கிறது! எனக்காக அல்ல! அவருக்காகத்தான்!

அவரை விட்டு விட்டு அவரது கவிதை வரிகளைப் பார்ப்போம்.

வயிறேன் வெல்கிறது? இதயமேன் தோற்கிறது?

இப்படிக் கேள்வி எழுப்புகிற நண்பர், வயிறே பெரிதென்று வாழ்கின்றோர் பெருகியதால்! என்று விடையையும் அளித்துக் கவிதையை முடிக்கிறார். வயிறே பெரிதென்று வாழ்கின்றவர்கள், படைப்பின் மகத்துவத்தைப் பகுத்தெண்ணிப் பார்க்கவில்லை என்பது அவரது குற்றச்சாட்டு! படைப்பின் மகத்துவம் என்ன? வயிறு கீழே இருக்கிறது! வயிற்றை விட இதயம் மேலானது என்பதை இந்தப் படைப்பின் மகத்துவம் விளக்குகிறது என்பது கவிதையின் தொடக்கம்.

பசித் தீயினால் பற்றியெரிந்த வயிறுகளுக்கும், பளிங்கு மாளிகையில் பாவையர் அணைப்பில் சுகங் கண்ட மன்னர்களின் இதயங்களுக்கும் நடைபெற்ற போராட்டங்களில், இறுதியில் வயிற்றுப் பட்டாளங்கள் தான் வெற்றி பெற்றிருக்கின்றன. பிரஞ்சு நாட்டு லூயி மன்னனின் பாஸ்டிலி சிறைக் கொடுமைகளையும், ரஷ்ய நாட்டு ஜார் மன்னனின் உம் என்றால் சிறைவாசம் - ஏன்? என்றால் வன வாசம்! என்ற வெறியாட்டங்களையும் புறங்கண்டு புதிய வரலாறுகளைப் படைத்த தொழிலாளர்களை உசுப்பி விட்டது, வறுமை! வறுமை! வேதனை! வேதனை! பசி! பசி!

அதாவது ஆணவங்கொண்ட இதயத்துக்கும், அல்லற்பட்டு ஆற்றாத அளவுக்கு மூண்ட, பசிக் கொடுமைக்கும் இடையில் எழுந்த போராட்டத்தில் வயிறு வென்றது! அதுதான் நியாயமும்கூட!

கவிஞர் குறிப்பிடுவது அந்தப் போராட்டத்தையல்ல! பல மனிதர்களுடைய வயிற்றுக்கும், சில மனிதர்களுடைய இதயத்துக்கும் நடக்கிற போராட்டத்தில் நல்லோர் அனுதாபம் வயிற்றின் பக்கம்தான்!

ஆனால், ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும் இதயம் வெல்வது சரியா? அல்லது வயிறு வெல்வது சரியா? என்பதுதான் பிரச்சினை!

வயிறா? இதயமா? என்ற கேள்வியைக் கேட்டு வரலாற்று ஏடுகளைப் புரட்டும்போது, சோவியத் ரஷ்யா, பிரான்சு போன்ற நாடுகள் வயிற்றின் வெற்றியை வெளிப்படுத்துகின்றன!

ஆனால்! அந்த நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளும் அடங்கிய இந்த உலகில், ஒவ்வொரு தனி மனிதனும் தனது இதயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறானா? அல்லது வயிற்றுக்கா?

இரண்டில் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

வயிறா? இதயமா? என்ற கேள்வி, தனி மனிதனின் வாழ்வில் எழும்போது இரண்டில் எந்த ஒன்றை அவன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

நீ யாரை இதுவரை நேசித்து வந்தாயோ, அவனைக் காட்டிக் கொடு! அதற்குப் பரிசு இதோ பார்! இப்படி ஒரு கவர்ச்சியான ஆசை காட்டப்படும் போது தனி மனிதனுடைய வாழ்வில் பிரச்சினை உருவாகிறது!

வயிறா? இதயமா?

இந்தக் கேள்விக்கு அவன் விடை காண வேண்டியவனாகிறான்.

நீ, அவனை இனியும் நேசித்தால், அவனுடைய அன்புக்குரிய தோழனாக இருந்தால் - ஏன்? அவனைப் பற்றிப் பேசினால் கூட! இல்லை! இல்லை! நினைத்தால்கூட! உனக்குக் கேடு வரும்! வாழ்வு கெடும்! வளம் இழப்பாய்!

இப்படி ஒரு அச்சுறுத்தல் கிளம்புகிறதோ இல்லையோ - அவனே இதுபோல ஒரு கனவு காணுகிறான் என்று வைத்துக் கொள்வோம்! அப்போதும் இதே பிரச்சினைதான்!

வயிறா? இதயமா?

இங்கிலாந்து மன்னரைப் பற்றிப் புகழ்ந்து பேசு! இங்கிருக்கும் காந்தியடிகளைப் பற்றி வாய் திறக்காதே! திறந்தால், சிறைக்கதவு திறக்கும்!

வெள்ளையர் விடுத்த ஆணைகள் இடியென முழங்கியபோது, இந்திய விடுதலை வீரர்களின், இதயங்களும் வயிறுகளும் வாதிட்டுக் கொண்டன! வயிறுகள் பின்வாங்கின! இதயங்கள் வென்றன!

உலகம் தோன்றி, மனிதன் தோன்றிய காலத்திலிருந்து வயிற்றுக்கும் இதயத்துக்கும் போராட்டம் நடந்து கொண்டு தானிருக்கிறது.

மீண்டும் சொல்கிறேன்; வயிறுகள் பல, ஒரு அணியிலும், இதயங்கள் சில, ஒரு அணியிலும் நின்று நடைபெறுகிற வர்க்கப் போராட்டங்களை நான் விவரிக்க இந்தக் கடிதம் எழுதவில்லை.

இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் அந்த வர்க்கப் போராட்டத்தை, முற்போக்கான திட்டங்களின் மூலம் தவிர்த்து - நிலத் திமிங்கலங்கள், பூர்ஷுவாக்கள், ஆலை அரசர்கள் - முதலியவர்களிடமிருந்து பாட்டாளிச் சமுதாயத்தைக் காப்பாற்றி விடுவிக்கவும், அவர்தம் வாழ்வில் ஒளியேற்றவும், ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை நிறுவிடவும் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எடுக்கின்ற முயற்சிகளைக் கழகம் ஆதரித்து வந்திருக்கிறது. தொடர்ந்து ஆதரிக்கும்!

எனவே, வர்க்கப் போராட்டத்தில் வயிற்றின் போர்க் கொடியை அலட்சியப்படுத்துகிற இதயங்களுக்கு நமது ஆதரவு இல்லை.

இங்கே, கவிஞரும் நானும் வாதாடுவது அந்த இதயத்தைப் பற்றியல்ல!

தனி மனிதனின் வாழ்வில் பிரச்சினை உருவாகிறது! வயிறும் இதயமும் விவாதிக்கின்றன!

வயிறு:- ஏ, இதயமே! ஏன் வீணாக அலட்டிக் கொள்கிறாய்? நீ எடுக்கும் அவசர முடிவுகளால் நம்மைச் சுமக்கும் இந்த மனிதனின் கதி என்ன ஆகும் என்று யோசித்துப் பார்!

இதயம்:- வயிறே! எந்த முடிவையும் நான் அவசர மாக எடுக்கமாட்டேன்! நம்மைத் தூக்கிச் சுமக்கிற மனிதனின் வாழ்க்கையில் எனக்கு மிகுந்த அக்கறை யுண்டு. ஒன்றை மறந்து விடாதே! என்றைக்கோ ஒரு நாள் இந்த மனிதன் சாகப் போகிறான். அவனோடு சேர்ந்து நாமும் மண்ணாகவோ, சாம்பலாகவோ ஆகப் போகிறோம்! அப்படிச் சாகிறவனை அவன் செத்த பிறகும் சரித்திரத்தில் வாழ வைக்க வேண்டுமென்று

நான் விரும்புகிறேன். ஆனால் நீயோ, அவன் சாகிற வரையில் சந்தோஷமாக வாழ்ந்தால் போது மென்கிறாய்!

வயிறு:- இதயமே! மனித வாழ்க்கை என்பது ஒரு முறை முடிந்து விட்டால் மறுபடியும் கிடைக்கக் கூடியதா? கார் டயரில் காற்றுப் போய் விட்டால், மறுபடியும் காற்று அடித்துக் கொள்வது போல, செத்துவிட்ட மனிதனுக்கு மூச்சைத் திணித்து எழுப்பி உலவ விட முடியாது! எனவே கிடைத்த வாழ்வை சுகமாக அனுபவிக்க வேண்டும். அவன் மட்டுமல்ல, அவன் பெண்டு பிள்ளை, பேரன், பேத்தி, வரப் போகிற சந்ததி அனைத்துக்கும் சேர்த்து வைத்து விட்டுப் போக வேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது! அதனால் அவனை எந்தத் தொல்லையிலும் இழுத்து விடாதே!

இதயம்:- அவன் சந்ததியை எல்லோரும் வாழ்த்த வேண்டாமா? புகழ வேண்டாமா?

வயிறு :- அதை, அவனிருந்து பார்த்துக் கொண்டா இருக்கப் போகிறான்?

இதயம்:- இப்படி எண்ணியிருந்தால் திலகர், காந்தி, நேரு முதல் திருப்பூர் குமரன் வரையில் நிலைத்து விட்ட பெயர்கள் நாட்டில் இருக்க முடியாதே?

வயிறு:- பைத்தியக்கார இதயமே! பெயரும் புகழும் சாப்பாடு போடுமா? சந்தோஷம் கொடுக்குமா? தேனாபிஷேகத்தை விட்டு விட்டு எவனாவது தீ மிதிக்கப் போவானா?

இதயம்:- அப்படியானால், மனிதனை ஒரு இயந்திரம் போல் இயங்கச் சொல்கிறாய்! யாருக்காகவும் உருக வேண்டாம் என்கிறாய்! எதற்காகவும் கவலைப்பட வேண்டாம் என்கிறாய் இல்லையா?

வயிறு:- இருக்கும்வரையில் இன்பமாக வாழச் சொல்கிறேன். மனிதன் தனக்காகவே கவலைப்பட வேண்டுமென்கிறேன்.

உடன்பிறப்பே,

இந்த விவாதத்தில் வயிறுகள் ஜெயிப்பதும் உண்டு! இதயங்கள் ஜெயிப்பதும் உண்டு! அதிகமாக வயிறுகள்தான் ஜெயிக்கின்றன என்பது கவிஞரின் கவலை. நான் கூட இந்தக் கவிஞரோடு சேர்ந்து இதயத்துக்கு மாலை சூட்டவே விரும்புகிறேன். என்னைக் கவர்ந்த இன்னொரு கவிஞன் இருக்கின்றான்! பொன்னாம் தமிழ் எடுத்து வளமான கருத்துகளைத் தொகுத்தளிப்பவன். ஆம், பொன்னிவளவன் - இப்போது மிசாவில் சிறையிலிருப்பவன்! அவன் இதயம் வெல்லும் என்பதைப் பலமுறை செயலில் காட்டி, என் இதயத்தில் இடம் பிடித்துக் கொண்டவன். எல்லோரும் அவனாக முடியுமா? அவனாகி விட்டால், பிறகு இதயமேன் தோற்கப் போகிறது?

அன்புள்ள,

மு.க.

16-10-2002

2827. இளைஞன் குரல்
அன்று போலவே என்றும் ஒலித்திட!

உடன்பிறப்பே,

அந்த இளைஞனுக்கு அப்போதுதான் வயது 25 நிறைவுற்று 26ஆம் அகவையில் அடி வைத்த காலம் - அந்த இளைஞனை கோவில்பட்டியில் 1950ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. மாவட்ட முதல் மாநாட்டுக்குத் தலைமை வகிக்க அண்ணா அவர்களும், மாவட்டக் கழகமும் பணித்த நிலையில் மாநாட்டுக்குத் தலைமையேற்ற அந்த இளைஞன், தனது தலைமையுரையை ஓர் அறப்போர் உரையாக மட்டுமல்லாமல், தி.மு. கழகத்தின் அமைப்பு முறைகளும் எப்படியெல்லாம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்று ஆக்கபூர்வமான கருத்துகளை வழங்கும் உரையாகவும் ஆற்றியதை, சென்னை முன்னேற்றப் பண்ணை எனும் பதிப்பகத்தினர் இரண்டணா விலையுள்ள ஒரு சிறு நூலாக வெளியிட்டனர்.

அடக்குமுறை - அராஜக - மக்கள் விரோத ஆட்சியை எதிர்த்து மறியல் அறப்போரில் இளைஞர் அணியினர் வரும் 21ஆம் நாள் ஈடுபடும் இந்தக்கால கட்டத்தில், கோவில்பட்டி மாநாட்டில் தலைமையேற்று அந்த இளைஞன் பேசியது என்றைக்கும் பயன்படக் கூடும் என்பதற்காக அந்த உரை இப்போது இந்தக் கடிதத்துடன் இணைத்து வெளியிடப்படுகிறது.

உரையை வெளியிடுவதற்கான அனுமதியை அந்த இளைஞனிடம் பெற வேண்டிய அவசியமில்லை! காரணம் அந்த இளைஞனே நான்தான் என்பதால்!

இதோ 26, 27-8-1950 ஆகிய இரு நாட்களில் கோவில்பட்டியில் நடைபெற்ற நெல்லை மாவட்ட தி.மு.க. முதல் மாநாட்டில் என் தலைமையுரை வருமாறு:-

தோழர்களே! தோழியர்களே!

கோவில்பட்டியில் கூடும் இம்மாநாட்டில் நான் தலைமை வகிப்பதில் குறிப்பிடத்தக்க அம்சமொன்றுள்ளது. சென்ற ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாவில் கோவில்பட்டியில் நானேதான் கலந்து கொண்டேன். இப்போது அதே நகரில் மாநாட்டிலும் கலந்து கொள்கிறேன் என்பதை நினைக்கும்போது மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறேன். என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதன் நோக்கம் இயக்கம் இளைஞர்களின் சொத்து - உழைப்பாளிகள் அமைத்த மாளிகை - அதில் உல்லாசபுரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும் - நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துகளை நடமாட விடுபவர்களுக்கும், எடுத்துக்காட்டத்தான் என்பது என் எண்ணம்.

தலைமை வகிப்பது என்பது கட்சியிலே ஒரு நட்சத்திரத்தை உண்டாக்குவது என்பதல்ல. அப்படி தலைமை வகிப்பவர்கள் கருதினாலும் - அல்லது தலைமை வகிப்பவரைப் பற்றிக் கருதினாலும் அது பெரும் தவறு! வரப்போகும் போராட்டங்களிலே இதுவரை கழகத்தின் சார்பாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் தலைவர்கள் வரிசைக் கிரமமாக களத்திலே நிறுத்தப்பட வேண்டும். அந்தந்த மாவட்ட மாநாட்டுத் தலைவர்களின் சார்பாக நான் தலைமைக் கழகத்தை கேட்டுக் கொள்வதெல்லாம் எங்களை எதிர்காலப் போராட்டத்தின் தளபதிகளாக்குங்கள் என்பதுதான்! மார்பிலே வேல்தாங்கி மரணத்தை அணைப்போமே தவிர, மாற்றாரிடம் சரண்புக மாட்டோம். மாசற்றக் கொள்கைகளை எதிரிகட்குக் காணிக்கையாக்க மாட்டோம். இந்த உறுதியோடுதான் இன்றைய மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக - ஜஸ்டிஸ் கட்சியாக - திராவிடர் கழகமாக - திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வளர்ந்திருக்கிறோம். ஒவ்வொரு மாறுதலின்போதும் ஒவ்வொரு புதுமை ஏற்பட்டு வந்திருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளைத் தேயவிடாமல், சுயநலத்திற்காக இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தொண்டுபுரிந்த சுத்த வீரர்கள்தான் இன்று அணி வகுத்து நிற்கிறோம். ஆனால் இன்றைய மாறுதல் - அதாவது சென்ற ஆண்டு நமது இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதல் நாமாகத் தேடிக் கொண்டதல்ல. நமது தலைவர் தந்தை பெரியார் கட்டாயப்படுத்தித் திணித்த மாறுதலாகும்.

செப்டம்பர் 17....நாம் மறக்க முடியாத நாள் பெரியார் பிறந்த நாள். பெரியார் பிறந்த நாளும் - நாம் அவரை விட்டுப் பிரிந்த நாளும் அதுதான்! சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் செயலில் இறங்கப் புறப்பட்ட நாள். அந்நாள் தோன்றி ஒரு ஆண்டு நிறையப்போகிறது. இந்த ஒரு ஆண்டில் நாம் போட்ட திட்டங்கள் எத்தனை - நாம் புரிந்த செயல்கள் எத்தனை - நாம் அடைந்த வெற்றிகள் எத்தனை - நாம் செய்யாமல் விட்டு விட்ட காரியங்கள் எத்தனை - என்பதை நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

பிரச்சாரக் குழு அமைத்தோம். சட்ட திட்டக் குழு அமைத்தோம். செயற்குழு அமைத்தோம். அமைப்புக் குழு அமைத்தோம், பொதுக்குழு அமைத்தோம். இந்த அமைப்புகள் எப்படியெப்படி வேலை செய்திருக்கின்றன என்பதை வரப்போகும் மாகாண மாநாட்டிலே நினைக்கத்தான் போகிறோம். நினைப்பின் விளைவு முழு நிம்மதியாக இருக்காது. ஏனெனில், நாம் செய்யாமல் விட்ட பணிகள் நிரம்ப உண்டு! குறை சொல்லப் போகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். இயக்கம் குழந்தையென்பதும் - அதன் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல குள்ள நரிகள் சமயம் பார்த்திருப்பதும் யாரும் அறியாததல்ல. குழந்தை - ஓராண்டுக் குழந்தை - பேசிப் பாட வேண்டாம். ஆடியோட வேண்டாம். பாலாவது சாப்பிட்டு உடலைப் பலமாக்கிக் கொள்ள வேண்டாமா என்பதுதான் கவலை. குழந்தைக்குப் பாலுண்ண ஆசைதான் - கொடுப்பவர்கள் எங்கே? என்று ஒரு குரல் கிளம்பலாம். அந்தத் தாய் வேலையைச் செய்ய வேண்டியவர்கள் இயக்கத்தின் முன்னணியினராக இருப்பவர்கள் மட்டுமல்ல - இயக்கத்தின் தொண்டர்களுங்கூடத்தான். ஒரே ஆண்டில் ஐந்நூறு கிளைகளை நிறுவியிருக்கிறோம். எந்த இயக்கமும் செய்து காட்ட முடியாத அரும்பெரும் செயல்! ஐந்நூறு கிளைகள். ஐம்பதுக்கு மேற்பட்ட பிரச்சாரக் காளையர்கள். அன்றாடம் கூட்டங்கள். மாவட்டந்தோறும் மாநாடுகள். இது தித்திப்பான செய்திதான். ஆனால், பூரண திருப்தியளிக்கக் கூடியதல்ல.

பல ஆண்டுகளாக இதைத்தான் செய்து பழக்கப் பட்டிருக்கிறோம். மேடைகள் அமைப்பதும் - பேச்சாளர்களை அழைத்து மேக மண்டலமதிரப் பேசச் செய்வதும் - அதன் விளைவாகப் பெரும் பகுதியினரை நம்மவராக்குவதும் தேவையற்ற வேலையென்று கூறவில்லை. நம் கொள்கையைக்

கீதமாக்கிக் கொண்டவர்கள் - நம் பாதையில் நடந்து வரத் துணிந்தவர்கள் - நாலா பக்கங்களிலும் சிதறிக் கிடக்கிறார்கள். அவர்களை இணைக்க முடியவில்லை. இணைக்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப் படவில்லை.

ஐந்நூறு கிளைகள். அந்தக் கிளைகளுக்கும் மத்ய கழகத்திற்கும் தொடர்பு அறுந்துதான் போயிருக்கிறது. ஒரு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் - அந்தத் திட்டம் தீட்டப்பட்ட பிறகு . . மத்யக் கழகத்திலிருந்து மாவட்டக் கழகத்திற்குச் சென்று, மாவட்டக் கழகம், கிளைக் கழகங்களுக்கு அறிவித்து கிளைக்கழகம், அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்று ஏற்பாடு இருக்கிறது. ஆனால், முறைப்படி நடக்க வில்லை. தலைமைக் கழகம் ஒரு சங்கிலியின் பதக்கமாகவும், கிளைகள் முத்துக்களாகவும் கோக்கப்படவில்லை. இந்தக் குறையை விரைவில் களைய வேண்டும். இந்த இணைப்பு உறுதியாக இருந்தால்தான் கிளைக் கழகத்தின் சந்தேகங்கள் - சச்சரவுகள் - நடவடிக்கைகள் - இவைகளை நல்ல முறையில் சீர்படுத்தி இயக்கத்தைச் செழிப்பாக்க முடியும். பிரச்சாரக் குழு மட்டும் வேலை செய்து பயன் இல்லவே இல்லை. சென்ற ஆண்டு போட்ட திட்டங்கள் அனைத்தும் செயல்முறைக்கு வந்தாக வேண்டும். நாம் வளர்ந்திருக்கிறோம். வளர்ந்து கொண்டே போகிறோம். அதற்கும் ஒரு கட்டுப்பாடு - ஒழுங்கு - நியதி வேண்டுமென்பதுதான் பிரச்சினை.

ஒருவனுக்கு லட்சம் லட்சமாய்ப் பணம் வருகிறது. அவனும் கணக்கு வழக்கின்றி செலவு செய்கிறான். செலவுக்கு கட்டுப்பாடுமில்லை - கணக்குமில்லை. கடைசியாக ஒருநாள் அவன் சம்பாதித்தது எவ்வளவு என்று கணக்குப் போட்டு விஷயம் புரியாமல் கலங்கித் தவிக்கிறான். அந்தப் பணக்காரன் நிலைமை இயக்கத்திற்கு வரக் கூடாது, வர விடக் கூடாது.

கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கரையாத இயக்கம் - பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்து போகாத இயக்கம் - மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள் ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டு போகாத இயக்கம் - பதவியும் பட்டமுமே தேவை என்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து விடுபட்ட இயக்கம் - சொந்த வாழ்வும் சுயநலமுமே பெரிதென்போரின் பிடியிலிருந்து தப்பிய இயக்கம் -

கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை, மாயவரம் நடராசனை, ஆரூர் இராமனை, அழகிரிசாமியை அணைத்திருந்த இயக்கம் - மொழிக்காக உயிர்விட்ட தாளமுத்து, நடராசன்களைக் கொண்டிருந்த இயக்கம் - கொள்கைக்காக மரத்திலே பிணமாக ஊஞ்சலாட்டப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதங்களை உள்ளடக்கிய இயக்கம் - மதுரை மாநாட்டுத் தீயைக் கண்டு மனங்கலங்காத இயக்கம் - குடந்தைத் தெருவினிலே குருதி வெள்ளத்தைக் கண்டு குலை நடுங்காத இயக்கம் - இராமகாவியம் இழுக்குடையது என்பதை எடுத்துக்காட்டி பாரதியார்களை, சேதுப்பிள்ளைகளை சொற்போரிலே வெற்றி கண்ட இயக்கம் - ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான், ஆனது ஆகட்டுமே என்று பாடி வரும் ஆயிரமாயிரம் பட்டாளத் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம் - தம்பிகளின் நெஞ்சைத் தட்டிப் பார்த்து உறுதியானதுதானா இது! என்று உணர்ந்து அறப்போருக்கு உரிய காலம் பார்த்திருக்கும் உலக அறிஞர்களில் ஒருவராம் அண்ணாவைப் பெற்றிருக்கும் இயக்கம் - குள்ள நரிக் கூட்டத்தின் குடல் கிழிக்கும் கூற்றம் - குமுறும் எரிமலை புதுவைக் கவிஞர் பாரதிதாசனைப் பெற்றுள்ள இயக்கம் - ஆரியம் ஒரு மாயை, அது பல உருவில் நடமாடும் என்பது கண்டு இலக்கியத் துறையிலே - நாடகத் துறையிலே - கலைத்துறைகளிலே - ஆரியத்தின் கைவரிசையை எதிர்க்கப் பலப்பல அணுகுண்டுகளை நடமாடவிட்டிருக்கும் இயக்கம் - இத்துணை மகத்தான இயக்கம் நிலவுபோல வளர்வதும், தேய்வதும் பின் வளர்வதுமாயுள்ளது. நிச்சயமாக நமக்குத் தெரியும், கழகத்திலே நான் மேலே குறிப்பிட்ட அமைப்பு முறைகள் சீர்திருத்தப்படாவிட்டாலுங்கூட கழகம் அழிந்து விடாது என்று. ஆனாலும் சந்திரனைப் போல தேயும். பிறகு வளரும். ஆனால் சந்திரனைப் போல அழியாமலே இருக்கும். நம்முடைய ஆசையெல்லாம் இயக்கம், அழியாமலுமிருந்து அதோடு வளர்வதும் தேய்வதுமின்றி எப்போதும் வளர்வது என்பதாகவே இருக்கவேண்டும் என்பது தான். அதற்காகத்தான் அழுத்தந்திருத்தமாகக் கூற வேண்டியிருக்கிறது, அமைப்பு முறை தேவையென்று. அந்தத் தேவையை மத்யக் கழகத்திலிருந்துதான் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதல்ல. மாவட்ட, கிளைக் கழகங்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே அமைப்பு கண்டு மாவட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு மத்யக் கழகத்தை தங்களோடு இணைத்து செயல்புரியச் செய்ய வேண்டும். விழுதுகள் இருந்தால்

தான் ஆலமரத்திற்கு அழகு. இது கழகத் தொண்டர்கள் - செயலாளர்கள் அறியாததல்ல.

நாட்டு நிலைமை மிக மிக நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது. இந்த நேரத்தில் நாடு நம்மை எதிர்பார்த்து நிற்கிறது. அவர்கள் எதிர்பார்ப்பது நம்மிடமிருந்துதான். நமது கொள்கை அவர்கட்கு தேளாயிருந்த காலம்போய் தேனாக மாறிவிட்டது இப்போது. இந்த நல்ல நேரத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயன்படுத்துவது என்றால் போலிப் பிரச்சாரம் செய்து தேர்தலிலே நாற்காலி பிடிப்பது என்பதல்ல, பொருள். நம்மிடையே நல்லெண்ணம் அரும்பியிருக்கும் இவ்வேளையில் மக்களுக்குள்ள கஷ்டங்களை - நாட்டுக்குள் படையெடுக்கும் நானாவித ஆபத்துக்களை முறியடிப்பதற்கு நம்முடைய உயிரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அர்ப்பணிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கூறுகிறேன்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பிலே வெற்றி பெற்று விட்டோம். வாகை மாலை சூடி விழாக்களும் நடத்தி விட்டோம். எலும்புகளை முறித்துக் கொடுத்து - நரம்புகளை அறுத்துக் கொடுத்து - குருதியைக் கொட்டிக் கொடுத்து இத்தனைக்கும் அசையாத நிலை ஆளவந்தாருக்கு இருக்கிறது என்பது கண்டு, இறுதியாக கோவை முத்தமிழ் மாநாட்டிலே அபாய அறிவிப்பு சங்கம் முழங்கி, அதன் பிறகு ஆளவந்தவர் விழித்துப் பார்த்து, மொழிக்கு வந்த கொடுவாளைத் தடுத்து விட்டனர். இந்த வெற்றியைக் கொண்டாடும் நேரத்திலேயே நெஞ்சு கொதிக்கும் நெருப்புச் செய்தியொன்று நம்மை நெருங்கிற்று.

ஆம், அதுதான் அல்லாடியாரின் ஆனந்தத் தாண்டவம் - அக்கிரகாரத்தின் வெற்றி முரசம் - திராவிடத்தின் முன்னாள் பழம்பெருந்தலைவர்கள், உரிமைப் போர்த் தளபதிகள் தியாகராயர், டாக்டர் நாயர், பனகல் அரசர், டாக்டர் நடேசன் போன்ற பல தலைவர்கள் ஒன்று சேர்ந்து உண்டாக்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை (கம்யூனல் ஜி.ஓ.) யைக் குழியில் தள்ளிவிட்டு பார்ப்பனீயம் பாடுகின்ற பள்ளுப்பாட்டைத்தான், தோழர்களே! குறிப்பிடுகிறேன். முப்பது ஆண்டுகளாக அமலிலிருந்து வரும் வகுப்புவாரி முறை அடியோடு சாய்கிறது. சட்டம் கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறானதாயிருக்கிறதாம். அதற்காகச் சமூக நீதியை சாய்த்து விட வேண்டுமாம். சட்டத்தை இயற்றுபவர்கள் மக்கள்,

மக்கள் வாழ வகுத்தது சட்டம். கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறுதலாக சட்டம் இருந்தால் சட்டத்தைச் சரிப்படுத்த வேண்டியது முறையா அல்லது ஒரு பெரிய சமுதாயத்தின் உரிமையை உடைத்து நொறுக்கி உள்ளம் எரியச் செய்வது முறையா என்றுதான் நாம் கேட்கிறோம். 1920இல் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சைக்கு சென்ற மாணவர்களின் தொகை இருபதாயிரம். இன்று 1950ல் அறுபத்தெட்டாயிரம். இப்படி வளர்ந்து வந்த திராவிடரின் கல்வி உயர்வைக் கருவறுக்க சட்டத்தை வாளாக்குகிறார்கள். சட்டம் செய்தவர்கள் ஐந்து பேர். அதில் மூன்று பேர் தென்னாட்டு நிலை தெரியாத வட நாட்டவர். இருவர் தென்னாட்டவர். அதில் ஒருவர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், மற்றவர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர். எங்கிருந்து நீதி கிடைக்கும் இந்த நிரபராதித் திராவிடருக்கு!. எங்கிருந்து உரிமை கிடைக்கும் உளுத்துப்போன சமுதாயத்துக்கு!.....சமூக நீதி தேவையென்றால் பரந்த நோக்கம் பேசுகிறார்கள். தகுதி, திறமையென்கிறார்கள். இந்தத் தகுதியும் திறமையும் சமுதாயப் பிரச்சினை வரும்போது காட்டப்படுகிறதா? கல்விச் சாலைக்குச் செல்ல தகுதி திறமை என்று கர்ஜிக்கிற கனவான்களைக் கேட்கிறேன் - காலையில் எழுந்து ஸ்னானம், நேமம், நிஷ்டை, விரதம், அளவில்லாத ஆண்டவன் பக்தி, பழுத்த ஆஸ்திகம் இத்தனை திருக்குணங்களும் அமைந்த திராவிடன் ஒருவன், ஆலயத்துட் சென்று ஆண்டவனைத் தொட்டு அர்ச்சிக்க அபிஷேகிக்க முடியாதே. அதே நேரத்தில் இரவெல்லாம் இன்பவல்லியோடு கூடிக் கிடந்து வெற்றிலை காய்ந்த வாயுடனே ஆண்டவனைத் தொட்டுக் குளிப்பாட்டி, உணவூட்ட ஒரு பெரு வியாதி பிடித்த பார்ப்பனருக்குக் கூட உரிமை இருக்கிறதே - இதில் எங்கே தகுதி, திறமை? யாரிடமிருக்கிறது தகுதி..... ஆனால் யார் நுழைய முடிகிறது கோயிலில். இவைகளை ஒழித்துக் கட்டி விட்டு, உயர்ந்தோர் எனப் பேசும் ஆணவத்தை அகற்றி விட்டு பிறகு கம்யூனல் ஜி.ஓ. தேவையற்றது என்றால்கூட அதில் அர்த்தமுண்டு. எப்படியோ அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்.

நாம் முன்பு கூறியபோது நையாண்டி பேசியவர்கள் இன்று நம்மோடு சேர்ந்து அந்தோ! அநீதி! என அலறுகிறார்கள். சென்னை அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று விட்டது நீதி கேட்க! அதுவும் நம் முயற்சியால்தான், கிளர்ச்சியால்தான் முடிந்தது என்பதை நினைத்துப் பெருமையடைகிறோம். உயர் நீதி மன்றத்துத் தீர்ப்பு கிடைத்ததும் அரசாங்கத்தின் அடுத்த

திட்டம் என்ன என்பது அமுங்கித்தான் கிடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்னையில் துவக்கிய கிளர்ச்சி, திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் காட்டிய உணர்ச்சி, மந்திரி மாதவமேனனை வாய் திறக்கச் செய்தது. அப்பீல் செய்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம் என்றார்கள். அதன் பிறகு நாம், பொறுத்திருந்து பார்ப்போம் - போகாவிட்டால் கிளர்ச்சி துவக்குவோம்.

அப்பீலுக்கு போயிருக்கிறவர்கள் அங்கும் தோல்வி கண்டால் - அதன் பிறகு அரசியல் சட்டம் திருத்தப் படாவிட்டால், அப்போது எரிமலையாகக் குமுறப்போகிறது நமது கிளர்ச்சி. மூன்று கடல்களும் பொங்கி ஆதிக்க இமயத்தை மூழ்கடிக்கும் கிளர்ச்சி. சாவா? வாழ்வா? என்று முடிவு கட்டுகிற கிளர்ச்சி. ஆளவந்தார் சுப்ரீம் கோர்ட்டிலிருந்து திரும்புகிற வரையில் நமக்கு வேறு பல வேலைகள் உண்டு. சமூக நீதி பற்றிய விளக்கவுரைகளாற்றி மக்களை விழிக்கச் செய்ய வேண்டும். மக்கள் விழிப்படைவார்கள். ஆனால் செயலாற்ற உடலில் வலுவில்லை. காரணந்தான் தெரியுமே - கொடுமையான காரணம். பசி.... பசி.... பருத்திக் கொட்டையை சாப்பிடு என முன்ஷி சிபார்சு செய்யுமளவுக்கு வளர்ந்து விட்ட பசி - திருநெல்வேலியிலும் வேறிடங்களிலும் தான் பெற்ற செல்வத்தைத் தன் வயிற்றில் கிடந்த வைடூரியத்தை, தாயார் விலை கூறி விற்று வயிற்றைக் கழுவிக் கொள்ளும்படி செய்த கோரப் பசி - இந்தப் பசி நீக்க, பாராள வந்தவர் எடுத்துக் கொண்ட முயற்சி, எட்டு அவுன்ஸ் அரிசியை ஆறு அவுன்சாக்கியதுதான். இந்தப் பசி போக்கும் கைங்கர்யத்தை செவ்வனே செய்ய யாரும் முன்வரவில்லை. நாமோ நாட்டு மக்களில் ஒரு பகுதி. ஆனாலும் வாயில்லாப் பூச்சிகளல்ல! நமது வார்த்தைகள் முதலில் அலட்சியப்படுத்தப்பட்டாலும் பிறகு அதுதான் வேதவாக்காக மாறியிருக்கிறது பலருக்கு.

பசியால், மக்கள் மாளும் நேரத்தில் பாராமுகமா யிருக்கும் சர்க்காருக்கு - ஒருமுறை நினைவு படுத்தும் நிகழ்ச்சியை நாம் நடத்திக் காட்ட வேண்டும். சென்னையிலே பட்டினிப் பட்டாள ஊர்வலம் நடந்த பிறகு நல்லதொரு எதிரொலி ஏற்பட்டது. அது போல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாடெங்கும் ஒரு நாள் குறிக்கப்பட்டு பசியால் மாளும் மக்களின் பட்டியலை சர்க்காருக்குத் தர வேண்டும். அந்த நாள் சர்க்காரின் மந்தப்

போக்கைக் குறைக்குமென்ற நம்பிக்கையோடு, இதைச் செய்யலாமா செய்யக்கூடாதா என்ற முடிவை - செய்யலாம் என்றால் நாள் குறிப்பிடுங்கள் என்ற தாழ்மையான வேண்டுகோளை தலைமைக் கழகத்தின் முன் வைக்கிறேன்.

நம்முடைய கிளர்ச்சிகள் என்றும் தோற்றதில்லை. அடக்கு முறைகளை வீசிய போதும் - சிறைச் சாலையிலே அடைத்த போதும் - சிரச்சேதம் செய்வோம் என்று மிரட்டியபோதும் - நாம் பயந்து பின்னடைந்ததில்லை.

அந்த அஞ்சா நெஞ்சத்துடன் - அழகிரிசாமியை நினைத்துக் கொண்டு அண்ணாவின் படை வரிசையிலே சேர வேண்டுமென்றுதான் திராவிடப் பெருமக்களை அழைக்கிறேன். அப்படி அழைக்கும் போதுதான் அழைக்கப்பட்டவர்களை அமைப்பு முறையில் நடத்திச் செல்லக் கழகம் இன்னும் செப்பனிடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செயல் முறைத் திட்டங்களின் அமைப்பு முறைகளில் சிறிது அயர்ந்து விட்டது கழகம் என்னும்போது அந்தக் குற்றவாளிப் பட்டியலிலே நானும் அடங்கியிருக்கிறேன் என்பதை நினைவுபடுத்திக் கொண்டுதான் சொல்லுகிறேன். நம் குற்றம் கொள்கையை மீறியதல்ல சிதறிக் கிடக்கும் சக்தியை ஒன்றுபடுத்தாததுதான் - சிந்திக் கிடக்கும் மலர்களை மாலையாக ஆக்காததுதான் - அந்த அருமையான செயல் இந்த ஆண்டு தொடங்கி விடும் என்று நம்புகிறேன். அதற்கான விடிவெள்ளி முளைத்திருக்கிறதாக உணருகிறேன். சென்னை தங்கசாலை வீதியிலே தலைமை நிலையம் பணி புரியத் தொடங்கி விட்டதையும் நீங்கள் அறிய வேண்டுமென்று கூறுகிறேன். இந்த ஆண்டிலே நாம் வளர்ந்து விட்டோம். வரும் ஆண்டிலே நம் கையில் வேலேந்திப் புறப்படப் போகிறோம், தோழர்களே! இந்த வேலேந்தி என்ற வார்த்தைகூட எதிரிகட்கும், சர்க்காருக்கும் பயங்கரமாகத் தோன்றும். பயப்படத் தேவையில்லை. கொள்கையை வேலாக்கி அறப்போர் ஆரம்பமாகப் போகிறது என்பதை அறிவுறுத்துகிறேன், உங்கள் சார்பாக, அரசியலாருக்கு!

அகவிலை உயர்வை எதிர்த்து ஒரு போர்! அடக்குமுறையை எதிர்த்து ஒரு போர்! புத்தகங்களின் தடை உத்தரவை எதிர்த்து ஒரு போர்! நாடகத் தடைகளை மீறி ஒரு போர்! இப்படிப் போர்கள் நடக்கப் போவதில்லை. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே ஒரு போர்! அந்தப் போரிலே கலந்து வாகை மாலை சூட - வாரீர்

தோழர்களே! பாண்டியன் பரம்பரையினரே! சேரன் சந்ததியினரே! சோழனின் சொந்தக்காரரே! வாரீர்! சிறுத்தையின் உறுமல் - சிங்கத்தின் சீற்றம் - கறுத்த கழுதையே அங்கேன் கனைக்கிறாய் என்று கேட்டிட வாரீர்! ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை - மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று என்று மார் தட்டிட வாரீர்! புரட்சிப்பண் பாடிட வாரீர்!

வாரீர் வாரீர் . . . வாலிப வீரர்களே! வைர நெஞ்சுடைத் தோழியர்களே! வண்மை நிறை பெரியோர்களே! . . . என அழைக்கிறேன்.

இளைய உடன்பிறப்புகளே!

இது இந்த இளைஞனின் குரல். அன்று கோவில் பட்டியிலே ஒலித்தது. இன்றும் ஒலிக்கிறது. இந்தக் குரல் ஒலியிலே அணி வகுத்திடு! அறப்போர் விளைத்திடப் படை நடத்திடு!

அன்புள்ள,

மு.க.

17-10-2002

2828. எங்கெங்குக் காணினும் சக்தியடா! ஏழுகடல் பொங்கிடும் எழுச்சியடா!

உடன்பிறப்பே,

மகாகவி பாரதியார் விரும்பிக் கேட்க, உடனடியாக பாவேந்தர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடிக் காட்டிய பாடல்!

எங்கெங்குக் காணினும் சக்தியடா ஏழு கடல் அவள் வண்ணமடா!

என்ற எழுச்சி வரிகளாகும்!

நமது இளைஞர் அணியினர், கழகத்தின் சார்பில் அக்டோபர் 21ஆம் நாள் மாநில முழுதும் நடத்திய அறப்போர் மறியலின் எழுச்சியும் பாவேந்தரின் பாடலைப் போலவே இருந்தது.

அன்று அவர் குறிப்பிட்ட அந்த சக்தி, மக்கள் சக்தியாகவோ, இளைஞர்களின் சக்தியாகவோ, இருட்டு ஆட்சியின் குருட்டுச் சட்டங்களை எதிர்க்கும் சக்தியாகவோ, இவற்றுள் எந்தச் சக்தியாகவோ இருந்திருக்கலாம்.

ஆனால் இப்போது குறிப்பிடும் சக்தி, தீர்ந்து விட்டது தி.மு. கழகம் என்று வாய் தித்திக்கப் பேசி, தின்ற தீனி செரிக்குமளவுக்கு நாக்கு வரண்டிடக் கத்தி, அராஜகச் செயலால், அடக்குமுறையால் வீழ்த்திவிட்டோம் என்று புஜம் தட்டிப் பேசிக் கொண்டிருந்த புல்லர்களை, பொய்யர்களை நோக்கி! இல்லை அய்யா இல்லை; இதோ இருக்கிறோம் நாங்கள் இந்த இயக்கத்தின் களப்பலிப் படையினர் எனக் காட்டுமளவுக்கு நிரூபிக்கப்பட்ட சக்தி!

எங்கெங்குக் காணினும் எழுச்சிக் கோலம் பூண்டு நின்ற இந்தச் சக்தியின் பேருருவை மறைத்திட, தமிழகத்தை ஆளும்கணத்தார் தடுமாறித்தான் போனார்கள். அந்தக் கெடுமதி கொண்டோரின் கணக்கு தவறித்தான் போனது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநில முழுதும் பத்தாயிரம் பேரைச் சிறைகளில் பூட்டி விட்டதால், போராட்டம் பூஜ்யமாகி விடுமென்று

ஆரூடம் கணித்துக் கொண்டிருந்த ஆளுங்கட்சிக்கு எச்சரிக்கை எரிமலையாகப் பொங்கி எழுந்தது இளைஞர் பட்டாளமும்; அந்தப் பட்டாளத்தைப் பரிவுடன் அரவணைத்து ஆர்ப்பரித்த கழக அடலேறுகளின் சேனையும், என்பதை பாப்பாத்தியம்மாள் கருவாடு களவு கொடுத்த கதை என்பார்களே அது போல வெளியே சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் சங்கடப்படுகின்றன சந்தர்ப்பவாதிகள் சிலரின் ஏடுகள் என்றாலுங்கூட, முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதியைப் போல, இருளைக் கிழித்து ஒளிவிடும் உதய சூரியனைப் போல, இந்த அறப்போரின் எழுச்சி தகத்தகாயமாகத் தரணிக்குத் தெரிகிறது.

முழுச் செய்தியையும் வெளியிட்டு விடாதே!
வெளியிட்டால் விளம்பரம் வெட்டப்படும்!
புதிய வழக்கு புறப்படும்!
பழைய பிரச்சினைகள் தூசு துடைத்து எடுக்கப்படும்!

இந்த அரசை எதிர்த்து ஒருவன் பேசுவான் - அறிக்கை விடுவான் - அவன் படத்தை வெளியிடுவது, அவனுக்குக் கூடிய கூட்டத்தை விளம்பரப்படுத்துவது, இதெல்லாம் என்ன அநியாயம்? ஜனநாயக நாட்டில் நடக்கலாமா? உன் பத்திரிகை சுதந்திரம் பறி போகாமல் இருக்க வேண்டுமேயானால், அந்தப் பயல்களைப் பற்றி அவர்கள் செத்தால் கூடச் செய்தி போடக் கூடாது - எதிர்க்கட்சிகளை இருட்டடிப்புச் செய்! அதிலும் குறிப்பாக தி.மு.க. செய்திகளை, இருட்டடிப்பு செய்வதுடன், இரும்புத் திரையும் போட்டு மூடு! நீ திரை போடாவிடில் சிறை திறக்கப்படும் உனக்காக! எமது கடந்த கால சேஷ்டைகளையும் நிகழ்கால நெருப்பு நடவடிக்கைகளையும் நினைத்துப்பார்!

உடன்பிறப்பே, இவ்வளவு மிரட்டல்களையும் அச்சுறுத்தல்களையும், மீறியல்லவா? வீதியுலா செல்லும் காதல் தலைவனை பலகணிக் கதவின் இடுக்கு வழியாகக் கண்டு மகிழும் காதல் தலைவியைப் போல, அதாவது அவள் வீட்டில் உள்ள கொடுங்கோன்மை ஆட்களுக்கு அஞ்சி நடுங்கி இதயதாகம் மேலிட இனியவனைக் காண்பது போல - இன நலமும் இனப் பற்றும் பீறிக் கிளம்பிட இந்த இயக்கத்தின் எழுச்சியை ஒரு சில இன நல ஏடுகள் கண்டதையும், கண்ட காட்சியை அப்படியே தந்ததையும் அறிந்தும் உணர்ந்தும் அகமிக மகிழ்கிறேன்.

எத்தனை கோரிக்கைகளை வைத்து,
எத்துணை குறைபாடுகளைத் தொகுத்து,
எவ்வளவு குற்றச்சாட்டுகளைத் தொடுத்து,
இந்த மறியல் அறப்போர் நடந்து முடிந்துள்ளது.

சென்னையில் இளைஞர் அணிச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின் தலைமையில் மட்டும் ஏழாயிரம் பேர் கைது - இப்படி எல்லா மாவட்டங்களின் தலைநகரங்களிலும்! முன் எச்சரிக்கைக் கைது உட்பட எழுபத்தி ஐயாயிரம் பேர்!

கைது செய்யப்பட்டவர்களை அடைப்பதற்கு சிறைச்சாலைகளில் இடமில்லை!

75000 பேருக்கு ஒருவேளை உணவளிக்கவும் வழியில்லை.

எனவே மறியல் எனத் தொடங்கி, உண்ணா விரதமும் சேர்ந்து இரண்டு போராட்டங்கள் நடந்தன!

அவர்களைத் தங்க வைத்திட விடுதிகள் இல்லை!

கை பிசைந்து நின்றது காவல்துறை!

ஏ, அப்ப! பிரளயம் போல் பெருக்கெடுத்து வருகின்றனரே எனும் பிரமிப்புடன் அரசின் அதிகார மட்டம் ஆச்சரியத்தால் விழி பிதுங்கியது!

இந்த எழுச்சி கண்டாவது ஆட்சியாளருக்கு அறிவு பிறக்குமா? அடக்கம் துளிர்க்குமா?

அது என்னவோ சந்தேகம்தான் - இதோ ஒரு அகோர புத்திசாலி! அபூர்வப் பேரறிஞர் பேசியிருக்கிறார்! ஏடுகளில் அந்தக் கேடு கெட்டப் பேச்சு வெளிவந்துள்ளது.

அதாவது, 1968ஆம் ஆண்டு கருணாநிதியும், கர்நாடகத்து வீரேந்திர பட்டீலும் மறைமுக ஒப்பந்தம் செய்துகொண்டு கர்நாடகத்தில் ஹேமாவதி அணை கட்டப்பட்டது என்று பன்னீர்செல்வம் என்ற அமைச்சர், அதுவும் பொதுப்பணி அமைச்சர் பேசியிருக்கிறார். அப்படிப் பேசும்போது மேடையில் இருந்த ஓர் அ.தி.மு.க. நண்பர் தனது தலையில் தட்டிக் கொண்டு அட அசடே! 1968இல் அண்ணா அல்லவா முதலமைச்சராக இருந்தார் - அவரையே உன்னை யறியாமல் குறை கூறுகிறாயே! என்று முணுமுணுத்ததாகக் கேள்வி.

மறைமுக ஒப்பந்தங்களில் மந்திரிசபையிலேயே பலே கில்லாடியாகத் திகழ்கிற பன்னீர்செல்வத்துக்கு அண்ணா ஆட்சியிலும், கருணாநிதி ஆட்சியிலும் மறைமுக ஒப்பந்தங்கள் நடைபெற்றதாகச் சொல்லத் தோன்றுவதில் வியப்பில்லை! அப்போதுதானே - தனது அண்மைக்கால மறைமுக ஒப்பந்த பேரங்களை மறைக்க முடியும். பாவம்! பன்னீர் அவர்களுக்கு 1967க்கு முன்பே ஹேமாவதி அணைக்கான ஆயத்தப் பணிகளை கர்நாடக அரசு தொடங்கியதும், தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்தபோதே, கர்நாடகாவில் கபினி அணை கட்டப்பட்டதும் தெரிந்திருக்க நியாயமில்லை. அப்பாவி மனிதர்!

அதே பேச்சில் இன்னொரு முத்தும் உதிர்த்துள்ளார் - நான் இவரைப் போன்ற ஒதுங்கிக் கொள்ள வேண்டிய நபர்களிடம் விவாதம் வைத்துக் கொள்ள விரும்புவதில்லை (நபர் - உபயம்:- முதலமைச்சர் ஜெயலலிதா). இருந்தாலும் அவரது இமாலயப் பொய்யை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய கடமை இருக்கிறதே!

எத்தனையோ சோகச் சுமைகள் உள்ளத்தில், இருப்பினும் என் கடமையை நான்தானே ஆற்றிட வேண்டியிருக்கிறது!

கருணாநிதியின் மீது நம்பிக்கையில்லாத காரணத்தால் அவரது ஆட்சியின்போது வெளிநாட்டவர் யாரும், வெளி மாநிலத்தவர் யாரும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கவில்லை

இதுவும் பன்னீரின் உளறல்தான் - பாவம்! சென்னைப் புறநகர்ப் பகுதிகளையோ - செங்கை வட்டாரப் பகுதிகளையோ - சுற்றிப் பார்க்கும் ஒரு சாதாரண மனிதனுக்குக்கூட எத்தனை தொழிற்சாலைகள் வெளிநாட்டார் முதலீட்டுடன் தி.மு.க. ஆட்சியில் வந்துள்ளன என்ற கணக்கு தெரியும்.

என் செய்வது! மனிதனுக்குத் தெரியும் - இந்த மந்திரிக்குத் தெரிய வேண்டுமா என்ன?

இவர் போன்ற மமதையாளர்கள் நிறைந்த மதோன்மத்தம் கொண்ட ஆட்சியை மக்கள் மன்றத்தில் நிறுத்தி அடையாளம் காட்டிடத்தான், அறப்போர் மறியல் கழக இளைஞர் அணியினரால் அக்டோபர் 21 அன்று, ஆழ் கடல் பொங்கியது போல் - எரிமலை சீறிக் கிளம்பியதுபோல் - நடைபெற்றிருக்கிறது.

இந்த அரசை எதிர்த்திடவும், திருத்திடவும் இது மட்டுமல்ல! இன்னும் பல அறப்போர்கள் தொடர இருக்கின்றன!

எங்கெங்குக் காணினும் சக்தியடா;
ஏழு கடல் பொங்கிடும் எழுச்சியடா!

என்று மக்கள் புதிய பாடலுடன் புறப்படத்தான் போகிறார்கள்! அந்தப் புறப்பாட்டுக்குச் செவி மடுக்கத் தமிழகமும் தயாராகிறது!

அன்புள்ள,

மு.க.

23-10-2002

2829. குட்டு விழுகிறது; குட்டும் வெளிப்படுகிறது!

உடன்பிறப்பே,

ஜார் மன்னன் ஆட்சிக்கு சாம்பிள் காட்டுவது போல, ரஸ்புடீன் என்ற மதவெறியனின் சேட்டைகளுக்குச் சல்லடம் கட்டுவது போல, எடுத்தேன், கவிழ்த்தேன் எனும் போக்கில் நடைபெறும் அ.தி.மு.க. ஆட்சி பரிபாலனத்தில்,

நியாயங்களுக்காகப் போராடுகிற நேர்மையாளர்களுக்கு நெற்றியடி! உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்களை உதாசீனம்!

அலுவலர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் என அமைப்பு ரீதியான கட்டுக்கோப்புச் சங்கங்களை ரைடு மூலம் உடைத்தெறிந்து சில தலைவர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு என்றுகூட அல்ல, காலுக்கடியிலேயே போட்டுக் கொண்டு,

இந்த விபீஷண சுக்ரீவர்கள் இருக்கும்வரையில் கவலை ஏன்? என்ற கர்வத்துடன், புதுப் புது சட்டங்கள்! அந்தச் சட்டங்களைக் காத்திட மேலும் மேலும் பொல்லாத சட்டங்கள்!

புதிய புதிய ஆணைகள் - போதாக்குறைக்கு இருக்கவே இருக்கிறது போலீஸ் மிரட்டல் - கெடுபிடி - அராஜகம் - இன்னோரன்ன எதேச்சாதிகார ஏவுகணைகளால் எக்காலமும் அதிகாரம் நிலைக்கும் என்ற ஆணவ ஆரூடத்துடன் ஓர் ஆட்சி நடைபெற்றால் எப்படி இருக்கும் என்பதை இதோ தமிழ் நிலத்திலே காட்சியாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

இந்த வாரம் முழுமையுமே, தி.மு.க. இளைஞர் அணியின் அறப்போர் மறியல் தொடங்கி - அந்த எழுச்சி அலையின் பேரொலி அடங்குவதற்கு முன்னரே, இதோ லட்சக்கணக்கானோர் ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள் என 200க்கு மேற்பட்ட சங்க அமைப்புகள் வாரியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கிறார்கள். பிறிதோர்புறம் சிறுபான்மைச்

சமுதாயத்தினரும், தலித் மக்களும், மனித உரிமை பறிக்கும் தடைச் சட்டத்தை எதிர்த்துக் கண்டனச் சங்கநாதம் செய்கிறார்கள். பணி பறிக்கப்பட்டு, வறுமைப் பாதாளத்தில் உருட்டப்பட்ட மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு பிரிவுப் பணியாளர்கள் என ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டோர் வயிறு பிசைந்து கொண்டு, வழியும் கண்ணீரைத் துடைத்திடவும் கரங்களுக்கு வலிமையின்றி வாடி வதங்கிக் கிடப்போர் - அவர்களும் இந்த அரசை எதிர்த்துப் போராடுவோர் வரிசையில் நிற்கிறார்கள்.

கல்லூரி ஆசிரியர்கள் ஒரு புறம் - கலங்கித் தவிக்கும் மாணவர்கள் ஒரு புறம் தமது பாதிப்புகளை வெளிப்படுத்தி படை திரண்டு குவிகிறார்கள்.

களம் புகுவோர் விடுத்திடும் அறிக்கைகளை மிஞ்சுகிற அளவுக்கு, கருங்காலிகளின் அரசு ஆதரவு வெளியீடுகள் அரசின் ஆதரவுடன் விளம்பரப்படுத்தப்படுகின்றன. களத்தில் நிற்போரின் முதுகில் குத்துவதற்கு கட்டாரி ஓங்கி நிற்போர் யார்? அவர்களின் முகவரி என்ன?

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தாமே முன் வந்து அரசு அலுவலர் உரிமைகளையும், சலுகைகளையும் வழங்கிய போதும் சரி! தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று நடைமுறைப்படுத்திய போதும் சரி! அய்யோ! இது போதாது - இது கடலில் கரைத்த பெருங்காயம்! என்று கூறி, வரிந்து கட்டிக் கொண்டு போராடிய சங்கங்கள், இன்று என்ன சொல்கின்றன?

தி.மு.க. ஆட்சியில் இருபது சதவிகித போனஸ் என்று வழங்கிய போது அதை ஏற்க மறுத்து, இருபத்தி ஐந்து சதவிகிதம் போனஸ் வேண்டுமென்று போர் முரசு கொட்டிய அ.தி.மு.க. தொழிற்சங்கவாதிகள், இப்போது 8.33 சதவிகித போனஸ்தான் என்று அம்மா அறிவித்துள்ளபோது சும்மா கிடப்பது ஏன்?

சும்மா கிடந்தாலும் பரவாயில்லை! உரிமைகளுக்கும், உரிய ஊதிய உயர்வுக்கும், கழக ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட நியாயமான போனஸ் இப்போதும் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கும் - அறப்போர்க் குரல் எழுப்பிடும்போது, இவர்கள் எட்டப்பர்களாக மாறி அதனை எதிர்ப்பதின் ரகசியம்தான் என்ன?

தம்பி குப்புசாமி எம்.பி. அவர்களின் தலைமையில் இயங்கும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை மட்டுமல்ல, இந்தப் பொது வேலை நிறுத்தப் போராட்டத்தில் சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., எம்.எல்.எப்., யு.டி.யு.சி., எல்.எஸ். மற்றும் பல்வேறு அமைப்புகளும் ஈடுபட்டுள்ளன.

அடக்குமுறைகளினாலோ, ஆணவப் போக்கினாலோ, வீபிடணர்களை விலை கொடுத்து வாங்குவதாலோ - போராட்டத்தை அடக்கிவிடலாம் என அரசு கனவு காணலாம்!

உரிய அமைப்புகளை அழைத்துப் பேசி உடன்பாடு காணுவதைத் தவிர்த்துவிட்டு, கைப்பாவைகளைக் கூட்டிக் கட்டளையிட்டு உரிய அமைப்புகளின் நியாயபூர்வமான கோரிக்கைகளைப் புறக்கணித்து விட்டு, அடக்கிவிட்டோம் அறப்போர்க் கிளர்ச்சியை எனச் சவடால் விடுவதற்காக, சகுனி வேலைகளில் ஈடுபடுவது வெட்கக்கேடான செயல் என்பதைத் தவிர வேறு என்ன?

எதற்கெடுத்தாலும் முந்தைய ஆட்சியின் மீது பழி போடுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை.

முந்தைய தி.மு.க. ஆட்சியில் 20 சதவீத போனஸ் என்றால், இப்போது 21 சதவீதம் கொடுத்து விட்டு முந்தைய ஆட்சியைப் பார்த்துப் பழிப்பு காட்டினால் பரவாயில்லை என்று பாராட்டலாம்!

இல்லை, இல்லை - போனஸ் சதவீதம் எட்டுத்தான் என்றால், இந்த ஆட்சியின் தலைக்குத் தேவை குட்டுத்தான் என்று கூறுவதிலும், குட்டுவதிலும் தவறென்ன காண முடியும்!

இருபது சதவிகிதம் போனஸ் கொடுத்த தி.மு.க. ஆட்சியில் 25 சதவீத போனஸ் கேட்டுப் போர்க் கொடி உயர்த்திய அ.தி.மு.க. தொழிற் சங்கம் இப்போது வாய் மூடிக் கிடப்பது மட்டுமல்ல! அந்தச் சங்கமும் அது போல வேறு சில சங்கங்களும் விடுத்திடும் அறிக்கைகளைக் காணும்போது அவர்களின் குட்டும் வெளிப்படுகிறது அல்லவா?

அன்புள்ள,

மு.க.

24-10-2002

2830. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈரும்பேனும்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள இந்த 18 மாத காலத்தில் எதற்கெடுத்தாலும் ஏற்கனவே ஆட்சியில் இருந்த தி.மு. கழகத்தின் மீது பழி போடுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளார். நேற்றையதினம் சட்டப் பேரவையிலும் அதே பல்லவியைத் தொடர்ந்து பாடியிருக்கிறார். 1991 முதல் 1996வரை அரசின் நிதி நிலை சீராக இருந்து வந்ததாகவும், அப்போது அரசு அலுவலர் போராட்டம் எதுவும் நடக்கவில்லை என்றும், போனஸ், அகவிலைப் படி முறையாக வழங்கப்பட்டது என்றும் ஆனால் 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியில் தமிழகத்தின் பொருளாதாரம், நிதி நிலை ஆகியவற்றை குட்டிச் சுவராக்கி சீரழித்து கஜானாவை காலி செய்து விட்டதாகவும் கூறியிருக்கிறார்.

அந்த ஐந்தாண்டு கழக ஆட்சிக் காலத்தில் நிதி நிலையை குட்டிச் சுவராக்கியிருந்தால், அப்போது அரசு அலுவலர்களுக்கு எந்தவித உதவியும் செய்ய முடியாத நிலைதானே ஏற்பட்டிருக்கும். கழக ஆட்சிக் காலத்தில் அரசு அலுவலர்களுக்கு போனசோ, அகவிலைப்படி உயர்வோ, ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் மத்திய அரசு அலுவலர்களுக்கு ஈடான ஊதிய உயர்வோ வழங்கப்படாமல் இருந்ததுண்டா? இன்னும் சொல்லப்போனால் தி.மு.கழக ஆட்சிதான் அரசு அலுவலர்களின் பொற்காலம் என்று சொல்லத் தக்க அளவிற்கு அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டது உண்டா இல்லையா? அதுமாத்திரமல்ல, கழக ஆட்சிக் காலத்தில் நிதிநிலை குட்டிச் சுவராகி கஜானா காலியாக ஆக்கப்பட்டிருந்தால் தொடர்ந்து ஐந்தாண்டு காலமும் வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள மக்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற முடிந்திருக்குமா?

ஏழைப் பெண்களின் திருமண உதவி திட்டத்தைத் தொடர்ந்து நடத்தி லட்சக்கணக்கான பெண்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வீதம் நிதி உதவி அளித்து திருமணங்களை நடத்தி அவர்கள் இல்லங்களில் விளக்கேற்றி வைத்திருக்க முடியுமா? சத்துணவு அருந்தும் பிள்ளைகளுக்கு வாரந்தோறும் முட்டையோடு சாப்பாடு அளித்திருக்க முடியுமா? சாதி மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு 103 சமத்துவபுரங்களை நிர்மாணித்து அங்கே அனைத்துத் தரப்பு மக்களும் ஒற்றுமையோடு வாழுகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்க முடியுமா? 109 இடங்களில் தமிழ்நாட்டில் உழவர் சந்தைகளை உருவாக்கி விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், வாங்கிப் புசிப்போர் மலிவு விலையிலே அந்தப் பொருட்களை வாங்கிடவுமான நிலையை ஏற்படுத்தியிருக்க முடியுமா? இவை மாத்திரமல்ல! அண்ணா மறு மலர்ச்சித் திட்டம் என்றும், நமக்கு நாமே திட்டம் என்றும், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்றும், கால்நடை பாதுகாப்புத் திட்டம், பூமாலை திட்டம் என்றும் அடுக்கடுக்கான திட்டங்களை அறிவித்து சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டதே, கஜானா காலியாக இருந்தால் இவற்றையெல்லாம் நிறைவேற்றிக் காட்டியிருக்க முடியுமா?

ஆனால், ஜெயலலிதா மேலே குறிப்பிட்ட அத்தனை திட்டங்களையும் அப்படியே கிடப்பிலே போட்டு விட்டு, அதற்குக் காரணமாக நிதிநிலை பற்றாக்குறை என்று கூறுவதோடு, கழக ஆட்சியின் மீது பழி போடுவது சரி தானா?

நல்ல திட்டங்களையெல்லாம் கிடப்பிலே போட்டது மாத்திரமல்ல. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக இடைக்கால நிதி நிலை அறிக்கையிலே 135 கோடி ரூபாய்க்கு வரிகளை விதித்தார். கழக ஆட்சியிலே விதிக்கப்பட்டிருந்த ஒருமுனை வரிகள் எல்லாம் ஜெயலலிதா ஆட்சியிலே பலமுனை வரிகளாக ஆக்கப்பட்டு வணிகர்கள் பெருந்துன்பத்திற்கு ஆளாயினர். மினி பட்ஜெட் என்ற பெயரில் சுமார் நான்காயிரம் கோடி ரூபாய் அரசுக்கு வரத்தக்க அளவிற்கு பல்வேறு கட்டணங்களை உயர்த்தியும், புதிய புதிய வரிகளை விதித்தும், பல பொருட்களுக்கு வரிகளை உயர்த்தியும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும் தொடர்ந்து இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 690 கோடி ரூபாய்க்கு மேல் வரிகளை உயர்த்தினர். ஆட்சிக்கு வந்த 18

மாதங்களில், இப்படி பெருமளவு வருவாயை ஈட்டிய பிறகும் இன்னமும் கடந்த ஆட்சியின் மீதே குற்றஞ்சாட்டிக் கொண்டு இருக்கிறார் ஜெயலலிதா! நிதி நிலையைக் குட்டிச்சுவராக்கி விட்டதாக ஜெயலலிதா குற்றஞ்சாட்டுகின்ற தி.மு.கழக ஆட்சியிலே ஐந்தாண்டு காலத்தில் 2,706 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன என்பதையும் மறந்து விடக்கூடாது. விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதை ரத்து செய்து, அரிசி விலையை கிலோ 6 ரூபாய் அளவிற்கு உயர்த்தி, ஏழையெளிய மக்களின் வயிற்றிலும் அடித்து அதன் மூலமாகவும் வருவாயை ஜெயலலிதா அரசு உயர்த்திக் கொண்டுள்ளது.

இவ்வாறு சுமார் ஐந்தாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வருவாய்க்கு வகை செய்ததும் போதாது என்று, அரசு அலுவலர்களுக்கு கழக ஆட்சியிலே வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகளை ஜெயலலிதா நிறுத்தினார். போக்குவரத்து, மின்வாரியம், வீட்டு வசதி வாரியம், சர்க்கரை கழகம் போன்ற அரசு நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு கழக ஆட்சியின் போது 20 சதவிகிதம் போனஸ் ஆண்டுதோறும் வழங்கப்பட்டது. அந்த 20 சதவிகித போனஸே போதாது என்று அ.தி.மு.க. தொழிற்சங்கம் போராட்டம் நடத்தி 25 சதவிகிதம் போனஸ் வழங்கப்படவேண்டுமென்று கோரியது. ஆனால் இந்த ஆட்சியிலே அந்த 20 சதவிகித போனசை உயர்த்திக்கூடத் தரவில்லை. அதிலே பாதியைக்கூட கொடுக்காமல் 8.33 சதவிகித அளவிற்குத்தான் போனஸ் தர முடியுமென்று கூறி தொழிலாளர்களை பல நாட்கள் போராட்டம் நடத்த விட்டுள்ளனர். அரசு அலுவலர்களும், தொழிலாளர்களும் நிதி அமைச்சரைச் சந்தித்து இந்தப் போராட்டம் குறித்து பேசியபோது விரைவில் நிதிநிலை சரியானதும் அரசு அலுவலர்களின் சலுகைகள் மீண்டும் தரப்படுமென்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் ஓராண்டு கடந்து அடுத்த ஆண்டு பிறந்த பிறகும், இந்த ஆண்டிற்கும் அதே 8.33 சதவிகித போனஸ்தான் வழங்கப்படும் என்று இந்த அரசு அறிவித்திருக்கின்றது. மத்திய அரசு அலுவலர்களுக்கு 1-1-2002 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 4 சதவிகிதத்தை மாநில அரசு 1-1-2002 முதல் வழங்கியிருக்க வேண்டும். மாறாக, 1-10-2002 முதல் வழங்குவதாக தற்போது அறிவித்துள்ளார்கள். எனினும், மத்திய அரசு அதற்கடுத்த அகவிலைப்படி உயர்வாக ஜூலை திங்கள் முதல் 3 சதவிகித அளவிற்கு அகவிலைப்படியை

இன்று உயர்த்தியிருக்கின்றது. இந்த 3 சதவிகித அகவிலைப்படி உயர்வினை தமிழக அரசு எப்போது கொடுக்கும் என்பதுதான் இப்போது எழுந்துள்ள பிரச்சினையாகும்.

வருவாயைப் பெருக்கி, சலுகைகளை நிறுத்தியது மாத்திரமல்ல! பல்வேறு துறைகளின் சார்பில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்காக கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியில் பெருமளவிற்கு இந்த ஆண்டு குறைத்தும் விட்டார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், கடந்த ஆண்டு உணவு மானியத்திற்காக ஒதுக்கப்பட்ட 1540 கோடி ரூபாய் என்பதற்கு மாறாக, இந்த ஆண்டு 1240 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டது. இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்காக கடந்த ஆண்டு 129 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, இந்த ஆண்டு ஒரு ரூபாய் கூட ஒதுக்கப்படவில்லை. கதர், கைத்தறி துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு 266 கோடி ரூபாய். இந்த ஆண்டு 128 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு. மாணவர்களுக்கு இலவச பாஸ் வழங்குவதற்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு 165 கோடி ரூபாய். இந்த ஆண்டு 125 கோடி ரூபாய் தான். சத்துணவு திட்டத்திலே கடந்த ஆண்டை விட 41 கோடி ரூபாய் குறைவு. முட்டையை நிறுத்தியதால் ஏற்பட்ட மிச்சம் போலும்! ஏழைப் பெண்கள் திருமண உதவி திட்டத்திற்கு கழக ஆட்சியிலே ஒதுக்கீடு 50 கோடி ரூபாய். தற்போது ஒரு ரூபாய்கூட ஒதுக்கீடு கிடையாது. இலவச மின்சாரம் வழங்க கடந்த ஆண்டு 500 கோடி ரூபாய் மானியம் என்பது இந்த ஆண்டு 250 கோடி ரூபாயாகக் குறைந்து விட்டது.

கழக ஆட்சியிலே நிதிநிலை குட்டிச்சுவராக்கப்பட்டது என்ற ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு உண்மை என்றால் ஆண்டிற்கு ஆண்டு அரசின் வருவாய் குறைந்திருக்க வேண்டுமல்லவா? அதையும் பார்க்கலாம்!

1995-96 இல் ஜெயலலிதாவின் ஆட்சியில் அரசின் வருவாய் 8,985 கோடி ரூபாய். 1996-97இல் கழக ஆட்சியில் அரசின் வருவாய் 11,068 கோடி ரூபாய். 1997-98இல் இந்த வருவாய் 12,641 கோடி ரூபாயாகவும், 1998 - 99 இல் 15,039 கோடி ரூபாயாகவும், 1999- 2000 இல் 15,868 கோடி ரூபாயாகவும், 2000-2001 இல் 18,406 கோடி ரூபாயாகவும், 2001-2002இல் 20,635 கோடி ரூபாயாகவும் வருவாய் உயர்ந்துள்ளது. அதாவது

கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 11,650 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் அதிகமாகியிருக்க கழக ஆட்சியில் பொருளாதாரத்தை சீரழித்து விட்டோம் என்பதும், கஜானாவை காலியாக்கி விட்டோம் என்பதும், நிதிநிலையை குட்டிச் சுவராக்கி விட்டோம் என்பதும் குட்டிச் சுவரில் எழுதப்பட வேண்டிய குற்றச்சாட்டே தவிர, கோட்டை கொலுமண்டபத்தில் கூறக்கூடிய நியாயமான வாதமாக இருக்க முடியுமா? தேய்ந்து போன கிராமபோன் தட்டைப் போல கடந்த கால தி.மு.க. ஆட்சி மீது பழி போடுவது போலவே, அரசு அலுவலர்கள் மீது வஞ்சம் வைத்துக் கொண்டு பொறுப்பேற்ற நாள் முதல் அரசின் மொத்த வருவாயில் 94 சதவிகிதம் அளவிற்கு அரசு அலுவலர்களுக்கு ஊதியமாகவும், ஓய்வூதியமாகவும் செலவழிக்கப்படுகிறது, இரண்டு சதவிகித அளவிற்கே உள்ள அரசு அலுவலர்களுக்கு இந்த அளவிற்கு செலவாகிறது என்று ஜெயலலிதா குற்றஞ்சாட்டிக் கொண்டு வருகிறார். நானும் சரி, அரசு அலுவலர்களும் சரி திரும்பத் திரும்ப மொத்த வருவாயிலே 94 சதவிகிதம் அரசு அலுவலர்களுக்கு செலவழிக்கப்படுவதில்லை, முதல்வர் ஜெயலலிதா கூறுவது தவறு, அரசுக்கு வருகின்ற பல்வேறு வருவாய்களில் ஒரு வருவாயான வரி வருவாயில் மட்டும்தான் 94 சதவிகிதம் அரசு அலுவலர்களுக்கு செலவழிக்கப்படுகின்றது என்பதை புள்ளி விவர ஆதாரத்துடனும், வேடிக்கைச் சிறுகதை வாயிலாகவும் விளக்கி விட்டோம். அவ்வளவிற்குப் பிறகும் முதல்வர் ஜெயலலிதா மொத்த வருவாயில் 94 சதவிகிதம் அரசு அலுவலர்களுக்கு செலவழிக்கப்படுவதாக நேற்றுகூட சட்டசபையில் மூன்று முறை குறிப்பிட்டாரென்றால், திறமையான நிதிச் செயலாளரோ, தலைமைச் செயலாளரோ இந்தத் தவற்றை முதல்வரிடம் சுட்டிக்காட்டி தெளிவாக்கக் கூடாதா? (சுட்டிக்காட்டிய பிறகுதான் சில ஏடுகளில் திருத்தப்பட்டுள்ளதோ?)

கஜானாவைக் காலியாக்கியது கழக ஆட்சி என்று ஜெயலலிதா கூறிய குற்றச்சாட்டிற்கு எத்தனை முறை மறுப்பு விளக்கம் தரப்பட்டது? ஆட்சிக்கு வந்த உடனே களஞ்சியம் காலி என்று முதல்வரும், நிதியமைச்சரும் சுட்டிக்காட்டிய போது, களஞ்சியத்தில் 14 லட்சம் டன் அரிசியை கொள்முதல் செய்து வைத்திருக்கிறோம் என்பதை ஆதாரத்தோடு கூறினோம்.

அதற்கு மறுப்பு கூற முடியாததால், அந்த அரிசி புழுத்துப் போன அரிசி என்று கூறியபோது, அந்த அரிசி புழுத்துப் போன அரிசி இல்லை என்று அரசே எழுதிய ஆதாரக் கடிதத்தோடு நிரூபித்துக் காட்டினோம்.

ஜெயலலிதா கழக ஆட்சியிலே நிதி நிலை குட்டிச் சுவராக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறார். இது உண்மையா?

இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் (Centre for Monitoring Indian Economy) அறிக்கையின்படி 1996 மே திங்களில் ஜெயலலி தாவின் ஆட்சி முடிவில் தமிழகத்தில் மொத்த தொழில் முதலீடு 90,650 கோடி ரூபாய். இது கழக ஆட்சியின் இறுதியில் 1,65,040 கோடி ரூபாய் தொழில் முதலீடு என்ற அளவிற்கு உயர்ந்தது. நிதிநிலை குட்டிச்சுவராக்கப்பட்டதற்கு இதுதான் ஆதாரமா?

1992-93இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருட்களின் மதிப்பு 6,808 கோடி ரூபாய். 2000இல் தி.மு.க. ஆட்சியில் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருட்களின் மதிப்பு 21,387 கோடி ரூபாய். இதுவா நிதி நிலை குட்டிச்சுவராக்கப்பட்டதற்கு ஆதாரம்?

1994-95இல் ஜெயலலிதா ஆட்சியிலே மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு சுமார் 12 கோடி ரூபாய். 1999-2000இல் நிதிநிலையைக் குட்டிச்சுவராக்கியதாக ஜெயலலிதாவால் குற்றஞ் சாட்டப்பட்ட அடியேனின் ஆட்சியிலே தமிழ்நாட்டிலிருந்து மென் பொருள் ஏற்றுமதியின் அளவு 1914 கோடி ரூபாயாகும்.

மேலும் ஜெயலலிதா, 2001இல் ஆட்சிக்கு வந்த போது, அவர் 1996ல் ஆட்சியை விட்டு இறங்கும் போது உபரி நிதியை வைத்து விட்டுப் போனதாகவும், கழக ஆட்சியிலே பற்றாக்குறை ஏற்பட்டு விட்டதாகவும் கூறியிருந்தார். இதுவாவது உண்மையா?

ஜெயலலிதா ஆட்சியில் 1991-92 இல் நிதியமைச்சர் நாவலர் படித்த நிதி நிலை அறிக்கையில் இறுதிப் பற்றாக்குறை 575.35 கோடி ரூபாய். 1992-93 இல் இறுதிப் பற்றாக்குறை 619.09 கோடி ரூபாய். 1993-94 இல் இறுதிப் பற்றாக் குறை 635.89 கோடி ரூபாய். 1996-97ஆம் ஆண்டு தேர்தலுக்கு

முன்பு 20-2-96 அன்று நாவலர் படித்த நிதி நிலை அறிக்கையில் மொத்த நிதிப் பற்றாக்குறை 680.82 கோடியாக இருக்குமென்று குறிப்பிட்டாரே தவிர, உபரி நிதி என்று குறிப்பிடவே இல்லை. இதற்கு மாறாக ஜெயலலிதா ஆட்சியை விட்டு இறங்கியபோது 874 கோடி ரூபாய் கஜானாவிலே வைத்து விட்டு வந்ததாகக் கூறினார். பிறகு அவர்களே அதை மாற்றிக் கொண்டு, ஏன்? நேற்று சட்டப்பேரவையில் நிதியமைச்சர் பொன்னையன் கூறும்போதுகூட, முதலமைச்சர் ஜெயலலிதா 649 கோடி ரூபாயை ரொக்க இருப்பாக 1996ஆம் ஆண்டு விட்டுச் சென்றார் என்று தெரிவித்துவிட்டு, அதே நேற்றைய பேச்சின்போது 1996ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 1,255 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். (தினத்தந்தி-30-10-2002). அரசு கஜானாவில் ரொக்க இருப்பு இருக்கும்போது ஏன் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டது என்பதை அவர்தான் விளக்க வேண்டும்.

தேவைக்கு அதிகமாக நெல் கொள்முதல் தி.மு.கழக ஆட்சியிலே செய்யப்பட்டதாகவும் ஒரு குற்றச்சாட்டினை தொடர்ந்து கூறி வருகிறார்கள். ஆனால், சில மாதங்களுக்கு முன்பு ஜெயலலிதா ஒரு பேட்டியில் கூறும்போது, நல்லவேளை தமிழக அரசிடம் அரிசி போதுமான அளவிற்கு கையிருப்பு உள்ளது என்று கூறினார். கடந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு பதிலளித்த போது ஜெயலலிதா பேரவையிலே திட்டவட்டமாக அரிசி விலையை உயர்த்த மாட்டேன் என்றும், தேர்தல் வாக்குறுதியாக தான் அதனை அளித்திருப்பதாகவும், தேர்தல் வாக்குறுதி புனிதமானது என்றும், அதைக் காப்பாற்றுவேன் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். ஆனால், அந்தப் புனிதமான வாக்குறுதியை ஓராண்டு காலத்திற்குக்கூட காப்பாற்றாமல் கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய் அளவிற்கு அரிசி விலையை உயர்த்தியிருக்கின்றார்.

போக்குவரத்துத் துறையிலே நட்டம் ஏற்பட்டுள்ள காரணத்தினால்தான் கழக ஆட்சியிலே வழங்கப்பட்ட 20 சதவிகிதம் போனசை 8.33 சதவிகிதமாக இப்போது குறைத்து விட்டதாகக் கூறுகிறார்கள். கழக ஆட்சியிலே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கப்பட்ட போதும் நட்டத்திலேதான் போக்குவரத்துத் துறை இயங்கியது. 1996-97ஆம் ஆண்டு போக்குவரத்துத் துறையில் 311 கோடி ரூபாய்

நட்டம் ஏற்பட்ட போது 18 சதவிகித போனசும், 97-98 ஆம் ஆண்டு 229 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டபோது 19 சதவிகித போனசும், 98-99இல் 411 கோடி ரூபாய் அளவிற்கும், 99-2000இல் 318 கோடி ரூபாய் அளவிற்கும், 2000-2001இல் 233 கோடி ரூபாய் அளவிற்கும் நட்டம் ஏற்பட்ட போது 20 சதவிகித போனசும் கழக ஆட்சியிலே வழங்கப்பட்டது.

எனவே, ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்! உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்! என்பது போலத்தான் முதலமைச்சர் ஜெயலலிதாவின் விளக்க உரைகள் அமைகின்றன என்பதற்கு இந்தப் புள்ளி விபரம் நிறைந்த ஆதாரபூர்வமான பதிலே சான்று பகருகின்றன என்பதில் சற்றும் சந்தேகமில்லை!

அன்புள்ள,

மு.க.

31-10-2002

2831. இருட்டடிப்பைக் கிழிக்க இந்த முறை பயன்படட்டும்!

உடன்பிறப்பே,

அரசு ஊழியர், ஆசிரியர்கள் இலட்சக்கணக்கானோர், ஊதிய உயர்வு கேட்டு அல்ல - ஏற்கனவே தி.மு.க. ஆட்சியிலே வழங்கப்பட்ட உரிமைகளையும், சலுகைகளையும் ஜெயலலிதா அரசு பறித்துக் கொண்டதை எதிர்த்து - நடத்துகின்ற காலவரை யற்ற வேலை நிறுத்தத்தை புதிய புதிய அடக்குமுறை அதிரடிச் சட்டங்களைக் கொண்டு அடக்கப் பார்த்து, அது முடியாமற் போய்விட்ட காரணத்தால், அரசு அலுவலர்களையும், ஆசிரியர்களையும் பொது மக்களின் விரோதிகளாகப் படம் பிடிக்கும் முறையில் சட்டப் பேரவையில் பல தவறான புள்ளி விபரங்களையும், ஆதாரமற்ற தகவல்களையும், உண்மைக்கு மாறான செய்திகளையும் கூறி ஜெயலலிதா நீண்ட நேரம் பேசியதற்கு, ஆதாரபூர்வமாகவும், ஆணித்தரமாகவும், மறுக்க முடியாத புள்ளி விபரங்களுடனும் ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் என்ற தலைப்பில் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தேன்.

தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியின் தலைவன் என்ற முறையில் என் அறிக்கை - சென்னை மாலை முரசு இதழில் முழுமையாக வெளியிடப்பட்டது. மற்றும் முரசொலி, தினகரன், தினமணி ஆகிய இதழ்களில் முழுமையாகவும், மாலைமலரில் மட்டும் ஓரிரு கலம் செய்தியாகவும் வெளிவந்துள்ளது.

ஆனால் மற்ற மாலை ஏடுகளிலும், இன்று காலை தமிழ், ஆங்கில ஏடுகளிலும் விபரங்கள் நிறைந்ததும் - இந்த ஆட்சியாளர்களின் தவறான தகவல்களுக்கு விடையளிப்பதுமான - எனது விரிவான அறிக்கை இருட்டடிப்பு செய்யப்பட்டதன் காரணத்தை அறிய முற்பட்டேன்.

அந்த ஏடுகளின் அலுவலகங்களுக்கு தொலைபேசி உத்தரவு பறந்திருக்கிறது. அந்த உத்தரவுகளும், உத்தரவையொட்டி

நடைபெற்றிருக்கக் கூடுமென நான் யூகிக்கக் கூடிய உரையாடல்களும் படிக்கச் சுவையாக இருக்குமென்பதால் - கற்பனையானாலும் கல்லில் எழுத்து போன்ற உண்மையை உன் போன்ற உடன்பிறப்புகள் அறிந்துகொள்ள வேண்டுமல்லவா?

இதோ அந்தக் கற்பனை உரையாடல் காட்சி --

டிரிங்.....டிரிங்!

ஹலோ.....!

யார் பேசுறது எடிட்டரா?

ஆமாம்....எடிட்டர்தான் பேசுறேன்

எடிட்டர் வேண்டாம் - உங்க முதலாளியைக் கூப்பிடும்!

(சில நிமிடங்களுக்குப் பிறகு)

ஹலோ!. . .நமஸ்காரம்!. . .வணக்கம்.... நான்தான் பேசுறேன்!

யாரு முதலாளியா?

ஆமாங்க.....நான் தான் பேசுறேன்!

நான் பேசுறது யாருன்னு தெரியுமா?

தெரியுதுங்க. . . அம்மா பேசுறீங்க! அடியேன் ஆயிரம் தண்டனிட்டு வணங்குறேங்க!

அந்த நபரோட அறிக்கையை போடப் போறீங்களா?

எந்த நபருங்க?

அதான் மேன்! அந்தக் கருணாநிதி என்கிற நபர்!

போடறதுதானுங்களே நியாயம்! பத்திரிகா தர்மம்! ஆளுங்கட்சிக்கு ஆதரவாக யார் யாரு அறிக்கையோ போடுறோம் - அவரு அறிக்கையை போடுறது என்னங்க தப்பு?

என்னையே கேள்வி கேட்கிறீரா? வாயை மூடும்! பாக்கி பேரு அறிக்கை இருக்கட்டும்! இந்த நபரோட அறிக்கை புள்ளி விபரத்தை அள்ளிக் கொட்டி வந்திருக்கு! ஆதாரபூர்வமா அரசாங் கத்தை குற்றம் சாட்டியிருக்கிறாரு! அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு எதிராகப் பொது மக்களை தூண்டிவிடப் பாக்கிறோம் - அதை இந்த நபர் கெடுக்கிறார்! அரசு ஊழியர், ஆசிரியர்கள் கோரிக்கை

நியாயமானது போலவும், அதை அரசு மறுப்பதுதான் அநியாயம் என்பது போலவும், அரசாங்கம் போட்டுள்ள வரிகளையும், கட்டண உயர்வுகளையும் விளக்கிக்காட்டி எங்கள் முகத்திரையை கிழிக்க முயற்சி பண்ணியிருக்காரு! அதையெல்லாம் மூடி மறைக்காம அவரு அறிக்கையை அப்படியே வெளியிடுறதா?

அம்மா! முன்பு தி.மு.க. ஆட்சி நடந்த போதுகூட, அந்த ஆட்சிக்கு எதிராக நீங்க எத்தனையோ அறிக்கைகள் கொடுத் தீங்க - அதையெல்லாம் ஒரு வரி கூட குறைக்காமல் நாங்க வெளி யிட்டிருக்கிறோமே!

அந்த ஆட்சிக்கு எதிராக வெளியிடலாம் - என் ஆட்சிக்கு எதிராக வெளியிடப்படும் எந்த அறிக்கையும், அதிலும் குறிப்பாக கருணாநிதி என்ற நபரின் அறிக்கைகள் எந்தப் பத்திரிகையிலும் வெளிவரக் கூடாது என்பது என் கட்டளையாகும். இல்லையம்மா! என் மனச்சாட்சிக்கு இது ஒத்து வரவில்லை.

பொடா சட்டம்! ஞாபகமிருக்கிறதா? இப்போது உமது மனச்சாட்சி என்ன சொல்லுகிறது?

அம்மா இவ்வளவு பிடிவாதமாக சொல்லும்போது, எனக்கு என்ன ஆட்சேபணை? கருணாநிதியின் அறிக்கையை ஒரு வரிகூட வெளியிட மாட்டோம்.

சரி! பிழைத்துக் கொண்டீர்! -

எச்சரிக்கை! இனியாவது ஜாக்ரதையா.... இருங்கள்!

(தொலைபேசி உரையாடல் முடிகிறது)

உடன்பிறப்பே! முதல் நாள் மாலையிலேயே இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு என் அறிக்கை சில ஏடுகளில் இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டன.

கவலையில்லை! நீ இருக்கிறாய்! உன்னை நம்பி இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

என்னுடைய அறிக்கையை சில ஏடுகள் வெளியிட மறுத்துவிட்டாலும், வெளியிடாமல் மறைத்து விட்டாலும்,

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்! உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும் என்ற அந்த அறிக்கையை ஆங்காங்குள்ள கழக அமைப்புகளும், கழக அணிகளைச் சேர்ந்தவர்களும்

ஆயிரக்கணக்கில் அச்சியற்றி பொதுமக்களுக்கு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தலைமைக் கழகத்தின் சார்பிலும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அந்த அறிக்கை துண்டு வெளியீடாக ஆயிரக்கணக்கில் அனுப்பப்பட இருக்கிறது.

அவற்றையும் ஆங்காங்குள்ள கழக உடன்பிறப்புகள் பெற்று, பொறுப்புடன் பொது மக்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏடுகளின் இருட்டடிப்பைக் கிழிக்க இந்த முறை பயன்படட்டும்!

அன்புள்ள,

மு.க.

1-11-2002

2832. நாக்குத் தமிழ் மணக்கும் நாகரிக வார்த்தைகள்!

உடன்பிறப்பே,

இவர்களுடைய தலைவர் இந்துக்களை திருடன் என்று கூறுவார். தீ மிதிப்பது தவறு என்று கூறுவார். இவர்களின் தலைவர் உளறிக் கொட்டுகிறார். அதற்குப் பதில் சொல்ல முடியாமல் இவர்கள் இங்கே திணறுகிறார்கள்.

மத மாற்றத் தடைச் சட்டம் பேரவையில் நிறைவேறியபோது, முதல் அமைச்சர் ஜெயலலிதா உதிர்த்த வாசகம் இது!

இந்து என்றால் திருடன் என அர்த்தம் - இந்து மதம் தான் திராவிடர்களை சூத்திரர் என்கிறது என்று பெரியார் சொன்னதுகூட, இந்த அம்மையார் கூற்றுப்படி உளறல்தானா?

பெரியாரை சினிமா விழாவில் பார்த்து அவர் கையால் பரிசுபெற்ற ஒரு நிகழ்ச்சியைத் தவிர, அவரைப் பற்றி இந்த அம்மையாருக்கு வேறு என்ன தெரியும்?

அப்போதுகூட, ஏதோ தாடியும் மீசையுமாக இருக்கிறாரே! பெரிய சாமியார் போலிருக்கிறது என்றுதான் எண்ணிக் கொண்டிருந்திருப்பார்.

தீ மிதிப்பது ஏமாற்றுவித்தை - என்பதை எடுத்துக்காட்டத்தான் பெரியார் காலத்திலிருந்து இன்றைய திராவிடர் கழகத்தினர் வரையில் பக்தி சிரத்தை இல்லாமல் எல்லோராலும் தீ மிதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டுகிறார்கள்.

இந்த விபரமெல்லாம் பெரியார் வழியில், அண்ணா வழியில் மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வருகிறேன் என்று கூறுகிற ஜெயலலிதாவுக்கு தெரிந்திருக்க நியாயமில்லைதான்.

ஆனால் பாலப் பருவத்தில் பகுத்தறிவு பேசி, இன்று பதவியெனும் எச்சில் பண்டத்துக்காக நாக்கைத் தொங்கப்

போட்டுக்கொண்டு இனத்தையும் இலட்சியத்தையும் காட்டிக் கொடுத்துவிட்டு, தனியே சந்திக்கும்போது மட்டும் தன்மான வீரர் வேஷம் போடும் சந்தர்ப்பவாதிகளுக்கும் தங்களை யறியாமல் செய்யும் துரோகத்தை எண்ணிப் பார்க்க நேரமோ, நினைப்போ துளியளவுகூட இல்லையா?

மதமாற்றத் தடைச் சட்டம் பற்றி பேரவை விவாதத்தின்போது, நான் சிறுபான்மை மக்கள் தலித் மக்கள் மாநாட்டில் பேசியதை பெரிதுபடுத்தி திரிசங்கு சொர்க்கக் கட்சி எம்.எல்.ஏ. ஒருவரும், பா.ஜ.க. எம்.எல்.ஏ. ஒருவரும், இந்து மதத்தைப் பற்றி இந்திக் கலைக் களஞ்சியத்திலே இல்லாததையெல்லாம் நான் அந்த மாநாட்டிலும், அதையொட்டி பிறகு வழங்கிய விளக்கத்திலும் இட்டுக்கட்டிச் சொன்னதாகக் கூறியுள்ளனர்.

அது மட்டுமா? அந்த விவாதத்தின்போதுதான் தி.மு.க. உறுப்பினர்களைப் பார்த்து, முதலமைச்சர் ஜெயலலிதா தனக்கேயுரிய ஸ்பெஷல் பாணியில், இவர்களுடைய தலைவர் இந்துக்களைப் பற்றி வெளியே உளறுகிறார் என்று பிரலாபித்திருக்கிறார். அதற்கு நண்பர் ஆற்காடு வீராசாமி அவர்கள் அமைதியாகப் பதில் அளித்திருக்கிறார்! ஆதாரபூர்வ மான பதில் அது! ஆணித்தரமான பதிலுங்கூட!

காவேரி பிரச்சினையில் உள்ளேயே உளறிவிட்டு, நானும் மனுஷிதானே! அதனால் தவறுதலாகச் சொல்லிவிட்டேன் என்று தடுமாறியவர்தான் என்னைப் பார்த்து உளறியவன் என்கிறார். உளறுதல் என்ற உஷ்ணமான சொல்லுக்கு பதிலுக்குப் பதில்;

பிதற்றுதல்

புலம்புதல்

புளுகுதல்

மிரட்டுதல்

கத்துதல்

இப்படி எத்தனையோ சொற்கள் உண்டு. ஆனால் அவற்றைப் பயன்படுத்த விரும்பவில்லை. உளறுகிறார் என்ற சொல் அவைக் குறிப்பிலும் இடம் பெற்றிருக்கிறது. அரசு ஊழியர்களை இப்படிக் கொடுமைப்படுத்துவது அநியாயம், அக்ரமம் என்று சொன்னால்தான் அந்த இரு சொற்களும் அவைக் குறிப்பில் ஏறாது.

ஆனால் முதல்வர் சொன்னால் அது எவ்வளவு மோசமான சொல்லாக இருந்தாலும் - தக்க மரியாதையுடன் அது அவைக் குறிப்பில் ஏறிவிடும். வாழ்க ஜனநாயகப் பண்பாடு! - வாழ்க! வாழ்க!

பா.ஜ.க. எம்.எல்.ஏ. அந்த விவாதத்தில் பேசும்போது நான் இந்திக் கலைக் களஞ்சியத்தில் இல்லாதவைகளைக் குறிப்பிட்டதாக கூறியிருக்கிறார். எனக்கு இந்தி தெரியாதுதான். அதனால் தான் நான் எழுதிய குறளோவியத்தை இந்தியில் மொழி பெயர்த்து எழுதி வெளியிட்ட மொழி வல்லுநர் திரு. கண்ணன் அவர்களிடம் இந்திக் கலைக் களஞ்சியப் பக்கங்களை தமிழில் மொழி பெயர்த்து வாங்கி, அதையே மாநாட்டிலும், அதன் பிறகு விளக்க அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறேன். மத்திய அரசின் கல்வி அமைச்சரக உதவியுடன் வாரணாசி நாகரி பிரச்சாரணி சபா சார்பில் பழம்பெரும் தேசிய தலைவர் கமலபதி திரிபாதி அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1970ல் வெளியிடப்பட்ட விஸ்வ ஹிந்தி கோஷ் என்ற நூலில் ஹிந்து என்ற தலைப்பில் 360-361 பக்கங்களில் இடம் பெற்றுள்ள பகுதியின் தமிழ் மொழி பெயர்ப்பு வருமாறு :-

விஸ்வ ஹிந்தி கோஷ்
வெளியீடு : நாகரி பிரச்சாரணி சபா, வாரணாசி
உதவி : மத்திய அரசின் கல்வி அமைச்சகம்
விளக்கப்பகுதி : ஹிந்து

ஹிந்து என்ற சொல் ரிக் வேதத்தில் 8 : 24 : 27ல் நாடு என்ற பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றொரு இடத்தில் இதே சொல்லுக்கு பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஐந்து நதிகளுடன் சிந்து, சரஸ்வதி ஆகிய இரண்டும் சேர்ந்த ஏழு நதிகளைக் குறிக்கும் ஒரே சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வைதீக இலக்கியத்தில் ச என்ற எழுத்துக்குப் பதிலாக ஹ என்ற எழுத்தையே பயன்படுத்தி வந்துள்ளார்கள். இந்த முறையே இன்றும் தொடர்ந்து நடைமுறை வழக்கில் இருந்து வருகிறது. உதாரணமாக நிகண்டு என்ற இலக்கண நூலில் 1-13 என்ற வரியில் சரிதா என்பதை ஹரிதா பவதி என்று எழுதப்பட்டுள்ளது. ஸரஸ்வதியைக் குறிப்பிடும்போதுகூட ஹரஸ்வதி என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரான் நாட்டின் பழமைவாய்ந்த அவெய்ஸ்தா மொழியில் சிந்து தேசம், ஹிந்து தேசமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அங்கே ஹிந்து என்ற சொல்லுக்கு பாரத் என்று பொருள். பழைய பார்ஸி மொழியில் ஸிந்து சொல் ஹிந்து என்று எழுதப் பெற்றுள்ளது. அங்கும் இதன் பொருள் பாரதத்தையே குறிக்கிறது. (காண்க - கார்லபிரகமன்) - கம்ப்பேரிடிவ் கிராமர் ஆப் தி ஹிண்டோ - ஜெர்மனிக் லேங்வேஜஸ், இரண்டாம் பகுதி - பக்கம் 34) ஈரான் மொழியில் சம்ஸ்கிருத ஸ எழுத்து ஹவாக மாறிவிடுகிறது. உதாரணம் : கேஸரி - கேஹரி, மாஸ் - மாஹ், சப்தா - ஹப்தா. இவ்வாறே ஸிந்து என்ற சொல்லுக்கு ஹிந்து என்று பொருள் மாறி விளங்குகிறது. கிரேக்க, லத்தீன் மொழிகளில் இது ஹிண்டோ என்று சொல்லப்படுகிறது. இது ஆசியாவைக் குறிக்கும்.

அதன்பிறகு பிற்காலத்தில் பாரத தேசத்தின் மாநில மொழிகளில் ஸிந்துவை ஸிந்த் என்று கூறத் தொடங்கினர். அதே போன்று பார்ஸி மொழியினரும் ஹிந்து என்பதை ஹிந்த் என்று குறிப்பிடத் தொடங்கினர். ஈரான் நாட்டிலுள்ள பார்ஸி இனத்தின் புனித நூலான ஸாதீர் என்ற புத்தகத்தில் 162ஆவது ஆயத்தில் (வாசகத்தில்) பாரத தேசத்தின் பெயரை ஹிந்து, ஹிந்த் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதனை அடுத்த 163ஆவது ஆயத்தில் இதை உறுதி செய்வது போல (பாரதத்தில்) ஹிந்த் தில் வசிக்கும் மக்களை ஹிந்தி என்று கூறியுள்ளார்கள். இது எப்படி என்றால் ஸிந்த் மாநில மக்களை ஸிந்தி என்று அழைக்கப்படுவது போல ஆகும்.

இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாக மதம் மாறிய பிறகு பார்ஸி மக்கள் ஹிந்து என்ற சொல்லுக்கு (காபிர்) - குரூரமானவர், (காலா) - கறுப்பர், (லுட்டேரா) - கொள்ளைக்காரர், (குலாம்) - வேலைக்காரன் முதலிய வார்த்தைகள் சேர்க்கப்பெற்றன.

ஹிந்து என்ற சொல் ஹிந்து தேசத்தையும், பாரத தேசத்தின் ஒட்டு மொத்த மக்கள் அனைவரையும் சேர்த்துக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது எந்த சாதி, இனம், மதமாக இருந்தாலும் ஒரே சொல் ஹிந்து தான். உதாரணமாக மௌலானா ஜலாலுதீன் ரூமி எழுதிய பஹ்ரூல் உலூம் என்ற நூலிலும், மஸனவி மௌலானா ரூம் எழுதிய தப்தர் தோயம் என்ற நூலிலும் ஹிந்து தேஷ் என்ற சொல்லுக்கு பாரதத்தில் வசிக்கும் முஸ்லிம்

மக்களையும் சேர்த்தே ஹிந்து என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாமிய தர்மத்துடன் பாரதீய தர்மத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பாரதிய தர்மத்தை ஹிந்து தர்மம் என்று தனியே அழைக்க ஆரம்பித்தார்கள். மிகப் பெரிய அளவில் ஆரம்பத்தில் கூறப்பட்டு வந்த ஹிந்து தர்மம் காலப் போக்கில் குறுக ஆரம்பித்தது. இறந்த பின் பிணத்தை எரியூட்டும் வழக்கம் உள்ளவர்கள் அனைவருமே ஹிந்துவாக கருதப்பட்டனர். பிணத்தை பூமிக்கடியில் குழி தோண்டிப் புதைத்தவர்கள் அனைவருமே முஸ்லிம் என்றும், கிறித்தவர் என்றும் கருதத் தொடங்கினர். இதன்பின் இந்து என்ற சொல்லோடு தர்மம் என்ற சொல்லையும் சேர்த்த பிறகு அதன் எல்லை நாளடைவில் மேலும் குறுகியது. ஹிந்து மட்டுமல்ல, ஒவ்வொரு தனி மதத்தைச் சேர்ந்தவர்களும் இவ்வாறே குறுகி வந்தனர். இந்நிலையில் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் இந்து என்ற சொல்லை வெறுத்து ஒதுக்கினர். அதற்குப் பதிலாக ஆரிய என்ற சொல்லைப் பயன்படுத்தினர். ஹிந்தி மொழியின் பெயரையும் ஆரிய மொழி என்று குறிப்பிட்டனர். இந்து தர்மத்தைப் பிராமண தர்மம் என்று எண்ணிய பௌத்தர்களும், ஜைனர்களும் தங்களை ஹிந்து என்று சொல்லிக்கொள்ள மறுத்தார்கள். மீதமுள்ள இந்தியர்கள் தங்களை ஹிந்து என்று சொல்லாமல் சைவர், வைஷ்ணவர், சீக்கியர், ஷாக்த் என்று பல்வேறு மதங்களின் பெயரால் அழைத்துக் கொண்டனர்.

இஸ்லாமியர்கள் தனியாக அடையாளம் காட்டப்படுவதற்கு முன்பு இந்தியர் என்றே அழைக்கப்பட்டு வந்தனர். ஆனால் இதுவும் ஒருவாறு திணிக்கப்பட்டதுதான். ஏனெனில் இந்து என்ற பெயரில் ஒரு ஜாதியோ, இனமோ இல்லை. ஹிந்துக்கள் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்றே அழைக்கப்பட்டனர். அதுபோல் இந்து என்ற ஒரு மதமும் கிடையாது, நம்பிக்கையும் கிடையாது.

உடன்பிறப்பே, இவ்வாறு மத்திய அரசே பொறுப்பேற்று உதவியுள்ள ஒரு நூலில் இருக்கிற கருத்துகள் தவறு என்றால் உண்மைக்கு மாறானவையென்றால் அந்த நூலையே தடைசெய்யவேண்டுமே தவிர, அல்லது அந்தக் கருத்துகளின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுக வேண்டுமே தவிர,

அதனை எடுத்துக் காட்டுகிறவன் மீது எரிந்து விழுந்து என்ன பயன்?

உளறுகிறான் என்று உயர்ந்த பண்புடன் உரைப்பதால்தான் என்ன பயன்? பரம்பரை பற்றி அறிக்கை விட்டாயிற்று! நபர் என்று குறிப்பிட்டாயிற்று! உளறுகிறார் என்று உரைத்தாயிற்று!

இவையனைத்தும் அம்மையாரின் அண்மைக் காலத்து, நாக்குத் தமிழ் மணக்கும் நல்வார்த்தைகள்! நாகரிக(?) வார்த்தைகள்!

பொறுத்துக் கொள்வோம்!

அன்புள்ள,

மு.க.

2-11-2002

2833. அந்த சொற்களை உரியவருக்கே உடைமையாக்குவோம்!

உடன்பிறப்பே,

தற்கொலை செய்துகொண்ட ஆசிரியர் குடும்பத்துக்கு, மலிவான அரசியல் இலாபத்துக்காக தி.மு.க. நிதி உதவி வழங்கியது என்று கல்வி அமைச்சர் தம்பிதுரை ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்!

அது அறிக்கை அல்ல! அம்மாவை திருப்திப்படுத்த பிடிக்கும் காக்கை!

அண்மையில் நடைபெற்ற அரசு அலுவலர் - ஆசிரியர் வேலை நிறுத்தப் போராட்டத்தையொட்டி, பொள்ளாச்சி பகுதியைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் காசிபாண்டியன் தீக்குளித்தும், தேனி தேவதானப்பட்டியைச் சேர்ந்த ஆசிரியர் அப்துல் சத்தார் தற்கொலை செய்துகொண்டும் மாண்டதை முன்னிட்டு அவர்கள் குடும்பத்துக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் தி.மு.க. அறக்கட்டளை சார்பாக முறையே பொங்கலூர் பழனிசாமி மூலமாகவும், தேனி மூக்கையா மூலமாகவும் வழங்கப்பட்டதை யொட்டித்தான் அமைச்சர் தம்பிதுரை இது மலிவான அரசியல் என்று கருத்தறிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தி.மு.க.வும் சரி! தி.மு.க. அறக்கட்டளையும் சரி! மற்றும் முரசொலி அறக்கட்டளையும் சரி - இவை போன்ற எத்தனையோ நிகழ்வுகளில் எத்தனையோ பேர்களுக்கு - அவர்களைக் கௌரவிக்கும் முறையிலும் - ஒரு சிலருக்கு, அவர்களுக்கோ அல்லது அவர்களின் குடும்பத்திற்கோ உதவிடும் முறையிலும் நிதி வழங்கி வருகிறது. மாணவர்களை ஊக்கப்படுத்தும் முறையில், 1997இல் தொடங்கி இதுவரையில் சுமார் 41 இலட்சம் ரூபாயும், ஆட்டோ ஓட்டுநர் போன்ற தொழிலாளர்களை உற்சாகப்படுத்திடும்

முறையில் 1999இல் தொடங்கி இதுவரையில் சுமார் 5 இலட்சம் ரூபாயும், கலைஞர் விருது என்ற தலைப்பில் 96இல் தொடங்கி இதுவரை 17 இலட்சம் ரூபாயும் முரசொலி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு நிவாரணப் பணிகளுக்காகவும், மாணவர்களுக்காகவும் தி.மு.க. அறக்கட்டளை சார்பில் சுமார் 58 இலட்ச ரூபாய் 1985ஆம் ஆண்டு தொடங்கி இதுவரையில் உதவி நிதிகளையும், பொற்கிழிகளையும், நினைவு விருதுகளையும் நீண்ட காலமாக ஆண்டுதோறும் வழங்கிவருவதை அனைவரும் அறிவார்கள். இவற்றையன்னியில், எதிர்பாராமல் இன்னலுற்றோர், விபத்துக்கு ஆளானோர், பாதிப்புக்குள்ளான குடும்பத்தினர் போன்றோர்க்கு அவ்வப் போது இந்த அறக்கட்டளைகளின் சார்பில் உரிய நிதியும் கணிசமாக வழங்கப்பட்டு வருகிறது.

வெற்றிச்செல்வி அன்பழகன் கண் மருத்துவமனை சார்பாக, 1988 முதல் 2002 வரை சுமார் ஒரு இலட்சம் பேர் கண்ணொளி பெற்றுள்ளனர். இன்றைக்கும் அண்ணா அறிவாலயத்தில் உள்ள அந்த மருத்துவமனையில் நாள்தோறும் ஐம்பதுக்கு குறையாத கண் நோயாளிகள், தகுந்த டாக்டர் குழுவினரிடம் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக ஒரு நிகழ்வு எனக் கூறத்தக்க வகையிலேதான், தீக்குளித்து இறந்த நல்லாசிரியர் காசி பாண்டியன் குடும்பத்துக்கும் - தற்கொலை செய்துகொண்ட அப்துல் சத்தார் குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் தி.மு.க. அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டது.

இதில் என்ன மலிவான அரசியலை மதியூக மந்திரியார் கண்டுபிடித்தார்?

சில அறக்கட்டளைகளைப்போல இலட்ச ரூபாய் என அறிவித்து விட்டு, 50 ஆயிரம் ரூபாய் மட்டும் தலைமையிலிருந்து கொடுத்து, இலட்ச ரூபாய்க்கான ரசீது எதுவும் கிழிக்கப்பட்டுள்ளதா? அல்லது அறிவிக்கப்பட்ட இலட்ச ரூபாயில் 50 ஆயிரம் ரூபாய் மாவட்டத்தில் ஒத்துக்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டு, அந்தத் தொகையை கறுப்புப் பணக் கணக்கிலே மேலிடத்து நிதி குவிக்கப்படுகிற அவலட்சண வேலை இந்த அறக்கட்டளைகளில் நடைபெறுகிறதா?

இரு ஆசிரியர்களின் குடும்ப நிதி அறிவிக்கும் போதே, தி.மு.க. தலைமை வெளியிட்ட அந்த அறிவிப்பில் எவ்வித அரசியல் அடிப்படையுமின்றி, அரசின்மீது கூட குற்றஞ்சாட்டாமல் - அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டத்தையொட்டி உயிர்நீத்த - என்ற அளவுடன்தான் வாசகம் அமைந்திருந்தது, இதில் எங்கே அரசியல் இலாபம் இருப்பதாகக் கல்விக் கூடங்கள் மூலம் கனத்த இலாபமடையும் அமைச்சர் கண்டுபிடித்துக் கதறுகிறார்?

இரு ஆசிரியர்கள் இறந்துபட்டனர் - அவர்களில் ஒருவர் அப்துல் சத்தார் - அவர் செய்த குற்றம் சிறுபான்மை சமுதாயத்திலே பிறந்ததுதான் - அவருடைய துணைவியாரும் ஆசிரியைதான் - கணவனை இழந்த அந்த அம்மையார் வஹிதா அவர்களின் கண்ணீரைக் கூட அலட்சியப்படுத்தி விட்டு, அப்துல் சத்தாருக்கு எயிட்ஸ் நோய் இருந்ததாக அமைச்சரும், போலீசாரும் சந்தேகப்படுகிறார்களாம் - அதுவும் நிச்சயமான உண்மை அல்லவாம்! சந்தேகம் தானாம்.

மனிதன் என்றால் அவனுக்கு ஏதாவது ஒரு நோய் இருக்கத்தான் செய்யும் - கைகால் பிடிப்பு, முதுகு வலி, காசம், இருமல் - இப்படி உடன்பிறந்தே கொல்லும் நோய்களும் உண்டு - உடன்பிறவாமல் வந்து ஒட்டிக்கொள்ளும் நோய்களும் உண்டு - ஒருவன் அநியாயமாகச் சாகிறான் - அவன் குடும்பத்துக்கு உதவும் போது, செத்தவனுக்கு என்ன நோய் இருந்தது என்று ஆராய்ச்சி செய்து கொண்டா பிறகு உதவி செய்ய முடியும்!

அந்த ஆராய்ச்சியை வேண்டுமானால் அமைச்சர் செய்துகொண்டிருக்கட்டும். அவருக்கு வேறு வேலை இல்லை என்பதால்!

* இறந்துபோன ஆசிரியர் குடும்பங்களுக்கு தி.மு.க. நிதி வழங்கி தன்னுடைய அறியாமையைப் பறைசாற்றியுள்ளது.

* பாதிக்கப்பட்ட ஆசிரியர் குடும்பங்களுக்கு இத்தொகை பயனளிப்பதாக இருந்தாலும், நோக்கம், கீழ்த்தரமான அரசியல் செய்வதுதானே!

இந்த வாசகங்கள் இரண்டும் அமைச்சர் தம்பி துரையின் மூளையில் உதித்து அவரது அறிக்கையில் இடம் பெற்றவை.

அறியாமை

கீழ்த்தர அரசியல்

இரு சொற்களும் அமைச்சர் நம்மை நோக்கி வீசியவை!

நாம் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே அந்த இரண்டு சொற்களும் உரியவரிடமே போய்ச் சேர்ந்துகொள்ளட்டும்!

அன்புள்ள,

மு.க.

7-11-2002

2834. ஒன்று சொல்வீராயினும் நன்று சொல்வீர்!

உடன்பிறப்பே,

24.3.1968 அன்று வாணியம்பாடி இசுலாமியா கல்லூரியில் "ஐம்புலன் என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமைக் கவிதை

பகைவர்க்கு தாழாமல் படைகண்டு வீழாமல்
பல்லூழி வாழ்கின்ற தமிழ் எடுத்துப் பாடவந்த
கல்லூரிப் பெருமன்றில் இருக்கின்ற பெரியோரே
பேரன்பு கொண்டோரே நல்இளஞ் சிங்கங்கள்
தாயன்பு தழைக்கின்ற நெஞ்சோடு ஏற்றிடுவீர் என்
வணக்கம்!

மெய் வாய் கண் மூக்குச் செவியென்று
ஐம்புலன் பற்றிக் கவியரங் கொன்று
அமைக்கின்றோம் ஐய நீ வருக என்று
அப்துல் ரகுமான் அழைத்திட்டார்....
வாயால் சொன்னார் கவியரங் கென்று,
எனைக் கவியெனக் கொண்டாரே யென்று
மெய்யெலாம் சிலிர்க்க, மெய்யா என்றேன்.
கண்சிமிட்டி ஆமென்றார், கேலியோ என்னவோ?
பின்னர் அவர் போட்ட கடிதமொன்று
படித்துப் பார்த்தேன், கண்ணாவல்தான்!
பாடுதற்கு வா என்றே மீண்டும் அழைப்பு.

கார் விபத்தில் அடிபட்ட மூக்கினிலே சிறுசிகிச்சை;
போவதற்கு ஆமோ என்று பேசாதிருந்தேன்....

விடவில்லை என் தோழர்.
விடுவிடெனத் தொலைபேசி மணி அடிக்கச்
செவியினிலே ரகுமானின் குரல் கேட்டேன்.
வாயால் அழைத்து மெய்சிலிர்க்க வைத்துக்
கண், பார்க்கக் கடிதம் அனுப்பி

மூக்கிலே நோய் எனினும் முக்காலும் விடமாட்டேன் எனச் செலவு

நோக்காமல் செவிகுளிரத் தொலைபேசிக் கூப்பாடு

போட்ட பின்னர் நான் வராவிட்டால்

தாக்காமல் இருப்பீரோ நீவிர் எனப் பயந்து

பூக்காமல் இருக்கின்ற கவியரும்பு கட்டிக் கொண்டு ஓடிவந்தேன்!

காலையரும்பு என் கவியரும்பு

மாலைவந்தால் மலருமென்றே நம்பி வந்தேன் - மாலையிலே

அழகுநிலா ஒன்றிருந்தால் அல்லிமொட்டு மலருமென்பர்; இங்கு

ஐந்தாறு நிலா அழகுக் கவிகள் நிலா இருப்பதாலே

நான் அள்ளி வந்த அரும்புகூட மலருமன்றோ?

மலராவிட்டால் நிலவின் குற்றம்

எனைக் கவியென்று நினைத்தோர் குற்றம்.

வண்ணமிகு குன்றங்கள் இருக்கின்ற வடார்க்காட்டில் - என்

எண்ணமெலாம் இனிக்கின்ற நட்புக் காட்டும் முல்லைக்கொம்மை

இன்னலொன்று எனக்கென்றால் துடித்திட்ட தோழருண்டு; அந்தக்

கன்னல்நிகர் முல்லைக்கு! வருவதென்றால் அடங்காத ஆவலுண்டு....

அதனாலே அருகில் வந்தேன்
ஆடி அடங்கிடும் மெய்யென்பார்
பாடி அடங்கிடும் வாய் என்பார்
தேடி அடங்கிடும் கண் என்பார்
வாடி அடங்கிடும் மூக்கென்பார்
நாடி அடங்கிடும் செவியென்பார்

இந்த ஐம்புலன் அடக்குதல் நன்றென்பார்!
அஃதெங்ஙனம் முடியும்?
பைம்புள் பாட்டை மறுக்குமோ செவியும்?
பைங்கிளித் தழுவலை மறுக்குமோ மெய்யும்?
பழத்தமிழ் பேச மறுக்குமோ வாயும்?
பலாச்சுளை நிலவை மறுக்குமோ கண்ணும்?
பனிமலர் நறுமணம் மறுக்குமோ மூக்கும்?
ஐம்புலனை அடக்குதற்குத் தவம் புரிந்த
அண்டமா முனிவரெல்லாம் அப்பாடா!
எப்பாடுபட்டுவிட்டார்...

அரசு கட்டில் மணிமகுடம் அனைத்தும் துறந்து
அடவியிலே துறவியாக இருந்திட்டார் விசுவாமித்திரர்;
அவர் மேனகையின் விசுவாசமித்திரராய் ஆனகதை
அறியீரோ? அதுபோலக்

கண் செவி மூக்கு வாய் மெய் புலன் ஐந்தும்
கடிவாளமில்லாத குதிரைகளாய்க்
காட்டாற்று வெள்ளமாய்ப் பெருகியோடக்
கண்ணிருந்தும் குருடாய்க் – காதிருந்தும் செவிடாய்.
புண்பெற்ற மெய் – புலம்புகின்ற வாயோடு
போக்கற்று நின்றிருந்த அருணகிரி வரலாறும்
அறிந்திடுவீர்.

எதுவும் ஒரு அளவாக இருத்தல் வேண்டும்
அதுவும் மிக நிலையாக இருக்க வேண்டும்
என்பதற்கு இரண்டு கதை சொன்னேன்.

கத்தியுளது கரத்தில் என்று; குத்திடவும் செய்யாதே
புத்தியுடன் அதனாலே பழமறுத்துத் தின்றிடவும்
தயங்காதே!

முத்தியடைவேன் என்று
ஐம்புலனை இயக்காமல் இருப்பதுபோல் நடிப்பதும்
சூது!
ஐம்புலனை அவிழ்த்துவிட்டுக் கோயில் மாடாய்த்
திரிவதும் தீது!
ஐம்புலனில் ஆளுக்கொரு புலன் எடுத்து
அரங்கேற வந்தவரே ஒரு வார்த்தை!
இந்தக் கல்லூரி அரங்கினில் கவியை ஏறவிடுவோர்

அவர்தம் பொருளே பெரிதென்பீர்; கவிஞர்களே! நீங்கள் எடுத்த பொருளே பெரிதென்று வாதிடும்போது

ஓர் எச்சரிக்கை!

மெய் பெரிதானால் ஊரார் யானை என்பர்
கண் பெரிதானால் கோட்டான் என்பர்
மூக்கு பெரிதானால் குட மிளகாய் அன்றோ
வாய் பெரிதானால் வாயாடிப் பட்டமுண்டு
செவி பெரிதானால் முறம் என முனகிடுவர்

அதனாலே

அளவறிந்து அவரவர் பொருளைப் பேசிடுவீர்
வம்பென்றால் விலக்கிவிடுவேன் - கவிஞரிடை
வம்பென்றால் களித்திருப்பேன் .. தமிழ்க்
கம்பெடுத்துச் சொற்சிலம்பம் ஆடிடுவீர்; கவி
அம்பெடுத்துத் தாக்கிக் கொள்வீர்; அதே நேரம் கனிந்த
அன்பெடுத்துத் தாங்கிக் கொள்வீர்!
சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின்
வகை தெரிய விரித்துரைப்பீர்.
பகை வழி வெற்றி வீம்பு பாட்டினிலே வைத்து

நகை நட்பு நாம் என்ற உணர்வு நெஞ்ச ஏட்டினிலே வைத்து

எழுந்திடுவீர் போருக்கு!
சின்னச்சேவல் சண்டை; காசுக்கு!

மன்னர் போடும் சண்டை; நாட்டுக்கு! நீங்கள் போடும் சண்டை; பாட்டுக்கு!

நாங்கள் காணும் சண்டை; தமிழுக்கு! முதலில் மெய் எனும் பொருள் பற்றி நெய்யொழுகும் கவியொன்று பெய்திடுவார் சாகுல் அமீது அவர் என்ன சொல்வார்? மெய்யின்றிக் கண்ணில்லை மூக்கில்லை வாயில்லை செவியில்லை.... மெய்தானே அனைத்துக்கும் ஆதாரமென்பார்! அது மெய் தானே? அதாவது அவர் அப்படிச் சொல்லப் போவது மெய்தானே? அவர்க்குத் துணையாக வள்ளுவரும், மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் என்றார். மெய்யா பொய்யா எனும் வாதத்திடையே கொய்யாக் கனிசுவைப்போம். சற்றுக் காத்திருப்போம். சாகுல் அமீதின் தமிழ் கேட்போம். ***

அடுத்து, முருகுசுந்தரம் வருகின்றார்.... வாயின்றிப் பாடுதல் முடியாதென்று வழக்குரைப்பார். முடியுமா என்று என்னைத் தீர்ப்புக் கேட்பார்.... நான் திகைப்பேன்; தீர்ப்பையும் வாயால் தானே சொல்ல வேண்டும் என்பார்! ஏன்? தீர்ப்பைக் கையாலும் எழுதிக் காட்டலாம் என்பேன். நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்

விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் எனும் வள்ளுவர் கருத்தை நண்பரின் வாய்க்கு அவலாய்த் தருவேன் அவர் வாய் பற்றிப் பாடிடுவார்; நாம் வாய் பொத்திக் கேட்டிடுவோம்! ***

அடுத்து, கண் பற்றிப் பாட அரங்கின் கண்

வருகின்றார் ராசேந்திரன்! என் கண் இவர் கவிதை கண்டதுண்டு. அவை, தேன் சீனி கற்கண்டு. வாய்ச் சொற்கள் என்ன பயனுமில கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின் என வாதாடப் போகின்றார். வள்ளுவரும் அவர் குறளில் கண் என்ற சொல்லுக்கே மிகுந்த இடம் தந்துள்ளார். கூற்றமோ? கண்ணோ? ஒரு குறளில் - கொடும்புருவம் எனத் தொடங்கி இவள்கண் என முடியும் ஒரு குறள் - இருநோக்கு இவளுண்கண் உள்ளது எனப் பறைசாற்றும் பிறிதோர் குறள் - 'மலரன்ன கண்ணாள் மற்றோர்

குறள் கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மையான் உண்டிவ் வுலகு. இப்படிப் பல்வேறு குறட்பாக்கள் இவர்பக்கம் இருப்பதால் எப்படித் தீர்ப்பு நான் கூறுவேன் என்று நினைக்காதீர்! இந்த ஐம்புலனிலும் சிக்காத மூளையாலே சிந்தித்துக் கண்திறந்து தீர்ப்பளிப்போம். அதுவரையில் கண்மூடி இவர் கவிதை இன்பத்தில் மயங்கி நிற்போம்.

★

அடுத்து, தமிழன்பன் மூக்குடைக்கப் போகின்றார் இரு கண்ணுக்குத் தேவையுள்ள கண்ணாடியை இடையிலுள்ள மூக்குதான் சுமந்த போதும் மூக்காடி என்று பெயர் வேண்டாம். கண்ணாடி என்றே இருக்கட்டும் என்று விட்டுத் தந்த பரந்த உள்ளம், ஆத்தாடி எப்படித்தான் வந்ததுவோ மூக்கிற்கென்று முரசறைவார் போருக்கு! மோப்பத்தால் அனிச்சமலர் குழைய வைக்கும் மூக்கென்றார் வள்ளுவரும். மூக்கின்றி மூச்சில்லை, அதனாலே தன் பக்கம் தீர்ப்பளிக்க வேண்டுமென்று நண்பர் கேட்டால் நான் வாயாலே மூச்சு விட்டுக் காட்டிடுவேன்.... மூக்கு பற்றிப் பாடுகின்ற தோழருக்கு முன்னாலே நிற்காமல் அவர் கவிதைப் போக்கு பற்றி எண்ணிடுவோம் - பாக்கு வைத்துத் திருமண அழைப்புத்தான் தந்திடுவர்; இங்குப் பாக்கு வைத்துத் தமிழ் மணம் பருகவன்றோ அழைத்துள்ளார் -பருகிடுவோம்! ***

அடுத்து, அலைபாடுங் கடல் போலக் கலைபாடும் மாமல்லபுரம் போலக் கவி பாடும் பொன்னிவளவன் இருக்கின்றார்.... காவிரியின் வளவன் கரிகால் வளவன் கரிமேனி வளவன் இவர். ஆனால் கம்பீரத் திருமேனி வளவன்..... செவி பற்றிச் செப்பிடவே வருகின்றார். செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்து ளெல்லாம் தலை என்ற குறள் காட்டி வெற்றிப் பரிசு கேட்டிடுவார். உண்மையது; வாதத்துக்காக! ஆனால்.... கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப; வாய் மொழிந்தால்தானே செவியேறி அது செல்வமாகும் என நான் கூறிப் பிழைத்துக் கொள்வேன்! நடக்கட்டும் அவர் வாதம்! நம் செவியேறி இனிக்கட்டும் செந்தமிழ் கீதம்! செவிமடுப்போம் உம் கவிதை! வருவீர் ஐயா! வந்து விட்டார் வளவன் நான் சொன்ன நிறம் காண்பீர்! கவித்திறம் காண்பீர்! எம் இருவரையும் இணைத்துப் பார்ப்பின் இருவண்ணக் கொடி காண்பீர்....!

தலைவர் கலைஞர் முடிவுரை :- பாவலர்க்குப் பட்டாடை போர்த்தும் நாட்டில் மெய் வாய் கண் மூக்குச் செவியென்று - தமிழ் நெய்து நமக்கெல்லாம் பட்டாடை போர்த்திவிட்டார் ஒன்றையொன்று தாக்கி உறுமுகின்ற பாட்டெல்லாம் கேட்டிருந்தோம். கொன்றையணி செஞ்சடையில் சந்திரனும் கங்கையுமே சண்டையிட்டால் சிவனார்க்குத் தலைவலி தான். ஆனால் என் தலைமையில் கவிச் சண்டை களச்சண்டை! தமிழ்க் கற்கண்டை இணைத்த சண்டை! மெய் பெரிது என்றவரோ வாயின்றி வாழ எண்ணார். வாய் பெரிது என்றவரோ செவிடாக இருக்க ஒண்ணார். கண்ணழகு என்றவரோ மூக்கழகு குறைக்கத் துணியார். மூக்கழகு என்றவரும் கண்ணின்றி முட்டிக் கொள்வேன் என்பாரா? இவை அத்தனையும் அமைந்தவரே அவையேறிப் பாடி நின்றார். ஆகையினால் இது வீண் வம்பா என்றால், இல்லை வீணைத் தமிழ் வம்பு! அறிவைச் சாணை பிடிக்கின்ற வம்பு! இந்த வம்பு நாடெங்கும் நடைபெற்றால் புலமை மிகும்! புதுமை தோன்றும்! தமிழுக்குப் புதிய வாழ்வு வரும்! தொடர்ந்து செய்வீர் இந்தத் தூய பணி! மூக்கினிலே மூச்சு போகும் வரையினிலே முத்தமிழ்க்குத் தொண்டு செய்வீர்! போனபின்னும் புகழாலே தமிழ் காப்பீர் கண்கொண்டு காண்பதனைத்தும் கவிதையாக்குவீர் எழுச்சிக் கவிதையாக்குவீர் அதனைச் செயல்படக் கடமை தொடக்குவீர் கடமை தொடக்குவீர்! செவியில் நல்லது கேட்டு, அல்லது விடுத்துச் செந்தமிழர் நலம் பாட வாய் திறப்பீர்! ஒன்று சொல்வீராயினும் நன்று சொல்வீர்! நான் உரைத்திட்ட இவையின்றி இருப்பதற்கே, உடல் என்றால், அது மெய்யல்ல பொய்யே ஆகும்.

அன்புள்ள,

மு.க.

7-11-2002

2835. இவர்களை எந்த வரிசையில் நிறுத்திப் பார்ப்பது?

உடன்பிறப்பே,

வெட்டுண்ட புண் மீது மிளகாய்ப் பொடி தூவி வேடிக்கை பார்ப்பது, துக்கத்தில் தோய்ந்திருப்போரிடம் நேரம் காலம், நிலைமை தெரியாமல் சிரிப்புத் துணுக்குகள் சொல்லி இங்கிதமின்றி நடந்து கொள்வது - இதுபோன்ற நடவடிக்கைகள் முறையே குரூரச் செயல் என்றும், குருட்டுத்தனம் என்றும் கருதப்படும்.

யார் எப்படிக் கருதினால் என்ன என்று அதைப் பற்றிக் கவலைப்படாமல், மேற்சொன்ன குரூர மனப்பான்மையுடனும், குருட்டுத்தனமுடனும் ஒரு சிலர் எழுதுவதும், பேசுவதும் அவர்களைப் பொறுத்தவரையில், வியாபார ரீதியில் லாபகரமாக இருந்தாலும் கூட, அவர்களுக்கும் மனசாட்சி, மனைவி மக்கள், இருப்பதையே அல்லது இருந்ததையே மறந்துவிட்டு நடந்துகொள்கிறார்களே என எண்ணும்போது நாகரிகம் என்ற பண்பாடு நமது பிடிப்பிலிருந்து விடுபட்டு வெகு தொலைவு போய்விட்டதோ என்ற வேதனையே மேலிடுகிறது.

என்னைப் பொறுத்தவரையில், பொது வாழ்க்கையிலும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, எத்தனையோ சோதனைகளை எதிர்கொண்டு, இலட்சியத்தில் வழுக்கலின்றி, சொந்த வாழ்க்கையில் வரும் துன்பங்களுக்காக, பொது வாழ்க்கையின் இடைவிடாத் தொடர் பணியை என்றைக்குமே தவிர்த்துவிட்ட தன்னல நோக்கு படைத்தவனல்ல என்பதை, உன் போன்ற உடன்பிறப்புகளும், உடன்பிறப்புகளனைய பிறகட்சி உற்ற நண்பர்களும் நன்கறிவீர்கள்.

என் தந்தை மறைந்தபோது, தாரத்தை சாவுக்குப் பறிகொடுத்தபோது, அவ்வமயம் அவர்களின் அருகில் இருக்க முடியாத அளவுக்கு அமைந்தது என் பொதுவாழ்வுப் பயணம் -

கடமை உணர்வும், அதற்கீடான இளமை வலிவும் அன்றைக்கு என் உள்ள உறுதியைப் பல மடங்கு உயர்த்திப் பிடித்தது.

இன்றைக்கும் அந்த உறுதிக்கு ஊனம் ஒன்றும் விளைந்து விடவில்லை. என் உடல் வலிவைவிட வேகமானதாகத்தான் உள வலிவு அமைந்துள்ளது. ஆயினும் 14 வயது முதல் 65 ஆண்டுக் காலப் பொது வாழ்க்கையில் அடிபட்டு, மிதிபட்டு இன்று தளர்வுற்ற உடலுடன் 79வது வயதிலும் இயன்றவரையெல்லாம் உழைத்துக் கொண்டுதானிருக்கிறேன். நாள்தோறும் எழுதிக் கொண்டுதானிருக்கிறேன். இடையில் வந்து சென்ற ஆட்சிப் பொறுப்புகளும்கூட, எனக்குற்ற உழைப்பாளி என்ற உருவைச் சிதைத்திட முனைய வில்லை. முனைந்தாலும் அது முடியாத காரியம்.

ஆனால் இவற்றுக்கிடையேதான், ஏறத்தாழ இரண்டுமாத காலமாக என் இதயத்தைக் கசக்கிப் பிழிந்துகொண்டிருக்கும் கவலையொன்று என்னை வளைத்து இறுக்கிக் கொண்டிருக்கிறது. முரசொலியில் கடிதம் எழுதத் தொடங்கும் போதெல்லாம், இந்த முரசின் ஒலி ஓங்கி எழும்பிட எனக்குத் துணை நின்றவரும், நிற்பவருமான தம்பி முரசொலி மாறன், கடந்த ஆண்டு காவல் துறையினரால் பட்டபாடும், இந்த ஆண்டு - இரண்டு திங்களாக மருத்துவ மனையில் படும் பாடும், என்னை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறியாத உடன்பிறப்பல்ல நீ!

இத்துணைத் துன்ப துயரத்திலும், இயக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகிறானே! மருத்துவமனையில் மாறனுடன் பாதி நேரம் - மீதி நேரம் முரசொலி, அண்ணா அறிவாலயம் என்று அயராது உழைக் கிறானே - மருத்துவமனையில் இருந்து ஒவ்வொரு நாளும் வருகிற திடுக்கிடும் செய்திகளுக்கிடையேயும் கடமையிலும் கண்ணாக இருக்கிறானே! என்று நான் யாரிடமும் பாராட்டுரையை யாசிக்கவில்லை. ஆனால் தமிழ்நாட்டில், சில ஏடுகளில் வெளிவரும் கற்பனைச் செய்திகளை எண்ணிப் பார்த்துத்தான் நெஞ்சம் வெதும்புகிறேன்.

தம்பி வைகோ அவர்கள், பொடா சட்டத்தில் கைதாகி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு குடும்ப உறவு காரணமாக, மாறன் உடல்நிலை

விசாரிக்க வைகோவின் குடும்பத்தினர் வந்து சென்றனர். தம்பி எல்.ஜி. வந்தார். தம்பி கண்ணப்பன் வந்தார். நானும் தம்பி துரைமுருகனை வேலூருக்கு அனுப்பி வைகோவின் நலம் விசாரிக்கச் செய்தேன். மாறனின் இந்த உடல்நிலையிலும் சிறு இடைவெளி அமைத்துக் கொண்டு, நானும் வேலூர் சென்று வந்தேன்.

இவை செய்திகள்! அவ்வளவே! ஆனால் இந்தச் செய்திகளுக்கு கண், காது, மூக்கு வைத்து, கருணாநிதி ஏன் வேலூருக்குத் தாமதமாகப் போனார்? போனதற்குக் காரணம் வைகோவின் துணைவியார், கருணாநிதியின் துணைவியார் செய்த ஏற்பாடுதான்! எனச் செய்திகள் தொடருகின்றன.

"கொஞ்சநாள் கழித்துதான் வைகோவை சந்திக்கலாம் என்று நினைத்திருந்தாராம் கருணாநிதி. வைகோ குடும்பத்திலிருந்து நிச்சயம் சந்திக்க வேண்டும் என்று உருக்கமான வேண்டுகோள் வந்ததுதான் இந்த அவசர சந்திப்புக்குக் காரணமாம்.

கருணாநிதி-வைகோ திடீர் சந்திப்பின் பின்(முன்)னணியில் இல்லத்தரசிகளின் சந்திப்பு இருந்ததாக அறிவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரு தலைவர்களின் இல்லத்தரசிகளும் சமீபத்தில் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள கற்பகம் அவென்யூவில் சந்தித்ததாக ஒரு தகவல்.

கணவர் மிகவும் கவலையாக இருக்கிறார். தலைவர் (கருணாநிதி) நேரில் சந்தித்து ஆறுதல் கூறினால், அவர் உற்சாகமாகி விடுவார் என்று வைகோவின் மனைவி வேண்டுகோள் வைக்க, அந்த கோரிக்கை உடனடியாக கருணாநிதியின் காதுக்கு போனது. இதுதவிர, வேறு ஒரு முக்கிய கோரிக்கையும் வைகோ குடும்பத்திலிருந்து கருணாநிதிக்கு சென்றுள்ளது. இதை யடுத்தே, தனது வேலூர் பயணத்தை கருணாநிதி திடீரென்று முடிவு செய்ததாக கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்புக்கு வைகோ குடும்பத்தினர் அதிக ஆர்வம் காட்டியதற்கு முக்கிய காரணம் இருப்பதாக கூறப்படு கிறது. வைகோவை ஜாமீனில் வெளியே கொண்டு வர

அவர் குடும்பத்தினர் முயற்சி எடுத்தனர். இதற்கு வைகோ சம்மதிக்கவில்லை.

யார் சொன்னால் வெளியே வர வைகோ சம்மதிப்பார் என்று யோசித்தவர்களுக்கு, கருணாநிதியின் ஞாபகம் வந்துள்ளது. அவர் சொன்னால் வைகோ தட்டமாட்டார் என்று நினைத்தனர் வைகோ குடும்பத்தினர். அதனால்தான், இந்தச் சந்திப்புக்கு முயற்சி எடுத்தனர். தலைவர் சொன்னால் என் கணவர் கேட்பார் என்று இல்லத்தரசிகள் சந்திப்பின் போது உருக்கமான வேண்டுகோள் வைக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்டுதான் இந்த அவசர சந்திப்பு நடந்தது என்கிறது அறிவாலய வட்டாரங்கள்.

அறிவாலய வட்டாரத்தில் இப்படிப் பேசப்பட்டிருக்காது. பேசப்பட்டிருந்தால் அது அறிவாலய வட்டாரமாக இருக்காது.

எங்கோ அகடவிகட அசூயை வட்டாரத்தில் மட்டுமே இப்படி பேசப்பட்டிருக்கும்!

அந்த ஏடுகளுக்கோ அல்லது ஏடுகளுக்கு விஷயதான வியாபாரம் செய்த வித்தகர்களுக்கோ, என் துணைவியும் வைகோவின் துணைவியாரும் என் மகள் கனிமொழியின் திருமணத்தின் போதுதான் சந்தித்தார்களே தவிர அதன் பிறகு, இப்போது தம்பி வைகோவின் துணைவியார் தம்பி மாறனைப் பார்க்க மருத்துவமனைக்கு வந்தபோது கூட, சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை என்பது தெரிந்திருக்க நியாயமில்லை. ஏதோ கதைதானே! கட்டிவிட வேண்டியதுதானே!

இது சின்ன விஷயம்தான்! நான் பெரிதுபடுத்த தேவையில்லை! ஆனால் விஷமத்தனமான அரசியல் நடத்திட வீட்டில் உள்ள குடும்பப் பெண்களின் பெயர்களை பயன்படுத்துவதும், வைகோ ஜாமீனில் விடுதலையாக வேண்டுமென்று நான் அவரை வலியுறுத்தச் சென்றதாகக் கொச்சைப்படுத்துவதும்; இந்தப் பொய்யை எழுத அவர்கள் பயன்படுத்திய தமிழுக்கே தலைக்குனிவான செயல் என்பேன்.

கருணாநிதி - வைகோ சந்திப்பு - மீண்டும் கூட்டணிக்கு முயற்சி - இணைப்புக்கு முயற்சி - அதற்கான பேச்சுவார்த்தை சிறையில் - கதையளப்போரின் கற்பனைகள் இப்படி நீளுகின்றன.

இந்தச் சந்திப்பில் அரசியல் எதுவும் கிடையாது. அண்ணன் தம்பி உறவு என்ற முறையில் நடந்த சந்திப்புதான் என்று நானும், தம்பி வைகோவும் கூறிய பிறகு, அதையே வலியுறுத்தி அழுத்தம் திருத்தமாக தம்பி எல்.ஜி. போன்றவர்கள் உடனடியாக விரிவான பேட்டிகள் அளித்த பிறகு, அண்ணன், தம்பி என்ற உறவையே கேலிசெய்யும் இழிதகைச் செயலை நிறுத்திக் கொள்ளாதவர்களை எந்த வரிசையில் நிறுத்திப் பார்ப்பது?

அன்புள்ள

மு.க.

10-11-2002

2836. மக்கள் குரலுக்கு மதிப்பளிக்க வேண்டும்!

உடன்பிறப்பே,

திருவண்ணாமலைக் கோயிலை மத்திய அரசின் தொல்பொருள் பாதுகாப்புத் துறையின் பொறுப்பில் கொண்டுவருவது பற்றி எழுந்துள்ள செய்தி விளைவித்துள்ள பரபரப்பு இன்னும் அடங்கவில்லை. தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்துவர் என்ற பேதமில்லாமல், எல்லா மதங்களைச் சார்ந்தவர் களும் தங்களின் எதிர்ப்பை உணர்த்தி வருகிறார்கள்.

தமிழக அரசைக் கலந்து பேசிய பிறகே முடிவெடுக்கப்படும் என்று மத்திய அமைச்சர் கூறியுள்ள செய்தியும் இடையே வந்துள்ளது.

மாநிலங்களில் உள்ள பழமையான ஆலயங்கள், கோட்டை கொத்தளங்கள், ஏனைய வரலாற்று நினைவுச் சின்னங்கள் இவற்றையெல்லாம் செம்மையாகப் பாதுகாக்கும் பொறுப்புமிக்க பணியை மாநில அரசு செய்ய இயலாது என்றும், மத்தியில் உள்ள அரசுக்குத் தொடர்புடைய அமைப்புக்கு மட்டுமே அந்தச் செயல்திறனும் அக்கறையும் உண்டென்றும் ஒரு தப்புக் கணக்கு நீண்ட காலமாக இருந்து வருகிறது.

இதில் மாநிலம் - மத்திய அரசு என்று பிரித்துப் பார்க்காமல் இரண்டு அரசுகளிலுமே பொறுப்பு உணர்ந்தவர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் அந்தப் பணியை ஆர்வத்துடனும், அக்கறையுடனும் கவனிப்பார்கள் என்பதற்கு எத்தனையோ-எடுத்துக்காட்டுகள் உண்டு.

உதாரணமாக 1969ல் நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, முதலமைச்சர் பொறுப்புக்கு நான் வந்ததும், சென்னை கோட்டை கொத்தளத்தில் மண்டிக் கிடந்த காடுகளையும், புதர்களையும், கள்ளிச் செடிகளையும்

அழித்துவிட்டு, கோட்டைச் சுவரை ஒட்டியும், கோட்டைக்கு எதிர்ப்புறமாகவும் மரஞ்செடிகள் அடர்ந்த சோலை உருவாக்கிட வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தேன்.

ஆனால் நான் குறிப்பிட்டவாறு உடனடியாகப் பணி தொடங்கப்படவில்லை. அதிகாரிகளை அழைத்துக் காரணம் கேட்டேன்.

தயக்கத்துடன் அதிகாரிகள் என்னிடம், தலைமைச் செயலகம் இருக்கும் கோட்டை மத்திய ராணுவ இலாகாவின் நிர்வாகத்தில் உள்ளது என்றும், எனவே அவர்களது அனுமதியின்றி கோட்டையில் அடர்ந்து படர்ந்திருக்கும் புதர்களையும், கள்ளிச் செடிகளையும் அகற்ற இயலாது என்றும் தெரிவித்தனர். உடனே நான் அப்போது ராணுவத்தில் துணை அமைச்சராக இருந்த திரு. கிருஷ்ணா அவர்களைத் தொடர்பு கொண்டு, அவரையே நேரில் வரச்சொல்லிக் கேட்டுக்கொண்டு, அவரும் என் விருப்பத்திற்கேற்ப நேரில் வந்து, தலைமைச் செயலகத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு, கோட்டை கொத்தளங்களை தூய்மைப்படுத்திட அனுமதி அளித்தார். அதன்பிறகே செயின்ட் ஜார்ஜ் கோட்டையும், அதன் புறப்பகுதிகளும் தூய்மை பெற்று இன்று காணக்கூடிய எழிலார் அமைப்பைப் பெறமுடிந்தது.

அன்றைக்கு அமைச்சர் கிருஷ்ணா போன்ற ஒருவர் மத்தியில் இருந்திராவிட்டால், அந்தச் செயல் செம்மையாக நடைபெற ஒத்துழைப்பு கிடைத்திருக்காது.

மத்திய இலாக்காக்களின் பொறுப்பில் சிக்கிக்கொண்டுள்ள ஆலயங்கள், கோட்டைகள், சின்னங்கள் இவற்றில் மாநில அரசு தலையிடக் கூடாது என்ற விதிமுறையினால், நமக்கு ஏற்பட்ட பெரும் வேதனைகளில் ஒன்றுதான், தஞ்சாவூர் பெரிய கோயிலைக் கட்டிய இராஜ ராஜ சோழனின் சிலையை அந்தக் கோயில் வளாகத்திற்குள் நிறுவ முடியாமல், கோயிலுக்கு வெளியே அமைத்திருக்கும் அவல நிலையாகும்!

இராஜ ராஜ சோழனின் சிலையை ஆலய வளாகத்தில் வைத்திட அன்றைய தி.மு.க. அரசின் முதலமைச்சர் என்ற முறையில் நான் எவ்வளவோ வாதாடியும், போராடியும் தமிழறிஞர்கள், வரலாற்று வல்லுனர்கள் முறையிட்டும், முடியாமலே போய்விட்டது.

தஞ்சைப் பெரிய கோயிலே கூட, ஒரு வரலாற்றுச் சின்னமாக அடையாளம் காட்டப்பட்டாலும், ஒரு வறண்ட சூழலைத்தான் அங்கே இன்றைக்கும் காண முடிகிறது.

அதே சோழர் காலத்து வரலாற்றுச் சின்னமான கங்கைகொண்ட சோழபுரம் கோயிலும், அதன் மதிற்சுவர்களும், சுற்றுச் சூழலும்-மக்கி மண்ணாகிப் போய்க்கொண்டிருக்கிறது! அந்தச் சின்னமும், மத்திய இலாகாவின் பொறுப்பிலேதான் இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

இப்படித் தமிழ்நாட்டில் உள்ள எத்தனையோ பழங்கால கோயில்கள், கோட்டைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள், மத்திய தொல்பொருள் பாதுகாப்பு இலாகா பொறுப்பில் இருப்பினும், அவை வளர்ப்புத் தாயின் மடியிலேயே வாடி வதங்கி உயிர் மூச்சை இழந்து கொண்டிருப்பதைக் காண முடிகிறது!

சரி! மாநில அரசாவது அத்தகைய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நல்ல உள்ளம் கொண்டதாக இருக்கிறதா?

வள்ளுவர் கோட்டத்தின் கதி என்ன?
குமரி முனையில் உள்ள வானளாவிய
வள்ளுவர் சிலையின் நிலை என்ன?
பூம்புகார், எப்படி காப்பாற்றப்படுகிறது?
கட்டபொம்மன் கோட்டை என்ன ஆனது?
சென்னையில் அண்ணாவின் ஆட்சி நிறுவிய
கண்ணகி சிலை எங்கே கிடக்கிறது?

நான் இந்தக் குறைகளை எடுத்துக்காட்டி, திருவண்ணாமலை ஆலயத்தை மத்திய தொல்பொருள் துறை ஏற்பது முறையென்று வாதாடவில்லை! மத்திய அரசு பொறுப்புக்கு மாற்றப்பட்டவைகளில், தேவையில்லா வீண் தாமதங்கள் ஏற்பட்டதற்கு தம்பி முரசொலி மாறன் எழுதிய மாநில சுயாட்சி புத்தகத்திலேயே ஓர் எடுத்துக்காட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. அது வருமாறு:-

அவசியமில்லாமல் நிர்வாக அதிகாரத்தைக் குவித்து வைத்திருப்பது காரணமாகத் தாமதத்தை மட்டுமன்று! எரிச்சலையும், மோதலையும் ஏற்படுத்துகிறது.

இதுவும் நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கையில் காணப்படும் வாசகங்கள்தான்.

காலதாமதமும், திறமைக் குறைவும் இரட்டைக் குழந்தைகள்.

இப்போதுள்ள அரசியல் சட்ட அமைப்புப்படி, எப்படிக் காலதாமதம் தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது- என்பதைத் தமிழக முதல்வர் கலைஞர் அடிக்கடி விளக்கியிருக்கிறார். கிருஷ்ணகிரி நகர குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற, மத்திய அரசுக்குச் சொந்தமான தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே 24 அடி நீளம் சாலையை வெட்டிக் குழாய்கள் பொருத்துவதற்கு மத்திய அரசின் அனுமதி பெற வேண்டியிருந்தது. இதனால் அந்தத் திட்டம் ஒன்றரையாண்டு தாமதப்பட்டது.

இதுகுறித்து சென்ற ஆண்டு கோவை விமான நிலையத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைப் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, தாமதம் மத்திய அரசால் மட்டுமா? மாநில அரசுகளில் இல்லையா? என்ற பொதுவான எதிர்க் கேள்வியை வீசினார்!

அதற்குத் திரும்பவும் பதில் கூறிய கலைஞரின் வாசகங்கள், மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு உரமேற்றக் கூடியவை.

தாமதம் இரண்டு கட்டங்களில் வரக்கூடாது என்பதற்குத்தான் மாநில சுயாட்சியே கேட்கிறோம். என்றார் கலைஞர்!

(மாறனின் "மாநில சுயாட்சி

பக்கம்-519, 1974)

எனவே, மாநில அரசும் பொறுப்புள்ள அரசாக இருக்க வேண்டும்- பொறுப்பில்லா அரசாக இருப்பின் அதையே காரணம் காட்டி, மாநிலங்களின் உரிமைகளை பறித்துவிட மத்திய அரசு முனைவது ஏற்றுக்கொள்ள கூடியதல்ல!

திருவண்ணாமலை விவகாரமும் தி.மு.கழகத்தை பொறுத்தவரையில், அந்தக் கண்ணோட்டத்துடன் கணிக்கப்படுவதுதான்!

இதில் மத்திய அரசின் தொல்பொருள் இலாகா, மக்கள் குரலுக்கு மதிப்பு அளிக்க வேண்டும்!

அன்புள்ள,

மு.க.

11-11-2002

2837. மதமாற்றம் தேவையென்ற மனமாற்றம் எப்போது ஏற்படும்?

உடன்பிறப்பே,

சர்க்கஸ் கூடாரத்தில் பிரதானக் கதாநாயகர்களும், கதாநாயகிகளும் பங்கேற்று அற்புதமானதும், ஆச்சரியம் விளைவிக்கக் கூடியதும், ஆபத்து நிறைந்ததுமான வேலைகளில் ஈடுபடுவார்கள். கூடாரத்தின் உச்சியில் கயிறூஞ்சல்கள் கட்டி, வெகு தொலைவில் உள்ள ஓர் ஊஞ்சலில் இருந்து மற்றொரு ஊஞ்சலுக்குத் தாவிப் பாய்ந்திடுவர். அவ்வாறு தாவிடும் போது நடுக் கூடாரத்தில் அந்தரத்தில் பாய்ந்துவரும் ஒரு வீராங்கனையின் கையையோ, காலையோ பற்றிக் கொண்டு, அவருடன் இணைந்து இன்னொரு கயிறூஞ்சலுக்கு தாவிச் செல்வார்கள்.

நீண்ட நெடிய கம்பியொன்றில் சைக்கிளில் ஏறிக்கொண்டு, தன்னுடைய நிதானமொன்றையே சாயாத தராசாகக் கொண்டு சவாரி செய்வார்கள்.

கையில் சுமார் இருபது பந்துகளை வைத்துக் கொண்டு ஒன்றுகூடத் தவறிக் கீழே விழாமல், அவற்றை வீசி வீசிக் கைகளில் பிடித்துக் கொண்டே ஒரு மலைப்பான விளையாட்டும் விளையாடு வார்கள்.

நெருப்பு வளையத்துக்குள் ஓடிவந்து நுழைந்து, அதே போல அடுக்கடுக்காகப் பல வளையங்களில் நுழைந்து அணிந்திருக்கும் உடையில் ஒரு தீப்பொறியும் படாமல் லாவகமாக வெளியே வருவார்கள்.

பிரதானக் கதாநாயகர்களும், கதாநாயகிகளும் சர்க்கஸ் ஆட்டத்தில் இதுபோன்ற வீர விளையாட்டுகளை, தந்திரக் காட்சிகளை, அபாயச்செயல்களை நடத்திக் கொண்டிருக்கும்போது, பார்வையாளர்களின் கவனத்தைத் திருப்பும் அளவுக்கு, அதே சர்க்கஸ் விளையாட்டுக்களை, சர்க்கஸ்

விதூஷகர் ஒருவர், தானும் அவற்றைச் செய்வது போல செய்து காட்டி, கம்பியிலிருந்து வழுக்கி விழுந்தோ, கைகளில் மாறி மாறி வீசியெறியும் பந்துகளில் ஒன்றிரண்டைக் கீழே தவறவிட்டோ, சிங்கம், புலி, யானை, கரடி துரத்துவதிலிருந்து விடுபட நடுங்கி ஓடியோ பார்வையாளர்கள் மத்தியில் பெருஞ் சிரிப்பை உருவாக்குவதைக் கண்டிருக்கிறோம்.

இந்த சர்க்கஸ் விதூஷகத் தனத்தை, சர்க்காரிலும் காண இயலும் என்பதற்குச் சான்றாகத் தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆட்சிக்கு வந்து பதினெட்டு மாதங்களில் இருபதுக்கு மேற்பட்ட அமைச்சர்களின் பதவிகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வேடிக்கைத் தொடர் கதையின் ஒரு விசித்திரமான அத்தியாயமாக இப்போது மூன்று அமைச்சர்கள் விலக்கப்பட்டு, புதிதாக ஐந்து அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

புதிய ஐந்தில் இரண்டு பேர், ஏற்கனவே பந்தாடப்பட்டு, அதுவும் லாவகமாக ஆடாத காரணத்தால் மீண்டும் கைக்கு வராமல் தரையில் உருண்டு விட்ட பந்துகள்! ஆம்! சர்க்கஸ் விதூஷகரின் சாதுர்யமான சாகச வேலையது என்று எண்ணி; சர்க்கஸ் பார்வையாளர்கள் சந்தோஷப்பட்டுக் கையொலி செய்ய வேண்டும். அப்போதுதான் சர்க்கஸ் விதூஷகருக்கு உற்சாகம் ஏற்படும். சைக்கிளில் ஏறி, கம்பியில் சவாரிசெய்து, அதிலும் தவறிவிழுவது போல வேடிக்கை காட்டுவார். சர்க்கஸ், களை கட்டும்!

இந்த சர்க்கஸ்தான் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக வெகுவிமரிசையாக, இடையிடையே கேலிக்கூத்துகள் இடம்பெற்று இனிதே(?) நடைபெற்று வருகிறது!

அமைச்சர்களை விலக்குவதும், நியமிப்பதும், விலக்கியவரை மீண்டும் சேர்ப்பதும், சேர்த்தவரைத் தூக்கி எறிவதும் முதல்வருக்குரிய உரிமை! அதை யாரும் தலையிட்டுக் கேட்கவும் முடியாது- தடுக்கவும் இயலாது!

ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஒவ்வொரு நியமனத்துக்கும், ஒவ்வொரு விலக்கலுக்கும் ஒவ்வொரு காரணம் கூறப்படுகிறது. அந்தக் காரணங்கள் உண்மையாகவும் இருக்கலாம்-

கற்பனையாகவும் இருக்கலாம்- அவற்றில் உண்மை அறிய ஊடுருவ விரும்பவில்லை நாம்! காலப் போக்கில் அந்தக் காரணங்கள் வெளிவரக்கூடும் - வெளி வரட்டும்! அதுவரை காத்திருக்கலாம்!

ஆனால் ஒன்று! அமைச்சரவையில் சிறுபான்மை யோருக்கான பிரதிநிதித்துவம் என்று ஒரே ஒரு இஸ்லாமியருக்கு அளிக்கப்பட்டிருந்த இடம், திடீரென பறிக்கப்பட்டு- நீண்ட இடைவெளிக்குப் பிறகு, மாஜியாகி விட்ட அந்த மாண்புமிகு அவர்கள், அண்மையில் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மதமாற்றத் தடைச் சட்டத்தின் மீது அம்மா அம்மா என்று அர்ச்சனையாகப் பொழிந்து தள்ளிய போதே, அது வெறும் அர்ச்சனையன்று! மீண்டும் அமைச்சர் பதவி பெறுவதற்கான அச்சாரம் என்பதைத் தெளிவாகவே புரிந்து கொள்ள முடிந்தது.

சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கும், தலித் மக்களின் அமைதிக்கும் ஊறு விளைவிக்கக் கூடிய அந்தக் கறுப்புச் சட்டத்தை ஆதரித்துப் பேசியவரும், முதலில் தூக்கி எறியப்பட்டு, மீண்டும் எடுத்து வைத்துக் கொள்ளப்பட்டவருமான அந்த நண்பர், மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரித்துப் பேசிய போது, பொன்னான(?) வரலாற்றுச் செய்தியென்று கருதிக் கொண்டு ஒரு செய்தியைப் பேரவை விவாதத்தின்போது சொன்னார். என்ன செய்தி அது?

பிரசித்திபெற்ற கிறிஸ்தவப் பேராயர் ஒருவர், காஞ்சி சங்கராச்சாரியப் பெரியவாளை சந்தித்து, தன்னை இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை வைத்தாராம். அதற்கு சங்கராச்சாரியார் சொன்னாராம்; நீங்கள் கிறிஸ்தவ மதத்தில் நல்லவராகவும்- நானும் இந்து மதத்தில் நல்லவராகவும் இருக்கும் வரையில்- நம்மிடையே மதமாற்றம் தேவையில்லை என்பதாக! இதுதான் அவர் பேரவையில் சொன்ன அந்த நிகழ்ச்சி!

உடன்பிறப்பே! ஒரு கிறிஸ்தவப் பெரியவர் இந்துவாக மாறிடத் தேவையில்லை என்று காஞ்சி சங்கராச்சாரியார் சொன்னதற்கு உண்மையான காரணம் எதுவாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தாயா?

இந்து மதத்தில் சேர வருகிற, ஒரு கிறிஸ்தவரையோ- ஒரு இஸ்லாமியரையோ, நம்மிடையே உள்ள சாதிகளில் எந்த சாதியில் சேர்ப்பது என்பது பெரிய பிரச்சினையல்லவா?

அதனால்தான் அதை வெளிப்படையாகச் சொல்லாமல், சங்கராச்சாரியார் அவர்கள் அன்றைக்கே மிகுந்த சாமர்த்தியமாக அந்தக் கோரிக்கையைத் தவிர்த்திருக்கிறார்.

இன்னமும் நாம் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களாகவே பிரித்து வைக்கப்பட்டிருக்கிறோம்.

சூத்திரன் என்றால் வேசி மகன் என்றும், அவன் இந்து மதத்தில் ஒரு பிரிவு என்றும், எழுதி வைக்கப்பட்டுள்ள மனித நீதிக்கு விரோதமான நீதியை மனு நீதியென மனமொப்பி ஏற்றுக் கொண்டு, இன்னமும் ஏமாந்த சோணகிரிகளாக இருக்கின்றோம்.

சாதி வேறுபாடுகளற்றதும்- சச்சரவுகள் இல்லாததும் - தொட்டால் தீட்டு! மேலே பட்டால் பாபம் - என்ற இழிவு நீங்கியதுமான - சமூக நீதியும் - அனைவரும் ஆண்டவன் முன்னிலையில் சமத்துவமே என்ற சம நீதியும் - ஒளிவிடக்கூடிய மதமாக இந்து மதம் இருந்திடுமேயானால், மதமாற்றம் தேவையென்ற மனமாற்றம் யாருக்குத்தான் ஏற்படும்? இந்த உண்மையை உணராதார் மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரிப்பது என்பது உடைந்த வாளும், ஒடிந்த வில்லும் கொண்டு போருக்குப் புறப்படும் புத்திசாலித்தனம்(?) போன்றதேயாகும் என்பதைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிற பேச்சாகும். மாஜியாகி இப்போது மந்திரியாகப் போகிறவரின் பேச்சு!

இவற்றையெல்லாம் திரை போட்டு மறைத்து விட்டு, தீவிரவாதப் பயங்கரவாதச் செயல்களை ஒடுக்கத்தான் பொடா சட்டம் என்றாலும், அதைத் தவறாகப் பயன்படுத்தவும் முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அ.தி.மு.க. அரசினர், இந்த மதமாற்றத் தடைச் சட்டத்தையும் அவ்வாறு தவறாகப் பயன்படுத்தி சிறுபான்மை மக்களையும், தலித் மக்களையும் பழிவாங்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம்?

கதறியழுது, கடுந்தவமிருந்து பதவி பெற்றவர்கள், தங்கள் பதவி மீண்டும் பறி போகாமல் காப்பாற்றிக் கொள்ளத் துடிப்பார்களே தவிர, சிறுபான்மை மக்கள், தலித் மக்களின்

உரிமைகள் சீர்குலைக்கப்படுவது பற்றி கவலைப்படப் போகிறார்களா என்ன?

நம்மைப் பொறுத்தவரையில், அன்று தொட்டு இன்றுவரையில் மனித நேயம்- மதங்களிடையே நல்லிணக்கம்- மனித உரிமை காத்திடும் கடமை - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தலித் மக்களின் சமூக நீதிக்காகப் போரிடுதல்- நடுத்தர மக்களின் நலவாழ்வு நாடுதல்-இவற்றிலிருந்து இம்மியளவும் மாறாமல் இலட்சியப் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இடையில் இந்த அரசின் சர்க்கஸ் காட்சியில் தென்படும் விதூஷகக் கூத்துக்களையும் வேடிக்கை பார்த்தவாறு! புரியாத பொதுமக்களுக்கும் புரியம்படி விளக்கியவாறு!

அன்புள்ள,

மு.க.

12-11-2002

2838. அந்தணர் என்றால்
அறவோர் என்கிறது குறள்!

உடன்பிறப்பே,

அனைத்து உயிர்களிடத்திலும் அன்புகொண்டு அருள்பொழியும் சான்றோர் எவராயினும் அவர் அந்தணர் எனப்படுவார்.

எனும் பொருள் விளங்கப் பொய்யாமொழி ஞானி அய்யன் திருவள்ளுவரின் திருக்குறள்,

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்று அமைந்திருக்கும்போது, அந்தணர் என்பதை ஒரு தனி சாதியெனக் கூறிக்கொண்டு அவர்களுக்கெனத் தனி விழாக்கள், மாநாடுகள் நடத்தி - பழைய கால பத்தாம்பசலித்தனமான வர்ணாஸ்ரமத்துக்கு வலிமை சேர்த்திடும் வேண்டாத முயற்சியொன்று தமிழகத்தில் மீண்டும் துளிர்விடத் தொடங்கியிருக்கிறது.

அந்தணர் என்றால் அறவோர் என்று அர்த்தமல்ல என்று மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது போல், அவர்கள் ஒரு குறிப்பிட்ட குலத்தினர் என்று காஞ்சி சங்கராச்சாரியார் அவர்களே பேசியிருப்பதுதான்,

பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது என்று தந்தை பெரியார் அடிக்கடி சொன்னதை நினைவூட்டுகிறது.

ஆம்! அண்மையில் அந்தணர்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்வோர் நடத்திய நூல் வெளியீட்டு விழா ஒன்றில், காஞ்சி சங்கராச்சாரியார் பேசும்போது, அந்தணர் குலத்தில் பிறந்தவர்கள் தர்மத்தை விடக் கூடாது என்று வலியுறுத்திக் கூறியுள்ளதாக

(10-11-2002) தினமணி இதழில் கடைசிப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தர்மத்தை விடாததற்கு எடுத்துக்காட்டுதான், எம்மான் காந்தியடிகளை கோட்சே என்ற மராத்திய பிராமணன் தனது மதவெறியில் சுட்டுக்கொன்ற நிகழ்ச்சி போலும்!

தர்மத்தை விடாததற்கு எடுத்துக்காட்டுதான், சம்பூகன் என்ற சூத்திரன் தவம் செய்தது குற்ற மென்று அவன் தலையை வெட்டி எறிந்த கொடுமை போலும்!

தர்மத்தை விடாததற்கு எடுத்துக்காட்டுதான், ஏகலைவன் என்ற வேடனுக்கு வில்வித்தை கற்றுக் கொடுக்க முடியாது என்று துரோணாச்சாரியார் மறுத்த மனுநீதி போலும்!

எனவே, வள்ளுவரின் கருத்துப்படி அந்தணர் என்போர் அறவோர் - அறவழி நிற்போர் என்ற பொருளுக்கு மாறாக, அவர்கள் ஒரு குறிப்பிட்ட குலத்தினர் என்று அடையாளம் காட்டிக்கொண்டு - அந்தக் குலத்தைச் சார்ந்தோர் மட்டுமே கூடிக் கொண்டு - தொல்காப்பியரே பிராமணன்தான் என்று நெஞ்சாரப் புளுகியிருக்கிறார்கள் என்றால், பாண்டியன் மீசைக்காரர், பைந்தமிழ்ப் பாவலர், பசுமலை பாரதியார் இப்போது இல்லாமற்போய்விட்டாரே! பாவேந்தர் இல்லையே! பாயும் புலியாகத் தமிழ்ப் பகை கண்டு சீறிடும் பாவாணரய்யா இன்றில்லாமல் போய்விட்டாரே! பன்மொழிப் புலவர் அப்பாதுரை யாரும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.யும், வெள்ளை வாரணரும், வ.சுப.மாணிக்கனாரும், இலக்குவனாரும் - இல்லாமல் தவிக்கிறோமே! என்ற துடிப்பல்லவா நம் இதயத்தைத் தகிக்கிறது!

பிராமணக் குலத்தில் பிறந்தோரும், தமிழுக்கு - நாட்டுக்கு - சமுதாயத்திற்குச் சேவை செய்துள்ளனர் என்பதையோ, அதற்காகப் பெரும் உழைப்பை நல்கியுள்ளனர் என்பதையோ என்றைக்கும் மறைத்திடும் குறுகிய மனம் கொண்டோரல்ல நாம்!

பாரதியாரை உலகக் கவியென ஏற்றுக்கொள்ள இயலாது என்று ஒரு காலத்தில் பிராமண குலத்தைச் சேர்ந்த ஒரு பிரபல எழுத்தாளர் கருத்தறிவித்தபோது, அதை எதிர்த்து ஆணித்தரமாகக் கவிதை எழுதி, மறுத்துரைத்து மார்தட்டி நின்ற சிங்கம்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் என்பதும், அவர் திராவிட இயக்கத்தின் தூண்களில் ஒருவர் என்பதும் அந்தணர் என்பதற்குப்

பொருள் புரியாமல் அந்தணர் குல விழா நடத்தியவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. பாரதியார் உலகக் கவியல்ல என்று சொன்னபோது, அதை மறுத்து பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய கவிதை இதோ:-

பாரதியார் உலககவி! - அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஓருருக் கொரு நாட்டுக் குரிய தான
ஒட்டைச் சாண் நினைப் புடையர் அல்லர், மற்றும்
வீரர் அவர்! - மக்களிலே மேல் கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளி விட வேண்டும் என்பார்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க்கின்ற
செம்மை நலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்
பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்
சே யென்ற பாரதியார் பெற்ற கீர்த்தி
போய்ப் பாழும் கிணற்றினிலே விழாதா என்று
பொழு தெல்லாம் தவங் கிடக்கும் கூட்டத்தார்கள்
வேர்ப்பார்கள்; பாரதியார் வேம் பென்பார்கள்;
வீணாக உலக கவி அன்றென்பார்கள்;
ஊர்ப்புறத்தில் தமக்கான ஒரு வனைப்போய்
உயர் கவிஞன் என்பார்கள் வஞ்ச கர்கள்.

*

பாரதியைப் பெரியார் ஒத்துக்கொள்ளாத காலத்திலே கூட, அவரது விடுதலை இயக்கப் பாடல்களுக்காக - சமுதாய சீர்திருத்தப் பாடல்களுக்காக - ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்! உண்மையொன்றே தெய்வமென அறிவீரே! என்பன போன்ற எழுச்சிப் பாடல்களுக்காக, அவரை மக்கள் கவிஞர் என மனதாரப் பாராட்டியவர் அறிஞர் அண்ணா!

அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்று வ.ரா. அவர்களை அண்ணா பாராட்டி எழுதியதும், வ.ரா. மறைந்த பிறகு அவரது குடும்பத்திற்கு நான் முதலமைச்சராக இருந்தபோது, மாதந்தோறும் ஓய்வூதிய நிதி வழங்கி கௌரவித்ததும் வரலாற்று நிகழ்ச்சியாகும்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு, கழக ஆட்சியில் அவர் விரும்பும் இராமர் கிரீடத்தையே மண்டபமாக அமைத்து உருவாக்கி, ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களைக் கொண்டு நினைவாலயம் திறந்ததும் நினைவை விட்டு என்றும் நீங்காத நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

தனது இளம் பிராயத்தில் கோட்டை கொத்தளத்தில் ஆங்கிலேயர் கொடியை அகற்றி விட்டு, மூவண்ணக் கொடி ஏற்றிட உயிருக்குப் பயப்படாமல் கொடிக் கம்பத்தில் ஏறிய ஆர்யா என்ற பாஷ்யம் (அய்யங்கார்) அவர்களுக்கு, கிண்டியில் தியாகிகள் மண்டபத்தில் சிலை அமைத்தது நான்தான் என்பதை நாடறியும்!

அவ்வளவு ஏன்? அந்தணர் குல விழாவின் பிரதான விருந்தினர்களில் ஒருவரான நண்பர் நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தி அவர்களின் கோரிக்கையை உடனடியாக ஏற்று அவரது மாமியாரும், விடுதலைப் போர்த் தியாகியுமான திருமதி ருக்மணி லட்சுமிபதி அவர்களின் சிலை திறந்ததும், அவர் பெயரால் சாலை உருவாக்கியதும் என் ஆட்சிக் காலத்திலேதான் என்பதை நினைவூட்டாமல் இருக்க முடியவில்லை.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த வீரவாஞ்சிக்கு நினைவுப் பெயர் சூட்டிட முயற்சி எடுத்தது மட்டுமல்ல, அந்த வீரவாஞ்சியின் நண்பரும், 25 ஆண்டுகள் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்தவரும், என்னுடன் பேரவையில் இணைந்து பணியாற்றிய வருமான கோமதிசங்கர தீட்சதருக்கு சென்னை ராஜாஜி மண்டபத்தில் அரசு சார்பில் விழா நடத்தியதும், என் தலைமையில் இருந்த கழக ஆட்சியில்தான்!

வள்ளுவர் படம் வரைந்து கொடுத்த வேணுகோபால் சர்மாவின் குடும்ப நிதியாக அரசு சார்பில் மூன்று லட்சம் ரூபாய் வழங்கியதும், அவரை 'குறளோவியம் வெளியீட்டு விழாவில் பாராட்டி மரியாதை செய்ததும் நானேதான்!

பேராசிரியர் கல்கியின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அதற்கான நிதியாக இருபது இலட்ச ரூபாய் வழங்கியதும் கழக ஆட்சியில்தான்!

சுத்தானந்த பாரதி, வ.வே.சு. அய்யர், எஸ்.டி.எஸ். யோகி, ஏ.எஸ்.கே. அய்யங்கார், சாமிநாத சர்மா ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதும் கழக ஆட்சியில்தான்!

எனவே தமிழுக்கு, சமுதாயத்திற்கு, நாட்டுக்குத் தொண்டாற்றியவர்களை, தொண்டாற்றுகிறவர்களை அந்தணர் குலமென்றோ அல்லது வேறு குலமென்றோ, சென்னை நாரத கான சபாவில் விழா நடத்தியவர்களைப் போல என்றைக்கும் நாம் பிரித்துப் பார்த்ததில்லை. அனைவரும் நம் பார்வையில் சமமே!

ஆனால் அதே நேரத்தில் தம்மை உயர்குலம் என்று கருதிக்கொண்டு - அல்லது காட்டிக்கொண்டு - மதத்தின் பெயரால் சிறுபான்மை மக்களையும், சாதியின் பெயரால் தலித் மக்களையும், மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களையும், ஒதுக்கி வைத்துப் பேதப்படுத்தி, இதுவே தமது வேதம் சொல்லும் விதியென்று விஷம் கக்கிடுவோரை நம்மால் பொறுத்துக்கொள்ள இயலாது.

உன்னையே நீ அறிவாய்! என்று உரத்த குரல் எழுப்பிக் கொண்டேயிருந்தார் சாக்ரடீஸ்! உயிர் போக்கப்படும் வரையில்!

அதற்கு என்ன பொருள்? உன் தவறுகளை அறியாமல் - பிறருக்கு உபதேசம் செய்யக் கிளம்பாதே! என்பதுதான்!

தர்மத்தை நாம் காப்பாற்றினால் தர்மம் நம்மைக் காப்பாற்றும். மற்றவர்களுக்கு வழிகாட்டியாக நாம் நடந்துகொள்ள வேண்டும். அந்தணர் குல விழாவில் இந்த அறிவுரை கூறியவர்கள், அதன்படி வாழ்க்கையில் நடந்து காட்டியவர்களா என்பதை, சொன்னது சொன்னபடி தனது துறவற வாழ்க்கையில் நடந்து காட்டி, மறைந்துவிட்ட மகான் பெரிய சங்கராச்சாரியார் அவர்களைக் கேட்டால் தெரியும். அல்லது அந்தப் பெரியவாள் அவர்கள் 1987ஆம் ஆண்டு காஞ்சி மடம் குறித்து வெளியிட்ட அறிக்கைகளை ஏடுகளில் படித்துப் பார்த்தால் புரியும்!

எனவே,

அறநெறி நிற்போர் - அதாவது அறவோர் - என்போர் அந்தணரே தவிர, அந்தணர் என்போர் ஒரு குலத்தவர் அல்லர்!

குலம் என்பதற்கும்,

குணம் என்பதற்கும்,

மாறுபாடு உண்டு! - அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்.

குலமா

குணமா?

என்பதை விளக்கும்,

இந்தக் குறள்!

அன்புள்ள,

மு.க.

13-11-2002

2839. நாடாளும் அம்மையின் நாகாக்கும் நாகரிகம்?

உடன்பிறப்பே,

காஞ்சிப் பெரியவாள் என போற்றப்படும் பெரிய சங்கராச்சாரியார் அவர்களின் தெய்வத்தின் குரல் என்ற புத்தகத்திலும், 1970ஆம் ஆண்டு மத்திய அரசு நிதி உதவியுடன் வெளியிடப்பட்டதும், பிரபல காங்கிரஸ் தலைவர் பெரியவர் கமலபதி திரிபாதி அவர்களை ஆசிரியராகக் கொண்டதுமான இந்தி விசுவகோஷ் என்ற கலைக் களஞ்சியத்திலும் இந்து மதம் பற்றி சொல்லப்பட்டிருந்த கருத்துகளை, எடுத்துச் சொன்னமைக்காக என்னை நாவடக்க மில்லாதவன் என்றும், கருணாநிதியின் உளறல் என்றும் பகுத்தறிவின் பரிணாம வளர்ச்சிக்கு உதாரணமாகத் தன்னைக் காட்டிக் கொண்ட செல்வி ஜெயலலிதா அவர்கள், பேரவையில் அவரே பேசியது மட்டுமல்லாமல், அவரது ஏவலர்களை விட்டும் ஏசல் அறிக்கைகள் விடச் சொல்லி அகமகிழ்ந்து கொண்டிருக்கிறார்.

நாவடக்கத்துடன் (?) இவர் பேசிய பேச்சுகளுக்கும், விடுத்த நாகரிக(?) அறிக்கைகளுக்கும், எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன.

அவற்றை மறுத்திடும் வாய்மையோ, அரசியல் பண்பாட்டுத் தூய்மையோ அவரிடமிருந்தாலும் சரி! அல்லது அவரால் ஏவப்பட்டவர்களிடமிருந்தாலும் சரி! அவற்றை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். ஆனால் மக்களை எதையும் மறந்து விடக் கூடிய சுபாவம் படைத்தவர்கள் என்ற ஒரே நம்பிக்கையுடன் அம்மையார் அவர்களும், அவரது அமைச்சர்களும் வாய் நீளம் காட்டுவது வரலாற்று ஏடுகளில் அழுத்தமாகப் பதிந்தே இருக்கிறது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பதை மறந்து விட்டோ, அல்லது மறைத்து விடலாமென்று நம்பிக்கொண்டோ

அம்மையார் அவர்கள், திருவாய் மலர்ந்தருளிய நாகரிக வாசகங்களின் பட்டியல் இதோ!

* எம்.ஜி.ஆர். எனது புகழையும் செல்வாக்கையும் கண்டு பொறாமைப்படுகிறார் என்று தனது கைப்படவே ஆங்கிலத்தில் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதம் எழுதியவர்தான் ஜெயலலிதா என்ற ஆதாரபூர்வமான குற்றச்சாட்டை இதுவரையில் இந்த அம்மையார் மறுத்ததுண்டா?

* இந்து மதம், விநாயக சதுர்த்தி, தமிழ் மொழியில் குடமுழுக்குகள் நடத்துவது போன்ற தேவையற்ற விஷயங்களைப் பற்றி கருத்துகளைத் தெரிவித்து மக்களுக்கு உபதேசம் செய்து வருகிற கருணாநிதி, கண்ணகி சிலையை மீண்டும் நிறுவ வேண்டும் என்பதற்காகப் போராட்டத்தை நடத்தத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிற கருணாநிதி, காவேரிப் பிரச்சினையில் தமிழகத்திற்குத் துரோகம் செய்த பாரதப் பிரதமரின் முடிவை எதிர்த்து எந்தவிதமான போராட்டத்தையும் நடத்த ஏன் தயாராக இல்லை? காவேரிப் பிரச்சினையில் தமிழக மக்களுக்கு பிரதமர் இழைத்த துரோகத்தை விமர்சிக்க கருணாநிதி ஏன் பயப்பட வேண்டும்?

(ஜெயலலிதா - 14.9.2002)

* மத்திய அமைச்சரான ம.தி.மு.க.வைச் சேர்ந்த கண்ணப்பன், மணிசங்கர அய்யர், டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள் காட்டும் குறுகிய மனப்பான்மை மற்றும் கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கு மாறாக, காவேரிப் பிரச்சினையில் நான் எடுத்துள்ள முயற்சிகள்தான் தற்போது பயனளிக்கத் தொடங்கியுள்ளன. காவேரிப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு இந்தத் தலைவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.

(ஜெ. - 14.9.2002)

* தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டமான திருவாரூர் மாவட்டத்தில் பிறந்த கருணாநிதி

மற்றும் மாறன் ஆகியோர், காவேரி டெல்டா பகுதி விவசாயிகளுடன் தங்களை ஒன்றாக நினைக்கவில்லை. ஒருவேளை இதற்குக் காரணம், கருணாநிதி மற்றும் மாறன் ஆகியோர், காவேரி டெல்டா பகுதியில் வேளாண்மை புரியும் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதாலும், அவர்களுடைய பரம்பரைத் தொழில் விவசாயம் அல்ல என்பதாலும்கூட இருக்கலாம்

(ஜெ. - 14.9.2002)

* தி.மு.க. தலைவர் கருணாநிதியோ, தமிழ் நாட்டின் முதல் அமைச்சராக இருந்தபோது அப்போதைய மத்திய அரசை பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக, 1998ல் அதிகாரமற்ற காவேரி நதி ஆணையம் அமைவதற்கு அவரது இசைவையும், ஒத்துழைப்பையும் கொடுத்தார். காவேரி நதி ஆணையம் அமைவதற்கும் உறுதுணையாக இருந்து மன்னிக்கவே முடியாத துரோகத்தைத் தமிழகத்திற்கு இழைத்தார். பிரதமர் வாஜ்பய் தமிழ் நாட்டிற்கு இழைத்த துரோகத்தை ஏன் கருணாநிதி கண்டிக்கவில்லை?

(ஜெ. - 12.9.2002)

(உடன்பிறப்பே, மத்திய அரசைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற பயத்தில் நான் காவேரி ஆணையத்திற்கு ஒப்புதல் கொடுத்தேனாம்! அப்படியானால், இப்போது காவேரி ஆணையத்தை எழுத்துப் பூர்வமாக ஒத்துக்கொண்டதோடு, பிரதமர் அவர்களுக்கு தன் கடிதத்தையும், அதன் கடுமையான வாசகத்தையும் வாபஸ் பெறுவதாக ஜெயலலிதா அம்மையார் எழுதியுள்ளதற்கு என்ன பெயராம்?)

* ஏதேதோ பிரச்சினைகளுக்காகத் தினந்தோறும் தொலைக்காட்சி, காமிராக்கள் முன்பு நின்று கொண்டு ஆபாசமாக பேட்டி கொடுத்துவரும் இளங்கோவன், அவரது காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி மூலம் கர்நாடக முதல்

அமைச்சரை அணுகி, தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடச் சொல்ல வேண்டியதுதானே?

(ஜெ. - 12.9.2002)

* கர்நாடகாவில் அதிரடிப்படையின் தலைவராக ஐ.ஜி. கெம்பையா இருந்தார். அவர் வீரப்பனை விரட்டியடித்துக் கொண்டிருந்தார். கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தார். சில நாட்களுக்கு முன்பு நெடுமாறனும், அவருடைய சில கூட்டாளிகளும் கர்நாடக முதல்வரைச் சந்தித்துப் பேசினார்கள். அதைப் போலவே என். ராம் தலைமையில் ஒரு பத்திரிகையாளர் குழுவினரும் கர்நாடக முதல்வரைச் சந்தித்தனர். அதில் வாசந்தி, மாலன் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் என்ன சொன்னார்கள் என்று எனக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அவர்களுடைய எண்ணத்திற்கு அவர்கள் கிருஷ்ணாவின் மனதை மாற்றிவிட்டார்கள் என்றே தெரிகிறது. இவர்கள் சந்தித்துப் பேசிய பிறகு திடீரென்று எந்தவிதமான காரணமும் இல்லாமல் கெம்பையா மாற்றப்பட்டார்.

(ஜெ. - 27.8.2002)

* சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதிலும், பொது அமைதியைப் பராமரிப்பதிலும் கர்நாடக அரசு தோல்வி அடைந்து விட்டது. எங்களுக்கு கிடைத்த தகவல்படி, கபினி அணையில் விவசாயிகள் தாங்களாகவே குதிக்க வில்லை. அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு தள்ளி விடப்பட்டனர் என்பதும், அதில் ஒருவர் இறந்து விட்டார் என்பதும், திட்டமிட்டே இத்தகைய ஒரு சம்பவம் நடைபெற வேண்டும் என்பதற்காகவும், இதைக் காரணம் காட்டி சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு விட்டது என்பதைச் சொல்லி தண்ணீரே திறந்துவிடாமல் நிறுத்த வேண்டும் என்பதற்காகவே கர்நாடக அரசு திட்டமிட்டு இப்படி ஒரு செயலில் இறங்கியுள்ளது.

(ஜெ. - 20.9.2002)

* குஜராத் பிரச்சினையில் தேர்தல் கமிஷன், தனது அதிகார வரம்பை மீறி நடந்து கொண்டுள்ளது.

(ஜெ. - 29.8.2002)

* சோனியா காந்தி, கூட்டணி அரசு அமைக்கத் தயாராக இருப்பதாகக் கூறுவது எப்படியாவது ஒன்றை அடைய வேண்டும் என்ற ஆதங்கத்தை, வெறியை, இயலாமையைக் காட்டுகிறது.

(ஜெ. - 15.11.2002)

* மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஒரு பொய்யர்!

(ஜெ. 14.8.2001)

உடன்பிறப்பே, இவைகள் எல்லாம் அம்மையார் அண்மைக் காலத்தில் உதிர்த்த நாகரிகமான, நாவடக்கமிக்க வாசகங்கள். ஏற்கனவே அவர் நவின்றுள்ள நாகரிக வாசகங்கள் மேலும் வருமாறு :-

* மோரிலே விஷம் கலந்து எம்.ஜி.ஆர் உயிரை ஜானகி அம்மையார் முடித்து விட்டார்.
* என்னிடம் தகாத முறையில் தமிழக ஆளுநர் சென்னாரெட்டி நடந்து கொண்டார்.
* எனக்கும், பிரதமர் நரசிம்மராவிற்கும் தலைமுறை இடைவெளி உள்ளது.
* சோனியா காந்தி வெளிநாட்டுப் பெண், இந்நாட்டில் நுழைய விட மாட்டோம்.
* டெல்லியின் தூண்டுதல் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் வழிப்பறிக் கொள்ளை நடக்கிறது.
* கிருஷ்ணா நீர் பிரச்சினையில் ஆந்திர முதல்வரும் ஒரு மோசடிப் பேர்வழி!
* ராஜிவ் காந்தி படுகொலைக்கு மூப்பனாரும் உடந்தை.
* அத்வானி அவர்களுக்கு செலக்டிவ் அம்னீஷியா நோய் உள்ளது.

உடன்பிறப்பே, அம்மையாரின் நாவடக்கம் நிறைந்த சொற்களுக்கு எடுத்துக்காட்டுகளை இன்னும் ஏராளமாக எழுதிக்கொண்டே இருக்கலாம். இதுபோன்ற பேச்சுகள்தான் நாவடக்கம் மிக்கவை என்றால், எனக்கு அப்படிப் பேசத் தெரியாதுதான். அம்மையாரின் அவையடக்கம் நிறைந்த பேச்சு களுக்கும், எழுத்துகளுக்கும் உச்சநீதிமன்றமே தான் சான்றிதழ் அளித்து விட்டதே, பிறகு நாம் ஏன் ஒரு சான்றிதழ் வழங்கும் வேலையில் இறங்கவேண்டும்?

அன்புள்ள,

மு.க.

20-11-2002

2840. இலாபம் என்பதற்கு நஷ்டம் எனப் புது பாஷ்யம் கூறுவதா?

உடன்பிறப்பே,

அறிஞர் அண்ணா அவர்களால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு, அவரது மறைவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற நான் - அவரது கொள்கைவழி நின்று 1971 ஆம் ஆண்டு தனியார் பேருந்து உரிமையாளர்கள் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்படி, 50 உரிமங்களுக்குக் கூடுதலாக உள்ள தனியார் பேருந்து அதிபர்களிடமிருந்து வாகனங்களையும், அவற்றையொட்டிய பிற சொத்துக்களையும் அரசுடைமையாக்கும் பணியை நிறைவேற்றினேன்.

அதன்படி மதுரை டி.வி.எஸ். நிறுவனத்தினர், பொள்ளாச்சி ஏ.பி.டி. நிறுவனத்தினர் மற்றும் இராமன் அண்ட் இராமன் நிறுவனம், சத்தி விலாஸ், ராம விலாஸ் லிமிடெட் முதலிய நிறுவனங்களிடமிருந்து பேருந்துகளையும் வழித் தடங்களையும் கையகப்படுத்தி, பேருந்துகளை அரசுடைமையாக்கும் கொள்கையை, உரசல் எதுவுமின்றி சட்டபூர்வமாக நிறைவேற்றிய பிறகு, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களை நிர்வாக வசதிக்காகத் தொடங்கி, கிராமப்புறத்து மக்களும் எளிய பயணங்களை அதிகச் செலவின்றி நடத்துவதற்கும் வழி வகுக்கப்பெற்றது.

இந்தக் கொள்கையை எதிர்த்து சிலர், உச்ச நீதி மன்றம் வரை சென்றனர். உச்ச நீதி மன்றமோ பஸ்கள் தேசிய மயக் கொள்கை புரட்சிகரமானது எனப் பாராட்டி, நமது கழக அரசு எடுத்த முடிவுக்கு அங்கீகாரமும் அளித்து விட்டது.

1972ல் தொடங்கிய இந்த முயற்சியின் விளைவாக, தொடக்கத்தில் சில ஆயிரம் பேருந்துகளே இயங்கிய இந்தப் போக்குவரத்துக் கழகத்தில் இப்போது சுமார் 18,000 பேருந்துகள் இயங்குகிற அளவுக்கு மகத்தான வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. குக்கிராமத்து மக்களும் பயனடைந்து வருகின்றனர்.

தொழிலாளியின் வியர்வைதான் இந்த உயர்வை வழங்கியது என்பதை உணர்ந்திடும் இயக்கம் தி.மு.க. என்பதாலும், அந்த தி.மு.க.வின் ஆட்சி நடைபெற்ற காரணத்தாலும், போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளின் நியாயத்தை உணர்ந்து, ஊதிய உயர்வாயினும், போனஸ் ஆயினும், ஓய்வூதியம் வழங்குவதாயினும், வேறு பல சலுகைகளாயினும் அட்டியின்றி வழங்கிய அரசாக தி.மு.க. அரசு திகழ்ந்தது.

ஆனால் இந்த அரசு, அந்தத் தொழிலாளர்களைத் தமது கோரிக்கைகளுக்காகப் போராடச் செய்து, அப்போதும்கூட அவர்களைப் புறக்கணித்து விட்டு, அய்யோ நஷ்டம் வந்து விட்டதே என்று அலறித் துடித்து, ரயில் கட்டணத்தை விட பஸ் கட்டணம் பல மடங்கு அதிகம் என்கிற அளவுக்கு உயர்த்தி, அதன் காரணமாக இலாபம் வந்து விட்டது என்று போக்குவரத்து அமைச்சரே சட்டமன்றத்திலே கூறிய பிறகும், அவற்றையெல்லாம் மக்கள் மறந்து விடுவார்கள் என நம்பிக் கொண்டு, நஷ்டத்தில் ஓடுகிற பஸ் வழித் தடங்களை தனியாருக்கு வழங்கப் போகிறோம் என்று அறிவித்தார்கள்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒருபோதும் தனியார் மயம் ஆக்கப்பட மாட்டாது - இலாபத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களை தனியார் மயமாக்க நாங்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை!

என்று 15-3-2002 அன்று சட்டப் பேரவையில் முழங்கி, அந்தப் பேச்சை அச்சியற்றிப் புத்தகமாகவும் வழங்கியுள்ள முதலமைச்சர் ஜெயலலிதா, இப்போது மக்களை முட்டாள்கள் எனக் கருதிக் கொண்டு, இலாபம் தரக் கூடிய பேருந்துகளையும், பேருந்துத் தடங்களையும் தனியாருக்குத் தாரை வார்ப்பதின் தாத்பர்யம்தான் என்ன?

இலாபம் என்பதற்கு நஷ்டம் என்று புது பாஷ்யம் கூறி இவர்கள் புதிர் அகராதி ஏதாவது தயாரித்திருக்கிறார்களா?

நஷ்டம் வரக் கூடிய வழித் தடங்களைத்தான் தருகிறோம் என்று வாய்ஜாலம் பேசப்படுகிறது. அந்த நஷ்ட வழித் தடங்களைப் பெறுவதற்கு நான் நீ என்று போட்டி நடக்கிறதே ஏன்?

நான் 50 லட்சம் தருகிறேன் - இல்லை இல்லை! நான் ஒரு கோடியே தருகிறேன் - என்று ஏலக்கடை முழக்கம் கேட்கிறதே! அது எதற்காக?

நஷ்டம் வரும் வழித் தடத்தில், பொது மக்களின் நன்மைக்காக மட்டுமெனக் கூறிக் கொண்டு, இந்தப் புண்ய காரியத்தில் ஈடுபடும் அந்த மகாப் புனிதர்கள் யார்? எவர்?

மலிந்தால் மார்க்கெட்டுக்கு வரப் போகிற சரக்குகள்தான்!

ஆனால் அதுவரையில், இதுபோன்ற ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் எத்து வேலைகளை எப்படித்தான் அனுமதித்துக் கொண்டிருக்க முடியும்?

1972இல் போக்குவரத்துக் கழகங்கள் உருவாகாமல், போக்குவரத்துத்துறை மட்டுமே இருந்த போது சுமார் 25 ஆயிரம் தொழிலாளர்கள் மட்டுமே இருந்ததற்கு மாறாக, தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்களில் சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றி அதன் காரணமாக அத்தனை குடும் பங்களும் பிழைத்து வருகின்றன.

இன்றையதினம் சில இதழ்களில் வெளி வந்துள்ள செய்திப்படி, பேருந்துகளைத் தனியார் வசம் ஒப்படைப்பதின் காரணமாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் குறைந்தது 38 ஆயிரம் பணியிடங்கள் உபரியாகக் கருதப்பட்டு, அவர்கள் பணியிழக்கின்ற சூழ்நிலை உண்டாகும் என்றும், எனவே விருப்ப ஓய்வூதியத் திட்டத்தை அறிவிக்கவும் பரிசீலிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே நஷ்டத்தில் இயங்கும் வழித்தடங்கள் மட்டுமே தனியாரிடம் அளிக்கப்படும் என கருதப்பட்டது. ஆனால் தற்போது, அனைத்து இலாபம் கிடைக்கக் கூடிய வழித் தடங்களிலுமே தனியாரை அனுமதிப்பது பற்றி பரிசீலிக்கப்படுவதாகச் செய்திகள் வந்துள்ளன. இந்த முடிவுகூட இலாபகரமாக இல்லாத வழித்தடங்கள்தான் தங்களுக்குக் கிடைக்கும் என தயக்கம் காட்டி வந்த தனியாருக்கு ஊக்கம் அளிப்பதற்காக மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது.

மாணவர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தற்போது 2.75 லட்சம் பேருக்கு இலவசப்

பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உரிய கட்டணத்தை மானியமாக அரசு செலுத்த வேண்டும். தனியார் பேருந்துகளிலும் இந்த இலவசப் பயணச் சலுகை தொடருமா என்பது போகப் போகத்தான் தெரியும்.

எனவே, சகலப் பிரிவு மக்களும் சங்கமமாகி நடத்த வேண்டிய அறவழிக் கிளர்ச்சிக்கு, இந்த ஆட்சியை நல்வழிப்படுத்த முயற்சிக்கும் கிளர்ச்சிக்கு, சமய சந்தர்ப்பம் சமீபத்தில் நெருங்கி விட்டது என்றே கருத வேண்டியுள்ளது.

அன்புள்ள,

மு.க.

22-11-2002

2841. நெறி கெட்ட அரசும் நேர்மையான அதிகாரிகளும்!

உடன்பிறப்பே,

இப்போது நடைபெறுகிற செல்வி ஜெயலலிதா ஆட்சியில், நேர்மையாக நடந்து கொள்கிற அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்குவதும், அரசாங்கத்தின் உள்நோக்கங்களுக்கு ஏற்ப, அரசியல் ரீதியாக பார பட்சமாக செயல்படுகின்ற அதிகாரிகளுக்குப் பரிசளிப்பு, பதவி உயர்வு போன்ற காரியங்களும் நடைபெறுவது வெட்டவெளிச்சமாகிவிட்ட உண்மையாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றை நான் குறிப்பிடுவதற்கு முன்பு, சில செய்திகளை நீயும், இந்தக் கடிதத்தைப் படிப்பவர்களும் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளில் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு, பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி அமைந்துள்ளதை முதலில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுகிறேன். மொத்த உறுப்பினர்களில் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு இருந்தால் மன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முடியும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது விழுப்புரத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு வருவோம். இதோ நான் என்னுடைய கடிதத்தில் இணைத்திருக்கும் கடிதத்தைப் படித்துப் பார்! விழுப்புரம் நகராட்சியின் ஆணையர் திரு. வ.சக்ரபாணி, பி.ஏ., அவர்கள் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு எழுதியுள்ள கடிதம் இது. இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தாலே விழுப்புரம் நகராட்சி மன்றத்தில் என்ன நடந்தது, பொதுமக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியிலிருந்தும், அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய கடமைகளிலிருந்தும் எந்த அளவிற்கு

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளுங்கட்சியின் அதிகார மட்டங்களில் உள்ளவர்களும் பொறுப்பை மறந்து பழிவாங்கும் நோக்கத்தோடு செயல்படுகிறார்கள் என்பதற்கு நூற்றுக்கு நூறு சான்று கிடைத்து விடும்! கடிதத்தில் உள்ள வாசகங்கள் வருமாறு:-

இந்நகராட்சியில் ஏப்ரல் 2002 முதல் இந்நகர் மன்றம் இயங்க முடியாத சூழ்நிலையில், எந்தவித தீர்மானமும் நிறைவேற்றப்படாமல் இருந்தது. 25.6.2002 அன்று நடந்த கூட்டத்தில் அதுவரை வைக்கப்பட்ட 89 தீர்மானங்கள் ஒட்டுமொத்தமாக நிறைவேற்றப்பட்டதாக நகர்மன்றத் தலைவர் அறிவித்ததன் தொடர்பாகக் கூட்டம் முடிந்தபின் அ.தி.மு.க. மற்றும் சுயேச்சை உறுப்பினர்கள் மேற்படி 89 தீர்மானங்களையும் எதிர்ப்பதாக தெரிவித்து என்னிடம் கடிதம் கொடுத்ததால் இந்தத் தீர்மானங்கள் மீது மேல் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அரசின் உத்தரவு கேட்கப்பட்டது. இதற்கான உத்தரவு இதுநாள் வரை பெறப்படவில்லை.

இச்சூழ்நிலையில் 13-11-2002 அன்று மாலை ஏற்கனவே 89 தீர்மானங்களை எதிர்ப்பதாக கையொப்பமிட்டிருந்த 7 உறுப்பினர்கள் உட்பட 20 மன்ற உறுப்பினர்கள் அரசின் உத்தரவு பெறப்படாத சூழ்நிலையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் 89 தீர்மானங்களை தாங்கள் ஆதரிப்பதாகவும், இந்தத் தீர்மானங்களை செயல்படுத்தும் நோக்கத்துடன் இவைகளை உறுதி செய்யவும், மேலும் தீர்மானங்களை நிறைவேற்றி மக்களுக்குத் தேவையான வசதிகளை செய்ய உடனடியாக கூட்டம் நடத்துமாறும் என்னிடம் கடிதம் கொடுத்தனர். அவைகளை நான் நகர்மன்ற தலைவருக்கு தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அனுப்பி வைத்தேன்.

நகர்மன்றத் தலைவர் அவர்கள், மன்றத் தீர்மானங்களை நிறைவேற்றத் தேவையான கூடுதல் உறுப்பினர்கள் கடிதம் கொடுத்த காரணத்தினால் 15-11-2002 மாலை 5.15 மற்றும் 5.30 மணிக்கு அவசரக் கூட்டம் கூட்டினார். இந்த அவசரக் கூட்டத்தின் பொருள்கள் 14-11-2002 அன்று அனைவருக்கும் சார்பு செய்யப் பட்டது. 15-11-2002 அன்று மாலை 4.45 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அவரது கடிதம் எண். பிடி/13386/2002 நாள் 15-11-2002ல் விழுப்புரம் நகராட்சி உறுப்பினர்களின் 15-11-

2002 மனுவில் - நகர் மன்றத்தைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள் கடத்தப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் 15-11-2002 நடைபெறுவதாக உள்ள நகர்மன்றக் கூட்டம் நடைபெற்றால் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உண்டு என தெரிவித்துள்ளதாகவும், மேலும் வருவாய் கோட்டாட்சியரும் மேற்படி கூட்டம் நடைபெற்றால் சட்டம் ஒழுங்கு பாதிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளதென தெரிவித்து, நகர்மன்ற கூட்டத்தினை பிறிதொரு நாளில் தள்ளி வைக்குமாறு நகராட்சி ஆணையருக்குத் தெரிவித்தார்.

இந்தக் கடிதத்தினை அப்போது அலுவலகத்திற்கு வந்த நகர்மன்றத் தலைவரிடம் கொடுக்கப்பட்டது. இதற்கு நகர்மன்றத் தலைவரும், அவருடன் வந்திருந்த விழுப்புரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. க. பொன்முடி அவர்களும் கடத்தப் பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ள மூன்று நகர்மன்ற உறுப்பினர்கள் இங்கிருக்கிறார்கள் என வருவாய் கோட்டாட்சியர் மற்றும் காவல்துறை ஆணையர் மற்றும் நகர காவல் ஆய்வாளர்களிடம் தெரிவித்து, யாரும் கடத்தப்படவில்லை, பொய் புகார் மீது மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட அந்த மூன்று உறுப்பினர்களும் அங்கு கூடியிருந்த பத்திரிகையாளர்களிடம் நாங்கள் யாரும் கடத்தப்படவில்லை எனவும் தெரிவித்து, அதற்கான கடிதத்தினை நகர் காவல்துறை ஆய்வருக்கு கொடுத்து, என்னிடம் ஜெராக்ஸ் நகலும் கொடுத்தனர்.

இந்தச் சூழ்நிலையில், கடத்தப்பட்ட சம்பவம் நடக்க வில்லை என ஊர்ஜிதம் செய்துகொண்டு, மொத்தமுள்ள 36 மன்ற உறுப்பினர்களில் 20 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்ததால் நகர் மன்றக்கூட்டம் மாலை 5.30 மணிக்கு தொடங்கியது. நகர்மன்றத் தலைவர் இந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவேண்டும் என கேட்டுக்கொண்டதால் நானும், அலுவலர்களும் கலந்துகொண்டோம். இந்தக் கூட்டத்தில் ஏற்கனவே நிறைவேற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ள 89 தீர்மானங்களையும் உறுதி செய்வதாகவும், மற்ற 48 தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும், அனைத்து 20 மன்ற உறுப்பினர்களும் கையை உயர்த்தி தெரிவித்தனர். மேற்கூறிய சூழ்நிலையில் ஏற்கனவே நிறைவேற்றியதாக குறிப்பிடப்பட்டு

20 நகர்மன்ற உறுப்பினர்களால் எதிர்க்கப்பட்ட தீர்மானங்கள் 15-11-2002 கூட்டத்தில் 20 உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால், இவைகளை நகர மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அமல்படுத்துவது நகராட்சி ஆணையரின் கடமை என தெரிவித்துக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, இவ்வாறு விழுப்புரம் நகராட்சி ஆணையர், சென்னையில் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு எழுதியுள்ள இந்தக் கடிதத்தை முழுவதும் படித்தாலே அந்த நிகழ்ச்சியில் நடைபெற்ற முழுக் கதையும் தெளிவாகப் புரியுமென்று நம்புகிறேன்.

இஃதன்னியில், வேறொன்றையும் நினைவூட்டுகிறேன். 25-6-2002இல் விழுப்புரம் நகராட்சியில் நடைபெற்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவில்லை என்று அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை இப்பொழுது 15-11-2002 அன்று நிறைவேற்றப்படுவதற்கு பெரும் பான்மையோர் ஆதரவு கொடுப்பதாக நகராட்சி ஆணையரைச் சந்தித்து கடிதம் கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்துதான் அந்தக் கூட்டம் நடைபெற்று அந்த அடிப்படையில்தான் அந்தக் கூட்டத்தில் என்ன நடைபெற்றது என்பதை ஆணையர் என்ற முறையில், தான் மேற்கொண்ட கடமைகளையும் இந்தக் கடிதத்தில் திரு. சக்கரபாணி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நகராட்சி நிகழ்ச்சி குறித்து நாளிதழ் ஒன்றில் வெளிவந்த செய்தியையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நாளிதழ் தி.மு.க. ஆதரவு நாளிதழ் அல்ல. அதில் வந்த செய்தி வருமாறு :-

கடந்த 15ந் தேதி கூட்டம் நடத்தப்பட்டது. நூர் முகமது ஆதரவு கவுன்சிலர்கள் ஏழு பேர் கூட்டம் நடப்பதற்கு முதல் நாள் கமிஷனரைச் சந்தித்து 89 தீர்மானம் நிறைவேறுவதற்கு ஆதரவு கொடுப்பதாக கடிதம் கொடுத்திருந்தனர். இதைத் தொடர்ந்து கூட்டம் நடப்பதைத் தடுப்பதற்கு அ.தி.மு.க. தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அ.தி.மு.க. பெண் கவுன்சிலர்கள் மூன்று பேரை தி.மு.க., புஷ்பராஜ் கடத்திச் சென்றுவிட்டதாக போலீசில் புகார் கொடுக்கப்பட்டது. இதன் பேரில் கலெக்டர் முகமது அஸ்லம் கூட்டம் நடப்பதற்கு அரை மணி நேரம் முன்பாக கமிஷனருக்கு நோட்டீஸ் ஒன்றை அனுப்பினார். இதை அறிந்த முன்னாள் அமைச்சர் பொன்முடி கமிஷனரிடம் தகராறு செய்தார். சட்டம் ஒழுங்கு பிரச்சினையை காரணம் காட்டி எப்படி கூட்டத்தை

நிறுத்த முடியும் என்று அதிகாரிகளை ஆங்கிலத்தில் திட்டித் தீர்த்தார். இந்த நிகழ்ச்சி முழுவதும் நிருபர்கள், முன்னிலையில் நடந்தது. உள்ளூர் கேபிள் டி.வி. தரப்பில் இந்தச் சம்பவம் முழுவதும் பதிவு செய்யப்பட்டது. அன்று இரவே கேபிள் டி.வி.யில் இந்த நிகழ்ச்சி முழுவதும் ஒளிபரப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து கேபிள் டி.வி. அலுவலகத்திற்கு டவுன் இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) முத்தையன் மற்றும் போலீசார் சென்றுள்ளனர். சர்ச்சைக்குரிய கேசட்டை கட்டாயமாக வாங்கிக் கொண்டு சென்றுவிட்டனர். மேலும் 20க்கும் மேற்பட்ட கேசட்டையும் பறிமுதல் செய்து எடுத்துச் சென்றுவிட்டனர். இதுபற்றி விசாரித்தபோது, நகராட்சி அலுவலகத்தில் புகுந்து கலெக்டர் மற்றும் உயர் அதிகாரிகளை திட்டியதற்காக பொன்முடி மீது வழக்குப் பதிவு செய்ய சொல்லி உத்தரவு வந்திருப்பதாகவும் அதற்கான ஆதாரம் அந்தக் கேசட்டில் இருப்பதால் கேசட் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

தம்பி பொன்முடி மீது வழக்கு போடுவதும், அதைச் சந்திப்பதும் வேறு விஷயம். ஆனால் இதில் ஆளுங் கட்சிக்கு எத்தகைய அறநெறியற்றதும், ஜனநாயக விரோதமானதுமான அணுகுமுறை இருந்தது என்பதற்கு உதாரணம்தான் நியாயமாக செயல்பட்டு பொதுமக்கள் பிரச்சினைகளுக்காக தீர்மானத்தை ஆதரித்த அ.தி.மு.க. நகராட்சி மன்ற உறுப்பினர்கள் நான்கு பேர் மீது அந்தக் கட்சியின் தலைமை நடவடிக்கை எடுத்து கட்சியிலிருந்து விலக்கி யிருப்பதாகும்.

இதில் மற்றொரு வேதனை என்னவென்றால், நகராட்சி மன்ற ஆணையர் சக்ரபாணி அவர்கள் திடீரென விடுப்பில் சென்றுள்ளார். அவராகச் சென்றுள்ளாரா? அல்லது அவ்வாறு பணிக்கப்பட்டாரா? என்பது அந்நகராட்சியில் வாழும் மக்களுடைய முடிவிற்கே விடப்படுகிறது.

இந்த நிலையில் நகர்மன்றக் கூட்டம் நிறைவேற்றிய தீர்மானங்களை பொதுமக்கள் நன்மைக்காக நடைமுறைப்படுத்த வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி 26-11-2002 செவ்வாய்க்கிழமை அன்று விழுப்புரத்தில் தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், புதிய நீதிக்கட்சி, த.மு.மு.க.,

வியாபாரிகள் சங்கம், அனைத்து பொது நலச் சங்கம் ஆகிய இயக்கங்களின் அமைப்புகள் முழு அடைப்பு நடத்துவது என்றும், நிலைமையை விளக்கி தெருமுனைப் பிரச்சாரம் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவும் ஒரு அதிகாரி ஜனநாயக ரீதியாக நேர்மையுடன் செயல்பட்டதின் விளைவாக ஏற்பட்டுள்ளதாகும். எனவே, இந்த ஆட்சி சொல்வதொன்றும், செயல்படுவது ஒன்றுமாக முரண்பாட்டின் மொத்த உருவமாக காட்சியளிக்கிறது என்பதற்கு இதுவே சாட்சி. உள்ளாட்சித் தேர்தல் முடிவுற்றபோது வெற்றி பெற்ற அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு ஜெயலலிதா கைப்பட எழுதிய வாழ்த்துக் கடிதத்தில்,

"தாங்கள் பொறுப்பேற்றுள்ள பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகளை உணர்ந்து நீங்கள் நன்கு செயல்படுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்."

என்று எழுதியிருந்தார். ஆனால் அதற்கேற்ப செயல்படுவதற்கு பொறுப்பிலே இருக்கின்ற எதிர்க்கட்சிகளுக்கும் இப்போது வாய்ப்பு அளிப்பதில்லை. சொந்தக் கட்சிக்காரர்களுக்கும் அனுமதி அளிப்பதில்லை. இரு சாராருமே ஒரு வகையிலே தண்டிக்கப்படுகிறார்கள்.

இதற்கு துணைபோக விரும்பாத சக்ரபாணி போன்ற அதிகாரிகள், துணைபோகாத காரணத்தால் விடுப்பில் போகவேண்டிய நிலைமைக்கு ஆளாகிறார்கள். இதுதான் இன்றைய தமிழ் நாட்டின் நிலைமை! இந்த இருள் நீங்க விடிவு காலம் எப்போது?

விழுப்புரம், இந்த ஆட்சியில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல!

நேர்மையான அதிகாரிகள் இன்றைக்கு தள்ளி வைக்கப்படலாம். ஆனால் நேர்மையற்றோர் நாளைக்குத் தண்டிக்கப்படும் நிலைமை வந்தே தீரும்!

அன்புள்ள,

மு.க.

23-11-2002

2842. ஜனகர், செக்கு எது? சிவலிங்கம் எது? எனத் தெரியாதவர்!

உடன்பிறப்பே,

சில நேரங்களில் என் கடிதம் கவிதை வடிவில் உனக்கு வரும். இன்று ஒரு சிறுகதை வடிவில்! இப்படியும் நடக்குமா? ஆனால் நடந்திருக்கிறதே - என்ற நிஜக்கதை வடிவில் எழுதியிருக்கிறேன். உன் அறிவுக் கூர்மையை நம்பி!

ஜனகர் ஒரு பெரிய அதிகாரி. நமது மாநிலத்தில் அல்ல - வேறு மாநிலத்தில்! அந்தப் பெரிய அதிகாரிப் பொறுப்பை அவரை நம்பி, அதாவது அவரது கை சுத்தம்? என்பதை நம்பி அவரிடம் ஒப்படைக்க அந்த மாநில மேலிடத்தார் முதலில் முன்வரவில்லை. அதற்குக் கூட அவர் எத்தனையோ வழிகளைக் கையாண்டு பார்த்தவர்.

பெரிய செயலாளர் ஒருவரைப் பிடித்தால்தான் அந்தப் பொறுப்பு கிடைக்குமென்று யாரோ சொல்ல, அதற்குத் தானே நேரில் போக விரும்பாமல், தன்னுடைய மனைவியைத் தூது போக வலியுறுத்தினார். அந்தப் பெண்மணியின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஓர் ஊதாரியைத் திருமணம் செய்துகொண்டு, ஊழ்வினையை சபித்துக் கொண்டிருந்த உத்தமி அந்தப் பெண்மணி என்பதால் பெயர் சொல்வது என்பது நினைக்கவே முடியாத ஒன்று!

என்றைக்குமில்லாமல் அன்றைக்கு, திடீரென ஜனகர், தனது மனைவியின் காலைப் பிடித்துக் கொண்டு - என் கண்ணு! கண்ணு! என்று கெஞ்சிடலானார்.

என்ன இது? என் காலைப் பிடிக்கிறீங்க? பெரிய பாபமல்லவா?

என்று அந்தப் பெண்மணி துடித்துப் போனார்.

இதைவிட ஒரு பெரிய பாபத்தை நீ செய்ய வேண்டு மென்பதற்காகத்தான், நான் இந்தப் பாபத்தை முதலில் தொடங்கி வைக்கிறேன் என்றார் ஜனகர்!

பெரிய பாபமா? என்ன அது? அதுவும் நான் செய்ய வேண்டுமா?

ஆமாம் - மூத்த செயலாளரைப் போய் நீ உடனே பார்க்க வேண்டும். அதுவும் இப்போதே பார்க்க வேண்டும்

அவர் ஒரு ஆம்பளை - அவரைப் போயி நான் ஒரு பொம்பளை பார்க்கிறதா? எதுக்கு?

அவர் ஆம்பளையா இருக்கிறதாலேதான் உன்னைப் போகச் சொல்றேன்.

அதான் எதுக்குன்னு கேக்கிறேன்!

நான் ரொம்ப நாளாக அலையிறேனே! அந்த பெரிய அதிகாரி பதவி கிடைக்கிறதுக்கு!

திறமையும் நாணயமும் இருந்தா கிடைச்சுட்டுப் போகுது!

அது இரண்டும் எனக்கிட்ட இல்லேன்னு தானே, பெரிய பொறுப்பு கொடுக்கமாட்டேன்கிறாங்க!

நான் போயி கேட்டால் கொடுத்துடுவாங்களா?

கேட்க வேண்டிய முறையிலே கேளடி என் கண்ணே! கட்டாயம் என் ஆசை நிறைவேறும்! நான் அந்தப் பெரிய அதிகாரி ஆகிவிடுவேன்!

அது என்ன! கேட்க வேண்டிய முறை?

அய்யோ! அசடாயிருக்கியே! உனக்குப் புரிய மாட்டேங்குதே! 63 நாயன்மார்களிலே இயற்பகை நாயனார்னு ஒருத்தர் இருந்தார் - அவர், இறைவன் கேட்டார்னு இல்லத்தரசியையே அனுப்பி வச்சார் - புராணத்திலே இருக்குடி!

என்ன சொன்னீங்க? அது மாதிரி?

நான் இயற்பகை நாயனாராக இன்றைக்கு ஒரு நாளைக்கு ஆகிறேன்டி! நீ எனக்காக - எனக்கு அந்த பெரிய பதவி கிடைக்கிறதுக்காக!

இப்படி சொல்லிக் கொண்டே ஜனகர், மனைவியின் பாதங்களில் தலையைப் புதைத்து மன்றாடினார்!

சே! நீயும் ஒரு மனுஷனா? உம்மை ஒரு ஆண்மகன், சுயமரியாதையுள்ளவன், யோக்கியன்னு நினைச்சு தானே, என்னை உனக்குக் கட்டி வச்சாங்க! இப்படிப்பட்ட ஒரு அவமானச் சின்னம் - அசிங்கம் புடிச்ச பேர்வழின்னு - தெரியாம போச்சே! பத்தினியைக் கூட வித்துட்டு பதவி தேடுற உனக்கு மானம், வெட்கம், சூடு, சொரணை எதுவுமே இல்லை! நீ ஆசைப்படுற அந்த பெரிய அதிகாரம் எப்படியோ கிடைச்சா அதைக் கட்டிகிட்டு அழு! நான் போய்ட்டு வர்ரேன்!

என்று, காலைப் பிடித்துக் கொண்டிருந்த கணவன் ஜனகரை உதறியெறிந்து விட்டு, அந்த மாசற்ற மனைவி வீட்டை விட்டு வெளியேறினாள்.

வெளியேறியவள் பின்னர் வீடு திரும்பவே இல்லை!

ஜனகருக்கு மூளையே குழம்பிவிட்டது - அப்படி மூளை குழம்பிய நிலையிலும், பெரிய அதிகாரி என்ற பதவியின் மீது கொண்ட மோகம் குறையவில்லை. என்ன செய்தாரோ! யாது செய்தாரோ! கட்டிய மனைவியையே விட்டுத் தர முன் வந்த கயவனுக்கு வேறு வழி கிடைக்காமலா போயிருக்கும் - பெரிய அதிகாரம் எப்படியோ கிடைத்தது என்றாலும், அதை வைத்துக் கொண்டு மற்ற அதிகாரிகள் மீது அவருக்கிருந்த ஆத்திரத்தையும், பொறாமை உணர்ச்சியையும் ஏதாவது ஒரு வழியில் வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தார்.

அவரது அதிகார எல்லைக்குள் நடைபெற்ற அத்துமீறல்கள், அடாவடிச் செயல்கள், களவுகள், கொலைகள், கடத்தல்கள் எதையும் கவனிக்கவோ, கட்டுப்படுத்தவோ, கண்டுபிடிக்கவோ இயலாத கையாலாகாதவர் என்ற சிறப்புக்கு உரியவரானார்.

காரணம், அவரது மனைவி வெளியேறும் போது உதிர்த்த உஷ்ணமான வார்த்தைகளால் அவர் உடலும், உள்ளமும் அடைந்த அதிர்ச்சியில் ஒருவிதமான நூதன மூளைக்கோளாறு அவரைப் பீடித்து ஆளை அலைக்கழித்து விட்டது.

எனவே அவர் ஆற்ற வேண்டிய கடமைகளையும், பணிகளையும் அவருக்கு அடுத்திருந்தவர்களே ஆற்றினர். அதனால் அவர்கள் மீதெல்லாம் எரிந்து விழுந்தார்.

அடுத்த மாநிலத்தில் உள்ள அதிகாரிகளையும் விடவில்லை. அவர்கள் மீதும் எகிறி விழுந்தார் -

எல்லோருமே, அவரைப் பார்த்து, என்னய்யா! உமக்கு செக்கு என்றும், சிவலிங்கம் என்றும் வித்தியாசமே தெரியவில்லை?

என்று கேலிபுரியத் தொடங்கினர். இன்னும் சில நாட்களில் வீதியில் விளையாடும் பிள்ளைகள் கூட, அவரைப் பார்த்தால் கை கொட்டிச் சிரிப்பர்!

தெருவில், தேவாரம், திருவாசகம் பாடிச் செல்லும் திருக்கூட்டத்தினர் கூட, பித்தா! பிறை சூடி! இதோ வருகிறதே! என்று அந்தப் பைத்தியக்காரரைக் கண்டு எள்ளி நகையாடுவர்!

அன்புள்ள,

மு.க.

27-11-2002

2843. ஆண்டுகொண்டிருப்பதே அவர்தானே!

உடன்பிறப்பே,

* தலித்துகள் என்றால் எந்தக் கோயிலுக்குள்ளும் நுழைய அனுமதிக்க மாட்டோம்.

* ஆதி திராவிடர்கள்தான் இந்துக்களில் ஓர் அங்கம். தலித்துகளை இந்துக்கள் என்று கூற முடியாது.

* உண்மையான பக்தர்களாக கோவிலுக்குள் செல்வதை நாங்கள் அனுமதிப்போம். ஆனால் உரிமையுண்டு என்று சென்றால் அனுமதிக்க மாட்டோம்.

* 63 நாயன்மார்களை, அந்தந்த சாதியைச் சேர்ந்த நாயன்மார்களை அந்தந்த சாதியினர் வழிபட வேண்டும்.

இவ்வாறு நான்கு பொன்மொழிகளை நான்கு வேதங்களைப் போலப் பொழிந்திருப்பவர் வேறு யாருமல்ல! காஞ்சி சங்கராச்சாரியார்தான் இந்தப் பேதங்களுக்காக (மன்னிக்கவும் வேதங்களுக்காக) வக்காலத்து வாங்கிக் கொண்டு, சின்ன சேலத்துக்கருகேயுள்ள வீர பயங்கரம் அய்யனார் ஆலயத்துக்கு சாமி கும்பிடச் சென்றவர்களைத் தடுக்கும் உயர் வர்க்கத்தினருக்கு ஆதரவாக விழுப்புரத்தில் செய்தியாளர்களிடம் பேட்டி கொடுத்துள்ளார்.

இந்தச் செய்தியையும் படித்துவிட்டு, என் மேஜை மீது இருந்த பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள் என்ற நூலையும் சில பக்கங்கள் புரட்டிப் பார்த்தேன்.

அவர் எழுதிய சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் நாடகத்திலே ஒரு காட்சி!

ஆண்டி, பச்சை, பிச்சை என்று மூன்று கதா பாத்திரங்கள் - அவர்களில் பச்சைக்கு விளைவிக்கப்பட்ட கொடுமை குறித்து உரையாடல்! அந்தக் காட்சியில்! இதோ! அந்தக் காட்சி:-

ஆண்டி:- பச்சை! நீயா ஐயோ, ஐயோன்னு கூவினது. என்னடப்பா நடந்தது? உடம்பெல்லாம் காயம், ரத்தம்! என்ன அநியாயமிது?

பச்சை:- ஆண்டி! பார்த்தாயா இந்தக் கோரத்தை! கேட்டியா இந்த அக்ரமத்தை? நீ என்னமோ நம்ம சாதியிலே யாரும் படிக்காத படிப்பு படிச்சிடுவேண்ணு ஊரு, நாடெல்லாம் உன்னைப் புகழுதே. இந்த அக்கிரமத்தைக் கேட்க வேண்டாமா நீ?

ஆண்டி:- பச்சை! என்ன நடந்தது? முரட்டு மாடு ஏதாவது இடித்துக் காயப்படுத்தினதா? வெறி நாய் மேலே விழுந்து கடித்ததா? கொள்ளைக்காரப் பசங்க தடியாலே தாக்கினாங்களா? அழாமே சொல்லு பச்சை!

பச்சை:- ஆமாம்! முரட்டு மாடுதான் மேலே விழுந்து முட்டுச்சி. வெறி நாய்தான் கடித்தது. கொள்ளைக்காரனுங்கதான் என்னைத் தடியாலே தாக்கினாங்க.

ஆண்டி:- இப்படி ஜன்னி கண்டவன் போலப் பேசினா நான் என்னான்னு நினைக்கிறது? முரட்டு மாடான்னா அதுக்கும் ஆமாங்கிறே! வெறி நாயான்னா அதுக்கும் ஆமாங்கிறே! கொள்ளைக் காரனுங்களான்னா அதுக்கும் ஆமாங்கிறே! நான் என்ன செய்யறது? யார் செய்தா இந்த அக்கிர மத்தை? ஏன்? நீ என்ன செய்தே?

பச்சை:- நானா? குளிக்கப் போனேன்.

ஆண்டி:- எங்கே?

பச்சை:- அவுங்க வீட்டுக்காப் போனேன்? குளத்துக்குத்தான். அது புண்ணிய தீர்த்தமாம். அதிலே குளிக்கலாமான்னு பாவிப் பயலுங்க இந்த அநியாயம் செய்துட்டானுங்க.

பிச்சை- நீ ஏண்டாப்பா அங்கே போகணும்? அதுவோ, ஐயமாரு கொளம்! நாம ஈன ஜாதி.

ஆண்டி:- (கோபத்துடன்) அடே முட்டாளே! போனால் என்னடா? குளத்திலே நாய் தண்ணீர் குடிக்கிறதேடா நாய். நாம் என்ன நாயை விடக் குறைவா? மலம் தின்னும் நாயடா நாய். அது உரிமையோடு தண்ணீர் குடிக்கிறது குளத்தில். பச்சை, நாய்க்கும் கேடு கெட்டவனா? சேற்றிலே புரளுகின்ற எருமை குளித்தால் விரட்டவில்லை. மனிதன் தலைமுறை தலைமுறையாக மற்றவர் களுக்குப் பாடுபட்டு மேனி கருத்துப் போன சாதி நாம். நாம் குளித்தால் குளம் தீட்டாகிவிடுமா? என்ன அக்ரமம்? அடுக்குமா இந்த அநீதி?

பச்சை:- ஆண்டி! நீ நம்ம சாதியிலே படிச்சவன். என்னென்னமோ பேசறே. நீ சொல்றதை கேட்கிற போது எனக்கென்னவோ தலை சுற்றுவது போல் இருக்கு.

ஆண்டி:- உன்னைப் போன்ற ஜென்மங்கள் நம் சமூ கத்தில் இருப்பதால்தான் இந்த இழிவு! பச்சே! பாழான சமூகக் கொடுமையை நான் இப்போது பார்த்தது மட்டுமல்ல! அனுபவித்துமிருக்கிறேன்.

(சட்டையைக் கிழித்துப் பழைய தழும்புகளைக் காட்டி), பார், தழும்புகளை! அந்தப் பாவிகள் செய்த அக்ரமம். என் பத்தாம் வயதிலே நேரிட்டது. இந்தத் தழும்பும் என் உடலை விட்டுப் போகாது. இந்த மமதையை அழிக்க வேண்டும் என்ற உறுதியும் உள்ளத்தை விட்டுப் போகாது. நம்மைப் படுத்துகிற பாடு இருக்கிறதே, இதற்கெல்லாம் ஒரு நாள் அவர்கள் பதில் சொல்லித் தீரவேண்டும் - வா, போகலாம்.

(காட்சி முடிகிறது)

உடன்பிறப்பே, காட்சி முடிகிறது என்று எழுதியிருக்கிறேன். நாடகத்தில்தான் இந்தக் காட்சி முடிந்திருக்கிறது. நாட்டில் இன்னமும் நடைபெறும் காட்சியாகவே இருக்கிறது. அண்ணாவின்

எண்ணத்தை மேலும் வண்ணமாக்கித் தந்துள்ளனர், எத்தனையோ கவிஞர்கள்! எத்தனையோ எழுத்தாளர்கள்! எத்தனையோ நாடக ஆசிரியர்கள்! எல்லாரும் இந்நாட்டு மன்னர்! ஒரே ரத்தம்! ஒன்றே குலம்! பாடல்களாக! ஆடல்களாக! பசுமரத்தாணி போல் பதியவைக்கும் உள்ளமுருகும் உணர்ச்சி மிகு காவியங்களாக!

இத்தனைக்கும் பிறகுதான், காஞ்சி சங்கராச்சாரியார் இவ்விதம் பேசுகிறார்! பேச முடிகிறது!

இந்தியா, இந்து நாடல்ல - அப்படி இந்து நாடாக மாற்ற முடியாது என்று நமது துணைப் பிரதமரே உறுதிபடக் கூறும்பொழுதுதான், தலித்துகளை இந்துக்கள் என்று கூற முடியாது என்று சங்கராச்சாரியார் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

ஆதி திராவிடர்கள் - அரிஜனங்கள் - தலித்துகள் - தாழ்த்தப்பட்டோர் - என்றெல்லாம் தனித்தனிப் பெயர்களில் அழைக்கப்படும் குமரி முதல் இமயம் வரையில் உள்ள சமுதாயத்தைத்தான் தலித் எனக் குறிப்பிடும்பொழுது, அவர்கள் இந்துக்களே அல்ல என்று எந்த ஆண்டவன் சங்கராச்சாரியாரின் கனவிலே வந்து கதைத்தவன்?

63 நாயன்மார்களையும் அவரவர் சாதியைச் சேர்ந்தவர்கள் வழிபட வேண்டுமாம் - அடடா! சங்கராச்சாரியார் சாதி வேற்றுமைகளை ஒழிப்பதில் எப்படி சல்லடம் கட்டிக் கொண்டு சலியாது உழைக்கிறார் பார்த்தாயா? உடன்பிறப்பே!

உண்மையான பக்தர்கள்தான் கோயிலுக்குள் செல்வது அனுமதிக்கப்படுமென்கிறார்.

அதை எப்படி கண்டுபிடிப்பது? பாதுகாப்பு போலீசார் மெட்டல் கருவி கொண்டு சோதித்துக் கண்டுபிடிப்பது போல, உண்மையான பக்தியைக் கண்டுபிடிக்க ஏதாவது கருவி இருக்கிறதா?

எத்தனை கோயில்களில், குருக்கள்மார் - பூசாரிமார் உதவியுடன், சமயங்களில் அவர்களே முன்னின்று, சிலைகள் களவாடப்பட்டுள்ளன!

விக்கிரகங்கள் மீதிருந்த அணிமணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன!

சுசீந்திரம் கோயிலில் ஆண்டவன் சிலையின் மீதிருந்த விலை உயர்ந்த அங்கியையே உரித்துக் கொள்ளையிட்ட அர்ச்சகர் சிக்கிக்

கொண்டாரே? அவரை உண்மையான பக்தர் என்று நம்பித்தானே அர்ச்சகர் பதவியில் அமர்த்தியிருந்தனர்?

இப்படி, எத்தனை கோயில்களின் அர்ச்சகர்கள் கம்பி எண்ண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சங்கராச்சாரியாருக்குப் பதில் தெரியாதா? தெரிந்தாலும் அது பற்றிக் கவலைப்படாமல், கடவுளின் படைப்பு எனப் படுவோரில் ஒருவர் தெருவில்தான் நிற்கவேண்டும் - மற்றொருவர் தேவாலயத்தில் நுழையும் தகுதி பெற்றவர் - என அளவுகோல் வைத்துப் பார்த்துத் தீர்ப்பு வழங்கிட இவருக்கு அனுமதி கொடுத்த அந்த ஆண்டவன்தான் யார்?

ஆண்டவன் தந்துள்ள அனுமதியா? அல்லது ஆண்டு கொண்டிருப்போர் தந்த அனுமதியா?

அடடா! மறந்தே போய்விட்டது! ஆண்டுகொண்டிருப்பதே அவர்தானே!

அன்புள்ள,

மு.க.

29-11-2002

2844. மாற்றம்; கொள்கைக்காகவா? சந்தர்ப்பத்திற்காகவா?

உடன்பிறப்பே,

இது இந்து நாடு அல்ல என்றும்,

இந்து ராஜ்யத்தை நிறுவுவது பா.ஜ.க.வின் நோக்கமல்ல என்றும்,

மதம் தழுவிய ஆட்சிமுறை என்பது நமது பாரம்பரியத்துக்கே புறம்பானது என்றும்,

துணைப் பிரதமர் திரு. அத்வானி அவர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளதைப் பாராட்டி எழுதினேன் என்பதற்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஏடு, என்னையும், கழகத்தையும் விமர்சித்துக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் - பின்னர் அயோத்தி பிரச்சினையில் - அத்வானி அவர்கள் வெளியிட்ட கருத்துகளையும், அத்தகைய கருத்துகளை தி.மு.க. சார்பில் கடுமையாகக் கண்டித்து வெளியிட்ட வாசகங்களையும் நினைவுபடுத்தும் தீக்கதிர் ஏடு, கேலிச் சித்திரம் கூட வரைந்து காட்டியுள்ளது.

கஞ்சித் தொட்டி பிரியாணி போராட்டம் என்று தி.மு.கழகம் - அ.தி.மு.க. - இரண்டையும் ஒன்று போல் சித்தரிக்கும் விமர்சனங்களைக் கண்டு மார்க்சிஸ்ட்டுகளின் மனப்போக்கினைக் கடிந்து கொண்டிருப்பினும், இப்போது அத்வானியைப் பாராட்டியது குறித்து மார்க்சிஸ்டுகள் கொள்கை ரீதியாகப் பிரச்சினையை அணுகி மறுப்பு தெரிவித்திருப்பதை அரசியல் வழிமுறைப்படி வரவேற்று, நமது கருத்துகளை அவற்றுக்கு விடையாகவும், விளக்கமாகவும் அளித்திட விரும்புகிறேன்.

அயோத்தி பிரச்சினை அரும்புவதற்கு முன்பும், அதற்கு முன்பும் திரு. அத்வானி வெளியிட்ட கருத்துகள் - அவற்றுக்கு எதிராக தி.மு.க. வெளியிட்ட கருத்துகள் என தீக்கதிர் பட்டிய

லிட்டுக் காட்டியிருப்பதில் சிறிதளவு மாறுபாடும் நமக்கில்லை. அவ்வளவும் உண்மைதான்!

உண்மைதான் என்பதற்காக, இன்றைக்கு உருவாகக் கூடிய மாறுதலை - அல்லது உறுதியாகத் தெரிவிக்கப்படுகிற நாடு தழுவிய ஒரு நற்செய்தியை - அந்தச் செய்தி மறுக்கப்படும் வரையிலோ அல்லது அந்தக் கருத்து மாற்றப்படாமலிருக்கும் வரையிலோ நாம் எப்படி வரவேற்றுப் பாராட்டாமல் இருக்கமுடியும்?

தி.மு.க. வும், அதன் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும் திராவிட நாடு பிரிவினை கேட்ட வரையில், அந்தக் காலகட்டத்தில் முதல்வராக இருந்த பெரியவர் பக்தவத்சலம், நிதியமைச்சராக இருந்த பெரியவர் சி. சுப்பிரமணியம் உள்ளிட்ட தலைவர்கள் சட்டப் பேரவையிலேயே, பிரிவினை வாதம் தேசத் துரோகம் என்றே வர்ணித்தனர்.

பின்னர் அண்ணா அவர்கள் தி.மு.கழகப் பொதுக் குழுவைக் கூட்டி, திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைக் கழகம் கைவிடுகிறது என்று தீர்மானம் நிறைவேற்றியவுடன், அதே முதல்வர் பக்தவத்சலம் அவர்கள்தான், சட்டப் பேரவையிலேயே அறிஞர் அண்ணா அவர்களையும், தி.மு.கழகத்தையும் பாராட்டிப் பேசினார்.

1937-38ஆம் ஆண்டுகளில் கட்டாய இந்தியை மூதறிஞர் ராஜாஜி ஆட்சியில் திணித்தபோது தந்தை பெரியார், அறிஞர் அண்ணா மற்றும் தமிழ்ச் சான்றோர் எதிர்த்துப் போர் முரசு கொட்டினர். ஆயிரக்கணக்கில் தமிழர்கள் சிறையேகினர்.

ஆனால் அதே ராஜாஜி அவர்கள்தான் 1964-65ஆம் ஆண்டுகளில் இந்தியை, தமிழகத்தில் நுழைய விடக் கூடாது என்று தி.மு.க.வுடன் சேர்ந்து போராடினார்.

ராஜாஜி அவர்களே! நீங்கள் அன்றொரு நாள் இந்தியைக் கொண்டு வந்தவர். இப்போது நீங்கள் இந்தியை எதிர்ப்பதை எங்களால் ஏற்க இயலாது! என்று சொன்னோமா? சொல்லியிருந்தால், அது அரசியல் நாகரிகமா? அல்லது உண்மையான கொள்கைப் பற்றா?

அவ்வளவு ஏன்? இதே மதிப்புக்குரிய மார்க்சிஸ்ட் கட்சியினர் - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர்,

செல்வி ஜெயலலிதாவைப் பற்றியே, கடந்த மூன்று நான்கு ஆண்டுகளுக்குள்ளாக எத்தனை முறை - எத்தனை விதமாகக் கருத்துகளை மாற்றிக் கொண்டிருக்கின்றனர்!

ஜெயலலிதா ஆட்சியின் ஊழல்களை மக்கள் மறந்து விடவில்லை. இந்நிலையில் சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்துள்ள அ.தி.மு.க. வுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டவேண்டும் என இரு கம்யூனிஸ்டுகளும் 1998 தேர்தலின்போது நீண்ட அறிக்கைகள் வெளியிட்டு ஜெயலலிதா ஆட்சியின் ஊழலை முன்னிலைப்படுத்திப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

27.12.1998 தீக்கதிர், பின்வருமாறு தலையங்கமே தீட்டியது:-

ஊழல் வழக்குகளை எதிர்கொள்வதற்கு மாறாக, தப்பிக்கவும், முடக்கவும் ஜெயலலிதாவும், அவரது பரிவாரங்களும் மீண்டும் மீண்டும் முயற்சிப்பதால் அதனைக் கண்டித்து மீண்டும் மீண்டும் குரல் எழுப்புவது ஜனநாயகக் கடமை யாகிறது. ஆங்கிலத்திலேயே அறிக்கை விட்டு, ஆங்கிலத்திலேயே பேட்டி கொடுக்கும் ஜெயலலிதாகூட பல்லாயிரம் பக்க முள்ள ஆவணங்களைத் தமிழில் வழங்கு எனக் கேட்பதும், மற்றவர்களோ மலையாளத்தில் வழங்கு, இந்தி மொழியில் வழங்கு எனக் கேட்பதும் வழக்கு விசாரணையின் நடைமுறையைத் தடுப்பதைத் தவிர வேறென்ன? இனியும் மக்கள் சும்மா இருக்கமுடியாது. பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்தவர்கள் அதை நியாயப்படுத்துவதும், தப்பிக்க முயல்வதும், நீதிமன்றத்தையே மிரட்டுவதும், வளைத்துப்போட முயல்வதும், ஜனநாயகத்திற்கு விடப்பட்ட சவாலாகும். நீதிமுறையின் மீதே மக்கள் நம்பிக்கை இழக்கச் செய்யும் கொடூரமாகும். அப்புறம் ஒழுக்கம், நேர்மை, நீதி என்பதெல்லாம் அர்த்தமற்ற வெறும் சொல்லாகிவிடும். ஜெ. கும்பலின் ஊழல்களையும், அவற்றை மறைக்க மேற்கொள்ளும் தகிடுதத்தங்களையும் அம்பலப்படுத்த மக்கள் வீதியில் திரள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு செல்வி ஜெயலலிதாவின் மீது சீறிப் பாய்ந்தவர்கள்தான் - இதே கம்யூனிஸ்டுகள்தான் - 2001 பொதுத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டபோது,

ஊழல் என்பது ஒரு பிரச்சினை அல்ல என்று உரக்கக் கூறினார்கள். ஓங்கிக் குரல் எழுப்பினார்கள்.

அது மட்டுமா? - 'செல்வி ஜெயலலிதா மீது வழக்கு போடு என்று தி.மு.க. ஆட்சியை உசுப்பி விட்டு தலையங்கம் தீட்டிய மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவரான தோழர் சங்கரய்யா அவர்கள், 2001 தேர்தலின்போது, பெண் என்றும் பாராமல் ஜெயலலிதா மீது தி.மு.க. அரசு கொடுமைப்படுத்தி வழக்குகளைப் போட்டு வருகிறது.

என்று உருகிப் பேசியது இன்னும் ஏடுகளில் இருக்கத்தான் செய்கிறது.

அது மாத்திரமல்ல! 2001ஆம் ஆண்டு தேர்தலின் போது, இதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளுங் கட்சியாக இருந்த கேரள மாநிலத்திற்கு, தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்ற காங்கிரஸ் கட்சியின் தலைவி திருமதி சோனியா காந்தி அவர்கள், இடதுசாரி என்கிற தீய சக்தியிடமிருந்து கேரள மாநிலத்தை விடுதலை செய்யுங்கள் என்றே கூறினார். அந்தக் காங்கிரஸ் கட்சியோடு இன்றளவும் உறவு கொண்டுள்ள நிலையில்தான் தமிழகத்தில் மார்க்சிஸ்ட்கள் இருக்கிறார்கள்.

இவை சந்தர்ப்பவாதம்! ஆனால், ராஜாஜி இந்தியை எதிர்க்க முன்வந்தது போல - அண்ணா, பிரிவினைக் கொள்கையை கைவிட்டது போல, அத்வானி, இந்து ராஜ்யம் அமைப்பது எமது நோக்கமல்ல என்று சொன்னது போல உள்ள மாறுதல்களை வரவேற்பதும், பாராட்டுவதும் கொள்கைரீதியாக தவறல்ல என்பதை உணர்த்திட விரும்புகிறேன்.

துணைப் பிரதமர் திரு. அத்வானி அவர்களே இது இந்து நாடுதான் என்று சொல்லியிருப்பாரேயானால் எதிர்த்துத்தான் பேசியிருப்போம். அதுதான் எங்கள் இயல்பு, கொள்கை. அத்வானி என்ற தனி மனிதர் அல்ல முக்கியம்.

அன்புள்ள,

மு.க.

30-11-2002

2845. கழக மகளிர் கருத்தரங்கம் (1)

உடன்பிறப்பே,

பெண்ணுரிமைக்காக பாரதியார் முழங்கியிருக்கலாம். பாவேந்தர் முரசு கொட்டியிருக்கலாம். ஆனால் இவர்களையும் மற்ற மற்ற கவிஞர்களையும், தலைவர்களையும் விட, அவர்களின் கருத்துகளுக்கெல்லாம் மாறுபட்ட கருத்து ஒன்றினை மகளிர் குல முன்னேற்றத்திற்காகவும் - அவர்களின் உரிமைகள் தங்கு தடையின்றி பெருகி விடுதலை பெறுவதற்காகவும் 1928ஆம் ஆண்டிலேயே குடியரசு இதழிலே எழுதிய தலையங்கத்தின் வாயிலாக, தந்தை பெரியார் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அக்கருத்து ஆணித்தரமானது! அது வருமாறு :-

"பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அனேக இடங்களில் அநேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம் முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலை உள்ளவர்கள் போலக் காட்டிக் கொண்டு, மிகப் பாசாங்கு செய்து வருகின்றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும்--எவ்வழியிலும்--பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது. தற்காலம் பெண்கள் விடுதலைக்காகப் பெண்மக்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல், மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்திற்கே கட்டுப்பாடுகளைப் பலப்படுத்திக் கொண்டே போகும் என்பது நமது அபிப்பிராயம்.

அன்றியும் ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன், பெண்கள் என்றும் விடுதலை பெற முடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம், பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல.

எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனர் அல்லாதவர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருகால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாகிவிட்டாலும் கூட, ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம்.

ஏனெனில், ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப் பட்டு வருகின்றது என்பதைப் பெண்கள் மறந்து விடக்கூடாது. அந்த ஆண்மை உலகில் உள்ளவரையிலும், பெண்மைக்கு மதிப்பு இல்லை என்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உலகத்தில் ஆண்மை நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் ஆண்மை என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலல்லது பெண்மை விடுதலை யில்லை யென்பது உறுதி. ஆண்மையால்தான் பெண்கள் அடிமையாக்கப் பட்டிருக்கின்றார்கள்.

சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் ஆண்மைக்குத்தான் உரியதாக்கப்பட்டுவிட்டன, ஏன்? ஆண்மைக்குத்தான் அவைகள் உண்டு என்று ஆண் மக்கள் முடிவுகட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைமாத்திரம் பெண்கள் நன்றாய் உணர வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்.”

பெரியார் அவர்கள் திட்டவட்டமாக, அழுத்தம் திருத்தமாக குடியரசு பத்திரிகையில் தலையங்கமாகவே தீட்டிய இந்தப் புரட்சிகரமான கருத்து வெளிப்படுவதற்குக் காரணமே, ஏதோ ஆண்களால்தான் பெண்களின் பாதுகாப்பு பேணப்பட வேண்டும் - அவர்களால்தான் பெண்களுக்காகக் குரல் கொடுக்க முடியும் என்ற ஆண்களின் ஆணவச் சிந்தனைதான்!

இதை எடுத்துக்காட்டுவது போல மகளிர் அமைப்பு ஒன்றை நிறுவுவதாக இருந்தாலும், பெண்கள் மாநாடு ஒன்றை

நடத்துவதாக இருந்தாலும் எப்படியோ, எந்த வகையிலோ அதற்கு ஆண்கள்தான் முன் நிற்பது என்பது அந்தக் காலத்திலேயே தோன்றிவிட்ட ஒரு தொற்றுநோயாக அமைந்து விட்டது.

இப்போது கூட கழக மகளிர் கருத்தரங்கினை அறிவித்து அதில் கலந்துகொள்ள மகளிர்க்கு அழைப்பு விடுத்திருப்பவர் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள்தான்! கருத்தரங்கமும் என் தலைமையில் தான் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது! இது எப்படியிருக்கிறதென்றால், பெண்களின் உரிமைக்கும், முன்னேற்றத்திற்கும் ஆண்கள் எதுவும் செய்துவிட முடியாது - ஆண்களை நம்பிப் பயனில்லை என்பதைக் கூட தந்தை பெரியார் தான், (ஆம், ஒரு ஆண் தான்) சொல்ல வேண்டியிருந்தது என்பதைப் போல, நானும், பேராசிரியரும் கலந்து கொள்ளும் இந்தக் கழக மகளிர் கருத்தரங்கு இப்போது கூடுகிறது என்றாலுங்கூட, எதிர்காலத்தில் கழக மகளிர் அணி, தனித்தியங்கும் வலிமை பெற்று - உரிமை பெற்று - கழகத்திற்குத் துணை அணிகளில் ஒன்றாக - இளைஞர் அணி போல, தொழிலாளர் அணி போல - இன்றுள்ளதைக் காட்டிலும் மேலும் சீரும் சிறப்பும் பெற்று வலிமை வாய்ந்த அணியாக வளர்ச்சியுற வேண்டுமென்பதற்காகவே கூட்டப் பெறுகிறது என்பதை மறந்து விடக்கூடாது.

1928ஆம் ஆண்டு பெரியார் எழுதியுள்ளதை இன்றைக்கும் நினைவுபடுத்துவது போல, பல நிகழ்வுகளை அனுபவரீதியாக நாம் காண முடிகிறது.

தி.மு.க. ஆட்சியில்தான் 1989ஆம் ஆண்டு பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. அது கூட 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை 60 ஆண்டுகளுக்குப் பிறகு, நான் செயல்வடிவம் கொடுத்து சட்டமாக்கி அறிவித்து, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாகும்.

வேலை வாய்ப்புகளில், அரசு உத்தியோகங்களில் பெண்களுக்கு 30 சதவிகிதம் வழங்கும் சட்டமும் நமது ஆட்சிக் காலத்தில்தான் 1989ஆம் ஆண்டில் தான்!

பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி, உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33 சதவிகித இடங்கள் ஒதுக்கீடு செய்ததுமட்டுமல்ல!

அதனை நடைமுறைப்படுத்தி தேர்தல்களை நடத்தி முடித்ததும் நமது ஆட்சிக் காலத்திலேதான்! ஆம், 1996லே தான்!

இதிலேதான் பெரியாரின் கருத்தை நாம் நினைத்துப் பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது என்றால் அது மிகையல்ல!

உள்ளாட்சி மன்றங்களில் 33 சதவிகித அடிப்படையில் ஆயிரக்கணக்கான இடங்களில் மகளிர், பதவிப் பொறுப்புக்கு வந்துள்ளனர். தேர்தல் வாயிலாக!

ஆனால், அந்தப் பதவிகளில் முக்கிய பொறுப்புள்ளவற்றில் நிர்வாக ரீதியாக - பெண்கள் அதிகாரம் செலுத்த வேண்டிய நிலையை மாற்றி, பின்னணியில் அவர்களின் கணவர்கள் கோலோச்சும் நிலைகளும் உருவாகியுள்ளன.

இதில் எங்கிருந்து பெண்ணுரிமை நிலை நாட்டப்படும்? எங்கிருந்து மகளிர் விடுதலை முகிழ்க்கும்?

நீ உட்கார்ந்து கொள் நாற்காலியில்! - அதிகார கடிவாளம் மட்டும் என் கையில் இருக்கட்டும் - என்று கூறுகிற ஆடவர்களால் - பெண்களின் முன்னேற்றம் நடை போடுமா? அல்லது தடைப்படுமா?

இதனை உணர்ந்துதான் 75 ஆண்டுகளுக்கு முன்பே, ஆண்களினால் பெண்ணுரிமை தடைப்படும் என்பதை பெரியார் விளக்கியிருக்கிறார்.

அந்தத் தடை இன்னமும் தலைதூக்கியிருப்பதை நாம் காண முடிகிறது!

தடை உடைக்கிறோம் என்கிற பெயரால் ஆண் வர்க்கத்தை அறவே ஒழித்து விடவோ, அது போல பெண் இனத்தை அறவே அழித்துவிடவோ, எவரும் யோசனை சொல்ல மாட்டார்.

அது நடக்கவும் நடக்காது - நடக்கவும் கூடாது!

ஆனால், இந்த இரண்டு வர்க்கமும் அதாவது ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் சமரில் ஈடுபட்டு, பெண்ணுரிமை, பெண் விடுதலை போன்ற வெற்றிகளை எய்துவதை விட, இரு வர்க்கமும் சமத்துவ நிலையைக் கடைப்பிடித்து அவரவர் உரிமையை அவரவர் பாதுகாத்துக் கொள்ள முன்வர வேண்டும்.

அதற்கு இரு வர்க்கத்தினரும் ஒருவருக்கொருவர் பக்கத் துணையாக இருத்தல் வேண்டும்.

வரும் டிசம்பர் 15ஆம் நாள் சென்னையில் நடை பெறும் கழக மகளிர் கருத்தரங்கில் விவாதிக்கப்படும் விஷயங்களில் இதுவுமொன்றாக இருக்கும்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

01-12-2002

2846. கழக மகளிர் கருத்தரங்கம் (2)

உடன்பிறப்பே,

பெண்ணுரிமை பற்றித் தீவிர கருத்துக் கொண்டிருப்போர் சிலர், திருக்குறள், பெண்ணடிமைத் தனத்தை ஊக்கப்படுத்துவதாக ஒரு குறை கூறுவதுண்டு.

அப்படிக் குறை காணும் நிலைமை குறளுக்கு வாய்த்ததுகூட, குறளுக்கு உரை கண்டவர்களால் தான் என்பதை ஏற்கனவே நான் சுட்டிக் காட்டியிருப்பது மட்டுமல்ல,

அந்த உரைகள் எப்படி அமைந்திருக்க வேண்டுமென்பதற்கும் உரை எழுதிக் காட்டியிருக்கிறேன்.

தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுது எழுபவள், பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்ற உரையை மாற்றி,

கடவுளைக் கூட வணங்காமல் கணவனை வணங்கி எழுகிற பெண்மணி, பெய் என்று நினைக்கிற நேரத்திலே பெய்கிற மழைக்கு ஒப்பானவள் என்ற கருத்தில் குறளோவியம் தீட்டினேன். ஆனால் நானே குறள் உரை எழுதி வெளியிட்டபோது, அந்த நூலில் - நான் எழுதியுள்ள உரை வருமாறு :-

கணவனைக் கடவுளைவிட மேலானவனாக நினைத்து, அவனையே தொழுதிடும் மனைவி, பெய் என்று ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையைப் போல தன்னை அடிமையாக எண்ணிக் கொள்பவள்.

இப்படி உரை கூறி, ஆணுக்குப் பெண் அடிமையாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்பதற்காக இயற்றப்பட்ட குறள்தான் அது என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

“இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற்
றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்”

இந்தக் குறளுக்கு இதுவரையில் பழைய உரையாசிரியர் பலரும், எழுதியுள்ள உரை என்ன?

துணைவிக்கு அஞ்சி வாழ்கிறவன், நல்லவர்களுக்கு எப்பொழுதும் நன்மையான கடமைகளைச் செய்வதற்கு அஞ்சுவான். இந்த உரையின்படி பார்த்தால் மனைவிக்குப் பயந்து மணாளன் நடக்கக் கூடாது என்ற ஆணாதிக்கம், திருக்குறளில் கொடிகட்டிப் பறப்பதாகத் தோன்றும்!

ஆனால் பொருத்தமான உரை கண்டால், அப்படியொரு பொருத்தம் என்ற பெயரால் குறளை மாற்றி அமைக்க முயற்சிக்காமல், குறளில் இருக்கும் சொற்களுக்கே பொருள் கண்டு உரை எழுத வேண்டும் என நான் எண்ணியதற்கேற்ப எழுதப்பட்ட உரை வருமாறு:-

நல்லோர்க்கு நன்மை செய்வதில் தவறு ஏற்பட்டு விடக் கூடாதே என்று அஞ்சுகிறவன், தவறு நேராமல் கண்காணிக்கும் மனைவிக்கு அஞ்சி நடப்பான். மனைவிக்குப் பயந்து நல்லவர்க்குக் கூட நன்மை செய்யத் தயங்கிக் கிடக்கிறான் என்கிற உரையின் மூலம், மனைவி, மகா கொடுமைக்கார பாத்திரமாக சித்தரிக்கப்படுகிறாள்.

ஆனால் என்னுரையில்; குறளுக்குப் பொருத்தமான உரை காணப்பட்டதால் - பெண்ணின் பெருமை நிலைநாட்டப்படுகிறது!

எனவே, ஆண்கள், பெண்கள் எனப்படும் இரு பாலாரிடத்தும் தக்காரும் உண்டு! தகவிலாரும் உண்டு!

அவர்களில், தக்கார், மேலோர்! - தகவிலார், கீழோர்! - எனத் தகுதி பிரிக்க வேண்டுமேயல்லாமல், ஆண்கள் என்பதாலேயே உயர்ந்தோர் - பெண்கள் என்பதாலேயே தாழ்ந்தோர், எனத் தரம் பிரித்தல் கூடாது.

“மனைவிழைவார் மாண்பயன் எய்தார்
வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது”

இந்தக் குறளுக்கும் பழைய உரைகள் பல, இல்லத் தரசியை இழிவுபடுத்தக்கூடிய வகையிலேயே அமைந்துள்ளன.

மனைவியிடம் அன்புகொண்டு அவள் சொற்படி நடப்பவர், சிறந்த பயன்களை அடைய முடியாது. கடமையைச் செய்திட விழைவோர்க்கு வேண்டாதது அதுவே ஆகும்.

இந்த உரைக்கு மாறாகவும், ஆனால் குறளைச் சிறிதும் சிதைக்காமல் சரியான உரையாகவும் நான் எழுதியுள்ளது வருமாறு :-

கடமையுடன் கூடிய செயல்புரியக் கிளம்பியவர்கள், இல்லற சுகத்தைப் பெரிதெனக் கருதினால் சிறந்த புகழைப் பெற மாட்டார்கள்.இந்த உரையில் இல்லற சுகமே கூடாது என்று வலியுறுத்தப்படவில்லை. ஆற்ற வேண்டிய கடமையை விட அந்தச் சுகம் பெரிது என கருதி விடக் கூடாது என்றுதான் சுட்டிக் காட்டப்படுகிறது. மனைவி சொற் கேளேல் என்று இந்தக் குறள் உபதேசமொன்றும் செய்யவில்லை.

“திருக்குறள் கலைஞர் உரை என்ற நூலை தமிழறிஞர் அ.ச.ஞானசம்பந்தம் வெளியிட்டார். அந்த நூலுக்குப் பதிப்புரை எழுதிய புலவர் திரு.மா.நன்னன் அவர்கள், பெண்வழிச்சேறல் என்ற அதிகாரம் குறித்து எழுதியுள்ள குறிப்புகளை நினைவூட்ட விரும்புகிறேன். அந்தக் குறிப்புகள் வருமாறு :-

> “கொடிமுந்திரிப் பழத்தை (அது தனக்குக் கிட்டாதென்பதால்) மறக்க விரும்பிய நரி அதற்காக அதை வெறுக்க முயன்று, சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும் என்று கூறிய காரணத்தைப் போலவே, பெண்ணின்பத்தை மறக்க விரும்பியவர்கள் அதை மறக்க முடியாமையால் வெறுக்கத் தொடங்கி, அதற்காகவே பெண்ணை இழித்தும், பழித்தும் கற்பித்துப் பேசத் தொடங்கினர். இச்செயல் நாலடியார் போன்ற இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளது. அக்கருத்துக்காட்பட்ட பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களும் திருவள்ளுவரின் கருத்துக்கு மாசு விளையாமல் உரை யெழுத இயலாதோராயினர். அதன் விளைவே, பெண் வழிச்சேறல் என்னும் அதிகாரக் குறள் பத்துக்கும் அவர்களால் தரப்பட்ட விளக்கமாக நிலைத்து விட்டது. திருவள்ளுவரின் கோட்பாட்டில்

கோணல் ஏற்படுத்தும் இப்போக்கினை மாற்ற விரும்பிய கலைஞரின் பங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களுக்கும் கலைஞர் வகுக்கும் உரையை முறையே காணலாம்.

1. கடமையுடன் கூடிய செயல்புரியக் கிளம்பியவர்கள் இல்லற சுகத்தைப் பெரிதெனக் கருதினால் சிறப்பான புகழைப் பெறமாட்டார்கள்.

2. ஏற்றுக்கொண்ட கொள்கையினைப் பேணிக் காத்திடாமல், பெண்ணை நாடி, அவள் பின்னால் திரிபவனுடைய நிலை வெட்கித் தலை குனிய வேண்டியதாக ஆகிவிடும்.

3. நற்குணமில்லாத மனைவியைத் திருத்த முனையாமல், பணிந்துபோகிற கணவன் நல்லோர் முன்னிலையில், நாணமுற்று நிற்கும் நிலைக்கு ஆளாக நேரிடும்.

4. மணம் புரிந்து புது வாழ்வின் பயனை அடையாமல் குடும்பம் நடத்த அஞ்சுகின்றவனின் செயலாற்றல் சிறப்பாக அமைவதில்லை.

5. எப்போதுமே நல்லோர்க்கு நன்மை செய்வதில் தவறு ஏற்பட்டுவிடக் கூடாதே என்று அஞ்சுகிறவன், தவறு நேராமல் கண்காணிக்கும் மனைவிக்கு அஞ்சி நடப்பான்.

6. அறிவும், பண்பும் இல்லாத மனைவி அழகாக இருக்கிறாள் என்பதற்காக மட்டும், அவளுக்கு அடங்கி நடப்பவர்கள் தங்களைத் தேவாம்சம் படைத்தவர்கள் என்று கற்பனையாகக் காட்டிக்கொண்டாலும், அவர்களுக்கு உண்மையில் எந்தப் பெருமையும் கிடையாது.

7. ஒரு பெண்ணின் காலைச் சுற்றிக்கொண்டு கிடக்கும் ஒருவனின் ஆண்மையைக் காட்டிலும், மான உணர்வுள்ள ஒருத்தியின் பெண்மையே பெருமைக்குரியதாகும்.

8. ஒரு பெண்ணின் அழகுக்காகவே அவளிடம் மயங்கி அறிவிழந்து நடப்பவர்கள் நண்பர்களைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்கள். நற்பணிகளையும் ஆற்ற மாட்டார்கள்.

9. ஆணவங்கொண்ட பெண்கள் இடுகின்ற ஆணைகட்கு அடங்கி இயங்குகின்ற பெண் பித்தர்களிடம், அறநெறிச் செயல்களையோ, சிறந்த அறிவாற்றலையோ எதிர்பார்க்க முடியாது.

10. சிந்திக்கும் ஆற்றலும், நெஞ்சுறுதியும் கொண்டவர்கள் காமாந்தகாரர்களாகப் பெண்களையே சுற்றிக் கொண்டு கிடக்கமாட்டார்கள்.

காந்தத்துக்கு ஈர்க்கும் தன்மையும், இரும்புக்கு அதனால் ஈர்க்கப்படுந் தன்மையும் இருப்பதுபோல், பொதுவாகப் பெண்ணுக்கு ஆணை ஈர்க்கும் கவர்ச்சியும், ஆணுக்குப் பெண்ணின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டுப் பெண் வழிச் செல்லும் காம உணர்வும் உள்ளன.

இந்த அடிப்படையிற்றான், கலைஞர் வள்ளுவரின் பெண் வழிச்சேறல் எனும் அதிகாரத்தைக் காண்கிறார். அவ்வாறு கண்ட கலைஞர் தம் உரையின் வாயிலாகப் பழைய உரையாசிரியர்களால் பெண்மைக்கு ஏற்பட்டிருந்த பழியை நீக்கியுள்ளார்.

உடன்பிறப்பே,

மேற்கண்ட பத்து குறள்களுக்கான உரைகளும், பழைய உரைகளிலிருந்து மாறுபட்டும், ஆனால் குறளிலிருந்து மாறுபடாமலும் இருப்பவையாகும்.

எனவே அந்நாள் உரையாசிரியர்கள், தங்களின் கருத்துக்கேற்பவே ஆணாதிக்கமும், புராணீகத் தாக்கமும் பளிச்சிடும் உரைகளை எழுதி, திருக்குறளின் உண்மை ஒளிதனை மறைத்திடத் திரைகளைத் தொங்கவிட்டனர். அது வாழையடி வாழையாகத் தொடர்ந்தது எனினும், இன்று பெண்களின் கண்கள் திறந்திட, மங்கையர் இனம் குறித்து குறள் கூறுவதாகச் சொல்லப்படும் மாசு மருக்கள் அகன்றிட,விளக்கங்கள் குவிகின்றன. விரிவுரைகள் விவேக உரைகளாக நிறைகின்றன. இந்த இனிய திருப்பம் குறித்தும் டிசம்பர் 15 கழக மகளிர் கருத்தரங்கில் விவாதிக்க இருக்கிறோம். வாருங்கள் உடன்பிறப்புகளே என வாஞ்சையுடன் அழைக்கிறேன்!

அன்புள்ள,

மு.க.

02-12-2002

2847. இந்த நேரம் - இந்தச் சந்தேகம் தேவைதானா?

உடன்பிறப்பே,

பஸ் தொழிலாளர்கள் 15 நாட்கள் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் தி.மு.க.வும், மார்க்சிஸ்ட்களும் தோளோடு தோள் நின்று சிறைச்சாலையா, சித்திரவதையா எது பற்றியும் கவலைப்படாமல் ஈடு கொடுத்த பிறகும் - இப்போது அ.தி.மு.க. அரசு, திடீரென ஒரு மினி பட்ஜட்டை வெளியிட்டு மக்கள் மீது யுத்தம் தொடுத்திருக்கும் இந்த நெருக்கடியான கட்டத்தில், இரு கட்சிகளும் அதனை எதிர்த்துப் போர்க் கொடிகளை உயர்த்திப் பிடித்துள்ள இந்த நிலையிலும், ஒரே அணியில் இல்லாவிடினும், பலமுனைகளில் ஒரு முனையில் நின்று அரசின் மினி பட்ஜட்டை எதிர்த்து தாக்குதல் நடத்தும் முக்கியமான வேளையிலும் - திடீரென மார்க்சிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகை (தீக்கதிர்)க்கு ஒரு சந்தேகம் வந்து விட்டது. என்ன சந்தேகம் அது?

“மத்தியில் ஆளும் பா.ஜ.க. - தி.மு.க. கூட்டணிக்கும், தமிழகத்தை ஆளும் அ.இ.அ.தி.மு.க. வுக்கும் இதயம் என்று ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகமே எழுகிறது”

இது அந்தப் பத்திரிகை தலையங்கத்தின் வாசகம்.

நான் சொல்ல விரும்புவது, யாருக்கு இதய மிருக்கிறது, யாருக்கு இல்லை என்பதைப் பிறகு ஆராய்ச்சி செய்து; தேவையானால் ஆபரேஷன் செய்தாவது பார்த்துக் கொள்ளலாம். இப்போது ஒரு பொதுப் பிரச்சினையில் ஒவ்வொரு கட்சியும் ஒரு முனையில் நின்றாவது மக்களுக்காகப் போராட வேண்டிய சூழலில், இந்தச் சந்தேகம் ஏற்படுவது தேவைதானா என்பதை மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர்கள் யோசிக்க வேண்டாமா?

நேற்றைய தினம் இப்படித்தான் முரசொலி மாறன் மீது பாய்ந்து, மாறன் தனியார்மய ஹீரோக்களில் ஒருவர் என்று அக்கட்சியின் ஏடு வர்ணித்திருந்தது.

இதோ இந்தப் புகைப்படத்தில் இருப்பது மேற்கு வங்க முதலமைச்சர் திரு. புத்ததேவ் பட்டாச்சார்யா அவர்களும், பேட்டா ஷூ அதிபர் திரு. தாமஸ் ஜெ. பேட்டா அவர்களுமாவார்கள். இந்தப் படம் பிரபல ஆங்கில ஏடு (பிசினஸ் லைன்) ஒன்றில் வெளியாகியுள்ளது. அந்தச் செய்தியின் தலைப்பே Bengal woos Bata for leather complex (தோல் தொழிற்சாலை வளாகம் அமைக்க வங்காளம் 'பேட்டாவிடம் கெஞ்சல்) என்பதாகும். வந்துள்ள செய்தியில், பண்டாலா நகரில் மேற்கு வங்க அரசினால் அமைக்கப்பட்டு வரும் கல்கத்தா தோல் வளாகத் திட்டத்துடன் இணைந்து தொழிற்சாலை நடத்திட பேட்டா ஷூ நிர்வாகத்தின் தலைவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கு வங்க முதலமைச்சர் அவர்களையும், தொழிற்துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பேசிய பிறகு, பேட்டா கம்பெனியின் அதிபர் செய்தியாளர்களிடம் கூறும்போது, இது பற்றிய முடிவு கலந்து பேசி எடுக்கப்பட வேண்டிய ஒன்று என தெரிவித்தார். மேற்கு வங்க முதலமைச்சர் பட்டாச்சார்யா கூறும்போது, பேட்டா வின் அதிபர் வந்திருப்பது ஒன்றே அந்தத் திட்டத்தைப் பற்றி சிறப்பான ஒரு எண்ணம் ஏற்படுவதற்கு உதவிடும் என்றார். பட்டாச்சார்யா மேலும் கூறும்போது, ஒருங்கிணைந்த இந்தத் திட்டம் தயாரிப்பு வசதிகளுடன் கூடிய ஒரு ஏற்றுமதி பிராந்தியத்தை அமைத்திட உதவிடும் என்றும், பேட்டா அதிபர் எதனை விரும்புகிறாரோ அதனைச் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தார் என்று செய்தி வந்திருக்கின்றது.

இதை நான் தவறு என்று குற்றம் சாட்ட முனைய வில்லை.

பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் துறையாக்கக் கூடாது என்றும், புதிதாக நிறுவனங்கள் தனியார் துறையில் வருவது தவறல்ல என்றும் கருதுகிறவன் நான். எப்படியாவது வேலை வாய்ப்பு பெருகிட வேண்டும் என்பதால் இந்தக் கருத்து, வரவேற்கப்படுகிற கருத்தாகவே இருக்கிறது.

இந்த அடிப்படையில்தான் மேற்கு வங்க மார்க்சிஸ்ட் முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்யா அவர்கள், பேட்டா ஷூ

அதிபரிடம் பேசியிருக்கிறார். தனியார் துறையில் தொழில் வளாகம் தொடங்கிட வேண்டுமென!

ஆனால் மார்க்சிஸ்டுகள் இங்கே நம் மீது பாய்கிறார்கள்!

அங்கே பேச்சு மூச்சைக் காணோம்!

மாமியார் உடைத்தால் மண் சட்டி!
மருமகள் உடைத்தால் பொன் சட்டி!

என்பது இதுதானோ!

அன்புள்ள,

மு.க.

2-12-2002

2848. கழக மகளீர் கருத்தரங்கம் (3)

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் திருக்குறள் “பெண் வழிச் சேறல்” எனும் அதிகாரத்தில் வரும் குறட்பாக்களுக்கு எழுதப்பட்ட பழைய உரைகள் பலவும் அய்யன் வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்கும், அவர் இயற்றியுள்ள குறளுக்கும் மாறான வகையில் பெண்ணடிமைக்கு வழி வகுக்கும் வண்ணம் அமைந்துள்ளன என்பதை எடுத்துக்காட்டி, அந்தக் குறட்பாக்களில் எந்த மாற்றமும் செய்யாமலே உரிய பொருள் எதுவாக இருக்க முடியும் என்பதை அவற்றுக்கு நான் தீட்டிய உரையின் வாயிலாக விளக்கியிருந்தேன்.

ஓர் ஆணையும் பெண்ணையும் தனித்தனியே கணவன் மனைவி என்று கூறுவதை விடுத்து - இருவரையும் இணைத்தே “வாழ்க்கைத் துணை நலம்” என்று ஓர் அதிகாரமே திருக்குறளில் இடம் பெற்றிருக்கிறது. ஆம்; வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் துணையாக ஓர் ஆணும் பெண்ணும் அமைந்திடும்போழ்து, அவர்கள் வாழ்க்கைத் துணை நலமாகிறார்கள், பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு!

இந்த அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள ‘தெய்வம் தொழாஅள்’ எனத் தொடங்கும் குறளுக்கான விளக்கம், நேற்றைய கடிதத்திலேயே அளிக்கப்பட்டுள்ளதை அறிவாய்! -

“கணவனை, கடவுளைவிட மேலாகக் கருதி அவனைத் தொழுது வணங்கும் மனைவி; பெய் என்று கூறினால் மழை பெய்யும்”

எனும் பழைய உரைப்படி எந்தப் பெண்ணையாவது சோதித்துப் பார்க்க; அந்த உரையெழுதியவர்களே முன் வருவார்களா? வரமாட்டார்கள்!

எனவேதான் அக்குறட்பாவுக்கு நான் எழுதியுள்ள பொருத்தமான உரையை நேற்றைய மடலில் குறிப்பிட்டிருந்தேன்.

இதோ; இன்னொரு குறளுக்கான உரை; மகளிர் நெஞ்சத்தில் நெருப்பெனக் கொட்டும் உரை -

“சிறைகாக்குங் காப்புளவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை”

இக்குறளுக்குப் பழைய உரை:

“பெண்களைச் சிறை வைத்துக்காக்கும் முறையினால் என்ன பயன் உண்டாகும்? அவர்களல்லவா நிறை என்னும் பண்பால் தம்மைத் தாமே சிறப்பாகக் காத்துக்கொள்ள வேண்டும்?”

இந்தப் பழைய உரை மாதர் உள்ளத்தைப் பாதிக்கிறது என்பதற்காகக்கூட அல்ல; உண்மையான உரை எதுவாக இருக்குமென எண்ணி எழுதியுள்ள என் உரை வருமாறு:

“தம்மைத் தாமே காத்துக்கொண்டு சிறந்த பண்புடன் வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது அறியாமையாகும்”

மற்றொரு குறள்; -

“பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு”

இதற்கு அக்கால முதல் இக்காலம் வரை எழுதப்பட்டுள்ள பழைய உரைகள் எவ்வாறு அமைந்துள்ளன?

“கணவனைப் போற்றி வணங்கி
கடமையாற்றும் செயலில் ஈடுபட்டால்
அந்தப் பெண்கள், பெருஞ்சிறப்புடைய
மேல் உலக வாழ்வை அடைவார்கள்”
என்றே அமைந்துள்ளன.

ஆனால் இக்குறளுக்கான உரையாக நான்,

“நற்பண்பு பெற்றவனைக் கணவனாகப் பெற்றால், பெண்டிர்க்கு இல் வாழ்க்கையெனும் புதிய உலகம் பெருஞ்சிறப்பாக அமையும்”

எனக் கூறியிருக்கிறேன். வாழ்க்கைத் துணை நலம் என இணைத்துக் குறிப்பிடும்போது, மனைவியினால் கணவனுக்கு

சிறப்பு என்பது போல - கணவனால் மனைவிக்கும் சிறப்பு என்றும் கருத வேண்டுமல்லவா?

"புத்தேளிர் வாழும் உலகு" என்பதை மேலுலகம் என்று கொள்ளாமல், இல்வாழ்க்கையெனும் புதிய உலகம் என என்னுரையில் கொண்டுள்ளேன். "புத்தேள்" என்பதற்கு 'புதுமை' எனவும் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது

இதே அதிகாரத்தில் அடுத்தொரு குறள் :

"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை"

இதற்குப் பழைய உரையில்; பழி - இல்லத்தரசி மீது மட்டுமே சுமத்தப்படுகிறது. அதாவது

"புகழைக் காத்திடக் கூடிய மனைவி அமையாதவர்க்கு அவரை இகழ்ந்து பேசக் கூடிய விரோதிகளின் முன்பு தலை நிமிர்ந்து காளைபோல் நடக்கும் பெருமிதமான நிலை இல்லை"

என்றே கூறப்பட்டுள்ளது. "இல்" என்பதற்கு மனைவியென்ற பொருளை மட்டும் எடுத்துக் கொண்டால்; அவளால் மட்டுமே புகழ் ஒழிந்து இகழ் ஏற்பட்டு விட்டது என்று கருதலாம்.

"வாழ்க்கைத் துணை நலம்" என்ற அதிகாரத் தலைப்பு அமைந்துள்ள நிலையில் "இல்" என்பதற்கு 'மனை வாழ்க்கை' என்ற பொருளும் பொருந்துகிறது. (அகராதியிலும் அப்படியொரு பொருள் இருக்கிறது)

எனவே மனை வாழ்க்கையின் உயர்வோ தாழ்வோ மற்றவர்களால் விமர்சிக்கப்படும்போது; அவற்றுக்கு மனைவியும் காரணமாக இருக்கலாம். கணவனும் காரணமாக இருக்கலாம். அந்த இருவரிடை விளைந்திடும் பூசல் காரணமாக மனைவாழ்க்கை யின் மாண்புக்கு மாசு ஏற்படும்போது; மாற்றார் முன்னே அந்தக் குடும்பத் தலைவன் தலை நிமிர்ந்து ஏறு நடை போட இயலாது. இதற்கான பழியை அவன் மனைவி மீது மட்டும் போடக் கூடாது! மாசு படுவது இல்வாழ்க்கையின் புகழ் என்பதால் இருவரில் ஒருவர் அல்லது இருவருமே அப்பழியை ஏற்கத்தான் வேண்டும்.

எனவேதான்; இந்தக் குறளுக்குப் பின் வருமாறு உரை எழுதியுள்ளேன். அது; இது:

"புகழுக்குரிய இல்வாழ்க்கை அமையாதவர்கள்,
தம்மைப் பழித்துப் பேசுவோர் முன்பு,
தலை நிமிர்ந்து நடக்க முடியாமல் குன்றிப் போய்
விடுவார்கள்"

இல்வாழ்க்கை அமைவது என்பது; ஆண் - பெண் இருவராலும்தான் என்ற ஒளிமயமான உண்மை இருக்கும்போது; அந்த வாழ்க்கை, புகழுக்குரியதாக அமைந்திடாமல், இகழ்ச்சிக்குரிய தாகத் தாழ்ந்திடும் பொழுது இல்லறத் தலைவியை மட்டும் பழைய உரைகாரர்கள் பாழும் இருட்டில் தள்ளிப் பழிபோடுவானேன் ?

பரிமேலழகர் காலம் முதல், குறளுக்கு விருப்பு வெறுப்பு அடிப்படையில் விளக்கங்கள் வழங்கியதும்; அதனையொட்டியே பல உரைகள் தீட்டப்பட்டதின் விளைவும்தான் இது!

இதனை விரிவாக விளக்கி; விடுதலை பெறத் துடிக்கும் மகளிர்க்கான மணி விளக்குகளாக டிசம்பர் 15 சென்னையில் கழக மகளிர் கருத்தரங்கில் சமுதாயக் கருத்துக்களும், அரசியல் பொருளாதாரக் கருத்துக்களும் அறிவியக்க ஆய்வுகளும் கலை இலக்கியச் சிறப்புகளும், சரித்திரச் சான்றுகளும், விஞ்ஞானப் புதுமைகளும் விவாதிக்கப்பட இருக்கின்றன.

கருத்தரங்கில் கலந்துகொள்ளும் மகளிர், பயனுள்ள பல்வேறு தலைப்புக்களில் உரையாற்றிட இருக்கிறார்கள்.

மாநில அளவிலும், மாவட்ட ஒன்றிய, அளவிலும், கழக மகளிர் அணியை இயங்க வைப்பது குறித்தும் -

கிராமப்புறத்து மக்களுக்கும், நகர்ப்புறத்து மக்களுக்கும் நாட்டு நிலையை எடுத்து விளக்குவது குறித்தும் -

மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆகியவற்றை வலுப்படுத்துவது குறித்தும் -

ஆங்காங்குள்ள மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை எவ்வாறு அணுகுவது என்பது குறித்தும் -

மூட நம்பிக்கை காரணமாக எத்தர்களால் மக்கள் ஏமாளிகளாக்கப்படுவது குறித்தும் -

கருத்தரங்கிற்கு வரும் மகளிர், தங்களின் ஆலோசனைகளை வழங்கிட இருக்கிறார்கள்.

கருத்தரங்கில் கலந்து கொள்வோர் முன்கூட்டியே ஒரு வாரத்திற்குள்ளாக தங்களின் வருகை குறித்துத் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அன்புள்ள,

மு.க.

03-12-2002

2849. கழக மகளீர் கருத்தரங்கம் (4)

உடன்பிறப்பே,

கழக மகளிர் அணியின் பணி ஆர்வமுடன் நடைபெறுகிறது என்றாலும்; மேலும் சீரோடும் சிறப்போடும், ஆக்கபூர்வமாகவும் - அமைப்பு ரீதியாகவும் வளர்ச்சி பெற்ற நிலையில் தொடர்ந்து தொடர வேண்டும் என்பதற்காக; அமைப்பு ரீதியாகச் செயல்படும் கழக மகளிர் மட்டுமன்றி, அனைத்து மகளிரிடையிலேயும் அரசியல், சமுதாய அடிப்படையில், பகுத்தறிவு பரப்பிடும் முனைப்போடு நமது அணுகுமுறையும், அயராத பிரச்சாரமும் தொய்வின்றி நடைபெற வேண்டுமென நான் விரும்புகிறேன்.

முதுமைப் பருவமும், உடல் நலிவுற்று மெலிவுற்றுள்ள நிலையும் மகளிர் அணியின் தலைவியார் திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்களை அதிக நேரம் உழைத்திட இப்போதெல்லாம் அனுமதிப்பதில்லை . அவர்களின் நலன் கருதி; நாமும் அவர்களை ஓயாது ஓடியாடிப் பணியாற்றிட இடம் தருவதில்லை.

ஆனாலும் திராவிட இயக்கத்தில் மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையாரும், டாக்டர் தர்மாம்பாள் அம்மையாரும், நீலாவதி இராமசுப்பிரமணியம் அம்மையாரும், ஈ.வெ.ரா. நாகம்மையாரும், ஈ.வெ.ரா. மணியம்மையாரும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும், மீனாம்பாள் சிவராஜும், சத்தியவாணி முத்து அம்மையாரும், குஞ்சிதம் குருசாமி அம்மையாரும், வை.சு. மஞ்சுளாபாய் அம்மையாரும், அலர்மேலு அப்பாதுரையாரும், என்.வி.என். புவனேசுவரி அம்மையாரும், விசாலாட்சி இராம சுப்பையாவும் தொடக்க காலத்திலிருந்து இந்த இயக்கம் வளர்வதற்கு ஆற்றிய தூய தொண்டினை, தொய்வுக்கு இடமேயின்றி சிறப்பும் பெருமையும் திகழ்ந்திட நிறைவேற்றிடும் ஆர்வம் இன்றுள்ள மகளிர் அணியின் தலைமைப் பொறுப்பிலி ருப்போர்க்கு உண்டு.

பொன்னகையாயினும் மெருகு பூசுதல் தேவை என்பது போல - வைரக்கல்லாயினும் பட்டை தீட்டிடுவது தேவை என்பது போல

இப்போதுள்ள மகளிர் அணியின் பணியையும் - ஆற்றலையும், மேலும் பயனுறத்தக்க வண்ணம் பரவலாக்கிட வேண்டுமெனத் தலைமைக் கழகம் விரும்புகிறது.

இன்றுள்ள உன் போன்ற உடன்பிறப்புகள் பலர் அறியமாட்டார்கள்; வயதான தோற்றமும் - எளிமையான வெண்ணிறச் சேலையும் - வெட்டி விடப்பட்டு தோள் வரையில் தொடும் முடியும் - தோளில் ஒரு நீண்ட பையும் கொண்டு; வேகும் வெயிலானாலும், நோகும் கால்களானாலும், மழை பொழியும் வேளையானாலும் - நடைப்பயணமாகவே பெரும்பாலும் பல சிற்றூர் பேரூர்களுக்குச் சென்று எத்தனை ஏழைத் தாய்மார்களுக்கு மூவலூர் மூதாட்டியார் இரு கரம் நீட்டி இனிய உதவிகளைச் செய்திருக்கிறார்கள்.

வயதுதான் ஏறிக் கொண்டே போகிறதே தவிர, வாழ்விலே இன்னும் வசந்தம் வரவில்லையே என வாடிக் கொண்டிருந்த கன்னிப் பெண்கள் என்ன; கைம்பெண்கள் என்ன; ஆயிரக்கணக்கில் செலவிட்டுத் திருமணம் நடத்திக் கொள்ள முடியாமல் அல்லற்பட்ட ஆண்கள், பெண்கள் - இவர்களுக்கெல்லாம் நல்வாழ்வு அமைவதற்கு மூவலூர் மூதாட்டியார் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், அவற்றில் அவர் பெற்ற வெற்றிகளையும் அருகிருந்து கண்டவர்களில் நானும் ஒருவன். எண்ணற்ற சுய மரியாதைத் திருமணங்களை, கலப்புத் திருமணங்களை, விதவைத் திருமணங்களை, கணவனால் கைவிடப்பட்டோர் மறுமணங்களை அந்த அம்மையார் முன்னின்று ஏற்பாடு செய்து அவற்றை நிறைவேற்றி வைத்து சமுதாய சீர்திருத்தப் பணியாற்றியிருக்கிறார்.

மூவலூர் அம்மையார் மட்டுமல்ல; இயன்ற அளவு நான் பட்டியலிட்டுக் காட்டியுள்ள அந்த மங்கை நல்லார்கள்; இன்று போல் அன்றைக்குப் பயணம் நடத்திப் பிரச்சாரம் செய்வதற்குக் கூட வண்டிகள் வாகனங்கள் என வசதிகள் இல்லாத காலத்தில் நகரங்களை, கிராமங்களை வட்டமிட்டு வட்டமிட்டு, வளைய வந்து வளைய வந்து வற்றாத உழைப்பையும் வளமான கருத்துக்களையும் வழங்கி; மூடத்தனத்தால் முடங்கிப் போய்க் கிடந்த சமுதாயத்தின் முதுகெலும்பை நிமிர்த்தினர் எனும் வரலாற்றை மறக்க முடியுமா?

அவர்கள் உள்ளிட்ட அவர்களது தலைமையில் மொழிப் போருக்காகவும் - சமுதாய விழிப்புக்காகவும் - சிறைக்கோட்டம் புகுந்த பெண்டிரின் எண்ணிக்கை; ஆடவர்தம் எண்ணிக்கைக்குக் குறைந்ததா என்ன?

இன்னும் சொல்லப் போனால் குழந்தை குட்டிகளுடன் சிறை சென்றார்கள். அவர்களில் ஒருவர் திருமதி புவனேசுவரி நடராசன். மறைந்த தம்பி என்.வி.என். சோமுவின் தாயார். கர்ப்பவதிகளாகக் காராக்கிரகம் சென்று அங்கேயே குழந்தை பெற்ற தாய்மார்களும் உண்டு! குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கழகம் நடத்திய அறப்போரில் ஆயிரக் கணக்கில் தமிழர்கள் சிறைக் கோட்டம் சென்றனர் எனினும் அவர்களில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவராக ஒரு பூரண கர்ப்பவதியும் இருந்தார், அவர்தான் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார்.

1938இல் நடைபெற்ற இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரின்போது நான் 14 வயது மாணவன்! என்னை அரசியலுக்கு அறிமுகப்படுத்தி, அண்ணா அவர்களிடமும் ஆரூரில் நேரில் அறிமுகப்படுத்திய அண்ணன் டி.என். இராமனின் தாயார் இராசம்மாள் அம்மையாரும், என் துணைவியார் தயாளுவின் பாட்டியார் ராஜாமணி அம்மையாரும் அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சென்னை வந்து மறியல் செய்து சிறைப்பட்டவர்கள்.

பெரியார், காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்தில் தமிழகத்தில் காங்கிரஸ் சார்பில் நடத்தப்பட்ட ஒரு போராட்டத்தை நிறுத்தி வைக்க, காந்தியடிகளிடம் அன்றிருந்த சர்க்கார் கூறியபோது " அது என் கையில் இல்லை. ஈரோட்டில் உள்ள நாகம்மையார், கண்ணம்மை எனும் இரண்டு பெண்களின் கையில்தான் இருக்கிறது" என்று காந்தியடிகள் பதில் அளித்தார் என்பது வரலாறு!

இந்தியப் பிரதமரின் எமர்ஜன்சியை எதிர்த்து சென்னையில் கறுப்புக் கொடி காட்டியபோது போலீசாரின் அடக்குமுறை காரணமாகக் கழக இளைஞர்கள் தீனன் போன்றவர்களின் பிணங்கள் வீழ்ந்தன. அப்போது நானும் நமது பேராசிரியர் அவர்களும் தளபதி வீரமணி அவர்களும் மழையெனப் பொழியும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு மத்தியில் களத்தில் நிற்கிறோம். எங்களுடன் அன்னை மணியம்மையாரும் அஞ்சாத பெண்

சிங்கமாக நின்று கொண்டிருந்தார். அனைவரும் பின்னர் கைது செய்யப்பட்டோம்.

தன் கணவர் இளமுருகுடன் கைகோத்துக் கொண்டு, கழகத் தளகர்த்தர்களாம் முத்துக் கிருஷ்ணன் போன்றவர்கள் அணி வகுத்திட; ஒரு போர்க்களம் போலவே குளித்தலையில் 1957 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் என் வெற்றிக்காக உழைத்திட்ட வீராங்கனையன்றோ மகளிர் அணித் தலைவி பொற்செல்வி அம்மையார்.

1938 இந்திப் போரின்போது அண்ணன் அழகிரிசாமி தலைமையில் திருச்சியிலிருந்து சென்னைக்கு நடைப்பயணமாக வந்த இந்தி எதிர்ப்பு அணிவகுப்பில் மகளிர் சேனைக்குத் தலைமை யேற்றவர்தானே மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையார்!

தண்டவாளமெனப் பெரியாரால் அன்பாக அழைக்கப்பட்ட அண்ணன் ரங்கராசும், பெரியவர் எஸ்.வி. லிங்கமும் இணைந்து திருவாரூரில் இருந்து சென்னைக்கு தந்தி கொடுப்போம்; "பதினைந்து சேலைகள் அனுப்பப்பட்டுள்ளன" என்று. பதினைந்து பெண்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு வருகிறார்கள் என்று தந்தி கொடுத்தால் போலீஸ் உளவுத் துறையினர் இடையிலே அவர்களை கைது செய்து விடக் கூடும் என்பதற்காக; 15 சேலைகள் எனத் தந்தி மூலம் தெரிவிக்கப்படும்.

ஏராளமான பெண்களும் மொழிப்போரில் அப்போதே சிறைப்பட்டார்கள் என்பதற்காக அதனைச் சுட்டிக் காட்டுகிறேன்.

ஏன்; அண்மைக் காலத்திலேகூட தடாக் கைதியாக திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஓராண்டுக் காலம் ஒரு பெண் ஆட்சியில் மதுரைச் சிறையில் அடைபட்டுக் கிடந்ததை மறந்திட இயலுமோ?

இப்படி திராவிட இயக்கத் தமிழ் மகளிர்; களத்திலும் கலங்காமல் நின்று போர் முழக்கம் செய்து சிறையில் தவத்தையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

சமுதாய மறுமலர்ச்சிக்கும் வாதிட்டு சாதனை படைத்திருக்கிறார்கள். "பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கம் தொடரட்டும்" என்று சட்ட சபையிலேயே இருந்த ஓர் உயர் வர்க்க தேசியவாதத் தலைவர் வலியுறுத்திப் பேசியபோது; "வேண்டு மானால் உங்கள் வர்க்கத்துப் பெண்களுக்கு பொட்டுக்

கட்டி விடுங்கள்” எனச் சல்லடம் கட்டிக் கொண்டு சங்க நாதம் செய்து அந்த வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி என்ற நமது இயக்க உணர்வு கொண்ட அம்மையார் என்கிற போது எத்துணை பெருமிதம் ஏற்படுகிறது! எனவே அந்தத் தாய்க்குலத் தங்கங்களின் பெயரால் குறிப்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம், ஈ.வெ.ரா நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், சத்தியவாணி முத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம், சத்தியா அம்மையார் குழந்தைகள் காப்பகங்கள் திட்டம், சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், பங்காரு அம்மையார் மகளிர் குழுக்கள் திட்டம் ஆகிய மகளிர் நலத் திட்டங்கள் பலவற்றை கழக ஆட்சி நடைமுறைப்படுத்தியது. அவை இன்றைய ஜெயலலிதா ஆட்சியில் தீர்த்துக் கட்டப்பட்டு விட்டன.

மேலும் இன்று நடைபெறும் ஆட்சியின் அலங்கோலங்களை எதிர்த்து நமது மாநில மகளிரணி அமைப்பின் சார்பில், சற்குண பாண்டியன், வண்ணை தேவகி, நூர்ஜகான் பேகம், காரல் மார்க்ஸ், ராஜம் ஜான், டாக்டர் காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், திருப்பூர் சுலட்சணா, சாந்தா வெங்கடாசலம் ஆகியோரின் வழிகாட்டுதலுடன் மகளிர் அணியினர் உண்ணாவிரதம், மறியல், ஆர்ப்பாட்டம் போன்ற அறவழிக் கிளர்ச்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது எனினும்; மாநில அளவில் விரல் விட்டு எண்ண க் கூடிய நிலையில் இருக்கக் கூடிய வீராங்கனையர்களின் இந்த அணிவகுப்பு; மாவட்ட ஒன்றியங்களின் அளவிலும் பல்கிப் பெருகி “எங்கெங்குக் காணினும் சக்தியடா” என்று பாவேந்தர் பாரதி தாசன் அன்று பாடியது; இந்தத் தொலைநோக்குப் பார்வையுடன்தான் போலும் என உவகை கொண்டு, உற்சாக மேலிட்டு, ஆர்வமுடன் செயல்பட வருகிற எவரையும் புறக்கணிக்காமல் - ஒற்றுமையுடன் பணியாற்றி; ஒரு நூறு மலர்கள் - ஓராயிரம் மலர்கள் - ஒரு லட்சம் மலர்கள் -

அல்ல; அல்ல - ஒரு கோடி மலர்கள் பூத்திருக்கும் தோட்டமாகக் கழகக் கோட்டம் விளங்கிடக் கருத்துக்கள் வழங்கிட ; ! டிசம்பர் 15, சென்னைக் கழகக் கருத்தரங்கிற்கு வாரீர் என அன்னைக் குலத்தினரை - அருமை மகளிர் உடன்பிறப்புகளை அன்புடன் அழைக்ககிறேன்.

அன்புள்ள,

மு.க.

04-12-2002

2850. கழக மகளீர் கருத்தரங்கம் (5)

உடன்பிறப்பே,

சென்னையில் டிசம்பர் 15 காலை ஆரம்பமாகும் கழக மகளிர் கருத்தரங்கில் பின்வரும் தலைப்புகளில் மகளிர் உரையாற்றுகின்றனர்.

1. மகளிர் உரிமைப் போராட்டங்கள், 2. மூட நம்பிக்கையும் பேதைமையும், 3. சங்க கால மகளிர், 4 வள்ளுவத்தில் பெண்மை, 5. பெரியாரும் - பெண்ணுரிமையும், 6. அறிஞர் அண்ணாவின் எழுத்தில் பெண் உரிமை, 7. கலைஞரின் படைப்பில் பெண்ணினத்துப் பெருமை, 8. குடும்ப விளக்கும் தமிழச்சியின் கத்தியும், 9. திராவிட இயக்கத்தில் மகளிர், 10. இலக்கிய மறுமலர்ச்சியில் பெண்களின் பங்கு, 11. கலைஞர் அரசும் மகளிர் முன்னேற்ற திட்டங்களும், 12. அறிவியல் - மகளிர் பங்கு, 13. தொழில் துறையில் மகளிர், 14. கல்வித் துறையில் மகளிர், 15. ஆட்சி மன்றங்களில் மகளிர், 16. பெண்மணினத்தில் புதுமை விளைத்த பெருமாட்டிகள், 17. உலக வரலாற்றில் மகளிர் மாண்பு, 18. விடுதலைப் போர் வீராங்கனைகள்.

அளிக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஒரு தலைப்பில் ஒருவர்தான் பேச வேண்டுமென்பதில்லை. ஒரே தலைப்பில் இருவர் மூவர் கூடப் பேசலாம். ஒவ்வொருவரும் பத்து மணித்துளிகள் மட்டுமே தமது உரைக்கென எடுத்துக் கொள்ள வேண்டும்.

எந்தத் தலைப்பில் உரையாற்றிட விருப்பம் என்ற தகவல், டிசம்பர் 10ஆம்தேதிக்குள் தலைமைக் கழக முகவரிக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

யார் எந்தத் தலைப்பில் பேசுகிறார் என்ற விபரம் ஏடுகளில் 13ந்தேதியன்று வெளியிடப்படும்.

உரை நிகழ்த்த, விரும்பி எடுத்துக் கொண்ட தலைப்பு எதுவாயினும், அந்தத் தலைப்பிலிருந்து தடம் மாறாமல் கருத்துத் தவறு நேராமல் பேசும் ஆற்றல் படைத்தவர்கள் நிரம்ப உள்ளனர் என்பதை நானறிவேன்.

பொதுவாகவே காலவேறுபாடின்றி அந்தக் காலம் தொட்டே பொதுமேடைகளில் அரசியல் நாகரிகத்துக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் விடை கொடுத்து விட்டு; கைதட்டல்களுக்காகவே கணக்கிட்டுப் பேசுவோர் சிலர் இருந்தனர். இப்போதும் இருக்கின்றனர்.

அவர்கள் எக்கட்சியில் இருப்பினும் அவர்களை அண்ணா அவர்கள், நரகல் நடை அழகர் - நடுங்கா நாக்கழகர் - என்றும், சந்து முனை சிந்துபாடிகள் என்றும் 'வாழ்க வசவாளர்கள்' என்றும் குறிப்பிட்டு அந்தக் காலத்திலேயே திராவிட நாடு வார இதழில் எழுதியிருக்கிறார்.

புளுகு மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுவது, பொய்களைத் தோரணங்களாகக் கட்டுவது, தனது கட்சித் தலைமைக்குத் தெரியவேண்டும், அதனால் பணமோ, பதவியோ உருண்டோடித் தன்னிடம் வர வேண்டும்; வரும் என்ற நம்பிக்கையில் நாராச நடைகளில் மேடைகளைக் களங்கப்படுத்துவோர், எத்தரப்பில் இருப்பினும் அவர்கள் ஓரங்கட்டப்பட வேண்டியவர்கள்தான்.

"நான் சாதாரணப் பேச்சாளனல்ல; எதிர்க்கட்சிகளின் தலைவர்களை நாக்கூசாமல் பேசவும், நன்றி மறந்து தரக் குறைவாகத் தாக்கவும்; உனக்கு இஷ்டப்பட்ட இராகத்தில் உனக்கு விருப்பமான சாகித்தியத்தைப் பாட வேண்டுமானால்; அதற்கு இருபத்தி ஐயாயிரம் ரூபாய் கொடு - எனக்குப் பதவித் தகுதி ஒன்று தனியாக இருப்பதையும் மதிப்பிட்டுப் பார்த்து நான் வரையறுத்துள்ள 'ரேட்'டைக் குறைக்காமல் கொடுத்துவிடு" என்று பேரம் பேசி வாங்கிக் கொண்டு, மேடைகளில் வீரம் என்ற பெயரால் விரசம் பேசுகிறார்கள்.

இந்த பாணி; அவர்களுடனேயே இருக்கட்டுமென்றால் "இப்படிப் பேசுவது என்ன; ஒரு வழிப் பாதையா ?" என நமது கழகப் பேச்சாளர்கள் சிலர் நம்மைக் கோபித்துக் கொண்டு, அவர்களுக்கு மேடைகளில் பதில் சொல்லுகிறார்கள்! போலீஸ் வழக்குகளில் சிக்குகிறார்கள். ஆளுங்கட்சியினர் பேசினால் அது போலீசாருக்கு

'ஆபாசப் பேச்சு' என்று தோன்றவில்லை. "ஆ!-பாசப்பேச்சு!" என்று புகழ்ந்து பாடி அவர்களை ஆராதிக்கிறார்கள்!

ஆளுங்கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் நமது கழகத்தைப் பொறுத்தவரையில் கொள்கை விளக்கங்கள் அளிப்பதிலும், சாதனைகளை விரித்துரைப்பதிலும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை உற்றுக் கவனித்து உரிய நடவடிக் கைகள் மேற்கொள்வதிலும், ஆளுங்கட்சியின் அடக்குமுறைகள், அராஜகங்கள் என்பனவற்றை சட்டரீதியாகவோ, மக்கள் சக்தியைத் திரட்டியோ அமைதி வழியில் சந்திப்பதிலும் அண்ணாவின் முறையையே தொடர்ந்து பின்பற்றி வருகிறது.

நாட்டு நிலையை மக்களுக்கு எடுத்துச்சொல்ல - படம் பிடித்துக் காட்ட - பேரியக்கமாக தி.மு.கழகம் திகழ்கிறது என்றாலுங்கூட அந்தப் பணி மேலும் சிறப்புறவும் - இல்லந்தோறும் ஆக்கரீதியாகப் பரவிடவும் மகளிர் அணியின் மகத்தான தொண்டு பயன்பட வேண்டும்.

அதற்கான வேர்களும் விழுதுகளும் எனத்தக்க வகையில்; கருத்தரங்கில் விவாதிக்கப்பட இருக்கிற எல்லாத் தலைப்புகளுமே அமைந்துள்ளன.

பேச்சுத் திறமை மட்டுமே மகளிர் அணிக்குத் தேவையென்று கருதி; செயல்திறன் காட்டி மக்களுக்குத் தொண்டாற்றும் கடமையிலிருந்து தவறி விடக் கூடாது - இதனை 1956இல் நடைபெற்ற ஒரு விழா நிகழ்ச்சியில் நமது அண்ணன் சுட்டிக் காட்டியிருக்கிறார். -

'நம்நாடு' இதழில் வெளிவந்துள்ள அந்த நிகழ்ச்சி சுருக்கத்தை அப்படியே தருகிறேன்.

சென்னை, பெத்துநாயக்கன்பேட்டை, டி.டி.வி. உயர்நிலைப்பள்ளியில் மகளிர் மன்றத் துவக்க விழா 4-11-1956 அன்று நடைபெற்றது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அந்த விழாவிற்கு டாக்டர் தர்மாம்பாள் அம்மாள் அவர்கள் தலைமை தாங்கினார். திருமதி வெற்றிச் செல்வி அன்பழகன்

அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மகளிர் மன்றத்தினை மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் துவக்கி வைத்தார்.

இருவருக்கும் பாராட்டிதழ்களை முறையே புவனேசுவரி நடராசன் அவர்களும், சத்தியவாணி முத்து அவர்களும் படித்தளித்தார்கள்.

பின்னர் மங்கையர்ச்செல்வி, சங்க காலத் தமிழ்ப் பெண்களின் நிலை குறித்தும், ஜகஜோதி நாகராசன், பெண்களின் முன்னேற்றம் குறித்தும், ஜி.பி. அமுதா பெண்கள் சமூகம் இந்த நாட்டில் நடைப்பிணங்களாக உலவுவதேன் என்ற தலைப்பிலும் மற்றும் மாணவி சற்குணமும், கமலா பாலசுந்தரமும், துரையம்மாள் சிவப்பிரகாசமும், அருண்மொழி வில்வமும் உரையாற்றினர். அண்ணா அவர்களின் துணைவியார் ராணி அண்ணியார் அவர்கள் மகளிர் மன்றம் லேடீஸ் கிளப் அல்ல என்ற தலைப்பில் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு:

“நாம் சார்ந்துள்ள இயக்கம், மாதர் குலத்திற்கு உண்மையான விடுதலையையும், உரிய பெருமையையும் தேடித் தரும் இயக்கமாகும். மற்ற மற்ற இயக்கங்களுக்கெல்லாம், பெண்கள் விடுதலை பெற்றுப் பெருமையுற்றால் அதில் உள்ள ஆண்களுக்கு நஷ்டம். ஆனால், நமது இயக்கத்திற்கு, பெண்கள் முன்னேற்றம் பெற்றால் இலாபமே தவிர, பல வழிகளிலும் நஷ்டமேதுமில்லை. ஏனெனில் நமது இயக்கத்திற்கு எதிர்ப்பு கிளப்புவோர் முதலில் குடும்பத்திலிருக்கும் பெண்கள்தான்; அந்தப் பெண்கள் நல்ல பகுத்தறிவு பெற்று, வீறு கொண்டு எழுந்து, விடுதலை உணர்வு கொண்ட வீராங்கனைகளாக மாறுவரேயானால், அது நமக்கு இலாபம் தருவதாகும்.

பொதுவாழ்க்கையில் என்னைப் போன்றவர்கள் சலிப்படையாமல் தொடர்ந்து ஈடுபடுவதற்குக் காரணம், என் வீட்டில் உள்ளவர்கள் என் போக்கிற்கு இடையூறு செய்யாமல் என்னோடு இணைந்து நிற்கக் கூடிய பக்குவத்தைப் பெற்றிருப்பதுதான்.

எனது துணைவியார், ‘என்ன இயக்கமாம் இயக்கம்? என்ன வேண்டிக் கிடக்கிறது?’ என்று, தனக்கு இதர பெண்களுக்கு கிடைப்பதைப் போன்ற வாய்ப்புகள் தனது வாழ்க்கையில்

கிடைக்காமற் போனதை எண்ணிப் பேச முற்பட்டிருந்தால், எனது பொது வாழ்க்கைப் பயணம் இடையூறு மிகுந்ததாயிருந்திருக்கும். இந்த மகளிர் மன்றம் செய்யவேண்டுவதென்ன?

அறிவைப் பயன்படுத்துபவர்களாக - உரிமை உணர்ச்சி கொண்டவர்களாக - நாட்டை மீட்கும் விடுதலை வேட்கை கொண்டவர்களாக நமது தாய்மார்களை ஆக்குவதற்குத்தான், இந்த மகளிர் மன்றம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று அடிப்படை நோக்கங்களை, தாய்மார்கள் அனைவரும் பெறுவார்களேயானால், அது, தாயக விடுதலைக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் பெரிதும் பயன்படுவதாகும்.

தாய்க்குலத்தவரை அந்த நிலைக்கு இழுத்து வரத்தான் மகளிர் மன்றம் பாடுபட்டாகவேண்டும். அதற்கு மகளிர் மன்றத்திலிருப்போர் தங்கள் திறமையை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கையை இழந்து விடக்கூடாது. மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

மகளிர் மன்றத் துவக்க விழாவில் பலர் பேசக் கேட்டோம்; நன்கு பேசக் கூடிய - கருத்துக்களை எடுத்துரைக்கக்கூடிய ஆற்றலுடையவர்களைக் கண்டோம். ஆனால் பேசுவது மட்டுமே பணி என்று கருதிவிடக் கூடாது, மகளிர் மன்றத்தில் இருப்போர்.

இங்கே பேசும்போது ஒரு சிலருக்கு கஷ்டமும், வெட்கமும் இருப்பதைக் கண்டோம். ஆனால் அவர்கள் எல்லாம், தன்னம்பிக்கையை இழந்து விடாமல் மேலும் மேலும் முயற்சித்தால் நிச்சயம் நல்ல வகையில் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றலைப் பெற முடியும்.

நெல்லூருக்கு அருகே, கிராமம் ஒன்றில் ஆண்களோடு போட்டியிட்டு 22 பெண்கள் ஊராட்சி மன்றத்தைக் கைப்பற்றினர். அந்த ஊராட்சி மன்றம் முழுவதும் பெண்கள் வசம். பெண்கள் தங்கள் சொந்தக்காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலேயே கண்ணாயிருப்பர் என்று கூறுவார்கள். ஆனால், நெல்லூர் கிராமப் பெண்கள் பொதுக் காரியத்தை கவனிப்பதில் பெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் தாய்மார்கள், நாட்டுக்கான நல்ல காரியங்களில் வெற்றிகரமாக ஈடுபட முடியும் என்பதைத்தான் எடுத்துரைக்கின்றது.”

இவ்வாறு 1956ஆம் ஆண்டே - சுமார் 45 ஆண்டுகளுக்கு முன் அண்ணா அவர்களின் வாழ்த்துடன் விழாக் கண்ட மகளிர் மன்றம்; இன்று மகளிர் அணியாக மலர்ந்து - கழக மகளிர் கருத்தரங்கையும் காண்கிறது என்கிற போதுதான் 45 ஆண்டுகாலத் துக்கான இந்த வளர்ச்சி; மகளிர் அணியைப் பொறுத்தமட்டில் போதாது என்றே கருத வேண்டி யுள்ளது.

அந்த மனக் குறையைப் போக்க இந்தக் கருத்தரங்கு பயன்பட வேண்டுமென்று விரும்புகிறேன்: பயன்படுமென்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

06-12-2002

2851. டிசம்பர் 7 முழு அடைப்பு, வேலை நிறுத்தம்!

உடன்பிறப்பே,

நாள்தோறும் வெளியாகும் ஏடுகளைப்
புரட்டும்போது
தேள்போலும் செய்திகளால் துடிக்கின்றார்
தமிழ்மக்கள்!
வாள்போலும் ஏழைகளின் வாழ்வுதனை மாய்க்கின்ற
ஆட்சி
தாள்ஏந்தும் மனிதர்க்கோ ஒரு துளியுமில்லை
மனச்சாட்சி!

பேருந்துக் கட்டணத்தால் விழிபிதுங்கி, ரேஷனில்
பெறுகின்ற அரிசிவிலையும் மும்மடங்காய் உயர்ந்து
பேருருவாய் விலைவாசிக் கொடுமை மிகப்பெருகி
பெருமூச்சால் நெருப்பைக் கக்குகின்றார் தமிழ்
மக்கள்!

துணைபட்ஜட்டாய் ஒரு துண்டறிக்கை
வெளியிட்டார் – அது
அனைத்துப் பிரிவு மக்களையும் துளைக்கும்
பட்ஜட்டாம் – வெட்டித்
துண்டுபோடும் பட்ஜட்டாம் தொட்டால் ஷாக்
அடிக்கும் பட்ஜட்டாம்!
குண்டுதனைப் போட்டுவிட்டு, அது வண்டு
துளைக்காத மாங்கனி என்கின்றார்.

“கருணாநிதி ஆட்சியிலே வருவாய்க்கே வழியில்லை – அள்ளி அள்ளிக் கொடுத்து கஜானாவைக் காலி செய்து விட்டார் – அதனால் தான் இந்தக் கசப்பு மருந்தைக் கொடுக்கிறோம். அதனை இனிப்பாக எண்ணி அருந்துக!

என அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் உபதேசம் செய்கிறார்கள்.

ஏறத்தாழ 5000 கோடி ரூபாய்க்கு புது வரிகள், வரி உயர்வு, கட்டண உயர்வு, கொள்கை அறிவிப்புகள் என்று மினி பட்ஜட் வெளியிட்டிருக்கும் அ.தி.மு.க. அரசு, மக்களின் பெரும் எதிர்ப்பைக் கண்டவுடன் எல்லாவற்றுக்கும் தி.மு.க.தான் பொறுப்பு என்று கூறி தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது.

இவர்களின் கூற்று எந்த அளவுக்கு அப்பட்டமான பொய் - வீண்பழி - என்பதற்கு, தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை பற்றிய ஒரு சுருக்கமான புள்ளி விபரத்தைப் பார்ப்போம்.

1995-96 அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய்க் கணக்கிலே வருவாய் ரூ.8,985 கோடி.

1996-97 தி.மு.க. ஆட்சியில் வருவாய்க் கணக்கில் வரவு 11,068 கோடி ரூபாய்.

1997-98 - 12, 641 கோடி ரூபாய். (தி.மு.க. ஆட்சியில்)

1998-99 - 15,039 கோடி ரூபாய். 1999-2000 - 15,868 கோடி ரூபாய். 2000-2001 - 18,406 கோடி ரூபாய்.

2001-2002 - 20,635 கோடி ரூபாய்.

1995-96ல் அ.தி.மு.க. ஆட்சி முடிவில் 8,985 கோடி ரூபாய் என்ற அளவிலே இருந்த வருவாய் வரவு தி.மு.கழகத்தின் 5 ஆண்டு கால ஆட்சியில் 20,635 கோடி ரூபாயாக அதாவது 11,650 கோடி ரூபாய் அதிகமாக உயர்ந்திருக்கின்றது.

பற்றாக்குறை என்பது எல்லா ஆட்சியிலும் நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படுகிற - அரசினர் சந்திக்கக் கூடிய ஒரு கட்டம்தான்!

1994-95ல் ஜெயலலிதா ஆட்சியில் 1240 கோடி ரூபாய் பற்றாக்குறை.

1995-96ல் ஜெயலலிதா ஆட்சியில் 926 கோடி ரூபாய் பற்றாக்குறை.

1996-97ல் ஜெயலலிதா ஆட்சியின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை 962 கோடி ரூபாய்.

1996-97ல் தி.மு.க. பொறுப்புக்கு வந்ததும் வைத்த நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை 1,039 கோடி ரூபாய்.

எனவே தி.மு.க. ஆட்சியில், பற்றாக்குறை நிதி நிலைக்கிடையிலேயும் மக்கள் நலவாழ்வுத் திட்டங்களும், வளர்ச்சித் திட்டங்களும் மக்களை கசக்கிப் பிழியாமல் நிறைவேற்றப்பட்டுக் கொண்டுதான் வந்தன. அவற்றைத் தொடர்ந்து 2001-2002ஆம் ஆண்டு கழக ஆட்சியில், நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பற்றாக்குறை 996 கோடி ரூபாய்.

2001-2002 ஜெயலலிதா ஆட்சியில், கடந்த ஆகஸ்ட் மாதம் வைத்த நிதிநிலை அறிக்கையில் ஒட்டுமொத்த பற்றாக்குறை 827 கோடி ரூபாய் - இதை சரிக்கட்டத்தான் 135 கோடி ரூபாய்க்கு வரி விதித்து, நிகரப் பற்றாக்குறை 692 கோடி ரூபாயாக அறிவிக்கப்பட்டது.

இப்போது 692 கோடி ரூபாயை சரிக்கட்ட, சுமார் 5000 கோடி ரூபாய்க்கான கட்டண உயர்வு, புது வரி, வரி உயர்வு, கொள்கை மாற்ற முடிவு இவையெல்லாம் ஏன்?

அதுவும் ஏழைபாழைகள், மத்யதர வர்க்கத்தினர், தொழிலாளர்களின் இடுப்பை முறிக்கின்ற அளவுக்கு எதற்காக?

இதை நாம் மட்டும் கேட்கவில்லை - 7-ந் தேதி முழு அடைப்பு அறிவித்துள்ள கட்சிகள் மட்டும் கேட்க வில்லை!

மக்கள் கேட்கிறார்கள்!

7-ந் தேதிக்கு முன்பே கேட்கத் தொடங்கி விட்டார்கள் -

பல இடங்களில்! பல ஊர்களில்!

7-ந் தேதி ஒட்டுமொத்தமாக அமைதியான முறையில் - அண்ணா வழியில் - மக்களின் குரலை இந்த அரசுக்கு உணர்த்திடவே முழு அடைப்பும், வேலை நிறுத்தமும் நடைபெறுகிறது.

அந்த அறப்போராட்டம் வெற்றிகரமாகவும் - மக்களின் வேதனையை அமைதியாக வெளிப்படுத்தும் வகையிலும்

நடைபெற முழு அடைப்பினை அறிவித்துள்ள கட்சிகள் அனைத்தும் கண்ணும் கருத்துமாக இருந்து கடமையாற்றும். ஒத்துழைப்புத் தருமாறு அனைத்துப் பிரிவு மக்களையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

6-12-2002

2852. விரிவாக விளக்கிட சுருக்கமான செய்திகள்!

உடன்பிறப்பே,

ஏறத்தாழ எல்லா எதிர்க்கட்சிகளும் அண்மையில் இந்த அரசு அறிவித்த 4,500 கோடி ரூபாய் "மினி பட்ஜட்டைக் கண்டித்து நடத்த இருந்த முழு அடைப்பு மற்றும் வேலை நிறுத்தம் காரணமாக அறிவிக்கப்பட்ட 4,500 கோடி ரூபாய் உயர்விலிருந்து 1,162 கோடி ரூபாய் மட்டுமே குறைக்கப்பட்ட மறு அறிவிப்பை அரசு வெளியிட்டது.

அதில் மனநிறைவு ஏற்படாத காரணத்தால், முதலில் அறிவித்தவாறு முழு அடைப்பு, வேலை நிறுத்தம் நடைபெறுமென எதிர்க்கட்சிகள் அறிவித்தன. அமைதியான முறையில் இந்த அறப் போராட்டம் நடைபெற்ற நிலையில், அரசின் உள்துறை செயலாளர் அவரது ஆசைப்படி, இந்தப் போராட்டம் பிசுபிசுத்து விட்டதாகக் கூறி, அரசிடம் ஒரு சபாஷ் வாங்க வேண்டுமென்பதற்காக "பந்த் நடந்த அன்றைய தினம், பஸ்கள் ஓடின, ரயில்கள் ஓடின, கடைகள் எல்லாம் திறந்திருந்தன. "மாமூல் வாழ்க்கை பாதிக்கப்படவில்லை என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளார். ரயில்கள் ஓடக் கூடாது என்றோ, ஓடாது என்றோ எந்தக் கட்சி சார்பிலும் அறிவிக்கப்படவில்லை.

பஸ்கள் ஓரளவு ஓடின என்பது உண்மைதான் - காரணம் ஏற்கனவே போனசுக்காகப் போராடி 17 நாட்களுக்கு மேல் வேலை நிறுத்தம் செய்த பேருந்து தொழிலாளர்களால் - தயவு தாட்சண்யம் பார்க்காத ஒரு ஆட்சியில் இதற்கு மேலும் தாக்குப் பிடித்துத் தங்கள் குடும்பங்களையே அழித்துக் கொள்ள முடியாதல்லவா!

பஸ்கள் ஓடின. ஆனால், பஸ்களில் பயணிகள் மிக மிகச் சிலரே இருந்தனர் என்றே பத்திரிகைகளில் செய்திகள் வந்திருந்தன. ஏனெனில், பயணிகள் தானே பஸ் கட்டணம்

செலுத்த வேண்டியவர்கள், அவர்கள் எதிர்ப்பைக் காட்டினால் போதுமல்லவா!

இந்த வேலை நிறுத்தம் குறித்து செய்தியாளர் கூட்டத்தில் ஒருவர் கேட்டார். தி.மு.க. ஆட்சியிலும் பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டதே என்றும், மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டதே என்றும்!

ஆமாம்! படிப்படியாகத்தான் எந்தக் கட்டணமானாலும் உயர்த்தப்பட்டதே தவிர, இப்படி ஒரேயடியாக மக்களை கசக்கிப் பிழிகிற அளவுக்கு உயர்த்தப்படவில்லை என்று சொன்னேன்.

இப்போதும், தி.மு.கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்குமேயானால், பஸ் கட்டணமோ, மின் கட்டணமோ மக்களால் தாங்கக் கூடிய அளவுக்குச் சற்று உயர்த்தப்பட்டிருக்கும்.

பஸ் தொழிலாளர், மின்வாரியத் தொழிலாளர் கழக ஆட்சியில் பெற்ற 20 சதவிகித போனஸ், இந்த ஆண்டும் தங்குதடையின்றி பெற்றிருப்பார்கள்.

ஒருவேளை கடந்த ஆண்டு நண்பர் மலைச்சாமி அவர்கள் தலைமையில், 25 சதவீதம் வேண்டுமென்று போராட்டம் நடத்தியது போல, அ.தி.மு.க. தொழிற் சங்கம் போராட்டம்கூட நடத்தியிருக்கும். பஸ் கட்டணம், மின்சாரக் கட்டணம் உயர்த்தி யிருப்பதால் இதோ பிடியுங்கள் 21 சதவிகித போனஸ் என்று கொடுத்தாலும் கொடுத்திருப்போம்.

தி.மு.க.வே மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால் ஏற்கனவே ரத்து செய்யப்பட்ட மருத்துவமனை அனுமதி சீட்டு ஐந்து ரூபாய் என்ற அநியாயம், மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க மாட்டாது.

சமையல் எண்ணெய்களுக்கு - திருப்பூர் பின்னலாடைகளுக்கு வரி விலக்கு அளித்த தி.மு.க. ஆட்சி, மீண்டும் பொறுப்புக்கு வந்திருந்தால் நிச்சயமாக வரி ரத்தைத் திரும்பப் பெற்று, 4 சதவீதம் புதிய வரி விதிப்பைக் கொண்டு வந்திருக்காது.

மாணவர்க்கான கல்விக் கட்டணத்தை இப்படிக் கண்ணை மூடிக் கொண்டு உயர்த்தியிருக்க மாட்டோம்.

நியாயவிலைக் கடை அரிசி விலையை உயர்த்துமாறு மத்திய அரசு ஜாடை காட்டியபோது, அதை மறுத்து விட்டு வறுமைக்

கோட்டுக்குக் கீழே மேலே என்று வித்தியாசம் பார்ப்பதில் குழப்பமே மிஞ்சும் என்பதைப் புரிந்து கொண்டு, எல்லோர்க்கும் கிலோ அரிசி 3 ரூபாய் 50 காசுதான் என்று நிர்ணயித்த நிலையே தொடர்ந்து நடைமுறையில் இருந்திருக்கும். மே மாதம் வரையில்தான் என்று காலக்கெடு விதித்து அதற்கு மேல் ஒரு கிலோ அரிசி 9 ரூபாய் என்று அறிவித்திருக்க மாட்டோம்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இன்று குய்யோ முறையோ என்று கூச்சலிடுகிற அளவுக்கு, ஏற்கனவே அவர்களுக்குக் கழக அரசு வழங்கிய சலுகைகள் ரத்து செய்யப்பட்டிருக்க மாட்டா.

சிமெண்டுக்கு நுழைவு வரி –

யூரியா உரத்துக்கு வரி –

போக்குவரத்துக் கழக பஸ்களின்

வழித்தடங்களில் தனியார் பஸ்கள் –

இதுபோன்ற அறிவிப்புகள் வெளி வந்திருக்காது.

முக்கியமாக மலிவு விலை மதுவை, கழக ஆட்சி மீண்டும் வந்திருந்தால் கண்டிப்பாக அமல்படுத்தி யிருக்க மாட்டோம்.

ஏனென்றால், 1990ஆம் ஆண்டு கழக ஆட்சியில் மலிவு விலை மதுவை அறிமுகப்படுத்தி, செல்வி ஜெயலலிதாவின் கடுமையான எதிர்ப்பை அப்போதே சமாளிக்க முடியவில்லை. அதை எண்ணிப்பார்த்து இப்போது கொண்டு வந்திருக்கவே மாட்டோம்!


எனவே உடன்பிறப்பே, தி.மு.க. ஆட்சி மீண்டும் பொறுப்புக்கு வராததால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன என்பதை அ.தி.மு.க.வுக்கு விளக்கக் கூடிய அரிய வாய்ப்பு உன் போன்றோர்க்குக் கிடைத்துள்ளது.

இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வாய் என நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

9-12-2002



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022